# கதாரத்நகரம்.



# KATHARATNAKARAM.

Vol. 4. No. 1

1921 ம்

JL

O31,1(021):N12

N18.4

162011.




கதாரத்நாகரம் அனுபந்தம்.

கடவுள் துணை

KATHA RATNAKARAM
கதாரத்நாகரம்

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்

Vol. 4. | June, 1921 | No. 1.
தொகுதி 4. | 1921-ம் வருட ஜூன்மீ | பகுதி 1.

1922

## நான்காவது பருவம்.

மேனாட்டு நாகரீகம் நாள்தோறும் பரவி வருகின்ற இக் காலத்திலே, பத்திரிகைகளைப் படியாதிருத்தல் முற்றிலும் முடியாத விஷயம். உலகத்தின் கண் ஆங்காங்கு நிகழும் சம்பவங்களையுணர்ந்து அவற்றோடு தம் தேச நிலையையும் ஒப்ப நோக்கி, மற்றவர்களைப் போலத் தாமும் உயர்வதற்கான வற்றில் உள்ளம் செலுத்தி அறிவு பெருக்கடைவது அத்தியா வசியகமாக இருக்கிறது. தின வர்த்தமானிகளும், வார வர்த்தமானிகளும் சமாசார சம்பவத்திரள்களுடன் வெளித்தோன்றி நம்மைத் தினமும் தட்டியெழுப்பிக்கொண்டு செல்ல, மாதாந்த சஞ்சிகைகளும், பக்ஷப் பத்திரிகைகளும் என்றைக்கும் நிலைபெற்று ஹஸ்தபூஷணமாக இலங்குதற்கான புஸ்தக உருவில் வெளியாகி ஞானப்பயிரை வளர்த்து வித்தியா இன்பம் ஊட்டி மனத்தை விசாலிக்கச்செய்து அறிவின் களஞ்சிய மாக்குகின்றன. மாதாந்தப் பத்திரிகைக்கென விஷயங்களைத் தேர்ந்தெடுக்கும் காலையில் அவ்விஷயம் நெடுங்காலத்துக்கும் உதவத் தக்கனவாய்ப் பின்வரும் சந்ததியார்க்கும் பயன்படற்பாலனவாய்

162011



ஆராய்ந்தெடுத்து அமைக்கப்படுகின்றன. தினப் பத்திரிகைகள் அவசர அவசரத்தோடும் உலகுக்காவன புரிய மாதாந்தப்பத்திரிகைகளோ நீள[illegible]த்துப் பொறுக்கி எடுத்த விஷயங்களோடும் தம் பொன்னகத்தைக் காட்டிப் புதுமை யளிக்கின்றன.

அவ்வாறுயவற்றுள் நம் சுந்தர கதாரத்னாகரமும் ஒன்று. அது தன் மூன்று பருவங்களையும் இனிது கடந்து, தற்போது நான்காவது பருவத்தைப் பெற்றுள்ளது. புதியன புகுத்தி பல பல திருத்தி, பாங்குப்படுத்தப்பட்டு, ‘சுதேசமித்திர’ சாம்பி ராஜ்யத்தில் தானும் ஒரு அங்கமாகிப் பரிமளிக்கத் தொடங்கியநாள் முதலாக, அதிதீவிர அபிவிர்த்தி கொண்டுளது. இன்னும் நாளுக்குநாள் மேலுக்கு மேலாக ஓங்கிவளருமாரு பரம் பொருளைச் சிந்திக்கின்றோம்.

மனிதர்களுடைய வாணாட்களே பல கதைகளின் வடிவினதாக உருக்கொள்கின்றன. நம் சென்றகால சம்பவங்களும், நிகழ்காலக் காட்சிகளும் கதைகளுக் கொப்பவே நிலவி அவற்றினூடே நமது ஜீவியத்தின் அநுபவங்களும் கலந்து விநோதம் கொள்கின்றன. ஒவ்வொருவரது வாழ்க்கையும் ஒவ்வொரு கதைகள்தான். சரித்திரங்களும் சென்றுபோனவர்களின் கதையே. புராணேதிகாஸ சாரங்களும் ஞானிகள் முனிபுங்கவர்கள் இன்னோரின் ஜீவிய கதாநுபவங்கள்தாம். யாவர் எது செய்திடினும் அவையெல்லாம் ஒரு பெருங் கதையின் பலதிறப்பட்ட பிரதியொரு அத்தியாயங்களாகவே பிரதிபிம்பிக்கின்றன. இங்ஙனமாக எத்திசை நோக்கினும், எப்பக்கங் காணினும் கதாமயமாக காட்சிக்குப் புலனாகி நம் கண்ணையும் கருத்தையும் கவர்வதனால் இப்பத்திரிகையும் “கதாரத்னாகரம்” எனப் பெயர் ஏற்று வெளியாயது. அதன் பெயருக் கேற்ப காலத்திற் கிசைந்த கருத்துகளோடும், நாவல்கள், கதைகள், பிரபஞ்ச தர்மங்கள், உலக விநோதங்கள் பின்னும் நானாவித விஷயங்களுமாய்க் கலந்து தோன்றி இனிமை யளிக்கின்றது.

சென்ற வருடத்திலும் இவ்வருடம் அதிகமாக எட்டுபக்கங்கள் சேர்த்திருக்கின்றனம். சித்திர உருவக்காட்சிகளையும் அதிகப்படுத்த யோசித்துள்ளனம். விஷய அமைப்புகளிலும் திருத்தங்கள் புகவிடுத்துள்ளனம். எனவே முன்னிலும் பெரிய உருவினதாய், ரஸமான நூதன கதைகளும் மதுரச்சுவை மிகுந்த நவநவமான நாவல்களும், நானா விஷயங்களும் இன்னும் அதிகமாகி, இதைப் படித்துவரும் சந்தாதார்கள் யாவரும் உள்ளங்களிக்குமாறு இப்பத்திரிகை நடந்தேறிவரும். அதற்கேற்ப இதன் அபிமானிகளும் தங்களாலியன்றவரையில் புதிய சந்தாதாரர்களைச் சேகரித்துக்கொடுத்து பத்திரிகையின் அபிவிர்த்தியில் சிரத்தைவகிக்குமாறு வேண்டுகிறோம். நமது [illegible]க்கத்தினுடைய முனையின் கூர்மை அவர்கள் அபிமானிக்கும்



விதத்தைப் பொறுத்திருக்கின்றது. நமது கதாரத்னாகரம் புது வருடத்துடன் கலந்து பூரித்திடும் அனைவருக்கும் நமது வந்தனமும் வாழ்த்துதலும் தெரிவிக்கின்றோம். சுதேசபாஷா பத்திரிகைகளை ஆதரிப்பது அனைவர்தம் கடனாகை, அவர்களுள்ளும் தமிழ்பாஷையின் அபிவிர்த்தியை விரும்புவோர் இதைப் பின்னும் அதிகமாக ஆதரிப்பார்களென நம்புகின்றோம். சர்வலோக சரண்யராகிய ஜெகதீசன் நம் மெல்லோரையும் ரக்ஷிப்பாராக, மங்களம்.

பத்திராதிபர்.

---

# விநோதங்கள்.

## பறக்கும்பல்.

1. ஒரு நாள் சென்னப் பட்டணத்துப் புலவர் ஒருவரும் தென் தேசத்துப் புலவர் ஒருவருமாகிய இருவர் மாலையில் ஒரு பொது வீதியில் சம்பாஷணை பண்ணிக் கொண்டு நடந்து போனார்கள். எதிரில் ஒரு பறப் பிணத்தை தூக்கிக் கொண்டு நானாவித வாத்தியங்களுடன் வந்து கொண்டிருந்த பறையர்களைக் கண்ணுற்ற தென் தேசத்தவர் நடு நடுங்கி ‘பறக்கும்பல்’ மேல் வந்து விழும். ஆகையால் விலகிப்போவோமென்று வெகு தூரத்துக் கப்பால் போக முயன்றார். ஏனையவர் ‘ஐயா அப்படிச் சொல்வதைத் தவிர்மின். ஏனெனில் ‘பறக்கும்பல்’ என்று ஆதி திராவிடர்களைச் சொல்வீராயின் பறக்கும் ப்ல் ஆகவே ஜாக்கிரதையாயிரும் ‘என்று எச்சரித்தார்.

## எழுவாய் பயனிலை.

2. திரிசிரபுரம் மகா வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் என்ற கவியைப் பற்றிக் கேளாதாரில்லை. சமீபமாக ஏறக்குறைய 50 வருஷங்களுக்கு முன்னுள்ளவர். செய்யுள் பாடுந் திறமையில் சிறப்புப் பெற்றவர்களில் கடைசியாயுள்ளவர் அவரே. அவருடைய கல்வித் திறமையைக் கேட்டு அவரிடம் பாடங்கேட்க வேண்டுமென்ற ஆசையையுடையவராய் ஒருவர் அவரையணுகி அவரு

டைய சிஷ்யன் ஆனார். ஆறு மாத காலம் ஆயிற்று. ஒரு நாள் வித்வான் தன்னுடைய மாணவருடைய கல்வியைச் சோதிப்பானெண்ணி ஒரு செய்யுளைக் காட்டி அதற்கு எழுவாய் பயனிலை கேட்டார். மாணவர் ஒரு மணி காலம் வரை ஆராய்ந்து பார்த்தும் கடைசியில் தெரியாது மயங்கினார். வித்வான் புன் முறுவலுற்று 'நீ எழுவாய் ஒன்றும் பயனிலை' என்று அவரை வந்தவழி அனுப்பி விட்டாராம்.

## தமிழர்.

3. திருநெல்வேலி ஜில்லாவில் ஓர் கிராமத்தில் ஓர் கலியாண வீட்டில் எல்லாரும் போஜனம் பண்ணி விட்டுத் தங்களுடைய கைகளைச் சுத்தம் செய்யும்பொருட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். அவ்வமயம் ஒருவர் தமிழரைக் காணோம் தமிழரையெங்கே யெங்கே எனக்கூக்குரல் போட்டுக் கொண்டிருந்தார். அதைக்கேட்ட ஒரு அறிவாளி 'ஐயா ஏன் கூக்குரல் போடுகிறீர். இவ்விடத்திலுள்ளவர்கள் எல்லாரும் தமிழர் தான் தெலுங்கர் எவருமில்லை' என்றார். அவர் சாதுரிய மொழியைக்கேட்ட அங்குள்ள யாவரும் வயிறு புடைக்கச் சிரித்தார்கள்.

## உடையார்.

4. தஞ்சாவூர் ஜில்லாவில் உடையார் என்ற வருணத்தார் உண்டு. அவர்களில் ஈகையில் புகழ்பெற்ற ஒருவள்ளலிருந்தார். அவரிடம் போய் பரிசு பெறாத வித்துவானில்லையென்பர். அவரைப் பார்க்கப் போகிறவர்கள் தேங்கா யொன்று வாங்கிக் கொண்டு போய் அவரைக் காண்பது வழக்கம். ஒரு நாள் ஒரு புலவர் ஒரு தேங்காய் வாங்கிக் கையிலெடுத்துக் கொண்டு போய் உடையாரைத் தெரிசிக்கப் போனார். அவர் போகும் சமயம் உடையார் சாப்பிட்டுவிட்டு குழந்தைகளுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டுத் தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தார். புலவர் தேங்காயைக் கொண்டு கொடுக்கவே அதை யுடைத்து ஒரு துண்டுத் தேங்காய் வாயில் போட்டுக் கொள்ளலா மென்று உடைத்தார். உடைத்ததும் தேங்காய் அழுகி பருப்பு ஒன்றுமில்லாதிருந்தது. 'புலவரே இது என்ன! இத்தேங்காயை வாங்கிக் கொண்டு வந்தீர்' என்று கேட்டார். புலவர் புத்தி சாதுரியமுள்ளவராதலால் உடையார் என்று உங்களைஎல்லாரும் சொன்னார்கள். உடைப்பீரென்றால் நான் பார்த்து வாங்கி வந்திருப்பேனென்றார். உடனே உடையார் அளவிலாச் சந்தோஷத்தை யடைந்தவராய் புலவருக்கு இருமடங்கு பரிசு அளித்தனுப்பினார்.

M. E. வீரபாகு பிள்ளை.

# ஸமூக ஊழியமும் ஜனநிர்மாணமும்.

சென்று போன காலத்தைப் பற்றியும், யாதொரு பிரயத்தனமுமின்றி யவீணே போக்கிவிட்ட நாட்களைக் குறித்தும், இனிச் சிந்திப்பதில் எவ்வித லாபமும் இல்லை. சென்றன செல்க. இனிமேல் ஆகவேண்டிய காரியங்களுக்காக நாம் இன்றைய தினத்தில் தானே அஸ்திவாரம் கோலிட்டுக் கொள்ளக் கடவோம். "தன்னையறிந்தவன் தலைவனாவான்"—என்பது வேதாந்த மார்க்கத்திலே சொல்லப்படும் அநுபவ வாசகம். அதை லௌகிக மார்க்கத்திலும் கொண்டு சென்று நமது வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டுக் கொள்ளவேண்டும். காலமென்னவோ நிமிஷத்திற்கு நிமிஷம், நாளுக்கு நாள் மேலுக்கு மேல் மாறிக்கொண்டு வருகின்றது. அந்தக் கால சக்கரச் சுழற்சியினூடே நாமும் சுற்றிச் சென்று கொண்டிருக்கிறோம். தற்போது நாம் இருக்கும் வாழ்க்கையில் நம்மைக்கொண்டு வந்து வைத்தவர்கள் நம்முன்னோர்கள். அவர்கள் அந்தக் காலத்தில் தங்களின் ஸமூக நலத்தை யுத்தேசித்து எத்தனை ஏற்பாடுகளையும் கட்டுப்பாட்டினையும் உண்டாக்கி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்களென்பதை நாம் ஆழச்சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களுடைய பாடுகளுக்கு முன்பாக நம்முடைய தற்காலச் சிறு முயற்சிகளை வைத்து மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதத்தை நாம் ஆராய்தல் நன்றாம். நம் முன்னோர்களின் ஸமூக ஊழியம் எத்தனை உயர் நலஞ் சார்ந்தது—மேன்மையானது? எவ்வளவு மகத்துவமுள்ளது? அந்தக் காலத்தில் மதமே முக்கியமானதாக இருந்து, மதத்தைக் காத்தற் பொருட்டே அரசனும் ஏற்பாடாகி, அதற்கான ஊழியமே ஸமூக ஊழியமாக இருந்து வந்தது. மானிட வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிகளையும் மதத்துடன் சம்பந்தமுள்ளதாக்கி மனித ரத்தத்துடன் மத உணர்ச்சியைக் கலந்து வைத்து விட்டார்கள். அக்காலத்திய ஏற்பாடுகள் இன்றைக்கும் ஸ்திரமுள்ளதாக இருந்து வருகின்றது. குறிப்பிட்ட ஒரு உற்சவத்திற்கு ஒரு பட்டிக்காட்டில் அந்தத் தினத்தன்று ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஒன்றாக ஒருங்குகூடி விடுகிறார்கள். பிரம்மாண்டமானதான ஒரு பெரிய ரதம் வெகு

சுலபத்தில் இழுக்கப்பட்டுத் தன்னிலைக்கு வந்து சேர்ந்து விடுகின்றது! இங்ஙனம் ஆயிரக்கணக்கான பேர்களை ஓரிடத்திற் கூடும்படி செய்வித்தது நம் முன்னோர்களின் ஸமூக ஊழியமன்றோ? இந்தியாவிற்கு மட்டும் இதை நாம் உவமானமாகச் சொல்லவில்லை. உலக முழுமைக்குமே நாம் சொல்லுகிறோம். முற்காலத்திருந்தவர்கள் மதாநுசார நீதிகள் இவையென்று வரையறுத்து ஸ்தாபித்து விட்டுச் சென்றவற்றையே இப்போது நாம் பின்பற்றிச் செல்லுகிறோமே தவிர நாமே சொந்தமாக புது ஸ்தாபிதம் செய்து கொள்ளத் திறனில்லை. அவ்வளவு பலமாக நம்முன்னோர்கள் அந்நாட்களில் ஸமூக ஊழியம் செய்து பிற்காலத்தில் எவரும் அசைக்காத படி ஸ்திரப்படுத்திச் சென்றிருக்கிறார்கள். ஆ! இது எத்துணை மகத்துவமான முயற்சி என்னலாம்? ஸமூக ஊழியமாவது யாது? ஸமூகம் என்றால் ஒரு கூட்டம். ஊழிய மெனில் பணிவிடை. அதாவது தன்னைச் சேர்ந்த கூட்டத்தாருக்குப் பணிவிடை செய்தல் என்பது பொருள். எனவே ஸமூக ஊழியமானது:—பரோபகாரம். என்பதினுள் அடங்கும். பிரதி யொரு மனிதனும் தனது ஸமூக மேன்பாட்டிற்காக உழைக்கக் கடமைப் பட்டிருக்கிறான். இந்த ஸமூக ஊழியத்தினின்றும்—"ஜனநிர்மாணம்"—உதயமாகின்றது. ஜன நிர்மாணமானது பலவகைத் தாய பிரிவுகளுள்ள ஒரு பெரிய ஜன ஸமூகத்தை ஒரே ரூபமுள்ளதாக—ஒரே அபிப்பிராயம்—பெயர்—கொள்கை—எண்ணம் உள்ளதாக உருவகப் படுத்தி விடுதலாகும். கடுகு, கொத்தமல்லி, புளி, மிளகாய், உப்பு, ஜலம், இத்தனை பிரிவுகளுள்ள பல பதார்த்தங்களையும் அவற்றின் ருசி கொடாதவாறாகவே அவை யனைத்தையும் ஒன்று படுத்தி புளி, மிளகாய், உப்பு, ஜலம்,—என்ற அந்தப் பலவித பெயர்களையும் மறையவைத்து—குழம்பு—ரஸம்,—என்ற ஒரேவிதமான பெயரால் உருவகப்படுத்தி விடுவதுபோல, ஜனங்களிடையே யுள்ள பிரிவுபாடுகளனைத்தையும் மறையவைத்து ஒரே ஜனமாக அவர்களைப் பரிணமிக்கச் செய்வதற்கே ஜனநிர்மாணம் என்று சொல்லப்படுகிறது.

ஜனநிர்மாண மானது ஸமூக ஊழியம் என்ற கல்பக விருக்ஷத்தினின்றும் பழுக்கும் கனியாகும். முற்காலத்தில் ஸமூக ஊழியம் மதச்சார்பு பற்றி நின்றதென்று மேலே சொன்னோம். அந்த ஸமூக ஊழியத்தினின்றும் பழுத்த கனியான அக்காலத்து ஜன நிர்மாணமும் மதச் சார்பான பெயர்களைக் கொண்டே உருவகப் படுத்தப் படுவதாக இருந்தது. அதாவது ஸமூக ஊழியத்தால் அனைவரையும் மதாபிமான முள்ளவர்களாகப் பரிணமிக்கவைத்து, அந்தந்த மதத்தின் பெயர்களாலேயே—அதாவது கிறிஸ்தவர், மகம்மதியர், ஹிந்துக்கள் பௌத்தவர்கள்—என்பனவாகிய பெயர்களாலேயே—ஜன நிர்மாணத்தை உண்டு பண்ணுவதானார்கள். அவ்விதமான ஜன நிர்மாணமும், அது கொண்டுள்ள பெயரும் உலகமுள்ளளவும் நிலைபெற்று நிற்குமென்பதை யார்தான் ஒப்புக்கொள்ளாதார்? இவ்வாறாகப் பூர்வகாலத்தின் ஸமூக ஊழியம் மதாபிமானத்தையே அடிப்படையாகக் கொண்டதாகி, அதற்குத் தகுந்தவாறு மதத்தின் திருநாமங்களாலேயே அந்த நாளின் ஜன நிர்மாணமும் உதயம் பெறுவதானது. தற்காலத்திலோ ஸமூக ஊழியமானது தேசாபிமானத்தையே அடிப்படையாக—அஸ்திவாரமாக—க் கொண்டு செல்லவேண்டியதாகி, அதற்குப் பொருந்தியவாறாய் ஜனநிர்மாணமும்,—மதத்தின் பெயர்களினாலே தோற்றுவிக்கப் படாமல்,—தேசத்தின் பெயராலேயே சுட்டிக் காட்டும்படியான தன்மையில் திருத்தம் பெற்று—இவ்விதமானது புது வழியில்—நவீனபாதையில்—செல்வதாகி, ஸ்தாபித மாகவேண்டியதா யிருக்கிறது. இவ்விதப் பல வகையான ஜன நிர்மாணத்தில்—பூர்வத்தில் ஸ்தாபிதமான ஜன நிர்மாணத்தினுடைய மதச் சார்பான பெயர்கள் அனைத்தும் உள்ளடக்கப் பட்டுப் போய், தேசத்தின் பெயரொன்று மட்டுமே வெளியில் தெரிவதாகி, ஜன நிர்மாணத்திற்கு தேசத்தின் பெயரே இடப்பட்டு, அந்தப் பெயராலேயே அந்தந்த ஜன நிர்மாணமும், அழைக்கப் படுவதான மாறுதல் கொள்கின்றது. உதாரணமாக, இந்திய ஜன நிர்மாணத்தில் இந்தியாவிலுள்ள பிரஜைகளனைவரும் அடங்குவார்கள். இவர்களனைவரையும் "இந்தியர்"—என்று ஜன நிர்மாண நாமத்தால் அழைக்கப்படுவர்.



ஒரு தேசத்து ஜனங்கள் அவ்வளவு பேரும் ஒருமனப் பட்டவர்களாய் ஒரே பெயரினால் அழைத்ததற்கேற்ற பக்குவ நலங்கொண்டு ஒரு ஜன நிர்மாணமாகப் பரிணமிப் பார்களாயின்,—அந்த ஜன நிர்மாணத்திற்கு எத்துணை சக்தி—வேகம்—மகத்துவம்—மேன்பாடு—ஏற்படுமென்பதைக் கூறவும் வேண்டுமோ?

இவ்வாறான உயர்நலஞ்சார்ந்த ஜன நிர்மாணமானது—ஸமூக ஊழியத்தினின்றும் உருவாகவேண்டியதா யிருக்கின்றது. பலவகைக் கான்பரன்ஸ்களும், மற்றும் எண்ணற்ற ஜாதீய சபைகளும் காங்கிரஸ் முஸ்லீம்லீக் முதலிய மகாசபைகளும்—இன்னும் இவைபோன்ற பிறவும் ஸமூக ஊழியத்தினுள் அடங்கும். இப்போது நாம் ஸமூக ஊழிய கைங்கரியத்தை நமது சொந்த தர்மமாக மேற்கொண்டு முயல்வோமாயின்—இனிவருங் காலம் ஜன நிர்மாணமாகப் பரிணமிப்பதற்கு சாத்தியந் தருவனவாய் அமைதல் கூடும். ஆதலின் எழுந்திருங்கள், விழித்துக்கொள்ளுங்கள், முன்னேக்கி நடவுங்கள், உங்கள்காரியம் ஆகும்வரையில் உழைத்துக் கொண்டிருங்கள். முயற்சி திருவினையாக்கும். ஸமூக ஊழியமே ஒரு நாட்டைப் புனிதப்படுத்தும். முன்னேற்றமும் தரும்.

# பெண்கள் பகுதி.

## மனைவி தன் கணவனிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகள்.

(1) மனைவி தன் கணவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருந்து, அவர் உத்தியோக சாலையிலிருந்து, வந்தவுடனே அவரிடத்தில் குளிர்ந்த முகத்துடன் இனியவார்த்தைகளைச் சொல்லி, வீட்டில் அவருக்கு வேண்டியவைகளை எல்லாம் தயார் செய்துவைத்து, அவர் மனமகிழும் படி இங்கிதம் அறிந்து நடக்கவேண்டும். மேலும் புருஷன் தன்னிடத்தில் எவ்வளவு ஆசையும் பட்சமு முடையவராய் இருக்கிறாரோ அதைப்பார்க்கிலும் நான்கு பங்கு அதிக ஆசையும் பட்சமு முடையவளாய் மனையாள் இருக்கவேண்டும்.

(2) தன் கணவனுக்கு இஷ்டமான பதார்த்தங்களையும் பாகங்களையும் தெரிந்துகொண்டு, பக்குவமாய்ச் சமையல் செய்து போடுவது நல்ல மனையாட்டியின் கடமை. மேலும் தான் எவ்வித ஆடையாபரணங்கள் தரித்துக்கொண்டால் தன் புருஷன் மனதிற்கு விருப்பத்தைத்தருமோ அவைகளையே தரித்துக்கொள்ள வேண்டும்; மேலும் வீட்டு சமுசாரத்தை நடத்துவதிலும் தன்னுடைய நடவடிக்கைகளிலும், தன் கணவன் முகங்கோணாமல் அவர் மனதின்படி கற்புள்ள மனைவி நடந்து கொள்வாள்.

(3) பர்த்தா எவ்வளவு சாதுவும் நற்குணமு முடையவராய் இருந்தபோதிலும், ஒருக்காலும் அவரிடத்தில் அதிகாரம் பண்ண மனைவி பிரயத்தனப்படக்கூடாது. அவ்விதமாய் செய்யும் மனைவி பிறரால் இகழ்ச்சி அடைவதுமன்றி தன் புருஷனுக்கும் அபகீர்த்தியை உண்டு பண்ணுவாள்.

(4) கணவனுடைய கோரிக்கைகள் நியாயமாயும் யுக்தமாயும் காணப்பட்டால், அவைகளை சந்தோஷமாய் அவர் இஷ்டப்படி செய்ய மனைவி உடன் படவேண்டும்; கூடுமானால் அப்பேர்ப்பட்ட விஷயங்



களை அவர் சொல்லுதற்கு முன்னமே குறிப்பாகத் தெரிந்து கொண்டு நடப்பதே நற்குண நற் செய்கையுள்ள மனைவியினுடைய கடமை.

(5) மனதிற்கு சங்கடம் அல்லது வெறுப்பை உண்டு பண்ணும் விஷயங்களைப் பற்றியும் முடிவில் கோபமாய் முடியும் விஷயங்களைக் குறித்தும் தன் புருஷனிடத்தில் பெண் சாதி வாதிக்கக் கூடாது; முக்கியமாய் பலர் கூடி இருக்கிற இடங்களில் மேல் சொல்லிய வற்றை முற்றிலும் விலக்க வேண்டும்.

(6) புருஷன் தன் பெண்சாதியினிடத்தில் சொல்லி ஆலோசனை பண்ணாமல் ஒரு காரியத்தைச் செய்யப்பிரவேசிக்கும்பொழுது மனைவி தானே போய் அந்த காரியத்தின் மத்தியில் பிரவேசிக்கப் பிரயத்தனப் படக் கூடாது.

(7) கணவனிடத்தில் காணப்பட்ட தப்பிதங்களையாவது அல்லது தங்களிருவருக்கும் சாதாரணமாய் நேரிடும் சிறு சண்டைகளையாவது மனைவி தனது அன்பான சிநேகிதரிடத்தில் இரகசியமாய்ச் சொல்லிக்கொண்டாலும், அவைகள் எப்படியாவது அயலாருக்குத் தெரிந்து நகைக்க இடமுண்டாகும்? ஆகையால் மனைவி தன்வீட்டு சங்கதிகளை வெளியிடக்கூடாது.

(8) தனது புருஷன் புத்திமானாயும் கல்விமானாயும் இருக்கும் பட்சத்தில், அவரிடத்தில் சாதுரியமாய் பலவித விஷயங்களைப் பற்றி அவர் மனது களிக்கும்படி சம்பாஷணை பண்ணும்பொருட்டு, மனைவி தானும் விரைவாய் ஆவலுடன் கல்வியைக் கற்க முயற்சி செய்யவேண்டும்.

(9) தன் புருஷனுடைய இடையறாத அன்பையும் அந்நியோந்ய சிநேகத்தையும் கெடுக்கும் விஷயங்களைக் குறித்து மனைவி சாக்கிரதையா யிருக்கவேண்டும்.

(10) வர்த்தகம் செய்வதில் சில சமயங்களில் இலாபம் வருவதும் சில சமயங்களில் நஷ்டம் நேரிடுவதும் சாதாரணமாய் யாவருக்கும் தெரிந்த விஷயமாதலால், கணவன் வர்த்தகத்தில் பிரவேசித்திருந்தால், மனைவி செலவு பண்ணுவதில் சிக்கனமாக இருக்க வேண்டும். ஏனெனில் திரவியம் விசேஷமாய் வரும்போது அதை

கண்கால் தெரியாமல் வீணில் செலவழித்து பின்பு ஒரு வேளை வறுமை வந்த காலத்தில் தானும் தன்னுடைய குழந்தைகளும் திரவியமின்மையால் வருத்தப்படும் படிநேரிடும்.

(11) ஆனால் தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் இருக்கின்ற லோபத்தனத்தையும், வரவுக்கு மிஞ்சி அதிக செலவு பண்ணும் துர்வழக்கத்தையும் மனைவி விலக்கவேண்டும்.

(12) வஸ்திரங்கள், நகைகள் சாமான்கள் வாங்கு வதிலும், இன்னும் அநேக வீட்டு விஷயங்களில் மாத்திரம் சிறுக செலவு பண்ண வேண்டுமேயல்லாமல், வண்ணான் குப்பைக்காரன் முதலான கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களுடைய கூலியை அநியாயமாய் மிகவும் குறைத்து அவர்கள் வயிற்று சோற்றில் கல்லைப் போடுவது தருமமல்ல.

காந்திமதி

---

## சுகாதாரம்.

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்று நமது பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களல்லவா? இந்தவிஷயம் எளிதில் யாவரும் அறியத்தக்கதே. இது எப்படி யெனில், ஒருமனிதனுக்கு திரண்ட திரவியம் அமைந்து இருந்த போதிலும் சரீரசுகத்திற்கேற்ற பிரமாணங்களை அனுசரிக்காமல் தப்பிப்போய் விட்டால் அதனால் திரேகசவுக்கியம் குறைந்து பலவியாதிகளால் துன்பப்படுகிறான். இவ்விதமாய் பலவியாதிகளால் பிடிக்கப்படுவதினால், நல்ல வஸ்திராபரணங்களை உடுக்கவும், இன்னும் தனது ஐசுவரியத்தினால் உண்டாகும் அநேகசுகங்களை அனுபவிக்கவும் சக்தியற்றவனாய் விடுகிறான். ஆனால் மற்றொருவன் ஈன ஸ்திதியில் இருந்தபோதிலும் சரீரசுகத்திற்கேற்ற பிரமாணங்களை சாக்கிரதையுடன் அனுசரித்து வருவதினால் தனக்கு ஒருநோயும் இல்லாமல் தன்னுடைய அலுவல்களைக்குறைவின்றி செய்யவும், உலக இன்பங்களை யாதொரு குறைவின்றி அனுபவிக்கவும் சக்தியுடையவனாய் இருக்கிறான். ஆகையால், நாம் எல்லோரும் இவ்வுலகத்தில் அனுபவிக்கத்தக்க சுகங்களில் யாவற்றிலும் முதன்மையானது சரீர சவுக்கியமே.



ஆனால் நமது சரீர சுகத்தைக் காப்பாற்றும் பிரமாணங்களை நாம் தெரிந்து கொள்ளாமலும் அல்லது அவைகளைத் தெரிந்துகொண்டும் அவைகளின் படி நடவாமலும் அசாக்கிரதையாய் இருப்போமாகில் நமக்கு அனேக துன்பங்களும் கெடுதிகளும் சம்பவிக்கும்.

இது எப்படியெனில் (1) ஒரு தாயானவள் தனது சரீரசவுக்கியத்தை சாக்கிரதையுடன் காப்பாற்றிக் கொள்ளுகிறதற்குத் தப்பிப் போவாளாகில் அதனால் அநேக நோய்களால் அவஸ்தைப்படுவதும் அல்லாமல் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் குழந்தை பருவத்திலேயே பலவித நோய்களால் வருத்தப்பட்டு பாலியத்திலும் முதுமையிலும் பலவீனர்களாயும் சுகவீனர்களாயும் இருப்பார்கள்.

இவ்விதமாய் புத்தியீனத்தினால் சரீரசுகத்தை இழந்து தன்னுடைய பிள்ளைகளுக்கும் ஆஸ்தியாக பல நோய்களை சம்பாதித்து வைக்கும் தாயானவள் தனது சமுசாரத்தை சரியாய் நடத்தி வருவதற்கும் சக்தி இல்லாமல் இருப்பாள்.

இதைப்போலவே (2) ஒரு தகப்பனாரும் சுகத்தைக் கொடுக்கும் பிரமாணங்களை மீறி நடப்பாராகில் அவருடைய சரீரத்தைச் சேதப்படுத்திக்கொண்டு பலவித நோய்களால் சங்கடப்படுவார். இதனால் தான் கஷ்டப்பட்டு சம்பாதிப்பதற்கு சக்தி யில்லாதவராய் விடுவார். பிற்பாடு தன்னை நம்பி இருக்கும் பிள்ளைகள் பெண்சாதி சுற்றத்தார் முதலானவர்கள் உண்ண சாப்பாட்டிற்கும் உடுக்க வஸ்திரத்திற்கும் இல்லாமல் சங்கடப்படுவார்கள்.

(3) பாலியத்தில் கெட்ட பழக்கங்களினாலும் கெட்ட நடதைகளாலும் தங்கள் சரீர சுகத்தைக் கெடுத்துக்கொள்ளும் பிள்ளைகள் பிற்பாடு தங்கள் பலத்தை இழந்து, கஷ்டப்பட்டு வாசிக்கத் தொடங்கினால் நோய்களால் வருத்தப்பட்டு, படிப்பும் இல்லாமல் கெட்டு, காலஞ் செல்லச் செல்ல, அனேக வியாதிகளால் துன்பமடைந்து, தாங்கள் முப்பது வயதாகும் பொழுதே எழுபது அல்லது எண்பது வயதுள்ள கிழவனைப்போல் காணப்பட்டு சீக்கிரத்தில் அகால மரணமடைவார்கள். இப்பொழுது மேலே எடுத்துக் குறிக்கப்பட்ட மூன்று உதாரணங்களால் நமக்குத் தெரிய வருவது என்ன வெனில், நமது சரீரசுகத்தைப் பேணும் முறைகளை நாம்

எல்லோரும் வாசித்து நன்றாய்த் தெரிந்துகொண்டு அவ்விதமாய் நடக்கப் பிரயத்தனப் படவேண்டியது மிகவும் அவசியம்.

ஆனால் சரீர சுகமென்றால் எப்படிப்பட்டது? அதை எவ்விதமாய்க் கண்டுகொள்ளக் கூடுமென்றீ நமது நண்பர்கள் கேட்பார்களாகில் அதை டாக்டர் தனகோடி ராசா தன்னுடைய சுகாதர விளக்கத்தில் பின்வருமாறு சொல்லுகிறார். "நாம் சாப்பிடும் போசன பதார்த்தங்களை ஜீரணிக்கச் செய்கிற ஜீரணக் கருவிகளும், போசனத்திலிருந்து இரத்தத்தை யுண்டுபண்ணி அதை தேகமெங்கும் வியாபிக்கச் செய்கிற இரத்தக் கருவிகளும், இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்படி ஆகாயத்தை உட்கொள்ளுகிற சுவாசக் கருவிகளும், தேகத்திலுள்ள இவை போன்ற பல இயந்திரங்களில் ஒவ்வொன்றும் யாதொரு சேதமடையாமல் அதற்குக் குறிக்கப்பட்ட தொழிலை வருத்தமின்றி நடப்பிக்கும்பொழுது நாம் யாதொரு துன்பத்தையும் அடையாமல் இன்பத்தைச் சுகித்து நமக்குள்ள பல அலுவல்களை யாதொரு குறைவின்றிச் செய்ய சக்தி யுள்ளவர்களா யிருப்போம். இப்படிப்பட்ட தேக நிலைமைக்குத்தான் சுகமென்று பெயர்".

சரீர சுகமென்றால் இன்னது என்று சொன்னோம். இப்பொழுது இவ்வகைப்பட்ட சரீர சுகத்தை அடையும் வழிகளை சுருக்கமாய் எடுத்துக் காட்டுகிறோம். இவை மூன்று விதப்படும்.

முதலாவது நம்மைச் சூழ்ந்து இயற்கையாய்ச் சிருஷ்டித்து இருக்கும் வஸ்துக்கள் நமது சரீர சுகத்திற்கு ஏது வாய் இருக்கின்றன. அவை என்னவெனில் நாம் உட்கொள்ளும் ஆகாயமும் (காற்றும்) நாம் குடிக்கும் தண்ணீரும் நாம் சாப்பிடும் பலவகை ஆகாரங்களும் நாம் வாசம் செய்யும் தேசங்களுடைய மண் அல்லது நிலங்களின் சுபாவமுமாய் இருக்கின்றன.

இரண்டாவது நமது சாதியாருடைய வழக்கங்களும் நாம் செய்யும் வியாபாரங்களும் தொழில்களும், நாம் வாசம்பண்ணும் ஸ்தலங்களும், வீடுகளும் நாம் உடுக்கும் வஸ்திரங்களும் நமது சரீர சவுக்கியத்திற்குக் காரணமாய் இருக்கின்றன.



மூன்றாவது தேக முயற்சியும் மனோமுயற்சியும் நமது சுகத்திற்கு ஏதுவாய் இருக்கின்றன. இப்பொழுது சுருக்கமாய் மேலே பிரித்துக்காட்டிய மூன்று விஷயங்களைப்பற்றி பின்னால் விபரமாயும் தெளிவாயும் எடுத்துச் சொல்லுகிறோம். அவைகளை மிகுந்த கவனத்துடன் நமது நண்பர்கள் வாசித்து அவ்விதமாய் அநுஷ்டித்து வந்தால் அதனால் தாங்களும் தங்களைச் சேர்ந்த பந்துக்களும் பல நோய்களால் துன்பப்படாமல் சவுக்கியமாய் வாழ்ந்து கொண்டு இருப்பதற்கு சிறிதும் சந்தேகம் இல்லை.

மேல் சொல்லிய சுகத்திற்கு ஆதாரனமான விஷயங்களைப் பற்றி சொல்லுகிற சாஸ்திரத்தின் பெயர் "சுகாதாரம்" இந்த சாஸ்திரத்தின் முக்கிய கருத்து என்னவெனில் மனிதர்களுடைய வாழ்நாளை விர்த்தி பண்ணும் வகைகளையும், பலவித நோய்களால் வருத்தப்படாமல் நமது சரீரசுகத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் வகைகளையும் கண்டுபிடித்துச் சொல்வதே. ஆதலால் இந்த சுகாதாரத்தை புருஷர்களும் ஸ்திரீகளும் படித்து அதில் சொல்லப்பட்ட விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

ஆனால் சிலர் அறியாமையால் சொல்வது என்னவெனில், இவ்வித சாஸ்திரங்களைப் படித்து அவ்விதமாய் நடந்துகொள்ளவேண்டுமானால் அதற்கு மிகுந்த திரவியம் இருக்கவேண்டும், இல்லாவிடில் அவ்விதமாய்ச் செய்யமுடியாது என்று சொல்வது வழக்கம். இது அறியாமை. ஏழைகளும் அவ்விதமாய் நடந்துகொண்டு சுகத்தை அனுபவிக்கலாம். தனவானும் அவ்விதமாய் நடந்துகொண்டால் சுகத்தை அனுபவிக்கலாம். சுகத்துக்குறிய பிரமாணங்கள் எச்சரிப்பதற்கு மிகுந்த திரவியம் வேண்டியதில்லை. ஒரு ஏழையானவன் தான் குடியிருக்கும் சிறிய வீட்டில் காலை மாலை இரண்டு வேளைகளிலும் குப்பை முதலியவைகளைப் பெருக்கிவைத்து கிணறு குளங்களிருக்கும் சலத்தில் அழுக்குத் துணி தோய்த்துக் கெடுக்காமல் வைத்துக்கொண்டு இன்னம் இவைபோன்ற சுகத்துக் காதாரமான பிரமாணங்களை தன் ஸ்திதிக்கேற்றபடி அநுஷ்டித்து வந்தால் அவன் நோய்களால் பீடிக்கப்படாமல் சவுக்கியத்தை அடைவான்.

## பகவத்கீதா வாசகம்.

### (முன் தொடர்ச்சி)

36. உன் பகைவர்கள் உனது வல்லமையை இகழ்பவராய், சொல்லத் தகாத பல சொற்களையும் சொல்லுவார்கள். அதனினும் அதிக துக்கமானது எது?

37. நீ கொலையுண்டாலோ, ஸ்வர்க்கத்தை அடைவாய்; ஜயித்தாலோ, பூமியை அநுபவிப்பாய். ஆதலால், கௌந்தேய! போர் புரிய உறுதி கொண்டு எழுந்திரு.

38. இன்ப துன்பங்களையும் லாப நஷ்டங்களையும் வெற்றி தோல்விகளையும் சமமாக பாவித்து, பின்பு போரைக் கூடுவாயாக. நீ இவ்வாறு பாவத்தை அடையமாட்டாய்.

39. இந்த புத்தியானது சாங்க்ய விஷயத்திலே உனக்குச் சொல்லப்பட்டது. ஆனால், பார்த்த! நீ எந்த புத்தியைக் கூடி, கர்மமாகிய கட்டை அவிழ்த்துக் கொள்வாயோ, அந்த இதனை யோக புத்தியை யோக விஷயத்திலே கேள்:

40. இதில் முயற்சி பாழாகாது: குற்றம் வராது. இந்தத் தருமத்தின் சொற்பமும் கூட ஒருவனைப் பெரிய பயத்தினின்றும் காக்கின்றது.

41. குருநந்தர! இங்கு நிச்சயத் தன்மையை யுடைய புத்தி ஒன்று தான். உறுதி யற்றவர்களுக்கு, புத்திகளோ அளவில்லாதனவாய்ப் பல கிளைகளை உடையன.

42, 43, 44. அறிவீனர்கள், பார்த்த! வேதவார்த்தைகளில் பிரிய முடையவராய் வேறு ஒன்றும் இல்லையென்று கூறுபவராய், காமத் தன்மையராய், ஸ்வர்கத்தையே மேலாகக் கொண்டவராய், ஜன்மத்தையே கர்மத்தின் பயனாகக் கொடுப்பதும், போகத்தையும் செல்வத்தையும் அடையும் விஷயத்தில் சிறப்புக்கர்மங்கள் மிகுந்துள்ளதுமான யாதொரு இந்த மலர்ந்த வார்த்தையைக் கூறுகிறார்களோ, அந்த வார்த்தையினால் மனம் கவரப் பட்டவராய்ப் போகத்திலும் செல்வத்திலும் அழுந்தினவர்களுடைய மனத்தில் உறுதித் தன்மைத் தான புத்தி உண்டாவதில்லை.



45. வேதங்கள் முக் குணங்களையும் (தாம் கூறும்) விஷயங்களாக உடையன. அர்ஜுன! நீ முக்குணங்களற்றவனாகவும், த்வந்தங்களற்றவனாகவும், எப்பொழுதும்ஸத்துவத்திலேயே நிற்பவனாகவும், யோக க்ஷேமமில்லாதவனாகவும், ஜாக்கிரதை யுடையவனாகவும் இருக்க வேண்டும்.

46. கிணறு முதலிய நீர் நிலையில் எவ்வளவு உபயோகம உள்ளதோ, அவ்வளவு (உபயோகமும்) எங்கும் பெருகிய நீர் பெருக்கில் உள்ளது. அது போல, ஸகல வேதங்களிலும் எவ்வளவு ப்ரயோஜனம் உள்ளதோ, அவ்வளவு ப்ரயோஜனமும் ஞானியான ப்ராஹ்மணனுக்கு ப்ரஹ்மாநந்தத்தில் உள்ளது.

47. கர்மத்திலே தான் உனக்கு அதிகாரம். ஒரு காலும் பயன்களிலே அதிகாரம் வேண்டாம். நீ கர்மத்தின் பயனை அநுபவித்துக் கொள்பவனாக ஆகாதே. கர்மத்தைச் செய்யாமையிலே உனக்கு பிரியம் இல்லாதிருக்கட்டும்.

48. தநஞ்சய! யோகத்தில் நிலைத்துப் பற்றை விட்டு பயன் கைகூடுவதிலும் கை கூடாமையிலும் ஸமமாக இருந்து கர்மங்களைச் செய்; ஸமமா யிருத்தலே யோகமெனப்படுகின்றது.

49. தனஞ்சய! காம்ய கர்மமானது, புத்தி யோகத்தைக் காட்டிலும் மிகத் தாழ்ந்ததன்றோ. அந்தப் புத்தியிலே உனக்கு அடைக்கலத்தைத் தேடிக் கொள். பயனைக் கருதுவோர் கீழோராவர்.

50. ஸமத்துவ புத்தியைக் கூடினவன் இங்கே நல்வினை தீவினையிரண்டனையும் நீக்கிக் கொள்ளுகிறான்; ஆதலால் நீ யோகத்தைக் கூடுவாயாக யோகமானது கர்மங்களில் ஸாமர்த்தியமாம்.

51. ஸமத்துவ புத்தி யுடையவர்கள், கர்மத்தினாலுண்டாகும் பயனை விட்டுவிட்டு ஞானிகளாய்ப் பிறப்பென்னும் கட்டினின்று முற்றும் விடுபட்டுத் தொந்தரவு அற்ற இடத்திற்குச் செல்கிறார்கள்.

52. எப்பொழுது உன் மனமானது மயக்கக் கலக்கத்தைக் கடந்திடுமோ அப்பொழுது நீ கேட்க வேண்டியதிலும் கேட்டதிலும் வெறுப்படைவாய்.

53. பல கேள்விகளால் பலவாறாய்க் கலங்கியுள்ள உன் மனமானது எப்பொழுது ஆத்மாவிடத்து நிச்சலமாய் அசைவற்றதாய் நிற்குமோ அப்பொழுது நீ யோகத்தைப் பெறுவாய்.

அர்ஜுனன் சொல்லலுற்றான்:—

54. கேசவா! ஞானம் நிலைத்து ஸமாதியில் நிற்பவனை எவ்வாறு சொல்வது? ஞானம் நிலைத்தவன் எவ்வாறு பேசுவான்? எவ்வாறு இருப்பான்? எவ்வாறு நடப்பான்?

# புத்தக விமர்சனம்.

---

[கற்பின் வெற்றி அல்லது விக்ரம சிங்கன் கோட்டை மர்மம் ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ. அவர்களால் எழுதப் பெற்று சென்னை மைலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது. விலை ரூபாய் ஒன்று.]

"இப்பெயர் புனைந்த சிறந்த துப்பறியும் கதைப் புஸ்தக மொன்று நமது விமர்சனத்திற்காக வந்திருக்கிறது. தமிழுலகில் தற்காலம் எண்ணிறந்த கதைப் புத்தகங்கள் உலவி வரினும் அவைகள் பலவற்றில் சாதாரணமாகக் காணப்படும் சொற் குற்றம், பொருட் குற்றமின்றி இப்புத்தகம் விளங்குவது மிகவும் பாராட்டதக்கதேயாம். விசேஷ கல்விஞானம் பெற்று, தாய் பாஷையின் பிவிருத்தியில் உண்மையில் சிரத்தையுள்ள இவ்வாசிரியர் போன்ற பலர் முன் வந்து தமிழுலகிற்கு இத்தகைய புத்தகங்களை வெளியிட்டதேவுவதினால் வெகுவாக மலினமடைந்திருக்கும் தமிழ் பாஷை அபிவிருத்தி யடையுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. மேலும் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும இவ்வாசிரியர் தேர்ந்தவராதலால் இவ்விரண்டிலுமுள்ள சிறந்த லட்சணங்களை யமைத்து இவ்வருமையான கதையை எழுதியிருக்கிறார். தவிரவும் இதன் ஆசிரியர் சுபாவமாகவே தெய்வ பக்தி யுள்ளவராதலால், அதை பிறருக்கும் கதைகள் மூலமாக உபதேசித்து அவர்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டுமென்னும் சிறந்த நோக்கத்துடன் இடையிடையே தெய்வபக்தியை நாஸ்திகர்களிலும் உண்டுபண்ணத் தக்கவாறு இக்கதையை எழுதியிருக்கிறார். எல்லாவற்றிலும் ஸ்திரீகளுக்கு முக்கிய ஆபரணமாகவுள்ள கற்பின் மகிமையையும், அதைக் கடைப்பிடித்தோருக்கு எத்தனை இடுக்கண் நேரிடினும் முடிவில் அவர்களுக்கு வெற்றியே ஏற்படுமென்பதையும் நிரூபித்து இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. கற்பிற் சிறந்த காந்திமதியை அவள் புருஷன் வெகுவாக சம்சயித்து அவளுக்குப் பல கேடுகளை விளைவிக்க முயன்றும் கடைசியாக கற்பு வெற்றி பெற்றதை ஆசிரியர் வெகு அழகாக எழுதி யிருக்கிறார். படிக்கப்படிக்க அறிவையும், தெய்வ பக்தியையும் கற்பின் மகிமையையும் பசுமரத்தாணிபோல் மனதில் பதிக்குமாறு இப் புத்தகம் எழுதப்பெற்றிருப்பதால் இதனை படிப்போர் பயனுறுவார்களென்பதில் சந்தேகமில்லை. உயர்ந்த கிளேஸ்கடிதத்தில் எழுத்துப் பிழையின்றி அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. 156 பக்கம் கொண்டது. நான்கு ஆப்டோன் படங்களுடன் கூடியது.

# இந்திரஜித்.

(முன் தொடர்ச்சி.)

---

அந்தப்பெண் "ஆம். அவனும் அத்தையும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர்களுக்குத் தெரியாமல் பிடித்துவிட்டேன். பிறகு நித்யானந்தம் அவைகளை பிறகு சரிப்படுத்திக் கொடுத்தான். மூன்று படங்கள் தேறின. முதல் தரமானவை. கொஞ்சமாவது சோடையில்லை."

சின்னவர் "இவ்வளவுதானா. இன்னும் வேறு ஏதாவது உண்டா?"

அந்தப்பெண் தலைகுனிந்து, "உண்டு. மாயாவீ கோவிந்தய்யராய் வேஷமெடுத்து இங்கே சிலகாலம் தங்கியிருந்த பொழுது மாமியும் அவனும் தனியாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் இரண்டுபடங்களை அவர்களுக்குத் தெரியாமல் பிடித்துவிட்டேன். இதை ஒரு நாளும் மாமி யிடத்தில் சொல்லவே கூடாதென்று கையைப் பிடித்துக் கொண்டாள்."

சின்னவர் "அப்படியா! பாக்கியத்தினிடத்தில் சொல்லக்கூடாதென்றதற்குக் காரணமுண்டு. உன் மாமியிடத்தில் சொன்னால் என்ன பிசகு. அவள் பவுடர் வர்ணம் முதலிய யாதொன்றையும் தொடமாட்டாளே."

அந்தப் பெண் "அதில்லாவிட்டால் லோகமே அஸ்தமித்துப்போய் விட்டதோ. தலைமயிர் உதிர்ந்துபோய் விடுகிறதென்று கல்கத்தாவிலிருந்து ஏதோ ஒரு தைலம் அடிக்கடி தருவிக்கப்படுகிறதல்லவா? அதன் சங்கதி தெரியுமா? வர வர தலை மயிர் நரைத்து வெகு விகாரமாய்ப் போய்விட்டால் அதை மாற்ற முடியாமல் தலைமயிர்ச்சாயத்தைத் தடவுவது பெண்களுக்குள் வழக்கமென்று உங்களுக்குத் தெரியுமல்லவா? அப்படித் தடவின இடமெல்லாம் இந்தப் படத்தில் நீலமாய்க் காட்டும்."

சின்னவர் "எது எப்படியானாலும் தொலையட்டும். படங்களைக் கொண்டுவா" வென்று அவைகளில் இந்திரஜித்தின் உருவத்தை மாத்திரம் தனியாய்க் கத்தரித்தெடுத்து, பெண் பிள்ளைகளின் படத்தை கிழித்தெறிந்துவிட்டார். ஐந்து படங்கள் கிடைத்தன. வெவ்வேறு மாதிரியாயும் வெவ்வேறு ஸமயங்களிலும் வெவ்வேறு அங்க சேஷ்டை முக ஜாடைகளுடனும் தன்னை ஒருவரும் கவனிக்கவில்லை யென்று அஜாக்கிரதையாயிருக்கும் வேளையிலும் எடுக்

கப் பட்டவை. தெய்வகதியை யார் அறியமுடியும். லோகத்திலுள்ள வீராதி வீரன்களும் வில்லாதி வில்லன்களும் போலீஸ்புலிகளும் துப்பறியும் சிங்கங்களும் பல வருஷங்களாய்க் கண்டுபிடிக்க முடியாமல் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கும் இந்திரஜித் மஹாராஜாவை லோக வஞ்சகனை ஒரு அறியாப் பெண் ஒரு குழந்தை ஏமாற்றிவிட்டாள். மடக்கிவிட்டான். ஆபத்தில் கொண்டு வந்துவிட்டாள்."

உடனே போஸ் பண்டிதரைத் தருவித்து, அவரிடத்தில் காட்டினார்கள். அவைகளைப் பார்த்தவுடன் அவர் திடுக்கிட்டு, "ஓகோ! நித்யானந்த செட்டியாரின் புதிய முறைப்படி இவை பிடிக்கப்பட்டிருக்கின்றன. உங்களுக்கு எப்படிக் கிடைத்தன"வென்றார்.

அந்தப்பெண் வெட்கத்தால் குன்றி, "ஆம். அவன் கொடுத்த கண்ணாடிகளைக் கொண்டு தான் பிடித்தேன். எனக்குப் பரிச்சயமுண்டு. இதில் ஒன்றும் குற்றமில்லையே" யென்றாள்.

போஸ் "குற்றமென்ன. நீ என்னவேலை செய்திருக்கிறா"யென்று உனக்குத் தெரியுமா? செட்டியாரே! இந்தப் பெண் மஹாமாயாவியைக் கழுத்தில் சுருக்கிட்டு, நமது கையில் ஒப்புவித்திருக்கிறார்கள். காற்றைக் கரகத்தில் அடைத்திருக்கிறாள். மணலைக் கயிறாகத் திரித்திருக்கிறான். அந்த அசாமியை உள்ளது உள்ளபடி வேஷமில்லாமல் பார்க்கவேணுமென்றால் இந்தப்படங்களே அதற்கு ஜீவாதாரம்.'

செட்டியார் "எனக்கு அப்படி யொன்றும் தோன்றவில்லை. ஏதோ கருப்புக் கோடும் வெள்ளைப்புள்ளியுமாய் சுண்ணாம்பையும் மசியையும் கலந்து அள்ளித் தெளித்தது போல் காணப்படுகின்றனவே."

பண்டிதன் "உமக்கு அப்படித்தான் தோன்றும். அந்தக் கோடுகளும் புள்ளிகளும் எங்கெங்கே சாமான்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்று காட்டுமடையாளங்கள். இவை மெழுகல்ல. அதைக்காட்டிலும் கெட்டியான ஏதோ ஒரு சரக்கு. ரப்பர் கலந்திருக்கலாம். நன்றாய்ச் சாயமிழுக்கும். பூசினால் சீக்கிரத்தில் உலர்ந்து கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும்."பூசினதாய்த் தெரியாது. வெயிலிலும் நெருப்பிலும் உருகாது. மழையில் கரையாது. தொட்டால் ஒட்டிக்கொள்ளாது. இதோபாரும். இவ்விடத்தில் சற்றுப் பள்ளமுண்டு. அங்கே ஓர் காயம்பட்ட வடுவைப்போல் மாற்றியிருக்கிறான். இதோ மூக்கின் நுனியில் கொஞ்சம் ஒட்டப்பட்டு, நீளத்தையும் பருமனையும் அதிகப்படுத்தி யிருக்கிறான். இதோ இந்தக்கோடுகள்



வாய்க்குள் சில சரக்குகளை வைத்துக் கொண்டு அதனால் கன்னங்கள் பருத்தது போல் காட்டி அவைகளால் விழும் நிழலின் அடையாள"மென்றார்.

சின்னவர் "இவைகளை வைத்துக் கொண்டு அசல் பேர்வழியின் உருவத்தை வெளிப்படுத்த முடியுமா?" வென்றார்.

பண்டிதர் சற்று யோசித்து, "ஒரு பெட்டி வர்ணதினுசுகளை என் ஜாகைக்கு அனுப்பி, இன்னும் இரண்டு மணிக்குப் பிறகு அங்கே வாருங்கள். பொய் வேஷங்களை விலக்கிவிட்டு, அந்தப் பேர்வழியின் உண்மையான உருவமும் நிறமும் அமைப்பும் இன்னதென்று ஏதோ கூடியவரையில் காட்டலாமென்று நம்புகிறேன்!" னென்றார்.

குறிப்பிட்ட நேரத்தில் செட்டியார்கள் அவருடைய ஜாகைக்குப் போனார்கள். அவரும் தான் அதுவரையில் வெகு சிரமப்பட்டு, சேர்த்தெடுத்த ஒரு கையெழுத்துப் படத்தை அவர்களுக்குக் காட்டினர். பொதுவாய்ப் பார்த்தால் அந்த அசாமி இன்னானென்று ஒருவருக்கும் தெரியவில்லை. ஆனால் இந்திரஜித்தின் ஒவ்வொரு வேஷத்திலுமுள்ள முக்கியமான அம்சங்கள் அதிலிருந்தன. அவைகளுக்குப் பொதுவான சில குறிகளும் தோன்றின. சாமியாரைப் பார்த்தால் வாத்தியாரின் எண்ணமே வராது. டாக்டரைப் பார்த்தால் பண்டிதரென்றாவது நவாபென்றாவது ஸந்தேஹமே உண்டாகாது. ஆனால் அந்த மாயாவீ அந்தந்த வேஷத்திற்குத் தகுந்தபடி தன் உருவத்தை மாற்றிக்கொள்வதில் நிபுணனே. ஆனால் தன் உண்மையான அமைப்பையும் ஜாடையையும் முற்றிலும் மறைக்க முடியவில்லை. மேலும் அந்தப்பேர்வழியை எங்கேயோ எப்பொழுதோ எந்த சந்தர்ப்பத்திலோ பார்த்ததாய் மாத்திரம் செட்டியார்களுக்கு ஞாபகமுண்டு. மாயாவீ தோன்றின இடங்களில் ஒன்றிலுமல்ல, வேறு சென்னையில் எங்கேயோ சந்தித்திருக்கலாம்.

பெரிய செட்டியார் திடீரென்று கையோடு கையறைந்து, "அடாடா! எனக்கென்ன புத்தி இவ்வளவு கட்டையாய்ப் போய்விட்டது. என்னைப் போன்ற மடையன் வேறொருவனுமில்லை. இதுவரையிலும் ஏனெனக்குத் தோன்றவில்லை. ராமா! உனக்கும் புத்தி பிசகிற்றா யென்ன? நமது துபாஷின் தம்பியல்லவா? ஒன்றிற்கும் உதவாதபயல். பணத்தைக்கொடுத்து அக்கரைச் சீமைக்குப் போகும்படி அனுப்பின பொழுது அதை ஏப்பம் விட்டு ஓரிடத்திற்கும் போகாமலிருந்ததாயும் பிறகு தென்னாப்பிரிக்காவில் சிலகாலமிருந்து கொள்ளைப் பணம் சேர்த்து கலியாணஞ் செய்துகொண்டு சென்னைக்கு வந்து விட்டதாயும் துபாஷ் சொன்னதை மறந்து

விட்டாயா ? நாம் அந்த ஆபீஸிற்குப் போன பொழுது அங்கே அந்தப்பயல் உட்கார்ந்திருந்து நம்மைக் கண்டவுடன் மெதுவாய் நகர்ந்து விட்டானல்லவா? இப்பொழுது எல்லாம் வெட்ட வெளிச்சமாயிற்று. நாம் பினாங்கிற்குப் போவதற்குமுன் கண்டோமல்லவா ?

சின்னவர் "பெயரென்ன ?" பெரியவர் சற்று யோசித்து அன்று ராத்திரி நீ ஜப்தி செய்த சட்டைப் பையில் கண்டிருந்த பெயரே. ஆம். ஞாபகத்திற்கு வந்தது. லக்ஷ்மணன்" சின்னவர் "நீ போலீஸில் எழுதிவைத்து அவனைக் கைது செய்யப் போகிறாயா ?" பெரியவர் "அதற்கு இந்த ருஜு போருமா ?" சின்னவர் "அப்படியாவது அதை இவனே செய்தானென்று ஜோடித்துவிடலாம்" பெரியவர் சற்று யோசித்து, "நாம் அந்தப்பேர்வழி இவனே யென்று பிரமாணஞ் செய்யலாமே யொழிய இவனிடத்தில் எந்தக்குற்றம் சாட்டமுடியும்.

அப்பொழுது ஒரு பரிசாரகன் தாம்பூலம் கொண்டுவந்துவைத்தான். பெரியவருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. காசி நாதராவென்று வேஷம் தரித்து மாயாவீ அங்கே வந்த பொழுது இந்தத் தபசிப்பிள்ளையே அவனுக்கு உபசாரஞ் செய்தான். ஆகையால் அவன் ஒரு வேளை இந்த உருவப் படத்தை அடையாளங் கண்டுபிடிக்க முடியுமோ வென்று செட்டியார் அதை அவனுக்குக் காட்டி, "அடே! நமசிவாயம் ! இது யார் தெரியுமா ? அவன் அதைப்பார்த்தவுடன் ஸந்தேஹமென்ன"வென்றான். யார் சொல்லு பார்ப்போமென்று கேட்டார். நவாப் காசி நாதராவ் அல்லது கோவிந்தய்யரென்று ஏதாவது ஒரு பெயரை எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவன் தயங்காமல் ராணியம்மாளுக்கு ஆசை நாயகன் என்றான். செட்டியார் தேள் கொட்டினது போல் துள்ளிக் குதித்து, "ராணியா ஆசை நாயகனா நீ யாரையோ ஞாபகப் பிசகாய்ச் சொல்லுகிறாய். நன்றாய்ப் பார் என்றார். அதற்கு அவன் அழுத்தமும் திருத்தமுமாய் "என்ன யஜமான் அப்படி உத்திரவாகிறது. நாள் தவறினாலும் அவன் இங்கே வரத்தவறுகிறதில்லையே".

செட்டியார் "அவன் வரும் ஸமயம் எது?"

அவருக்கு கைகால் பதைபதைத்தது. வார்த்தை குளறிற்று. நமசிவாயம் "இப்பொழுது நான் மாடிக்கு வந்து கொண்டிருக்கையில் அவன் சமயற் கட்டில் நுழைவதை கண்டேனென்று செட்டியார்களின் வயிற்றில் இடி விழுந்தது போல் பதில் சொன்னான். அவனுக்கு அது ஸர்வஸாதாரணமான விஷயமாகவே பட்டது. முதலாளிகள் ஒரு பைசா பெறாத விஷ



யத்திர்காக ஏன் இவ்வளவு தடபுடல் செய்து தட்டுக் கிடவேண்டுமென்று அவனுக்கு ஆச்சரியமடங்கவில்லை.

செட்டியார் உடனே ராமா! பிடி அந்தப் பயலை. விடாதே. உயிர் போனாலும் விடாதே என்று கூவினார்.

சின்னவர் "எந்தப் பயலை இந்திரஜித்தையா? ராணியுடன் இப்பொழுது பேசிக் கொண்டிருப்பதாய்ச் சொல்லப்படும் அசாமியையா?"

செட்டியார் "இல்லை இல்லை நமசிவாயத்தை பிடி பிடி" யென்றார். சின்னவருக்கு ஒன்றும் தோன்றாமல் அவனைத் தடுக்கப் போனார். அந்த அப்பாவி கிலி பிடித்து ஒன்றும் தோன்றாமல் ஒரே பாய்ச்சலாய் பாய்ந்து ஓடப் பார்த்தான். ஆனால் செட்டியார் அவனுக்கு முன் தாவி, கதவைச் சாத்தி அதன் மேல் சாய்ந்து கொண்டு மூச்சு விடாதே. சந்தடி செய்யக் கூடாது. உன் குரல் வெளியில் கேட்டதோ அடுத்த நிமிஷம் உன் கையில் விலங்கு மாட்டி விடுவேன். ஜாக்கிரதை யென்றார்.

பரிசாரகன் பயத்தால் உடம்பெங்கும் வியர்த்து, ஐயோ! நான் ஒரு பாபத்தையும் அறியேனே. கனவிலாவது தங்களுக்கு கெடுதி நினைத்திருக்கிறேனா. தங்களுடைய சோற்றைத் தின்று இரண்டகம் செய்வேனா?" வென்று கதறினான்.

செட்டியார் "அதெல்லாம் சரிதான். யார் இல்லையென்று சொன்னார்கள். இப்பொழுது கீழே வந்திருக்கும் பேர் வழி கை விலங்கு கால் விலங்கு போடப் பட்டு, போலீஸ்வசத்தில் பத்திரப் படுத்தப் படுகிற வரையில் நீ இங்கிருந்து அசையக் கூடாது. மேல் மூச்சு கீழ் மூச்சு விடவும் கூடாது. முன் தடவைகளில் போல் இப்பொழுதும் ஏமாந்து போவேனென்றெண்ணினாயோ. ராமா! உன் சிபார்சு வேண்டாம். எனக்கு எல்லாம் தெரிந்து விட்டது. அந்த போக்கிரிப் பயலும் ராணியும் ஆரம்பம் முதல் உட்கையா யிருந்து இவ்வளவு வேலையும் செய்திருக்கிறார்கள். அந்தக் கழுதை மூண்டை பாக்கியத்திற்கு நோடீஸ் கொடுத்ததின் காரணம் இப்பொழுதல்லவா விளங்குகிறது. யாரா யிருந்தாலும் சரி. பாக்கியம் கரடியாய்க் கத்தினாலும் தலை கீழாய் நின்றாலும் என்னை விட்டு ஓடிப் போகிறேனென்றாலும் சரி. இந்த விஷயத்தில் ஒருவரும் என் ஜோலிக்கு வரக் கூடாது. ராணியானால் எனக்கென்ன. ராஜாவானால் எனக்கென்ன. அடே அப்பா! ஆயிரக் கணக்காய் கொள்ளை கொடுக்கிறது. மானம் போகிறது. காலிதம் வேறு. தர்மோபதேசம் வேறு. எனக்கு ஆத்திரம் பொங்குகிறது.

ஒருவரும் இந்த விஷயத்தில் மூச்சு விடக் கூடாது. அந்தப் பயலை விட்டால் கீழே போய் மாயாவியிடத்தில் சொல்லி விடுவான். உடனே அவன் மாயமாய் மறைவான். அவன் நமது துபாஷின் தம்பியே. ராணியின் ஆசை நாயகனே. லக்ஷம் ஐயனார் கோவில்களில் வந்து பிரமாணஞ் செய்யட்டுமா? ஒரு நிமிஷம் தாமதிப் போமானால் அவன் எங்கேயோ சிங்கப்பூரோ ஜப்பானோ, மோர்சோ, யாருக்குத் தெரியும்.

சின்னவர் "சரி சரி அதே நல்ல யோசனை" பெரியவர் "அடே நமசிவாயம் நான் சொல்வதை நன்றாய் கவனித்துக் கேள். நான் போவென்று சொல்லும் வரை நீ இதை விட்டு அசையக் கூடாது. தெரியுமா? ஏதாவது கூச்சல் போட்டு ஜாடை செய்தாயோ அவ்வளவுதான். உன்னைத் தண்ணி மேலேற்றி ஆயுஸு வரையில் மண் தூக்கும் படி அடிப்பேன். ராமா! நீரும் பண்டிதரும் என்னுடன் கீழே வாருங்க" ளென்று அங்கிருந்து சத்தமில்லாமல் அடி மேல் அடிவைத்து கையில் தகுந்த பந்தோபஸ்துடன் இறங்கிப்போனார்கள். போகும்வழியில் கணக்குப்பிள்ளையையும் தோட்டக்காரனையும் கூட்டிக் கொண்டார்கள். சமயற் கட்டின் ஒரு வாசலில் சின்னவரும் பண்டிதரும் மற்றொரு வாசப்படியில் இரண்டு வேலைக்காரர்களும் கையில் தடிகளுடன் உஷாராய் நின்று கொண்டிருந்தார்கள். செட்டியார் உள்ளே போவதற்கு முன் சுதவில் காதை வைத்துக் கேட்டார். ராணியம்மாளுடைய குரலும் வேறொரு மனிதனுடைய பதிலும் கேட்கப்பட்டன. எங்கேயோ அடிக்கடி கேட்ட ஞாபகம் வந்தது. கோவிந்தய்யரா சாமியாரா டாக்டரா பாடகரா எல்லாம் கலந்திருந்தது. தெலுங்கில் பேச்சு நடந்தது. அடிக்கடி சிறிப்பும் தமாஷுமாய் விளங்கிற்று. செட்டியார் திடீரென்று கதவைத் திறந்தார். சின்னவரும் பண்டிதரும் பின் தொடர்ந்தார்கள். அவர்களை கண்ட உடன் உள்ளேயிருந்த மனிதன் எழுந்து தலைப்பாகையை கையில் எடுத்துக் கொண்டு வணக்கமாய் நின்றான். முதல் முதல் கோவிந்தய்யர் செட்டியாரிடத்தில் கண்டு பேசிக் கொண்டிருந்த ஞாபகம் அவருக்கு வந்தது. வாத்தியார் வெகு மரியாதையுடன் தன்னிடத்தில் பேசிக் கொண்டிருந்த ஞாபகமும் வந்தது.

செட்டியார் அவனுடைய தோளில் கையை வைத்துப் பிடித்து, லக்ஷ்மண முதலியாரே! அல்லது இந்திரஜித் லிங்க்பகதூர் மஹா ராஜாவோ! பல தடவைகளில் திருட்டும் மோசக் கருத்தும் செய்த குற்றங்களுக்காக உன்னைக் கைதி செய்கிறேன் அசையாதே" யென்றார்.

அந்த மனிதன் நான்கு புறத்திலும் பார்த்தான். கலக்கமும் ஆச்சர்யமும் அவனுடைய மனதில் தோன்றின. ஆனால் அப்பொழுதும் கொஞ்



சமாவது அவனுடைய நெஞ்ச ழுத்தமும் புத்திக் கூர்மையும் தவறவில்லை "இதென்ன ஆச்சர்யம். ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து அயோக்கியப்பயல்கள் கூட்டங்கூடி ஒரு ஏழையான யோக்கியனை பிடிக்கவரும் கோரம் கலிகாலத்திற்குத் தகுந்ததே. போனதடவை அந்தச் சின்ன மடையனும் நானும் ஒரு கை பார்த்தோம். ஆனால் இது சுத்த மோசம்". செட்டியார் "விடாதே. அவனுடைய கைகளைப் பிடித்துக் கட்டென்று தோட்டக்காரனுக்கு உத்திரவு செய்தார். ஆனால் மாயாவீ தலையை நிமிர்ந்து செட்டியாரை ஏற இறங்கப் பார்த்து மிருகத்திற்கு ஸமமான புத்தியும் பழக்கமுமுள்ள உனக்கு இதைவிட மரியாதை என்ன தெரியும். உன் வேலைக்காரர்களில் யாராவது என்மேல் விரலைப் போட்டால் உன்னையும் அவனையும் பிணமாக்குவேன். வேண்டுமானால் போலீஸாருக்குச் சொல்லியனுப்பு. நான் ஓடிப்போவேனென்ற பயம் வேண்டா" மென்றான். பிறகு பண்டிதரைப் பார்த்து, "ஓசோ தாங்களா? இப்பொழுது பாதகமில்லை. போஸ் கண்டுபிடித்த முறைப்படி நீர் என்னை சாஸ்திர ரீதியாய்க் குறிவைத் திருந்தால் எனக்கு அவ்வளவு வருத்தமில்லை. மடையன்களுக்குக் கட்டுப்படுவது அவமானம். சாஸ்திரத்தில் உழைத்து, நிபுணரென்று பிரஸித்தி பெற்றவர்களுக்கு கட்டுப்படுவது அவமானமென்று புத்தியுள்ள எவனும் எண்ணமாட்டான். இந்த மடஸாம்பிராணி உம்மிடத்தில் வருவானென்று நான் எண்ணவேயில்லை; அதே நான் செய்த பிசகு. யானைக்கும் அடிசருக்கு மென்பது மெய்யாயிற்று. நான் எவ்வளவோ பார்த்திருக்கிறேன். இந்த கோடிச்வரக் கழுதையைப்போல் ஒருவனையும் பார்த்ததில்லை. நீர் என்னைக் கண்டு பிடித்திராவிட்டால் இவன் ஆயிரம் யுகங்கள் தலை கீழாய் நின்றாலும் பலிக்காது. உமது புத்திக் கூர்மையை மெச்சுகிறேன்" னென்றான்.

செட்டியார் அவனைக் குரங்குப் பிடியாய் பிடித்துக்கொண்டு, ராமா! விடாதே. அவன் பழைய போக்கிரித்தனத்தை ஆரம்பிக்கிறான். இப்படி பேசிப்பேசி நமது கவனத்தை மாற்றி திடீரென்று மாயமாய் மறைந்திடுவா" னென்றார்.

மாயாவீ " அடே! ஜாக்கிரதை. முன்பு மடத்தனமாய் யார்யாரையோ பிடித்து, நானென்று குற்றஞ் சாட்டிச் செருப்படி பட்டு காலில் விழுந்து கெஞ்சினதை மறக்காதே. என்னிடத்தில் எந்தக் குற்றத்தைச் சாட்டி இப்பொழுது போலீஸாரிடத்தில் ஒப்புவிக்கப்போகிறா" யென்றான்.

செட்டியார் கோபத்தால் கை கால் பதைபதைக்க உதடு துடிக்க "குற்றமா" எவ்வளவு வேண்டும்? பம்பாயில் பினாங்கில் மைசூரில் இன்னும் எவ்வளவோ. தடவை என்னை ஏமாற்றியிருக்கிறாய் போதாதோ" வென்றார்.

அவன் தலையை யசைத்து, "இதெல்லாம் பலிக்காதய்யா அந்தந்த நியாயஸ் தலத்தின் அதிகாரத்திற்கு வெளிப்பட்ட எல்லையில் பிராது செய்வதற்கு கோர்ட்டாரின் அனுமதி பெறவேண்டும். அங்கங்கே வாரண்டு பிறப்பித்து, இந்தக் கோர்டில் அவைகளை மாற்றி இங்குள்ள அதிகாரிகளின் உத்திரவால் இந்தப் போலீஸார் என்னைப் பிடிக்கவேண்டும். வீணாய் மோசம் போய் விழிக்காதே" யென்றான்.

செட்டியார் "அப்படியா இந்தச் சென்னையில் இந்த ஊரில் இந்த வீட்டில் பல தடவை நீ என்னை மோசஞ் செய்திருக்கிறாய். ராமா! எங்கே பார்த்துக்கொண்டிருக்கிறாய். விடாதே. சட்டமோ சட்டமில்லையோ. நியாயமோ அநியாயமோ. இந்தத் தடவை இவனை விடுகிறதில்லை" யென்று கூவினார்.

இதற்குள் ஒரு வேலைக்காரன் அந்தத் தெருக் கோடியிலிருந்த ஒரு போலீஸ் கானிஸ்டேபிளை அழைத்துக்கொண்டு வந்தான். பெரிய செட்டியார் அவனிடத்தில் லக்ஷ்மணனை குற்றஞ் சாட்டி ஒப்புவித்தார். ஆனால் அவன் "இதெல்லாம் வீண்மிரட்டலே இன்ன குற்றம். இப்பொழுது செய்யப்பட்டது இன்ன விடத்திலென்று விபரமாய் எழுதிவைக்கவேண்டு"மென்றான். செட்டியார் சற்று யோசித்து, மைசூரில் ஜமீன் வாங்கினதற்காக சென்னை பாங்கியின வழியாய் நவாப் வேஷம் பூண்ட மாயாவீக்குப் பணம் செலுத்தினதை குறிப்பிட்டு எழுதிவைத்தார். சின்ன வருக்கோ நடுக்கமெடுத்தது. எங்கே இந்திரஜித் பழைய கமிஷன் அடித்த விஷயத்தை வெளிப்படுத்தி தன் மானத்தைக் கெடுப்பானோ வென்று அவருடைய நெஞ்சு துடித்தது. போலீஸ்காரன் குற்றவாளியை ஒப்புக்கொண்டு ஸ்டேஷனுக்கு அழைத்துப்போனான். உடனே மாயாவீ ராணியைப் பார்த்து, ரஹயஸ்யமாய் ஹிந்துஸ்தானியில் ஏதோ சங்கதி சொன்னான். முன்பு உங்களுக்கு ஒரு இலக்கணப் புத்தகமும் அகராதியும் கொடுத்து, இந்தப் பாஷையைக் கற்றுக்கொள்ளும்படி எவ்வளவோ சொன்னேன். உங்களுக்குப் புத்தி யில்லை. இப்பொழுது அந்த தைர்யத்தால் இவனிடத்தில் நான் எதை வேண்டுமானாலும் பேசவே" னென்றான்.

ராணியம்மாள் அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு விடாமல் கோவென்றலறி நீ எதைச் சொன்னாலும் நான் கேட்கவேமாட்டேன். உன்னை விட்டு ஒரு நிமிஷங்கூட நான் பிழைத்திருக்க மாட்டேன். நீ ஜெயிலுக்குப் போனால் நானும் உன்னுடன் வருவேன். உன்னை இவர்கள் எங்கே அனுப்பினாலும் ! அங்கே உனக்கு முன் நான் போயிருப்பேன்" என்று பரிதாபமாய்க் கதறினாள். பிறகு செட்டியார் வீட்டில் பாடகர் "செட்டியாரே! போக்கிரிகளுக்குள் போக்கிரியா யிருப்பவனும் ஏதாவது நற்குணம் வாய்ந்தவனாயிருப்பா னென்றே நம்பும். உலகத்தாரால் வெறுக்கப்பட்டு, துரத்தப்பட்டாலும் யாராவது பெண்பிள்ளை அவனிடத்தில் விச்வாஸம் வைத்துத் தன் உயிரைக் கொடுத்தாவது அவனைக் காப்பாற்றுவா" ளென்று, சொன்ன வார்த்தைகள் செட்டியாருக்கு ஞாபகத்தில் வந்தன.



ஆனால் இந்திரஜித்தோ அவளுடைய கைகளை மெதுவாய்ப் பிரித்து, "என் கண்மணீ! அப்படி முடியாதே. 'இந்தப் பாழும் சட்டம் அதற்கு இடங் கொடுக்கவில்லையே. அப்படி யிருந்தால் எந்த நரகத்திற்கு இவர்கள் என்னை அனுப்பினாலும் எனக்கு ஒரு பொருட்டல்ல' வென்று நான் உனக்குச் சொல்லவேண்டுமா" வென்று அவளைச் சமாதானஞ் செய்தான்.

அதற்குள் போலீஸ் கானிஸ்டேபிள் அவனை அழைத்துக் கொண்டு வெளியில் வந்து, ஒரு ஜட்காவை அமர்த்தி அதில் அவனை யேற்றி ஸ்டேஷனுக்குக் கொண்டு போனான். இரண்டு செட்டியார்களும் பண்டிதரும் தங்களுடைய மோட்டாரில் அதிவேகமாய் அதைப் பின் தொடர்ந்தார்கள். அப்பொழுதும் எங்கே இந்திரஜித் எல்லோரையும் ஏமாற்றி விட்டுப்பார்த்தவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே மறைந்து விடுகிறானோவென்று செட்டியாருக்கு திகில் குறையவில்லை.

இதற்குள் ராணி துக்கந்தாங்காமல் மூர்ச்சையாய் வாசற்படியில் விழுந்துவிட்டாள். பாக்கியமும் அவளுடைய மருமகளும் அவளைத் தேற்றிக்கொண்டிருந்தார்கள். ஜட்கா வண்டிக்காரன் வேறொரு குறுக்கு வழியாய் வண்டியை விட்டுக்கொண்டு போனான். பின்னால் வந்த மோட்டாரிலிருந்த செட்டியார் அது மறைந்ததைக்கண்டு திகிலையடைந்து, ஐயையோ! குடி கெட்டுப் போய்விட்டது. இந்த வண்டி எங்கே? இந்த வண்டிக்காரன் யாரோ தெரியவில்லையே. அப்பொழுதே அந்த மாயாவியை நமது மோட்டாரில் வைத்துக் கொண்டு போயிருக்கவேண்டும். ஒரு வேளை அந்த வண்டிக்காரன் அவனுக்கு உட்கையாய் ஏன் இருக்கக்கூடாது. அந்தக் கானிஸ்டேபிள் தான் யாரோ? ஒரு வேளை இந்த மூன்று பயல்களும் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்களா யிருந்து விட்டால் என்ன செய்கிறது. கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லையே யென்று வெயிலில் போட்ட புழுவைப் போல் துடித்தார். ஆனால் நல்ல வேளையாய் போலீஸ்டேஷனுக்குப் போய்ப் பார்த்தபொழுது மாயாவியும் போலீஸ்காரனும் வண்டிக்காரனும் நிற்கக் கண்டு செட்டியாருக்குப் போன பிராணன் திரும்பிவந்தது.

பல நாள் திருடன்:—பிறகு பெரிய செட்டியார் சட்டப்படி இந்திரஜித்தென்று சொல்லப்படும் லக்ஷ்மணன் மேல் மோசடிக் குற்றத்தைச்

சாட்டி, புகார் எழுதி வைத்தார். இரண்டு செட்டியார்களும் பிரமாண வாக்கு மூலம் கொடுத்தபிறகு ஜாமீன் கொடுக்கமுடியாத கேஸானதால் கைதியை ஜயிலுக்கு அனுப்பிவிட்டார்கள். அவன் பலே கைகாரனென்றும் இதுவரையில் போலீஸ் நிபுணர்களை ஒவ்வொரு தடவையிலும் ஏமாற்றித் தப்பித்துக் கொண்டு போயிருக்கிறானென்றும் உலகப்பிரஸித்தமானதால் அவனை ஜாமீன் கொடுத்து விடுதலை செய்வதற்கு ஒருபொழுதும் கோர்ட்டார் ஸம்மதிக்கமாட்டார்கள். பெரிய செட்டியார் ஜெயில் வாசல் வரையில் கூடச்சென்று மாயாவி உள்ளே கொண்டு போகப்படுவதைப் பார்த்துவிட்டு அங்குள்ள அதிகாரிக்கு அடிக்கடி எச்சரிக்கை செய்துவிட்டு, திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தார். சின்னவருக்கோ வேறுவிதமான கவலை பிடித்தது. அது வரையில் மாயாவி கண்ணிற் ககப்படாமல் திரிந்து கொண்டிருந்தது எவ்வளவோ சௌகர்யம். இப்பொழுது கைது செய்யப்பட்டபடியால் தான் முன்பு நூற்றிற்கு 10 கமிஷன் பேசிக்கொண்டதை மாயாவி எங்கே வெளியில் விட்டுவிடுவானோ. எங்கே தன் யோக்கியதை பெரிய செட்டியாருக்குத் தெரிந்து போய் தன் வேலைக்கும் பிழைப்புக்கும் மோசம் வருமோ வென்று அவருடைய மனம் பதை பதைத்தது.

மறுநாள் போலீஸ்ப் புலிகள் செட்டியாரிடத்திற்கு வந்து வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். தெய்வச் செயலாய் இந்திரஜித் பிடிபட்டான். அவனுடைய கூட்டாளிகளில் எவ்வளவு அசாமிகளைச் சேர்த்து இதில் மாட்டமுடியுமோ அவ்வளவு இப்பொழுது மாட்டிவிட்டால் மோசடியுடன் சதியாலோசனைக் குற்றத்தையும் சேர்த்துவிடலாம். ஒன்றில் தப்பினாலும் மற்றொன்றிற்குத் தப்பமுடியாது. ஆகையால் ராணியையும் மாயாவியின் கூட்டாளியையும் இந்தக் கேஸில் சேர்க்கவேண்டுமென்று அவளுடைய உருவப்படம் ஒன்றைக் கொடுத்து, இதை நீர் அடையாளம் கண்டு பிடித்ததாய்ச் சொல்லவேண்டு மென்றார்கள்.

இங்கே சொல்ல முடியாத கஷ்டங்கள் ஏற்பட்டன. பெரியவர் ராமன் செட்டியாரைத் தனியாக அழைத்து, “இது பெரிய சங்கடமாயிருக்கிறது. யாரையும் பற்றி முன்பின் யோசிக்காமல் குற்றஞ் சாட்டுவதும் பிரமாணஞ் செய்வதும் மஹா பாபம். அதிலும் ஒரு பெண் பிள்ளையின் மானத்தையும் உயிரையும் கெடுக்கும் படியான வழியைத் தேடுவது கடவுளுக்கு முற்றிலும் வெறுப்பான காரியம். இந்தப்பயல் இந்திரஜித் அதாவது லக்ஷ்மணன் கொல்லுக் கொலைக்கு அஞ்சாத போக்கிரி. அவனுக்கு ஐயோ வென்றிரங்கினால் ஆறுமாதத்துப் பாபம் பிடிக்கும். அதனால் அவனுடைய கூட்



டாளி யாரோ. அவளைப்பற்றி நமக்கு என்ன தெரியும். அவனுக்குக்கட்டின பெண்டாட்டியா யிருக்கலாம். மேலும் அவனுடைய நிர்ப்பந்தத்திற்காகவே இப்படி அவனுக்கு ஒத்தாசை செய்திருக்கலாம். ஸ்வபாவத்தில் வெகு நல்லவளென்றும் வேடிக்கையும் விளையாட்டும் சிரிப்பும் தமாஷுமாய் இருப்பவளென்றும் எனக்குத் தோன்றுகின்றது. அவளால் நமக்கு என்ன கெடுதி. மேலும் இந்த உருவப்படத்திலிருப்பவள் அவள் தானென்று எப்படி நாம் பிரமாணஞ் செய்யமுடியும். நீ தான் சொல், நம்மைப் பல தடவை பலவிதமாய் பலவேஷம் பூண்டு மோசஞ் செய்த அந்தப் பெண் இவன் தானா”வென்றார்.

அவருடைய மனப்பான்மையை சின்னவர் அறியாதவரா? ஸ்திரீகளிடத்தில் செட்டியாருக்குள்ள நம்பிக்கையும் ரீதியும் மட்டில்லாதது. அதிலும் அழகு ஸாமர்த்தியம் பேசும் திறமை முதலிய குணங்கள் வாய்ந்து தன்னை ஒரு பொருட்டா யெண்ணி, மரியாதை யோடும் கௌரதையோடும் தன்னை நடத்தும் ஸ்திரீகள் லக்ஷக்கணக்காய் தன்னைக் கொள்ளை யடித்தாலும் அவருக்கு ஸம்மதமே. தன் மேல் தோலையும் அவர்களுக்கு உரித்துக்கொடுப்பார். மாயாவியின் கூட்டாளி இவரைப் பலவிதமாய் மயக்கி, தன் வலையில் மாட்டி விட்டாளென்று சின்னவருக்கு நன்றாய்த் தெரியும். அந்த உருவப்படத்தில் உள்ள பெண் இந்திரஜித்தின் கூட்டாளியோ என்னமோ வென்று பெரியவர் சொல்வது பலே வேஷமென்று ராமன் செட்டியாருக்குச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் தன் நிலைமையையும் தான் கேவலம் குமாஸ்தா வென்பதையும் தான் ரஹஸ்யமாய்ச் செய்திருக்கும் குற்றத்தையும் நினைத்து, அதற்குத் தகுந்த வேஷம் போட நிச்சயித்தார். பெரியவர் எப்பொழுது அடையாளங்கண்டு பிடிக்க முடியவில்லையோ சின்னவருக்கு மாத்திரம் தெரியுமா தெரியலாமா? “ஆம் ஸந்தேஹமென்ன அவளுக்கும் இந்தப்படத்திற்கும் எள்ளளவும் ஸம்பந்தமில்லை. போலீஸார் மோசம் போய் யாரையோ கொண்டு வந்து, நம்மை அடையாளம் கண்டு பிடிக்கச் சொல்லுகிறார்க”ளென்றார். ஆனால் இதைப் போல் பல வேஷங்களெடுத்த மாயாவியை மாத்திரம் படத்தால் கண்டு பிடிக்கமுடிந்ததா. அப்படியிருந்தும் இரண்டு செட்டியாரும் அவனே அந்த ஆசாமி யென்று ஒரே பிடியாய்ப் பிரமாணஞ் செய்யவில்லையா? சின்னவர் வாங்கும் சம்பளத்திற்கு அவ்வளவாவது செய்யவேண்டாமா? மேலும் சாமியார் ஒரு ஸமயத்தில் சொன்னதில் பெரியவரின் சட்டைப்பையில் ஏதோ ஒரு கடிதம் இருப்பதாயும் அதிலுள்ள சங்கதிகளைப் பார்க்காமலேயே சொல்லட்டுமோ வென்று கேட்டதற்கு செட்டியார் பரபரப்புடன் வேண்டாமென்று மறுத்தார். ஒரு வேளை அது அந்தப்பெண் பிள்ளையால் அவருக்கு

எழுதப்பட்டிருக்கலாம். இல்லாவிட்டால் அவ்வளவு ஆத்திரமென்ன. மேலும் இவரால் எழுதப்பட்ட பதில் கடிதங்கள் அவளிடத்தில் எத்தனை மாட்டிக் கொண்டிருக்கின்றனவோ. அவை வெளியில் வந்தால் என்ன மோசம் விளையுமோ! பாக்கியத்திற்குத் தெரிந்தால் குடி கெட்டுப் போகாதா. கோர்ட்டில் இழுத்தால் இவையெல்லாம் வெளியில் வராமலிருக்கமுடியுமா? எந்த வேஷம் போட்டாலும் அந்தப் பெண்பிள்ளையைக் கண்டவுடன் செட்டியாருடைய முகத்தில் ஒரு களையும் சிரிப்பும் மனதில் குதூஹலமும் உண்டாயின. அவளுடைய வார்த்தையே அவருக்கு வேத வாக்கியம். மற்ற யார் சொன்னாலும் ஏறாது. எந்த விதமாய் அவளிடத்தில் அவர் மாட்டிக் கொண்டிருக்கிறாரோ. யாருக்குத் தெரியும்.

“ஆகையால் கேட்டாயா ராமா! அந்தப் பெண்ணைக் குற்றஞ்சாட்டி ஜெயிலில் வைப்பதென்ற மஹா பாபத்திற்கு நான் உடந்தையாகமாட்டேன். அவளை எனக்கு அடையாளந் தெரியுமென்று சொல்லமாட்டேன். நன்றாய் யோசித்தால் அவள் குற்றவாளி யென்பதற்கு எவ்விதமான ருஜுவும் இல்லையென்று உறுதியாய்ச் சொல்லலாம். ஆனால் உண்மையாய்க்குற்றஞ் செய்தவர்களை மறைக்க விரும்புகிறேனென்று, ஒரு பொழுதும் நீ நினைக்கக்கூடாது. ராணியின் விஷயம் வேறு. அவளை வேலைக் காரியாய் எண்ணி நடத்தி வந்தோமா? நமது குடும்பத்தில் ஒருவரைப்போல் எவ்வளவு பிரியத்துடனும் நம்பிக்கையுடனும் எல்லாவற்றையும் அவளிடத்தில் ஒப்பிவிக்கவில்லையா? எந்த விஷயத்தில் அவளுக்குக் குறைவு வைத்தோம். நகையோ புடவையோ துணியோ மணியோ காசோ பணமோ நினைத்த போதெல்லாம் எதை வேண்டுமானாலும் கொடுக்கவில்லையா. அப்படிப் பட்டவள் நம்மை மோசஞ் செய்வதைப் போல் கொடிய பாபம் வேறுண்டோ. இல்லை. இல்லை. இந்தப் பயலுக்கு வைப்பாட்டியாயிருந்து பாக்கியத்தின் வயிர அட்டிகையிலுள்ள கல்லுகள் எடுத்துக் கொடுத்ததும் அவளே. அவன் நவாபாய் வேஷம் போட்டபொழுது அவனுடன் ஒத்துப்பேசிக் கொண்டு நம்மை அந்தக் கோட்டைக்கு அழைத்துப் போனதும் அவளே. நான் மரக்காயருக்கு எழுதின கடிதத்தைத் தானே தபாலில் போடுவதாய்க் கொண்டு போய் உடைத்துப்பார்த்து மாயாவிக்கு அனுப்பினவளும் அவளே. துப்பறிபவனைத் தருவிக்கவேணுமென்று நாம் ரஹஸ்யமாய்ப் பேசிக் கொண்டிருந்ததை எப்படியோ உற்றுக்கேட்டு, கோவிந்தய்யராய் அவனை வேஷம் போட்டுக் கொண்டு வரச் சொன்னதும் அவளே. அவனிடத்தில் வெறுப்புக் காட்டினது போல் செய்ததெல்லாம் வீண் வேஷமே. நாம் ஒருவருக்கும் தெரியாமல் கப்பல் யாத்திரை செய்ததை அறிந்து, அவனிடத்தில் தெரிவித்து, டாக்டராய் வரச் சொன்னதும் அவளே.



ஆகையால் அவளை எதுவேண்டுமானாலும் செய்யலாம். அவள் மேல் குற்றஞ்சாட்டி, ஜெயிலுக்கனுப்புவது பிசகென்று ஒருவருஞ் சொல்லமாட்டார்கள். மேலும் அவள் விஷயத்தில் உருவப்படம் அடையாளங் கண்டுபிடிப்பது முதலிய வம்புகளில்லை. நாமே நேரில் பார்த்த விஷயந்தானே. போக்கிரியின் நிர்ப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு பயந்து நடந்தவர்களை நாம் காட்டிக்கொடுப்பது எனக்கு இஷ்டமேயில்லை” யென்றார்.

சின்னவர் அவருடைய பாட்டுக்குச் சரியாய் தாளம் போடாவிட்டால் பிழைப்பதெப்படி. ஆகையால் “இதில் ஸந்தேஹமென்ன உன்னைப்போன்ற பெருந்தன்மையும் பொறுமையும் உதார குணமுமுள்ளவர்கள் மூன்று லோகங்களில் சல்லடை போட்டுச் சலித்தாலும் கிடைப்பதரிது. உனக்கு இவ்வளவு இளகின மனதென்று வெளியில் தெரிந்தால் உன்னை எல்லோரும் பிடுங்கித் தின்று விடுவார்கள். அந்தக் குற்றமற்ற ஏழைப்பெண்ணை நாம் காட்டிக் கொடுப்பது மஹா பாபம். என்னைப்பற்றி நீ கொஞ்சம் கூட கவலைப்பட வேண்டாம். உண்மையாய் அவள் ஏதாவது அசட்டுத்தனமாய் நடந்திருந்தாலும் நானாயிருந்தால் அதை அப்பொழுதே மறந்திருப்பேன். இந்த உருவப்படத்திலுள்ள பேர்வழி அவளல்லவென்று எந்தப்பிடாரி கோயிலிலும் நெய் விளக்கு அணைக்கத் தயாராயிருக்கிறே”னென்றார்.

பெரியவர் ராமன் செட்டியார் கையைப்பிடித்துக் கொண்டு, ராமா! உன்னைப்போல் உண்மையான நண்பன் எனக்குக் கிடைத்திருப்பது என் அதிருஷ்டமே. யுக்தியும் கூர்மையுமான புத்தியும் கண்யமும் வாய்ந்த நீ என்னுடன் இல்லா விட்டால் எனக்கு எந்தக் காரியம் நடக்கும். நான் இது வரையில் பலதடவை உன்னிடத்தில் கோபித்துக் கொண்டிருப்பேன். அலக்ஷ்யமாய்ப் பேசி யிருப்பேன். தகுந்தபடி மரியாதை செய்யத் தவறியிருப்பேன். அவ்வளவையும் பொறுத்துக் கொண்டு வெளிக்குக் காட்டாமல் அலுக்காமல் சலிக்காமல் என் இஷ்டத்தையே கவனித்து, எனக்கு நன்மையையே செய்து வரும் உன்னிடத்தில் நான் இனியாவது தகுந்தபடி நடக்காமல் இருந்தால் நானும் ஒரு மனிதனா? ஏதோ அஜாக்கிரதையால் உன் மனதை நோவச் செய்திருந்தாலும் அதை மன்னிப்பாயென்று நம்புகிறேனென்றார். இவ்வளவும் மாயாவின் கூட்டாளியால் தனக்குக் கிடைத்த உபசாரமென்று சின்னவருக்குத் தெரியும். ஆனால் நாய் அடித்த காசு குலைக்குமா? ஒரு வேளை அந்த மாயாவிதான் பதிலுக்கு பதில் செய்வதற்காக 100-க்கு 10 டிஸ்கௌண்ட் கேட்டதை வெளிப்படுத்தினாலும் ஒரு வேளை பெரியவர் நம்பமாட்டாரென்று ராமன் செட்டியாருக்கு தைரியமுண்டாயிற்று.

சற்று நேரத்திற்கெல்லாம் பாக்கியத்தம்மாள் சின்னவரை ஜாடை காட்டி, தனியே அழைத்து, "ராமா! உன்னிடத்தில் ஒரு சங்கதி சொல்ல வேண்டியிருக்கிறது. இது தலைபோனாலும் வெளியில் வரக்கூடாது தெரியுமா? அதிருக்கட்டும். நான் உன்னிடத்தில் எவ்வளவு பிரியமாயும் விஸ்வாசத்தோடும் நடந்து கொண்டிருக்கிறேனென்று உனக்குத் தெரியுமே. உன் மைத்துனனிடத்தில் உன்னைப்பற்றி எவ்வளவோ சிபார்சு செய்திருக்கிறேன். உன்னைப்பற்றி அவர் எதாவது கடுமையாய்ப் பேசினால் எனக்குப் பொறுக்காது. உடனே கண்டித்துவிடுவேன். மேலும் உன் விஷயத்தைப் பற்றிக் கொஞ்சமேனும் கவனிக்கிறதில்லையென்பதும் வெகு அஜாக்கிரதையென்பதும் எனக்குத் தெரியும். இந்த நாளில் ஊரும் பெயரும் தெரியாத நாய்களெல்லாம் என்னென்னமோ தலை கீழாய் நிற்கின்றன. உன் மனைவி மஹாசாது. கேவலம் கிருத யுகத்துப் பெண். சூதும் வினையும் ஒன்றும் தெரியாது. நகையும் புடவையும் வேண்டாம். பெருமையும் வேண்டாம். படிப்பு படிப்பென்று புஸ்தகமும் கையுமாயிருந்தால் போதும். அவளுடன் சண்டைபோட்டு பிடிவாதம் பிடித்து, என் பழைய வயிர அட்டிகையைப் போட்டுக் கொள்ளும்படி செய்தது பிருஹ்மம் பிரயத்தனமாயிற்று. அது என் கழுத்திற்குப் பிடிக்கவில்லை. எனக்கு இப்பொழுது ஒரு காரியம் நீ செய்ய வேண்டும். மாயாவியின் கூட்டாளியைப் போலீஸார் சொல்லும் விதமாய் எப்படியாவது குற்றஞ்சாட்டி, இந்தக் கேஸில் மாட்டி விட வேண்டும். பலே போக்கிரி முண்டை அவளுடைய சூதும் வாதும் அசைப்பும் பசைப்பும் மயக்கும் திருப்பும் தலை முறை தலைமுறையாய் வேசித்தொழில் செய்பவளுக்கும் வராது. அவள் தலை மயிரை சிரைத்து மொட்டையடித்து, கந்தல் துணியை இடுப்பில் கட்டி, தலையில் மண் கூடையைத் தூக்கும்படி அடிக்க வேண்டும். அதற்காக எவ்வளவு செலவானாலும் பின் வாங்காதே. கொடுப்பதற்கு நான் இருக்கிறேன். மாயாவியை இவளே கெடுத்தவள். ஸகல யோசனையும் உபாயமும் செய்கிறவள் இவளே. பணப்பசை உண்டென்று கண்டு விட்டால் ஒருவனை மயக்கிக் கண்ணால் வளைத்து, கட்டிப்போடுவதே அவளுக்குத் தொழில். உன்னைப்போல் கள்ளங் கபடற்றவர்களை குற்றஞ் சொல்வதில் பயனென்ன. அவளிடத்தில் எனக்குக் கொஞ்சமேனும் இரக்கமில்லை. ஆனால் ராணியை மாத்திரம் காட்டிக் கொடுக்கக் கூடாது. அவளும் என்ன நல்லவளோ. பலே போக்கிரி முண்டை. என்னிடத்தில் கணக்கில்லாமல் வாங்கித் தின்று விட்டு, ஆயிரக் கணக்காய் என்னைக் கொள்ளையடிக்கிறது! ஏமாத்துகிறது! அடே அப்பா! நினைத்தால் மனம் கொதிக்கிறது. அவளிடத்தில் எனக்கு ஏதோ பிரியத்தால் இப்படிச் சொல்வதாய் நீ எண்ண மாட்டாய். சங்கதி வேறு. இவ்வளவு வருஷ காலமாய் அவள் எனக்குத் தாதியாயிருந்தாளல்லவா? யஜமானிக்கும் வேலைக்காரிக்



கும் மாத்திரம் தெரிந்திருக்கும் சங்கதிகள் அனேகமுண்டு. அவை புருஷர்களுக்குத் தெரியாது. தெரியவும் கூடாது. நான் ராணியைக் குற்றஞ்சாட்டினால் அவள் என்னை ஸாக்ஷிபோட்டு கூட்டில் ஏற்றி விசாரிக்காமல் விடுவாளா? அவள் கேள்வி கேட்பதும் நான் பதில் சொல்வதும் வெகு அழகல்லவா? எவ்வளவோ ரஹஸ்யங்களுண்டு. அதெல்லாம் சந்தியில் இழுக்கப்பட்டு, அங்குள்ள நாயும் பேயும் கேட்டுக் கைகொட்டிச் சிரிக்க நான் குறும்பாடுபோல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பது எவ்வளவு நேர்த்தி. ஆகையால் ராணியை விட்டு விடு. இதை எவ்வளவு தூரம் எந்த விதமாய்ச் சொன்னால் உன் மைத்துனனுக்கு மனதில் படுமோ அப்படிச் சொல். வீண் பிடிவாதம் பிடித்து, என் பேச்சைத் தட்டி விட்டு ராணியை இந்தக் கேஸில் சேர்த்தாலோ நான் உடனே கூட்டில் போய் எதை வேண்டுமானாலும் சொல்லுவேன். ராணியும் அவளுடைய கூட்டாளியும் மாயாவியும் ஒன்றுமில்லாமற் தப்பித்துக் கொண்டு போகும்படி எதை வேண்டுமானாலும் ஸத்தியஞ் செய்வேன். என் வழிக்கு மாத்திரம் வரவேண்டாம். இவ்வளவு சொல்லியும் கேட்கா விட்டால் உங்கள் செட்டியார் இஷ்டப்படி செய்து கொள்ளட்டும். நடக்கிறபடி நடக்கட்டு"மென்று நயமும் பயமுமாய் எடுத்துச் சொன்னாள்.

ராமன் செட்டியார் என்ன செய்வார் பாபம். செட்டியார் மாயாவியின் கூட்டாளியைக் கண்டு பயப்பட்டார். அவரைக் கூட்டில் ஏற்றி அவள் என்ன கேழ்வி கேட்பாளோவென்று, அவருக்கு திகில் பிடித்தது. பாக்கியத்திற்கு ராணியிடத்தில் பயம். தன்னைக் கூட்டில் போட்டு, அவள் என்ன கேள்வி கேட்பாளோ என்று திகில். போயும் போயும் கேட்பதற்கு என்ன உண்டு. புடவையும் ரவிக்கையும் பவுடரும் சாயமும் மையும் தைலமும் இன்னும் ஸ்திரீகள் தங்களுடைய வயதையும் குறைகளையும் மறைத்து, எப்பொழுதும் பால்யமும் அழகும் லக்ஷணமும் வாய்ந்தவர்களாய் பிறருடைய கண்ணில்பட வேண்டுமென்று செய்யும்பிரயத்தனங்களான சில்லரை விஷயங்களைத் தவிர வேறு என்ன ரஹஸ்யம். ஆனால் இந்தக் காலத்துப் பெண்கள் கொலை கொள்ளை முதலிய குற்றங்களைச் செய்ததாய் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்வார்களேயல்லாது இந்த ரஹஸ்யங்களை வெளியில் விடுவதற்கு ஸம்மதிப்பார்களா ?

சின்னவர் செட்டியாரிடத்திற்குப் போய் வெகு நேரம் அவருடன் வாதாடி இந்தக் குடும்பச்சண்டைகளைத் தீர்த்து வைத்தார். முடிவில் சுனச்சேபனுடைய கதையைப்போல் பாக்கியம் ராணியையும் செட்டியார் மாயாவியின் கூட்டாளியையும் விட்டுக் கொடுக்க மனமில்லாமல் அவ்விருவருக்கும் கெடுதி நேரக்கூடாதென்று ஏற்பட்டது.

ஆனால் இதைப் போலீஸாரிடத்தில் சொல்லி எப்படிச் சரிப்படுத்துவது. அந்தச் சுமையும் சின்னவருடைய தலையில் விழுந்தது. முடிவில் அவர்களும் ஸம்மதித்தார்கள். லோகவஞ்சகனான இந்திரஜித் அவர்களுடைய கையில் அகப்பட்டுவிட்டான். அவன் மேல் கொண்டுவந்த கேஸை ருஜுப்படுத்தி, அவனைத் தண்டிப்பதற்கு இரண்டு செட்டியார்களின் சாக்ஷியமில்லாவிட்டால் முடியாது. அவன்தானென்று அவர்கள் ஸத்யமாய் அடையாளஞ் சொல்லவேண்டும். மாயாவின் கூட்டாளிகளையும் கேஸில் சேர்க்கும்படி அவர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் பெரியவர் ஒரே பிடிவாதமாய் மறுத்து விட்டார். இந்திரஜித்தைப்பற்றித் தான் ஸாக்ஷ்யம் கொடுத்து, குறுக்கு விசாரணையில் தப்பி வெளியில் வருவதற்கே வாலைப்பிடிக்கும். கூட்டாளிகளைப்பற்றி தான் நிச்சயமாய் ஒன்றும் பிரமாணம் செய்யமுடியாது. குறுக்கு விசாரணைக்கு நிற்கவும் முடியாதென்றுவிட்டார். செட்டியாருடைய ஸம்மதியும் உதவியும் இல்லாவிட்டால் குறுக்கு விசாரணையில் அவர் உளறிவிட்டால் கேஸ் மண்ணைவாரிப் போட்டுக்கொண்டு போய்விடும். கேஸில்லாவிட்டால் தண்டனை எங்கே? தண்டனையில்லாவிட்டால் போலீஸாருக்கு மானம் போகும். ஸாக்ஷிகளில் யாரையாவது விரோதித்துக் கொண்டால் அவர்கள் ஒன்றும் தெரியாதென்று சொல்லி விடுவார்கள். பொய் கேஸ் கொண்டுவந்ததற்காக போலீஸாருக்கே ஆபத்நேரும்.

ஆரம்பத்தில் விசாரணை நடந்து, ஒருவிதமாய் முடிவதற்குள் செட்டியாருக்கு இதில் ஏன் மாட்டிக்கொண்டோம். கரடிவேண்டாம். கையை விட்டால் போதுமென்று தோன்றிற்று. அவரை அவ்வளவு கலக்கி விட்டார்கள். போலீஸாரிடத்திலும் வக்கீல்களிடத்திலும் ஒருவன் அகப்பட்டுக் கொண்டால் உயிருடன் தப்புவானா? அவனுடைய ஸஞ்சயனத்திற்குக் கூட ஒரு பிடிசாம்பல் கிடைக்காது. போலீஸாரே பிணம் தூக்குகிறவர்கள்; வாதிப் பிரதிவாதிகளே பிணங்கள்; நியாயாதிபதியே பிரேதக்கிரியைகளைப் பண்ணி வைக்கும் புரோஹிதன். வக்கீல்களும் கோர்ட் உத்தியோகஸ்தர்களும் ஸேவகர்களும் நியாய ஸ்தலமென்ற சுடுகாட்டில் திரியும் கழுகுகளும் பருந்துகளும் நரிகளும் கழுதைகளும் பூதப்ரேத பிசாசங்களுமாவார்களென்று ஒரு கவி சொல்லியிருப்பது பொய்யல்லவே.

செட்டியார் இதென்ன வம்பு. இந்தப் பாழும் கேஸ் என் பிராணனையும் மானத்தையும் இப்படி வாங்குமென்று தெரிந்திருந்தால் இந்தப் பயலைக் கூப்பிட்டு உனக்கு வருஷத்திற்கு ரூபாய் 2000 அனுப்பிவிடுறேன். இந்தியாவில் தலைகாட்டாமல் மோர்சோ பி. ஜீ. ஒ- ஜமயிகாவோ ஆஸ்திரேலியாவோ எங்கேயாவது யமலோகத்திற்கோ போய்த் தொலைந்துவிடு. உனக்கு யாதொரு குறைவுமில்லாமல் பார்த்துக் கொள்ளுகிறேனென்று சொல்



லாமல் போனேனே. இங்கே அவனை வைத்துக்கொண்டு மாரடிப்பது யாரால் முடியும். இதிலுள்ள அனர்த்தம் என்னவென்றால் எவ்விதத்தாலும் யோக்யமான தனவான் ஒருவன் ஸாக்ஷியாய்க் கூட்டில் ஏறிவிட்டால் அவனுடைய இருபத்தொரு தலை முறையும் கிண்டிக் கிளரப்பட்டு இல்லாததை உண்டென்றும் உள்ளதை இல்லையென்றும் ஒப்புக்கொள்ளும்படி அடிக்கப்பட்டு, பித்துப்பிடித்து தான் யாரென்றே ஸந்தேஹமுண்டாய் வெளியில் வருகிறான். அவனைப் போன்ற மடையனும் போக்கிரியும் பாபியும் ஒருவருமில்லை யென்று எல்லோரும் எண்ணும்படியாய் யமகிங்கரர்களைப் போன்ற வக்கீல்கள் குறுக்கு விசாரணையில் செய்து விடுகிறார்கள்."

சின்னவர் "உன் விஷயத்தில் அப்படி ஒரு நாளும் நடவாது. ஒரு வேளை மரக்காயர் விஷயமாய் விசாரணைக்கு வந்தால் மாத்திரம் கொஞ்சம் யோசிக்கவேண்டியதென்று கோடீச்வரனுடைய அந்தரங்க காரியதரிசியின் நிலைமைக்குத் தகுந்தபடி சொன்னார்."

பிறகு போலீஸாரும் வக்கீல்களும் செட்டியார்களும் கலந்து கேஸை ஜோடிக்க ஆரம்பித்தார்கள். செட்டியாருக்குப் போதும் போதுமென்றாயிற்று; ஆனால் மாட்டிக்கொண்டு விட்டபடியால் கேஸை நடத்தியே தீரவேண்டியிருந்தது. மொத்தமாய் ஒரு பெருந்தொகையை வாங்கிக் கொண்டு என்னை விட்டுவிடமுடியாதா வென்று போலீஸ் இன்ஸ்பெக்டரை வேடிக்கையாய்க் கேட்டார். ஆனால் அது உண்மையாகவே அவருடைய அபிப்பிராயமென்பதில் ஸந்தேஹமில்லை.

கேஸின் விவரங்கள் வரவர வெளிக்கு வந்த பிறகு மாயாவி செய்த தந்திரங்களெல்லாம் செட்டியார்களின் புத்திக்குப்பட்டு அவர்களை மயக்கின. லக்ஷ்மணனென்றவன் செட்டியாருடைய துபாஷின் தம்பியானதால் அவருடைய வியவஹாரங்களைப்பற்றி அறியாதது ஒன்றுமில்லை. ஆரம்பத்தில் கைபழகுவதற்காக சில்லரை போக்கிரித்தனங்களையும் மோசடிகளையும் வெகுசாதுர்யமாய்ச் செய்து வந்து வெள்ளையன் செட்டியாரைக் குறி வைத்து, வெகு விரிவாய் ஏற்பாடுகள் செய்தான். அல்ப விஷயத்தைக் கூட வெகுகாலத்திற்கு முன்பே எதிர்பார்த்து பந்தோபஸ்து செய்தான். போர்ஜரி சிபார்சுக் கடிதங்களால் ராணிக்கு செட்டியாரின் வீட்டில் வேலை ஸம்பாதித்துக் கொடுத்தான். அவளால் அந்தக் குடும்பத்தின் ஸகல ரஹஸ்யங்களையும் பழக்கங்களையும் நடவடிக்கைகளையும் பூர்வ விருத்தாந்தங்களையும் இன்னும் நன்றாய்த் தெரிந்து கொண்டு செட்டியாருக்கு விரோதமான காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான். முதலில் சாமியாரைப்போல் வேஷம் பூண்டுவந்ததின் கருத்தென்ன வென்றால் செட்டியாரை விசேஷமாய்க் குறி

வைத்து ஏமாற்றினதாய் அவருக்குத் தோன்றக்கூடாது. ஏதோ பல புள்ளிகளில் ஒன்றாகவே தோன்றவேண்டும். இல்லாவிட்டால் அவர் உஷாராய் விடுவார். செட்டியாரைப் பற்றின பூர்வவிருத்தாந்தங்களை பாங்கி உத்தியோகஸ்தர்களின் மூலமாய் விசாரித்துத் தெரிந்து கொண்டதெல்லாம் வெறும் வேஷம். இந்திரஜித்திற்கு அவை முன்பே நன்றாய்த் தெரியுமென்பதை மறைப்பதற்காகவே ராணியின் உட்கையாலேயே பாக்கியத்தின் வயிர அட்டிகையிலிருந்து கல்லுகள் திருடப்பட்டன. மரக்காயருக்கு எழுதின கடிதம் மாயாவின் கையில் விழுந்ததும் அவளாலேயே. ஜமீன் விஷயத்தில் ஆரம்பம் முதல் செட்டியாரை மோசஞ் செய்ததும் அவளே. ஆனாலும் கோர்ட்டில் இந்தச் சங்கதிகளைப் பற்றி மூச்சு விடுவதில்லை யென்று செட்டியார் தனக்குள் நிச்சயித்துக் கொண்டார். ராணியையாவது மாயாவியின் கூட்டாளியையாவது இந்தக் கேஸில் ஸம்பந்தப்படுத்தக் கூடிய ஒரு சங்கதியையாவது போலீஸாருக்குத் தெரிவிக்கவில்லை.

இந்திரஜித்தைக் கைது செய்தவுடனேயே ராணி செட்டியாரின் வீட்டைவிட்டுப் போய்விட்டாள். கேஸ் விசாரணை யன்று கோர்ட்டில் காணப்படும் வரையில் அவளைப்பற்றி யாதொன்றும் தெரியவில்லை.

இந்தக் கேஸ் வெகு விசித்திரமானதாலும் கோடீச்வரனும் வர்த்தக குல சிகாமணியுமான கனம் வெள்ளையன் செட்டியாரும் போலீஸ்ப் புலிகளையும் துப்பறியும் சிங்கங்களையும் கதறவடித்துப் பறக்கவிட்ட இந்திரஜித் தென்ற மஹா மாயாவி கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவா னென்ற சமாசாரத்தைக் கேட்டும் எண்ணிறந்த ஜனங்கள் அன்று கோர்ட்டிற்கு வெளியிலும் உள்ளும் கூடினார்கள். அதுவரையில் சமாசாரப் பத்திரிகைகள் அந்தக் கேஸின் விவரங்களை ஒன்று விடாமல் ஒவ்வொரு தினமும் பெரிய எழுத்தில் தலையங்கம் பூண்ட குறிப்புகளாலும் தந்திகளாலும்சித்திரப்படங்களுடன் பிரசுரித்துக்கொண்டு வந்தன. கேஸில் ஸம்பந்தப்பட்ட அசாமிகளோ சாதாரண மல்ல. பிரபலமான வக்கீல்கள் இருதரப்பிலும் வாதித்துப் பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் காட்டி கக்ஷிக்காரர்களையும் ஸாக்ஷிகளையும் விசாரணைக் குறுக்கு விசாரணை புனர் விசாரணைமுதலிய வலைகளில் மாட்டி இழுத்து முன்னுக்குப் பின் விரோதமாய் வக்கீல்களின் இஷ்டப்படி பிதற்றச் செய்வார்கள் செட்டியாரையும் மாயாவியையும் பற்றின ஆச்சர்யகரமான ரஹஸ்யங்களும் பூர்வ விருத்தாந்தங்களும் வெளிப்படும். ஆகையால் இந்தக் காக்ஷி இதற்கு முன்னும் நேர்ந்ததில்லை. இனி ஒரு நாளும் நேராது. உலகத்தில் ஒரே வயிரவன் செட்டியாரும் அவரை ஏமாற்ற ஒரே மாயாவியும் இருக்கமுடியுமே யல்லாது இவர்களைப்போல்



வேறொரு ஜோடியை சிருஷ்டிப்பதற்கு பிருஹ்மதேவனுக்கும் சக்தியில்லை. இவ்விதமாகப் பேசிக்கொண்டு சென்னையி லுள்ளவர்களும் வெளியூர்களி லுள்ளவர்களும் கைப்படிச் சிலவு செய்து கொண்டு ஜனவரிப்பண்டிகை ஸமயத்தில் ஸர்க்கஸ் நாடகம், கண்காக்ஷி வாணவேடிக்கை பீபில்ஸ்பார்க், முதலிய விநோதங்களைப்பார்க்க வருவது போல் விசாரணை தினத்திற்கு முன்பே வந்து கூடினார்கள். கேஸ் நடத்தும் விமர்சையைப் பார்ப்பதற்கு வக்கீல்களும் வக்கீல் குமாஸ்தாக்களும் கோர்ட்டுகளையே வீடாகக் கொண்ட வியவஹாரப் பிரியர்களும் பிரபலமான வக்கீல்களின் குறுக்கு விசாரணைகளையும் உபன்யாஸங்களையும் கேட்டு அங்கங்கே கரகோஷம் சிரக்கம்பனம் முதலியவைகளால் ஆமோதித்தும் கேளுங்கள் கேளுங்கள் வெட்கம், வெட்கம், நல்லது நல்லது கூவிக்களிக்கும் மாணவர்களும் தங்களுடையஇனத்தாரில் ஒருவனும் ஆயிரக்கணக்காய் தாரை வார்த்தவனும் நிகரற்ற தனவானுமான செட்டியார் லோக கண்டகனை இந்திரஜித்தைப் பிடித்து அடைத்து ஆட்டி வைக்கும் காக்ஷியைப் பார்க்க வந்த செட்டிப் பிள்ளைகளும் கோமட்டிகளும் மார்வாரிகளும் தவணை உண்டியல் கடை வைத்து ஏராளமாய் வியாபாரஞ் செய்யும் பிராஹ்மணச்ரேஷ்டர்களும்; முன் காலத்தில் ஹிரண்யகசிபு ஹிரண்யாக்ஷன் சம்பரன் நமுசி கால நேமி மாரீசன் இந்திரஜித் முதலியவர்களின் சரித்திரங்களைக் கேவலம் பழைய புராணக் கம்பளியென்றும் கட்டுக் கதைகளென்றும் வாதித்துப் பரிஹாஸஞ் செய்யும் வம்பர்களை வாயடைத்து, மூஞ்சியில் கரியைப்பூசி நமது இதிஹாஸ புராணக் கிரந்தங்களின் உண்மையையும் மஹிமையையும் வெளிபடுத்தி, நிலைநாட்டுவதற்கே பகவானுடைய கட்டளையால் அவதாரஞ் செய்த மஹாமாயாவி தங்களுடைய குல குருவாய் குலதெய்வமாய் வந்து, தோன்றி வீராதி வீரர்களை விற்று விலைக்கு வாங்கி, கண்ணும் கண்ணீருமாய் கதறவடித்து, இப்பொழுது ஏதோ அஜாக்கிரதையால் போலீஸாரின் கையில் அகப்பட்டுக் கொண்டிருந்தாலும் எப்படியாவது இந்தக் கேஸை ஒன்றுமில்லாமல் செய்து குசாலாய் கையை வீசிக் கொண்டு வெளியில் வந்து விடுவான். அல்லது ஜெயிலிலிருந்தே மாயமாய் மறைந்து விடுவான். அவனுக்கு எவ்விதத்திலாவது தாங்கள் உதவி செய்யும் பாக்கியத்தைப் பெறுவோமோ வென்றுகண்டகண்ட கோவில்களிலெல்லாம் கையெடுத்துக் கும்பிடும் கன்னக்கோல் நிபுணர்களும்; கத்திரிக்கோல் பண்டிதர்களும்; ஜகஜ்ஜாலர்களும்; லோகவஞ்சகர்களும், தலைப்பாகை மாற்றிகளும், தகல்பாஜிகளும் தீவட்டி கொள்ளைக்காரர்களும் பகற் கொள்ளைக்காரர்களும்; இவ்விதமானகேஸின் நடவடிக்கைகளை சுருக்கெழுத்தால் பதிந்து கொண்டு அப்பொழுதே தந்தி மூலமாயும் டெலிபூன் மூலமாயும் பத்திரிகை ஆபீஸ்களுக்கும் வெளியூர்களுக்

கும் தெரிவிப்பதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு நீ முந்தி நான் முந்தியென்று மேல் விழுந்து, வேலை செய்யும் பத்திரிகை ரிப்போர்ட்டர்களும் புகைப்படம் பிடிப்பவர்களும் இவ்வளவு மஹா மகக்கூட்டத்தில் தங்களுடைய வேலை தாராளமாய் நடக்குமென்று தைரியங் கொண்டு வீட்டைவிட்டுப் புறப்படும் பொழுது இன்று நல்ல லாபம் கிடைக்கவேண்டும் முருகா வென்று வணங்கி, ஆயுதங்களைத் தொட்டெடுத்துப் பிறருடைய சட்டைப்பைகளிலும் மணி பாக்ஸ்களிலும் கெடிகாரங்களிலும் கண்ணும் கருத்தும் வைத்திருக்கும் சோர சாஸ்திர நிபுணர்களும் எள்ளுப்போட்டால் எள்ளுவிழ இடமில்லாமல் ஒருவர் மேல் ஒருவராய்ப்படிக்கட்டு அமைத்தது போல் ஊணுறக்கத்தைத் துறந்து கஷ்ட சுகங்களை மறந்து சத்துரு மித்திரர்களை ஸமமாய் எண்ணி, பரமவேதாந்திகளாய் நின்றார்கள். ஹோட்டல்களுக்கும் காபிக் கிளப்புகளுக்கும் வெற்றிலை பாக்குக் கடைகளுக்கும் சோடா கலர் முதலிய தேவாமிருத பான ஸ்தலங்களுக்கும் வியாபாரம் மூச்சு விடவில்லை. மோட்டார்களும் பீடன்களும் கோச்சுகளும் ரிக்ஷாக்களும் ஜட்காக்களும் மாட்டு வண்டிகளும் சைக்கிள்களும் இரவு பகல் ஓயாமல் பலவிதமான மிருகங்களின் சப்தங்களுடன் தெருக்களிலும் சந்திலும் பொந்திலும் பறந்துகொண்டு கால் நடையாய்ப் போகிறவர்களுக்கு ஆபத்தை விளைவித்துக் கொண்டிருந்தன. ஸ்பெஷலாய் ரயில்வண்டிகள் விடப்பட்டன. சமாசாரப் பத்திரிகைகளும் ஸ்பெஷல் பதிப்புகளையும் விசேஷப் பதிப்புகளையும் துண்டுப் பத்திரிகைகளையும் ஸமீப சமாசாரமென்று பெயரிட்ட தந்திப்பத்திகளையும் பறக்கவிட்டார்கள். செட்டியார் சின்னவர் பாக்கியம் அவர்களுடைய வீடு ஆபீஸ் கடைகள் மாயாவி அவனுடைய கூட்டாளி ஜெயில் கோர்ட் முதலியவைகளின் படங்கள் எடுக்கப்பட்டு ஆயிரக் கணக்காய் மலிவான காப்பிகள் அடிக்கப்பட்டு காது செவிடாகும்படி கூவிக் கொண்டு ஜனங்களின் பிராணனை வாங்கும் பையன்களாலும் வாண்டுகளாலும் லக்ஷக்கணக்காய் விற்கப்பட்டன. கோர்ட்டிற்குள் எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு டிக்கெட்டுகள் அடித்து, விற்கப்பட்டன. அவை கைக்குக்கை லாபம் வைத்து மாறி முடிவில் ஒன்றிற்கு நாலாய நீ நானென்று அடி தடி போட்டுக் கொண்டு வாங்கப்பட்டன. கோர்ட் உத்யோகஸ்தர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் ஏதோ கொஞ்சம் ஸ்வர்ண புஷ்பம் ஸமர்ப்பித்தவர்களுக்கும் டிக்கெட் வாங்கிக்கொடுத்து நல்ல காசு அடித்தார்கள். காபியும் கலரும் பெரும் வெள்ளமாய் ஓடின. சுருட்டு சிகரெட் பீடிகளின் புகை ஆகாயத்தில் கிளம்பி மேகமாய்க் கவிந்து மழை பெய்தன. வெற்றிலை பாக்குப் புகையிலை போட்டுத் துப்புகிறவர்களின் கைங்கர்யத்தால் கோர்ட்டைச்சுற்றி கசாப் கடைகளைப்போல் விளங்கின.



செட்டியார் வெகு முன்னதாகவே கோர்ட்டிற்கு வந்து விட்டார். பலர் அவரைக் கண்டு ஆரவாரித்துக்கைகொட்டினார்கள். சந்திரிக்கோல் பேர்வழிகள் வெட்கம் வெட்க மென்று கூறினார்கள். உள்ளேபோகும் வழியில் யாரோ ஒரு மிகவும் அழகு வாய்ந்த பெண் வெளுத்த முகமும் கறுத்த கண்களும் படிப்படியான தலைமயிரும் துடி துடிக்கும் உதடுகளும் மலையருவி சிதறி ஆணிமுத்தாய் உதிர்ந்தது போன்ற கண்ணீர்பெருக்கும் தேடின பார்வையும் வாடின மேனியும் யாரிடத்திலேயோ நாடினமனமும் கூடினவனாய் நின்றான். அவன் படும் துக்கத்தைப்பார்த்து சிலர் அவனை மரியாதையுடன் சற்று தூரத்திலிருந்து பரிதபித்தார்கள்.

செட்டியார் "யாரது" என்றுகேட்டார். ஆனால் அவருக்கும் சின்னவருக்கும் அவன் தங்களுடைய பிரதி வாதி யென்றும் மாயாவியின் கூட்டாளியென்றும் நன்றாய்த் தெரியும். அங்கே பாராகொடுத்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அவருக்கு ஸலாம்செய்து, "கைதியின் பெண்சாதி. அவன் உள்ளே வரும் பொழுது அவனைப் பார்க்கவேணுமென்று இங்கேகாத்துக் கொண்டிருக்கிறான். ஐயோ! பாவம். அழகும் ஒடுக்கமும் சீலமும் மரியாதையும் வாய்ந்தவ"ளென்றான். செட்டியார் தலை நிமிராமல் "அப்படித்தான் தோன்றுகிற"தென்றார். அப்பொழுது, அவன் திரும்பினான். செட்டியாரை ஏற இறங்கப் பார்த்தான். அவர் சற்றுத்தடங்கி முகம் அசடுதட்டிற்று. அந்தப் பார்வையில் தன்னை அடையாளம் கண்டுபிடித்ததாயும் தனக்கு இயன்ற வரையில் ஸஹாயம் செய்யும் படிக்கும் கேட்டுக்கொண்டதாய் செட்டியாருக்குத் தோன்றிற்று. அவர் கடைக்கண்ணால் அவனைப் பார்த்தார். முன்னிருந்த வேடிக்கையும் தமாஷும் விஷமமும் அழிந்து போய் பார்ப்போர் மனமுருகும்படி களையற்றிருந்தாள். என்னால் கூடிய வரையில் அவனுக்கு உதவிசெய்கிறேனென்று கருத்தைக்காட்டும் வகையாய் அவளுக்கு ஜாடை செய்து விட்டு அப்புறம் சென்றார்.

போலீஸாருடைய உதவியால் உன்பாடு என்பாடென்று இடிபட்டு நசுங்கி நடைபிணமாய் செட்டியார் கோர்ட்டிற்குள் வந்தார். ஓர் மூலையில் ஒரு ஸ்திரீ நிலைப்படுத்திக்கொண்டு மஸ்லின் ரவிக்கையும் காதில் சந்திர சூர்யர்களைப்போன்ற வயிரத்தோடும் விளங்க கையில் ஒரு வாசனை சீசாவை வைத்துக்கொண்டு ஜனங்கள் வரும் வழியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை இன்னாரென்று அடையாளம் கண்டுபிடிப்பதற்கு செட்டியாருக்குச் சற்றுநேரம் பிடித்தது. அவள் பாக்கியத்தின் மாஜி வேலைக்காரியான ராணியம்மாள்.

அங்கே நின்ற ஒரு இன்ஸ்பெக்டரைப்பார்த்து அந்த அம்மாள் யாரென்றார். மறுபடியும் "கைதியின் பெண் ஜாதி"யென்ற பதில் வந்தது. செட்டியார் திடுக்கிட்டார். "எப்படி? கோர்ட்டிற்கு வெளியில் நின்று கொண்டிருக்கும் ஒரு பெண் கைதியின் பெண் ஜாதியென்று சொன்னார்களே. இதென்ன. குழப்பமாயிருக்கிற"தென்றார்.

இன்ஸ்பெக்டர் அலக்ஷியமாய் "இருக்கலாம். இதென்ன ஆச்சர்யம். இப்படி எவ்வளவோ தினுசுகளைப்பார்த்திருக்கிறோம். இந்திரஜித் மஹாராஜாவிற்கு ஆயிரம் நாமங்களும் ஆயிரம் ரூபங்களும் வாய்ந்திருக்கும்பொழுது பார்யை மாத்திரம் ஒன்றாயிருப்பது தகுதியல்லவே. திருட்டில் கண்ணை ஒத்திருந்தால் பார்யா விஷயத்திலும் அவருக்குப்பின் வாங்கலாமா?"வென்று தமாஷாய் பதிலளித்தான்.

செட்டியார் அதைக் கேட்டு "அப்படியா? காந்தர் விவாஹமோ"வென்றார். இன்ஸ்பெக்டர் "இல்லை இல்லை. கோயில் குத்தகை"யென்றான்.

கேஸ் விசாரணைக்கு வந்தபொழுது நரஸிம்மாசாரியார் ஜட்ஜாக இருக்கும்படி நேர்ந்தது. செட்டியார் அதைக்கேட்டு "ராமா! ஐயோ! பாவம் கைதியின் கதி அதோ கதி தான். கருணாகர நாயரின் முறையில் இந்தக் கேஸ் விழுந்திருக்கக்கூடாதா? அவன் லோகம் தெரிந்தவன்; பத்துப் பெயருடன் கலந்து பழகுகிறவன். என்னைப் போன்ற தகுந்த மனுஷ்யர்களின் கஷ்ட ஸங்கடங்களை அறியக்கூடியவன். இந்த வக்கீல்களும் போலீஸாரும் என் கழுத்தை அறுத்து என் பிராணனை வாங்கும்படி விடமாட்டான் அவனுடைய அந்தஸ்திலிருக்கும் கனவான்களைக் காட்டிக் கொடுக்கமாட்டான். ஆனால் இந்த நரஸிம்மாசாரி வெறும் கம்பளி. அசட்டு வைதிகம். பெரிய பழசு. கோவிலும் குளமும் பூஜையும் பாராயணமும் விரதமும் உபவாஸமும் தவிர வேறு கிடையாது. ஏதோ ஈச்வரனுக்குப் பதிலாய் தான் இங்கே நியாய நியாயம் விசாரிக்க வந்திருப்பவன் போலும் சட்டத்திற்கும் மனச்சாக்ஷிக்கும் விரோதமாய் ஒன்றும் செய்யவில்லை யென்றும் பிரமாத வெளிச்சம் போடுகிறவன். இவனுடைய தகப்பன் புரோஹிதம் செய்வித்து ஏதோ பத்துக்காசு சேர்த்து இவனைப்படிக்க வைத்தான் தலையெழுத்து நன்றாயிருந்தபடியால் படிப்பு வந்து பரீக்ஷை தேறி வேலையும் உயர்ந்தது. தரித்திரப் பயல் தானே. பெரிய வம்சமா? பரம்பரையாய்ப் பிரபுவா? சில்லரையைப்பார்த்ததே தவிர முழு ரூபாயாய்ப் பார்த்திருக்க மாட்டான். அல்பனுக்குப்பவிஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான். நரிக்கு நாட்டாமை கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும். பெயருக்குத் தகுந்தபடி கேவலம் நரஸிம்மாவதாரமே. முகத்



தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். வக்கீல்களையும் கக்ஷிக்காரர்களையும் ஸாக்ஷிகளையும் மேலே விழுந்து வேட்டை நாயைப் போல் பிடுங்குவான். அநியாயக் கடுமை. சட்டத்தில் எவ்வளவு இடம் கொடுக்குமோ அதற்குக் குறைந்து தண்டிப்பதே இல்லை. ஸாக்ஷிகளைக் கழுவாய்க் கொத்துவதில் வக்கீல்கள் நல்லவரென்று செய்துவிட்டான். இன்றைக்கு இவனிடத்தில் அகப்பட்டுக் கொண்டு மானத்துடன் வெளியில் வரவேண்டுமே யென்று பயப்படுகிறேன். மூச்சு விட்டதற்கெல்லாம், கோர்ட்டாரை அவமதித்த குற்றமென்று சாற்றிக் காவலோ அபராதமோ விதிக்காம லிருப்பதில்லை. தன் மனஸ் ஸாக்ஷிக்கு விரோதமாய் நடப்பதில்லையாம். கவர்ன்மெண்டுக்கு இவன் மஹா சுத்தனென்றும் நியாயம் பிசகாதவனென்றும் ஓர் அசட்டு நம்பிக்கை, அதனால் இவனை இங்கிருந்து மாற்றித் தொலைப்பதில்லை"யென்றார்.

சின்னவர் "உன்னிடத்தில் இதெல்லாம் பலிக்குமா? நீ வக்கீல்களையும் ஜட்ஜ்களையும் தண்ணிகாட்டிவிடுவாய். உனக்கு இதெல்லாம் ஒரு லக்ஷியமா?"வென்று குமஸ்தா செட்டிப் பிள்ளைகளிடத்தில் பேசுவது போல் சாதுர்யமாய்ப் பேசினார்.

ஜட்ஜ் வந்து ஆஸனத்தில் அமர்ந்தார். அவருடைய உத்திரவால் கைதி உள்ளே கொண்டுவரப்பட்டான். எல்லோருடைய கண்களும் அவனிடத்தில் பதிந்தன. அவனுடைய ஸ்வபாவமும் செய்கைகளும் லோக விரோதமாயிருந்தாலும் கனவானைப் போன்ற உடையும் நடையும் பார்வையும் அவனுக்கு இயற்கையாகவே வாய்ந்திருந்தன. செட்டியார் பயந்து, நடுங்கிக்கொண்டு முகம் வெளுத்து வேர்த்து நின்றார். இந்திரஜித்தோ கம்பீரமான பார்வையும் லோகத்தைத் துரும்பாய் நினைத்து அலக்ஷியஞ் செய்யும் தைர்யமும் அஞ்சாத நெஞ்சும் படைத்தவனென்று பார்ப்போர் அவனுடைய முகக்குறியால் எளிதில் அறியலாம். வெள்ளையன் செட்டியார் ஏதோ பெரிய குற்றஞ் செய்து விசாரணைக்கு வந்திருப்பது போலும் இந்திரஜித் அவரைக் குற்றஞ்சாட்டி விசாரணைக்குக் கொண்டு வந்திருப்பவன் போலும் பார்ப்போர் எண்ணலாயிற்று. இந்திரஜித் சாமான்யனா? தன் பெயருக்குத் தகுந்தபடி நடந்துகொண்டான். தான் குற்றவாளியென்றும் தனக்கு எல்லோரும் விரோதிகளென்றும் ஒருவரும் உதவி செய்ய மாட்டார்களென்றும் நன்றாய்த் தெரியும். ஆகையால் ஒருவருடைய தயவையும் எதிர்பார்க்காமல் உலகததிலுள்ள எல்லோரும் ஒரு கையும் தான் ஒண்டியாய் அவர்களுக்கு விரோதமாய் ஒரு கையிலுமிருந்து, வேலை செய்வது தனக்கு ஒரு பொருட்டல்ல வென்றும் காட்டிக்கொண்டான்.

வழக்கப்படி கைதியின்மேல் ஏற்பட்ட குற்றப் பத்திரிகை படிக்கப் பட்டது. அதைப்பற்றி சற்றுநேரம் தகரார் நடந்த பிறகு பிராஸிக்யூஷன் தரப்பில் வெள்ளையன் செட்டியாரை ஸாக்ஷியாகக் கூட்டில் ஏற்றினார்கள். ஜட்ஜ் கைதியைப்பார்த்து, "நீ யாரையாவது வக்கீலாய் வைத்துக்கொள்ளுகிறாயா? அல்லது நான் யாரையாவது நியமிக்கட்டுமா? அப்படிச் செய்வது உனக்கு அநுகூலமாக விருக்கு" மென்று யோசனை சொன்னார். அதைக் கேட்டு கோர்ட்டிலுள்ளவர்கள் எல்லோரும் ஆச்சர்யப் பட்டார்கள். அது வரையில் நரஸிஹ்மாசார்யர் ஒரு பொழுதாவது குற்றஞ் சாட்டப்பட்டவனிடத்தில் ஸாதாரணமாய்ப் பேசினதுமில்லை. இரக்கம் வைப்பது மில்லை கூடியவரையில் கெடுதி செய்வதற்கு வாயைத் திறப்பதே யொழிய ஒத்தாசையென்ற வார்த்தை வரவே வராது. அப்படி யிருக்க உனக்கு வக்கீல் வேண்டாமா வென்று கேட்டதே கைதியின் நல்ல காலமென்றும் கேஸ் அவனுக்கு அவ்வளவு விரோதமாய் முடியாதென்றும் குசுகுசு வென்று பேசிக் கொண்டார்கள்.

இந்திரஜித் புன் சிரிப்புடன் ஜட்ஜைப் பார்த்து வணக்கமாய் "எனக்கு வக்கீல் வேண்டுவதில்லை. அதனால் எனக்கு யாதொரு நஷ்டமென்று தாங்கள் கவலைப்பட வேண்டாம். நான் பி. எல். பரீக்ஷை தேறினவன்; சில வருஷங்களுக்கு முன் ஸன்னது வாங்கி வக்கீலாய்த் தொழில் நடத்தி யிருக்கிறேன். இங்கே இருக்கும் லாயர்களை காட்டிலும் ஜாக்கிரதையாயும் ஸாமர்த்தியமாயும் என் கேஸை நடத்த முடியு மென்றெண்ணுகிறே" னென்றான்.

வெள்ளையன் செட்டியார் கூட்டில் ஏறி தன் கக்ஷி வக்கீலால் விசாரிக்கப்பட்டார். கேட்ட கேள்விகளுக்குத் தெளிவாயும் சுருக்கமாயும் தயங்காமலும் பதில் சொன்னார். "கைதியை நீர் அறிவீரா" வென்று கேட்டதற்கு "ஆம் அறிவேன். சாமியார் வாத்தியார் ராவ் நவாப் பண்டிதர் வைத்தியர் பாடகர் முதலிய பல வேஷங்களைப் போட்டு, ஏமாற்றின பேர்வழி இதே யென்றார். அதைப்பற்றி கொஞ்சமேனும் ஸந்தேஹமில்லை. எங்கே வேண்டுமானாலும் பிரமாணஞ் செய்வே" னென்றார். பார்க்கிறவர்களுக்கு அது மிகவும் துணிச்சலாய்த் தோன்றிற்று. கொஞ்சம் தயக்கத்தைக் காட்டி யிருந்தால் நன்றா விருந்திருக்கும். பல தடவை தன்னை ஏமாற்றினதைப் பற்றி ஒவ்வொன்றையும் விஸ்தாரமாய் எடுத்துச் சொன்னார். பாங்கி உத்யோகஸ்தர்களும் இன்னும் மற்ற ஸாக்ஷிகளும் அவருக்கு அநுகூலமாய்ச் சொல்லும் படி தயார் செய்யப்பட்டிருந்தார்கள். ஆகக் கூடி இந்திரஜித் தப்புவது எங்கே யென்று எலலோருக்கும் எண்ண முண்டாயிற்று.

குறுக்கு விசாரணை தொடங்கிற்று. சங்கதிகள் முற்றிலும் வேறு விதமாய் மாற ஆரம்பித்தன. கைதி "உம்மை பல தடவைகளில் பல வேஷங்களைப் போட்டு ஏமாற்றினவன் நானென்று சொன்னீரல்லவா?"

# இரதி சுந்தரி

## அல்லது

## பின் புத்திக்காரி.

---

"ரதி யென்றால் ரதி தான்! நானும் பெண்ணாய்ப் பிறந்து எத்தனையோ பெண்களையும் பார்த்தேன், என்றாலும் நமது சுந்தரிக்கு நிகரில்லை. நாளுக்கு நாள் அவள் குணம் நடை எவ்வளவு மேன்மையாயிருக்கிறது.

"ஆமா! நீ இப்படிச் சொல்லிக்கொண்டே யிருந்தால் சீக்கிரம் கலியாணம் நடந்துவிடும்.

"என்னமோ கடவுள் கொடுத்த ஐந்து பாக்கியத்தையும் தக்கவிடங்களில் தான் கொடுத்தோம். என்ன குறை? இன்னும் நல்லவிடத்தில் லக்ஷ்மியைப் போல வாழப்போகிறாள்.

"பார்க்கிற மாப்பிள்ளைகளுக்கெல்லாம் 'குற்றம் சொல்லிக் கொண்டேயிரு, சீக்கிரம் கலியாணம் ஆகிவிடும்.

"உங்களுக்கென்ன! நல்ல இடமாக நிதானித்துப் பார்த்துக் கொடுத்தால், நமது பெண் சுகமாய் வாழ்வாள். விலைக்கு விற்கிற மாதிரி எங்கேயாவது தள்ளிவிடவா?

"சுந்தரி ருதுவாய் நாலு வருஷமாய் விட்டது. இன்னும் எத்தனை வருஷம் வீட்டில் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறாய்?

"என்ன செய்யலாம் சொல்லுங்கள், மாப்பிள்ளை அழகாயிருந்தால் படிப்பில்லை. படிப்பிருந்தால் சொத்தில்லை. சொத்திருந்தால் அழகில்லை. நாளாய் விட்டதே யென்று எனக்குங் கவலையில்லையா—என்னமோ வியாழ திசைவரவில்லை.

"வருகிற மாப்பிள்ளையைத் தள்ளிக் கொண்டே யிருந்தால் எங்கிருந்து வியாழ திசை வரும்.

" என் மேல் நீங்கள் கோபித்துக்கொள்ள வேண்டாம். உங்கள் மனம் போல எங்கேயாவது ஏற்பாடு செய்து நடத்துங்கள். என்னிடம் மாத்திரம் நல்ல மாப்பிள்ளையா என்று கேட்கவேண்டாம். என்னிடம் கேட்டால் ஏதாவது குற்றம் சொல்லும்படியாகிறது.

இப்படி ஒரு முறையல்ல பன்முறை மாதாவும் பிதாவும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கேட்டு தன் அழகை நினைத்து நினைத்து இரதி சுந்தரி தனக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தாள்.

இரதி சுந்தரியின் பிதாவான சரஸ்வதி சந்திரர் விசேஷ செல்வம் படைத்த சீமான். கோட்டை போல் வீட்டைக்கட்டி வாழ்ந்து வருகிறார். இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளுமாக ஆறு குழந்தைகளுண்டு. இரதி சுந்தரி மூன்றாவது பெண் பூ ஸ்திதியோடு தக்கவரைத் தேடியும் கிடைக்கவில்லை. கடைசியாக கல்கத்தாவில் மோகனதாஸ் என்பவர் இஞ்சினீரிங் வேலைக்குப் படித்து வருகிறதா யறிந்தார். அவர் தம்மினமாயிருந்தாலும் போதுமான ஐவேஜு இல்லை. பெற்றாருமில்லை. என்றாலும் புத்திசாலி. தன் கையிலுள்ள பணத்தைச் செலவிட்டுப் படித்து வருகிறான். அவனுக்குத் தன் பெண் இரதி சுந்தரியை விவாகம் செய்து கொடுக்கிறதாய் தகுந்த மனிதர் மூலமாய்த் தெரிவித்தார். மோகன தாஸும் சம்மதித்தார். அவ் வருஷம் பரிக்ஷையில் தேறினார். வெகு விமரிசையாக விவாகமும் நடந்தேறியது.

இரதி சுந்தரியின் தோழிப் பெண்களில் சிலர் கேலி செய்ய ஆரம்பித்தார்கள்.

உன் அழகுக்கேற்ற மாப்பிள்ளை தான்; ஆனால் அவர் காடு மலை யெல்லாம் சுற்றுவார். இஞ்சினீர் வேலைக்கு மனு செய்திருக்கிறாராம். அவர் போகுமிடமெல்லாம் நீயும் அலையவேண்டியது. நல்ல மிராஸ்தார் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டிருக்கலாகாதா, அல்லது ஒரு வக்கீலைத் தேடிக் கலியாணம் செய்திருக்கக்கூடாதா? இப்படியும் இன்னும் பலவிதமாயும் பேசினார்கள். ஆனால் இரதி சுந்தரி ஒருவருக்காவது பதில் சொன்னாளில்லை.



மோகனதாசுக்கு நல்ல வேளையாய் கோரக்பூரில் வேலை கிடைத்தது. அவ்விடத்தில் ஒரு வருஷம் இருந்து வந்தார்கள். இரதி சுந்தரியும் கர்ப்பவதியாக பிரசவத்துக்கு தாய் வீடு அனுப்பி வைத்தார். ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஐந்தாம் மாதம் குழந்தையோடு கோரக்பூர் வந்து சேர்ந்தாள். தன் கௌரவத்தையும், மனைவியின் அந்தஸ்தையும், தங்களிருவருக்கும் கனவிலும் நடத்தற்கரிய மணம் நடந்தேறியதும், அதின் பலனாக அவதரித்த ஓர் ஆண் குழந்தை பிறந்ததையும் பற்றி மோகனதாஸ் உளம்பூரித்திருந்தான்.

அவ்வாண் குழந்தையோ தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை" என்றதற்கிணங்க தாயினுருவம் எடுத்தது போலிருந்தது. அக்குழந்தைக்கு கால காலங்களில் செய்து முடிக்க வேண்டிய சடங்குகளையும் நிறைவேற்றிவந்தனர். குழந்தைக்கு பூபேந்திரன் எனப் பெயர் புனைந்தனர்.

ஆ! என் கண்மணி! என் கலியைத் தீர்க்க வந்த கடவுளே! ஏ! பூபேந்திரா! என்று ஊஞ்சலில் தூங்கி விழித்த சப்தம் கேட்டவுடன் மோகனதாஸ் குழந்தையை யெடுத்தான். முகம் மேல் முகம் வைத்து முத்தாடினான். உச்சி முகந்தான். கைகளையும் கால்களையும் கண்ணில் ஒத்திக்கொண்டான். ஒரு நாளும் பேசாத பத்து மாதக்குழந்தை 'அப்பா' என்று தப்பித்தவறி வாய் விட்டலற அதைக்கேட்டு ஆநந்தக் கடலில் மூழ்கினான். மற்றும் ஓர் தடவை சொல்லும்படி அதைக் கெஞ்சிக் கேட்பவன் போல அவ்வளவு இரங்கிய முகத்துடன் அதையே நோக்கினான். ஊரார் குழந்தையாயினும் பேரன்பால் எடுத்து மார்போடணைத்து மகிழ்வுறும் மோகனதாசுக்கு, கடவுளின் கருணையால் தனக்கும் ஒரு பாக்கியம் கிடைத்திருக்கும்போது அவன் அனுபவிக்கும் ஆனந்தப் பெருக்குக்கு எல்லைதானுண்டோ. இரதி சுந்தரியை விட குழந்தையினிடத்து மிக்க அன்புள்ளவர். புத்திர வாஞ்சையின் அற்புதம் என்னே! அது ஆத்மாவை எவ்வளவு அழுத்தமாகப் போய்ப்பற்றுகின்றது. எமபாசத்தின் வலிமை பெரிதென்பார்கள் புத்திரபாசத்தின் சக்தி, வீரியம், திடம், உறுதி, எந்த பாசத்துக்குமே இராது. பகவானே குழந்தைகளின் அவதாரமாயிருக்கிறார். ஆயிரம் கஷ்டங்கள் அவதிகள் நேர்ந்தாலும்—அந்தக் குழந்தை

யின் முகம் நோக்கிய மாத்திரத்தில் அவ்வளவும் மறந்து விடுகிறதன்றோ! குழந்தையின் முத்தம் தேக முழுமைக்குமே ஒரு பெரிய பரவசமல்லவா? காதலின் முத்தங்களிலே காமத்தின் விஷக் கலப்பு தொனிப்பதால் அது அத்துணைச் சிறந்ததன்றாம். குழந்தைகளின் முத்தமோ நிர்மலமானது. உயர்நலம் சார்ந்தது. தெய்வீகமானது பரிசுத்த முள்ளது.

இன்னும் மதலைச் சொல்லைக்கேட்டவுடன் யார்தான் மயிர்க்கூச்செரியார் "கடந்த ஞானியுங் கடப்பரோ மக்கண்மேற் காதல்" என்றதை நினைக்க நமது மோகனதாஸின் உவகைக்குக் கணக்கிட முடியாது.

அச்சமயம் இரதி சுந்தரியும் வந்து நிகழ்ந்தவற்றை யறிந்து மோகன தாஸ் விழுந்துத் தத்தளிக்கும் ஆனந்தக் கடலில் புருஷனுக் குதவி புரிவாள் போன்று தானும் விழுந்துவிட்டாள்.

தன் கணவன் அருமைக் குழந்தையை அழுதவுடன் எடுத்து மார்போடணைத்து முத்தமிட்டு மகிழ்வுறுவதைக் கண்ணுற்ற இரதி சுந்தரி உள்ளம் பூரிக்கவும் உடல் புளகாங்கித முறவும் நடை தடுமாற சிரித்துக்கொண்டே பக்கத்தில் நின்று பார்த்துக்கொண் டிருந்தாள்.

"ஒரு நாளும் குழந்தையிடம் இவ்வளவு அன்பு காட்டியதே கிடையாது. இன்று ஒரு நல்ல நாளென்றே நினைக்கின்றேன்" என்று தன் புருஷனைப் பார்த்துக்கேட்டாள்.

"நமக்கு எல்லா நாளும் ஒரே மாதிரிதான். அன்று தினம் சொல்லிக்கொண்டது போல் என்னை ஒரு சுரங்கத்துக்கு மாற்றி விடப் போகிறார்கள். குழந்தைக்கு அந்த விடம் பொருந்துமோ என்று நினைக்க அன்பு என்னையறியாமல் பெருக்கெடுத்துவிட்டது.

"அந்தக் காட்டுக்குத் தானா? கல்கத்தாவும் அதற்குச் சமீபம் நாலைந்து மைலுக்குள்ளிருக்கும் என்று சொன்னீர்களே?

"ஆம் அந்தக் காட்டுக்குத்தான் மாற்றப்பட்டேன். சற்று சம்பளமுங் கூடியிருக்கிறது. அங்கு நிலக்கரி தோண்டி எடுக்கும் வேலை. அவ்விடத்துக்கு நான் தலைமை வகிக்க வேண்டியவன். சுமார் இருநூறு பேர்கள் வரை அங்கேயே இருந்து வேலை செய்கிறார்கள்" என்று மோகனதாஸ் இரதி சுந்தரிக்கு விடைபகர்ந்தான்.



ஆகா! ரொம்ப சந்தோஷம். எனக்கும் சற்று வேடிக்கையாகவே காலந்தள்ள இஷ்டம். ஆனால் ஓர் எண்ணம் என் மனதில் உதிக்கிறது. குழந்தையைக் காட்டில் கொண்டு வைத்திருப்பதும், வீடு, உறவினர் முதலியவர்கள் இல்லாததும் பற்றியே என் மனம் வாதிக்கின்றது. ஆனால் கூடியவரையும் இவ்விடமே இருக்க முயற்சி செய்யுங்கள். பின் கடவுளிட்டது வெளிச்சம்" என்றாள்.

இரதி சுந்தரி தனிமையி லிருக்கும்போது என்னென்னமோ வெல்லாம் நினைவுக்கு வந்தது. ஆஹா! நான் பிறந்ததென்ன! வளர்ந்த தென்ன! நமது தாய் வீடென்ன! எனது சௌந்தரிய மென்ன! எல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல் ஆய்விட்டதே. என்னே காலக்கொடுமை! இருந்து இருந்து ஒரு ஏழையைக் கலியாணம் செய்துகொண்டதின் பலன் காட்டில் வாழத்தானோ? தாய்வீட்டி லிருக்கும்போது என் அழகைப் பார்ப்பதற்கு எத்தனை பெண்கள் வந்தார்கள். நான் உடுத்திய வஸ்திரத்தைப் போலும் அணிந்த ஆபரணத்தைப் போலும் அநேக பெண்கள் அணிந்து என் அழகு வருமா வென்று பார்த்துப் பார்த்து வெட்கினார்களே, என்று எண்ணாதும் எண்ணி எண்ணி மிகுந்த துக்கங்கொண்டவளானாள்.

மறுநாள் மோகனதாஸ் வழக்கம்போல் ஆபீஸுக்கு சென்றிருந்தான். அவனுடன் வேலைபார்ப்பவரில் சிநேகிதர்களான சிலர் அவர் மாற்றப்பட்டும், சம்பளம் உயர்த்த பட்டிருப்பதைப் பற்றியும் கொண்டாடினாரென்றாலும் தனிமையாக காட்டுக்குள் வசிக்க நேர்ந்தது பற்றி துக்கித்தனர்.

பின் ஆபீஸ் வேலை முடிந்ததும் மோகனதாஸ் தன் நட்பினர்களை கொஞ்சம் வெளியே நிற்க வைத்து விட்டு, சற்று உள்ளே போய் தான் மாற்றப்பட்ட விஷயமாக தன் மேல் உத்தியோகஸ்தரிடம் போய்க் கேட்டான்.

அதற்கு மேல் உத்தியோகஸ்தர் அவ்விடம் போவதற்குச் சரியான வயசு, திறமை, அநுபவம் மற்றெல்லா அம்சங்களில் நீயே பொருத்தமாயிருப்பதால்தான் உன்னை மாற்றப் பட்டிருக்கிறது.

நீ போய் உனக்கு அவ்விடம் சௌகரியப் படவில்லை யென்று பின்னால் தெரிவித்தாயானால் வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். இப்பொழுது போடப்பட்டிருக்கும் ஆர்டர்ப் படி நடந்தே தீரவேண்டும் மென்று” கண்டிப்பா யுரைத்து விட்டார்.

பிறகு மோகனதாஸ் தன் எண்ணம் நிறை வேறாது பற்றி உண்டான துக்கத்துடன் வெளி வந்து தன் வீடு நோக்கிப் புறப்பட்டான். வழியில் முன் நிகழ்ந்தன வற்றை நண்பர்களிடம் தெரிவித்து, வீடு சென்றடைந்தான். அன்று அவன் வரவை மற்ற நாளை யெல்லாம் விட அதிக ஆவலுடன் எதிர் பார்த்திருந்த இரதி சுந்தரியும் பூபேந்திரனைத் தொடை மேல் வைத்துக் கொண்டு தன் பையனுக்குக் கடைப் பாட்டு சொல்லிக் கொண்டிருந்தாள். மோகன தாஸும் வழக்கப்படி மாலைக் கடன் முடித்து ஆலய வழிபாடு முடித்து உண்டு உறங்கச் சென்றனன்.

மறு நாட் காலை எழுந்ததும் தன் மனைவியை நோக்கி புறப்பட வேண்டியதற்கு தயாராகும் படி சொல்லி விட்டு நேரே ஆபீஸுக்குப் போய் தான் நான்கு நாட்களுக்கு முன்பே போய் சவுகரியப் படுத்திக் கொள்ள வேண்டு மென்று உத்திரவு கேட்க அவ்வாறே அளிக்கப்பட்டது.

இரண்டு மூன்று நாட்களில் வேண்டியவற்றை தயாரித்துக் கொண்டு குறிப்பிட்ட விடம் சரியான காவற்றுணைவர்களுடன் போய்ச் சென்று தனக்காகப் பிரத்தியோக மாகப் போடப்பட்ட கூடாரம் ஒன்றில் அமர்ந்தான். பலாப் பழத்தைச் சுற்றி ஈ மொய்ப்பது போல வேலைக்காரர்களெல்லாம் சிறு சிறு கூடாரங்களில் தங்கியிருந்தனர்.

மோகன தாஸ் மிகவும் நல்லவனாதலால் அங்கே சொந்தக்காரன் போலேயே நடந்து வரும் படி விடப்பட்டிருந்தான். எவ்வளவு தான் மோகன தாஸ் சந்தோஷமாக விருந்தாலும் இரதி சுந்தரிக்கு அவ்விடம் பிடிக்கவே யில்லை. அவள் தனியே யிருக்கும் பொழுது தான் சிறு வயதில் தாய் வீட்டிலிருந்ததும் தனக்கு மணாளன் பார்த்ததும், தன் தோழியர் பரிகசித்ததும், தான்



இப்பொழுது துணையொன்றுமில்லால் நடுக் காட்டில் ஓர் அரக்கியைப் போல் வாழ்ந்து வருவதும் நினைத்துப் பெரிதும் வருந்தினாள்.

அவள் மனதிற் தகாத எண்ணங்கள் புதிது புதிதாய் தோன்றின. சற்று நிம்மதியா யிருப்பதற்கு ஓர் ஆலயங்கள் கூடக் கூடாது. மணியக்காரர்களுமில்லை. அடிக்கடி ஊர் போய் வருவதும் சரிப்பட வில்லை. தன் புருஷன் ஏழையானவரா யிருந்ததால் அல்லவா இப்படி வருந்த நேரிட்ட தென்று எண்ணினாள். கணவனை வெறுக்க ஆரம்பித்தாள். ஆனால் அவள் மனது துணியவில்லை. என் செய்வாள் பெண்! அதிலும் படித்த பேதை! அந்தோ செய்வதின்ன தென்று தோன்றாமல் நாடோறும் எண்ணாததை யெல்லாம் எண்ணி வருந்தினாள். மோகனதாஸ் தன்னால் ஆனமட்டும் அவளைச் சந்தோஷிப்பித்து வந்தான். ஆனால் அவன் அவள் மனதை முழுதும் அறிந்தானில்லை. கூடிய சீக்கிரம் மாற்றிப் போவோ மென்று தேறுதல் சொல்லி வந்தான். இப்படி சில மாதங்கள் சென்றன.

ஒரு நாள் இரதி சுந்தரி குழந்தையை யெடுத்துக் கொண்டு ஒரு வேலை யாளையுந் துணைக்கு அழைத்துக் கொண்டு சில விடங்களைச் சுற்றிப் பார்த்துப் பொழுது போக்கச் சென்றிருந்தாள். வெகு தூரம் வேடிக்கையாக பல ஜாதி மரங்களையும், மிருகங்களையும், புள்ளினங்களையும் பார்வையிட்டுக் கொண்டே சென்றனர்.

அப்பொழுது அப்பணியாளன் இரதி சுந்தரியை நோக்கி சுமார் அரை மையில் தூரத்தில் ஒரு அம்மாள் மிகவும் அழகு வாய்ந்தவள். அரச மரத்தடியில் இருந்து வருவதைத் தான் அநேக தடவைகள் பார்த்திருப்பதாய்த் தெரிவித்தான். நாகரீகமான பெண்களையே பார்வையிடாமல் சில மாதங்கள் கழிந்தமையால் இரதி சுந்தரி துரிதமாய் தன்னை அவ்விடத்தில் கொண்டு விடும்படி கட்டளையிட்டாள். சிறிது நேரத்திற்குள் அவர்களும் அவ்விடம் செல்ல, இரதி சுந்தரி அந்த அம்மாள் திரு நீறு, முதலிய சிவ சின்னங்களை யணிந்திருந்ததைக் கண்டு அவளை வணங்கினாள்.

(தொடரும்.)

## விடுதலையின் மகிழ்வு

அநேக வருஷங்களுக்கு முன் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் யுத்தம் நடந்து வந்தபோது, இருபக்கங்களிலும் போர்வீரர்கள், மானுமிகள் முதலானவர்களைக் கைது செய்துவந்தார்கள். இங்கிலாந்து தேசத்து மானுமியொருவன் பிரெஞ்சுக்காரரின் சிறையில் அநேக வருஷங்கள் அடைக்கப்பட்டிருந்தான். அவன் தன் தேசத்துக்குத் திரும்பிவந்த பிற்பாடு ஒரு நாட் தேம்ஸ் நதியைக் கடக்கக் கட்டியிருக்கும் ஒரு வாராவதியின் மீது போய்க் கொண்டிருக்கும்போது பக்ஷிகளை விற்பவனொருவனைப் பார்த்தான். அந்த மானுமி தான் அநேக வருஷங்கள் சிறையிலிருந்து பட்ட கஷ்டங்களை நினைத்துக்கொண்டு, இச்சிறிய ஜந்துக்கள் இப்படி மூடப்பட்டிருப்பதைப் பார்த்துச் சகியாமல், அப் பக்ஷிகள் அடைக்கப்பட்டிருந்த கூட்டுடன் அவைகளை விலை கொடுத்து வாங்கினன். அவன் வாங்கின பக்ஷிகளை வீட்டுக்குக் கொண்டு போகாமல், கூண்டைத் திறந்து பக்ஷிகளை ஒவ்வொன்றாக வெளியில் பறக்கவிட்டு, அவைகள் சர்வ சுதந்தரத்தோடும் ஆகாயத்தில் பறந்து செல்லும் விடுதலையின் மகிழ்வை நோக்கி ஹிருதயம் பூரித்தான். பக்ஷிகள் அனைத்தையும் வெளியில் பறக்க விட்டுவிட்ட பிறகு உற்சாக புருஷனானன்.

பக்ஷிகளை விற்பவன் மிகவும் ஆச்சரியப்பட்டு, மானுமி செய்தது பைத்தியக்கார வேலையென்று அவனை தூஷிக்க, அவன் நகைத்து, "நான் இருந்த காலம் வரை நீயும் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருந்தால், நீயும் என்னைப் போல் விடுதலையின் ஆவசியகத்தை யறிந்து பக்ஷிகளைப் பறக்கவிட்டு விட்டிருப்பாய் என்று சொன்னான். மானுமியின் செய்கைக்கு யாவரும் தலை வணங்கி வந்தனம் செய்தார்கள். பக்ஷிகளுக்குக் கிடைத்த விடுதலையின் மகிழ்வு மானிடர்க்கும் நாட்டிற்கும் உண்டாவதாக.

---

## விடு கதைகள்.

1. சேலத்து செம்புறு, செல்வமாம் பச்சை புறு, மாடத்து வெள்ளை புறு, இவை மூன்றையும் ஒரு கூட்டில் அடைத்து ஒருவன் தள்ள பதினறு பேர் ஏற்மிதிக்க துளி ரத்தம் கக்கும்.

2. ஒற்றைக் கருப்பி உடம் பெல்லாம் தித்திப்பு, சித்திரை வீதியில் புறப்படுவாள் புகன்றிடுவாய்.

3. ஆயிரம்பேர் கூடி கட்டிய அரங்கமணி மண்டபம், கண்பட்டால் அழியும் பொன் பெற்ற மண்டபம்—இது யென்ன?

4. ஆழக்குழி வெட்டி அதிலே ஒரு முட்டை யிட்டு அண்ணாந்து பார்த்தால் மிதான் னூறு முட்டை.

5. நீரிலே விளையும் பூ நிலத்திலே வேரோடாப் பூ மாதர் கொண்டைக்கு ஆகாப் பூ, ஊரெல்லாம் உலாவி வரும் பூ.

சென்ற மாதம் வெளி வந்த விடு கதைகளுக்கு விடைகள்.

1. தோண்டி, 2. சொக்கட்டான் காய்களும் பாச்சிகையும், 3. புளியங்காய் 4. மூங்கில்.

# கதாரத்னாகரம்.

1921—ஜுலை

20 OCT 1921

## அட்டவணை.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | கல்வி— | 49 |
| 3. | வெளிவாழ்க்கையின் வேகம்— | 56 |
| 4. | பறவைகளின் பாஷை— | 62 |
| 5. | ஜேம்ஸ் ஆலன்— | 68 |
| 6. | மௌனத்தின் வலிமை— | 73 |
| 7. | மனோரஞ்சிதம்— | 77 |
| 8. | விடுகதைகள்— | 78 |
| 9. | முயற்சியும் தொழிலும்— | 79 |
| 10. | இந்திரஜித் (பூர்த்தி)— | 81 |
| 11. | பகவத்கீதா வாசகம்— | 86 |


### சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

சென்ற 1920ஞு ஆகஸ்டுமாத முதல்கொண்டுசந்தா நேயர்களுக்கு இந்த ஜுலை மாதச் சஞ்சிகையோடு ஒரு வருடமாகிறது. ஆகையால் அடுத்த ஆகஸ்டு மாதப் பத்திரிகை ஒரு வருட சந்தா ரூ. 2தபால் செலவு அணா 3 சேர்த்து ஆக ரூ 2-3-0 க்குவி. பி. யில் அனுப்பப்படும். நேயர்கள் வி. பி. யைஒப்புக் கொண்டு நமது பத்திரிகாலயத்தை ஆதரித்துவரக் கோருகிறோம்.

மானேஜர்,

சுதேசமித்திரன்.

# கடவுள் வணக்கம்.

---

## திருச்சிற்றம்பலம்.

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே யென்னான் செய்கே னெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தா யெங்குப் புகுவேனே.

புகுவே னெனதே நின்பாதம் போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோணோக்கி நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள வடியேனுந்
தகுவ னேயென் றன்மையே யெந்தா யந்தோ தரியேனே.

போற்றியென் போலும் பொய்யர் தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப்புவன நீர்தீக்
காற்றிய மானன் வான மிருசுடர்க் கடவுளானே.

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை யாண்டிட் வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி.

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்ற கில்லே னெம்பிரா னிழித்திட் டேனே.

இழித்தன னென்னை யானே யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி யும்பர்நாட் டெம்பிரானே.

உ

கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை[illegible]

Vol. 4. தொகுதி 4. | July, 1921 1921-ம் ௵ ஜூலை ௴ | No. 2. பகுதி 2.

## கல்வி.

### தோற்றுவாய்:—

'தொட்டனைத் தூறும் மணற்கேணி,
மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.'

என்று திருவள்ளுவர் அருளிச் செய்தனர். மணற்கேணி, தோண்டத்தோண்ட ஊறும்; அவ்வண்ணமே தோண்டித்தோண்டி ஆராய்ச்சி செய்யச் செய்ய அறிவு பெருகும். கல்வி என்ற பதத்திற்கே சிலர் 'கல்லுதல்' அல்லது தோண்டுதல் என்ற பொருள் கொள்ளுகிறார்கள். இது ஓர் ஆழ்ந்த உண்மையினை நன்றாக வெளியிடுகின்றது. ஒவ்வொரு மனிதனும் ஆத்மா என்பதும் ஒவ்வொரு ஜீவாத்மாவும் தெய்வத்தன்மை உள்ளது அல்லது பரமாத்மாவின் அம்சமாவது என்பதும் ஞானானந்த வெள்ளமாகிய ஸர்வேசுவரன் ஒவ்வொரு ஆத்மாவினிடத்தும் விளங்குகிறான் என்பதும் ஆதலின் சகல அறிவும் நமக்குள்ளேயே அதி சூக்ஷமமாக அடங்கிக்கிடக்கிறதென்பதும் அவ்வறிவினை மெள்ள மெள்ள விகசிக்கச் செய்வதே, கல்வியின் பிரதான நோக்கமென்பதும் இந்து சமயிகள் கொள்கை. ஆதலால் தோண்டித் தோண்டி ஆராய்ச்சி செய்ய

வேண்டியது அவசியம்; அப்போதுதான் நமக்குள் மறைந்து கிடக்கும் ஞானமாகிய கிணறு மேன்மேலும் ஊறி ஊறி ஆநந்த வெள்ளமிடும்.

## கல்வியும் கடமையும்:—

மனிதன் இவ்வுலகத்தில் கடமைக்குக்கையும் கடவுளுக்கு இதயமுமாய்ப் பிறக்கிறான் என்பது ஸ்ரீ கீதாசாரியனது தேர்ந்த கொள்கை. ஒவ்வொருவனும் தனக்குரிய கடமைகளைக் குறைவில்லாமல் செய்யவேண்டும். மனிதன் சமூகமாக வாழும் பிராணி என்பர் மேல் நாட்டு விஞ்ஞான நூலார். மனித சமூகத்தை ஒரு சரீரத்திற்கு ஒப்பிடலாம். சரீரத்தில் ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு தொழிலைச் செய்கின்றது. கால் நடக்கின்றது; கை பொருள்களை எடுக்கின்றது; வாய் பேசுகின்றது; இன்னும் இவ்விதமாகவே சரீரத்தின் பல பல பகுதிகளும் பல வேறு கடமைகளைச் செய்கின்றன. கால் வயிற்றைச் சுமக்கமாட்டேனென்று மறுத்தாலும் கை நாவிற்கு உதவமாட்டேனென்று நின்று விட்டாலும் சரீரம் க்ஷீணித்து நாசமடையும். அங்கங்கள் எல்லாம் - தம்முள் ஒத்து தத்தம் கடமைகளைச் செய்கையில் தான் பூர்ண ஆரோக்யம் ஏற்படுகின்றது. அவ்வண்ணமே சமூக வாழ்க்கையிலும் மனிதர் தத்தம் கடமைகளை நன்றாக உணர்ந்து செய்தாலொழிய அவ்வாழ்க்கை ஆரோக்யத்தையும் க்ஷேமத்தையும் அபிவிர்த்தியையும் அடையாது. மனிதர் கடமைகள் கடவுளுக்குரிய கடமைகள் என்றும் பெரியோருக்குரிய கடமைகளென்றும் தாழ்ந்தோருக்குரிய கடமைகளென்றும் குழந்தைகளுக்குரிய கடமைகளென்றும் நமது இளைய சகோதரரான வாயில்லாப்பிராணிகளுக்குரிய கடமைகளென்றும் இயற்கைக்குரிய கடமைகளென்றும், அவ்வாறு பல வேறு விதமாகப் பிரிக்கப்படலாம். இத்தகைய பல வேறு பிரிவுகளையுடைய கடமையைக் குறித்து நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும். இன்னும் கடமை முரண் ஏற்படும் காலத்து 'நாம் இன்ன கடமையை தவிர்க்கவேண்டும், இன்ன கடமையைத்தான் செய்யவேண்டும்' என்ற நிச்சய புத்தியுடன் ஒருகாரியத்தில் பிரவேசிக்க வேண்டும். இதற்கும் போதுமான கல்விப் பயிற்சியும் ஆராய்ச்சியும்



அவசியமாகின்றன. ஆதலால் கல்வியாலும் ஆராய்ச்சியாலுமே மனிதன் தன்பல வேறு கடமைகளைப் பகுத்துணர்ந்து சமூக க்ஷேமத்தின் பொருட்டும் அபிவிருத்தியின் பொருட்டும் உழைக்க வல்லவனாகிறான். கடமை நெறியில் கல்வி யறிவு கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது.

## கல்வியும் ஒற்றுமையும்—

மனித சமூகம் ஒத்துழைப்பினாலேயே இவ்வளவு தூரம் நாகரிகம் அடைந்து விளங்குகின்றது. அநாகரிக திசையில் மனிதனும் விலங்குகளைப் போலவே சுயேச்சையாய்த் திரிந்ததாகவும் அப்பொழுது யானை முதலிய இதரவிலங்குகளைக் கண்டு அஞ்சி வாழ்ந்ததாகவும், சிறிது சிறிதாக வால் குறுகிக் கூன் நிமிர்ந்து மூளை வலுபட்ட பின்னரே மனிதன் நாகரிக மனிதன் ஆனானென்பதும் மேற்புல அறிவு நூலார் கொள்கை. மனிதன் என்ற பதத்திற்கே 'நினைப்பவன்' என்ற பொருள் கூறுகிறார்கள். பிராணிகளிலெல்லாம் இருகால் பிராணியான மனிதனே ஆழ்ந்து யோசிக்கவல்லவன். ஆழ்ந்த யோசனை யென்னும் கருவியால் தன்னகத்தே மறைந்து கிடக்கும் அறிவு என்னும் கிணற்றைத் தோண்டவல்லவனாகின்றான்.

மனிதர் நாகரிகமென்னும் ஏணியில் முதல் முதல் காலெடுத்து வைத்ததும் அவர்களுக்கு ஒற்றுமையின் அவசியம் மேன்மேலும் புலப்பட்டது. நாளடைவில் மனிதருக்குள் குடும்ப வாழ்க்கை ஸ்திரப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்தார் அல்லது கோத்திரத்தார் தத்தம் குடும்பம் அல்லது கோத்திரத்துள் ஒற்றுமை யடைந்து அந்தக் குடும்ப நன்மைக்காகவும் க்ஷேமத்திற்காகவும் ஒத்துழைக்கலாயினர். குடும்பத் தலைவனான பிதா தனக்குத் தெரிந்த விஷயங்களைத் தன் மகனுக்கும் அவன் குடும்பத்தலைவனான போது அவன் மகனுக்கும் உபதேசித்து வந்தார்கள். இவ்வண்ணம் ஆதிகாலத்தில் அறிவின் தொகுதி வம்ச பாரம் பரியமாய்ப் பெருகி வந்தது. நமது நாட்டில் பல குடும்பத்தார் சேர்ந்து ஜாதிகளாகப் பிரிந்தனர். அப்போது கல்விக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் ஒரு வகுப்பார் ஏற்

பட்டனர். அவர்களே ரிஷிகளெனப் படுகின்றனர். அவர்கள் தாம் சமூகத்தின் ஆசிரியர்களாக விளங்கினர். அவர்களிடத்தே குருகுலவாசம் செய்து சிஷ்யன் அறிவு என்னும் செல்வத்தை அடைய வேண்டியிருந்தது.

நாளடைவில் அறிவு விருத்தியாக விருத்தியாக அதன் பல துறைகளிலும் பலர் உழைத்து வந்தனர். எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது; ஆதலின் பலதுறைகளில் ஆராய்ச்சி செய்வோருள் ஒற்றுமை அவசியமாகின்றது. மேலும் சமூகத்தாருள் எவ்வளவுக் கெவ்வளவு ஒற்றுமையும் சகோதர பாவமும் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு தான் அச்சமூகத்தாருள் சமாதானமும் நிலைபெறும்; சண்டை சச்சரவுகள் அறவே ஒழியும். சமாதான காலங்களிலே தான், அறிவை அபிவிருத்தி செய்து மத விஷயமாகவும், ஒழுக்க விஷயமாகவும், அரசியல் விஷயமாகவும், பொருளாதார விஷ்யமாகவும், விவசாய வியாபார விஷயமாகவும், சரித்திர விஷயமாகவும் நுண்ணறிவாளர் ஆராய்ச்சி செய்ய முடியும். ஆதலால் கல்வி யபிவிருத்திக்கு ஒற்றுமை அவசியமாகின்றது. அதைக்காட்டிலும் சமூக ஒற்றுமைக்கும் சகோதர பாவத்திற்கும் கல்வியையும் ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட அறிவே உறுதியான அஸ்திவாரமாகின்றது. கல்வியிலிருந்து ஆராய்ச்சித் திறமை உண்டாகின்றது ஆராய்ச்சியால் நமது கடமைகளை நாம் நன்கு உணர்ந்து ஒற்றுமையோடு ஒத்துழைத்து நாகரிகமடைகிறோம்.

## கல்வியும் புருஷார்த்தமும்:—

கல்வியே அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் புருஷார்த்தத்தையும் கொடுக்கும் கற்பகம் என்பர் பெரியோர். மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள ஒரு முக்கியமான வித்யாசம் என்னவெனில் மனிதனுக்கு தர்மா தர்மங்களை பகுத்தறியக் கூடிய அறிவு உண்டு; மிருகத்திற்கு இத்தகைய அறிவு இல்லையென்பர். தருமமே முதலாவது புருஷார்த்தமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வுண்மையை மறந்து எச்சமூகத்தினர்



சுயேச்சை விருப்பத்திலேயே பிரவேசிக்கின்றனரோ அவர்கள் அழிவர் என்பது அறநூலார் கொள்கை. அறம் அருள் நீதி இவை குடிபுகா நெஞ்சினரான அரக்கர் நாகரிகத்தின் பல உயர்ந்த அமிசங்களை உடையரா யிருந்தபோதிலும் அறத்தை அலக்ஷியம் செய்து 'மிருகபலமே பலம்' 'சுயநலமே நலம்' 'கொண்டதே கோலம் கண்டதே காட்சி' என்று செருக்கித் திரிந்ததால் அவர்கள் அழிந்தனர் என்று இதிகாச புராணங்கள் கூறுகின்றன. இதனால் நாம் கல்வியாலடைய வேண்டிய புருஷார்த்தங்களில் தருமத்தையே முதலாவதாகக் கொள்ளவேண்டும். 'தருமத்தை முதலில் தேடிக்கொள்; பொருளும் இன்பமும் தாமேவரும்' என்பது நமது நாட்டார் முதல் முதல் கண்ட உண்மை. அறவழியில் நின்று மனிதர் பொருளைச் சேகரிக்கவேண்டும். 'பொருளிலார்க் கிவ்வுலகமில்' ஆதலின் பொருள் தேடுவது இண்டாவது புருஷார்த்தமாகக் கருதப்படுகின்றது. அறவழியில் பொருள் தேடுவதற்கும் கல்வி இன்றியமையாததாகின்றது.

இனி இன்பம் மூன்றாவது புருஷார்த்தம். அறநெறி நின்று மனிதன் வாழ்நாளின் இன்பங்களை அநுபவிக்கவேண்டும். வாழ்நாள் துன்பக்களஞ்சியம் என்பர் சில வேதாந்திகள். ஆனால் அன்புமயமான இறைவனால் வியாபிக்கப்படும் இவ்வுலகம் இன்பமயமானதென்பதே நமது முன்னோர் கொள்கை. 'வாழ்நாளின் இன்பங்கள்' என்ற தலைப்பெயரோடு எவ்பரி என்னும் பிரபு ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதி நமது வாழ்க்கை ஆழ்ந்து யோசிக்குமிடத்து எத்தனை அற்புதமான இன்பங்களை உடையதா யிருக்கிறது என்பதை விளக்குகிறார். கல்விக்கும் இன்பத்திற்கும் உள்ள சம்பந்தத்தை நமது பெரியோர் நன்குணர்ந்திருந்தார்கள். அவர்களில் சிலர் அருங்கலை விநோதராய்ப் பல துறைகளிலும் ஆராய்ச்சி செய்து இன்பப் பெருங்கடலாடினர். 'தாமின்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என்ற வண்ணம் நமக்கும் தங்கள் நூல்களில் வழிகாட்டி யிருக்கின்றனர். அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றுபுருஷார்த்தங்களும் கல்வியாலும்ஆராய்ச்சியாலுமே அடையப்படுவனவாம். இப் புருஷார்த்தங்களை யடைந்த பின்ன

றே, மனிதன் பிரவர்த்தி மார்க்கத்திலிருந்து விடுதலைக்கு முயல வேண்டும். சதுர்வித புருஷார்த்தத்திற்கும் கல்வியே பெருநெறி யாக விளங்குகின்றது என்பது திண்ணம். ஒருவனுக்கு இப்புருஷார்த்தங்கள் அவசியமாவது போலவே ஒரு ஜாதியாருக் கும் சமூகத்தினருக்கும் தேசத்தினருக்கும் அறமும் பொருளும் இன்பமும் விடுதலையும் அத்யாவசியகமாவனவாம். ஆதலின் ஒரு வனுக்குக் கல்வி அவசியமாவது போலவே ஒரு தேசத்தாருக்கும் இன்றியமையாத தாகும்.

கல்வியாலாராய்ச்சியும் ஆராய்ச்சியால் கடமையைப் பற்றிய உணர்ச்சியும் இத்தகைய உணர்ச்சியால் ஒற்றுமையும் சகோதர பாவமும் தருமம் முதலிய புருஷார்த்தங்களில் காதலும் ஏற்படுமெ ன்று தெளிந்தோம். இவ்வுண்மையினையே கல்வியில் பெரிய கம்ப நாட்டாழ்வாரும் பின்வரும் பாசுரத்தால் வெளியிட்டிருக்கின் றனர்.

'ஏகம் முதற் கல்வி முளைத்தெழுந்து எண்ணில் கேள்வி
ஆகம் முதல் திண்பணை போக்கி அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனியென்று பழுத்தது போலுமன்றே'

கல்வியாகிய வித்து. அதிலிருந்து முளைத்தெழுந்தது எண்ணிறந்த ஆராய்ச்சியாகிய கிளைகளையுடைய கல்பக விருக்ஷம். அவ்விருக்ஷ த்தின் இலைகள் தவம் அல்லது கடமைகளாம்; 'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்' ஆதலின். அவ்விருக்ஷத்தில் அன்பு அரும்பு கின்றது. தருமம் மலர்கின்றது. போகம் பழுக்கின்றது.

## முடிவுரை:—

இத்தகைய கல்வி இருபாலார்க்கும் அவசியமானது. மைந்த ருக்கும் மகளிருக்கும் மனமென்பது ஒன்றேயன்றோ. சரீரத்தி திலும் விலை மதித் தற்கரிய அற்புத இயந்திரம் மனமேயாகும். சரீரம் மனம் இவ்வற்புத இயந்திரங்களை நல் வழியில் இயக்கிக் கடமையும் கைங்கர்யமும் செய்து மனிதன் பெரு வாழ்வு வாழ



வேண்டுமென்பதே இறைவன் திருவுள்ளம். ஆதலால் கல்வி இரு பாலாருக்கும் எல்லா வகுப்பினருக்கும் இன்றி யமையாத அமிழ்த மும் அரு மருந்து மாகும். அறிவு என்னும் சுத்தமான அமிர் தத்தைப் பருகி நாம் இவ்விருள் தரும் மண்ணகத்தே அமரராக வாழலாம்.

நமது நாட்டில் சென்ற சில நூற்றாண்டுகளாக உலக நூல் பயி ற்சி மிகவும் குன்றிவிட்டது. ஞான நூலே மனிதன் உய்வதற்குப் போதுமானதென்று போலி வேதாந்திகளால் கருதப் பட்டு வருகி ன்றது. நமது முன்னோர்-லௌகிக நூல்களிலும் ஞான நூல்களி லும் ஒருங்கே தேர்ச்சி பெற்று இம்மைக்குச் சாதனமாக பொருட் செல்வத்தையும் மறுமைக்கு சாதனமாக அருட் செல்வத்தையும் தேடினார்கள். ஆதலால் அக் காலத்தில் இந் நாடு பொன் விளையும் புண்ணிய பூமியாய் விளங்கியது. இப்பொழுது மேல் நாட்டார்கள் லௌகிக ஞானத்தில் நம்மை வென்று விட்டார்கள். ஆனால் அவர் கள் ஆன்ம நூற் பயிற்சியிலும் அறப் பற்றிலும் நம்மிலும் இன்னும் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். நாம் அவர்களிட மிருந்து உலக நூற் பயிற்சியை அடைய வேண்டும். அவர்களுக்கு நமது ஆத்ம சம்பத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் தற்கால நாகரிகம் வலியுற்று நின்று நிலவும். நாமும் வருங் கால மகோன்னத நிலையை உலகமெலாம் தொழுதேத்தும் ஓர் அற் புத தேவாலயமாகச் சமைத்து விடலாம். நமது நாடு உலகத்திற்கே பேராசிரியனாகும். இந்திய மாதா அருள் முடிதரித்து உலகத்தி ற்கே ஞானத்தாயாகவும் அறச் செல்வியாகவும் ஒளிர்வாள். இத் தகைய உயர் நிலையை அடைவதற்கு இந்திய மக்கள் பால் வகுப்பு நிறம் மதம் அந்துஸ்து என்னும் வித்யாசங்களின்றி கல்வி யென் னும் கேடில் விழுச் செல்வத்தைத் தேட வேண்டும்.

Ś. முத்தையா பிள்ளை,
திருநெல்வேலி பாலம்.

# வெளிவாழ்க்கையின் வேகம்

வேகத்திலே விவேகம் வேண்டும். ஓட்டத்திலே நிதானம் பிரதானம். அந்த சரக்கு தான் இந்த சமயமில்லை. "எல்லாம் இருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடைய சட்டியில்லை" என்பதான நீதியே தற்கால ஸ்திதி. எது வேண்டுமோ அது இல்லை. தேவையற்ற தெதுவோ அது கை நிரம்பக் கிடைக்கிறது. தற்போது நடைபெறும் இருபதாவது நூற்றாண்டின் போக்கை யுற்று நோக்கின், வெளிவாழ்க்கையானது வெகு வேகமாக முன்னுக்கு வந்து விட்டதாகத் தெரிகிறதே யன்றி, வாழ்க்கைக் கேற்றதான—வாழ்விற்கு இன்றி யமையாததாயுள்ள—உத்தம லக்ஷியங்களை அது கொண்டுளதா வென ஆராயப்புகின்— அந்த அம்ஸம் இல்லவேயில்லை. இருப்பதும் எங்கேயோ! வெளிவாழ்க்கையில் விசேஷமாக விருத்தி யடைந்த ஜெர்மனியின் முடிவு என்ன? ஜெர்மனி மட்டுமில்லை—அதனை யொத்த ஐரோப்பிய நாடுகளின் போக்கு தான் எவ்வாறு? அவை ரமணீயமாய் நிலவுகின்றனவா? வாழ்க்கையின் வேகத்திற் கேற்ற உத்தம லக்ஷியங்களையும் அது ஏற்றிருக்குமாகில் பாழான ஐரோப்பிய யுத்தம் வந்திருக்கவே வேண்டாம். போர்க்குரிய கருவிகளையும் அமர்க்களத்தில் பரீக்ஷை செய்யப்பட்டிருக்கவும் வேண்டாம். வெளிவாழ்க்கைக்குக் குறுகிய சுய நலத் தன்மையான திருஷ்டியே அதன் முக்கிய லக்ஷணம்.

* * *

இக்காலத்துப் பொருள்களின் நாகரிகத்தையும், அவற்றிற்கு ஏற்றவாறு அமைந்திருக்கும் அற்புதமான யந்திரங்களையும், மின் தபாலையும், நீராவியந்திரங்களையும், வாயு வெளிச்சங்களையும், இவை



போன்ற பின்னும் பற்பல புதுமைகளையும்——நவநாகரீகர்களும் மற்றவர்களும் வெகுவாக வியந்து பேசுகின்றனர். இக்காலத்தில் பிரதிதினமும் எத்தனையோ சமாசாரப் பத்திரிகைகளும் பிரசங்கங்களும் உபன்யாசங்களும் வந்து நம்மைக் கதவைத்தட்டி எழுப்புகின்றன. இவ்வளவு பத்திரிகைகளிலும் இக்காலத்துமகிமைகளே மிகுதியாகப் புகழப்படுகின்றன. அன்றியும், அங்கங்கே அநேகர் சபைகள் கூட்டி இக்காலத்தின் ஐஸ்வரியம், மேன்மை, புத்திகூர்மை, நினைத்ததை நினைத்தபடி முடிக்கவல்ல திறமை முதலியவைகளைப் பற்றி அற்புதமாய்ப் பேசுகிறார்கள்.

* * *

"சீர்திருத்தம்"—என்பதற்கு இத்தன்மையான வெளிவாழ்க்கை விருத்தியடைவது என்பது மாத்திரமே பொருளல்ல. அதற்கு இதைவிட மேலான உட்பொருளும் ஒன்றுண்டு. அந்த விதமாகப் பார்த்தால் நமது சீர்திருத்தமானது அதி உன்னதமான ஒருபடியை எட்டியிருக்கிறதென்று சொல்லமுடியாது.

* * *

சோதிடசாஸ்திர பரிசீலனைக்கு அடுத்த கருவிகள் எத்தனையோ கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன. வெறும் கண்ணுக்குப் புலப்படாதிருந்த அநேகம் பொருள்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளாலும், அணுவை மலையாகக் காட்டும்—பூதக் கண்ணாடிகளாலும் கண்டறியப்பட்டிருக்கின்றன. இவ்வளவு அநுகூலத்தைப் பெற்றிருப்பதினாலேயே முன் காலத்திய—நியூடன்—முதலிய சிறந்த சோதிட சித்தாந்திகளை விட, இக்காலத்திய சோதிடசாஸ்திராதிகாரிகள் சிறந்தவர்களென்று சொல்லிவிடலாமா? கருவிகள் ஆயிரமடங்கு அதிகப்பட்டாலும், சாஸ்திர ஞானமானது ஒரு மடங்காவது அதிகப்படுமென்பதில்லை. மற்ற சாஸ்திரங்கள் விஷயத்திலும் பாஷா ஞானத்திலும் இவ்வாறே.

* * *

முன் ஒரு புஸ்தகத்துக்கு இப்போது ஆயிரம் புஸ்தகங்களிருக்கின்றன. முன் ஒரு வருஷத்தில் எவ்வளவு அச்சிடப்படு

மோ அவ்வளவு இப்பொழுது ஒரு மாதத்தில்—ஒரு நாளையில் அச்சிடப்படுகிறது. ஆனால் அக்காலத்துக் கவிகளையும், கிரந்த கர்த்தர்களையும், பிரசங்சம் செய்யும் புலவர்களையும் விட மேலானவர்களா இக்காலத்தவர்கள்? இப்போது எத்தனையோ அருமையான சித்திரங்கள் எழுதப்படுகின்றன. அதனால் அக்காலத்திய சித்திர வேலைக்காரர்களைப் பார்க்கிலும், இக்காலத்துச் சித்திர வேலைக்காரர்களே சிறந்தவர்களென்று சொல்லிவிடலாமா?

* * *

சௌகரியங்கள் அதிகமாயிருந்தும், வாழ்க்கைச் சுகத்தை மாத்திரம் நாம் அதிகமாக அடையாம விருப்பதென்ன? கருவிகள் பெருகி யிருப்பதைக் கண்டு—எதை உபயோகிப்பதென்று தெரியாமல் தியங்கி—உபகரணங்களும் சாதனங்களும் அளவற்றுகிடைப்பதைப் பார்த்து—அதைப் பற்றுவோமா—இதைப்பற்றுவோமா—என்பதாக பிரமித்துக்கிடக்கிறோம் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

* * *

புதிதாய்க் கிடைத்திருக்கிற அருமையான பதார்த்தங்களைக் கண்டு சந்தோஷிக்கிற உற்சாகத்தின் பூரிப்பில், அவைகளிடத்திலுள்ள குற்றங்களையும், அவைகளை அங்கீகரிப்பதினால்விளையும் தீமைகளையும் நாம் கவனிக்கிறதில்லை. அவைகள் நம்முடைய சாமார்த்தியத்தையும், யோக்கியதையையும் விருத்தி பண்ணுகின்றனவென்று தெரியாமையினால் நினைப்பதேயல்லாமல், உண்மையாகப் பார்த்தால், அவைகள் நமக்கு வேண்டிய சாதனங்களை மாத்திரம் வீணாகப் பெருக்குகின்றனவே யன்றி வேறில்லை. நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் புஸ்தகங்கள் இருந்த காலத்தில், அவைகளுள் இன்னின்னவை சிறந்தவை யென்று தெரிந்து, அச்சிறந்தவைகளைச் செவ்வையாகக் கற்று ஞான மடைந்தார்கள். அது ஆழமான—பலமான கல்வியாகவும் இருந்தது. இப்போது புஸ்தகங்கள் லக்ஷக் கணக்காக அதிகரித்திருப்பதில், யாருக்கு என்ன தட்டுப்படுகிறதோ அதைப் படிப்பதும், அப்படிப் படிப்பதையும் ஆழ்ந்தறியாமல் மேலெழுந்த வாரியாகப் பார்ப்பதுமாக இருக்கிறது.



* * *

இப்போதுள்ள கிரந்தங்களே எண்ணிறந்தவை. இவையும் போதாவென்று நாளுக்கு நாள் புதிய கிரந்தங்கள் நிலைபட்டுக் கொண்டேயிருக்கின்றன. சாஸ்திரங்கள் பல விதம். ஒவ்வொரு சாஸ்திரத்திலும் கிரந்தங்கள் அமிதமா யிருக்கின்றன. ஆதலால் ஒரு சாஸ்திரத்தையாவது முழுதும் படிக்க கூடாமல், அதனுடைய நூற்றிலொரு பங்கைக் கூட ஒருவன் நன்றாய் அப்பியஸிப்பது கடினமா யிருக்கிறது. ஒரு சாஸ்திரத்தை நூறு பங்காக்கி அதில் ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொருவன் தனித்தனியே படித்துக் கொண்டிருப்பதினால் சாஸ்திர முறையானது—ஒருவனுக்காவது முற்றும் நன்றாய் தெரிய இடமில்லாமல் போகின்றது.

* * *

இக்காலத்தில எத்தனையோ பேர் ஜீவனமே கிடையாமல், கேவலம் பிச்சை யெடுத்து அதனால உயிரை மன்றாடிக் காப்பாற்றி வருகிறார்கள். எத்தனையோ பேர் கையிலும் ஏது மின்றி, பிச்சை எடுக்கவும் துணியாமல் மானத்துக்கு மன்றாடி அவஸ்தைப் படுகிறார்கள். உடம்பை ஒடித்து வேலையை மாத்திரம் அதிகமாக செய்து கால் வயிற்றுக் கஞ்சியுடன் நாளைக் கழிக்கிறவர்கள் எத்தனையோ பேர்! ஆகாரக் குறைவினாலும், கெட்ட தண்ணீரைக் குடித்து, கெட்ட காற்றை உட்கொள்வதினாலும் எத்தனையோ பேர் அந்தியத்தை யடைகிறார்கள்! சரியான போஷணையில்லாமல் எத்தனையோ குழந்தைகள் கொசுக்கள் மடிவது போல் மடிகின்றன. இக்காலத்திலுள்ள ஏழ்மைத்தனத்தையும், துர்நடத்தையையும் திருட்டு மோசத்தையும், உள் வஞ்சனைகளையும் இரக்கமற்ற தன்மையையும் கண் கொண்டு பார்க்கக்கூடவில்லை. குபேரன் பட்டணத்திலும் ஏழைகள் உண்டென்பது போல, மேற்கூறிய தோஷங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் இருக்கவே இருக்கும். இப்போது என்ன அதிசயம் என்றாலோ அங்குமிங்கும் கொஞ்சம் கொஞ்சமாய்க் காணப்பட்டால் அது அதிசயமில்லை தான். அப்படியின்றி அந்தத் தோஷங்களே மிதமிஞ்சியிருந்தால் அதை யென்னென்று சொல்வது? இக்காலத்து உலகவாழ்க்கையின் தன்மையைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், ஒரு தட்டில் அபரிமிதமான செல்வு

மும், யதேச்சையான சுகமும் மற்றொரு தட்டில் கேடு கெட்ட ஏழ்மைத்தனமும், நசிப்பும், சகிக்கமுடியாத துன்பமும் அமைந்திருப்பதாகச் சொல்லலாம்.

* * *

நாட்டு வாசத்தின் சுகத்தை யிழந்து, நகரவாசத்தின் சௌக்கியத்தையும் அடைய சக்தியில்லாமல், வெயிலுக்கும், காற்றுக்கும், மழைக்கும் தகுந்த ஆதரவில்லாத குடிசைகளில் லட்சம் லட்சமாக ஜனங்கள் கைக்கும் வாய்க்குமாய்ப் பிழைத்துக் கொண்டிருக்க, மற்றொரு பக்கம் ஐஸ்வரிய ஸம்பன்னர்களின் மோட்டார் வண்டிகளும், சாரட்டுக் குதிரை வண்டிகளும், கௌரவங்களுக்காக விரும்பிக்கூடும் கூட்டங்களும் நடமாடியபடி இருக்கின்றன. ஒரு பக்கத்தில் பலர் பஞ்சத்தால் சாக, மற்றொரு பக்கம் சிலர் பாயஸ விருந்து உண்பதானது உண்மையான வாழ்க்கைச் சுகமாகுமா? மாளிகை போன்ற கப்பல்கள் சமுத்திரத்தில் பட்டணங்களே நகருகின்றன வென்று சொல்லும்படி அவ்வளவு ஆச்சரியமாக ஓடிக்கொண்டிருப்பது மெய்தான். ஆனால் அவைகளில் யாத்திரை செய்வது யார் ? உல்லாசத்துக்கும் பூரிப்புக்குமாகப் பிரயாணப்படும் செல்வவான்கள் சிலரேயாக, வீட்டில் புசிப்புக்கு வகையற்று எங்கேயாவது வெளியேறிப் பிழைக்கக் கருதுகிற ஏழைகளே அதிகமான தொகையினராக அக்கப்பலுள் காணப்படுகிறார்கள்.

* * *

ஒரு சட்டையை மூன்றணாவுக்குத் தைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்தத்தையற்காரன் மாசம் ஒன்றுக்கு தன் வயிற்றுக்கான சாப்பாடு தேடிக்கொள்வது பரம நிர்ப்பந்தத்தி லிருக்கிறது. எந்தெந்தச் சீமையில் என்னென்ன தின்பண்டங்கள் விசேஷமோ அவைகளை யெல்லாம் நினைத்தபோது கடைத் தெருவில்வாங்கலாம். ஆனால் அப்பண்டங்களை உற்பத்தி செய்கிறவர்களுடைய ஸ்திதியை விசாரித்தால், பிராணனைவிடத் துணியாமல் அவர்கள் பரிதாபமான பிழைப்பு பிழைக்கிறார்களெனத் தெரியவரலாம்.

* * *

இவ்வளவு பொருள்கள் உற்பத்தியாகின்றனவே, இவ்வளவு பொருள்கள் செய்யப்படுகின்றனவே என்கிற காரணத்திலேயே, இது சிறந்த காலம் என்று மகிழ்ச்சி யடையலாமா? அந்த வஸ்துக்களை யனுபவிப்பது யார் ? அந்த வஸ்துக்களைச்செய்வது யார்? என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும் . இக்காலத்தில் சகல சௌகரியங்களும் அமைந்திருக்கின்றன வென்பதற்குக் கருத்து யென்னவெனில், தனிகர்களுக்கு மேன்மேலும் தனம் விருத்தியாவதும், ஒன்று மில்லாத ஏழைகள் வர வர அதிக ஏழ்மைத் தனத்தினால் நொந்து போவதுமே யன்றி வேறில்லை யென நினைக்கவேண்டியதா



கிறது. இது நாகரீகமோ நாகரீகக் கேடோ ? முற்காலத்தில் முறட்டுத்தனமும் மூடத்தனமும், கொடூரமும் அதிக பிரகாசமாக இருந்தன வாயினும், இவ் வாழ்க்கையின்—பிரபஞ்ச ஜீவியத்தின்—சுகத்துக்கு விரோதமான தீமைகள்—ஸர்வநாச நிகழ்ச்சிகள் இப்போது உண்டாயிருப்பதைப் போல் அக்காலத்திலில்லை.

* * *

நாகரீகத்தைப் பெருக்குவதற்கென்று உத்தேசிக்கப்படும் நூதன உபாயங்களெல்லாம்,—அதை முன்னும் போக வொட்டாமல், பின்னும் போகவொட்டாமல் மயக்கி, ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியைக் கொண்டவனது நிலையிலும் தாழ்மை யுள்ளதாய்ப் பாதாளத்தில் அழுத்தித் திகைப்புற வைத்துத் தீமைகள் சூழும் நிலையிலேயே முடிக்கின்றன. சாஸ்திரமும் பாஷா வித்தைகளும் புதிய கருவிகளை உபயோகிக்கத் தெரியாமல், தட்டுக் கெட்டுத் தடுமாறும் படி செய்கின்றன. நாகரீகத் தொழில்களும், நாகரீக மரியாதைகளும், நாகரீக பயிற்சிகளும் ஒரு நிதானமான நிலையில் நிற்காமல், புதிது புதிதாக பாரீஸ் நகரத்து மோஸ்தர் போல் ஒன்றுபோக மற்றொன்று தோன்றினபடியே ஓயாத ஓட்டத்தினால் சாரங் கெட்டுப் போகின்றன.

புதிதாய்த் தோன்றும் விஷயங்கள் பழமையானவைகளோடு விரோதப் படாமல் ஐக்கியமாகி ஒரு கிரமமான ஒழுங்கை யடைவது தான் மானிட வாழ்க்கைக்குப் பெரிய இலக்ஷணம். அப்படிப்பட்ட ஒழுங்கானது இப்பொழுது கொஞ்சம் பிசகியிருக்கிறது. ஆங்கில பாஷா அபிமானத்தில் தேசபாஷைகளைக் கொலை செய்வது போன்ற ஆவேச நிலையில் மாறிவிட்டிருக்கின்றது. புதியவை பழயவைகளோடு கலக்காமல் வேறு பட்டு நிற்கின்றன. இந்த 100 வருஷ காலமாய் வெளி வாழ்க்கையானது வெகு வேகமாக முன்னுக்கு வந்துவிட்டது. இந்த வேகத்துக்குச் சரியான ஞானம், புத்தி, பக்தி, நல்லொழுக்கம், நன்றியுணர்வு, நட்பில் தூய்மை, கடவுள் பக்தி, தயாளத்வம் முதலிய இன்னோரன்ன உள் வாழ்க்கையின் லக்ஷணங்களும் விருத்தியடைந்த பிறகு தான்—பணக்காரர்களுக்கு ஏழைகளின் பசி யதார்த்தமான உருகிய சிந்தையுடன் தெரிந்த பிறகு தான்—உண்மையான சீர்திருத்தம் நாடெங்கும் பரவியதாகும். தற்போதைய வாய் ஞானமும் அப்பொழுது கை ஞானத்தில் படிந்து பயன் காட்டும். உள் வாழ்க்கையில் பூர்வீக இந்தியா மிக்க உன்னதங்கொண்டு விளங்கிற்று. 'மகாத்மா'வின் வாக்கும் இதுவே. அவ்விதமான அவ்வுத்தமக் கொள்கையின் லக்ஷணங்கள் மறைந்து. தற்கால நாகரீக வெளி வாழ்க்கையின் வேகம் மட்டும் அதிகரித்துச் செல்வதில்—அதனால் உண்டாகும் பயனென்னவோ!

ஸ்ரீமத் எஸ். ஜி. ராமாநுஜுலு நாயுடு.

# பறவைகளின் பாஷை

(ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி எழுதுகிறார்.)

மனித ஜாதியார் பேசும் பாஷைகளுக்கும் மற்ற ஜந்துக்களின் பாஷைகளுக்கும் ஸம்பந்தமே கிடையாதென்று பொதுவாக ஜனங்கள் நம்பியிருக்கிறார்கள். இது மிகவும் தவறான நம்பிக்கை. ஏனென்றால் மனித ஜாதி ஜந்து வர்க்கத்தின் ஒரு கிளையேயன்றி வேறில்லை

ஒற்றை யணுப் பூச்சியிலிருந்து மனிதன் வரை படிப்படியாகக் கொஞ்சம் கொஞ்சம் மாறி மாறிச் செல்லும் சந்ததிகளேயென்றும், இந்த அபிவிருத்தியில் குரங்குக் கடுத்த தாயாதி மனிதனென்றும் டா (டி) ர் வின் சாஸ்த்ரி ருஜூப் படுத்திய ஸித்தாந்தமே இப்போது பூமண்டலத்தில் எல்லா வித்வான்களாலும் பொதுவாக அங்கிகாரம் செய்யப்பட்டு வருகிறது.

இதன் சுருக்கம் யாதென்றால் குதிரை, குரங்கு, மனிதன், யானை, கழுதை, தவளை, மீன், கொக்கு, புழு, பூச்சி, எல்லாம் ஒரே ஜாதி. தாயாதிக்காரர். ஒரே இனம். ஒரே மாதிரி உருப்படி. உடம்பைப் பார். உயிர் நெறிகளைப் பார். உணர்வுச் செயல்களைப் பார். எல்லா ஜந்துக்களும் ஒரே ஜாதியென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்.

முக்யமாக ஜந்துக்களின் கண்களை உற்றுப் பார்க்க வேண்டும். இங்கிலீஷ் பாஷையில் "கண்ணே ஆத்மாவுக்கு ஜன்னல்" என்ற பொருளுடைய வசன மொன்றிருக்கிறது. ஆத்மாவின் இயல்பை அறிய வேண்டுமானால் கண்களை உற்றுப் பார்ப்பதே வழி யென்பது அந்த வசனத்தின் கருத்தாம். நீ பயப்படும் போது பயப் படுகிறாய் யென்பது உன் கண்ணிலே தெரியும்.



களிக்கும் பொழுது களிக்கிறாய் யென்பதை உன் கண்ணிலே காணலாம். மகிழ்தல், துயர்படுதல், பகைத்தல், காமுறுதல் முதலிய உள்ள நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்கள் விளக்கு வைத்துக் காட்டுவது போலே காட்டும். இந்த விதி மனிதருக்குப் பொருந்துவது போலவே ஆனை முதல் பூனை வரை மான் முதல் மீன் வரை மற்றெல்லா ஜந்துக்களுக்கும் பொருந்தும்.

ஐரோப்பாவில் கிறிஸ்தவர் மாத்திரமே யன்றிக் கிறிஸ்து மதத்தைக் கை விட்டவர்களிலுங்கூட அனேக சாஸ்த்ரிகள் மனிதனுக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் உணர்வு விஷயத்தில் அபாரமான வேற்றுமை யிருப்பதாக நினைக்கிறார்கள். மற்ற ஜந்துக்களுக்கு ஆத்மா இல்லை யென்பது கிறிஸ்து மதக் கொள்கை, கிறிஸ்து மதத்தைத் தழுவாத சாஸ்த்ரிகளிலும் அந்தக் கண்டத்தில் அநேகர் மனிதனுக்கு மாத்திரமே பகுத் தறிவுண்டென்றும் மற்ற ஜந்துக்களுக்கும் பகுத் தறிவு கிடையா தென்றும் சொல்லுகிறார்கள். மற்ற உயிர்களைத் தாங்கள் கொன்று தின்பதாகிய பழைய வழக்கத்தை ஷை சாஸ்த்ரிகள் பொய் சாஸ்த்ரமாகிய அஸ்திவாரத்தின் மீது நிறுத்த வழி தேடுகிறார்கள்.

ஆத்மா என்றால் அர்த்த மென்ன? சைதந்யம்; அதாவது உணர்வு; அதாவது பக்கத்திலிருக்கும் பொருளைப் பக்கத்திலிருப்பதாகத் தெரிந்து கொள்ளும் சக்தி.

காக்கை சோற்றைக் கொத்தும் போது எதிரே நாய் வருகிறது. அதைக் கண்டு காக்கை பின்னே ஒதுங்குகிறது. எதனால்? காக்கைக்கு போதமிருப்பதால். காக்கை சுவராகப் போதமின்றியிருந்தால், ஒதுங்காது. அந்த போதந் தான் சைதன்யம். அதற்குப் பெயர்தான் ஆத்மா. மனிதனுக் குள்ள புத்தியில் முக்காற் பங்கு புத்தி காக்கைக் குண்டு. படித்தவன் படிக்காதவனுக்கு ஆத்மா இல்லை யென்று சொன்னால் எத்தனை நகைப்புக் கிடமாகுமோ காக்கைக்கு ஆத்மா வில்லை யென்று சொல்வதும் அத்தனை நகைப்புக்கிடமான செய்கை யேயாம். இனி வேறு சிலர் மனிதனுக்குப் "பகுத்தறிவு" என்ற விசேஷ குணம் ஒன்றிருப்பதாகவும் மற்ற ஜந்துக்களிடம் அஃது இல்லை யென்றும் வாதிக்கிறார்கள்.

அதாவது குயில்பேட்டை நினைத்துக் கூவும் போது சுயபுத்தியுடன் கூவவில்லையாம். இன்ன பேட்டைக் கூவுகிறோம். இன்ன கார்யத்துக்காகக் கூவுகிறோம். முதலிய விஷயங்களை அதற்குத் தெரியாதாம். சும்மா—யந்திரம் போலே வேலை செய்கிறதாம். நாய் யஜமானனைத் தேடி யலையும்போது பகுத்தறிவுடன் தேடவில்லையாம்; சும்மா—மோட்டார் வண்டி சுற்றிக் கொண்டு வருவது போலே சுற்றி வருகிறதாம். புலி மனிதனைத் தின்னும் போது பகுத் தறிவுடன் தின்னவில்லையாம்—புல்லென்று நினைத்துக் கொண்டு தின்னுகிறதாம்! ஷை. ஐரோப்பிய சாஸ்த்ரிகள் சொல்லுகிறார்கள் !

“அப்படி யில்லை! அப்படி யில்லை! அந்த ஜந்துக்களுக்கு தர்மா தர்மம், நியாய நியாயம் தெரியாது. ஈசுவர பக்தி கிடையாது. அதனால் அவற்றைப் பகுத்தறி வில்லாதன என்று சொல்லுகிறோம்” என்று சிலர் மெருகு பூசுகிறார்கள்.

மனித ஜாதியிலேயே முக்காலே மும்மாகாணி முக்காணி யரைக்காணிப் பங்கு நியாயம், அநியாயம், தர்மம், அதர்மம் தெரியாதவர்களாகவும் ஐரோப்பாவில் பெரும்பாலோர் தெய்வ பக்தி யில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அது கொண்டு, இவர்களை யெல்லாம் பகுத்தறிவில்லாதவர்களென்று தள்ளி இவர்களைக் கொன்று நெய் விட்டுக் கடுகு தாளித்துக் கறி சமைத்துத் தின்னலாமா?

மேலும் எறும்புகளின் அரசியல், தேனீக்களின் பெண்ணரசு, முதலிய திருஷ்டாந்தங்களை நோக்கு மிடத்து அவை நீதி, நியாயம், தர்மம், சட்டங்களைப் பற்றிய ஞான மில்லாதன என்று நினைக்க வழி யில்லை. ஜந்துக்கள் தெய்வ பக்தி யில்லாதவை என்பதையும் மனிதன் இப்போதுள்ள அறிவு கொண்டு ருஜுப் படுத்த இயலாது.

மற்ற ஜந்துக்களின் பாஷைகளை நாம் தெரிந்து கொண்டாலன்றி அவற்றின் அறிவு நிலையை எவ்வாறு கணக்கிட இயலும்? ஆதலால்;

இப்போது முதலாவது, பக்ஷிகளின் பாஷைகளை எடுத்துக் கொள்வோம். ஆராய்ச்சி செய்வோம். அர்த்தங் கண்டு பிடிக்க



முயற்சி பண்ணுவோம். அவற்றுக் கெல்லாம் அர்த்த மிருப்பது ஸாத்ய மே யில்லை யென்று மனிதர் தாமாகவே இது வரை மூடத்தனமாக ஆரோபம் செய்து கொண்டு அந்த நூற்றுக் கணக்கான பாஷைகளைப் புறக்கணித்து வருகிறார்கள். மிருகங்களின் பாஷைகளுக்குப் பொருளறியத் தொடங்குவதைக் காட்டிலும் பக்ஷிகளின் பாஷைகளில் ஆராய்ச்சி நடத்துதல் எளிதும், விரைவில் பயன் தருவதுமாம்.

எல்லா ஜந்துக்களும் ஒரே ஜாதி. மனிதன் அந்த ஜாதியில் ஒரு கிளை. முதலாவது தோன்றிய கிளையுமில்லை. கடைசியாகத் தோன்றிய கிளை.

ஆதலால் இவன் தன்னுடைய மூதாதைகளாகிய ஜந்துக்கள்—மிருக பக்ஷிகளிடமிருந்து ரூபம், தொனி, குணம், செயல் இவற்றைக் கொண்டிருப்பதுபோலே பாஷைகளையும் கொண்டிருக்கிறான்.

மற்ற ஜந்துக்க ளெல்லாம் ஊமைகளாக இருந்து அவற்றின் ஸந்ததியில் மனிதன் திடீரென்று பாஷையுடன் தோன்றி யிருக்கவில்லை. அவையும் பேசுகின்றன. அவற்றின் பாஷைகள் நமக்கு இப்போது அர்த்தமாகவில்லை.

“என்ன பேசுகிறது! காக்கையை எடுத்துக் கொள்வோம். காக்கை என்ன பாஷை பேசுகிறது! எப்போது பார்த்தாலும், கா, கா, கா, என்று ஒரே ஒலியைத் தான் சொல்லுகிறது! இதில் பாஷை எப்படி ஏற்படும்?” என்று சிலர் தர்க்கம் பண்ணலாம்.

நான் இந்த வ்யாஸம் எழுதும் போது காக்கைகளின் பேச்சைக் கேட்டுக் கொண்டே எழுதுகிறேன். எனது வீட்டைச் சுற்றிப் பல வேப்ப மரங்களும் வேறு பல மரங்களும் இருக்கின்றன. காக்கை, கிளி, கரிக்குலி, எழுத்தாணிக் குருவி, சிட்டுக் குருவி, முதலிய எத்தனையோ அழகான மலய பர்வதத்துப் பக்ஷிகள் அந்த மரங்களில் குடி யிருக்கின்றன.

அவற்றின் பாஷைகள் எப்போதும் என் செவியில் படுகின்றன. காலை எழுந்தவுடனே கேட்கத் தொடங்கிய அதி ஸாந்

தரமான, மிக இனிய, மிக இனிய, மஹாத்புத மான, மிக இனிய, மிக இனிய பக்ஷி—ஸங்கீதம் மாலையிலே பொழுது வீழ்ந்த பிறகு தான் நிற்கிறது.

இஃ தத்தனையும் பாட் டில்லை; பேச்சு ! அவற்றின் பாஷைகள் நமக்கு ஸங்கீதம் போலே செவிப் படுகின்றன.

ஆனால் காக்கையின் பாஷை நம்முடைய செவிக்கு ஸங்கீத மில்லை. மனிதன் காக்கை யொலியை விகார மாகக் கருதுகிறான். தெலுங்கன் "தெலுகு தேட்ட; அரவம் அத்வாநம்" என்பது போல்.

தமிழ்ப் படித்த தெலுங்கன் அங்ஙனம் தமிழை "அத்வாநம்" என்று தூஷிக்க மாட்டான். அது போல் மனிதனும் காக்கை பாஷை படித்தால் அங்ஙனம் நினைக்க மாட்டான். முதலாவது, காக்கைக்கு நாம் வைத் திருக்கும் பெயர் அதன் ஒலியை அனுசரித்து வைக்கப் பட்டது.

"காக்கை—" என்ற சொல் "கா" என்ற அந்தப் பக்ஷியின் பொது ஓசையை ஆதார மாகக் கொண்டது. தமிழில் மாத்திரமே இப் படி யில்லை. ஸம்ஸ்க்ருதத்திலும் காக்கைக்குக் "காகஹ" என்று தான் பெயர்.

இதினின்றும் நாம் காக்கைக்கு ஒரு அக்ஷரந் தான் சொல்லுகிற தென்று நினைக்கக் கூடாது. "கா" என்ற எழுத்திலேயே காக்கை பல பேதங்கள் சொல்லுகிறது. அவற்றை எழுதிக் காட்டத் தமிழ்ப்பாஷையில் எழுத்துக்களில்லை. ஸம்ஸ்க்ருத பாஷையின் அரிச்சுவடிபோல் அத்தனை விஸ்தாரமான அரிச்சுவடி நமது தமிழ் மொழிக் கவசிய மில்லை. ஸம்ஸக்ருத அரிச்சுவடியி லிருந்து சில புதிய எழுத்துக்களேனும் எடுத்துக் கொள்ளவேண்டும். ஏற்கெனவே "ஹ" "ஸ" முதலிய சில அக்ஷரங்கள் தமிழ் அரிச்சுவடியில் பொதுவாக எடுத்தாளப் படுகின்றன. இவை போத மாட்டா. அங்ஙனம் ஸம்ஸ்க்ருத அரிச்சுவடியி லிருந்து புதிய எழுத்துக்களைக் கொண்டு தமிழிலே செருக நம்மவருக்கு மன மில்லாவிட்டால், நம்மிடம் ஏற்கெனவே யுள்ள எழுத்துக்களின் அக்கம்



பக்கங்களில் புள்ளி, கோடு முதலிய அடையாளங்கள் சேர்த்து நமக்கு அவசிய மான புதிய ஒலிகளுக்குக் குறிப்புகளாக ஸங்கேதம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

இப்போதுள்ள நிலைமையில் காக பாஷையில் உள்ள ஒலிகளைத் தமிழில் எழுதிக் காட்ட இட மில்லாம லிருக்கிறது. இதைக் குறித்து நான் மிகவும் வருத்தப் படுகிறேன்.

எனினும் அதை ஊஹத்தால் தமிழ் மக்களுக்கு விளங்கச் செய்கிறேன். "கண்" என்ற தமிழ்ச் சொல்லை உச்சரி. "தங்கம்" என்ற தமிழ்ச் சொல்லை உச்சரித்துப் பார்.

"கண்" என்ற சொல்லில் ககரத்துக்கு வலிய ஒலி இருக்கிறது. "தங்கம்" என்ற சொல்லில் ககரத்துக்கு மெலிய ஒலி தோன்றுகிறது. இது போலவே "க்ஹ" முதலிய வேறு பல வித ஒலிகள் இந்தக் ககரத்தை ஒத் தியல்கின்றன.

அந்தக் ககர வரிசையில் தமிழில் ஒ ரெழுத்துத்தா னிருக்கிறது.

ஸம்ஸ்க்ருதத்தில் நாலெழுத்துக்க ளிருக்கின்றன.

காக பாஷையிலோ என்றால் கவர்க்கத்து எழுத்துக்கள் மாத்திரமே குறைந்த பக்ஷம் இருபத்தைந்து, முப்பது வரை செவிப் படுகின்றன.

# ஜேம்ஸ் ஆலன்.

ஜேம்ஸ் ஆலன் இங்கிலாந்து தேசத்தில். லீஸ்டரென்னு மிடத்தில் 1864-ம்௵ நவம்பர் மாதம் 28-ந்தேதி பிறந்தவர். இவருடைய பிதா அநேக நூல்களை வாசித்து உணர்ந்தவராதலின், தமது குமாரனுக்கு இளம் பிராயத்திலேயே கல்வி அறிவில் ஆசை மிக்கிருந்ததை நன்கு அறிந்து கொண்டார். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" அல்லவா? மிக்க தாகமுள்ளவன் நீரினிடத்துக் கொள்ளும் ஆசைபோல, ஆலன் தனியே சென்று புத்தகங்களைப் படிப்பதில் ஆசையுடையவராயிருந்ததை அடிக்கடி கண்ணுற்றதகப்பனார் 'என் மகனே! நீ மிகப்பெரிய படிப்பாளியாவாய்' என்று பன்முறையும் கூறியதுண்டு. சிலவேளைகளில், ஆலன் படித்துக் கொண்டிருக்கும்பொழுது, பிதா அருகிலிருந்து அதிக கவனமாய்க் கேட்பார். அப்பொழுது ஜீவியத்தைப் பற்றிய சில கேள்விகளை (Life problems) ஆலன் தகப்பனாரிடம் கேட்டால், அவற்றிற்கு மறுமொழி கூறவியலாது அவரே திகைப்பாராம்; அப்பொழுது ஆலனே மிகுந்தவணக்கத்துடன் தமக்குத் தெரிந்தவரை தமது பெரியவினாக்களுக்கு விடை பகர்வர். அதற்குத் தந்தை "தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லா மினிது" என்பதற்கிணங்க மிகமகிழ்ந்து, "மகனே! இவ்வளவு அறிவு ஒரே ஜன்மத்தில் வரக்கூடியதல்ல. நீ முன்னமே வாசித்திருக்கிறாய் போலும்" என்று கூறுவாரேயானால், நான் இங்கு அவர் புத்திக் கூர்மை முதலிய வற்றைப்பற்றி விரித்துரைக்க வேண்டியதில்லை.

ஆலன் குழந்தைப் பருவத்தில் தேகபலம் அதிகமாயில்லாதவராயினும் விஷய பரிசீலனைசெய்து சிந்திக்கும் ஆற்றலை அதிகமாகவுடையவராயிருந்தார். அதையறிந்தவர்கள், அவ்வளவு தூரம்



யோசித்தல் தேகத்துக்குக் கெடுதிவிளைக்கு மெனச்சொன்னார்கள். தகப்பனாரும் "ஆலனே! இவ்வளவு நீ யோசித்தால், சீக்கிரம் இறந்துபோவாய்" என்று தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினார். இதைப் பிற்காலத்தில் பன்முறை ஆலன் நினைக்கும் போதெல்லாம் புன் சிரிப்பாய்ச் சிரித்துக்கொள்வதுண்டு.

நிற்க; ஆலன் படிப்பில் மிகுந்த ஊக்கமுடையவராயினும், தேகப்பயிற்சியில் ஊக்கமில்லாதவரல்ல; எந்தெந்த நேரத்தில் எதெதைச் செய்யவேண்டுமோ, அதையதைத் தமது முழுமனதோடும் தவறாது செய்துவிடும் சுபாவமுள்ளவர்; எதற்கும் அரைகுறையான கவனமே செலுத்துபவரல்ல. விளையாட்டானாலும், படிப்பானாலும், அவர் சித்தத்தை ஏகமாய்க்கிரகித்து நின்றதே, அவரடைந்த உன்னத பலன்களுக்குக் காரணமாகும்.

இனி இளைஞனபோது, சில இஷ்டர்கள் அல்லது சகோதரருடன் பத்து இருபதுமைல் தூரம் உலாவுதல் ஆலனுக்கு மிகுந்த இன்பம் கொடுத்தது; அங்ஙனம் உலாவப் போகும்பொழுது, சட்டையின் பைகளில் ரொட்டி முதலியவை கொண்டுபோவது வழக்கம். அவர் அக்காலத்தில் அடிக்கடி இயற்கைப் பொருள்களின் வனப்பை உற்று நோக்கி இணையிலா இன்பம் பெற்றார்; அவருக்கு எவ்வுயிரிடத்தும் அன்பு பெருகிவழிந்தது; அப்படியாயின், கடவுள்மீது ஒப்பிலா உயர்ந்த பக்தியிருந்ததென்பது ஆச்சரியமல்ல. சில ஜந்துக்களும் அவரிடம் அன்புகாட்டியதுண்டு. சாதாரணமாய் நம்மைக்கண்டதும் ஓடியொளிக்கு மியல்புள்ள பிராணிகளெல்லாம், அவரிடம் பயமின்றி நெருங்கி விளையாடுவதை நண்பர் பலர் பன்முறை கண்டிருப்பதொன்றே அதற்குப்போதுமான சான்றாம்.

பதினைந்தாவது வயதில் அவருக்கொரு பெருங்கவலை ஏற்பட்டது; தகப்பனாரிட மிருந்த பணமெல்லாம் பாழாய்ப்போய் விட்டது. வேறு ஐசுவரியமுமில்லை. குடும்ப சம்ரக்ஷணையின் பொருட்டு, அமெரிக்காக் கண்டத்துக்குப் புறப்பட்டுப்போன தந்தையார் எக்காரணத்தாலோ அவ்விடத்தைபடைந்த இரண்டுதினத்திற்குள் "நியூயார்க்" ஆஸ்பத்திரியில் இறந்துபோனார். அவரிடம் எஞ்சியதாகக் குடும்பத்தாருக்குக் கிடைத்தது, வெள்ளிக்கடிகாரமொ

ன்றே. தாயையும், தம்மிரு சகோதரரையும் சம்ரக்ஷிக்கவேண்டிய பாரமுழுவதும் பதினைந்துவயது பாலியராகிய ஆலன் மீது விழுந்தது. அந்தோபாவம்! அவர் தனியே என் செய்வர்? ஒவ்வொரு தினமும் சுமார் பதினைந்துமணிநேரம் வேலைசெய்ய வேண்டியவராயிருந்தார். தந்தையிறந்தும், செல்வம்மறைந்தும், கல்வியின்மீதுள்ள ஆசை மாத்திரம் அவர்க்குக் குறையவில்லை யாதலின், படிப்புக்கு வேறுஇரண்டு மூன்று மணிநேரம்செலவழிந்தது; மீதியுள்ள சிறிது காலமே நித்திரைமுதலிய நித்திய கடன்களுக்குப் பயன்பட்டது. அங்ஙனம் கஷ்டமனுபவித்தற்குப்பலனில்லை யெனல் பொருந்தாது; ஏனெனில்; ஆலனே ஓரிடத்தில் "அதிகமாய்க் கஷ்டப்படுவது அநேக பாஷைகளை அறிந்ததுபோலாகும்" எனப்பொருள்படும்படி (To have suffered much is like knowing many languages) என்று கூறியிருக்கின்றார். 'பாடின்றிப் பலனில்லை".

ஆலன் பதினேழாவது வயதில் ஷேக்ஸ்பியர்படிக்கத்தொடங்கினார்; எப்பொழுது சில நிமிஷஅவகாசம் கிடைத்தாலும், ஷேக்ஸ்பியரின் நாடக காவியங்களைப் படிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். ஆதலின், அவை சிலகாலத்துக்குள், அவர் அக்கிரந்தங்களைப்பாராமல் ஒப்பிக்குமளவுகூட, மனதிற்பதிந்துவிட்டன. "வைத்ததோர் கல்விமனப்பழக்கம்" தானே. "வருந்தினால் வாராத தொன்றில்லை'! அன்றோ?

இவ்விதம் அறிவு மீதுள்ள ஆசை வளர வளர, மெய்யுணர்தலொன்றையே அவரது சிந்தை தனது பெரிய இலக்காய்க் (Goal) கொண்டது. தகப்பனார் அநுஷ்டித்து வந்த சமயக்கொள்கைகளுள் சில, ஆலன்மனத்துக்குப் பொருந்தவில்லை; உதாரணமாக:—கொடிய நரகநித்திய தண்டனை சம்பந்தமாகப் பரவியிருந்த சாதாரணக் கொள்கைகளிடம் அவர்க்குச் சிறிதும் நம்பிக்கை சென்றிலது. அவருடைய நல்லொழுக்க நாட்டம் நான் அளவிடுந்தரத்ததன்று. புலாலுண்ணலாவது, லாகிரிவஸ்துக்களை உபயோகித்தலாவது கூடா நட்பாவது அவரிடம் கிடையாது. தீயாரும் அவரைக் கண்டால் நல்லோர் போன்றே நடப்பர். ஒரு காலத்தில் அவர்மில் ஆபீஸில் வேலைக்குச் செல்ல நேரிட்டபொழுது, ஏனையோர் கெட்டவார்த்தைகள் நிரம்ப உபயோகித்து வந்ததை அறிந்தார். ஆனால் சிலகாலத்துக்குள் அவர்கள் அத்துர்வழக்கத்தினின்றும் எவ்வழியாலோ நீங்கி விட்டார்கள். அதற்குக் காரணம், நற்குணக்குன்றேறிநின்ற ஆலனன்றியாரா யிருத்தல் கூடும்?



இருபத்து நான்காவது வயதில் "ஆசியாவின் விளக்கம்" (The Light of Asia)என்ற புத்தகத்தைக் கூர்ந்து படித்தபொழுது, இவருடைய ஆன்மா இதுகாறும்எதை விரும்பி எதிர்பார்த்து நின்றேங்கியதோ, அஃதாவது (Cosmic Vision) பிரஹ்ம ஞானம் கிடைத்தது; அப்பொழுது தான், அவர் மெய்ப் பொருளைத் தேடும் வேலையைத் தொடங்கினாரென்று சொல்லலாம்.

இதுநிற்க; இவருக்கு விவாகம் நடந்த விதம் சிறிது வியப்பை விளைவிக்குமாயினும், விரித்துரைக்க எனக்கு இடமில்லை. கலியாணமாகி மூன்று நான்கு வருடங்கள் சென்றதும், அல்லது ஆலனுக்கு முப்பத்து மூன்று வயதாகியதும், அல்லது (நோரா ஆலனென்ற பெயருள்ள) ஒரே ஒரு பெண்குழந்தைக்கு ஒன்றரை வயதாகியதும், இவரிடம் ஒரு பெரிய மாறுதல் காணப்பட்டது. முப்பதாமாண்டளவில் மூன்றற் றொருபொருளைத், தப்பாமற் றன்னிற்பெற வேண்டும் என்ற மூதுரைப்படி அநேகமாய் நடந்தனர் போலும்! இவ்வயதிலேயே இவர் காமவிச்சையை முழுவதும் வென்றுவிட்டார். உடனே இவர்க்கு வைகறைத் துயிலெழும் வழக்கம் ஏற்பட்டது. "மூதல்வெம் பவத்துக்கெனு மடமை முற்றுமொழியச் செம்பொருளைச் சதமென்பதற நினைத்தலே தூயசமாதி" என்றபடி, தெய்வசிந்தனை முதலியவற்றிற்கு (Cairn) கேயர்ன் என்றவொரு குன்றின் மேலேறிச் சிலமணி நேரம் தமது சஞ்சலமற்ற ஏகாக்கிர சித்தத்தைச் செலுத்தி வந்தார்.

கொஞ்சக்காலத்துக்குள், இவருடைய முதற்புத்தகம் (From Poverty to Power) வெளியாயிற்று. அநேகர் இதையே இவர் எழுதியுள்ள சுமார் பதினைந்து புத்தகங்களுள் சிறந்ததென இப்பொழுதும் எண்ணுகின்றார்கள். இவர் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை "பிரைவேட் செக்ரட்டேரி" அலுவல் பார்த்ததால், ஏனைய அவகாசத்தை யெல்லாம் புத்தகங்கள் எழுதுவதிலேயே

கழித்தார். அதனால் (All these things added) என்ற புத்தகமும், 'மனம்போல வாழ்வு (As a man thinketh) என்பதும்வெளிப்பட்டன; பின்னர்க் கூறிய நூலே அவருடைய நூல்களிலெல்லாம் மிகப்பிரசித்தி பெற்றதும், அதிகமாய் வாசிக்கப்படுவதுமாகும். இச்சந்தர்ப்பத்தில், (Light or Reason) என்ற பத்திரிகை ஒன்று ஆரம்பித்துக்கொண்டார்; அதன் பெயர் சிலகாலத்துக்குள் (Epoch) என்று மாற்றப்பட்டு, இப்பொழுதும் மாதாந்தப் பத்திரிகையாக, இவருடைய மனைவியாராகிய லில்லி ஆலனென்றமாது சிரோமணியால் நடத்தப்பட்டு வருகின்றது. அதனோடு உலகத்தில் உண்மையை யறிவதில் நோக்கமுடையவர் எப்பாகத்திலிருப்பினும், அவர்களோடெல்லாம் கடிதப்போக்கு வரவு இவர் வைத்திருந்தது கவனிக்கத் தக்கது. பைபில், பகவத் கீதை, புத்தர், மில்டன், எமர்சன், பிரௌனிங், வால்ட் விட்மான், ஷேக்ஸ்பியர், ஆசியா விளக்கம், டாக்டர் பக்கியின் 'பிரஹ்மஞானம் (Cosmic Consciousness) என்பவை ஆலனுக்கு மிகவும் பிரியமுள்ளவைகளைச் சேர்ந்த சில புத்தகங்களாகும்.

ஆலன் தேக சௌக்கியம் குன்றிய காலத்துங் கூடச் சோம்பலாய்க் காலத்தைக் கழிக்கமாட்டார்; அப்பொழுதும் வழக்கப்படி தெய்வ சிந்தனை செய்வார்; ஏனைய வேலைகளைச் செய்யாமலிருக்க மனைவி முதலியோர் வேண்டிக் கொள்ளும் பொழுதுகூட 'என் வேலை முடிந்து விட்டதென்றால், நான் உடனே புறப்பட்டு விட வேண்டும்; ஆதலால் தடுக்காதே' என்பாராம். அவ்விதம் 1912௵ ஜனவரி௴ 13௳ வரை உழைத்துவிட்டு "என்வேலை முடிந்தது, இனி இயலாது, வந்தவேலை முற்றுப் பெற்றது" என்று கூறி விட்டார். பின்பு, ஜனவரி௴ 24௳ புதன்கிழமை அதிகாலை அமைதியாய் அவரது உயிர் பிரிந்துவிட்டது. சரீரம் அக்கினியில் தகிக்கப்பட்டுச் சாம்பல் நாலாபக்கமும் பரவியது. அஃது இவர் போதித்த உண்மைகள் உலகெங்கும் பரவுவதைக் குறித்தது போலும்!

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்."—திருக்குறள்.

நெல்லை. மாணிக்கவாசகன்.

# மௌனத்தின் வலிமை.

(The Power of silence)

மௌனம் சப்தத்தைவிட நன்றாய் மனதில் ஊன்றும் வலிமையுள்ளது. இதைப்ரவிர்த்தி மார்க்கத்தில் நிதர்சனமாய்ப்பார்க்கலாம். நிவர்த்தி மார்க்கத்தில் இதன் வலிமையைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. காடு, பாலைவனம், ஏரி, மலைச்சிகரம் என்னுமிவற்றின்கணுள்ள மௌனத்தின் (நிச்சப்தத்தின்) மகிமையும், நம்மனத்தை ஏகாக்கிரப்படுத்துவதில் இதற்குள்ள அபாரசக்தியும் சந்தையிரைச்சலுக்கு நிகரான பட்டணங்களின் நடுவில் இல்லையென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

ஆத்மலாபத்தை யடையவேண்டுமென்ற ஊக்கம் எள்ளளவு மில்லாத ஆன்மாக்கள் சப்தத்தையே விரும்பி அதன் வசியத்துக் குள்ளாகின்றார்கள் என்பது நிஜமே; ஆனால், "தன்னைத்தானறிய" விரும்புவோன் ஏகாந்தத்தையே விரும்புகிறான். அகத்தில் மௌனம் சித்திபெற விரும்பினவர் யாவரும் புறத்தில் சப்தமில்லாத இடங்களையே எப்பொழுதும் தேடுகிறார்கள். உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரையில் அவதரித்துள்ள மகா புருஷர்களுடைய திவ்விய சரித்திரங்களைக் கவனிக்க இதன் உண்மை நன்கு விளங்கும்.

ஒருவழிப்படாத அசுத்தமான மனத்தையுடைய சிலரோ தங்களுடைய மனோநிலைமையை ஆராயப் பயப் படுகிறார்கள்; ஆகையால், இவர்கள் தங்கள் மனோ மௌனம் தங்களுக்குச் சற்றும் புலப்படாமலிருக்கக்கூடிய உலக ஸுகங்களாகிய சிற்றின்ப இரைச்சலையே தேடி யலைகின்றார்கள். கட்டுப்பட்ட தூய மனமுள்ளவர்களோ வெனின் தாங்கள் தங்களுடைய மனத்தை எதிரெதிராய்ப் பார்த்துப் பக்குவப்படுத்தி அதை ஞானத்துக்கு அடி

மையாக்கித் தியானத்தில் நிலைநிறுத்துகிறார்கள். அவர்கள் ஏன் ஏகாந்த ஸ்தலத்தையே விரும்புகிறார்கள் என்றால், பஞ்சேந்திரியங்களுடைய, கூக்குரலையடக்க உகாந்தத்தைவிட எயர்வான கருவி வேறொன்றுமில்லை.

ஏகாந்தமான இடத்தில் தியானத்தில் எத்துணைக் கெத்துணை ஒரு மனிதனுக்கு மனம் நிலைநிற்கிறதோ அத்துணைக் கத்துணை தான் இது வரையில் உணராத ஒரு சக்தி தன்னிடத்திலிருப்பதாக அவன் உணருகின்றான். கடாகாசம் படாகாசம் என்று தர்க்கிக்கிறார்களே அவர்களுடைய சக்தி நாம் மேற்கூறிய சக்திக்கு அணுவளவும் நிகராகாது. அஃதென்ன சக்தியெனின், பரோபகாரத்தில் தன்னை மறக்கும் சக்தி (Selflessness) மெய்யறிவின் சக்தி. அந்தச் சக்தி அன்பிலிருந்து முளைத்து ஞானத்தோடு கலந்து விளங்குகின்றது.

விவேகியானவன் தன் சத்துருக்களிடத்தும் அனுதாபம் பாராட்டுகின்றான். அவர்கள் தன்னை வைது திட்டினாலும் இவன் மந்தகாஸத்தோடு மௌனமாயிருக்கிறான்; ஏனெனில், அவரவர்களுடைய குணத்துக்குத் தகுந்த நடவடிக்கை அவரவர்களிடத்தில் இருப்பது ஞானிக்கு ஒரு ஆச்சரியமாகத் தோன்றாது. பாகற்காயில் எப்படி இனிப்பைக்காண முடியாதோ அப்படியே அவிவேகியிடத்தில் சாந்தகுணம் இராதென்பது விவேகிக்கு நன்றாய்த் தெரியும்.

வால்ட் விட்மன் (Walt Whitman) என்னும் கீர்த்திபெற்ற ஆங்கிலமகாகவி தாம் எழுதிய செய்யுள்களை இகழ்ந்து பேசின சிலரைப் பற்றி "அவர்களுடைய சுபாவத்துக்கு அதுதான் ஸரி" என்று சொன்னதாக நாம் கேட்டிருக்கின்றோம். ஞானியானவன் தான் கொண்ட கருத்துத் தான் ஸரி என்று எல்லோரும் ஒப்புக்கொள்வதற்காக உலகத்தோடு சண்டை போடமாட்டான்; ஆனால். இதராருடைய மனோநிலைமையைப் பார்த்து இரக்கப்படுவான். இதனால் அவன் மனச்சாந்திக்கு ஒருபோதும் குறைவு நேரிடுகிறதில்லை. உலகத்தோடு விரோதமும் அதனால் விளையும் துக்கமும் அவனுக்கில்லை. தன்சத்துருவைச் சண்டையினா லல்லாது அன்பினால் ஜயித்துவிடுகிறான். தன்னையாராவது உபத்திரவப்படுத்தும் போ



தும், பரிகஸிக்கும் போதும் திட்டும்போதும் அவன் முகத்தில் விளங்கும் தேஜஸினால் இவன் மௌனத்தின் வலிமை துலங்கும்.

"மார்க்கத்தி லிருக்கும்போதே உன்சத்துருவோடு சிநேகம் செய்து கொள்" என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருப்பது இந்தச் சக்தியைக் குறித்துத் தான், வாக்குவாதம், சண்டை, மனஸ்தாபம் இவைகளை உண்டுபண்ணும் ஸ்வபாவமுள்ளவன் தன்சத்துருக்களோடு மாத்திரமல்ல சிநேகிதர்களோடும் விரோதம் செய்துகொள்ளுகிறான். கத்தியைவிடக் கூரான அவன் நாக்கானது சத்துருக்களுடைய விரோதத்தைப் பலப்படுத்துவதோடு சிநேகிதர்களையும் சத்துருக்களாய்ச் செய்து விடுகிறது. விவேகியோவென்றால் தன் அன்போடுகூடிய மௌனத்தால் சிநேகிதர்களின் வாத்ஸல்யத்தைப் பலப்படுத்துகிறதோடு விரோதிகளையும் சிநேகிதர்களாக்கிக்கொள்ளுகிறான்.

சீனதேசத்தில் அவதரித்த கன்ப்யூஷியஸ் (Confusious) என்னும் மகானிடத்தில் மேற்சொன்ன சக்தி அபாரமாயிருந்ததால் அவருடைய சிஷ்யர்களில் ஒருவராவது அவரைவிட்டு நீங்கினதேயில்லையென்று கேள்விப்பட்டிருக்கின்றோம். அதேமாதிரி தாறுமாறாய்ப் பிதற்றிக்கொண்டு தமக்குத் தீங்கு செய்யவேண்டுமென்ற கருத்தோடு தம்மை அணுகி வந்த பரம சத்துருக்களையும் அவர்களுடைய தாறுமாறான கேள்விகளுக்கு ஒரு உத்தரமும் சொல்லாமல் மௌனத்தோடிருந்து அவர்களைத் தம்முடைய அன்பான சிஷ்யர்களாகப் புத்த பகவான் செய்ததுண்டு. இயேசு கிறிஸ்துவைப் பரிகசித்தும் நிந்தித்தும் சிலுவையில் அறையக் கொண்டுபோன காலத்து அவர் மௌனத்தோடிருந்தது உலகத்தில் இன்றைக்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. ஞானத்தினிடத்திலிருந்து பிறக்கும் வார்த்தைகளுக்குப் பலமுண்டு. ஆனால் அறிவும் அன்பும் கலந்த மௌனத்தின் சக்தி மனவாக்குக் கெட்டாதது. "Speech is silver and Silence is gold" என்று ஆங்கில பழமொழி ஒன்றுண்டு. அஃதாவது வார்த்தை வெள்ளிக்குச் சமமாயின், மௌனம் தங்கத்துக்கு நிகரானது.

தற்காலத்திலோ எங்கே பார்த்தாலும் சந்தடியும், போட்டியும், மதபேதங்களும், சச்சரவுமே வியாபித்திருக்கின்றன. நமது வாழ்நாள் ஸமாதானமாய் விவேகத்தோடு நடக்கவேண்டுமானால் நாம் இதற்கு மாற்றுத் தேடவேண்டும். மௌனமும் சாந்தமும் தாம் இதற்குமாற்று. சுறுசுறுப்பும் உழைப்பும் எப்படி இகலோக ஸாதனங்களோ அப்படி நமது சாஸ்வத வீடாகிய பரலோகத்துக்கு வேண்டிய ஸாதனங்கள் மௌனமும், சாந்தமும் தாம். ஏகாந்தத்தில் (Solitude) தான் இப் பொருள்கள் விளையுமே யொழியச் சந்தையில் விளையா. இதற்காக நாடு நகரம் மனைவாழ்க்கையெல்லாம் துறந்து காட்டிலிருந்து தவம் செய்ய வேண்டுமென்பதல்ல எமது கருத்து. உலகத்திலுள்ள மண் பெண் பொன் முதலிய பொருள்கள் நமது ஐம்பொறிகள் வழியாய் நம்மனத்தை இழுக்கச் சக்தி யற்றவைகளாகச் செய்ய வேண்டுமானால் ஏதோ பிரதி தினமும் குறித்த நேரத்தில் நம் ஐம்பொறி வாயிலைச் சாத்தி நம் மனதுக்குட் சென்று கண்ணாடியால் மூடப்பட்ட விளக்கின் ஜ்வாலை அசையாம லிருப்பது போல நம்முடைய ஆத்மாவும் சலன மில்லாமல் மௌனத்தில் லயமாயிருக்க வேண்டியது அத்தியாவசியமாம்.

வாயோயாமல் பேசிப் பேரிரைச்சல் உண்டு பண்ணுவதும் சண்டை போடுவதும் எவர்க்கும் எளியவாம். எந்த அடிமையும் முன்னதைச் செய்வான். பின்னதை எந்தத் துஷ்ட மிருகமும் செய்யும். இவை பலத்தின் அறிகுறியல்ல. பிரமாதம் வந்த காலத்தும் அசையாமல் இருத்தலும் ஸகிக்க முடியாத கோபத்தை அடக்கி மௌனத்தோ டிருப்பதுமே வீரியத்தின் அறிகுறிகள். இப்பேர்ப்பட்ட மௌனமும் சாந்தமுமுடையவன் தனக்கு ஒரு வலிமையிருப்பதைத்தான் உணர்வதோடு அவனது தரிசனானுக்கிரகத்தால் பெரும்பாக்கியமுள்ளவர்களுக்கும் அந்த வலிமை பிராப்தமாகிறது. ஒரு விளக்கினின்று அதன் கிரணங்கள் எப்படி அதன் உணர்ச்சியில்லாமலே நாலாபக்கத்திலும் உள்ள இருளைப் போக்குகின்றனவோ அப்படி பூர்ண நிலைமை யடைந்த ஸாதுக்களுடைய மௌனத்திலிருந்து நாலா பக்கத்திலும் வீசும் சக்தி எல்லோருக்கும் துக்கத்தைப்போக்கி மனத்திற்குச் சமாதானத்தைக் கொடுக்கின்றது.



நல்ல வார்த்தைகள் செவிகளின் வழியாய் மனிதனுடைய மனத்தை எட்டி ஞானமாகிய சுடரை ஏற்றி வைக்கின்றன. ஆனால் அன்பும் ஞானமும் கூடிப் பிறந்த மௌனமோ மோக்ஷத்திலுள்ள பரமபதத்தின் (Heavenly Peace) ருசி இப்படி யிருக்கும் என்று முன்னரறிவிக்கிறது. (Gives a foretaste of the Heavenly Peace)

சக்ரவர்த்தினி.

---

## பஞ்ரஞ்சிதம்.

ஒரு கெடியாரத்தின் சிறுசக்கரம் ஒரு வருடத்தில் 781,000 முறை சுழல்கின்றது.

* * *

சில காலம் வரை, ருஷ்ய பத்திரிகைகள் எவ்விதமான சமாசாரங்களையும் பிரசுரிக்க அஞ்சிக்கொண்டிருந்தன.

* * *

வருடத்தில் ஒரு நத்தை 400,000 முட்டைகளையிடுகிறது. அவைகளில் 400 முட்டைகளே குஞ்சுகளாகின்றன.

* * *

லண்டனிலிருந்து பாரிசுக்கு, டெலிபோன் மூலமாய்ச் சமாசாரங்களை அறிவிக்க வேண்டுமானால் ஆறு ஷில்லிங் செலவாகிறது.

* * *

ஜிராபி என்பது ஒருவகைப்பிராணி. அது பிறக்கும்போது அதன் உயரம் குதிக்காலிலிருந்து தலை வரை ஆறு அடியாகும்.

* * *

நியுயார்க்கிலுள்ள உயர்ந்த கட்டிடங்களில் முதன்மையானது உல்வொர்த் எனும் கட்டிடமேயாகும். அதன் உயரம் 785 அடியாகும்.

* * *

பாரசீக அரசர் அணியும் கிரீடம் பூந்தொட்டியைப் போலிருக்கிறது. இக்கிரீடம் பண்டை நாட்களிலிருந்து இருந்துவருகிறது. இதன் மேல் கோழிமுட்டையின் அளவினை யொத்த இரத்தினம் வைக்கப்பட்டுள்ளது.

* * *

கிரேட் பிரிட்டன் அயர்லாந்து ஆகிய இந்நாடுகளில் மரயில் வேக்களுக்காக 1,350,134,000 பவுன் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை பிரிட்டிஷார் தேசியக்கடன் தொகையில் ஆறில் ஒரு பங்காகும்.

* * * * * * * * *

ஆஸ்டிரேலியாவிலுள்ள பசுக்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தைக்கும் மும்மூன்று பசுக்கள் வீதம் பங்கிடலாம். தென் அமெரிக்கக்குடியரசு நாட்டில் ஐவருக்கு ஒரு கால் நடைவீதம் தேர்கிறது.

* * * * * * * * *

உலகில் 4,000,000,000 காலன்கள் நிறையுள்ள சாராயம் காய்ச்சப்படுகிறது. அதில் ஐரோப்பாவில் 3,000,000;000 காலன்கள் நிறையுள்ள சாராயம் காய்ச்சப்படுகிறது. இதில் இட்டாலியில் 1200,000,000 காலன்கள் நிறையுள்ள சாராயம் காய்ச்சப்படுகிறது. பிரான்சில் 1,120,000,000 காலன்கள் நிறையுள்ள சாராயம் காய்ச்சப்படுகிறது. ஆஸ்திரேலியாவிலும் தென் ஆப்ரிக்காவிலும் முறையே 6000,000 காலன்கள் நிறையுள்ள சாராயம் காய்ச்சப்படுகிறது.

நவசக்தி.

---

## விடு கதைகள்.

1. நீண்ட உடலாயிருக்கும் நேரே படமிருக்கும் தீண்டும்போதே எழுந்து சீறும் வேண்டினபேர் மந்திரத்தில் கட்டினதோர் மட்டிலே நின்றாடும் சுந்தரஞ் சேர் பாம்புமல்ல செப்பிடுவாய்.

2. கச்செங்கிருப்பான் கடல்நீரில் பள்ளி கொள்வான், இச்சையுடன் வெண்ணெய்க் கிரங்குவான், பச்சைநிறம் பாலகனுமல்ல பாற்கடலில் பள்ளி கொள்ளும் மாலவனுமல்ல மற்று?

3. நீ முளைத்து முட்டையிடும் செங்களநீர் நன்னாட்டில், காய்முட்டை யிட்டதையுங் கண்டீரோ, காய்முட்டை மானத்தை மூடும் மன்னர் முடிமீதிருக்கும், கானகத்தில் வாழுங் காயென்ன காய்.

காந்திமதி.

சென்ற ஜூன் மாதம் வெளிவந்த விடுகதைகளுக்கு விடைகள்,

1. பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு, வாய், நாக்கு, பற்கள்.
2. ஈச்சம்பழம், 3. தேன்கூண்டு, 4. தேங்காய், 5. உப்பு.

டி. பி. வேலாயுதம் பிள்ளை—5-வது விடுகதைக்கு எழுதியது சரி.

# முயற்சியும் தொழிலும்.

(திருக்குறல் வாக்கியம்)

1. விதிப்படி நடக்கும் என்றெண்ணி யாதொரு காரியத்திலும் முயற்சி செய்யாமலிருத்தலே வறுமையை அடைதற்கு முக்கிய காரணமாம்.

2. சாத்திப்படாத பொருளையடைய முயல்கின்றவன் மேன்மை யுடையவனாயினும் பேயர்களில் முந்தினவனாகக் காணப்படுவான்.

3. யாதொரு காரியத்தினிடத்தும் சோம்பலின்றி தக்க முயற்சி செய்பவனை வறுமை நெருங்குதற்கு அஞ்சும்; ஆதலால் சோம்பலுக்கு இடங்கொடாது முயற்சி செய்ய வேண்டும்.

4. மேலாகிய விரதங்களை இடையூறின்றி நடத்த முயல்கின்றவன் சிறியவனாக விருக்கினும் தவசி யெனப் பெயர் பெறுவான்.

5. பயிர் என்பது பயிற்சி, முயற்சி யெனவுங் கொள்ளப்படும். ஆதலால் பயிர் செய்வதில் இயற்றப்படும் முயற்சியே செல்வப்பேருக்கு முதற் குறியாம்.

6. உழவு முதலியவைகளில் வருத்தமுற்று இட்ட பயிர் பலனைக் கொடுக்குங் காலத்தில் சோம்பலால் தக்கபடி நடத்த அறியாதவன் தரித்திரத்தை அடைவான்.

7. எல்லாக் காரியங்களுக்கும் அவைகளாலடையும் பயனுக்கும் தெய்வகாரணத்தைப் பார்க்கிலும் புருஷகாரணமே மேலானதாகும். எப்படியெனில் ஒற்றைச் சக்கரத்தால் (தேர்) இரதம் நடவாத்தன்மைபோல் புருஷகாரணமில்லாமல் தெய்வ சங்கற்பத்தினால் ஒன்று முடியாது.

8. எள்ளும் அதற்குள் எண்ணெய்யும் பகவானால் உண்டாக்கப் பட்டிருந்தாலும் புருஷ காரணம் என்கிற முயற்சியினாலல்லாமல் எண்ணெய் வெளிப்படுவதில்லையே; ஆதலால் முயற்சியின்றி ஒன்றும் நிறை வேறாது. அஃதில்லாமல் சோம்பலுற்றவன் பயன்படான்.

9. முயற்சி யில்லாவிடில் கல்வியில்லை, கல்வி யில்லாவிடில் நற் புத்தியுமில்லை பராக் கிரமமுமில்லை. இவைகளில்லாவிடில் பொருளுமில்லை பெருமையு மில்லை சில வேளை பொருள் மாத்திரம் இருந்தாலும் பயன் படாது. ஆதலால் முயற்சி இல்லாவிடின் ஒன்று மில்லை என்பதற்கு அநுமானிக்க வேண்டுவதில்லை.

10. முயற்சியுள்ள சிங்கத்தையே மகா லக்ஷ்மி அடைகிறாள். தெய்வத்தினால் பாக்கியம் கொடு பட வேண்டுமென்று ஆலசியமாகிய சோம்பலும் அவிவேகமாகிய தெரியாமையுள்ள புருடர்கள் நினைக்கிறார்கள். ஆகையால் வைத்தியனிடத்தில் நம்பிக்கையை விட்டு சொந்தச் சக்தியினாலே முயற்சி செய்தும் ஒரு வேளை காரியம் சாதிக்கப் படாமற் போனால் குற்ற மென்ன வென்று ஒரு வித்துவான் உரைத்திருக்கிறார். அதை யோசித்தால் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

11. தெய்வத்தால் யாவும் நடக்கு மென்று முயற்சியைக் கை விட்டவன் கெட்டுப் போவான். புருஷ காரணமில்லாமல் தெய்வம் சித்திக்கிறதில்லை யென்பதை யறிந்தவனே புத்திமான்.

12. கஷ்ட தசையிலிருக்கும் ஒருவன் அக்கஷ்டத்தைப் பாராட்டாமல் பிரயோசனத்தைக் கொடுக்குந் தொழில் இன்னதென்றும், அதனிடத்து மனதைச் செலுத்தி முயற்சி செய்தால் பிரயோசனத்தை யடையலாகுமென்றும், புத்திக் கூர்மையால் பகுத்தறிந்து நடப்பானாகில், அவனுக்குச் செல்வமும் பெருமையும் ஏன் உண்டாகாமற் போகும் ? உண்டாவது சித்தமே.

# இந்திரஜித்.

## (முன் தொடர்ச்சி)

---

ஆம் "இப்படி நீர் நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா?"

"முடியும்" "இதோ இந்தப் படத்தைப் பாரும். வாத்தியாரென்று உம்முடன் பேசிக் கொண்டிருந்த அசாமி இவன் தானா?"

"ஸந்தேஹமென்ன".

உடனே ராணியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பேர் வழி எழுந்திருந்தான். அவரை ஒருவரும் அது வரையில் கவனித்ததில்லை.

கைதி "அந்த மனிதனைப் பாரும்".

செட்டியார் திரும்பி, அந்தப் பக்கமாய்ப் பார்த்தார். முகம் வெளுத்தது. அங்கம் அடையாளம் உயரம் பருமன் முக ஜாடை கண் மூக்கு எல்லாம் வாத்தியாரென்றே அவர் சத்தியஞ் செய்யலாம். ஒன்றுந் தெரியாமல் தவித்தார். ஜூரி மெம்பர்களும் சற்றுக் கலங்கினார்கள். உண்மை என்னவென்றால் வாத்தியார் வேஷம் எடுத்தபொழுது இந்த அசாமியைப் பார்த்து மனதில் வைத்துக் கொண்டே மாயாவி அதைப் போல் வேஷத்தைத் தயார் செய்தான். அதற்குள் ஜட்ஜி "அந்தப் படத்தை ஜூரிகளுக்குக் காட்டி, இங்கே கொண்டுவா" வென்றார்.

ஜூரிகளும் ஜட்ஜூம் அதை வெகு நேரம் உற்றுப் பார்த்தார்கள். தங்களுக்கு எதிரே நின்று கொண்டிருந்த குள்ள வாத்தியாரென்று அவர்களுக்குத் தோன்றிற்றே யொழிய கைக்கூட்டில் புன் சிரிப்புடன் கவலையற்று நிற்கும் மாயாவிக்கும் அதற்கும் எவ்விதத்திலாவது ஸம்பந்தமில்லையென்று யாருக்கும் தோன்றிற்று. செட்டியார் மூன்றும் பேஸ்து வைத்ததுபோல் அசடுவழிந்து கொண்டு நின்றார். எல்லோரும் அவரை வெறிக்கப் பார்த்தார்கள். நின்று கொண்டிருந்த வாத்தியார் உட்கார்ந்தான். கைதி வேறொரு படத்தை எடுத்து, கிரிமினல் வக்கீல் வாயடி அடித்து மிரட்டும் குரலுடன் "ஓய் வெள்ளையன் செட்டியார் வாள்! முதல் தடவை ஏதோ தவறி விட்டீர். இந்தத் தடவையாவது சரியாய்ச் சொல்லுவீரா? இந்தப்படத்திலிருக்கும் அசாமி யார்? நன்றாய் யோசித்துச் சொல்லு"மென்றான்.

செட்டியார் அதை வாங்கிப் பார்த்து, நன்றாய் யோசித்து கொஞ்சம் தயக்கத்துடன் "நீ சென்னையில் என்னிடத்தில் நவாபாய் வேஷம் பூண்டு

வந்த பொழுது இப்படி யிருந்தா" யென்றான். கோர்ட்டின் அதிகாரத்திற்குட்பட்டு நடந்த வியவஹார மாதலால் இந்தக் கேஸை ருஜூப்படுத்துவதற்கு இதையே ஆதாரமாய் போலீஸாரும் வக்கீல்களும் நம்பியிருந்தார்கள். ஆகையால் இந்த விஷயத்தைப் பற்றி செட்டியாருடைய ஸாக்ஷியம் நிலையாமலிருக்கவேண்டுமேயென்று அவர்கள் வயிற்றில் நெருப்புக்கட்டிக் கொண்டிருந்தார்கள்.

உடனே மாயாவியின் பார்வைக்குப் பக்கத்தில் தன் முகத்தைச் சௌக்கத்தால் சற்று மறைத்துக் கொண்டிருந்த ஒருவர் எழுந்து நின்றார். மாயாவி அவரைச் சுட்டிக் காட்டி "செட்டியார்வாள்! அதோ அந்த மனிதனைப் பாருங்கள், யாரென்று தோன்றுகிற" தென்றான். செட்டியார் திரும்பிப் பார்த்தார். வாயில் ஈ பூந்தது தெரியாமல் அப்படியே நின்றார். கையிலிருக்கும் படத்தையும் அந்த மனிதனையும் இந்திரஜித்தையும் மாறி மாறிப் பார்த்தார். ஒன்றும் தோன்றவில்லை. நவாபாக மாயாவி வேஷம் போடுவதற்கு முன்பு இந்தப் பேர்வழியே அச்சாக வைத்துக் கொண்டிருந்ததாய்த் தெரிந்தது. செட்டியார் விழிப்பதைப் பார்த்து, கைதி மெதுவாய்ச் சிரித்தான், ஜட்ஜ் அந்தப் படத்தை வாங்கி நன்றாய்க் கவனித்துப் பார்த்து எதிரே நிற்கும் அசாமியையும் கவனித்துப் பார்த்து தலையை அசைத்து புருவத்தை நெறித்து உதட்டைப் பிதுக்கினார். ஜூரியும் கடமைப்படி அவ்விதமே செய்தார்கள். செட்டியார் ஆரம்பத்திலிருந்த துணிவும் ஸந்தோஷமும் நிச்சயமும் அழிந்து, ஒன்றும் தோன்றாமல் தான் எங்கே நிற்கிறோம், என்ன செய்கிறோம் என்றதை மறந்து, கள் குடித்தவனைப் போலும் பிசாசு பிடித்தவனைப் போலும பித்தேறினவனைப்போலும் அங்கம் நடுங்கி வியர்த்துப் பேந்தப் பேந்த விழித்தார். கேஸ் செட்டியாருக்கு ஜயிப்பது ஸந்தேஹந்தானென்று கோர்ட்டில் கூடியிருந்தவர்களுக்குத் தோன்றிற்று.

கத்திரிக்கோல் பேர்வழிகள் தங்களுடைய குருநாதன் கேஸை நடத்தும் விதத்தையும் சாதுர்யத்தையும் கனவிலும் தங்களுக்குத் தோன்றாத யுக்திகளைக் காட்டுவதைக் கண்டு மெய்மறந்து, ஸந்தோஷத்தால் ஆரவாரித்தார்கள். ஜட்ஜ் உடனே கடுங்கோபங் கொண்டு, தன் டபேதார்களைப் பார்த்து "நீங்களென்ன இங்கே மீன் பிடிப்பதற்காக வந்திருக்கிறீர்களா? ஸர்க்கார் பணத்தை விழுங்கி ஏப்பம் விட்டு இங்கே எதற்காகத் திரிகிறீர்கள். சந்தடி செய்கிறவர்களை வெளியில் இழுத்து விடுங்கள். யாராயிருந்தாலும் தாக்ஷிண்யம் பார்க்கவேண்டியதில்லை. ஸர்க்காருக்கு ஒரு பயலால் ஆகவேண்டியதென்ன" வென்று கூச்சலிட்டார். உடனே கோர்ட்டுப் புலிகள் சத்தம் போடாமல் சும்மாக நின்று கொண்டிருந்த சிலரைப் பிடித்து, வெளியில்



தள்ளிவிட்டார்கள். தங்கள் மூலமாய் டிக்கெட் வாங்காமல் வந்த பேர்வழிகளாயிருக்கலாம்.

இந்திரஜித் சற்று முன்னே குனிந்து, வேறுவிதமாய் செட்டியாரைக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தான். செட்டியார்வாள்! ஒரு அசாமியை இன்னானென்று அடையாளம் கண்டுபிடிக்கும் விஷயத்தில் உம்மை நம்பியிருந்தால் அவன் முன்னுக்கு வந்து விடுவான். அது போனால் போகட்டும். உம்முடைய மற்ற சாக்ஷ்யத்தைச் சற்று கவனித்துப் பார்ப்போம். வயிர அட்டிகையை முதலில் எடுத்துக் கொள்ளுவோம். யாரோ ஒரு வாத்தியாரும் அவனுடைய மனைவியும் உம்முடன் சில காலம் சேர்ந்திருந்த பொழுது அவர்களிடத்திலிருந்து அந்த வயிரங்களை நீர் வாங்கினதுண்டா?

"உண்டு".

"அவை சூதுக் கல்லுகளென்று அவர்கள் முற்றிலும் நம்பியே அவைகளை உம்மிடத்தில் விற்றார்களல்லவா?"

"ஆம்" "அவை சூதல்லவென்றும் ஏராளமான தொகை விலையுள்ளவை யென்றும் உமக்குத் தெரியுமல்லவா?" "தெரியும்" 'அதை அவர்களிடத்தில் தெரிவித்தீரா?" "தெரிவிக்கவில்லை" உண்மையான விலைக்கு மிகவும் தாழ்ந்தவிலைக்கே அவைகளை வாங்கவேண்டுமென்று உமது கருத்தல்லவா?" "ஆம்" "முதலில் நீர் கேட்டபடி ரூபாய் 10-க்கு அவர்கள் அதைக் கொடுத்திருந்தால் நீ ஆக்ஷேபிக்காமல் வாங்கிக் கொள்வீரல்லவா?" "வாங்கிக்கொள்வேன்" "ஒரு பதார்த்தத்தின் தன்மையும் விலையும் தெரியாதவர்களிடத்தில் அவைகளை நன்றாய்த் தெரிந்த ஒருவன் அதைமட்டமென்றும் ஸ்வல்பவிலையே பெறுமென்றும் சொல்லி வாங்கினால் அது பெரிய மனுஷனுக்கு அழகென்றும் யோக்யமென்றும் உமக்குத் தோன்றுகிறதா" வென்றான்.

உடனே செட்டியாரின் வக்கீல் "இவ்விதமாய் குறுக்கு விசாரணை செய்யக்கூடாது நான் ஆக்ஷேபிக்கிறேன். வாதியின் ஸாக்ஷ்யத்திற்கும் இதற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. இது வெறும் தூஷணையே" யென்றார். அதைக்கேட்டு இந்திரஜித் அவருக்குத் தலைவணங்கி கோர்ட்டாரைப் பார்த்துத் திரும்பி, "இந்த வாதி எவ்விதத்திலும் நம்பத் தகாதவன். யோக்யனல்ல" வென்று கோர்ட்டாருக்கும் ஜூரிகளுக்கும் ருஜூப்படுத்திக் காட்டுகிறேன். ஒரு பானை சோற்றிற்கு ஒரு பருக்கை பத மென்றதுபோல் ஒரு வியவஹாரத்தில் மோசஞ்செய்தவன் மற்றவைகளிலும் மோசஞ்செய்வானென்று ஊஹிக்கலாமல்லவா? ஸாக்ஷியின் நாணயத்தையும் யோக்யத்தையையும பரீக்ஷித்துக் கூடியவரையில் குறைப்பதற்கு சட்டம் எனக்கு இடங்

கொடுக்கிறதென் றெண்ணுகிறேன். அவ்விஷயத்தில் கோர்ட்டாருடைய நோக்கத்தையும் தயவையும் எதிர்பார்க்கிறே"னென்றான்.

ஜட்ஜ் இப்படிச் சாதுர்யமாய் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டு கடுமை சற்றுக் குறைந்த, அப்படிச் செய்ய கைதிக்கு ஸர்வஸ்வதந்திரமும் உண்டு. லாயர்களின் உதவி அவனுக்கு வேண்டுமென்று நான் முதலில் எண்ணினது பிசகு. "என்ன செட்டியார்! ஜாக்கிரதையாய்ப் பதில் சொல்லுமென்று" கடுகடுத்தார்.

வெள்ளையன் செட்டியார் வாய் உலர்ந்து, முகம் சுண்டி, ஒன்றும் தோன்றாமல் பழையவழக்கத்தால் தலை வணங்கினார். வெகு தந்திரமாய் ஸாமர்த்தியமாய் கேள்விகளைக் கேட்டுக் கொஞ்சமாய் அவரிடத்திலிருந்து பதில்களை வாங்கி, விலையுயர்ந்த வயிரங்களென்று தெரிந்திருந்தும் அவைகளை சூதுக்கல்லின் விலைக்கு வாங்கினேனென்றும் தான் கோடீச்வரனாயிருந்தும் ஒரு ஏழைப் பள்ளிக்கூடத்து வாத்தியாரை ஏமாற்றி, ஆயிரக்கணக்காய் அடித்துக்கொள்வதில் யாதொரு பிசகும் பாபமும் தோன்றவில்லையென்றும் ஒப்புக்கொள்ளும்படி செய்தான்.

"எனக்கு ஒரு பதார்த்தத்தைப் பற்றி விசேஷமான விஷயங்கள் தெரிந்திருந்தால் அதை உபயோகித்து நான் ஏன் லாப மடையக்கூடாது. அதே வியாபார முறைமைக்கு விரோதமல்லவே" யென்று செட்டியார் தழுதழுப்பாய் சக்ஷியாடப் பார்த்தார். கைதியோ உடனே "நீங்கள் சொல்வது நியாயமான விஷயமே, தொழில் முறைமையில் அதை ஒருவரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஆனால் ஒன்று. கோர்ட்டார் கவனிக்கவேண்டும். ஒரு வாத்தியாரும் அவனுடைய மனைவியும் படிப்பில் நல்ல தேர்ச்சியை அடைந்து, ஏராளமான தனம் ஸம்பாதிக்கக்கூடிய நிலைமையில் இருக்கும்பொழுது வேண்டாமென்று விட்டு கேவலம் தேசாபிமானத்தாலும் ஜனங்களின் நன்மையையும் முன்னேற்றத்தையும் உத்தேசித்து, ஓர் கிராமத்தில் ஜனங்களுக்கு இலவசமாய்க் கல்வி கற்பித்து, அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்காகத் தங்களுடைய காலத்தையும் சக்தியையும் தத்தஞ் செய்யத் துணிந்தார்கள். இந்த வெள்ளையன் செட்டியார் அவர்கள் அதை நன்றாய் அறிந்தவர். அவர்களுடன் பழகி அவரைத் தங்களுடைய விருந்தினராய் வைத்துக் கொண்டிருந்தவர். அவர்கள் ஏழையென்பது இவருக்கு நன்றாய்த் தெரியும். பிரதிப் பிரயோஜனத்தை விரும்பாமல் பொது நன்மைக்காக உழைப்பவர்களென்றும் தெரியும். தன்னைப் பெரிய மனுஷ்யனென்று நினைத்தவர்கள் வயிர வியாபாரத்தில் முதன்மை பெற்ற இந்தச் செட்டியார் அவைகளைச் சூதுக் கல்லுகளென்று ஒப்புக் கொண்டதாய்



அவர்களுக்குத் தெரியும். இப்படி யிருக்க ஆயிரக்கணக்காய் பெருமானமுள்ள சாமானைப் பத்து ரூபாய்க்கு அவர்கள் கொடுத்திருக்கும் பக்ஷத்தில் இவர் வாங்கிக் கொள்ளத் தயாராயிருந்தார். உண்டா இல்லையா வென்று கேட்கவேண்டு"மென்றான். செட்டியார் அதை ஒப்புக் கொள்ளாமல் என்ன செய்ய முடியும்.

அடுத்தபடியாய் மரக்காயருடைய விஷயத்தை எடுத்துக் கொண்டு மாயாவி செட்டியாரைப் பார்த்து "தென்னாப்பிரிக்காவில் உமது கம்பெனியையும் மரக்காயருடைய கம்பெனியையும் ஒன்று சேர்ப்பதற்கு நீர் யோசித்த பொழுது, உமது நிலத்திலிருந்து மரக்காயருடைய நிலத்தில் தங்கச் சுரங்கங்களுள்ள ஓர் மலைப்பாறை வெகு தூரம் சென்றதென்றும் அதில் சிறிது பாகமே உமது எல்லைக்குள் இருந்ததென்றும் பெரும் பாகம் மரக்காயருடைய எல்லையில் பரவி யிருந்ததென்றும் உமது பாகத்தைக் காட்டிலும் அவருடைய பாகமே ஏராளமான விலைபெறக் கூடியதென்றும் உமக்குத் தெரியுமல்லவா? அப்படித் தெரிந்ததாலும் மரக்காயருக்கு இந்த ரஹஸ்யம் தெரியாதென்றதாலும் மாத்திரம் நீர் அவருடன் கூட்டுச்சேர நினைத்து எப்படியாவது அதை முடிக்க வேண்டுமென்று பிரஸ்தாபம் செய்தீரல்லவா? இது மோசக் கருத்தென்பதை நீர் மறுக்க முடியுமா?" வென்று அலைமேல் அலை மோதுவதுபோல் அடிமேல் அடி அடிப்பதுபோல் சரமாரியாய்ப் பொழிந்து செட்டியாரை திக்குமுக்காடச் செய்து, திணரவடித்தான்.

செட்டியார் பக்கத்து வக்கீல் முன்போல் ஆக்ஷேபித்தார். அவரை ஜட்ஜ் லக்ஷியஞ் செய்தாலல்லவா? திரும்பிப் பார்க்கக்கூடவில்லை "ஓய் செட்டியார் கைதி கேட்கும் கேள்விகள் சரியானவையென்று கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். தயங்காமல் வளர்த்தாமல் சுற்றாமல் பதில் சொல்லித் தீரவேண்டும். வேறு வழியில்லை. அப்படிச் செய்யாவிட்டால் அந்தக் கேள்விகள் உமக்கு விரோதமாய் அர்த்தஞ் செய்யப்பட்டு, முடிவாகுமென்பதை நீர் அறிய வேண்டியது ஜாக்கிரதை"யென்று உறுமினார். பாபம்! செட்டியார் என்ன செய்வார்! வேறு விதி யில்லாமல் யூபஸ்தம்பத்தில் கட்டின ஆட்டைப்போல் விழித்து மாயாவி கேட்டவைகளுக்கெல்லாம் அவனுக்கனுகூலமாயும் தனக்குப் பிரதிகூலமாயும் பதில் சொல்லிக் கொண்டே வந்தார். கோர்ட்டிலுள்ளவர்கள் கூடியவரையில் அடக்கமாகச் சிரித்தார்கள். அப்படியும் அது பெருஞ் சத்தமாயிற்று. ஜட்ஜ் கடு கடுத்து, சீறி டபேதார்களின்மேல் பாய்ந்தார். அவர்கள் நிரபராதிகளான ஜனங்களைத் தாக்கி, வெளியில் இழுத்தெறிந்தார்கள். ஜூரிகளும் ஜட்ஜும் தலையை அசைத்தார்கள்.

இப்படியே ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் கைதி அந்தந்த குற்றத்தைச் செய்தவன்தானல்லவென்றும் செட்டியார் பிறரை அயோக்யமான வழிகளால் ஏமாற்றிப் பணத்தையே பெரிதாய் எண்ணி நியாயாநியாயமில்லாமல் நடப்பவரென்றும் ஸ்தாபித்துக்கொண்டே போனான். செட்டியாரைச் சேர்ந்தவர்களின் முகம் சந்திரனைக் கண்ட தாமரையைப் போல் வாடிற்று. கைதியின் அபிமானிகள் சூர்யனைக் கண்ட கமலத்தைப்போல் முகமலர்ந்தார்கள்.

பிறகு வயிரஞ் செய்வதாய்த் தன்னையும் மற்ற வர்த்தகர்களையும் ஏமாற்றிக் கம்பெனிக்காரர்களுக்கும் பங்கு எடுத்துக் கொண்டவர்களுக்கும் ஏராளமான நஷ்டத்தை உண்டுபண்ணின குற்றம் விசாரணைக்கு வந்தபொழுது கைதி செட்டியாரைப் படுத்தாத பாடெல்லாம் படுத்தி விட்டான். பொய்யாய் வயிரங்களைச் செய்யும் அம்சத்தை ஒப்புக் கொள்ளாமலும் மறுக்காமலும் மையமாய் விட்டு, அந்த விஷயத்தில் செட்டியாருடைய நடத்தையையே மோசடியாயும் அற்பமாயும் எல்லோருக்கும் எடுத்துக் காட்டினான். "நீர் பல கம்பெனிகளுக்கு அத்யக்ஷரல்லவா?" 'ஆம்' "தென்னாப்பிரிக்காவில் உமக்குள்ள வயிரச் சுரங்கங்களின் விஷயத்தில் உமது கம்பெனியில் பலர் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்களல்லவா? 'ஆம்' அவைகளில் தனவான்களும் கனவான்களும் அநாதையான ஏழை பாமரர்களும் ஸ்வல்பச் சம்பளக்காரர்களும் பலருண்டல்லவா ?" "உண்டு" "அவர்கள் உமது வர்த்தகத்திறமையிலும் அநுபவத்தையும் கண்யத்தையும் முற்றிலும் நம்பியே அதிக பங்கெடுத்துக் கொண்டு, அவர்களுடைய யோக க்ஷேமங்களை நீர் கண்யமாய்க் காப்பாற்றுவீரென்று விசாரமற்றிருக்கிறார்களல்லவா?" "ஆம்" அவர்களுடைய பங்குகளில் ஏதாவது நஷ்டமானால் அதுவரையில அவர்கள் ஒவ்வொரு பைசாவாய் சேர்த்து வைத்த ஜீவாதாரம் போய்விடுமல்லவா?" "ஆம்" அவர்களுக்குப்பிறகு பிழைப்பதற்கு வழியுண்டா ? "இல்லை" அந்தத் துக்கம் தாங்காமல் அதோகதியாய்ப் பலர் மரணமடைவார்களல்லவா" "அடையலாம்" "தற்கொலை செய்து கொள்வார்களல்லவா?" எனக்கென்ன தெரியும் ! "ஓய் ! என்ன தாறுமாறாய்ப் பிதற்றுகிறீர். நீர் அந்த ஸ்திதியிலிருந்தால் உயிரை வைத்துக்கொள்வீரா !" "வைத்துக்கொள்ளமாட்டேன்" "ஆனால் மற்றவர்களைப் பற்றி மாத்திரம் அப்படிச் சொல்வதற்கு உமக்கு மனம் வரவில்லையோ. அந்தப்படி கொலையும் பழியும் பாவமும் உம்மால் ஏற்பட்டதல்லவா ! செட்டியார் மௌனமாயிருந்தார்.

கைதி "கோர்ட்டார் இதை கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். நான் முன்பு எச்சரித்தும் இவர் பதில் சொல்லாமலிருப்பது நமது சக்கிரவர்த்தியின் ஸ்தானத்திலிருந்து தர்மதுரையாய் நியாயஞ் செலுத்தும் இந்



தக் கோர்ட்டாரை அவமதிப்பதென்ற பெருங் குற்றமாகுமென்று இவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் பணச் செருக்கால் எதையும் செய்யலாமென்ற தைர்யத்தால் இப்படி மௌனம் சாதிக்கிறார்" ரென்று ஏற்கெனவே கடுகடுவென்றிருக்கும் நரஸிம்ம மூர்த்தியை தூபம் போட்டு கிளப்பி விட்டுடான். போராத வேளைக்கு செட்டியார் உளறிக் கொண்டு "வியாபாரமென்றால் பல தினுசும் உண்டு. அந்தத் தொழிலின் நியாயா நியாயமும் ஸாதாரணலௌகிக நடவடிக்கையும் நியாயாநியாயமும் வேறென்றார். இதைக் கேட்டதும் ஜட்ஜ் துள்ளிக் குதித்து "ஓய் செட்டியார்! கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில் உண்டு இல்லையென்று சொல்லும். நியாயத்தையும் அநியாயத்தையும் பற்றி உம்மை யார்காணும் கேட்டார்கள்? இருபத்தைந்து வருஷமாய் நியாயாதிபதியின் ஸ்தானத்திலிருந்து ஒரு அணு பிசகாமல் நியாயஞ் செலுத்தி வரும் எனக்குக் கேவலம் வட்டிச் சீட்டுப் போடும் நீர் தர்மோபதேசம் செய்ய வந்து விட்டீரோ! முதல் தடவை மன்னித்தேன். இனி சரியாய் நடந்து கொள்ளாவிட்டால் கோர்ட்டாரை அவமதித்த குற்றத்திற்காக அபராதமும் தண்டனையும் விழும். உஷார் வியாபாரமாம் தினுசாம் அயோக்யத் தனத்திலும் மோசடியிலும் பல தினுசுகளுண்டு. அப்படி பட்ட அயோக்கியர்களை நடத்துவதற்கு ஸாதாரணமான சட்ட திட்டங்கள் உதவா"தென்று எனக்கு நன்றாய்த் தெரியும். கைதியோ வக்கீலோ கோர்ட்டாரோ ஜூரிகளோ எந்தக் கேள்வை கேட்டாலும் பதில் சொல்ல கட்டாயப் பட்டிருக்கிறீர். மேல் நடக்கட்டு!" மென்றார். செட்டியார் கருடனைக் கண்ட பாம்பைப் போல் ஸப்தநாடிகளும் அடங்கி, தலை குனிந்து, ஆடாய் விளங்கினார்.

கைதி "நான் சொன்ன விஷயத்தை நீர் ஒப்புக் கொண்டதால் இந்தக் கேழ்வையைக் கவனித்துப் பதில் சொல்லும். பண்டிதரால் செய்யப்பட்ட ரத்னங்கள் மோசடியென்றும் அது அதி சீக்கிரத்தில் வெளியாகுமென்றும் அதினால் பயந்து அவசரப் பட்டுக் கம்பெனியிலுள்ள பங்குகளை விற்க வேண்டாமென்றும் தனக்கு அதனால் எவ்வளவு நஷ்டம் வந்தாலும் தான் விற்கப்போவதில்லையென்றும் எல்லாருக்கும் பல தடவைத் தெரிவித்தீரல்லவா?" "ஆம்" "உமது மைத்துனரையும் அப்படி விற்கக் கூடாதென்று எச்சரித்தாயல்லவா? "ஆம்" அப்படியிருக்க நீர் மாத்திரம் ஒருவருக்கும் தெரியாமல் அனேக பங்குகளை ஏராளமாய் விற்று பிறகு அந்தப் பொய் வெளிப்பட்டவுடன் பங்குகள் பழைய நிலைமைக்கு வந்ததால் ஆயிரக் கணக்காய் நஷ்டமடைந்ததுண்டா? செட்டியார் தயங்கினார். கைதி "கோர்ட்டார் இதை கவனிக்க வேண்டும்" மென்று சமயத்தில் வெடி வைத்தான். ஜட்ஜ் "பிடி அபராத" மென்றார், பாவம்! செட்டியார் திக்குப் பிரமை கொண்டு இன்னது சொல்லுகிறோ" மென்று தெரியாமல் "ஒருவன் தன

க்கு ஆபத்து வரும் பொழுது எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டு மல்லவா" வென்று பிதற்றி விட்டார். ஜட்ஜ் "அதைப் பிடித்துக் கொண்டார். அப்படியா உன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எல்லாருடைய கழுத்தையும் அறுக்கலா மென்று வேதஞ் சொல்லுகிறதோ? உம்மை நம்பி தங்களுடைய பொருளையும் உயிரையும் ஒப்பு வித்திருக்கும் ஏழை பாழை அநாதைகளையும் மண்ணை வாரிப் போட்டு விட்டு, உம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டு மென்று எந்த மஹான் உமக்கு உபதேசித்தார். வெகு நேர்த்தி" யென்றார். ஜூரிகள் சிரித்தார்கள். ஜட்ஜும் ஜூரிகளும் தமாஷ் செய்வதைக் கண்டு பொது ஜனங்கள் தைர்யங் கொண்டு கை கொட்டி சிரித்தார்கள். ஜட்ஜ் கோபத்தால் முகம் சிவக்க "டபேதார்! நான் சிரித்தால் எல்லோரும் சிரிக்கலாமென்று யார் சொன்னார். சத்தஞ் செய்கிறவர்களை வெளியில் இழுத்துக் கொண்டு போய் விடு. என்ன தாக்ஷிண்ய" மென்றார்.

இப்படி நாலு மணிகளாய் செட்டியாரைப் போட்டு தாருமாறாய் இழுத்து, அவர் வியர்க்க விறுவிறுக்க உதட்டைக் கடித்துக் கொண்டும் நாக்கால் நக்கிக் கொண்டும் கண் பஞ்சடைந்து, வாய் உலர்ந்து, மூர்ச்சையாய் கீழே விழத் தயாராயிருந்தார். உலகத்திலுள்ள எல்லாக் குற்றங்களையும் பாவங்களையும் அவர் செய்யக் கூடியவரென்று அங்கிருந்த முழுமூடனுக்கும் சிறு பையனுக்கும் தோன்றிற்று. இந்திரஜித் பரமயோக்யன் என்றும் அபாண்டமாய் பழி சாட்டப்பட்டானென்றும் கேஸை நடத்துகிறவன் அவனே யென்றும் செட்டியே கைதியென்றும் குற்றவாளி யென்றும் பார்ப்போர் நம்பும்படி யாயிற்று. செட்டியாரைச் சந்திக்கும் பொறை யாற்றிற்கும் கட்டி இழுத்ததில் அவருடைய மானமும் கண்யமும் அந்தஸ்தும் பவிஷும் தொலைந்து அவருடைய காசும் பணமும் கொஞ்சமேனும் பயன்படாமல் வரும் அல்க்கா மனிதனுக்கும் கீழ்க்கடையானார். வாத்தியாரை ஏமாற்றிக் கல்லுகளை வாங்கினதாகவும் மரக்காயரை ஏமாற்றி இரண்டு கம்பெனிகளையும் சேர்க்க முயன்றதாயும் வியாபாரிகளுக்குத் தெரிந்த ஸகல உபாயங்களையும் மோசங்களையும் செய்து, தான் லாபமடையப்பார்ப்பதாயும் மாயாவி ருஜுப்படுத்தி விட்டான்.

இவைகளை யெல்லாம் கவனித்துக் கேட்டுக்கொண்டு வந்த சின்னவர் ஒரு விஷயத்தில் ஸந்தோஷப்பட்டார். அதாவது தன் யோக்யதை இவ்வளவு திண்டாட்டத்தில் இருக்கும் பொழுது வயிற்றுப் பிழைப்புக்காக தன்னிடத்தில் குமாஸ்தாவாக வந்த ஒரு ஏழை ஏதோ தெரியாத்தனத்தால் ஸ்வல்பப்பிசகு செய்ததைப்பற்றி அவ்வளவு கடுமையாய் கவனிக்க மாட்டாரென்பதே.



பிறகு சின்னவரைக் கூட்டில் ஏற்றினார்கள். அதைப்பற்றி நாம் விவரமாய்ச் சொல்லவேண்டியதில்லை. பெரியவரைப் போல் அவ்வளவு மோசம் போகவில்லை. படங்களைக் கொண்டு அசாமியைக்கண்டு பிடிப்பேனென்று அவ்வளவு தைர்யமாய்ச் சொல்லாமல் கொஞ்சம் தயங்கி, ஜாக்கிரதையாய்ச் சொன்னார். ஆனால் குறுக்கு விசாரணையில் வெவ்வேறு விதமாய்த் துன்பப் படுத்தப்பட்டார். நவாப் விஷயத்தில் அவர் கமிஷன் வாங்கிக்கொண்ட விஷயத்தைப்பற்றி முன்னும் பின்னும் தாரும் மாறுமாய் இழுக்கப்பட்டார். அந்தத் தரகு வாங்கிக்கொண்டதற்கு அடையாளமாய் பாங்கியில் சின்னவர் கைப்பட ரசீதைக் கைதி ஆஜர் செய்து "இது உம்முடைய கையெழுத்தல்லவா" வென்றான். பாவம்! அவர் என்ன செய்வார். ஒரே பிதற்றலாய் உளறிக் கொட்டினார். விசாரணை முடிந்து கூட்டிலிருந்து, இறங்கிப் போய் உட்கார்ந்தவுடன் செட்டியாருக்கு மெத்த ஸந்தோஷம், 100-க்கு 10 விஷயத்தில் தன் மைத்துனனும் எக்கச் சக்கமாய் மாட்டிக்கொண்டு விட்டான். தன்னைச் சொல்வதற்கு இடமில்லையென்று அவருக்கு ஸந்தோஷம் தாங்கவில்லை. போலீஸ்காரருடைய உதவியும் ஸாக்ஷியமும் இல்லாவிட்டால் செட்டியார் கொண்டு வந்த கேஸ் பறந்து போயிருக்கும். ஆனால் அவர்களோ பழைய பெருச்சாளிகள். வெகு சாதுர்யமாய்க் கேஸை ஜோடித்து, ஒரு அணுக்கூட விடாமல் பந்தோபஸ்து செய்து வைத்திருந்தார்கள். இந்திரஜித்தும் மாயாவியும் லக்ஷ்மணனென்றவனே யென்று அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டபடியால் அவன் வெளியில் போகும் ஸமயமும் ஊரிலிருக்கும் ஸமயமும் மாயாவியின் போக்குவரத்துகளுக்கு வெகு தோதாய் ஒத்திருந்தனவென்று அவர்கள் வருஷம் மாதம் தேதி கிழமை நாள் நக்ஷத்திரம் மணி நிமிஷம் முதல் கணக்கிட்டு ஜோடித்துப் பஞ்சாங்கம் போல் வைத்திருந்தார்கள். அவனுடைய பல வேஷ காலங்களுக்கும் லக்ஷ்மணனுடைய தோற்றங்களுக்கும் மறைவுகளுக்கும் எவ்வளவு அழகாய் ஒத்திருந்தனவென்று எல்லோரும் ஆச்சர்யப்படும்படி நிரூபித்தார்கள்.

மேலும் கல்கத்தாவிலிருந்து வந்த பண்டிதர் கைதியைப் பல தினங்களாய் கவனித்துப் பார்த்து, மெழுகால் அவனைப்போல ஓர் உருவத்தைப் போல் அமைத்து செட்டியாருக்குக் கிடைத்த படங்களிலிருக்கும் அடையாளங்களின்படி மெழுகாலும் ரப்பராலும் அங்கங்கே ஏற்றக் குறைவுகளைச் செய்து, இந்தக் கைதியே கோவிந்தய்யராயும் காசி நாதராயராயும் மாற்றிக் கொள்வது ஸாத்யமென்று காட்டினார்கள். செட்டியார் அசட்டு நம்பிக்கையால் தாருமாறாய்ப் பிதற்றிக், கேஸை கெடுத்துவிட்ட ஸ்திதியில் போலீ

ஸார் வெகு தந்திரமாய் வேலை செய்து, கைதிக்கு விரோதமாய் வலுத்த கேஸை ஸ்தாபித்து விட்டார்கள்.

மூன்று நாட்கள் வரையில் விசாரணை நடந்தது. அவருடைய குறுக்கு விசாரணை ஆனபிறகு செட்டியார் கோர்ட்டில் தலையைக் காட்டவில்லை. தான் அங்கிருந்தால் தன் தாக்ஷிண்யத்திற்காக கேஸில் கைதிக்கு அதிகக் கெடுதி நேருமென்று வெளிப்படையாய்ச் சொல்லிக் கொண்டார். 100-க்கு 10 ஸங்கதியைப்பற்றி மூச்சு விடவில்லை. அன்று ராத்திரி போஜனஞ் செய்யும்பொழுது மாத்திரம் "எல்லோரும் தங்களுடைய லாப நஷ்டங்களைக் கவனிக்கவேண்டியது அவசியம். ஏழையானுலென்ன லக்ஷாதிபதியானுலென்ன முதலாளியாயிருந்தாலென்ன குமாஸ்தாவாயிருந்தாலென்ன" வென்றார். தன்னை மன்னித்து விட்டாரென்று சின்னவர் நிச்சயம் செய்து கொண்டு, வெகு ஜாக்கிரதையாய்க் கேஸைக் கவனித்து வந்தார். கைதியின் ஸமாதானம் வெகு சாதுர்யமாயிருந்தது. ஆனால் ஏறவில்லை. ஆரம்பம் முதல் முடிவு வரையில் இரண்டு செட்டியார்களும் தன்னை ஆள்மாறாட்டமாய் வேறு யாரோ வென்று நினைத்து இப்படிக்கேஸ் கொண்டு வந்திருக்கிறார்களென்று வாதித்தான். ஒரு படத்தைப்பார்த்து, அது வாத்தியாரின் படமென்று பெரிய செட்டியார் பிரமாணம் செய்தது சென்னை பிராட்வேயில் ஒரு கம்பெனியால் எடுக்கப்பட்டதென்றும் அதை எடுத்துக் கொண்டவர் கோதண்டபாணி வாத்தியாரென்றும் அந்தக் கம்பெனியாரின் கணக்குகளாலும் அந்த வாத்தியாரையே ஸாக்ஷியாய் விசாரித்ததாலும் ருஜுப்படுத்தினான். அவர் கைதியின் குடும்பத்திற்கு வெகு காலமாய் வேண்டியவரென்று தெரிந்தது. நவாபின் உருவத்தைப் போன்ற படம் ருத்திரப்பாவென்ற மைசூர் பாடகரைப்பார்த்து, எடுக்கப்பட்டதென்றும் அவரை ஸாக்ஷி போட்டு ருஜுப்படுத்தினான். மேலும் கோர்ட்டிலிருக்கும் ஜூரியும் முக்கியமான மனிதனுக்கு அவர் நன்றாய்த் தெரிந்தவரென்று வெளியாயிற்று. இப்படி ஒவ்வொன்றாய்க் கழித்துக் கொண்டு வந்து முடிவில் செட்டியாரின் மருமகளால் எடுக்கப்பட்ட இரண்டு படங்களைத் தவிர வேறு இந்திரஜித்தின் உருவப்படங்கள் இல்லையென்று எல்லோரையும் நம்பச் செய்தான். மற்ற இரண்டு படங்களைக் கண்டுபிடித்துக் கல்கத்தா பண்டிதருக்குக் கொடுத்திருந்தால் அவரும் மோசம் போயிருப்பார். ஆனால் தன்னை இரண்டு ஸாக்ஷிகள் மாத்திரம் நேரில் அடையாளம் கண்டு பிடித்ததாகச் சொல்லுகிறார்களென்றும் அவர்களில் ஒருவனுடைய ஸாக்ஷியம் நம்பத்தகுந்ததல்லவென்றும் தன்னுடைய படங்களல்லவென்றும் இந்தக் கேஸில் ஸம்பந்தப்படாத வேறு மனிதர்களின் படங்களென்றும் பூர்ணமாய் ருஜுவானவைகளைக் கைதியின் படமேயென்று ஒப்புக்கொண்டதால் அவருடைய ஸாக்ஷியம் நம்பத்தக்கதல்லவென்றும் வாதித்தான்.



ஜட்ஜ் கேஸின் விவரங்களை ஒழுங்கு படுத்தி, ஜூரிக்குச் சொல்லும் விதம் வெகு விசித்திரமாயிருந்தது. இருகக்ஷிக்காரர்களும் அதைக் கேட்டு வெட்கத்தால் தலைகுனிந்தார்கள். "வெள்ளையன் செட்டியார் வயிர வியாபாரத்தில் முதலானவர். கோடீஸ்வரன் மிகுந்த செல்வாக்குள்ளவன். ஆனால் இவைகளைக் கவனித்து, நியாய விரோதமாய் அவருக்கு ஸாதகமாயும் கைதிக்கு பாதகமாயும் அபிப்பிராயப்படக் கூடாது. செட்டியார் யோக்யனென்று சொல்லமுடியாது. ஆனால் அதைக் கொண்டு கைதி யோக்யனென்றெண்ணி குற்றவாளியல்லவென்று முடிவு செய்யக்கூடாது. ஒருவன் எவ்வளவு அயோக்யனாயிருந்தாலும் அவனையும் காப்பாற்ற வேண்டியது ஸர்க்காருடைய கடமையே. அவனுடைய மோசத்தைப்பற்றி கேஸ் வரும் பொழுது பார்த்துக் கொள்வோம். ஆகையால் அவன் அயோக்யனாயிருந்தாலும் கைதி யோக்யனா! அந்தக் குற்றத்தைச் செய்தானாவென்றே நாம் இப்பொழுது கவனிக்கவேண்டும். கைதியின்படிப்பையும் நாகரிகத்தையும் ஸாமர்த்தியத்தையும் கண்டு மோசம் போகக்கூடாது, பிறரை ஏமாற்றும் தொழிலை நன்றாய்ப் பயின்றவன். நீங்களும் அந்த வலையில் மாட்டிக்கொண்டு விட்டீர்கள். ஒரு போக்கிரி வேறொரு போக்கிரியை ஏமாற்றினால், இருவரும் போக்கிரிகள் தானேயென்று அவனை தண்டிக்காமலிருக்க முடியுமா? இந்த விஷயம் செட்டியாருக்கும் கைதிக்கும் மாத்திரம் ஸம்பந்தமல்ல. ஜனங்களுடைய உயிரும் பொருளும் ஒருவனால் கெடுவதாய் இருந்தால் அதைக் கண்டு பிடித்துத் தடுக்கும்விஷயத்தில் ஸர்க்காரே வாதி. ஒரு திருடனை மற்றொரு திருடன் குத்திக்கொன்றால் குற்றவாளியைத் தூக்குப் போடாமல் விடமுடியுமா? இப்பொழுது செட்டியார் லக்ஷக்கணக்கான சொத்து இருந்தும் ஒரு ஏழை வாத்தியாரை ஏமாற்றப் பார்த்தாரென்பதும் மரக்காயருடைய தங்கச் சரங்களைத் தான் அடித்துக் கொண்டுபோக வேண்டுமென்று தான் அவருடன் கூட்டாகச் சேர உபாயந் தேடினாரென்பதும் தகப்பனுக்கு விரோதமாய் மகனைத் தூக்கிவிட்டு, அவனுக்கு லஞ்சம் கொடுத்து தன் காரியத்தை ஸாதித்துக் கொள்ள நினைத்தாரென்பதும் தன்னை நம்பி யிருக்கும் எண்ணிறந்த ஏழை பாழைகளை ஏமாற்றித் தான் நஷ்டமடையாமலிருக்கும்படி ரஹஸ்யமாய்ப் பங்குகளை விற்றாரென்பதும் மெய்யே. ஆனால் அதைக்கொண்டு கைதி யோக்யனென்று எப்படி ஏற்படும். இந்திரஜித்தென்பவன் இவனே யானால் அகட விகட ஸாமர்த்தியமுள்ள ஜகப்புரட்டனென்று நிச்சயமாகிறது. நீங்கள் அந்த விஷயத்தை மாத்திரம் கவனிக்கவேண்டியது. செட்டியாரிடத்தில் பல தடவைகளில் பலவேஷம் பூண்டு வந்து, ஆயிரக்கணக்காய் ஏமாற்றினவன் இந்தக் கைதியே யென்று உங்களுக்கு நிச்சயமாய்த் தோன்றினால் அவன் குற்றவாளியென்று நீங்கள் தாராளமாய்ச் சொல்லி விடலாம்

அந்த விஷயத்தில் நீங்கள் போலீஸாரால் கொண்டு வரப்பட்ட கேஸைக் கவனிக்க வேண்டும். பல தடவைகளில் தான் மோசஞ் செய்ததாய் ஏற்பட்ட புகார்களைப் பற்றி ஒரு தடவையாவது நான் அவ்விடத்திலில்லை. அதே காலத்தில் வேறு இன்ன இடத்தில் ருஜுப்படுத்துவதற்கு கைதி கொஞ்சமேனும் பிரயத்தனஞ் செய்யவில்லை. அவன் இந்திரஜித்தாயில்லாவிடில் இந்த விதமாய் ருஜுப்படுத்துவது அவனுக்கு வெகு சுலபமல்லவா? இப்படி அடையாளம் கண்டுபிடிக்கும் விஷயத்திலுள்ள சந்தேஹமான அம்சங்களையும் அநுமான அம்சங்களையும் எடுத்துக் காட்டி இவைகளை யெல்லாம் நன்றாய்க் கவனித்து முடிவு செய்ய வேண்டிய" தென்று எச்சரித்தார்.

ஜூரிகள் தனியே யோசிப்பதற்காக வேறு அறைக்குள் சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும் வரையில் கோர்ட்டிலுள்ளவர்கள் கைதியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவனோ ஓர் மூலையில் இரண்டு ஸ்திரீகள் உட்கார்ந்திருப்பதையும் தேம்பித் தேம்பி அழுது கொண்டு கைக்குட்டைகளால் கண்களைத் துடைத்துக கொள்வதையும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். எதற்கும் தயாரா யிருந்தான். முகம் வாடவில்லை. வதங்கவில்லை. தலை குனியவில்லை. கண் மங்கவில்லை. தைரியமும் ஆண்மையும் நெஞ்சழுத்தமும் குறையவில்லை. என்ன யுக்தி. என்ன ஸாமார்த்தியம். ஒரு மனிதன் ஸாமான்யமான இரண்டு பெண் பிள்ளைகளின் ஒத்தாசையாய் என்ன வேலை செய்துவிட்டான். தேச தேசத்து அதிகாரிகளும் போலீஸாரும் துப்பறியும் டிபார்ட்மெண்டுகளும் ஆள் கட்டும் செல்வாக்கு தனமும் அதிகாரமும் எதிர்த்து நிற்க அவைகளைத் துரும்பாயெண்ணி, தடவைக்குத் தடவை ஏமாற்றி வைத்த குறி தவறாமல் தன் காரியத்தை நிறை வேற்றி ஜயபேரி அடித்திருந்தானல்லவா? ஒரு மனிதனுடைய புத்தி என்ன அபாரமான வேலையைச் செய்து விட்டது. என்றைக்காவது ஒரு நாள் தான் அகப்பட்டுக்கொண்டு இந்த கதிக்கு வருவானென்று அவனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் அதை லக்ஷ்யஞ் செய்யாமல் தன் நல்ல காலத்தையும் அதிருஷ்டத்தையுமே நம்பி, சக்கிரம் சுற்றுகிற வரையில் சுற்றட்டுமென்று ஸுகத்தையும் துக்கத்தையும் லாபத்தையும் நஷ்டத்தையும் ஸமமாய் நினைத்து அநுபவிக்கும் பரம வேதாந்தியாயல்லவா தேறிவிட்டான்.

அதற்குள் ஜூரிகள் ஒவ்வொருவராய் மெதுவாய் கோர்ட்டிற்குள் வந்தார்கள். ஒருவரும் பெருமூச்சு விடவில்லை. ஜட்ஜின் குமஸ்தா அவர்களைப் பார்த்து வழக்கப்படி "கூட்டிலிருக்கும் கைதி குற்றவாளியா அல்லவா உங்களுடைய அபிப்பிராய மென்ன" வென்றான்.



"அவன் குற்றவாளி யென்றே அபிப்பிராயப்படுகிறோம். "பிராதில் கண்ட எல்லாக் குற்றங்களையும் செய்திருக்கிறானென்று நிச்சயிக்கிறீர்களா?" பிராதில் கண்ட குற்றங்கள் யாவற்றையும் செய்திருக்கிறானென்று எண்ணுகிறோம்.

அதைக் கேட்டவுடன் ஓர் மூலையிலிருந்த பெண்களிருவரும் வாய் விட்டழுதார்கள்.

ஜட்ஜ் நரஸிம்ஹாசார்யர் வெகு கடுமையான குரலுடன் கைதியைப் பார்த்து, "இந்தக் கோர்ட்டார் விதிக்க வேண்டுமென்று உத்தேசிக்கும் தண்டனையைக் குறைப்பதற்காக நீ ஏதாவது சொல்லப்போகிறாயா?" வென்றார்.

கைதி சற்றுத்தயங்கி, "ஒன்றுமில்லை. இது நானே செய்து கொண்ட காரியம். தெரிந்தே வருவித்துக் கொண்ட அனர்த்தம். ஆனால் ஒரு விஷயம். எனக்கு அத்தியந்தம் பிரியமானவர்களும் என் உயிருக்குயிராயிருக்கும் மனிதர்களின் க்ஷேமத்தையும் உயிரையும் காப்பாற்றி யிருக்கிறேனென்று நினைக்கும்பொழுது சற்று ஆறுதலுண்டாகிறது. நான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறேன். கோர்ட்டார் விதிக்கும் தண்டனையை வருத்தப்படாமல் புகார் செய்யாமல் சாந்தமாய் ஒப்புக்கொண்டு அநுபவிப்பேன். ஒரு விஷயத்தை நினைக்கும்பொழுது மாத்திரம் எனக்கு வருத்தமுண்டாகிறது. நான் மோசக்காரனென்பதில் ஸந்தேஹமில்லை; ஆனால் என்மேல் குற்றஞ்சாட்டி என்னை தண்டனைக்குக் கொண்டுவந்த கனம் பொருந்தின வெள்ளையன் செட்டியாரும் மோசக்காரரே. எனக்கும் அவருக்கும் பேதமென்னவென்றால் நான் சில்லரை இனங்களில் மோசஞ்செய்தவன். அவர் லக்ஷக்கணக்காய் மோசஞ்செய்தவர். செய்துகொண்டிருப்பவர். செய்யப்போகிறவர். நான் அவர் ஒருவரையே ஏமாற்றினேன். அவரோ ஆயிரக்கணக்கான ஜனங்களையும் கவர்ன்மெண்டுகளையும் அதிகாரிகளையும் தனவான்களையும் ஞானவான்களையும் மோசஞ் செய்வதையே தொழிலாகக் கொண்ட விருதம் பூண்டவர். மோசஞ்செய்தால் அவருக்கு யாதொரு நஷ்டமுமில்லை. எனக்கோ சௌக்கியமுண்டு. அவர் ஏமாற்றின ஜனங்களுக்குச் சொல்லமுடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவு குடிகள் கெடுமோ, எவ்வளவு கொலைகள் விழுமோ, எவ்வளவு வயிறுகள் எறியுமோ, எவ்வளவு மனதுக்கள் நோகுமோ. யாருக்குத் தெரியும். மேலும் நான் யோக்யனென்று சொல்லிக்கொண்டு திரியவில்லை. அவரோ தர்மாவதாரமென்றும் ஸத்ய ஸந்தனென்றும் நெருப்புத் துண்டமென்றும் லோகமெங்கும் பறையடித்துக்கொண்டு பசுவின் முகத்தையுடைய புலிபோலும் ருத்திராக்ஷப் பூனைபோலும் ஆஷாடபூதிபோலும், பொன்மானின் உருவமெடுத்த மாரீசனைப்போலும் ஸன்யாஸி வேஷம்

பூண்ட இராவணனைப்போலும் புல்லால் மூடப்பட்ட பாழும் கிணற்றைப்போலும் சந்தனத்தைப்போலும் குளிர்ந்த வார்த்தையையும் சந்திரனைப்போல் பிரஸன்னமான முகத்தையும் ஆலா ஹலவிஷத்தைப்போன்ற ஹிருதயத்தையும் நரியைப்போன்ற வஞ்சகத்தையும் ஆபரணங்களா யுடையவர். ஸ்வல்ப குற்றவாளியான நான் கைதியின் கூட்டில் நிற்கிறேன். லோகப் புரட்டனான அந்த மஹா வஞ்சகாசார்யரோ ஸாக்ஷிக்கூட்டில் இருக்கிறார். குற்றத்திற்குத் தகுந்த நியாயமும் தண்டனையும் பக்ஷபாதமில்லாத தங்களுடைய கோர்ட்டிலும் ஏற்படவில்லை. பெரிய போக்கிரியான அவருக்குக் கோடிக் கணக்கான ஐச்வர்யமும் போக போக்யங்களும் கனதனக வஸ்துவாகனாதிகளும் மாளிகைகளும் மோடார்களும் யாத்திரைக் கப்பல்களும் சட்டசபையில் பதவியும் ஸர்க்காரால் பல கௌரவ மெடல்களும் மேல் விழுந்து கிடக்கின்றன. எனக்கோ அதே ஸர்க்காரால் கட்டப்பட்ட வெறும் கட்டடமும் பாதுகாப்பதற்கு காவலர்களும் ஆஹாரம் வியவஹாரம் நித்ரை முதலியவைகளை அளவுக்கு மிஞ்சாமல் ஸுகாதார முறைப்படி அந்தந்த வேளைகளில் கொடுப்பதற்கு அதிகாரிகளும் வைத்தியர்களும் வியாதியில்லாமல் சோம்பலில்லாமல் உசிதமான தேஹப்பயிற்சிக்கு வேண்டிய வேலைகளும் வணக்கத்தையும் வைராக்யத்தையும் கொடுக்கக்கூடிய உடையும் அலங்காரமும் ஸம்ஸாரமென்ற விலங்கிலிருந்து எப்பொழுது விடுபடுவோமென்பதை மறவாதிருக்கும்படிக்கும் கருணா மூர்த்தியான கடவுளையே எப்பொழுதும் த்யானஞ் செய்யும்படிக்கும் ஞாபகக்குறியாய் விலங்கும் ஏகாந்தமாய்ப் பிறருடைய உபத்ரவமில்லாமல் தத்வ ஆராய்ச்சியும் வேதாந்த விசாரமும் செய்வதற்குத் தனி அறையும் ஏற்பட்டிருக்கின்றன, இவ்விரண்டில் எது நியாயம் எது அநியாயம் எது உத்தமம் எது அதமம்” மென்று ஓய்ந்தான்.

ஜட்ஜ் அவனைக் கடுமையாய்ப் பார்த்து, தீர்ப்புச் சொல்வதற்கு ஏற்பட்டிருக்கும் உடுப்பைத் தரித்து; லக்ஷ்மணமுதலி யென்ற பெயருள்ள குற்றவாளியே. கடவுள் உனக்கு கிருபை கூர்ந்து பால்யத்தையும் ஆரோக்யத்தையும் தேஹபலத்தையும வனப்பையும் கூர்மையான புத்தியையும் சாதுர்யத்தையும் மனோதைர்யத்தையும் மேலான படிப்பையும் தடையற்ற யுக்தியையும் அருளியிருக்கிறார். இவைகளை நீ நியாயமான மார்க்கத்தில் உபயோகித்திருந்தால் கஷ்டப்படாமல் காலக்ஷேபம் செய்யலாம். அதிருஷ்டம் வாய்த்தால் பெரும் புகழும் ஸுகமும் செல்வமும் ஆக்ஷியும் அதிகாரமும் கிடைத்திருக்கும். அப்படிச்செய்யாமல் நியாயாநியாய விவேகத்தைப் பூர்ணமாய் உடைத்தாயிருந்தும் நல்ல வழியைவிட்டு கெட்ட வழியை வேண்டுமென்றே அவலம்பித்து, பிறரை மோசஞ்செய்வதில் உன் சக்திகள் யாவையும் அடிமைப் படுத்தினாய். பாப புண்யமில்லாமல் கட்டுக்காவலுக் கடங்காமல் பிறரின் ஸுகதுக்கத்தைக் கவனிக்காமல் தன்னயத்தையும் தற்புகழ்ச்சியையும் பெரிதாய் எண்ணி, மனம்போனபடி யெல்லாம் நடந்தாய். நீயும் ஒரு விதத்தில் பலருடைய மதிப்பையும் புகழையும் பெற்றாய். இது வரையில் இஷ்டப்படி போக போக்யங்களை அனுபவித்துக்கொண்டு ஸந்தோஷமாய் காலங்கழித்து வந்தாய். தேசத்து ஜனங்களுக்குத் துன்பம் நேராமல் அவர்களைக் காப்பாற்றி அவர்களுடைய க்ஷேமத்தையும் சௌக்கியத்தையும் விருத்திசெய்வதற்கே ஏற்பட்டிருக்கும் சர்க்காரின் பிரதிநிதியான நான் இன்னும் நீ ஜனங்களை அவமதித்துக் கேலி செய்து ஏமாற்றி உபத்திரவிக்கும்படி விடக்கூடாது. இந்தத் தேசத்துச் சட்டங்களை நீ நன்றாய்ப் படித்து நியாயவாதஞ் செய்யப் பயின்று நேர்மையை ரக்ஷிக்கவும் அக்கிரமத்தைச் சிக்ஷிக்கவும் முதன்மையாய் நின்று வேலை செய்ய வேண்டிய நீயே, நியாயமாய் வக்கீல் தொழில் செய்துவந்து என் ஸ்தானத்திலிருந்து நியாயஞ்செலுத்த வேண்டிய நீயே இப்படி மனப் பூர்வமாய்த் தெரிந்தே வேண்டுமென்றே செய்த குற்றம் இன்னும் கொடுமையானது. அறியாதவன் இதைச் செய்தால் அவனுக்குக் கிடைக்கும் தண்டனையைக் காட்டிலும் உனக்குக் கடுமையான தண்டனையை விதிக்க நியாயமுண்டு. ஆகையால் உன்னை 14 வருஷங்கள் வரையில் கடுங்காவலில் வைக்கும்படி இந்தக் கோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்களென்று முடித்தார்.



கைதி சற்றும் கலங்காமல் தைர்யத்தை இழக்காமல் முகம் வாடாமல் தலைவணங்கி, கோர்ட்டாருக்கு வந்தனஞ்செய்தார். உடனே அவர் பார்வை ஓர் மூலையிலிருந்த இரு பெண்களின் மேல் விழுந்தது. தீர்ப்பைக் கேட்டவுடன் அவர்கள் கோவென்றலறி, மூர்ச்சையால் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு கீழேவிழுந்தார்கள். அவர்களை டபேதார்கள் மெதுவாய் வெளியில் கொண்டுபோனார்கள். கோர்ட்டு கலைந்தது. அங்குள்ள எல்லோருக்கும் கைதியிடத்தில் அபிமானமும் அவரைச் சேர்ந்த பெண்களிடத்தில் அளவற்ற அனுதாபமும் செட்டியாரிடத்தில் அதற்கு மிஞ்சின வெறுப்பும் கோபமும் தோன்றின. ஒரு ஸமாசாரப் பத்திரிகை விற்கும் பனிபன் எல்லோரும் கேட்கும்படி உறைந்து தன் தோழனைப்பார்த்து, “ஏலே! சம்முகம் இந்தச் செட்டிப் பயல் அகப்பட்டுக் கொண்டு மண் தூக்கினால் நன்றாயிருக்கும். அந்த இந்திரஜித் பேர் வழி பலே கைகாரன் அவனை ஜெயிலில் அடைப்பது எல்லோருக்கும் பெருத்த நஷ்ட” மென்றான்.

செட்டியார்கள் ஸகுடும்பத்துடன் தென்னாப்பிரிகாவிற்குப் போய்விட்டார். வெகு காலம் வரையில் சென்னையில் தலை காட்டவில்லை.

## பகவத் கீதா வாசகம்.

(முன் தொடர்ச்சி)

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார்:—

55. பார்த்த! (ஒருவன்) தானாக ஆத்மாவிடத்தே சந்தோஷித்திருப்பவனாய், மனத்திலுள்ள ஸகல ஆசைகளையும் எப்பொழுது தள்ளி விடுகிறானோ, அப்பொழுது ஞானம் நிலைத்தவன் எனப்படுகிறான்.

56. துக்கங்களில் நோந்திடாத மனத்தினனாய், சுகங்களில் ஆசையற்றவனாய், (பொருள்களின் மேல்) பற்றும் பயமும் கோபமும் நீங்கப் பெற்றவனாய் இருப்பவன், நிலைத்த ஞான முடையவன் முனிவன் எனப்படுகிறான்.

57. எவன் எங்கும் பற்றில்லாதவனாய், நல்லதும் தீயதுமான அதைப் பெற்று மகிழ்வுறானோ வெறுப்புறானோ, அவனது ஞானம் நிலை பெற்றது.

ஆமை (தன்) அவயவங்களை எல்லாப் பக்கங்களினின்றும் (உள்ளே அடக்கிக் கொள்ளுமாறு போல, இவன் எப்பொழுது விஷயங்களினின்றும் இந்திரியங்களை அடக்கிக் கொள்ளுகிறானோ (அப்பொழுது) அவனுடைய ஞானம் நிலைத்தது.

59. உணவில்லாத மனிதனுக்கு ரஸத்தைத் தவிர விஷயங்கள் ஒழிகின்றன. பரம் பொருளைக் கண்ட பின்பு, இவனுடைய ரஸமும் [அவாவும்) ஒழிகின்றது.

ஏனெனில், புத்திசாலியான புருஷன்(தன் இந்திரியங்களை அடக்க முயல்கின்றனனாயினும், கௌந்தேய! கொந்தளிக்கும் இயல்புடைய இந்திரியங்கள் மனத்தை வலிய கவர்ந்து கொண்டு போகின்றன.

61. (அவன்) அவற்றை யெல்லாம் அடக்கி, என்னிடத்தே ஈடுபட்டவனாய் அமைந்திருக்க வேண்டும். இந்திரியங்கள் எவனுக்கு (த்தன்) வசத்தில் இருக்கின்றனவோ, அவனுக்கு ஞானம் நிலைத்தது.

62. விஷயங்களை நினைக்கும் புருஷனுக்கு அவற்றின் மேல் பற்று உண்டாகிறது: பற்றினின்றும் ஆசை உண்டாகிறது: ஆசையினின்றும் கோபம் உண்டாகிறது.

# கதாரத்னாகரம்

20 OCT 1921

1921—ஆகஸ்டு

## அட்டவணை


| | | |
|---|---|---|
| 1 | கடவுள் வணக்கம் | |
| 2. | தமிழ்மொழி தனிமொழி | 97 |
| 3. | திருவாசகம் | 100 |
| 4. | பெண்கள் பகுதி | 103 |
| 5. | இந்திய மாதா | 107 |
| 6. | வினா விடைகள் (கவி) | 108 |
| 7. | அன்னிரோஸ் (கதை) | 109 |
| 8. | விடுகதைகள் | 116 |
| 9. | பழமொழிகள் | 116 |
| 10. | பகவத் கீதா வாசகம் | 117 |
| 11. | கடிதங்கள் | 119 |
| 12. | வியாபாரம் | 120 |
| 13. | இரத்தினமாளிகை | 121 |
| 14. | பிரபஞ்ச விலாசம் | 136 |


பத்திராதிபர் நாவலிஸ்டு எம். ஏ. நெல்லையப்பர்.

### புதிய சந்தா நேயர்களுக்கு

நமது கதாரத்னாகரம் மூன்றாவது தொகுதி வேண்டுமென்று அநேகர் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். 1920. நவம்பர் மீ முதல் தொடர்ந்த நாவல்கள் ஆரம்பம் செய்திருக்கிறபடியால் அந்த மாதத்திய—அதாவது 6-வது சஞ்சிகையிலிருந்து 12-வது சஞ்சிகை வரை ஆக 7-ம் கிடைக்கும்.

7 சஞ்சிகைகளின் விலை ரூ 1-4-0

மானேஜர்,

"சுதேசமித்திரன்" ஆபீஸ், சென்னை.

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்.

எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி

ஒருவனே போற்றி யொப்பி லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் றனிமை தீர்த்தே

தீர்ந்தவன் பாய வன்பாக் கவரினு மன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்மை யாட்கொண் டருளிடும் பெருமைபோற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாத நாயேற் கருளிட வேண்டும் போற்றி

போற்றியிப் புவன நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற மாகிநீ தோற்றமில்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்க ணின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே

புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொடென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக வன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக வங்க ணாள புங்க மான போகமே.

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி யின்பமும்
ஏகநின் கழலிணை யலாதி லேனெ னெம்பிரா
னாகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே
யாக வென்கை கண்க டாரை யாற தாக வையனே.

திருவாசகம்.



சுப முகூர்த்தம்: நல்ல சமயம்.

புத்தகத்திலும் ஓர் புதுமை

அதிர்ஷ்ட முள்ளோர்க்கே இந்நூல்

# வியாபார தந்திரம்.

**வர்த்தகத்தைப் பற்றிய விரிவான நூல். தற்காலத்துக்கு அவசியம் தேவையானது. இது வரை தமிழ் நாட்டில் இத்தகைய நூல் வரவில்லை யெனபது அநேகருடைய சித்தாந்தம். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய சிறந்த நூல்.**

நம் பாரத நாடு விடுதலையடைந்து ஸ்வராஜ்யம் பெறுவதற்கு தொழிலும் வியாபாரமும் என்று இந்நூலில் நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. படிப்பவர் உன்னத நிலையை அடைவார் என்பது திண்ணம்.

முதற்பகுதியில் இந்தியமேதாவிகளாகிய ஸ்வாமி இராமகிருஷ்ணர், விவேகானந்தர், கோபால கிருஷ்ண கோகலே, கவீந்திர தாகூர், ஜி. சுப்பிரமணிய அய்யர், மாளவியா, லோகமான்ய திலகர் மகாத்மா காந்தி முதலானவர்களின் வியாபாரத்துக்கு அநுசரணையான மேற்கோள்கள் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இங்கிலிஷ் குறிப்புகள் கவனிக்கத்தக்கவை.

இரண்டாம் பகுதியில், தொழில் அபிவிர்த்திக்கும், வியாபாரத்துக்கும் சாதகமான அநேக மார்க்கங்கள உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கப்பட்டிருக்கின்றன:

மேலும் வியாபாரத்துக்கான தத்துவங்களை விவரித்து கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு நடந்து கொள்ள வேண்டிய வழிகளையும் படிப்போர் மனதில் பதியும்படியாக எழுதப்பட்டிருக்

கிறது. படிப்பதற்கு ஸ்வாரஸ்யமாயும் புதிய ஊக்கம் தரத்தக்க தாயும் அமைக்கப்பட்டிருக்கிறது.

மூன்றும் பகுதியில் தமிழ் நாட்டின் சிறப்பும், திருக்குறளில் முயற்சியும் தொழிலும் என்ற அத்தியாயத்தை 25 வாக்கியங்களாகவும், தொழில் துறை முதலிய விஷயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

இன்னும் விசேஷமாக 'ஏழை பணக்காரனுகும் வழி' என்பதைப்பற்றி வெகு விஸ்தாரமாக எழுதப்பட்டு சில லகுவான கைத்தொழில் முறைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கஷ்டப்படுவோரை நல்ல நிலமைக்குக் கொண்டு வருவது.

| | | |
|---|---|---|
| கிளேஸ் பேப்பரில் சுத்தப் பதிப்பு. | எளிய நடையில் எழுதப் பெற்றது. | அழகான சுமார் 22 படங்களுடன் |

விலை விபரம்:—ஒரு பிரதியின் விலை ரூ. 1—8.

☞ கதாரத்நாகரம் சந்தா நேயர்களுக்கு விலை ரூ. 1—4.

வி. பி. செலவு அணு 7.


இதுவரை ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள ஆர்டர்களுக்கு புத்தகங்கள் அனுப்பப்பட்டு வருகிறபடியாலும், மென்மேலும் ஆர்டர்கள் வந்துகொண்டிருப்பதாலும் முந்திக் கொள்ளுங்கள்.

இன்றைக்கே ஆர்டரை அனுப்பி விடுங்கள்.

"சுதேசமித்திரன்" ஆபீஸ்,
தபாற் பெட்டி 126, சென்னை.



Printed at the "Swadesamitran" Power Press, Madras.



800 009


கடவுள் துணை


KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM


ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்


| Vol. 4. தொகுதி 4. | August, 1921 துன்மதிஞு ஆவணிமீ | No. 3. பகுதி 3. |
|---|---|---|


# தமிழ்மொழி தனிமொழி

தமிழ் என்ற சொல்லேதான் தனிமொழி யென்றும், தன் சிறப்புக்கோர் அறிகுறியாக தன்னுடைய சிறப்பெழுத் தோன்றுகோத்துள்ள தென்றும், தொன்று தொட்டு வழங்கும் மொழியென்றும், வெள்ளிடை மலைபோல் விளங்கப் பெற்றும் ஆரியத்தின்வழி மொழியென்றும், வடமொழியிலக்கணமே தமிழுக் குரியதேயன்றி பிறிதில்லை யென்றும் பிறழக் கூறி இடர்ப்படுவர் பலர். யானைபார்க்கவும் கண் வெள்ளெழுத்துப் போலும். அவருடைய அறிவு என்னவாறு! பண்டைக்காலத்தில் அவர் மயங்கினரென்றால் தற்காலத்திலுள்ள செந்தமிழ்ச் செல்வர்

களிலுஞ் சிலர் மொழிச் சரிதத்தில் அவ்விஷயம் மலிந்துகிடந்தும், அங்கைக் கனிபோல் விளங்கிக்கிடந்தும் அறிகின்றிலர்.

தனிமொழி யெனவே தனித்து நிற்கும் மொழியென்றும், எப் பாஷையினுடனும் சேர்க்கப்படுவது முடியாதென்றும் பொருள் படும். ஆகவே தமிழ் மொழியில் மற்றெப்பாஷையிலுங் காணப் பெறாத சில சிறப்பியல்புகள் அமைந்து கிடக்கின்றன வென்பது நாம் அறிகிறோம். உண்மையில் அச் சிறப்பியல்புகள் கிடப்பின், அதைத் தனிமொழியென்றே கூறவேண்டும். அச்சிறப்புகள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி முதலிய ஐவகையிலக் கணங்களா லாக்கப்பட்ட மொழியின் ஒவ்வொரு உறுப்பிலாவது அல்லது சில உறுப்புகளிலாவது அமைந்து கிடத்தல் வேண்டும்.

எழுத்து வகையில் மற்றப் பாஷைகளில் காணப்பெறாத சில எழுத்துகள் தமிழில் காணப்பெற்றுள்ளன. அவை ற, ன, ழ, ஒ, என நான்கு. அவை திரிந்தாவது திரியாமலாவது வேறு பாஷை யில் காணப்பெற்றாரில்லை. ற, ன, ழ என்ற மூன்றெழுத்துக்களை வேறு அவ்வவ் வொலியுள்ள எழுத்துக்கள் தமிழில் உள்ளமையால் அப்பெயர் பெற்ற சிறப் பெழுத்துக்களென கூறுவர் இலக்கண நூலார். தவிர நெடுங் கணக்கில் எல்லா வெழுத்துக்களும் முதலில் கூறப்பட்டு இறுதியில் மூன்று சிறப்பெழுத்துக்களும் வைக்கப்பட் டுள்ளன.

இனிச் சொல்லோ, ஏனைய பாஷையின் தன்மையைப் பெறுவ தோடு தனிச்சிறப்புத் தன்மையை தமிழில் உடைத்து. அதாவது சொற்களெல்லாம் ஒட்டுச் சொற்களே. ஒட்டுச் சொல்லென்று லென்ன வெனின், பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகார மென முதலிய ஆறு உறுப்புகளும் ஒன்றோ டொன்று ஒட்டிவருமே. தவிர திரிந்தாவது கெட்டாவது விகாரப்பட்டாவது வராது. உதாரணமாக, படித்தனன் என்ற சொல்லை யெடுத்தால் 'படி' யென்ற சொல்லடியாகப் பிறந்து இடைநிலையும் சாரியையும் சந்தியும் விகுதியும் சேர்க்கப்பட்டு முடிவுபெற்றது. ஏனைய பாஷைகளிலோ ஒரு சொல்லடி யினிமித்தம் வந்த சொல் உறுப்புகள் சேர்க்கப்படுவ



தற்குப் பதிலாக வேறு சொல்லாகவும், அச் சொல்லினடியாகப் பிறந்ததோ வென்று சந்தேகிக்கும்படிக்கும் வருவதாகும்.

தவிர, சொல்லினுடைய பொருளின் காரணமின்றி முடிவை வைத்து ஆண்பாற் சொல்லென்றும் பெண்பாற் சொல்லென்றும் சொல்லுவர் வடநூலார். ஆனால் தமிழிலோ சொல்லும் பொருளும் ஒன்றை யொன்று தழுவியே நிற்பன. பொருளின் காரணமாக இடம், காலம், திணை, பால் முதலிய விகாரங்கள் பிறப்பன.

தவிர தமிழுக்கே உரியதென்றும், ஆசங்கைக் கிடமில்லா மலும், தெளிவாயும் தமிழுக்குச் சிறப்பாயுள்ள தென்று முள்ள ஓரியல்பை நம்பாஷை பெற்றுள்ளது. எல்லாப் பாஷைகளுக் கும் இலக்கணம் நால்வகைத்தே. ஆனால் தமிழ்ப் பாஷை ஐவகை யிலக்கணங்களை யுடையது. தமிழ் தவிர மற்றப் பாஷைகளில், எழுத்து, சொல், யாப்பு, அணி முதலிய நால்வனவாகிய இலக்க ணங்களே உள்ளன. ஆனால் தமிழ் பொரு ளிலக்கணமாகிய தனி யிலக்கணத்தைப் பெற்றுள்ளது. அப் பொருளிலக்கணமும் இரு வகைத்து. அவையாவன, அகப்பொரு ளிலக்கணமும் புறப்பொரு ளிலக்கணமும். அத்தகைய இலக்கணங்களைப் படித்து ஒருவர் ஒருசிறிது ஆராயின், நந்தமிழ் நாடு உயர் நாகரிகத்திலிருந்த தென் றும், நம்மக்களின் நாகரிகநிலைமை உன்னத நிலையிலிருந்த தென்றும் அவருக்குக் கண் கூடாகும்.

இதுகாறுங் கூறியவாற்றால் தமிழானது சில சிறப்பெழுத்துக் களை யுடைத்தாய படியாலும், சிறப்பியல்பாகிய ஒட்டுச் சொற்களை யுடையபடியாலும் சிறப் பிலக்கணமாகிய பொருளிலக்கணத்தை யுடைய படியாலும், தனிமொழி யென்பதும் வேறு ஒன்றைச்சார்ந்த மொழியல்ல வென்பதும் துணிபாகும்.

M. E. வீரபாகுபிள்ளை

# திருவாசகம்

## சிவபுராணம்

சிவனது அநாதி முறைமையான பழமை.

### தோத்திரங்கள்

நமச்சிவாய வா அழ்க ! நாதன்றாள்வாழ்க !
இமைப்பொழுதும் என்மனஞ்சின் நீங்காதான்றாள் வாழ்க !
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க !
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவார் ஓங்கு விக்குஞ் சீரோன் கழல் வெல்க !
ஈசன் அடிபோற்றி ! எந்தையடி போற்றி !
தேசனடி போற்றி ! சிவன் சேவடி போற்றி !
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி !
மாயப் பிறப்பறுக்கும் மன்னவனடி போற்றி !
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி !
ஆராத இன்பமருளு மலை போற்றி !

---

* நமச்சிவாய வாழ்க—இது ஓர் மந்திரமொழி. சிவனுக்கு வணக்கம் என்பது பொருள். இதை ஐந்தெழுத் தருமறை யென்றும் பஞ்சாக்ஷர மென்றும், மூல மந்திரமென்றும் சொல்லுவர். சிவனுக்கு வணக்கமாகிய திருவாசக நூலிலுள்ள திரண்ட பொருளடங்கிய ஒரு தொடர் மொழியை நூலின் கண்ணுள்ள முதல் வாசகத்தில் வைத்துள்ளது; சிறப்பு, நாதன்—கடவுள்; தாள்—பாதம், நெஞ்சின் — நெஞ்சைவிட்டு, கோகழி — திருப்பெருந்துறை — தற்காலத்தில் ஆவுடையார் கோவி லென்று வழங்குவது. இது பட்டுக் கோட்டையி லிருந்து 27 வது மைலிலுள்ளது. இவ்விடத்தில் இன்றும் மாணிக்கவாசகருக்கு தனிக்கோயில் ஏற்பட்டு பல திவிருழக்கள் நடந்து வருகின்றன. இது தான் கடவுள் குருவாக வந்து அடிகளுக்கு உபதேசித்த இடம். குருமணி—ஞானாசிரியன், அண்ணிப்பான்—சமீபத்திலிருப்பவன்; வேகம்—மனவெப்பம், வெல்க—சிறப்பதாக, பிஞ்ஞகன்—சிவனுக்கு ஒரு பெயர். பிஞ்ஞகம் என்னும் பின்னல் சடைமுடித் தலைக் கோலத்தை யுடையவனாதலால், பெய்கழல் — செறிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய பாதத்துக் காயிற்று. புறத்தோர்—வேறு சமயத்தார், அன்பில்லார்; சேயோன்—தூரமா யிருப்பவன், எட்டாதவன்; கரங்குவிவார்—தொழுவார்; போற்றி — வணக்கம்; எந்தை —என் அப்பன்; தேசன்—குரு, ஒளியை யுடையவன்; சே — சிவந்த; நேயம் — சிநேகம்; நிமலன் மாசற்றவன்; ஆராத — தெவிட்டாத, போற்றி என்ற சொல்லிறுதியாகவுள்ள 6 வரிகளும்—செந்தமிழ் மந்திரங்கள்.



### முகவுரை

சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனால்
அவனருளாலே அவனருள் வணங்கிச்,
சிந்தை மகிழச் சிவ புராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பனியான்,
கண்ணுதலான்றன் கருணைக்கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி,
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய், விளங்கொளியாய்,
எண்ணிறந் தெல்லையிலாதானே ! நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன் !

### பிறப்புகள்

162011

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் !

---

* சிவபுராணம்—சிவனது புழைய முறைமை, முந்தைவினை — முன் செய்த ஊழ்வினை, சிவனது பழைய முறையினை நினைந்து அதனை உரைப்பார்க்கு அவருடைய ஊழ்வினை குறையு மென்பது கொள்கை, ஓய—தேய, கண்ணுதலான்—நெற்றிக் கண்ணையுடைய வனாதலால் சிவனுக்கு ஓர் பெயர்., கண்ணுதலான் என்ற வரியில்—குருந்த மர நீழலில் ஞானசிரியன் வேடம் பூண்டு வந்த சிவபெருமானைக் கண்டு அடிகள் வணங்கியதைக் குறிப்பிடுகின்றது. எய்தி—அடைந்து, எழிலார் கழல்—அழகு பொருந்திய திருவடிகள், இறைஞ்சி — வணங்கி, சீர்—புகழ் பொல்லாவினையேன்—தீவினை யுடையயான், ஆறு—வகை, வழி; (26—31) இதில் உயிர்களின் பல்வகைத் தோற்றங்களைக் குறிப்பிடுதல்; பூடு—பூண்டு, விருகம் — மிருகம், கணங்கள் — பூதக்கூட்டங்கள், தாவரப் பொருள் அசையாப் பொருள், சங்கமப் பொருள் — அசையும் பொருள்.

## ஞானகுரு

மெய்யே, உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்;
உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா! என வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய், தணியாய், இயமானனும் விமலா!
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகிமிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு நல்லறிவே!

---

*** மெய்யே—உண்மையில், வீடு—மோக்ஷம், உய்ய—நான் பிழைக்கும் பொருட்டு; ஓங்காரம் — ஓம் என்னும் பிரணவவுரு, ஒவ்வொரு மந்திரமும், ஓம் என்று சொல்லப்பட்ட மந்திர மொழியா லாரம்பிக்கப்படும். ஓம் என்ற மொழியாலே முடிவு பெறவுஞ் செய்யும். ஓம் என்ற எழுத்து கடவுளுருவாய்ப் பாவிக்கப்படுவது. ஓம் என்ற மந்திரமொழி மும்மூர்த்திகளையும் குறிப்பிடுவது. அ என்பது விட்டுணுவையும் உ என்பது சிவனையும் ம் என்பதும் பிரமனையும் ஆகமூன்றுஞ் சேர ஓம் என்பது திருமூர்த்தியையும் குறிப்பிடுவது; விமலா — மாசற்றவனே, மிளிர்கின்ற — விளங்குகின்ற எஞ்ஞானம் இல்லாதேன் — எவ்வித அறிவும் இல்லாதவனாகிய எனக்கு இன்பப் பெருமானே —இன்பத்தைத் தந்த பெருமானே. அகல்விக்கும் — நீக்கும்.

"இங்கு எடுத்தெழுதப்பட்ட 40 அடிகளில் ஒரு நூலுக்கேற்ற முகவுரை அல்லது பாயிரம் அடங்கியுள்ளது. முதலில் வாழ்த்து வணக்கம் வருபொருளுரைத்தல் ஆகிய மூன்று மடங்கிய மங்கல வாழ்த்து இருபதடிகளில் கூறிப் போந்தார். நம் அடிகள் பின் அவையடக்கம் 5 அடிகளால் கூறினார். பின், உயிர்கள் பலவகை உடம்புகளில் புகுமாற்றைக் கூறியுள்ளார். பின் இறைவன் பிறவிகளில் உழன்று தூயராயினருக்கு இறைவன் அருள் செய்வானென்றும், கடவுள் இன்னின்ன இயல்புகளுடைய வனுதல் என்றும் அடுத்த 9 வரிகளில் கூறியதைக் காண்க."
'வேதாச்சல சுவாமிகள் 'திருவாசக விரிவுரை'

# பெண்கள் பகுதி

## தாய்மார்களுக்கு சில போதனைகள்

இந்தியாவில் பெரும்பான்மையாக பள்ளிக்கூடத்தில் வாசிக்குங் காலத்தேற்பட்ட வயதிலேயே நம் சகோதரிகள் தாய்மார்களாகிறார்கள். ஆகவே அவர்கள் பல ஹீனமான குழந்தைகளுக்குக்காரணமா யிருப்பதோடு தாங்களும் வாலிபத்தில் பக்குவமடையுமுன் சிசுக்களைப் பெற்றதனால் பலஹீனமாயும் பல வியாதிகளால் பீடிக்கப்பட்டு இளம்பிராயத்திலேயே மரணத்தை யடைகிறார்கள். தவிர குழந்தைகளை வாலிபத்திலே பெறுவதனால் அவைகளைவளர்க்குமுறையை யறியாதவர்களாகி அவைகளுக்கு ஏதேனும் அசௌக்கியம் நேரிட்டால் சிகிச்சையும் தெரியாதவர்களாய் மயங்கிக் குழந்தைகளையும் பறிகொடுத்து துக்கத்திலாழ்ந்து தாங்களும்சிலசமயங்களில் இவ்வுலகத்தை விட்டு நீங்கும்படி நேரிடுகிறது.

அவ்வண்ணம் அவர்கள் கஷ்ட நஷ்டங்களை யடையாமல் கூடியவரை குழந்தைகளை வளர்க்கு முறை, அவைகளுக்கு வியாதி அணுகாமல் தவிர்க்குமுறை, வந்தால் கைப் பக்குவமாக சிகிச்சை செய்யுமுறை, சாதாரண வியாதிகளுக்கு மருந்து கொடுக்குமுறை, குழந்தைகளின் அவயவங்களைப் பாதுகாக்கு முறை, ஏதாவது அபாயங்கள் நேரிட்டால் அவைகளுக்கு முதலில் செய்ய வேண்டிய சிகிச்சைகள் முதலிய இவைகளைப் பற்றி ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லுவோம். அவைகளை நன்றாகப் படித்து நம் சகோதரிகள் "கற்கக்கசடற, கற்றபின் நிற்க அதற்குத்தக" நாயனார் கூறியவாறு நடப்பார்களாக.

## முதலில் நாம் குழந்தை பிறந்தபின் அதைப் பொதுவாக வளர்க்கு முறை

உணவு:—ஒவ்வொரு குழந்தையும் கூடியவரை தன் தாய்ப் பாலையே யருந்தவேண்டும். தாய்ப்பாலே சிறந்தது. நம்பெருமான் அதற்காகவே அதன் பொருட்டு அவ்வுணவைக் கொடுக்குமாறு அருள் செய்திருக்கின்றார். ஒரு குழந்தைக்கு சாதாரணமாக தேக சௌக்கியமுடைய தன் தாயின் பாலைப்போல நன்மையைத் தரக்கூடிய வேறெவ்வித உணவும் காணப்படவில்லை யென்று ஒரு நிபுண வைத்தியர் எழுதுகிறார். அப் பாலே குழந்தை ஜீரணிக்கத் தக்க அளவிலும், குழந்தையின் வளர்ச்சிக் கத்தியா அவசியமான ஒவ்வொரு பொருளையுமுடைத்து. எப்பொழுதும் சுத்தமாயும் ருசியாயுமுள்ளது. குழந்தை பிறந்த அன்றே தன் தாயின் ஸ்தனத்திலிருந்து பெறக்கூடியதை உட்கொள்ளும்படி விடவேண்டும் அன்று ஸ்தனத்தில் குழந்தை சாப்பிடும் வெள்ளை நிறமுடைய பால் இல்லையென்பது உண்மையே. ஆனால் அதிலிருக்கும் சீம்பால் (மஞ்சள் நிறமுடையது) மிகவும் நன்மையைத் தருவது. அது மலத்தைப் போக்கும் ஒரு மருந்தாயு மிருப்பது. பெரும்பாலார் (செய்கிறபடி) குழந்தை பிறந்த ஒரு வாரத்துக்கு ஒவ்வொரு நாளும் கொடுக்கும் விளக்கெண்ணெய்யைக் காட்டிலும் பதின்மடங்கு சிறந்தது. எண்ணெய் கொடுக்கும் வழக்கம் நல்லதல்ல, ஏனெனில் அது அதிசீக்கிரம் மலத்தைப் போகச் செய்கிறது. அதனால் குழந்தை தனக்கு இன்றி யமையாததாயும் இருக்கவேண்டியதாயு முள்ள சக்தியை இழக்கிறது.

மற்றும் தாயார் ஸ்தனத்தை குழந்தை பால் குடிப்பதற்கு முன் சுத்தமாய் வைத்திருப்பதுடன் சுத்த நீரால்கழுவி சுத்தப் படுத்தி வைத்திருக்கவேண்டும். 'அல்லாவிடில் குழந்தைக்குத் தன் தாயின் ஸ்தனம் அழுக்கா யிருப்பதால் வாய்ப் புண் வரும். குழந்தையை வளர்க்கு முறையில் முதலில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில் குழந்தைக்கு ஆகாரம் ஒழுங்காய் கொடுக்கவேண்டும் அழும்போதெல்லாம் கொடுக்கக்கூடாது. சுமார்மூன்று மணி நேரத்துக் கொருமுறை கொடுத்தால் குற்ற



மில்லை. முன்னாகாரம் கொடுத்து குறைந்தது இரண்டு மணி நேரமாவது கழியவேண்டும். அப்படியானால் குழந்தை உணவை உட்கொள்ளும் பொழுது பசியுடனிருக்கும். பசியுடனிருந்தால் நன்றாய்ச் சாப்பிடும். மத்தியகாலங்களில் அதன் வயிறு இளைப்பாறிக் கொண்டிருக்கும். குழந்தைகளின் வயிற்றுக்கு இளைப்பாறுதல் இன்றியமையாதது. அடிக்கடி பால் கொடுக்கும் பக்ஷத்தில் குழந்தை நன்றாய் உண்காது. தாய்ப் பாலிலே குழந்தை வளருவதற்குச் சாதனமாயுள்ள வஸ்துக்கள் அடங்கி யிருப்பதால் குறைந்தது ஆறு ஏழு மாதங்களுக்கு அதுவே அதன் ஆகாரமா யிருக்க வேண்டும். கொதிக்க வைத்தபின் ஆறின குளிர்ந்த நீர் தவிர வேறு எதையும் கொடுக்கக் கூடாது. குழந்தைக்குத் தேவையான நீரைக் கொடுப்பது நல்லது.

ஏழெட்டு மாதத்திற்கு தாய்ப் பால் தவிர இதர வகையில் உணவு கொடுத்தல் ஏதாவது காரணத்தை முன்னிட்டு தாய்ப் பால் வற்றிப் போனாலும் குழந்தைக்குப் பால் கொடுக்க எவ்வித ஸ்திரீயும் அகப்படாமல் போனாலும் வேறு விதத்தில் ஆகாரம் குழந்தைக்குக் கொடுப்பதுடன் நம்மால் கூடிய வரையில் அதை வளர்ப்பதற்குண்டான முறைகளைத் தேட வேண்டும்.

புதிதாயும் சுத்தமாயுமுள்ள பசும் பாலாவது வெள்ளாட்டுப் பாலாவது கொடுத்தால் சாதாரணமாய்ச் சிறந்தது. மிகவும் பலஹீனமாயுள்ள குழந்தைக்கு பாலில் கொஞ்சம் காய்ச்சின நீரைச் சேர்த்துக் கொள்ளலாம் (Sodium citrate) சோடியம்சைட்டிரேட் என்றதை சேர்த்துக் கொடுத்தால் குழந்தைக்கு ஜீரணமாகுவது இலகுவா யிருக்கும். பக்கத்து வைத்தியசாலை யிலிருந்து கொஞ்சம் எப்பொழுதும் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு கோப்பை பாலுக்கு ஒரு இரண்டணா வெள்ளி நாணயத்தில் நிற்கக் கூடிய பிரமாணம் சோடியம்சைட்டிரேட் சேர்க்க வேண்டும். பின் தண்ணீரும் கலக்க வேண்டும். குழந்தையின் உடம்புக்குப் பிடித்து விட்டால் தண்ணீர் கலப்பதை நிறுத்தி விட்டு தனிப் பாலை சோடியம் சைட்டிரேட்டுடன் கலந்து கொடுக்கவும். பின், குழந்தை எட்டு அல்லது ஒன்பது மாதம் வரை கொஞ்சம் கொஞ்

சமாகசோடியம் சைட்டிரேட்டைக் குறைத்துக் கடைசியில் தனிப் பாலையே கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்ததில் குழந்தையின் உடம்பு தேறவில்லை யென்றால் கேவலமாகு முன் உடனே வைத்தியரை கூட்டிக் காண்பித்து சிகிச்சை செய்வது நலம். சில நாட்களாக குழந்தையை வைத்திய சாலைக்கு எடுத்துக் கொண்டு போய் வைத்தியர் குழந்தை ஜீரணிக்கக் கூடிய ஆகாரம் குறிப்பிடும் வரைக்கும் அவரிடம் காண்பிக்கவும்

ஏழு அல்லது எட்டு மாதங்களாயின பின் கொடுக்க வேண்டிய உணவு:—குழந்தை ஒன்பது மாதம் வயதான பின் பாலைத் தவிர மற்ற வஸ்துக்களையும் தின்பதற்குக் கற்க ஆரம்பிக்கிறது. முதலில் பால் கலந்த கஞ்சி கொடுக்கவும். குழந்தைகளுக்கு கஞ்சி மிகவும் நன்மையான ஆகாரமானபடியால் விசேஷமாய்க் கொடுக்கவும். அரிசிக் கஞ்சியாவது சவ்வரிசிக் கஞ்சியாவது கொடுக்கலாம். நன்றாகக் கொதிக்கவைத்துக் கொஞ்சம் பாலும் சர்க்கரையும் கலந்து கொடுக்கவும். ரஸ்க்பிஸ்கோத்தும் ஒரு சிறந்த ஆகாரந்தான். அதை ரோஸ்டு ரொட்டியென்று சொல்லுவார்கள். மற்றும் ஒரு சிறந்த ஆகாரம் பச்சை முட்டை வெள்ளைக் கரு. அதையெடுத்து முதலில் ஒரு பாதி கொடுத்து, கொஞ்ச நாளானபின் வெள்ளைக் கரு பூராவாகக் கொடுக்கவும். பின்னால் முட்டையி லிருக்கும் பூரா வஸ்துவையும் கொடுக்கலாம்.

இம்மாதிரியாகக் கொடுக்க வேண்டியதைச் சொன்னோம். தவிர்க்க வேண்டியது யாதெனில் காப்பியும், குழம்பும். பெரும்பான்மையாக நம்மவர்கள் காப்பியைக் கொடுத்து உடம்பைக் கெடுப்பார்கள். ஒரு பொழுதும் காப்பித் தண்ணீரைக் குழந்தைகளுக்குக் கொடுக்காதேயுங்கள். அது என்ன செய்கிற தென்றால், விஷத்தை யொப்ப உடம்பில் வேலை செய்கிறது. அநேகர் 'அது நம் வழக்கம்' அதனால் நம் குழந்தைகள் சாகா என்று சமாதானம் சொல்லுகிறார்கள். உண்மையே. இருந்தாலும் அதைவிடச் சிறந்த புஷ்டியைத்தரும் ஆகாரங்களிருக்க அவைகளைக் கொடுத்தால் குழந்தைகள் சந்தோஷகரமாயும் பெரிதாயும் தைரியமாயு மிருக்கு மென்றால் காப்பியை கொடுப்பானேன்? காப்பியில் ஒருவிதமான ஆகாரமுமில்லை. அதில் இரு



தயத்திற்கும் உடம்புக்கும் வயிற்றுக்கும் தீமையைத் தரும் ஒரு விஷமிருக்கின்றது.

குழம்பு:—சோறும் குழம்பும் கலந்து கொடுத்தால் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் உண்டாகிறது. குழம்பில் சேரும் காரமான வஸ்துக்கள் குழந்தையின் உடம்புக்குக் கெடுதலைத் தரும்.

ஒரு தாயார் ஒரு வைத்தியரிடம் போய் தன்னுடைய அசௌக்கியமான குழந்தையைக் காட்டிப் பின் வருமாறு சொல்லுகிறாள். 'ஐயா! குழந்தை வயிற்றோட்டத்தினால் வெகு நாளாக கஷ்டப்படுகிறது. என் குழந்தைக்கு எப்பொழுதும் ஆறு மாதமானதும் குழம்பும் சாதமும் கொடுப்பது வழக்கம். எனக்கு எட்டுக் குழந்தைகள் பிறந்தன. ஆறு குழந்தைகள் இறந்து போயின. இது நிரம்பவும் நோயால் பிடிக்கப்பட்டிருக்கின்றது.'' 'அவர் குழந்தைகளுக்கு குழம்பு கொடுப்பது தீமையை விளைவிக்கும்; பல் நன்றாய் முளைத்துப் பல்லினால் சாதத்தை மெல்லுகிற வரைச் சாதங்கொடுக்கக்கூடாது. கடவுளுடைய அமைப்பே அப்படி யிருக்க அதற்கு மாறாகப் போனால் தீமையைத் தரும்' என்றார்.

M. E. வீரபாகு பிள்ளை.

---

# இந்திய மாதா

கவர்ணிகள்.

உலகமுக திலகமென இலகும் இந்தியாவே!
ஒளியவிர்ந்தும் மணமவிர்ந்தும் உலைவதுகாண் போமோ?
கன்னிநெடுங் கடலாடை காதலிக்கும் தாயே!
கலனிழந்தும் நலனிழந்தும் சழிவது காண் போமோ?
சாகரத்தைத் தோண்டி நின்ற சகரரைப்போ லுன்சீர்
நாகரிகம் தோண்டிவெளி நாட்டுவதார்? அம்மா!
ஆதிமனு வந்தஇடம் ஈதெனவே அறிவார்
ஓதுவதால் உன்முதுமை உரைப்பதெவர்? அம்மா!
சூரியனை நவசோளம் சுற்றி ஒளி பெறல்போல்
ஆரியரும் நின்னருளை அருந்துகின்றார் அம்மா!
சண்சவரு வனவனப்பு கலந்து தவழ் தென்றல்
பண்சவரும் புள்ளினிடை பரிந்தளித்தாய் பலவே.

காயோடு கனிமலர்த்தேன் கல்லோடுந் தெள்ளீர்
சேயோடு செஞ்சாலி தெளிந்தளித்த ய பலவே.
அக்காலம் பிறர்நின்னால் அறிவடைந்தா ரானார்
இக்காலம் நின்மக்கள் இருள்வலேதல் என்னே!
அந்நாளில் நீசெல்வத் தமர்ந்திருந்த தறிவோம்
இந்நாளில் நின்மக்கள் எளிமையுறல் என்னே!
அந்நாளில் ஒழுக்கம் ஒன்றே உயர்குலத்தி லாக்கும்
இந்நாளில் நின்மக்கள் இழிந்தமைதா னென்னே!
சத்தியமும் நூலறிவும் தைரிய வீரியமும்
தழைத்தோங்க நின்மக்கள் பிழைத்தொங்க அருள்வாய்.
சாதியெனும் சழக்கறுத்து நீதிநெறி பிடித்து
தழைத்தோங்க நின்மக்கள் பிழைத்தோங்க அருள்வாய்.

பிரஜாநுகூலன் K. S. சிவ்ராஜபிள்ளை. பி. ஏ.

---

## வினா விடைகள்.

நாவற்பழம்:—

காரெனக் கருத்து, நீலம் கலந்தொளிர் கனியே; உன்றன்
சீரிய கருமை எங்கே பெற்றனை? செப்பாய் என்றேன்:
வீரியம், அழகோ டாண்மை மேன்மைசேர் தமிழ்நன் னாட்டு
நாரியர் விழியினின்றிந் நலத்தினைப் பெற்றே னன்றே.

தவளம்:—

கடலிடைப் பிறந்த முத்தே, கடுகி நான் ஒன்று கேட்பேன்
திடனொடுன் எழிலும் சீரும் எங்கு நீ பெற்றாய்? என்றேன்:
வடிவுறு தமிழ் மாதர் முறுவலை மனத்தில் உன்னிப்
படியினில் தவங்கள் செய்திப் பான்மையைப் பெற்றேன் அன்றே.

மீன்:—

அகத்திய முனிவன் வாழும் அற்புதப் பாவநாசக்
சசத்துறை மீன்காள், உங்கள் அழகினை எங்கே கண்டீர்?
ஜகத்துள மாந்த ரெல்லாம் போற்றிடுந் தமிழ் நன்னாட்டு
வருதபே ரழகு வாய்ந்த மாதரார் விழியினில் அன்றே.

கமலம்:—

அழகிய கமலப் பூவே, அன்புடன் கூறாய் உன்றன்
பழகறு நலங்கள் எங்கே பெற்றனை? பகராய், என்றேன்:
மழைவளப் பொதிகை சேரும் வண்டமிழ் நாட்டு நல்லார்
எழிலுடை முகத்தினின்றிந் நலங்களைப் பெற்றேன் அன்றே.

பொன்:—

பொன்னென உலக மெல்லாம் போற்றிடும் பொருளே! உன்றன்
மின்னிசர் வி[illegible]ணம் எங்கே பெற்றனை? விளம்பாய் என்றேன்:
அன்னையர் தமிழ்ப் பாவாற் றம் மதலையர் அழகை போக்கும்
கன்னியர் தமிழ்நன் னாட்டுக் கன்னிய ரிடத்தி னன்றே.

பிரஜாநுகூலன் பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை.

## "அன்னி ரோவ்ஸ்"

**சந்திரன்** வெகு ஸுந்தரமாய்ப் பிரகாசித்தான். அவ்விரவு சகலருக்கும் மனோரம்மியத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தது. காட்டிலுள்ள மரங்களும் மற்றும் அவைகளில் வாழும் பக்ஷி ஜாலங்களும் மௌனஞ் சாதித்தன. சில இடங்களில் மட்டும், கூகை, கோட்டான், ஆந்தை இவைகளின் சப்தம் செவிபடத் தொனித்தது. இக்காட்டிற்கு மத்தியில் வெகு அலங்காரமான பங்களா ஒன்றிருந்தது. வெகு பெரிதாயிராவிடினும் பார்த்தோர் திக்பிரமை கொண்டு கீர்த்தி எனச்சொல்லும் வண்ணம் கட்டழகு வாய்ந்திருந்தது. முன் விராண்டாவும் அடுத்தாற்போல் மூன்று அறைகளும் இதன்பின் சிறிய வாசகசாலையும் அப்பால் இரண்டறைகளும் இவைகளைக் கழித்து சமையலறையும் சமைக்கப்பட்டிருந்தன. சமையலறைக்கும் பிற அறைகளுக்கும் மத்தியில் பன்னிரண்டு சதுர கெஜ அளவுள்ள முற்றமிருக்க இதனைச் சுற்றிலும் அலங்காரமான செடிகள் புஷ்பித்துக் கொண்டிருந்தன. கம் எனும் வாசனையே எங்கும் திகழ்ந்து பரிமளித்துக்கொண்டிருக்க, ஓர் பக்கம் கடியார சப்தம் கட் கட் என ஒலித்துக் கொண்டிருந்தது. நாம் எழுதும் சமயம் இரவு மணி 10. இச்சமயம் 45 வயதுடையவரும், வசீகரமான தோற்றமும், வாட்டை சாட்டையான தேகமும், உள்ள ஓர் ஆடவர் அப்பங்களா வாயிலில் வரவே பூட் சத்தத்தைக் கேட்டு—அப்பங்களாவினுள் இருந்த சுந்தரவனிதை சுமார் பதினேழு வயதுடையவள். அழகும் அன்பும், நன் மனதும் புன்சிரிப்பும், சுந்தர நெற்றியும் சந்திர பிரகாசமும் பளபளப்பான கன்னங்களும் தளதளவெனமின்னும் சிகையும் நீலோற்பலம் போன்று பெருத்த நேத்திரங்களும் அழகே ஓரவதாரங்கொண்டாற் போற் தோன்றினள். இவளைக் கண்டோர் ரதியெனவும், ரமணீய ஸ்திரீயெனவும், இன்னும் சிலர் வனதேவதையோ இன்றேல் வானகத்து லக்ஷ்மியோ எனப் புகழ்வர். இவளை, பிரம்ம சிருஷ்டிகளில் நூதன சிருஷ்டி யெனவும் அவற்றுள் பேரணிகலமாக விளங்கும் சற்பழகிலும் சிறந்தவளென்று வேறு சிலர் கூறுவர். நகைகளை அணிந்திராவிடினும், இவள் நடை உடை பாவனையும், சிற்றிடையின் மாண்பும், கண்டோர் மனம் இவள் பாற்செல்லும்படி செய்தது.

என்றாலும் அன்பும், அருமையும், தயையும், சாந்தமும் இவைகளே அவளிடம் ததும்பி நின்றன. அன்னிரோஸ் இம்மாதாராள்.—தான் வாசித்துக் கொண்டிருந்த பத்திரிகையை மேசையில் வைத்ததும் தன் தந்தையை அழைக்க எதிர் கொண்டோடி வந்தாள். தந்தையும் மகளைக்கண்ட தக்ஷணமே ஆர்வத்துடன் கட்டி முத்தமிட்டபின் இருவருமாக பங்களாவினுள் சென்றனர். இருவரும் இரண்டு ஆசனங்களிலுட்காந்ததும்,

அன்னிரோஸ்:—அப்பா! தாங்கள் எப்போதும் இப்படியே காலந்தாழ்த்து வருகின்றீர்கள். எனக்சோ 9 மணிக்கே நித்திரை வந்துவிடுகிறது. மேலும் அதற்கு இக்காட்டில் தனிமையாயிருக்கவும் மனமில்லை. ஆகையால் தாங்கள் 9-மணிக்கே வருவது நலம்.

தந்தை:—என் ஆருயிரினுமினிய கண்மணி, இங்கு நீ தனிமையாக இருப்பது எனக்கு மிகவருத்தமே. ஆயின் என் செய்வோம்! ஸ்டேஷனிலும் நான் தனியாகவே வேலை செய்யவேண்டியிருப்பதால் இவ்வளவு நேரமாகி விடுகிறது. ரோஸ், கூடிய சீக்கிரம் உதவி உத்யோகஸ்தன் நியமிக்குமாறு எழுதியிருக்கிறேன். பின் உன் தந்தை ஒன்பது மணிக்கல்ல எட்டு மணிக்கே வந்து விடுவார்.

அன்னிரோஸ்.—அப்பா எனது அம்மாள் இருந்திருக்கும்போது எனக்கு எவ்வளவோ ஆறுதலாயிருந்தது. அவள் காலஞ் சென்றபின் எனக்குற்ற துணை யார் தாங்களே. தங்களைக் கண்டால் மட்டும் என் அகம் ஆனந்தத்தால் துள்ளுகிறது. நான் தனிமையாயிருக்கும்போது என் அன்னையை நினைப்பின் அத்துக்கத்தை தாங்கமாட்டாது கண்ணீர் ஆறாய்ப் பெருகினும் என் ஆண்டவரிடம் என் முழு நம்பிக்கையையும் வைத்திருக்கிறேன் என்றாள். மகளின் ஞானமான வார்த்தையைக் கேட்ட தந்தையும் களிகூர்ந்து இருவரும் இராப் போஜனம் அருந்தச் சென்றனர்.

## II

அமெரிக்கா தேசத்தில் டியாண்டர் பிரதேசத்தில் காசட்ஸ் என்னும் ரயில்வே ஸ்டேஷனை அநேகர் அறிவர். இஃது சிறிய ஸ்டேஷன். எனவே ஸ்டேஷன் மாஸ்டர் வேலையிலிருந்த பிலிப் துரை யொருவரே, டிக்கட் கொடுக்க வாங்க, மற்றும் தந்திச் சமாச்சாரங்கள் முதலியவைகளைக் கவனிக்கும்படி நேர்ந்தது. பிலிப் என்பவர் சகல ஸத்விஷயங்களிலும் சாலச் சிறப்புடையவர். இவர் உத்யோகம் வகிக்கும் ஸ்டேஷனுக்கு அடுத்தாற்போல் இவரது பங்களா ஓர் காட்டினுள் இருந்தது. அதனை யடுத்து போர்ட்டர் என்று சொல்லப்படும் ரெயில்வே வேலைக்காரன் வீடொன்றும் இருக்க, இதிலிருந்து இரண்டு மைல்களுக்கப்பால் காசட்ஸ் பட்டணம்



இருந்தது. பிலிப்பின் மனைவி காலகதியடைந்தனள். இவர்களிருவரின் அருந்தவத்திற்கோர் அரதன தீபமென அன்னிரோஸ் என்னும் பெண்மணி இப் பூவுலகில் ஜனித்தனள். பெருந் தகைமையும், உதாரதத்துவமும் குடிகொண்ட அவ் விருவரிடமும் பிறந்த இவ்வொண்டொடி, மணியும் ஒளியும் பின்னிப் பிரகாசிக்கும் வடிவழகியா யிருந்தாள். தெய்வ பக்தியிலும், பிதுர் பக்தியிலும் ஓர் உதாரணமென விளங்கினள். ஆங்கிலத்தில் சுலபமாக வாசிக்கவும் எழுதவும் கற்றிருந்ததோடு சொற்ப சம்பளம் வாங்கும் தன் தந்தைக்கு சமையல் முதலான காரியங்களையும் தானே நடத்தி வந்தாள். சற்குணபூஷணியான இம்மாதரசி பொற்பும் புனிதமும் ஆபரணமென அணியப் பெற்று சற்புக்கோர் சிறந்த கிரீடாதிபதியானாள். பிலிப் தன் மனைவியை இழந்தபின் தன் காதலியின் உருவெனத் தோன்றி வளர்பிறை சந்திரனைப்போல பிரகாசிக்கும் தன் மகளைக்கண்டு மனம்ஆறுதலடைந்து இவளின் தீர்க்காயுள் ஒன்றையே கருதினவனாய் தேவதா பக்தியில் சிறந்து விளங்கினர். தக்கவரன் ஒருவனும் வந்து இம்மாதை கடிமணம்புரியவராததால் பருவ நிறைந்த மங்கைப் பிராயத்தை தன் தந்தை வீட்டில் கழித்து வரும் யுவதி சிற்சில நேரங்களில் மனம் சோகித்து, கடவுள் தனக்கு எவனைக் கணவனாக நியமித்திருக்கிறாரோ எனக்கவலைப் படவும் நேர்ந்தது. என்றாலும் அக்கவலையை ஒருவாறு நீக்கப்பத்திரிகையை எடுத்து வாசிக்கும் சமயமே பிலிப் வர முதலில் கூறியிருக்கும் வண்ணம் ஸம்பாஷணை நடைபெற்றது. இப்படி யிருக்குங்கால் சிறிது நாளில் பிலிப் தன் குணானுபவத்தில் முற்றிலும் மாறுதலடைந்ததாகக் காணப் பட்டார். முன்போல் பத்து மணிக்குக் கூடவீட்டிற்கு வருகிறதில்லை. பதினொருமணி சில சமயங்களில் பன்னிரண்டு மணிக்கும் வருவார். தன் அருமந்த மகள் மேல் முன்போல் அதிக அன்பும் பாராட்டாது வெறுப்புக்கொண்டவர் போல் தோன்றினும் அன்னிரோஸ் மனங்குன்றாமல் தன் தந்தையின் மாறுதலைக் காண அவா வுற்றிருந்தனள். சாவகாச வேளைகளில் பிலிப்பிடம் ரோஸ் பல விஷயங்களையும் கலந்து பேசும் போது, சாடையாக தன் தந்தையின் மன மாறுதலைப் பற்றிச் சொன்னாலும் அவற்றைக் கவனியாது வேறு விஷயங்களில் பிலிப் பேசுவது வழக்கம். தன் தந்தையின் விஷயங்களனைத்தையும் கண்காணிக் கும்படி சர்வலோக தீனசரண்யனிடம் அழுது கெஞ்சுவது தவிர வேறு வகையொன்றும் அறியாதவளாய் இருக்கும் போது, ஓர் இராத்திரி ரோஸ் தற்செயலாய் ஸ்டேஷனுக்கு வரும்படி நேர்ந்தது. அன்றிரவு அவள் வரும் சமயம் தன் தந்தையை ஆபீஸ் அறையில் காணோம். எங்கு சென்றிருப்பாரென அங்குமிங்கும் உலாவிப்பார்த்தனள். ஓர்பக்கமும் தென்படவில்லை. இஃதென்ன அதிசயமாயிருக்கிறது. நமது தந்தை எங்கு சென்றிருப்பார். இச்சமயம் அவர் செல்லவேண்டிய இடம் எதுவாயிருக்

கலாம். அந்தோ! எந்த இடம் இவர் சிந்தைதனை இவ்விதம் மாறுதலடையச் செய்கிறதோ, தெரியவில்லை. காரிருள் பாரினில் புடைசூழ கவலையிருள் என்மனத்தில் குடிகொள்ள இக் காசினியில் எனக்குற்ற துணையென வாய்த்த என் தந்தையை யிப்பாவ இருள் சூழ்ந்திருக்கிறதே எனப் பலவிதமும் கவலைகொண்டவளாய் பிளாட்பாரத்திலோரமாக உலாவிக்கொண்டேயிருந்தாள். அச்சமயம் குபுகுபுவென பேரொலி ஒலித்து ரெயில் வந்தது. தன் தந்தையும் தென்பக்க மிருந்தே வந்தனர். ஆனால் தன் மகள் இங்கிருப்பதையுங் கவனித்தார். ரெயில் வண்டி ஸ்டேஷனில் வந்து நின்றதும் அதிலிருந்த கார்டு ஓர் கருப்புச் சீசாவை பிலிப்பிடம் நீட்ட இவர் வாங்கி அதனைத் தன் சோப்பியில் வைப்பதைக் கண்டாள் அன்னிரோஸ். கொண்டாள் துக்கம் அக்கணமே. யாரிடமும் சொல்லாது பங்களாவிற்கு அன்னி வந்து விட்டனள். இரவு பதினொருமணிக்குத் தன் தந்தை கண்கள் இரத்தமயமாயிருக்க புத்தி சுவாதீனம் இன்றி எதையோ வாயில் வந்தபடி பிதற்றிக்கொண்டு, வீட்டிற்கு வர, மாசற்ற அன்னிரோஸ் மனத் தடுமாற்றங்கொண்டு, அப்பா! ஏன் இவ்விதம் வாயில் வந்தவாறு பேசுகிறீர்கள்? கண்கள் இரத்தமயமாயிருப்பதோடு கால்களும்தள்ளாடுவதேன். இவையெல்லாம் கறுத்த சீசாவின் செயலோ என்றனள். கறுத்த சீசா என்றதும் பிலிப், கண்மணி என்ன தாறுமாறாக உளறுகிறாய். கறுத்த சீசாவென்பதின் கருத்தென்ன? என வினவ, அப்பா! இப்போது தங்கள் மதி சற்று மங்கியே யிருக்கிறது. இது விதியின் பயனோ அன்றி என் கதியின் குறையோ. தெரியாது. எப்படியும் நீங்கள் முன்னையைப் பார்க்கிலும் சகல விஷயங்களிலும் மாறுதலடைந்திருக்கிறீர்கள். தாயை இழந்து பரிதபிக்கும் சேயாகிய எனக்கு ஓயாது ஆறுதலளிப்பது தாங்களல்லவா. ஏன் இந்த மாற்றமும் சீற்றமும்; ஏனையோர் இவ்விஷயத்தை அறிந்தால் இகழாரோ என, மௌனம் சாதித்தனள். பிலிப் பின்னர் நித்திரைக்குச் சென்றனர். குடி ஒருவர் குடித்தனத்தைக் கெடுக்குமென்பது நாம் அநுபவவாயிலாயறிந்த விஷயம். மதுபானத்தினால் வரும் கேட்டை ஓர் பெரிய புஸ்தகமாக எழுதலாம். மதுபானக் குடியில் கை தேர்ந்தவன், தன் மதிவலி யிழந்து எல்லார்க்கும் பொல்லாதவனெனப் பெயர்கொண்டு நல்லார் சிநேகம் அற்று இல்லாளையும் பகைத்து இகபரத்திற்கும் தூரமாய் நிற்கின்றான். நம் நாட்டில் இறக்கும் கள் என்பதைப் பார்க்கிலும் மேனாட்டிலிருந்து, விஸ்கி, பீர் ஜின், ஜிம்கானா பிராண்டி, என்னும் நூதனப் பெயர் பூண்டு இந்தியாவில் தாண்டவமாடி எத்தனையோ பெயர்களை நட்புக்கொண்டு பின்னால் பணத்தை இழுத்துத் தரித்திரத்துக் குள்ளாக்கி அல்லோல கல்லோலஞ் செய்துவிடுகிறது. மேனாட்டாரால் நமக்குக் கிடைத்த சிலாக்கியங்களில் நூதனமையானது இதுவே. முதலில் மருந்துக்கென்றும் பின்னர் தமாஷுக்



கென்றும் பழகிக் கடைசியில் குடியிற் பக்காப் பெயரெடுத்து இவர்கள் படும் அவஸ்தைக்குக் கங்குகரையுண்டோ. இவ்வித தூர்ப்பாக்கிய நிலைமையைக் கண்ணுற்றே நமது தேசத்தலைவர்கள் இக்கேடான விஷயத்தை அடியோடகற்ற பிரயாசைப்பட்டு வருகின்றனர். இப்பேர்ப்பட்ட மதுபானமே நிறைந்தது பிலிப்புக்குக் கார்டால் கொடுக்கப்பட்ட சீசா மனத்தையும் குணத்தையும் ஒருங்கே கெடுக்க அவதாரஞ் செய்த விஷபானம் நிறைந்தது. மிருகங்கள்முதல் பருகாத பானத்தைக் குடித்தே பிலிப் முன் குணம்மாறி பின்னால் தன் நிலைமை கேடடைய வழியாயிருந்தார். இப்படியே இருந்து வரும் நாளில், ஓர் நாள் காலை சுமார் 8-மணிக்கு பின் தன் தந்தியறையில் இருக்கும் பொழுது தந்தியில் கட கட வென சப்தம் கேட்க சங்கதி யறியுமாறு பிலிப் மேஜையண்டைவந்தார். அடுத்த ஸ்டேஷனிலிருந்து "இந்தக் காலை பத்து மணிக்கு வரும் துரித மெயிலை அனுப்பாது உன் ஸ்டேஷனிலேயே நிறுத்திவை. இங்கிருந்து வரும் ஸ்பெஷல் வந்தபின் மட்டுமே மெயிலை அனுப்பிவைக்கவேண்டும் ஜாக்கிரதை" என்று வந்தது. சரி. என்று சொல்லிக்கொண்டே மற்றும் ஆபீஸ் ஜோலிகளை முடித்த பின் சரியாய் ஒன்பதரை மணிக்கு ஓர் நாற்காலியையும் ரெயில்பாதை ஓரமாக பிளாட்பாரத்தில் போட்டுவிட்டு அறைக்கு வந்து வண்டியை ஓட்டவும் நிறுத்தவுமான கொடிகளையும் எடுத்துக்கொண்டு அடுத்த அறைக்கு வந்து கறுப்புச் சீசாவை எடுத்துப் பேர்பாதி சாப்பிட்டபின் நாற்காலியி லுட்கார்ந்தார். பானத்தின் காரம் கிறுகிறுவென தலைக்கேறச் செல்ல கண் சுழல, தேகம் தடுமாற கையிலுள்ள கொடியும் கீழே நழுவினது. தன் சுயபுத்தி யின்றி எதை எதையோ பலவிதமாக உளறிக்கொண்டு நாற்காலியில் சாய சரியாய் பத்து மணிக்கு ரெயில் இன்ஜின் பேரொலி தெரிந்து அநேகமாயிரம் ஜனங்களை இழுத்து ஸ்டேஷனண்டைக்கு வந்தது. அந்தோ இவர் கொடிகாட்டாததால் ரெயில் ஸ்டேஷனைக் கடந்து செல்லத் திடுக்கென பிலிப் எழுந்தார். அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தார். கையில் கொடியை எடுத்தார் ஐயோ என்றார். ஓடினார். சாடினார். சிகப்புக்கொடியை உயர்த்திப் பிடித்துக்கொண்டே தென்பக்கம் ஓடினார். ஒன்றிலும் ஜயம் சாயவில்லை. கீழே விழுந்தார். புரண்டார். ஐயையோ தெய்வமே கெட்டேன்! கெட்டேன்!! எனப் புலம்பினார். வாயில் அடித்தார். தலையில் அடித்தார். என்னசெய்துதான் என்ன பயன். இன்னும் நொடிப்பொழுதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான உயிர்கள் மரணமாகிறதை நினைத்து வயிற்றிலடித்துக் கோ கோவெனக் கதறினார். அலறினார். இச் சத்தத்தைக்கேட்ட அன்னிரோஸ் சங்கதியை யறியுமாறு ஸ்டேஷனுக்கு விரைந்தோடி வந்தனள். கண்டனள் தன் தந்தையின் அவக்கோலத்தை, வண்டெனப் புகழும் தன் கண்களால்,

கண்ணீர் ஆறாய்ப் பெருகவிட்டனள்! தந்தையே, இஃதென்ன கோலம் எவர் செய்த சீலம், யாருடைய சூழ்ச்சியின் ஜாலம், ஐயோ நான் படும்பாடோ அலங்கோலம், அற்புதத்தந்தையே, பொற்புக்கணிகலமே, விற்பனவிவேகமே, சற்குணபூஷணா, நற்குணதாதாய் கற்பின்மாட்சியே, இக் காசினியில் உங்கட்கு நேரிட்ட துன்பம்யாதோ அது எதுவாயினும் மகளிடம் சொல்லலுமாகாதோ. மனம் உடைந்து இனம் யாதெனத் தோற்றாது பிணமெனக் கிடக்கும் பிதாவே. என்னைப் பெற்றெடுத்துச் சீராட்டிவளர்த்த செல்வத்தந்தாய். அப்பா அப்பாவென அலறப் பிலிப் தலைகவிழ்ந்த முகத்துடன், விண்மணி நிகர்த்த கண்ணின் கருமணியினு மினிய பெண்மணியே அன்னிரோஸ், இனிநான் உன் தந்தை எனும் பட்டத்திற்கு முற்றும் அபாத்திரன். கொலைபாதகன். அநேக உயிர்களை மடியச்செய்த துரோகி, ஈவு இரக்கமில்லாதான். இறைவன் ஆக்கினைக் குட்பட்டு இறைவர்கட்கு இறைவனின் ஆக்கினைக்குக் பாத்திரப்பட்டவன். நாசகாலனாகிய என்னை இனி மகளே! என் அருமன்னரோஸ் அன்னிரோஸ். தந்தை என அழையாதே, உன் வாழ் நாட்களைத் துக்கரமாக்க வழி செய்த கொடுங்கோலன் நான், என்றாலும் தெய்வம் உன்னைக் கை விடார். இன்னும் சிறிது நேரத்தில் என் ஆவி பிரிந்துவிடும், நமது முன்னோர்கள் சென்ற பாதையிற் சென்று விடுவேன் என்றாலும் அழியாநரகிற்காளாவேன். நீ ஆசீர்வதிப்பட்டவள் என் கெதி இவ்வாறு முடிந்தது எனப்பலவாறு சங்கதியனைத்தையும் சாங்கோபாங்கமாகச் சொல்ல அன்னிரோஸ் அப்பா மனங்கலங்காதீர்கள். இவ்வையகம் அனைத்தையும் ஆக்கவும் அழிக்கவும் காக்கவும் வல்ல எம்பிரான் ஒருவருண்டன்றோ. அன்னவர் கழலில் திண்ணமாய் விசுவாசம் வைப்பின் நம்காரியம் நன்னயமாய் முடியும் இதில் யாதொரையமுமின்று.

ஆக்கவும் வல்லவன் யிங்காக்குவித்த வனவரதங்
　　காக்கவும் வல்லவன் பின் கருதுங் காற்கணப் பொழுதிற்
போக்கவும் வல்லவன் யிப்பொல்லாங்கு பொறுத்து
　　முடிசாய்க்க வருந்திறனுடை யான் தருமத்தின்றனி மூர்த்தி
வானமும் பூமியும் மகிழ் கொண்டோங்கிட
　　ஞானமு நன்மையும் நனி சிறந்திட
ஊனமும் பாவமும் மொழியத் தோன்றிய
　　ஈன ரக்ஷகன் பதஞ் சித்தித் தேத்தினோ மானால்

இப்பெரும் ஆபத்தினின்று காப்பாற்றப்படுவோம். ஆகையால் அப்பா வாருங்கள் என்றுசொல்லிக் கூட்டிக்கொண்டு போய் செய்த குற்றங்களைத்திற்



கும் பச்சாத்தாபப்பட்டு முழங்காலி லிருந்து சர்வலோக நாயகனிடம் மன்னிப்புக் கேட்டனர். இனி குடியே குடிப்பதில்லையென்றும், மது பானத்தை கனவிலும் நினைப்பதில்லையென்றும் பிரமாணஞ் செய்தது மன்றி,

பாவிகளிற் பிரதான பாவி கொடும் பாவி முழுப்
　　பாவி துணிகரப் பாவி பகுத்தறிவினின் மூடப்
பாவி விசுவாசமிலாப் பாவி யதிசண்டாளப்
　　பாவியான் வந்தடைந்தேன் குமரேசபரிந்தருளே.

வேறு

தாயே தந்தையர் குரு சம்பத்து நட்பெவையும்
　　நீயே எம்பெருமான் கதி வேறிலை நிக்ஷயங்காண்
ஏயே என்றிகழும் உலகோமெனக் கெண்ணுரிமை
　　ஆயே உன்னை யல்லாற் எனக்கார் துணையாருறவே

எனப் பாடி தேவதா தோத்திரம் புரிந்தனர். ஓர் மனப்பட்டு செய்த பிரதிக்ஞை வானர் கோமகன் சந்நிதிக் கெட்டியது. அக்ஷணமே கட் கட் எனத் தந்தியினிடமாக ஒலிக்க பிலிப் எழுந்து காதை வைத்து உற்றுக் கேட்டனர். என்னே ஆச்சர்யம். என்னே தெய்வ மகத்வம். தேவ கிருபையை என்னென்போம், என்னென்போம். இங்கு வந்திருக்கிற ஸ்பெஷல் வண்டியின் சக்கிரமொன்றில் சேதம் ஏற்பட்டு விட்டதால், தாமதமன்னியில் உன் மெயிலை அனுப்பி விடு" என அடுத்த ஸ்டேஷனி லிருந்து தந்தி வந்தது. இச்சமாச்சாரத்தைக் கேட்ட தந்தையும் மகளும் கொண்ட சந்தோஷத்திற்கு எதை எல்லையாக உபமானிப்போம். அவர்களடைந்த களிப்பிற்கு அதுவே தகுந்த உபமானமாம். தங்களை இப்பேராபத்தினின்று தப்பிவித்துக் காப்பாற்றியதற்காக,

கைம்மாறு மூள சொல்லோ களிப்பறு நின்பேறுதவிக்
　　கெம்மாவியுடல் பொருள் மற்றிவை யொரு மூன்றையு மின்னே
தம்மானின் னருளுக்கே தக்கணையாச் சமர்ப்பித்தேன்
　　வெம்மாய வினை தொலைத் துன் வீட்டுலகை கூட்டுகவே

எனத் துதித்து தன் வாழ்நாள் முழுவதும் பிலிப் பரிசுத்தனாகவே நடந்தார்.

நண்பர்களே. மேற் காட்டிய சரிதை வாஸ்தவமாகவே நடந்தது. தற்காலம் நம் தேசத் தலைவர்கள் இந்தியாவின் சுபீக்ஷதிசைக்குப் பங்கம் வாராதவாறுகாக்க! குடியை நிறுத்தக் கங்கணங் கட்டி உழைக்கின்றனர். மது

பானததை அருந்துவதை ஒவ்வொருவரும் நிறுத்தப் பிரதிக்கினை செய்தால் தேசம் நற்சீர் அடையும். நம் பாரதமாதாவும் பேருவகை பூத்து சிம்மாஸனாதிபதியாவாள். பொது நலங் கருதியே பாடு பட்டுழைக்கும் கதாரத்னகரம் என்னும் இச்சஞ்சிகைக்கு இவ்வரலாற்றைப் பிரசுரிக்க அனுப்பகனம் பத்திராதிபர்களும் அன்புடன் ஏற்று பிரசுரித்ததால், இச்சரிதையை வாசிக்கும் ஸ்ரீமான்கள், அனைவருக்கும் ஹிதோபதேசஞ் செய்து உத்கிருஷ்டமான பாதையில் ஏனையோரைவழி நடத்துவார்களென்று நம்புகிறோம்.

"கடவுளை நம்பினோர் கை விடப்படார்"

எஸ். தாமஸ்பாலையா பிள்ளை,

குன்னூர்.

---

## விடுகதைகள்.

1. எங்களப்பன் சொரியன் எங்காத்தாள் சடைச்சி நான் சர்க்கரைக் குட்டி.

2. நாலுலக்கை குத்திவர இரண்டுமுறம் புடைத்துவர இராஜா மகள் ஏறிவர.

3. கத்திபோல் இலையிருக்கும் கமரிமான் பூ பூக்கும், பிஞ்சு துவக்கும், பெருங்காய் புளிக்கும், பழம் தித்திக்கும்.

4. காலும் இரண்டுண்டு நடக்க அறியாள். இருகண்களுண்டு மேலே சிமிட்டி விழிக்க அறியாள் இந்த மெல்லி நல்லாள், பாலே குடிக்கவையறியாள், நித்தம் பாக்கைத் தின்பாள், யோசித்து சொன்னவருக்கே புத்தியதிகந்தானே.

சென்றமாதத்தில் வெளியான விடுகதைகளின் விவரம்.

1. சோணத்தம்புரு, 2 சுண்டக்காய், 3 பருத்தி.

## பழமொழி.

அசதிக்கு தெய்வமே துணை.

அகதிசொல் அம்பலமேறாது.

அகதி தலையில் பொழுது விடிந்தது.

அசதி பெறுவது பெண்பிள்ளை அதுவும் வெள்ளிப்பூராடம்.

அக்கினியை பசுதி கேட்கிறதா?

அகத்தினழகு முகத்தில்தெரியும்

அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி, ஓடிப்போனவனுக்கு ஒன்பதாமடத்து ராஜா.

அகம் குறைந்தால் ஐந்துங்குறையும்.

அகம் மலிந்தால் அஞ்சும் மலியும்,

அகல இருந்தால் நிகள உறவு கிட்டிவந்தால் முட்டப்பகை.

அக்காடு வெட்டிப் பருத்தி விதைத்தால், அப்பா முழச்சிற்றாடை யென்கிறதாம் பெண்.

# பகவத்கீதா வாசகம்

## (முன் தொடர்ச்சி)

63. கோபத்தினின்று மயக்கமும், மயக்கத்தினின்று நினைவுத் தவறும் நினைவுத் தவறினின்று அறிவு கேடும் உண்டாகின்றது. அறிவு கெடுதலால் ஒருவன் முற்றும் கெட்டுப்போகிறான்.

64. அசக்கரணம் அடங்கியவனோ, விருப்பு வெறுப்புக்கள் நீங்கப்பெற்றுத் தன்க்கு அடங்கி நிற்கும் இந்திரியங்களால் விஷயங்களிற் சென்று மனத் தெளிவைப் பெருகிறான்.

65. தெளிவுள்ள வழி, இவனுடைய துன்பங்கட் கெல்லாம் அழிவு பிறக்கின்றது, ஏனெனில் மனம் தெளிந்தவனுக்குப் புத்தி விரைவாக நிலைத்து நிற்கின்றது.

66. ஒரு நிலையில்லாதவனுக்கு ஞானம் உண்டாவதில்லை. ஒரு நிலையில்லாதவனுக்கு ஆத்ம த்யானமும் உண்டாவதில்லை. ஆத்ம த்யானமில்லாதவனுக்கு ஒழிபும் உண்டாவதில்லை. ஒழி பற்றவனுக்கு ஸுகம் ஏது?

67. ஏனெனில், எந்த மனமானது விஷயங்களில் திரிகின்ற இந்திரியங்களைப் பின் தொடர்கின்றதோ, அது ஜலத்திலே கப்பலைக் காற்று அடித்துக்கொண்டு போவது போல, இவனுடைய அறிவைக் கவர்ந்து கொண்டு போகின்றது.

68. ஆதலால், உயர் தோள! எவனுடைய இந்திரியங்கள் இந்திரிய விஷயங்களினின்று எவ்வாற்றாலும் அடக்கப்பட்டனவோ, அவனுடைய ஞானம் நிலைத்தது.

69. எது பிராணிகட்கெல்லாம் இரவோ, அதில், அடக்கமுள்ளவன் விழித்திருக்கிறான். எதில் பிராணிகள் விழித்திருக்கின்றனவோ, அது, உண்மையைக் காணும் முனிவனுக்கு இரவு.

70. எப்புறமும் ஆற்று நீரால் பெருக்கப்படுகிறதாய்த் தன் நிலை மாறாது நிற்கும் சமுத்திரத்தை ஜலங்கள் எவ்வாறு புகுகின்றனவோ, அவ்

வாறே ஆசைகளெல்லாம் எவனைப் புகுகின்றனவோ, அவன் சாந்தியை அடைகிறான்; காமத்தை விரும்புகிறவன் அதனை அடைவது இல்லை.

71. எந்தப் புருஷன் ஸகலகாமங்களையும் விட்டு, பற்றற்றவனாய், அஹங்கார மமகாரங்கள் இல்லாதவனாய் திரிகின்றானோ அவன் சாந்தியைப் பெறுகிறான்.

72. பார்த்த! இது ப்ரஹ்மத்தைப் பற்றிய நிலை. இதனை அடைந்து ஒருவனும் மயங்கமாட்டான். ஒருவன் கடைசிக் காலத்திலும் முதுமைப் பருவத்திலும் இதிலே நின்று ப்ரஹ்மானந்தத்தை அடைகிறான்.

## மூன்றாம் அத்தியாயம்.

### கர்மயோகம்.

அர்ஜுனன் சொல்லலுற்றான்.

1. ஜநார்த்தன? ஞானம் கர்மத்தினும் மேலானதென்பது உமது கருத்தாயின், அப்பொழுது ஏன் கேசவ! கொடிய தொழிலிலே என்னை ஏவுகிறீர்?

2. மலைக்கச்செய்து போன்ற வார்த்தையினால் என்னுடைய புத்தியை மயக்குகின்றீர் போலும். நான் எதனால் நன்மையைப் பெறுவேனோ, அந்த ஒன்றை ஞான கர்மங்களுள், உனக்கு உரியது இன்னது தான் என்பதைப் பிரித்துச் சொல்லவேண்டும்.

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார்.

3. பாபமற்றவனே? முன்பு இவ்வுலகத்திலே ஸாங்கயர்களுக்கு ஞான யோகத்தாலும், யோகிகளுக்குக் கர்மயோகத்தாலும் இருவகையான நிஷ்டைகளை யான் உபதேசித்தேன்.

4. ஒருவன் கர்மங்களைச் செய்யாமையினால் நைஷ்கர்ம்யத்தை கர்மமற்ற நிலையைப் பெறுகிறானில்லை; அவற்றைத் துரத்திலினாலேயே சித்தியை அடைகிறானுமில்லை.

5. ஏனெனில், ப்ரகிருதியினின்று தோன்றும் குணங்களால் ஒவ்வொன்றும் ஸ்வாதீநமற்றுக் காமத்திற் செலுத்தப்படுகின்றதாதலால், ஒன்றாவது எக்காலத்தும் ஒரு கணப்பொழுதாயினும் தொழிலைச் செய்யாததாக இருப்பதில்லை.



6. எவன் கர்மேந்திரியங்களை அடக்கி, இந்திரிய விஷயங்களை மனத்தில் நினைத்துக்கொண்டு மனம் மயங்கி இருக்கின்றானோ, அவன், ஆசாரக்கள்ளன்' எனப்படுகிறான்.

7. அர்ஜுன! மற்று எவன் இந்திரியங்களை மனத்தால் அடக்கிக் கொண்டு, கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைப், பற்றற்றவனாய் அநுஷ்டிக்கிறானோ, அவன் மேலாகின்றான்:

8. நீ உனக்கு அமைந்த கர்மத்தைச் செய்யக்கடவாய்; ஏனெனில், செய்தல் செய்யாமையினும் மேலானது: மற்றும், அதனைச் செய்யாதிருப்பதனால், சரிரத்தைக் கொண்டு செலுத்தலும் உனக்குமுடியாது.

9. யஜ்ஞத்திற்கான கர்மத்தைத்தவிர மற்றைய கர்மத்தினால் தான் கர்மக்கட்டை யுடைத்து: கௌந்தேய! அதற்கான கர்மத்தைப், பற்றுவிட்டவனாய் நன்கு செய்யக்கடவாய்.

10. ப்ரஜாபதியானவர் முதலில் யஜ்ஞங்களோடு கூடவே ப்ரஜைகளைப்படைத்து, "நீங்கள் இதனால் யஜ்ஞத்தால் அபிவிருத்தி செய்யுங்கள்; இது, உங்களுக்கு வேண்டிய விருப்பங்களைக் கொடுப்பதாக இருக்கட்டும்" என்று கூறினர்.

---

## பத்திராதிபருக்கு வந்த கடிதங்கள்.

அன்புடையீர்,

'நமது 'கதாரத்னுகரம்' எவ்வகையிலும் மிகச்சிறப்புடையதென்பதற்கையமில்லை. தமிழ் நாட்டுக்கு புதுவகையில் உருககொண்டு ஊக்கங்கொடுத்து வருகிறதென்றே சொல்லுகிறேன். எனினும் எனது சிறு விண்ணப்பம் ஒன்றுளது. அஃது யாதெனின், தமிழ் நாட்டில் புதிது புதிதாய் மாதச் சஞ்சிகைகள் வெளிவந்தும், மேல் நாட்டுப் பத்திரிகைகளைப் போலேனும் அல்லது நம் இந்தியாவில் வெளியாகும் சில ஆங்கிலச் சஞ்சிகையைப் போலில்லாதது பெருங் குறையே. கைத்தொழில், விவசாயம், வியாபாரம் தமிழாராய்ச்சி முதலிய பல்வேறு விஷயங்களோடு வெளி வரக்கண்டிலேன். பத்திராதிபரும், சந்தா நேயர்களும் தக்க முயற்சி செய்து மேற்கண்ட விஷயங்களோடு பத்திரிகை வெளி வர ஏற்பாடு செய்வார்களென நம்புகின்றேன். தங்களன்புள்ள,

ஜி. சௌந்தரராஜன்.

நாகப்பட்டணம்.
27-7-921

---

ஐயா,

நமது ரத்னுகரம் பத்திரிகையில் தொடர்ந்து வரும் நாவல்கள் கதைகள் அந்தந்த வருஷம், அந்தந்த தொகுதியில் பூர்த்தியாகக் கூடியதாய் வெளியிடக் கோருகிறேன் மேலும் ஒரு நாவல் தொடர்ச்சியாய் சம்பூர்ணமான பின்னர் வேறு வெளியிடுவது நலமெனத் தோன்றுகிறது. இப்படிக்கு,

V. இராமச்சந்திர அய்யர்.

மதுரை
2—8—21.

# வியாபாரம்

## ஜவுளி வியாபாரம்

தென் இந்தியாவில் நடைபெறும் பல தொழில்களையும் விட இந்த ஜவுளி வியாபாரம் மூலாதாரமாயிருந்தும் நம்மில் அநேகர் அதைக்கண்டு பயப்படும்படியா யிருக்கிறது. முழு மோசமும் பெரும் பொய்யும் நாகரீகமான இக்காலத்திலும் நீடித்திருப்பது ஆச்சரியமாகவேயிருக்கிறது. ஜவுளிக் கடைகளில் எஜமானன் திண்டு போட்டு சாய்ந்திருந்தாலும், விற்பனை செய்வதற்காக இருக்கும் வேலைக்காரனின் கோரச் செயல் அதிகம். கோபமே உருக்கொண்ட துருவாச முனிவரைப்போல் அநேகர் இருக்கின்றனர். எவ்வளவு கெட்டிக்காரனா யிருந்தாலும் ஜவுளிக்கடையில ஏமாந்து போவான். ஏனென்றால் கறார் விலை கிடையாது. வாங்க வருவோர் பல கடை சுற்றி வந்திருந்தால், அவர் கேட்கும் பொருளுக்கு விலையைக் குறைத்துச் சொல்வார்கள். உடனே 'இன்னும் என்னவேண்டும்' என்று கேட்பார்கள்; 'ஒரு விலை சொல்லுங்கள், கறார் விலை சொல்லுங்கள்' என்று கேட்டு சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பதைவிட, விலையைக் குறிப்பிட்டு, கறாராய் விற்கிற நாகரீகமான கடைகளில் வாங்கிக்கொள்வதினால், சொற்பம் விலையில் வித்தியாசமிருந்தாலும், திருப்தியாயிருக்கும். விலை கண்டிப்பில்லாத விடத்தில் ஒரு வஸ்திரத்துக்கு விலை ரூ 20 என்று சொன்னதாய் வைத்துக்கொள்வோம்; வாங்குகிறவன் "விலை அதிகமாயிருக்கிறது, கொஞ்சம் குறைத்துக் கொடுங்கள்" என்று கேட்கிறான். எங்களுக்கு அசல் 19 ரூ ஆகிறது. நாங்கள் எப்படி விலையைக் குறைத்துக் கொடுக்கமுடியும். உங்களுக்குத் தெரியாத காரியமல்ல. நூல் விலை யெல்லாம் ஏறிக்கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறான். வாங்க வந்தவன் விலை அதிகமென்று எழுந்துபோக ஆரம்பிக்கிறான். கடைக்காரன் 'என்ன விலையானால் வாங்குவீர்கள்' என்று பின்னும் கேட்கிறான். 17 ரூபாய்க்கு மேல் யார் கொடுப்பார்கள் என்று சொல்ல ஆரம்பிக்கிறான். நீங்கள் வாங்கிவிட்டீர்கள் இதை இன்னொரு முறை சரியாய்ப் பார்த்துக்கொண்டு அக்கம் பக்கம் போய் விசாரித்துப் பாருங்கள் என்று ஒரு கதையை அடுக்கிவிடுகிறான். கேட்டும் கேளாமலும் வாங்கவந்தவன் போக ஆரம்பிக்கிறான். போய் விடுகிறானே என்று நினைத்து, திருப்பவும் அவனைக் கைதட்டி அழைக்கிறான். ஐயா, உங்களுக்காக—18 ரூபாய் வைத்துக்கொள்ளுங்கள் என்கிறான். வாங்கவேண்டியவன் மறுக்கிறான். கடைசியாக சரி எடுத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்து விடுகிறான். இப்பொழுது வாங்கினவன் ரூ 16-க்குக் கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பானே என்று நினைக்க நேரிடுகிறது. ஒரு வேளை ஏமாந்து தான் போனேனோ என்ற சந்தேகமும் உண்டாகிறது. ஆகையால் லாபத்தை ஒரு வரம்புக்குட்படுத்தி ஒரே விலையாயிருந்தால் எவ்வளவு மேன்மையாயிருக்கும்.

## இரத்தினமாளிகை.

(முன் தொடர்ச்சி)

மனோரஞ்சிதம் தன் கையிலிருந்த ஒரு கடிதத்தை தோட்டக்காரனிடம் கொடுத்து தபாலில் போடும்படி சொன்னாள். அதற்கு அவன் தனக்கு தபாலாபீஸ் தெரியாதென்று சொன்னான். நான் சொல்லுகிறபடி செய் என்றாள். நீங்கள் சொல்லுகிறபடியே நடக்கிறேன் என்று சொன்னான். கடிதத்தை ஒருவரிடமும் காட்டாதே; அதை மடியில் வைத்துக் கொண்டு வெளியே போய் நேரே மேற்கே போ. அந்த ரஸ்தா உன்னை ஒரு பாலத்தில் கொண்டு விடும். அங்கே போய் அவ்விடத்திலுள்ள யாரிடமாவது தபாலாபீஸ் எங்கே யிருக்கிறதென்று கேட்டால் உனக்கு வழிகாட்டுவார்கள் என்றாள். தோட்டக்காரனும் கவனமாய்க் கேட்டு அப்படியே செய்வதாய்ச் சென்றான்.

கல்வியின் சாதனமன்றோ இப்பொழுது ஆபத்திலிருந்து நீங்குதற்கு ஒரு யோசனை தோன்றி அவ்விதமே ஒரு கடிதத்தை யெழுதிப் போடும்படி செய்தது. பெண்களுக்கும் வித்தை அவசியமென்பது நன்கு புலப்படுகிறது. அக்கல்வியும் ஒரு முறையாய் நல் வழியில் கற்பிக்கப்படுமாயின், அவர்களுடைய தற்காப்புக்கு பேருதவியா யிருக்கு மென்று சொல்லவும் வேண்டுமோ? தன் கடிதம் தபாலில் போடப்படுமாயின் தப்பித்துக் கொள்வது நிச்சயமென்றும் தன்னை வஞ்சித்து இப்படிக் காவலுக்குட் படுத்திய துன்மார்க்கனையும் தண்டிப்பது நிச்சயம் என்றெண்ணினாள்.

தோட்டக்கார கோவிந்தனும் ரஞ்சிதம் சொன்னபடியே சென்று கடிதத்தை தபாலில் போட்டு வந்தான். இதை யறிந்த மனோரஞ்சிதத்துக்கு மனோதைரியம் உண்டாய் விட்டது. தனது தமயன் எங்கே இருக்கிறான் என்ற எண்ண முதிக்க திகைத்தாள். இரத்தின மாளிகை எப்படி யிருக்கிறதோ! அங்கே என்ன நடந்ததோ! ஆகாரத்தை புசிக்க வில்லை. பசி மாறிவிட்டது. சித்தம் கலங்கியது. அப்பொழுது ஒரு மோட்டார் வண்டி வந்து நின்ற சப்தம் கேட்டது. இரண்டு ஸ்திரீகள் அதிலிருந்து இறங்கி 'அம்மா வா, இதோ வண்டியில் ஏறு' என்று சொன்னார்கள். இவர்

களிடம் விபரம் அறியாமல் அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்படுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டு "அம்மா நீங்கள் யார்!" என்று கேட்டாள். அம்மா கண்ணே உனது நன்மைக்கே வந்திருக்கிறோம். உன்னைப் போல் பாக்கியவதி இது வரையில் நாங்கள் கண்டதில்லை. உன தம்மான் சொத்துகளெல்லாம் உனக்கே சொந்தம். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது மனோரஞ்சனியின் மனம் சூராவழிக் காற்றில் சிக்கிய துரும்பைப் போல் தத்தளித்தது. என்றாலும் மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டு, முகத்தில் புன்னகை போன்ற தெளிவைக் காட்டி, "என்னை எங்கே போகிறதற்குக் கூப்பிடுகிறீர்கள். என்னை அழைத்து வரச் சொன்னது யார்" இதற்கு விபரம் சொன்னால் உங்கள் மனம்போல் நடக்க எனக்குத் தடை கிடையாது என்றாள். இதைக் கேட்ட அவ்விருவரும் பதில் சொல்லாமல் சிரித்த வண்ணம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'என்னை வஞ்சகமாக இந்த பங்களாவில் வைத்திருக்கிறதாக நினைக்கிறேன். உண்மை யறியாமல் உங்களுடன் வர முடியாதம்மா' என்று மறு முறையும் மனோரஞ்சிதம் சொன்னாள். அதற்கு இருவரும் என்ன பதில் சொல்லுகிறதென்று யோசனை செய்வது போலிருந்தது. இருவரில் ஒரு ஸ்திரீக்கு சுமார் 25 வயதிருக்கலாம். புன்னகைபூத்த முகமுடையாள். அன்ன நடைகொண்டவள். அவள் பார்வையில் கல்மனமும் கரைந்து விடும். அதிக நாள் பழகியவள் போல் பேசும் வழக்கம் பெரிதுமுடையாள். உருட்டி திரட்டி வைத்ததேகம், பெண்ணுக்குப் பெண்ணே இச்சைப்படக்கூடிய வனப்பு வாய்ந்தவள். அவள் சொல்லில் அன்பு தேனாய் ஒழுகும். ஆனால் அதிசீக்கிரத்தில் பதிலளிக்கும் வழக்கமில்லை. மனோரஞ்சிதம் கேட்ட கேள்விகளுக்குக் கன்னத்தில் கையை வைத்து தலையை அசைத்தாள். பணம் படைத்த சில நாகரீகமான குடும்ப ஸ்திரீகளின் உடையும் விலைமாதரின் நடையுடைக்குப் பொருத்தமாய் விடுவது பற்றி ஒருவிதமும் தீர்மானிப்பதற்கின்றி திகைத்தனள் அம்மாதரசி மனோரஞ்சிதம். மற்றவளோ தேகக்கட்டு சற்றே தளர்ந்தவள். அவளுக்கு இவள் துணையென்றே எண்ணவேண்டும். 'உன்னை இவ்வளவு பெரிய பங்களாவில் இருக்கும்படி செய்ய யாருக்கும் பாத்திய முண்டு? நீயே நினைத்துப்



பார். எவருடைய உள்ளத்தை கொள்ளை கொண்டாயோ அவருக்குத்தான் பாத்தியமுண்டு. உன்னை அன்புடன் நேசிக்கும் இராங்கனாத முதலியார் தான் அழைத்துவரச் சொன்னார்' என்றாள். இதைக் கேட்டவுடன் தனக்குள் யாதோ திடமான நினைத்துக் கொண்டு, உள்ளம் பூரித்தவள் போல், 'அப்படியா! அப்பொழுதே சொல்லியிருக்கக் கூடாதா போவோம் வாருங்கள்' என்று சொன்னாள் மங்கைக் கரசியாகிய மனோரஞ்சனி. உடனே எல்லோரும் மோட்டார் வண்டியை நோக்கிச் சென்றார்கள். மனோரஞ்சனியை முதலில் வண்டியில் ஏறும்படி சொன்னார்கள். நீங்கள் இருவரும் ஏறுங்கள்; அடுத்தாப்போல் நானும் ஏறுகிறேன் என்றாள் ரஞ்சனி. அவ்விருவரும் முதலாவது ஒருவர் பின் ஒருவராய் ஏறிக்கொண்டிருக்கும் போது, ரஸ்தாவின் மேற்கு முகமாய் வேகமாய் ஓடி மனோரஞ்சிதம் மறைந்தனள்.

---

## பதிமூன்றாம் அத்தியாயம்

---

### சூழ்ச்சிகள்.

தனபதி முதலியாருடைய பரமரகஸ்யத்தை அறிந்தும் அதனால் தனக்கு யாதொரு நன்மையும் உண்டாகாதெனத் தீர்மானித்த கர்ப்பநாயகம் முக்கியமான இரத்தினங்களை மாத்திரம் கைப்பற்ற யோசனை செய்தான். முற்றிலும் கொள்ளையிடுவதாயின் பிரமாதமாய் முடியுமென்றும் இரண்டு பலசாலிகளையும் மற்றும் சிலரையும் கையாளாய் வைத்துக் கொண்டு சனிக்கிழமை இரவு இரத்தினமாளிகையில் தயாராய் வைத்திருந்தான். அவர்களும் இவன் முன் எச்சரிக்கை செய்தபடியே மாளிகைக்குள் புகுந்து இருவர்களையும் கயிற்றால் கட்டி தனபதியை மாத்திரம் முதலாவது வெளியே கொண்டு வந்தார்கள். அப்பொழுது மாளிகைக்கு வெளியே பதினைந்து பேர் தடியும் கையுமாய் நின்றிருக்கக் கண்டார். வெளியே நின்று கொண்

டிருந்த சிலர் உள்ளே சென்றார்கள். கர்ப்பநாயகம் திமிரிக்கொண்டு சண்டை போடுவது போல் பாசாங்காய் ஆரவாரம் செய்தான். என்றாலும் அவரை நாலைந்து பேர்கள் கட்டிப்பிடித்துக் கொண்டு வெளியே வந்ததால், தனபதி முதலியார் எவ்விதமும் தப்பிக்க முடியாதெனத் தீர்மானித்தார். தனபதி முதலியாரை ஒரு மோட்டார் வண்டியிலேற்றி இருவர் துணையாகச் சென்றார்கள். சைதாப்பேட்டை மார்க்கமாய்ச் சென்று ரஸ்தாவின் ஓரத்தில் தனிமையாக வைத்து, 'ஐயா ! சற்று பொறுத்திரும், உமக்கு உதவியாக அந்த மனிதரையும் கொண்டுவந்து சேர்க்கிறோம்' என்று சொல்லி விட்டுச் சென்றார்கள். மோட்டார் வண்டி மாளிகை வாசலில் வந்து நின்றது.

தனபதி முதலியாரை மோட்டார் வண்டியில் ஏற்றியவுடன் கர்ப்பநாயகத்தைக் கட்டிய கயிற்றை அவிழ்த்து விட்டனர். விலையுயர்ந்த ரத்தினங்கள் வைத்து பூட்டப்பட்ட பெட்டியை யெடுத்துக்கொண்டு மோட்டார் வண்டியிலேறி சென்றனர். கர்ப்பநாயகம் இரத்தினங்களைப் பத்திரப்படுத்திவிட்டு ஒன்று மறியாதவன் போல் வெகுநேரம் சென்று மாளிகைக்குத் திரும்பி வந்தான்.

“ஐயா உங்களைக் கட்டிக்கொண்டு போனார்களே எப்படித் திரும்பி வந்தீர்கள்” என்று அங்கிருந்த வேலைக்காரன், ஏற்கனவே பயந்திருந்தவனாதலால் நடுக்கத்தோடு கேட்டான். 'அப்பொழுது நீ எங்கிருந்தாய்' என்று கேட்டான் கபட—கர்ப்பநாயகம். எங்கள் எஜமானனைக் கட்டி வெளியே கொண்டு வரும்போது, நாங்கள் தடுக்கலாமென்று பார்த்தோம். திருடர்கள் என்ற சொல்லைக் கேட்டதும் எனக்கு பயமுண்டாய் விட்டது. பிறகு பத்துப் பன்னிரண்டு பேர் கையில் தடிவைத்திருந்தார்கள். உடனே உங்களையும் நாலைந்து பேர் கட்டி இழுத்து வந்தார்கள். எங்கே எங்கள் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ வென்று நாங்கள் ஓடிப் போய்விட்டோம், என்றான். 'என்னை அடையாற்றுக்குப் போகிற வழியில் போட்டுவிட்டு ஓடிப்போய் விட்டார்கள். நான் மெதுவாய் கயிற்றை அறுத்துக் கொண்டு வெகு கஷ்டத்தோடு நடந்து வந்தேன்' என்றான் கர்ப்பநாயகம்.. நடந்த விஷயங்களை போலீஸ் கமிஷனருக்குத் தெரிவித்துவிட்டு வேலைக்காரர்களை அழைத்துக்



கொண்டு சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று கர்ப்பநாயகம் சில அதிகாரிகளை அழைத்துக் கொண்டுபோய் இரத்தினமாளிகையைக் காட்டி இவ்விடத்தில் பல இரத்தினங்கள் இருந்தாலும் திருடர்கள் சில ரகங்களை யெடுத்து சென்றிருப்பார்கள். எப்படியாவது திருடர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். முதலாவது முதலியாரை என்ன செய்தார்களோ தெரியவில்லை. ஒவ்வொரு போலீஸ் டாணாவுக்கும் இதை அறிவித்துக் கண்டு பிடிக்கவேண்டும் என்று கவலைப்பட்டவர் போல போலீசார் முன் நடித்தான் கர்ப்பநாயகம். 'உங்களுக்கும் தனபதிமுதலியாருக்கும் என்ன உறவு' என்று சப் இன்ஸ்பெக்டர் கேட்டார். எங்களுக்குள் நெருங்கிய பழக்கம். மேலும் தனபதிமுதலியாருடைய தங்கை பெண்ணை எனக்கு விவாகம் செய்து கொடுப்பதாய் தீர்மானமாயிருக்கிறது' என்றான் கர்ப்பநாயகம். இரத்தின மாளிகையில் நடந்த விஷயங்களை எழுதி கர்ப்பநாயகத்தினிடம் கையெழுத்து வாங்கினார்கள். 'இரத்தின மாளிகைக்கு யாரேனும் அடிக்கடி வருவாருண்டோ, என்று சப்இன்ஸ்பெக்டர் கேட்டார். நானும், 'ஸ்டாண்டர்டு' பத்திரிகையின் உப பத்திராதிபர் ரங்கநாத முதலியாரும் தான் அடிக்கடி வருவது வழக்கம். வேறு எவரும் இங்கு வருவதுகிடையாது. ரங்கநாத முதலியார் இன்றுகூட வந்திருந்து எட்டுமணிக்குச் சென்றார் என்றான். 'அவருடைய விலாசம் தெரியுமோ' என்று கேட்டார் சப் இன்ஸ்பெக்டர். உடனே கர்ப்பநாயகத்தின் முகம் மாறுதலடைந்தது; என்றாலும், 'அவர் வண்ணாரப்பேட்டையி லிருக்கிறார்' என்று விலாசத்தைக் கொடுத்தான். அவன் முகத்தில் பயக்குறி தோன்றி மறைந்ததை சப்இன்ஸ்பெக்டர் கவனித்தார். எல்லோரும் இரத்தினமாளிகையைச் சுற்றிப் பார்த்துவிட்டு, சொந்தக்காரர் இல்லாததால் கதவுகளைப் பூட்டி முத்திரையிட்டார்கள். அப்பொழுதே போலீசார் வண்ணாரப்பேட்டைக்குச் சென்று ரங்கநாத முதலியாரை விசாரிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அவர் காணப்படவில்லை. இந்தத் திருட்டில் அவரும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகங் கொண்டார்கள். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலையில் வெளியான 'ஸ்டாண்டர்டு' பத்திரிகையின் சென்னை வர்த்தமானத் தலைப்பில் கீழ்கண்டவாறு வெளியாயிருந்தது.

இரத்தின மாளிகையில் திருட்டு:—நேற்றிரவு எட்டுமணிக்குப் பிறகு சில திருடர்கள் சென்று கொள்ளையிட்டதாகவும், சொந்தக்காரரையும் கூட்டிக்கொண்டு போய் விட்டதாகவும் தெரிகிறது. பொருள் நஷ்டத்தின் கணக்குத் தெரியவில்லை. அவருடன் இருந்த நண்பர் ஒருவரை கயிற்றால் கட்டி அடையாற்றுப் பாலத்தருகே போட்டுவிட்டனராம். ஆனால் அவர் தப்பித்துக்கொண்டு வந்து விட்டாராம். இரவே போலீஸாருக்கும் தெரிவிக்கப்பட்டு இரத்தின மாளிகை பூட்டப்பட்டு பந்தோபஸ்துக்குள் இருக்கிறது.

இதைப் படித்த அந்த சப்இன்ஸ்பெக்டர் 'ஸ்டாண்டர்டு' காரியஸ்தலமிருந்த பிராட்வேக்குச் சென்றார். ஆபீஸ் பூட்டப்பட்டிருந்தது. மானேஜர் வாசம் செய்யுமிடத்தை விசாரித்துக்கொண்டு அவர் வீடுபோய்ச் சேர்ந்தனர். மானேஜர் ஒரு சிநேகிதரோடு பேசிக்கொண்டிருக்கக் கண்டார்கள். சப்இன்ஸ்பெக்டர் சலாம் செய்து தான் வந்த காரியத்தைத் தெரிவித்தார். ரங்கனாத முதலியார் எங்கிருப்பார், அவருக்கும் ரங்கனாத முதலியாருக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டார். இன்த்தார் என்ற வகையில் அடிக்கடி போவதுண்டு. நேற்றிரவு அங்கே சாப்பிட்டுவிட்டு வந்தார் என்றார். பிறகு எங்கிருந்தாரென்று சப்இன்ஸ்பெக்டர் கேட்டார். இரவு இங்கேதான் நித்திரைசெய்தார். ஏன், அவர்பேரில் சந்தேகமுண்டோ? என்று மானேஜர் கேட்டார். இல்லை—விசாரிக்கலாம் என்று வந்தேன். பத்திரிகைக்கு விஷயம் கொடுத்தது யார் என்பதை முக்கியமாய் அறிந்துபோவதற்கே வந்தேன் என்றார். டெலிபோன் மூலமாய் கர்ப்பநாயகம் தெரிவித்தார் என்றார் மானேஜர். இப்பொழுது ரங்கனாத முதலியார் எங்கேயிருக்கிறார் தெரிவிக்கக்கூடுமா வென்று சப்இன்ஸ்பெக்டர் கேட்டார். இதோ இருக்கிறார் இவர்தான் அவர் என்று பக்கத்திலிருப்பவரைச் சுட்டிக்காட்டினார். உடனே ரங்கனாத முதலியார், 'நான்தான் என்ன விசேஷம்?' என்று கேட்டார். சப் இன்ஸ்பெக்டர் புன்னகை காட்டி 'தாங்கள் தானா' என்றார். ஆம் நான் தான் என்றார் ரங்கனாதம்.

"தாங்கள் தயவுசெய்து போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் வரவேண்டும்" என்று சப் இன்ஸ்பெக்டர் சொன்னார். இப்பொழுது



ரங்கனாதம் ஆழ்ந்து யோசனை செய்ய ஆரம்பித்தார். கர்ப்பநாயகம் தான் இவ்விஷயத்தில் சூழ்ச்சி செய்திருக்கவேண்டும். என்னென்ன சூது செய்திருக்கிறானோ தெரியவில்லை, என்று எண்ணிக் கொண்டு சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, கர்ப்பநாயகம் எங்கிருக்கிறார்? என்று கேட்டார்.

இரவு மைலாப்பூரில் தான் கண்டோம். அவரால் தான் இவ்விஷயம் வெளியே வந்திருக்கிறது. அவரிடமும் ஒரு 'ஸ்டேட்மெண்ட்' எழுதிவாங்கினோம் என்றார். அப்படியானால் நானும் வருகிறேன் என்று சொல்ல மனம் துணியவில்லை. தனபதி முதலியாரைப்பற்றி தங்களுக்குத் தெரிந்ததை எழுதிக் கொடுக்கும்படி கேட்கவே தங்களை அழைக்கிறோம் என்றார் சப் இன்ஸ்பெக்டர். சரி போவோம்! என்று ரங்கனாத முதலியார் சொன்னார். மானேஜர் தானும் துணைக்கு வருகிறதாகச் சொல்லி, தனது மோட்டார் வண்டியைக் கொண்டு வரும்படி வேலைக்காரனுக்கு உத்திரவு செய்தார். உடனே எல்லோரும் அதில் ஏறிக்கொண்டு பூக்கடை போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தமக்குத் தெரிந்ததைச் சொன்னார். போலீஸ் ஆபீஸர் "தங்களுடைய பிதாவின் பெயரென்ன" என்று கேட்டார். சொல்லமுடியாமல் விழித்தார். நல்ல கேள்வி கேட்டீர்கள். அதை அறிந்து கொள்ள முடியாமல் தான் இத்தன்மையான அனாதி நிலைமையிலிருக்கிறேன் என்றார் ரங்கனாதம். இவர் வார்த்தைகளைக் கேட்டு ஒருவரைத்தவிர மற்றவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டனர், போலீஸ் அதிகாரியொருவர் இவரை பந்தோபஸ்துக்குள் வைத்தால், இரத்தினமாளிகையின் திருட்டு வெளியாகி விடலாமென நினைத்தார்.

---

## பதினாலாம் அத்தியாயம்

---

இரகஸ்யப் போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் தனபதி முதலியார் கடிதத்தை ஆதாரமாய் வைத்து தஸ்தாவேஜுகளைப்பார்த்து, கோவிந்தப்பநாயக்கன் தெருவில் அநேக வருஷங்களுக்குமுன் அனாதியாய்

ஒரு குழந்தை விடப்பட்ட விஷயங்களை விசாரித்து இரண்டு நாட்களுக்குமுன் போலீஸ் கமிஷனருக்கு அனுப்பியவரும் இதைக் கேட்டுக் கொண்டிருந்தார். இரகஸ்ய போலீஸ் உத்தியோகஸ்தரான மாணிக்கம் பிள்ளை, குழந்தை பெரியவனாய் வளர்ந்து வேறொரிடத்தில் இருக்கிறதாய்த் தெரிந்து அறிவித்தார். அன்று காலையில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் முன் விசாரித்த வீட்டுக்குட் சென்று, அநேக வருஷங்களுக்குமுன் எழுதிய கடிதத்தை அவ்விட்டாருக்குக் காட்டினார். ஒரு விருத்த ஸ்திரீ வெளியே வந்து 'ஐயா, இருபத்தைந்து வருஷங்கள் இருக்கலாம், ஒரு நாள் இரவு ஒரு சிறு குழந்தையை எங்கள் வீட்டு வாசற்படிக்கருகில் யாரோ ஒருவர் விட்டுப் போய் விட்டார். போலீசாருக்குத் தெரிவித்தார்கள். ஒருவரும் தன் பிள்ளை யென்று வரவில்லை. மேலும் குழந்தையைப் பார்க்கும்போது, கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்ததாயிருக்க வேண்டுமென்று நினைத்து நாங்கள் எங்கள் குழந்தையாக வளர்த்தோம். நாளாவண்ணமும் அவனுடைய நல்லொழுக்கத்தையும், பெருந்தன்மையையும் பார்த்து எங்களுக்கு அளவற்ற திருப்தியும் சந்தோஷமும் உண்டானதால் அவன் கிடைத்த வரலாற்றைச் சொல்லாமல் எங்கள் பிள்ளைகளில் ஒருவனாயிருந்து எங்களையே மாதா பிதாவாகக் கருதியிருந்தான். பொல்லாத வேளை —எனது எஜமான் காலமானார். சென்ற வருஷம் பிள்ளைகள் சொத்துக்களை பாகம் செய்துகொள்ளும் போது அந்தப் பிள்ளைக்குப் பாகம் கொடுக்கவில்லை. அவன் பெயர் ரங்கனாதம். அப்பொழுது தான் நாங்கள் பெற்றோரல்ல என்பதை அறிந்து மிகவும் வருந்தினான். என்னோடு இருக்கும்படி எவ்வளவோ கேட்டும் மறுத்து அன்றே வெளியே போய்விட்டான்' என்றாள்.

"இப்பொழுது அவர் எங்கேயிருக்கிறார்?" என்று கேட்டார் மாணிக்கம் பிள்ளை.

"அவன் இருக்கிற இடம் தெரியாது. நாலு நாட்களுக்கு முன் கூட வந்திருந்தான். அப்பொழுது கூட தன் பெற்றோரைப் பற்றிக் கேட்டான். அவன் கேட்கும்போது எனக்கு மிக வருத்தமாயிருந்தது. ஜாதி குலம் ஒன்றும் தெரியாது. என்றாலும் எங்கள் குடும்பத்தாரைப் போல ரங்கனாத முதலியாரென்று தான் எல்லாரும் கூப்பிடுவார்கள். அவன் குழந்தையாயிருக்கும் போது இடுப்பில் ஒரு மோதிரம் இருந்தது. அதை எடுத்து பெட்டியில் வைத்திருந்தேன் அதையும் வாங்கிப் போயிருக்கிறான். இங்கேயே இருக்கும்படி கட்டாயப்படுத்தினேன். மாட்டேனென்று சொல்லி விட்டான். அடுத்த ஞாயிற்றுக்கிழமை வந்தாலும் வருவான் என்றாள். நானும் ஞாயிற்றுக்கிழமை வந்து பார்க்கிறேன் என்றார் மாணிக்கம் பிள்ளை. நீங்கள் ஏன் அவனைப் பற்றி விசாரிக்கிறீர்கள் என்று கேட்டாள். அவருடைய பெற்றோரைக் கண்டு பிடிக்கத்தான் நானும் முயற்சி செய்கிறேன் என்றார். அப்படியானால் கட்டாயம் கண்டுபிடியுங்கள். அவன் சிறு பிள்ளையா யிருக்கும் போது எங்கள் வீட்டில் செல்வக் குழந்தையா யிருந்து வந்தான். நாங்கள் பெற்றோரல்ல என்று அவன் என்றைக்கு அறிந்தானோ அன்றைக்கே வெளியே போய் விட்டான். நான் போக வேண்டாமென்று எவ்வளவு சொல்லியும் நிற்கவில்லை என்றாள். இனி அவருக்கு நல்ல காலம் தான் நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி, மாணிக்கம்பிள்ளை விடை பெற்றுச்சென்றார்.

---

## பதினைந்தாம் அத்தியாயம்

### 'பட்டகாலிலே படும்'

தெய்வமே கதியென்று ஓடி பக்கத்துத் தெருவுக்குச் சென்று முதல் வீட்டுக்குட் சென்றாள். மோட்டார் வண்டி போகிற சப்தம் கேட்கிறதாவெனக் கவனித்துக்கொண்டிருந்தாள். ஒருவேளை எவரேனும் தன்னைப் பின் தொடர்ந்து வருகிறார்களோ என்று பார்த்துக்கொண்டிருந்தாள் மனோரஞ்சனி.

நம்மை ஏமாற்றிவிட்டுப்போய்விட்டாள். இனி பின் தொடர்ந்து போனால் நம் எல்லோருக்குமே ஆபத்துவந்துவிடும். ஆகையால்

இங்கே சற்றும் தாமதியாது ஓடிவிடவேண்டும் என்று தீர்மானித்து மோட்டார் வண்டியில் போய்விட்டார்கள்.

மோட்டார் வண்டியில் போனவர்கள் மவுண்ட்ரோட் தபாலாபீஸ் பக்கமாய் வந்து வண்டியை நிறுத்தினார்கள். மனோரஞ்சிதம் மைலாப்பூருக்கு நடந்து போகமாட்டாள். ட்ராம் வண்டிக்கு வருமுன் ஒரு கோச்சு வண்டியை தங்கள் வசப்படுத்தி மனோரஞ்சிதம் திரும்பி ஓடிய வீதி வழியாக மெதுவாய்க் கொண்டு போகவேண்டும். அப்பொழுது அவள் வண்டியை அமர்த்துவாள் என்று தீர்மானித்து ஒரு கோச்சு வண்டியை அமர்த்தி என்ன கூலியானாலும் ஏற்றிக்கொண்டு வரும்படி திட்டம் செய்தார்கள்.

மோட்டார் வண்டி அவ்வழியே போனதைப் பார்த்த ரஞ்சிதம் மனந்தேறி இனி என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி சிந்திக்கலானாள். எனக்கு இவ்வாறு இடுக்கண் செய்தது இன்னாரென திட்டமாய் அறிய முடியவில்லை. இரத்தினமாளிகை எவ்வாறிருக்கிறதோ தெரியவில்லை.அங்கும் யாதேனும் சூது தான் நடந்திருக்கிறதோ. போலீஸாருக்குக் கடிதம் எழுதியதால் யாது பிரயோசனம். இப்பொழுது மாலைப்பொழுது, ஒரு வண்டி அமர்த்தி மைலாப்பூருக்குத் தான் போகவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கும்போது அவ்வழியாக ஒரு கோச்சு வண்டி வந்துகொண்டிருந்தது. மைலாப்பூருக்கு வண்டிவிடுவாயா வென்று கேட்டாள். வண்டிக்காரன் சம்மதிக்கவே கூலி என்னவேண்டுமென்று கேட்டாள்! அம்மா தெரியாதா, ரொம்ப தொலை, இஷ்டப்பட்டதைக் கொடுங்க வாங்கிக்றேன் என்றான். எவ்வளவு வேண்டும் கண்டிப்பாய்ச் சொல்லிவிடு என்று கேட்டாள். 'மூணு ரூபா குடுங்க' என்றான். அதிகமாய்க் கேட்கிறாய் இரண்டு ரூபாய்தான் தருவேன் என்றாள். 'ஏதோ ஏழை இருக்கான், ஆண்டவன், பாத்து போட்டுக் கொடுங்க' என்று சொல்லிக்கொண்டே வண்டியைத் திறந்து ஏறும்படி கேட்டுக் கொண்டான். மனோரஞ்சிதம் ஏறவே வண்டியும் புறப்பட்டது. மவுண்ட்ரோடு வரை வேகமாய் ஓடி மைலாப்பூருக்குத் திரும்புகிறபாதையில் வந்ததும் வண்டி மெதுவாகவே போக ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து பின்னும் ஒரு



கோச்சு வண்டியில் மோட்டார் வண்டியில் வந்தவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். மைலாப்பூர் வழியில் வண்டி வந்ததும் அடையார் பக்கமாகத் திரும்பிவிட்டது. வண்டியும் வேகமாய்ப் போகத் தலைப்பட்டது. மனோரஞ்சிதம் வண்டியை ஏன் இவ்வழி திருப்பிவிட்டாய் என்று கேட்டாள். ரஸ்தா ரிப்பேராகிறது, வண்டி அவ்வழி போகாதென்றான். வேறு வழியாய்ப் போவானென்று எண்ணினாள். வண்டி திரும்பாத விதமாய்ப் போவதைக் கண்டு திடுக்கிட்டாள். மற்றோர் வண்டியும் தொடர்ந்து வரக் கண்டாள். ஆஹா! மறுபடியும் ஆபத்தில் சிக்கிக்கொண்டேன் போலிருக்கிறது. அந்த இரண்டு ஸ்திரீகளும் தொடர்ந்து வருகிறார்கள் போலிருக்கிறதே, ஆ கடவுளே! நான் என் செய்வேன். என்னை மோசஞ் செய்து விட்டார்களே! எவ்விதம் தப்பிப்பேன் என்று மெய் சிலிர்க்க வருந்தினாள். உடனே சாந்தமானாள். அவள் மனதில் புதியதோர் யோசனை உண்டாயிற்று. சற்றுநேரத்திற்கெல்லாம் வண்டி அடையார் போய்ச் சேர்ந்தது. பக்கத்திலிருப்பது ஒரு பங்களாவென்று தெரிந்து கொண்டாள் மனோரஞ்சிதம். அடுத்த வண்டியிலிருந்த இரண்டு ஸ்திரீகளும் முன் வண்டிக்கு வந்து கதவைத் திறந்து, 'அம்மா கீழே இறங்கிவா, இந்த பங்களாவுக்குப் போவோம்' என்றாள். மனோரஞ்சிதம் உடனே கீழே இறங்கினாள். 'நாங்கள் யாரோ என்று நினைக்காதே உனக்கு நன்மை செய்யவே வந்திருக்கிறோம்' என்றாள்.

மனோ—நீங்கள் எனக்கு நன்மை செய்வது வாஸ்தவமானால் திருடியைப் பிடிப்பது போல என்னை பின் தொடர வேண்டிய அவசியமில்லையே. நீங்கள் யார்; எதற்காக என்னை வழிமறிக்க வேண்டும். தயவுசெய்து சொல்லுங்கள். என்று மெல்லிய குரலில் கேட்டாள். அதற்கு அந்த ஸ்திரீகள் இளநகை காட்டி, அம்மா நீ அவசரப்படாதே கூடிய சீக்கிரம் தெரிந்து கொள்வாய் என்று சொன்னார்கள்.

இவ்வித விடையால் மனோரஞ்சிதம் யாதொரு விவரமும் தெரிந்து கொள்ள முடியவில்லை. என்றாலும் என்ன தான் செய்

யப் போகிறார்கள் கவனித்துக் கொண்டிருப்போமென்று அவர்களோடு பங்களாவுக்குட் சென்றாள். மாலைப்பொழுதும் மாறி இராப்பொழுதுக்கு ஆரம்பமாய் விட்டது. பங்களாவில் எலக்டிரிக் விளக்குகள் போடப்பட்டிருந்தன. வேலைக்காரர்கள் இருவர் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். பங்களா பார்ப்பதற்கு மனோகரமாய் பலவித புஷ்பச் செடிகளும், அந்தி வேலையில் மலர்ந்த மல்லிகை இருவாச்சிகளின் நறுமணமும் எங்கும் பரிமளித்துக் கொண்டிருந்ததைக் கவனித்த மனோரஞ்சிம், புஷ்பங்கள் எங்கே மலர்ந்திருக்கின்றதோ தெரியவில்லையே என்று நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தாள். காரிருள் சூழ்ந்திருப்பதைத் தவிர வேறொன்றும் புலப்படவில்லை. "அம்மா என் கண்களைக் கட்டி காட்டில் விட்டதுபோல் வைத்து விட்டீர்களே. நீங்கள் உண்மையைத் தெரிவித்தால் நான் இந்த பங்களாவில் எவ்வளவோ சுந்தோஷமாயிருப்பேன்; உங்கள் கல்மனம் உருகவில்லையா? நீங்கள் சூதான வேலை செய்துகொண்டு, எனக்கு நன்மையை நாடுவதாய் பாசாங்கு செய்கிறீர்களே! வேடிக்கையும் விளையாட்டும் ஒரு நாள் முழுதுமா பார்ப்பார்கள். நான் உங்களைப்போல் ஒரு பெண்ணல்லவா? தப்பிக்க முடியாத விதமாய் இங்கு கொண்டுவந்து சேர்த்துவிட்டீர்களே! ஐயோ! நான் என்ன செய்வேன்! என் தமயனை எங்கே விட்டீர்களோ தெரியவில்லையே! நாங்கள் உங்களுக்கென்ன கெடுதி செய்தோம்" என்று மனோரஞ்சிதம் மிக்க மனவருத்தத்தோடு கேட்டாள். அதற்கு அந்த ஸ்திரீ, அவசரப்படாதே இன்னும் சொற்ப நேரத்தில் எல்லாம் தெரிந்து கொள்வாய். வருத்தப்படாதே, எட்டு மணிக்கெல்லாம் ஆகாரம் கொண்டுவருகிறேன், சந்தோஷமாய்ச் சாப்பிடுவோம் என்றாள்.

மனோரஞ்சிதம் சற்று கீழே படுத்தாள். சரியான ஆகாரம் புசிக்காததால் மயங்கிய நிலையில் கண் அயர்ந்தாள். இது தான் சமயம் என்று இரண்டு ஸ்திரீகளும் வெளியேசென்று காவலர்களைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு ஒரு வண்டியிலேறிப் போய் விட்டார்கள்.

அதிக நேரம் சென்று மனோரஞ்சிதம் கண்ணை விழித்தாள். எந்த விடத்தில் படுத்திருக்கிறோம் என்பதை நினைத்து நினைத்து,



கடைசியாக இன்னவிடமென்று நிதானித்து, கண்களைத் துடைத்துக் கொண்டு மெதுவாய் எழுந்து நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தாள். அந்த ஸ்திரீகளிருவரும் காணப்படவில்லை. எவ்வளவு நேரம் தூங்கினேனோ தெரியவில்லை. எல்லாம் மாயா விநோதமாயிருக்கிறது, என்று முன் பக்கத்தில் சாற்றப்பட்டிருந்த ஒரு அறையைத்திறந்தாள். கூடத்தின் தீப ஒளி அவ்வறையிலும் வீசிற்று. ஒரு பொத்தானை அழுத்தி தீபத்தை உண்டாக்கினாள். அங்கே ஒரு மேஜையும் அதில் சில புஸ்தகங்களும் இருந்தன. அங்குமிங்கும் சில நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டிருந்ததைப் பார்த்து, ஆஹா, இது ஒரு வாசகசாலை தான், சந்தேக மில்லை, என்று எண்ணிக் கொண்டு மேஜைக்கருகில் சென்றாள். சுவற்றில் 'டேலிபோன்' இருக்கக் கண்டு மிகுந்த சந்தோஷத்தை அடைந்தாள். அந்த 'டேலிபோனை'ப் பார்த்து, மனிதர்களால் செய்ய முடியாத உபகாரம் உன்னாலன்றோ நடக்கப் போகிறது. ஆ! கடவுளன்றோ காட்டிக் கொடுத்தார். என் கஷ்டம் நீங்கிற்று என்றாள். உடனே மணி அடிக்கும் கருவியைச் சுற்றி விட்டு கைப் பிடியை யெடுத்துப் பேச ஆரம்பித்தாள்; ஆனால் டெலிபோனில் ஒருவர் பேசிக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. 'இரத்தின மாளிகையில் சில திருடர்கள் புகுந்து கொள்ளை யடித்தார்கள். மேலும் தனபதி முதலியாரைக் கட்டிக் கொண்டு போனார்கள். என்னையும் அவ்விதமே செய்தார்கள். ஆனால் தப்பித்துக் கொண்டேன். தாங்கள் உடனே வந்து சேர வேண்டும் இதைக் கேட்டவுடன்' மிகுந்த திகிலடைந்தாள். பேசினது இன்னாரென விளங்கவில்லை. நான் திருடர் கைவசத்தில் தான் இருக்கிறேன் போலும். திருடர்கள் முன் எச்சரிக்கையாக வேலை செய்தார்களா, என்று எண்ணிக் கொண்டு போலீஸ் கமிஷனரை டேலிபோனில் அழைத்தாள்; யாரென்று வினவவும், 'என் பெயர் மனோரஞ்சிதம், திருச்சியிலிருந்து நான் என் தமயனோடு இன்று காலை எழும்பூரில் வந்திறங்கினேன். எங்களை ஏமாற்றி புதுப்பேட்டைக்குக் கொண்டு வந்து எங்கள் இருவரையும் பிரித்து விட்டார்கள். பகலில் ஒரு கடிதம் தங்களுக்கு எழுதியுள்ளேன். அங்கிருந்து தப்பியும் என்னை விடாமல் வஞ்சகமாய் அழைத்து வந்து அடையாற்றிலுள்ள வாசக சாலையில் விட்டிருக்கிறார்கள்.

உடனே வந்து என்னை விடுதலை செய்து என் இருப்பிடம் சேர்க்கக் கோருகிறேன் என்றாள். அப்பொழுதே போலீஸ் கமிஷனர் ஒரு மோட்டார் வண்டியிலேறி அடையாற்றுக்கு வந்து விசாரித்தார். தக்க பந்தோபஸ்தோடு வாசகசாலைக்குச் சென்று காவற்காரர்களை எழுப்பி விசாரித்தார். யாரோ வெளியூர் வாசியாம் இராப்பொழுது தங்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் தான் இருக்கிறதாகச் சொன்னான். உள்ளே சென்று பார்க்க மனோரஞ்சிதம் மாத்திரம் இருக்கக் கண்டார். உன் பெயர் தான் மனோரஞ்சிதமா வெனக் கேட்டார். ஆம், நான் தான் டெலிபோன் மூலமாய் பேசினேன் என்றாள். வேறு மனிதர்கள் இல்லையா என்று கேட்டார். என்னுடன் இரண்டு ஸ்திரீகள் வந்திருந்தார்கள். பசி மயக்கத்தால் தூங்கி விட்டேன். விழித்துப் பார்க்கும் போது ஒருவரையும் காணவில்லை நாலாபக்கமும் சுற்றிப் பார்த்து வரும் போது ஒரு அறையில் டெலிபோன் இருக்கக் கண்டு தங்களுடன் பேசினேன் என்றாள் மனோரஞ்சிதம். போலீஸ் கமிஷனர் கட்டடத்தை முற்றிலும் சோதனை செய்தார். ஒருவரும் காணப்படவில்லை. மனோரஞ்சிதத்தை அழைத்துக் கொண்டு மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தார். இரத்தின மாளிகையில் நடந்த விஷயங்களை விசாரித்தார். சப்இன்ஸ்பெக்டர் சபாபதி முதலியார், கர்ப்பநாயகத்தினிடம் ஸ்டேட்டுமெண்டு வாங்கியதை வாசிக்கக் கொடுத்தார். படித்து விட்டு மற்ற விபரங்களைக் கேட்டார். தானும் இரத்தின மாளிகையைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி சபாபதி முதலியாரை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அப்பொழுது மனோரஞ்சிதம் தானும் வரவேண்டுமென்று சொன்னாள். உன் வீடு எங்கே என்று கேட்டார். இரத்தினமாளிகை தான் என் வீடு என்று சொன்னாள். இதைக் கேட்ட அவ்விருவரும் ஆச்சரியப்பட்டு மௌனம் சாதித்தார்கள். 'தனபதி முதலியார் எனக்குத் தாய்மாமன், இன்று காலை வரும்படி கடிதம் எழுதினார்கள். நாளை ஞாயிற்றுக்கிழமை காலையில் இரத்தினங்களை யெல்லாம் டவுனுக்கு அனுப்பப்போவதாயும் எழுதினார்கள் என்றாள். 'பக்கா திருட்டுவேலை' என்று நினைக்கிறேன் என்று கமிஷனர் சொன்னார். நெடு நாளாய் அறிந்திருந்து செய்த வேலை



யாயிருக்கிறதென்று சபாபதி முதலியார் சொன்னார். உடனே ரஞ்சிதத்தையும் அழைத்துக் கொண்டு இரத்தின மாளிகைக்குச் சென்றார்கள். அவ்விடத்தில் வேலைக்காரர்கள் மாத்திரம் இருந்தார்கள். முக்கியமான அறைகள் பூட்டப்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்தது. வேலைக்காரர்களைக் கொண்டு சில விஷயங்களை விசாரித்தார்கள். மனோரஞ்சிதத்தை இரத்தின மாளிகையில் இருக்கும்படி சொல்லி மற்ற விஷயம் மறுநாள் விசாரிக்கப்படும் என்று சொல்லிச் சென்றார்கள்.

மனோரஞ்சிதத்துக்கு கர்ப்பநாயகத்தின் மேல் சந்தேகம் அதிகரித்தது. இரவு நடந்த விஷயங்களைச் சொல்லும்படி வேலைக்காரர்களை மிக்க அன்போடு கேட்டாள் ரஞ்சிதம். மனோரஞ்சிதத்தைக் கண்டவுடன் வேலைக்காரர்களுக்கு அளவற்ற சந்தோஷமுண்டாய் விட்டது. என்ன அம்மணி போலீஸ்காரரோடு இந்த நடு ராத்திரி வந்தீர்கள். வீட்டு எஜமானைப் பார்த்தீர்களா. நீங்கள் இன்று காலையிலேயே வந்துவிடுவீர்கள் என்று எவ்வளவோ சந்தோஷமாயிருந்தார்கள். திடீரென திருடர்கள் புகுந்து இப்படிச் செய்து விட்டார்கள். ஐயோ, ரத்தினங்களைத் தான் கொஞ்சம் எடுத்துப் போனார்கள் போல் தெரிகிறது. ஐயாவை எதற்காக கட்டிக்கொண்டு போனார்களோ தெரியவில்லையே, என்றாள் வேலைக்காரி வீரம்மாள். 'ராத்திரி காலமாயிருக்கு இல்லாவிட்டால் வெளியே தேடியாவது பார்க்கலாம்' என்றான் ஒரு வேலைக் காரன். மேலும் இரவு நடந்த விஷயங்களை முற்றிலும் கேட்டுத் தெரிந்து கொண்டாள் ரஞ்சிதம். கர்ப்பநாயகம் முற்பட்டு வேலை செய்யக்காரணம் தெரியவில்லை. நான் எவ்விதத்தும் அவன் வேலைகளைக் கவனித்து உண்மையை அறிய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். மறுநாள் காலையிலும் போலீஸார் இரத்தினமாளிகைக்கு அடிக்கடி வந்து பார்த்துச் சென்றார்கள். அப்படிப் பார்த்துச் சென்றவர்களில் ஒருவர் இந்தத் திருட்டுக்கு 'ரங்கநாதன்' என்பவர் உடந்தையா யிருக்கலாமென்றும் அவரை ஏன் அரஸ்டு செய்யக்கூடாது என்று ஆலோசனையில் இருந்து வருகிறது என்றார். மற்றொருவர், 'அவர் ஸ்டாண்டர்டு பத்திரிகையில் உப பத்திராதிபரா யிருக்கிறார். அவர்

மேல் சந்தேகிப்பது நியாயமில்லை என்றார். முதல் மனிதர்—அந்த ரங்கனதம் என்பவர் நேற்றிரவு அவர் வீட்டில் அகப்படவில்லை என்றார். உண்மை வெளிவராமல் போகாது என்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். உடனே கர்ப்பநாயகம் உள்ளே வந்தான். ரஞ்சிதத்தைக் கண்டு முதலாவது திடுக்கிட்டு நடுக்கமுற்றான். ரஞ்சிதம் அதைப்பார்க்காதது போலிருந்தாள். கர்ப்பநாயகம் ஒன்றுமறியாதவன் போல் சிறிது துக்கத்தையும் சந்தோஷத்தையுங் காட்டி 'நீ எப்பொழுது வந்தாய், நேற்று காலையிலேயே வருகிறதாய்க் கேள்விப்பட்டேனே' என்றான். ரஞ்சிதம் பதில் சொல்லாமல் குனிந்த வண்ணமிருந்தாள். என் ரகஸ்யத்தைத் தெரிந்து கொண்டனளோ என்ற சந்தேகம் கர்ப்பநாயகத்தின் மனதில் தோன்றிற்று. மனதை அடக்கிக்கொண்டு, 'நேற்றிரவு நடந்த திருட்டைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய்' என்றான். அதற்கும் பதில் சொல்லவில்லை மனோரஞ்சிதம். அப்பொழுது ஒரு வேலைக்காரன் ஓடி வந்து எஜமானன் வந்து விட்டார்கள் என்று சொன்னான். கர்ப்பநாயகம் திரும்பிப்பார்த்தான். வந்தவர் தனபதிமுதலியார் என்பதாகத் தெரிந்து கொண்டான்.

---

## பிரபஞ்ச விலாசம்.

1. இப்பிரபஞ்சமே நாடகமேடை வாசஞ்செய்வோர் நாடகக்காரராவர்.

2. ஒருவர் தம் வாழ் நாள்களில் சுமார் 50, 60 வருஷங்களில் நிகழக் கூடிய இன்ப துன்பங்களை ஓரிரவு 3, 4 மணி நேரத்தில் நாடகமாய் ஆடிக் காட்டி விடுகிறார்கள்.

3. நாடகம் பார்த்து கருத்தை மாத்திரம் அறிவோர் சொற்பம். ஆள் அழகென்றும், பாட்டு சொகுசென்றும். காட்சி மனோரம்ய மென்றும் அவரவர் மனோ தர்மத்துக்குத்தக்கபடி சொல்வார்கள்.

4. 25 ருபா மாதச் சம்பளம் வரும்போதும் செலவு சரியாகவே யிருந்தது. இப்பொழுது ரு 200 சம்பளம் வரும்போதும் செலவு சரியாய் விடுகிறது. அதிகச் சம்பளம் வாங்கும்போது நூற்றுக்கணக்கான கடன் சற்று துணையாயிருக்கிறது.

5. திணைக்கோட்டை ஜமீந்தாருக்கு என்ன குறை, இராஜ வாழ்க்கை, ஆனால் நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு மாத்திரம் 4 லட்சம் கடன் கொடுக்கவேண்டும்.

6. நீ பிறருக்கு தீங்கு நினைக்கும்போது, அது ஒருவித்தாய்ச்சென்று உனக்கே தீமையுண்டாக்கும். நல்ல எண்ணத்தோடிரு. பிறருக்கு நன்மை செய்,

# கதாரத்னகரம்

1921—செப்டம்பர்

பத்திராதிபர் எம். ஏ. நெல்லையப்பர்.

## அட்டவணை.


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | தமிழ் வைத்தியம் | 137 |
| 3. | ஸ்ரீமான் ஐயாசாமி பிள்ளை யவர்கள் சரித்திரம் | 139 |
| 4. | ஒளி சித்திரம் (போடோகிராப்) | 143 |
| 5. | வேடிக்கை விநோதம் | 146 |
| 6. | ஒரு கிராம உத்தியோகஸ்தர் (விநோதமான கதை) | 149 |
| 7. | பெண்கள் பகுதி | 153 |
| 8. | இயற்கையழகு | 155 |
| 9. | விடு கதைகள் | 157 |
| 10. | கடிதங்கள் | 158 |
| 11. | பகவத்கீதா வாசகம் | 159 |
| 12. | இரத்தினமாளிகை | 161 |



### கதாரத்னகரம் 3 ம் தொகுதி.

நமது கதாரத்னகரம் மூன்றாவது தொகுதி வேண்டுமென்று அநேகர் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். 1920 நவம்பர் மீ முதல் தொடர்ந்த நாவல்கள் ஆரம்பம் செய்திருக்கிறபடியால் அந்த மாதத்திய—அதாவது 6-வது சஞ்சிகையிலிருந்து 12-வது சஞ்சிகை வரை ஆக 7-ம் கிடைக்கும் 7 சஞ்சிகைகளின் விலை ரூ 1-4-0.

மானேஜர், "சுதேசமித்திரன்" ஆபீஸ், சென்னை.

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்.

ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்ம்மை யேனெ னெம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய் கலந்த வன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே.

வேண்டுநின் கழற்க ணன்பு பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை யாவ வென்ற ருளுநீ
பூண்டு கொண்ட டிய னேனும் போற்றி போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே.

வணங்கு நின்னை மண்ணும் விண்ணும் வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று மற்றொ ருண்மையின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க வென்கொலோ நினைப்பதே.

நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினாற்
றினைத்த னையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத் துலகு மாய நின்னை யைம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த தெந்தை பாத மெய்தவே.

எய்த லாவ தென்று நின்னை யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும் வண்ண மில்லை யீசனே.

ஈசனே நீ யல்ல தில்லை யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனொர் பேத மின்மை பேதை யேனெ னெம்பிரான்
நீச னேனை யாண்டு கொண்ட நின்ம லாவொர் நின்னலாற்
றேச னேயொர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே.

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரி லைம்பு லன்களான்
முந்தையான கால நின்னை யெய் திடாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்திலேனெ னுள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்ன மெய்த லுற்றிருப்பனே.

திருவாசகம்.

உ

கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்

Vol. 4. தொகுதி 4. | September, 1921 துன்மதிஸ்ரீ புரட்டாசிமீ | No. 4. பகுதி 4.

# தமிழ் வைத்தியம்.

தமிழ் நாடு தனி நாடு என்றும், பாஷை முதல் சகல காரியங்களுக்கும் இதர தேசத்தோடு யாதொரு சம்பந்தமுமில்லை யென்பதும் அனுபவமுள்ளோர்க்கு நன்கு புலப்படும். தமிழ் நாட்டில் அனுசரிக்கப்படும் வைத்தியமும் பிரத்தியேக மென்பது சொல்லாமலே விளங்கற்பாலது. ஆயுர்வேத வைத்தியத்துக்கும் தமிழ் வைத்தியத்துக்கும் எவ்வகையில் சம்மந்தம் ஏற்பட்டிருக்கிறதென்பதை விசாரித்தறிவோம்.

ஆயுர்வேதத்துக்கு மூலக்கிரந்தங்கள் எவையென்று கவனிக்கில் சுஸ்ருதம், சரகம் என்பனவாகும். இவ்விரண்டு நூல்களுக்கும் ஆக்கியோர்களின் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. ஆயுர்வேதத்தை அனுசரிக்கிறவர்கள் மேற் கண்ட வடமொழி நூல்களை முதன்மையாகக் கொண்டு அநேக நூல்களை வெளியிட்டிருக்கிறார்

கள். தேசந்தோறும் பாஷை வேறு என்பது போல சீதோஷ்ண ஸ்திதிக்குத்தக்கவாறு ஔஷதமும் மாறுபட்டிருக்கும் என்பதை ஏற்க வேண்டுவதாகும். இன்னும் சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்ற வாறு சரீரக்கூறும் அமைந்து வருகிறது. எனவே தேசம் தோறும் ஆகாரத்திலும் பேதமுளதென்று சொல்ல வேண்டுவ தில்லை. தமிழ் நாட்டில் உபயோகிக்கப் பட்டு வருகிற சில புற் பூண்டு களுக்கு வடமொழியில் பெயர் இல்லை யென ஆராயப்பட்டிருக் கிறது.

சென்ற மாதம் சென்னை பெத்து நாயக்கன் பேட்டை சுப்பிர மணியம் இலவச பாடசாலையில், தமிழ் வைத்தியத்தைப்பற்றி டாக்டர் மதுரமுத்து முதலியார் பேசும் போது, வடமொழியில் (தூது) வேளை, குப்பை மேனி கீரைகளுக்கு பெயர் விசாரித்ததில் இல்லை யென்றே முடிந்ததெனவும் மேற்கு முகமாய் ஓடும் நதியின் ஜலமே சர்வ சிலாக்கியமென்று ஆயுர்வேதத்தில் சொல்லுவதால், ஆயுர்வேதம் விந்திய பர்வதத்துக்கு வடக்கேயுள்ள தாகையால், ஆயுர்வேத வைத்தியம் தமிழ் வைத்தியமாகா தென்றும், தமிழ் நாட்டில் மேற்கு முகமாய்ப் போய் சங்கம மாகின்ற நதி யொன்றும் இல்லை எனவும் சொன்னார்கள்.

தமிழ் வைத்திய நூல்கள் சித்தர்களால் ஆக்கப் பெற்று அனு பவ நூல்களாய் இருந்து வருகின்றன. தமிழ் வைத்தியத்தைப் பற்றி பேசு மொரு நூலில், பசி யென்பது நித்தியப் பிணி யென் றும், அதற்கு ஆகாரமே அரு மருந்தெனவும், சொல்லப்பட்டிருக் கிறது. சுகாதாரத்துக்கான வழிகளெல்லாம் வைத்திய சம்பந்தப் பட்டதேயாகும்.

வைத்தியர்களாவது வித்துவான்களாவது ஒன்று கூடி ஒரு காரியத்தைச் செய்து முடிக்க முடியாத காரிய மென்று தொன்று தொட்டு வழங்கி வருகிறது. எத்தனையோ மாறுதல்களடைந்த இந்த நாகரிக காலத்தில் தொன்று தொட்டு வரும் வழக்கம் நீங்கி விடு மென்றே நினைக்கிறோம். இனியாவது அனுபவமுள்ள தமிழ் வைத்தியர்கள் ஒன்று கூடி பழய நூல்களை புதுப்பித்து தமிழ் வைத்தியத்துக்கு ஒரு கலாசாலை ஏற்படுத்துதல் நம் தேச முன் னேற்றத்துக்கு ஒரு சாதனமாகும்.

இவ்வித காரியங்களுக்கு திரவிய சகாயம் செய்வதற்கு தர்மப் பிரபுக்கள் மூன் வந்து தக்க மனிதர்களைக் கொண்டு நடத்துவார் களென நம்புகிறோம்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நகர பரிபாலன சபைகளி
னங்கத்தினரும், பாளையங்கோட்டைச் சைவ சபையின்
காரியதரிசியும், திருநெல்வேலி வேளாளர் கல்வி
அபிவிருத்தி சங்கஸ்தாபகரும், திருநெல்
வேலி இந்து கலாசாலை அங்கத்
தினரும், பிரபல சட்ட
நூல் வல்லுநரு
மாயிருந்த

# ஸ்ரீமான் பி. கே. ஐயாசுவாமிப் பிள்ளை

## அவர்களின் சரித்திரச் சுருக்கம்.

'உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்' —தேவர் குறள்.

அன்பே உருவாய், பொது நலமே தன்னலமாய்ப் பிறர் சுகமே தன் சுகமாய், செந்தமிழ் தாண்டவமாடா நிற்கின்ற திருநெல்வேலி ஜில்லாவில் தற்காலந்தோன்றிய புண்ணிய சீலர்களுக்குள்ளே முதன்மை வாய்ந்த பெருந்தகைமைப் பேராளர் ஸ்ரீமான் ஐயா சுவாமிப் பிள்ளையவர்கள். வாய்மை, அன்பு, சாந்தம், கருணை, பரோபகாரம், என்று சொல்லப்படுகின்ற நற்குணங்களே உரு வெடுத்துத் தோன்றிய வள்ளல்.

அகத்திய முனிவனுக் குறைவிடமாகிய திருநெல்வேலி நாட் டில், பெருமைவாய்ந்த சைவவேளாண் மரபில் சுமார் 43 ஆண்டு கட்கு முன்னர் தன் பெற்றோர்க்கு நான்காந் தோன்றலாகப் போந்து செல்வமாய் வளர்க்கப்பட்டுச் சிறுவயதில் மெட்ரிக்குலே ஷன், இன்டர்மீடியட் முதலிய பரீக்ஷைகளில் உயர்வு பெறத் தேறி, சுதேச அரசநாடாகிய திருவிதாங்கூரிலும், ஞான பூமி யாகிய இச்சென்னைமா நகரிலும் பயின்று, பீ. ஏ. பரீக்ஷையில் தேர்ந்து, 30 வது பிராயத்தில் அதாவது 1910ம் வருடத்தில் பி. எல். பரீக்ஷையில் தேர்ச்சியுற்று, பாளையங்கோட்டை என்று சிறப்புற்று வழங்கும் நகரத்தில் வக்கீலாக அமர்ந்து அந்நகருக்கே

பிரதம அணிகலனாகவும், திலகமாகவும் விளங்கினர். வக்கீல் உத்தியோகத்திலும், தனக்கு ஒப்பவரும், மிக்கவருமில்லையெனப் பிரகாசித்து நல்ல ஊதிய மடைந்துவருங் காலை, பொதுநலத்துக்குப் பாடுபட ஓர் கிளர்ச்சி அவர்கள் உள்ளத்திற்றோன்றி, நெல்லையம்பதியின் நகரபரிபால சபையின் அங்கத்தினராகவும், பாளையங்கோட்டை நகர பரிபாலன சபையின் அங்கத்தினராகவும் பல்லாண்டுகளாகவிருந்து பொது ஜனங்களுக்கு ஊழியஞ் செய்துவந்தனர். ஆங்கிலத்திலும் தமிழிலும் அளவிறந்த ஆற்றலும்,சைவசமயத்தில் ஆழ்ந்த பக்தியும் ஏற்பட்டிருந்தமையான் இவர்களின் கீர்த்தி எங்கணும் பரவுதலாயிற்று. தமிழையும், தமிழரின் பெருமையையும் காக்க ஏற்பட்டுள்ள தமிழர் ஆராய்ச்சி சங்கத்தின் (Tamilian Archæological Society) காரியதரிசிகளிலொருவராய் பலகாலமிருந்து வந்தனர். திருநெல்வேலி ஜில்லாவில் இவர்கள் ஏறி பிரசங்கமாரி பொழியாத மேடையே கிடையாது. கல்வியபிவிருத்தியைப் பற்றியோ, சன்மார்க்கப் பொருள்களைப்பற்றியோ, ஆசாரசீர்திருத்த விஷயங்களைக் குறித்தோ இவர்கள் செய்திருக்கும் உபந்நியாசங்கள் அளவிறந்தன.

சைவச்சிறார் கல்வி கற்று முன்னேற்ற மடைய வேண்டுமென்ற பேரெண்ணத்தால், தம்மைப் போன்ற சீரியோர் சிலரைக் கலந்து, நெல்வேலி நகரத்தில் 'வேளாளர் கல்வி யபிவிருத்தி சங்கம்' என்ற கழகத்தை நிலைபெற நாட்டி ரூபா 20,000-க்கு மேல் நிதி சேகரித்து வைத்து அதன் அமைச்சராக இருந்து வந்தனர். இச்சங்கம், இன்னும், பற்பல ஏழை மாணவர்கட்குப் பண உதவி செய்து வருகிறது. அச்சங்க உதவியாற் கல்வி கற்றுச் சிலர் உன்னத பதவி யிலிருக்கின்றனர். மதப்பற்று அதிகமாயிருந்தபடியால், பாளையங்கோட்டைச் சைவ சபையின் காரிய தரிசியாய் அமர்ந்து;. அச்சபையின் முதற் கான்பரன்சை அருமை பெருமையாய் நடப்பிவித்துச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள நேகஞ்செய்தனர். இது வன்றித் தன்னில்லத்திற்கு வரும் சிவனடியார்களையும், விருந்தினர்களையும் அன்புடன் நாடோறும் வரவேற்று, அவர்கட்கு வேண்டும் நல்லுபசாரங்களைச் செய்து, காலம் போக்குவர். சைவ மதத்தின் மீது கொண்ட



பக்தியினால் தன்புத்திரனுக்கு 'சேக்கிழார்' என்றும், தன் தலைப் புத்திரிக்கு 'மெய்கண்டாள்' என்றுஞ் செல்வப் பெயர்புனைந்து சந்தோஷ முற்றனர். தன்னகத்துக்கு யார் வந்தாலும், ஜாதிமத பேதம், ஏழை செல்வவான், கற்றவர் கல்லாதவர், என்ற வித்தியாசம் பாராட்டாது, யாவரையும் ஒருங்கே நேசித்து, அன்ன மூட்டிய அன்னதாதா. இவர்தம் சீரிய ஒழுக்கங்களை அரசாங்கத்தினர் உணர்ந்து பாளையங்கோட்டை ஜெயில் குற்றவாளிகளுக்குச் சன்மார்க்க உபதேசஞ் செய்யவும் வேண்டிக் கொண்டனர்.

மேற்கூறிய பொது ஊழியங்களன்றியும் அரசாங்க விஷயத்திலும் தன் அந்தியகால சமீபத்தில் ஈடு பட்டனர். அவர்களுக்கு ஸ்ரீ கோகலே, ஸ்ரீ ரவீந்திரநாத் டாகூர், ஸ்ரீ மேத்தா, ஸ்ரீ சுரேந்திரநாத் பானர்ஜி, ஸ்ரீ டாக்டர் நாயர் போன்ற உண்மைத் தேசபக்தர்கள்பால் மிகுந்த அன்பும் அபிமானமுமுண்டு. 1917-ம் வருஷம் நெல்லையம்பதியில் தென்னிந்திய நல உரிமை சங்கத்தின் ஆதரவில் தெலப்பிரோல் ஜமீன்தார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஜில்லாக்கள் கூட்டுக்கான்பரென்சின் காரியதரிசியாக இருந்து பல அரும் பெரும் வேலைகள் புரிந்து வந்ததும் அநேகருக்குத் தெரிந்ததே.

இவ்வகை பெருஞ் சிறப்புற்றோங்கிய கனவான், தான் இப்பூவுலகில் அவதரித்த கருமம் சித்தியடைந்து விட்டதென்றோ, கடவுளின் ஆக்ஞையை சிரமேற் கொண்டோ, திடீரென தமது 38 வதுவயதில், 1917 ம் வருடம் டிசம்பர் மாதம் 5-ந் தேதி காலை "காலரா" என்ற கொள்ளை நோய்க்காளாய்க், கற்பரசியாகிய மனைவியார், இளஞ்சிறாரான புத்திரபுத்திரிகள், வயது முதிர்ந்தபெற்றோர், இதர சுற்றத்தார், நண்பர், கதறியழ, இரவு 12-மணிக்குச் சிவபதமடைந்தனர். காலஞ்சென்ற செய்தி காட்டுத்தீ போல எப்பாகமும் பரவி, கூட்டங் கூட்டமாக ஜனங்கள் சூழ்ந்து கன்றை யிழந்த பசுப்போல ஆற்றொணாத் துயரடைந்தனர். இடைக்காடர் பிணக்குத் தீர்க்க சொக்கேசர் மதுரையை நீங்கியபோழ்து, மதுரையம்பதி எப்படி பொலி வழிந்ததோ அவ்வண்ணம், இவ்வறிஞர் காலமெய்திய பின்னர் நெல்லைநாடே பொலிவழிந்து விட்டது.

சென்னையிலுள்ள ஆங்கிலம், தமிழ், பத்திரிகைகள் இத்துயரமான விஷயத்தை பிரசுரித்துப் புலம்பின. இரங்கற்பாக்கள் குவிந்தன. ஞாபகக்கூட்டங்களும் எண்ணற்றன கூடின. நட்பினர் பலர் கூடி, அவர்கள் ஞாபகத்துக்காக மண்டபங்கட்டி, பெரிய லைப்ரரியொன்று ஏற்படுத்தி, அவர்கள் பேர் என்றும் நிலைநிற்க வேண்டும் ஏற்பாடுகள் செய்தனர். ஏ! நெல்லுக்கு வேலியமைத்த நெல்வேலிநாதா! இப்பெரியார் ஆத்மாவுக்குச் சாந்தி யளிப்பாயாக.

ஸ்ரீமான் ஐயாசுவாமிப் பிள்ளை அவர்கள், தமது வாழ்நாளிற் செய்யவேண்டுமென்று எண்ணிய பெருங்காரியங்களை முடிவுக்கு கொண்டு வராமல் அன்னவர்கள் திடீரென உயிர் துறந்தமை யாவருக்கும் அளவிறந்த துன்பத்தை விளைத்தது. எனினும் அவர்கள் சூக்ஷுமவுடம்பினின்று அவர்கள் கோரிய காரியங்களை இனிது பெற முடித்து வைப்பர் என்ற எண்ணம் மற்றொருபால் மகிழ்வைத்தருகின்றது.

இச்சரிதத்தை வாசிக்கும் சகோதர சகோதரிகளே!—கடவுள் பக்தியும், அன்பும், கருணையும், இரக்கமும், தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்தல், பொது நல உழைப்பு என்ற சீரிய ஒழுக்கங்களும் செய்கைகளும் அமைந்து பிரபலமடைந்த இப் பெரியாரின் சரிதச் சுருக்கத்தை எல்லோரும் வாசித்துப் பயனடைய வேண்டுமென்ற அவா வினாலும், அவர்களின் சகோதரி புதல்வனாகிய என்னையும் குழந்தைப் பிராயமுதல் வளர்த்துக் கல்விபுகட்டி வந்த ஓர் பேருபகாரத்துக்கு நன்றி செலுத்தவேண்டிய கடமையை முன்னிட்டும், இப்பெரியார் சரிதையை வரையலுற்றேன்.

ஓம் சிவாயநம.

"வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெலா மரனாமமே
சூழ்கவையக முந்துயர் தீர்கவே.

சுதேசமித்திரன் லிமிடெட், } எம். பி. எஸ். வேலாயுதம்,
சென்னை. } அட்வர்டைஸ்மென்ட் அஸிஸ்டன்ட்.

# ஒளி சித்திரம்
## அதாவது
# போடோகிராப் என்பது என்ன ?

1. வெள்ளியினால் செய்த தண்ணீர் போன்ற மருந்தினால் கண்ணாடியில் படம் எடுக்கும் விதம். இருட்டான ஒரு வீட்டிற்குள்ளிருந்து ஒரு கண்ணாடியின் ஒரு பக்கத்தில் "கலோடியன்" என்னும் மருந்தைக் கொஞ்சம் விட்டால் கண்ணாடியின் மேல் அது படியும். சற்று காய்ந்தவுடன் வெள்ளியினால் செய்த தண்ணீரில் கண்ணாடியை சற்றுநேரம் ஊரவைத்து எடுத்து இருட்டு அறைப் பெட்டியில் வைத்து வெளியே கொண்டுவந்து படம் எடுக்கும் பெட்டியின் பின்புறத்தில் அதற்குரிய இடத்தில் வைத்துவிட்டு முன்பக்கத்து குழல் கண்ணாடியின் மூடியை திறந்தால், முகம் பார்க்கும் கண்ணாடியில் நம்முடைய உருவம் காணப்படுவது போல, மருந்து ஏற்றியிருக்கும் கண்ணாடியில், முன் பக்கத்திலிருக்கும் மனிதன் அல்லது, வீடு முதலானவைகளின் உருவம் காணும். இவ்விதமாய்த் தெரியும் உருவத்தின் அல்லது மனிதனின் வெளிச்சம் பட்டவுடன் அதிலுள்ள மருந்து இரண்டுவிதமாய்ப் பிரியும். எப்படியெனில் பிரகாசமாய் வெளிச்சம் பட்ட இடங்களிலுள்ள மருந்து காய்ந்து போம். நிழல் கட்டிய அல்லது இருண்டதாய்க் காணும் இடங்களிலிருக்கும் மருந்துகள் காயாமல் ஈரமாகவே இருக்கும். இப்போது முன்னிருந்தபடியே எல்லாவற்றையும் மூடி இருண்ட வீட்டிற்குள்ளாகக் கொண்டுபோய் அந்த மருந்து ஏற்றியிருக்கும் கண்ணாடியை எடுத்து அதின்பேரில் சில மருந்துகளை விட்டால் முன் சொல்லியபடி காய்ந்த இடங்கள் பதிந்தும், ஈரமான இடங்கள் கழுவப்பட்டும் போவதினால் உருவம் அந்தக் கண்ணாடியில் பரிஷ்காரமாய்க் காணப்படும். இப்போது இதை சுத்த ஜலத்தினால் கழுவி வேண்டிய மருந்துகளை விட்டு பத்திரப்படுத்திக்

கொள்ளவேண்டியது. இது தான் கண்ணாடியில் படம் உண்டாகும் மர்மம்.

2. கண்ணாடியில் எடுத்திருக்கும் படத்தைக் காகிதத்தில் எப்படி எடுப்பதென்றால், ஒளி சித்திரம் எடுப்பதற்காகவே பிரத்தியேகமாய் காகிதங்கள் ஆங்கிலேய தேசத்தில் செய்து விற்கிறார்கள். அதை வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு வெள்ளியினால் செய்த மருந்தை இருட்டான விடத்தில் வைத்துக்கொண்டு அதில் காகிதத்தை நனைத்து இருட்டிலேயே காயவைத்தெடுத்து முன் கண்ணாடியில் எடுத்திருக்கும் படத்தின் பேரில் வைத்து அதற்குரிய சட்டத்தில் வைத்து, அசையாமல் பிடித்துக்கொண்டு வெளிச்சத்தில் காண்பித்தால் கண்ணாடியில் மருந்து படர்ந்து அடர்த்தியாயிருக்கும் பாகம் சூரிய வெளிச்சம் படாமல் மறைத்துக் கொள்வதினால் வெளுமையு மாயும், மருந்து கழுவப்பட்ட விடத்தில் காகிதத்தின்மேல் சூரிய வெளிச்சம் படுவதால் கறுத்தும்போய் கண்ணாடியிலுள்ள உருவத்தைப்போலவே காகிதத்திலும் காணும். இதை இருட்டான இடத்திற்குக் கொண்டுவந்து அதற்காகத் தயார் செய்திருக்கும் மருந்துகளில் ஊரவைத்துக் கழுவி எடுத்தால் அந்த உருவம் அல்லது படம் கெடாமல் அதில் பதிந்த வண்ணமா யிருக்கும். இதை தக்க அளவாய் வெட்டி கனதியான அட்டையில் ஒட்டி கண்ணாடி சட்டத்தில் வைத்து வீட்டின் சுவர்களில் தொங்க விட்டால் அலங்காரமா யிருக்கும். இதுதான் ஒளிசித்திரத்தின் (போடோ கிராப்) மர்மம்.

இவைகளைச் சுலபமாய் பரீக்ஷிக்க விரும்பினால் மருந்துக் கடைகளில் விற்கப்படும் காடிக்காரத்தை வாங்கி வந்து மழைத் தண்ணீரில் கலக்கி மேற் சொன்ன போடோ கிராப் எடுக்கும் காகிதமான "அல்பியூமன் நயிட்ஸ்" காகிதத்தை இருண்ட விடத்தில் நனைத்துக் காய வைத்துக்கொண்டு, ஒரு கண்ணாடியை எடுத்து விளக்கின்மேல் பிடித்தால் ஒருவிதமான கறுத்தமை படியும். அதில் ஊசியைக் கொண்டாவது, பேனாவைக் கொண்டாவது, வேண்டிய உருவம் அல்லது, எழுத்து எழுதி அதின் மேல் முன் தயார் செய்து வைத்திருக்கும் காகிதத்தை



வைத்து சூரிய வெளிச்சத்தினில் காட்டினால், கறுத்தமை படிந்திருக்கும் பாகங்கள் வெளுத்தும், எழுத்து உள்ள விடங்கள் கறுப்புமாகிக் காட்டும். இம்மாதிரியாகத்தான் ஒளி சித்திரம் உண்டாகிறது. இந்தப்படங்கள் முச்சிகள், கையினால் எழுதி வர்ணம் வைக்கும் படங்களைப் பார்க்கிலும் பத்து பங்கு நலமாயும் எல்லா அவயவங்களும் உள்ளது உள்ளபடியேயும் காட்டும். ஆனதால் சந்தேக நிவர்த்தி செய்து கொண்டு எல்லோரும் ஒளிசித்திரம் எடுத்துக் கொள்வார்களாயின் நாம் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்து தூர தேசங்களுக்குப் போகுஞ் சமயங்களிலும், பிரபஞ்ச வாழ்வை விட்டு நீங்குங் காலங்களிலும் பின்னடியார்கள் அவைகளை எதிரில் வைத்துப் பார்க்கத் தகுதியாயும் ஆறுதலாயு மிருக்கும்.

மஹாபாரதத்தில், பாஞ்சால மஹாராஜன் புத்திரகாமேஷ்டி யாகத் தீயில் பெற்ற பெண்ணாகிய துரௌபதைக்கு மணம் முடிக்க யோசித்தபோது, வேத வியாச மஹா முனிவர் துரௌபதையைப் போல படமெழுதி அரசர்களுக்கு அனுப்பும்படியாகச் சொன்னபோது பாஞ்சால மஹா ராஜனால் அழைக்கப்பட்ட சித்திரக்காரர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து குருவிழி விழித்து உலகத்தில் சாதாரணமாய் பிறக்கின்ற மாந்தர்களை எழுதுவதற்கே நமக்கு கனவருத்தமா யிருக்க புத்திர காமேஷ்டியாகத் தீயில் உற்பத்தியாகி, சொர்க்க மத்ய பாதாள உலகங்களிலிருக்கும் அழகினுயர்ந்த மாதர்களெல்லாம் மயங்கித் தொழும் சௌந்தர்ய உருவமாகிய துரௌபதையை எவ்வாறு எழுதப்போகிறோமென்று திகைத்தார்களே. அவ்வளவு கீர்த்திபெற்ற முச்சிகளே மயங்கும்போது இக்காலத்து முச்சிகள் சரியானஉருவந் தோன்ற எழுதுவது கடினமாகு மென்பது எல்லாருக்குந் தெரியவரும்.

# வேடிக்கை விநோதம்.

1. கிருஷ்ணன்:—சிலநாய்கள் வெகு புத்திசாலியாய் இருக்கின்றன.

இராமன்:—சிலவை தங்கள் யஜமானர்களைக்காட்டிலும் புத்திசாலி யாயிருக்கின்றன.

கோபாலன்:—என்னுடைய நாயும் அப்படியே தான்.

---

2. ஒருவன் தன் சிறியபிள்ளைக்கு ஒருகணக்குக்கொடுத்து அதைப் போடச்சொன்னான். அந்த பையன் கணக்கைப் படித்து விட்டு அதை போட முடியாது என்றான். தகப்பன் ஏன் போட முடியாது என்று கேட்டு அந்தக் கணக்கைப் படிக்கச் சொன்னான். பிள்ளை கணக்கை பின்வருமாறு படித்தான்:—உனக்கு உங்க தகப்பனார் 0—12—0 அணா கொடுக்கிறார். நீ அதில் 4 அணாவுக்கு ஒரு பந்தும், 2 அணாவுக்கு ஒரு பம்பரமும் வாங்கிக் கொண்டால் உன்னிடத்தில் எவ்வளவு மீதி இருக்கும். படித்து விட்டு பிள்ளை சொன்னதாவது:—"அப்பா, நீ ஒரு நாளாவது உன் தலையணையின் அடியிலிருக்கும் பெட்டியிலிருந்து எடுத்து என் கண்ணில் ஒரு அணா காண்பித்திருக்கிறாயா? அது அப்படி யிருக்க நீ எப்படி என்னிடத்தில் பன்னிரண்டணா கொடுப்பாய். இதெல்லாம் பகல் கனவுபோலிருக்கிறதே" என்றான். தகப்பன் வெட்கமுற்று மற்றொரு கணக்கை போடச்சொன்னான்.

---

3. ஒரு கணவனும் மனைவியும் ரெயில் ஸ்டேஷனுக்கு அவசரமாய்ச் சென்றார்கள். அதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டிருந்



தது, மனைவி அதைக்கண்டு கணவனிடம் "நீ அவ்வளவு நேரம்சட்டையணிந்துகொள்ளா திருந்திருந்தால் நமக்கு ரெயில் தப்பியிருக்காது" என்று சிறிது கோபத்துடன் சொன்னாள். அதற்கு கணவன் "நான் சட்டையணிந்து கொள்ளும்பொழுது நீ அவ்வளவு அவசரப்படுத்தாம லிருந்திருந்தால், நாம் இவ்வளவு நேரம் இரண்டாம் வண்டிக்கு காக்காமலிருந்திருக்கலாம்" என்று சொன்னான்.

---

4. சென்னையில் பறந்து கொண்டிருந்த ஆகாயக் கப்பலை பார்த்த 'குப்பன்' என்ற கிராமவாசி தன் பள்ளிக்குச் சென்று தான்பார்த்ததைச் சொன்னான். அவன் சொன்னதாவது" ஏர்றப்ளேன்னு ஒனு இருக்குது. அதிலே மனுஷாங்கோ ஏறி மேலே ஆகாசத்லே ஏர்றாங்கோ. அவங்கோ எப்படி எறங்கராங்கோ தெரிமா?" என்றான். அதற்கு அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவன் திடீரென்று எழுந்து, எனக்கு தெரிமே. 'ஏர்றப்ளேன்' லே மேலே ஏர்றாங்கோ "இரங்கர ப்ளேன்லே" மேலிருந்து இரங்கராங்கோ இது தெரியாதா"? என்றான்.

---

5. ஒருவன் 'அரிஸ்டோடல்' (Aristotal) ஐ 'பொய்சொல்வோர்கள், தாங்கள் பொய் சொல்வதினால் என்ன இலாபம் அடைகிறார்கள்' என்று கேட்க அவன் சொன்னதாவது, அவர்கள் அடையும் இலாபம் ஒன்றே. அதாவது அவர்கள் உண்மை பேசின பொழுதும் ஜனங்கள் அவர்களை நம்புகிறதில்லை.

---

6. ஓர் ஊரின் தலைவன் 'இரவில் ஒருவனும் கையில் (Candle) கியாண்டல் விளக்கு இல்லாமல் போகக்கூடாது' என்று ஒரு கட்டளை விடுவித்தான். அதே இரவு அவன் அந்த நகரவாசி ஒருவன்மீது மோதிக்கொண்டான். உடனே நகரத் தலைவன் ஏன் விளக்கைக்கொண்டு வரவில்லை யென்றான். உடனே நகரவாசி தன் விளக்கை காண்பித்தான். 'ஆனால் அதில் மெழுக்குவத்தி யில்லையே' என்று நகரத் தலைவன் கேட்டான். அதற்கு நகரவாசி' விடு

வித்த கட்டளை மெழுக்கு வத்தியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே'' என்றான். மறு நாள் விளக்குகளுக்குள் மெழுக்கு வத்தி இருக்க வேண்டுமென்று ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதே இரவு அந்த நகரத்தலைவன் முதல் நாள் கண்ட நகரவாஸியின் மீது மோதிக்கொண்டான். உடனே கோபம் கொண்டு உன் விளக்கும் அதில் மெழுக்குவத்தியும் எங்கே என்று கேட்டான். உடனே அவைகளை அவன் காண்பித்தான். அதற்கு தலைவன் 'மெழுக்கு வத்தி ஏற்றில்லையே' என்று சொன்னான். அதற்கு நகரவாஸி ''மெழுக்கு வத்தி ஏற்றிவைக்க வேண்டும் என்று கட்டளை சொல்லவில்லை'' என்றான்.

---

7. ஒரு பையன் ஒரு கடையின் கண்ணாடி ஜன்னல்களை உடைத்து விட்டு வெகு வேகமாய் ஓடிப்போனான். உடனே ஒரு போலீஸ்காரன் அவன் பின்னால் ஓடிப்போய் கடைசியில் அவனைப் பிடித்தான். ஏன் ஓடுகிறாய் என்று கேட்டதற்கு அவன் ''அபராதத்திற்காக பணத்தை விரைவாய் வீட்டிலிருந்து கொண்டு வரலாம் என்று ஓடினேன்'' என்று சொன்னான்.

---

8. ஒரு இரவு ஒரு வீட்டில் திருடிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு போலீஸ்காரனிடத்தில் ஒரு திருடன் அகப்பட்டுக் கொண்டான். 'ஏன் திருடவந்தாய்' என்று கேட்டதற்கு திருடன் ''போலீஸ்காரர்கள் சரியாய் வேலை செய்து, திருடன் இருந்தால் பிடிக்கவல்லமை உடையவர்களாயிருக்கிறார்களா என்று பரிசோதிப்பதற்காக'' என்றான்.

---

9. ஒருவன் மற்றொருவனிடத்தில் பத்து ரூபா இருக்கக் கண்டு அதில் 5 ரூபா தான் எப்படியாவது அடையவேண்டுமென்றெண்ணி, அவனுடன், ''நீ என்னிடத்தில் ஐந்து ரூபா கொடுத்தால் உன்னிடத்தில் எவ்வளவு மீதி இருக்கும் சொல்லு. பார்க்கலாம்'' என்றான். உடனே அவன் 10 ரூபாய் மீதியிருக்கும் என்று அந்த தந்திரத்தை அறிந்து சொன்னான்.

---

# விநோதமான கதை

ஒரு கிராம உத்தியோகஸ்தர்.

முன்பு ஒரு காலத்தில் கிருஷ்ணாபுரி யென்னும் ஊரில் முகுந்த மாதவமுனிசாமிஐயர் என்னும் அந்தணன் ''கிராமகர்ணம்'' வேலை பார்த்து வந்தார்.

மேலுத்தியோகஸ்தர்களும், கிராமத்திய ஜனங்களும், நமது அய்யரைப்பார்த்தால், ஏகர்ணம், ஏகர்ணம், என்றழைப்பதானார்கள். அதனால் நமது அய்யருக்கு மிக்க ஆயாஸமுண்டாகி ''நம்மை எவர் பார்த்தாலும் ''ஏகர்ணம் ஏகர்ண'' மென இழிவாகக்கூப்பிடுகின்றார்கள், மதிப்புகிடையாது'' என யோசித்தவராய் பழய கரணம் வேலையை இராஜிநாமாக் கொடுத்துவிட்டு வேறுயாது தொழில் புரியலாமென யோசனை செய்து அடிசிற் தொழில் புரிந்தால் வருமானம் மிகுதியாகவரும்; இஷ்டப்படி சாப்பிடலாமென நினைத்து அடுத்த ''நாராயணபுரியில் , சமையல் சங்கரய்யர்'' என்னும் பிரபல சமையற்காரரிடம் சென்று தன்னை சம்பளத்திற்கு வைத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்க, சங்கரய்யரும் அவ்விதமே தன்னிடத்திலமர்த்திக் கொண்டார்.

சில நாட் சென்றதும் அவ்வூரில் பெருத்த கனவானாகிய ''நவகோடி நாராயண பட்டர்'' என்னும் அந்தணனது கிரகத்தில் விவாஹம் நடைபெற்றது.

மேற்படி விவாஹத்திற்கு நமது அய்யர் வகுப்பார் சமையற் செய்தார்கள். சாப்பாட்டுக்கு இலை போட்டு பரிமாரப்பட்டு போஜனம் செய்து கொண்டிருந்தார்கள். நமது அய்யர் மூக்கு வைத்த தூக்குச் சட்டியில் சாம்பார் எடுத்துவந்தார். பந்தியில் உட்கார்ந்

திருந்த ஒரு பையனுக்கு நமது அய்யர் எடுத்து வந்தது இன்னதென தெரியாததால் "ஏ கோகர்ணம்" இங்கு கொண்டு வா வென அழைத்தான்.

பார்த்தார் அய்யர், வந்தது கோபம், அட பாபமே, "நாயைப் பார்க்க நரி நல்லது; அது ஊரைப்பார்த்து ஊளையிட்டுதா" மென விருக்கின்றது. போதும் போதும் இத்தொழிலே வேண்டாம். கர்ணம்போய் கோகர்ணம் வந்தது, என நினைத்து உடனே அவ் வேலையை விட்டுவிட்டு கிருஷ்ணபுரிக்குச் சென்று, வேறு யாது தொழில் புரியலாமென யோசனை செய்து மல்லயுத்தப் பயிற்சி செய்தால் தக்க வெகுமானங்களும் கிடைக்கும், கௌரதையுமுண்டென நினைத்து "இராமனாதபுரத்தில் மல்ல யுத்தத்தில் அநேகம் பொன் வெள்ளி மெடல்களும் தங்கப் பட்டயம் பிருது முதலியதுகள் பெற்று கீர்த்திபெற்ற "ஜயகீர்த்திலிங்கு" என்பவரிடம் சென்று தனக்கு மல்லயுத்தப் பயிற்சி செய்விக்க வேண்டுமென, அதற்கு லிங்கு நமது அய்யரை உற்றுநோக்கி அங்கலக்ஷணங்களெல்லாம் பொருந்தி வாட்டசாட்டமாக விருக்கின்றதாவெனப் பார்த்து சகலமும் பொருந்தி யிருப்பதால் அன்றையதினத்திலிருந்து சிக்ஷை சொல்லிவந்தார். சின்னாட் சென்றதும், லிங்கு நமது அய்யரைப் பார்த்து "குட்டிக்கர்ணம்" போடச்சொன்னார். பார்த்தார் அய்யர். விட்டார் வேலையை. "காசிக்குச்சென்றாலும் கர்மம் துலையாதெ"ன்பது போல் நாம் எங்கு சென்றாலும் இக் கர்ணம் நம்மை விடாதுபோல விருக்கின்றது. அடவிதியே "வெறுங்கர்ணம் போய், கோகர்ணம் கிடைத்ததும் போய், இப்பொழுது குட்டிக் கரணமாகி விட்டது. என்னே யான் செய்த பூஜாபலன் என நினைத்தவராய் ஊர்வந்து சேர்ந்து வைதீகத்தொழிலில் கர்ணமென்ற பெயர் வராதென நினைத்து அன்றுமுதல் அவ்வூரிலுள்ள அநேகம் வைதீக சிரோன்மணிகளுடன் சேர்ந்து அதிகாலையிலெழுந்து ஸ்நாநம் செய்து விபூதி உருத்திராக்ஷமணிந்து சிவப்பழமாக விளங்கினார்.

அவ்வூரில் மிகவும் பெயர் பெற்ற வைதீக சிரோன்மணியாகிய "கோபாலகிருஷ்ண சிவராயகனபாடிகள்" நமது அய்யரிடம் வந்து



"இன்றைய தினம் நமது கிரகத்தில் ஸபிண்டீகரணம் நடக்கின்றது. தாங்கள் அதற்கு வரவேண்டுமென சொன்னார். அய்யருக்கு என் செய்வதென தெரியவில்லை. அடகிரகசாரமே "இராமேசுவரம் சென்றாலும் தன் பாவம் தன்னைவிட்டுப்போகாது" என்பது போல "ஸாதாரண கர்ணம் போய் கோகர்ணம் வந்தது. கோகர்ணம் சென்று குட்டிக்கர்ணம் லபித்தது. குட்டிக் கர்ணம் நீங்கி ஸபிண்டீகர்ணம் வாய்த்தது" ஆஹா ஹா எத்தொழில் புரிந்தாலும் கர்ணந்தானா பலே பலே "கர்ணம், கோகர்ணம், குட்டிக் கர்ணம், ஸபிண்டீ கரணம், பலே தமாஷ் இது நமக்கு சரிப்பட்டுவராதென நினைத்து வைதீகத்தை விட்டு விட்டு காவியம் படித்து நல்ல பண்டிதனானால் நல்ல மதிப்பு உண்டு. இராமாயணம் பாரதம் முதலியதுகளுக்கு, அர்த்தம் சொன்னால் ஏராளமான திரவியங்கள் சன்மானம்கிடைக்குமென நினைத்து அர்ஜுன புரியில் மஹாவித்துவானாகிய "கிருஷ்ணார்ஜுன"ரென்பவரிடம் சென்று காவியம் சாஸ்திரம் தர்க்கம் முதலிய பாடங்களில் பூர்ண பாண்டித்தியமடைந்து சகல சாஸ்திர பண்டிதனென்ன பேரும் வகித்து ஊர்வந்து சேர்ந்தார் நமது அய்யர். அடுத்த ஊராகிய நரஸிம்ம புரியிலே இருக்கும் "உக்கிர நரஸிம்மாச்சாரியார்" என்பவர் நமது அய்யரின் வித்வத் தன்மையை கேள்விப்பட்டு பொறாமை கொண்டு அய்யரிடம் வந்து "உமக்கு வியாகர்ணம் தெரியுமா" வெனக் கேட்டார். பார்த்தார் நமது முந்த மாதவமுனிசாமி ஐயர் வந்துவிட்டது கோபம், முகத்தில் எள்ளைப் போட்டால் வெடிக்குமோ. வென சிவந்துவிட்டது. அட விதி வசமே! பூர்வ ஜன்மகன்மமே! என்ன செய்குவேன்! ஈசா அடாட அடா! கர்ணப்பேயே என்னை விட்டகலமாட்டாயா அப்பப்பா "வெருங்கர்ணம், கோகர்ணம், குட்டிகர்ணம், ஸபிண்டீகர்ணம், வியாகர்ணம், சிவ ராமா வென நினைத்து மிக நொந்து மூர்ச்சையாகி விட்டார் நமது அய்யர்.

சின்னேரஞ் சென்று மூர்ச்சை தெளிந்தெழுந்து வெகு நேரம் வரை மூக்கில் விரலை வைத்து யோசனை செய்து கடைசியாக புரோகிதம் (பஞ்சாகம்) செய்வது நல்லதென நினைத்து அவ்வாறே புரோகிதம் பார்த்து வந்தார்.

சில நாட் சென்றதும் அவ்வூரில் பிரபலத் தனிகராகிய "ஏரில் பெருத்த எல்லப்ப ரெட்டியார்" அவர்களது குழந்தைக்கு நாம கர்ணம் செய்ய வேண்டி நமது அய்யரிடம் வந்து "குழந்தைக்கு நாமகரணம்" தாங்கள் வந்து நடத்த வேணுமென்று அழைத்தார். அய்யர் என் செய்வார் "அடபிராரப்த கர்மமே"! "இராமேஸ்வரம் போனாலும் சனிஸ்வரன் பின்னாடனே" என்றபடி எத்தொழிலில் பிரவேசித்தாலும் கர்ணமயமாக நிறைந்து கிடக்கின்றனவே, அடாடா எத்தனை கர்ணம் "விருதாகர்ணம், கோகரணம், குட்டிக்கர்ணம், ஸ்பிண்டகர்ணம், வியாகர்ணம், நாமகர்ணம்" அட நாராயணா வென்று துக்கித்து இனி கர்ணமில்லாத தொழிலாக ஆராய்ந்து செய்ய வேண்டுமென வெகு நேரம் யோசனை செய்து "நாடக கம்பெனியே பொருத்தமென நினைத்து மோஹன புரியில் நடந்து வந்த "மனமோஹன ரஞ்சித சித் விலாச நாடக சபா" வென்னும் டிராமா கம்பெனியிற் சேர்ந்து நடித்து வந்தார் நமது அய்யர்.

இவ்விதம் இருந்து வரும் நாளில் ஒரு தினம் "மஹா பாரதம் என்னும் நாடகம் நடத்தப்பட்டது. அதில் நமது அய்யருக்கு "விகர்ணன்" என்னும் ஆக்ட் கிடைத்தது. என் செய்வார் பாபம், "பழைய கர்ணமே மேலென நினைத்தார். ஆஹா இவ்வுலகமே கர்ணமயமாகத் தானிருக்கும் போல விருக்கின்றது "இந்த கோகர்ணம், குட்டிக்கர்ணம் ஸபிண்ட கர்ணம், வியாகர்ணம் நாமகர்ணம் விகர்ணங்களை விட "பழய கருப்பனே கருப்பன் பழய மண்கிண்ணியே கிண்ணி" என்பது போலே பழய கர்ணமே கர்ணம் "பழய கர்ணத்தை விட்டால் சோற்றுக்குக் கர்ணம் போட வேண்டி வரும்" என நினைத்து பழயபடி கிராம கர்ணம் வேலையை பெற்று ஈசனது கிருபையினால் சகல சம்பத்துடன் குறைவின்றி வாழ்ந்து வந்தார்.

M. S. K. Aiyer.

# பெண்கள் பகுதி

## தாய்மார்களுக்கு சில போதனைகள்.

உடைகள்:—இத்தேசத்தைப் போன்ற உஷ்ண தேசத்தில் உடையைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லவேண்டியதில்லை. எப்படியாயினும் ஒரு சங்கதி நீங்களறிய வேண்டும். குழந்தையின் தலைக்குச் சூடு சீக்கிரத்தில் ஏறிப்போகிறது. ஆகையால் குழந்தையின் தலைக்கு கனமுள்ளதும் உரோமத்தால் நெய்யப்பட்டதாயுமுள்ள குல்லாவை வையாதேயுங்கள். இதைவிட முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயமென்ன வென்றால் குழந்தையின் மெல்லிய சிறு பாதங்களை சூடாகவே வைத்திருப்பதோடு உடம்பை ஒரு பிளானல் துணியினால் சுற்றிவை. குழந்தையின் பாதமும் உடம்பும் வெது வெதுப்பாய் வைக்கப்பட்டால் குழந்தை எப்பொழுதும் ஆரோக்கியமாயும் உற்சாகத்துடனு மிருக்கும்.

ஸ்நானம்:—குழந்தையை அடிக்கடி ஸ்நானம் பண்ணிவைக்க வேண்டும். சுத்தமான தேங்கா யெண்ணெயினால் குழந்தையினுடம்பை நன்றாய்த் தேய்த்தால் நலம். ஆனால் எண்ணெயால் தேய்க்கப்பெற்ற உடம்பு சீக்கிரத்தில் நாசியும் அழுக்கும் பிடிக்குமென்பது ஞாபகத்திலிருக்கவேண்டும். ஆகவே இரவில் ஒருதுளி யெண்ணெய் தலையில் தேய்த்து வைத்து காலையில் சோப்புப் போட்டு வெது வெதுப்பாயுள்ள வெந்நீரால் கழுவிவிடவும். ஜலம் வெது வெதுப்பாகவே யிருக்கவேண்டும். குழந்தையைக் கொள்ளும்படியான ஒரு பாத்திரமாவது தொட்டியாவது இருந்தால் வெகு நலமாயிருக்கும். ஆனால் கொஞ்ச ஜலம் போதும். முதலில் ஒரு மிருதுவான துணியால் சோப்பைத் தேய்க்கவேண்டும். பின் நல்ல வெந்நீரினால் கழுவி விடவேண்டும். குளிக்கவைத்ததும் ஒரு மிருதுவான துவாலையால் பரபரவென்று சூடுபரக்க உலர்த்தவேண்டும். அறையெப்பொழுதும் வெது வெதுப்பா யிருக்கவேண்டும். குழந்தைக்குப் பகற் காலத்தில் அழுக்குப் படிந்திருந்தால் அதை யப்போதைக் கப்போது சுத்தம் பண்ணவேண்டும்.

தூக்சம்:—சிறு குழந்தைகளுக்கு தூக்கம் அதி முக்கியமானது. பகற்பொழுதில் குழந்தையை சாப்பாட்டு நேரங்களில் தான் எழுப்பவேண்டும். நாளடைவில் அந்நேரங்களில் விழிக்கும்படிப் பழக்கத்தில் அதற்குத் தானாகவே வந்துவிடும். இராக்காலத்தில் குழந்தையை யெழுப்பவே கூடாது. எழுப்பாமலிருந்து அது காரணமாக ஆரோக்கியமாக விருப்பின், நாலைந்து மாதங்களில் விழியாமலே இரவு முழுதும் தூங்கும். தூங்குமறை எப்பொழுதும் காற்றோட்டமா யிருக்க வேண்டும். கூடுமானால் குழந்தையை ஈயாவது கொசுவாவது அணுக வொட்டாம லிருக்கும் படியுள்ள சாதனங்களைச் செய்ய வேண்டும்.

மலபாதை:—ஒரு நாளைக் கொருமுறை மலபாதை சரியாய் குழந்தைக்குப் போகிறதாவென்று கவனிக்கவேண்டியது அத்தியாவசியம். அநேக சிறு குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கொரு முறைக்குமேல் மலபாதை போவதுண்டு. மலத்தில் யாதொரு குற்றமுமில்லாதிருக்கும் பக்ஷத்தில் இரண்டு அல்லது மூன்று தடவை மலபாதை போகினும் கெடுதலில்லை. ஆனால் ஒரு தடவை கூடப்போகாத பக்ஷத்தில் சுரமாவது வயிற்றோட்டமாவது வரும்.

குழந்தையை நிறுத்தல்:—குழந்தையை நிறுத்தல் ஒரு முக்கியமான காரியம். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் குழந்தையை நிறுப்பது முக்கியமென்று நினைக்கிறார்கள். ஆனால் இந்தியத் தாய்மார்கள் அதனுடைய குணத்தை யறியவுமில்லை. அவர்களுக்கு அப்படிச் செய்யப் பிரியமுமில்லை. ஒழுங்காகப் போஷித்து வரப்பட்ட ஆரோக்கிய நிலையிலிருக்கும் குழந்தை நாளுக்கு நாள் அதிகமாய் நிறையிருக்கும். இது முற்றிலுமுண்மை. ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் குழந்தை அதிக நிறையில்லாத பக்ஷத்தில் குழந்தைக்கு ஏதாவது அசௌக்கியமென்று நினைக்கவும்.

## சூக்ஷ்மமறியாப் பெண்

ஒரு காதலன் தன் அன்பான காதலியை நோக்கி "என் அருமைக் கண்மணியே! உன் முகம் எவ்வளவு இனிமையாயிருக்கிறது! உன் முகத்தைப் போல் இதமாய் நான் எங்கும் கண்டதில்லை. உன் முகமே முகம்" என்று அவளுக்கு உபசாரவார்த்தை சொன்னார். அவள் "என்னருமைக் காதலா! என் தகப்பனார் கரும்புத் தோட்டம் போட்டிருந்தார்" என்றாள்.

M. E. வீரபாகு பிள்ளை.



# இயற்கையழகு

மன்னார்குடி T. S. சுந்தரேசய்யர் எழுதியது.

எனது அனுபவத்தை சொல்லப் புகுமுன் நான் யாரென சொல்லி விடவேண்டாமா? சென்னையில் ஆங்கிலம் கற்கும் ஒரு பிராம்மண வாலிபன். எனது விவாகத்தைப் பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கும் கர்நாடகமான என் தாயார் எனக்கு வயது இருபது நடக்கிறதென சொல்வது வழக்கம். இண்டர் மீடியேட் பரீக்ஷையில் நான் தேறி விட்டதாக சர்வகலாசாலை கட்டடத்தில் ஒட்டியிருந்த விளம்பரத்திலிருந்து அறிந்து என் அருமைத்தாய் அடைந்த சந்தோஷத்திற்களவில்லை. நான் ஒரே குமாரனானதால் என்னிடம் அவள் குவித்து வைத்திருந்த அன்பும் முதல் வருஷத்திலேயே முதல் வரிசையில் தேறிவிட்டேனென்பதுமே பன்மடங்கு அவள் ஆனந்தத்தை அதிகரிக்கச் செய்தது. இப்படி அவள் ஆநந்த கூத்தாடும் போதும் என் மனம் சந்தோஷமே யில்லாமல் குழம்பிக்கிடந்தது. இதற்கென்ன காரணமெனயோசிக்கத் தொடங்கினேன். புஸ்தகத்தை எடுத்து படிக்கலாமென பீரோவை திறந்தேன். ஒவ்வொன்றாய் எடுத்து பார்த்தேன். கணக்கு நூல் ஒன்று. மற்றொன்று இங்கிலீஷ் ஹிஸ்டரி. இன்னொன்று லண்டனில் நடந்த ஒரு கலவர கதை. ஒன்றும் பிடிக்க வில்லை; பீரோவை சாத்தினேன். பயித்தியம் பிடித்தது போலிருந்தது. ஸ்நேகிதன் வீட்டிற்கு போகலாமென்று எண்ணினேன். வீதியிலுள்ள ஜனத்திரளும் வண்டிகள் குருக்கிடுவதும் மோட்டார் பறப்பதும் வெறுப்பாயிருந்தது. அங்கிருந்த ஒரு சோபாவில் சாய்ந்து கண்ணையும் மூடிக் கொண்டேன். தாயார் வரும் சப்தம் கேட்டது. கண் விழித்தேன். தந்தி வந்திருக்கிறதப்பா என ஒரு தந்தியை கொடுத்தாள். எனது மாமன் தாயையும் அழைத்துக் கொண்டு வந்து கொஞ்ச காலம் தன் வீட்டில் தங்கி யிருக்கும்படி அழைத்திருந்தார். இதை கேட்டதும் என் தாய்க்கு சந்தோஷம் பன் மடங்கு அதிகரித்தது. ரயிலுக்கு சாவகாச மிருப்பதால் இப்பொழுதே புறப்படுவோமென துரிதப் படுத்தினாள். இங்குள்ள அனைத்தையும் கண்டு மிக வெறுப்படைந்து மனம் குழம்பி யிருந்தாலும் வெகு காலமாய் மாமன் வீட்டிற்கு போகாததாலும் போய் வரலாமென எண்ணினேன். இச்சென்னைமா நகரில் பல வைபவங்களையுங் கண்டு களிப்பிக்கச் செய்ய முடியாத மனதை அச்சிறு கிராமத்தில் எப்படி சீர்படுத்துவதென கலங்கினேன். போகாமல் இருப்பது தாய்க்கு அசம்மதமாகுமென

நினைத்து தந்தி கொடுத்துவிட்டு உடனே புறப்பட்டோம். ஸ்டேஷன் வந்ததும் ரயிலைவிட்டு இறங்கினோம். மாமனும் வரவேற்க காத்திருந்தார். எங்களை அன்புடன் உபசரித்து சந்தோஷமாய் தன் வீடு அழைத்துச் சென்றார்.

என் மாமன் வீடு ஸ்டேஷனிலிருந்து அரை மைலில் தூரத்திலுள்ள ஒரு சிறு கிராமத்திலிருந்தது. சுமார் 20 வீடுதானுண்டு. எங்கும் மரச்சோலையா யிருந்தது. குழம்பிய மனதுடனே தான் இருந்தேன். தாயார் ஏதோ வெள கவலை கொள்வாளென பயந்து சந்தோஷப்படுவது போல் பாவனை செய்தேன்—ஸ்திரீயான படியால் என் மனதை சூக்ஷ்மமாய் அவளால் அறியக்கூடவில்லை. வீடு சென்றதும் பலர் காணவந்தனர். அவர்களுக்கு தக்கபடி பதிலளித்து விட்டு கொஞ்சம் சிற்றுணவு அருந்திவிட்டு தனியே செல்ல எண்ணி புறப்பட்டேன்.

எங்கும் நிச்சப்தமா யிருந்தது. அழகிய மா, பலா, வாழை, பாக்கு முதலிய பல விருக்ஷங்கள் மிக செழித்து ஓங்கி வளர்ந்து ஆகாசமளாவி நின்றன. இது போன்ற மரங்களை நான் கண்டதேயில்லை. பட்டணத்தில் சமுத்ர சப்தம் ஒரு பக்கமும் மோட்டார் குதிரை வண்டி முதலியதுகளின் சப்தம் ஒரு பக்கமும் ஜனத்திரள்களின் கூக்குரல் ஒரு பக்கமுமாக கலக்கி வந்த என்மனது சற்று சமாதான மடைந்தது. அதையே பார்த்துக் கொண்டு நின்றேன். என்ன அழகிய மரங்கள்—காய்கள் எவ்வளவு பருத்து நிறம்பி கிடக்கின்றன. விதவிதமான பக்ஷிகள் சந்தோஷமாயும் நிர்ப்பயமாயும் வெகு உல்லாசமாய் விளையாடுவதை கண்டு ஆச்சரிய மடைந்தேன். மனதில் ஸ்திரமாய் குடியிருந்து வந்த கவலையும் குழப்பமும் எப்பொழுது என்னை விட்ட தென்பதே தெரியவில்லை. அதை விட்டு அப்புறம் அடிவைக்கவும் மனம் வரவில்லை. அதையே விசாலமான கண்களால் பார்த்துக் கொண்டிருந்தேன். இங்கு இன்னம் என்ன ஆச்சரியங்கள் மலிந்து கிடக்கின்றனவோ என அறிய என் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

ஒரு சிறிய பாதை வடபுறமாய் சென்றது. மெதுவாய் நடக்கலானேன். வர வர சந்தோஷமும் ஆச்சரியமும் அதிகரித்தது—சென்னையில் எங்கு பார்த்தாலும் சுண்ணாம்பு கலரே எதிரில் நிற்கும். இரவு ஒரு மணியானாலும் சந்தை இரைச்சல் தான்; மோட்டார் சப்தமும் வண்டிகளின் இறைச்சலும் காதை துளைத்து விடும். மனதிற்கு ஒரு க்ஷணமும் ஓய்வு கிடையாது. இங்கே அதிக மனித சஞ்சாரமில்லை; நிச்சப்தமாயிருந்தது. மரச்சோலைகள் மனதை கவர்ந்தன. சந்தோஷமாய் பார்த்துக்கொண்டு அவ்வழியே நடக்கலானேன் முடிவில் அப்பாதை ரமணீயமான தடாகமொன்றில் கொண்டு சேர்த்தது. (தொடரும்)



# விடுகதைகள்

1. நாலுகால் படைத்திருக்கும் நடப்பதில்லை நம்மைப்போல் இருகையுண்டாம் பிடிப்பதில்லை எலவே பின்னாலுண்டாம் முடிப்பதில்லை யிடையிடையே கண்களுண்டாம் பார்ப்பதில்லை, கோலமுடி மன்னர்முதல் யாவருமிருந்திட மறுப்பதில்லை, சில மிகு பொருள் விளங்க எங்கு மாகித் திகழ் கதாரத்னாகரமே செப்புவாயே.

2. நெட்டையிலே வைத்திருக்கும் செவ்வேளல்ல, நெடிதோங்கித் தண்டேந்து மாலுமல்ல, கட்டுவாரளிக்கும் பிரமனல்ல கனிவெட்டி யெடுத்தலாற் சுரங்கமல்ல, நட்டவரை தனபதியாயிருக்கச்செய்யும், நன்மையினால் வணங்கச்செய்யும் ஈசனல்ல, சிட்டரெல்லாம் புகழ்வட்ட திசையுமாகித், திகழ் கதாரத்னாகரமே செப்புவாயே.

3. நாகூர் நாகப்பட்டணம் நாலுவாசலுக்கு பதினாறு பெண்கள் அவர்களுக்கு இரண்டே இராஜா.

4. காசிராஜன் மகள் பேர் முல்லை. அவள் பேசுகிறது யாரோடுமில்லை, பூசுகிறது கெந்தப்பொடியில்லை, வயற்றில் ஆறுமாபிள்ளை.

5. நெடு நெடு என்று வளருமாம் சம்பா பயிர், அதில் வந்து மேயுமாம் தேவதா பக்ஷி, அதைத் துரத்தி துரத்தி குத்துவார் இரண்டேபேர்.

## சென்ற ஆகஸ்டு மாதம் வெளியான விடுகதைகளுக்கு விடைகள்

1. பலாப்பழம் 2. யானை 3. மாம்பழம் 4. பாக்குவெட்டி.

T. V. G. வாசுதேவநாயுடு 1. 2. 4-வது விடுகதைகளுக்கு அனுப்பிய விடையும் T. P. வேலாயுதம் பிள்ளை—நாலுக்கும் எழுதிய விடையும்,

M. S. கந்தசாமிசெட்டி—1, 2, 4-வதற்கு அனுப்பிய விடையும் சரி.

---

## வருமானமில்லாத வக்கீல்.

ஒரு காலத்தில் தன்னுடைய பூர்வ ஆஸ்தி முழுவதையும் விற்றுப்படித்து வக்கீல் பரீக்ஷையில் முதலாகத் தேறிப் பெரும் பணம் சம்பாதிக்கலாமென்ற பேராசையுடையவராய் வக்கீலுக்கேற்ற உடை முதலிய தயார் செய்து தொழிலில் அமர்ந்த ஒரு முதலியார் நெடு நாளாக முயன்றும் ஒரு கக்ஷிக்காரரும் வராத தன்மையை யறியாது அக்கம்பக்கத்து வக்கீல்கள் வெளியே போயிருக்கும் சமயம் கக்ஷிக்காரர்கள் தன்னைத் தேடி வருவார்களென்று

தருணம் எதிர் பார்த்துக் கொண்டு திண்ணையில் கண்ணிமை கொட்டாமல் காத்துக் கொண்டிருந்தார். அவரும் ஒருநாள் உள்ளே சில காரியமாக இரண்டு மணி நேரமிருக்கும்படி நேரிட்டது. அப்பொழுது தன்னுடைய குமாஸ்தாவிடத்தில் 'எவரும் என்னைத் தேடி வந்தால் என்னை உடனே கூப்பிடு' என்று கண்டிப்பாய்ச் சொல்லி உள்ளே சென்றார். அவர் உள்ளே போனதும் ஒரு பதினைந்து நிமிஷங்களுக்குள் அம்பட்டன், வண்ணான், தையற்காரன், பால் வார்ப்பவன் ஆகிய நான்கு கடன்காரர்கள் "ஐயா வெங்கே எங்கே" என்று ஆவலுடன் கேட்டார்கள். குமாஸ்தா சூதில்லாது வக்கீலிடம் ஓடித் தகவலைச் சொல்ல அவர் அளவிலா மகிழ்ச்சியுடன் வெளியில் வந்து அவர்களைப் பார்த்ததும் அவருடைய முகம் வெட்கமடைந்து அளவிலா விசனத்தை யடைந்தார்.

---

## கடிதங்கள்

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் வெளியிட்டுவரும் நாவல்களை பிறகு பிரித்து பயிண்டு செய்வதற்கு ஏற்றதாக தனி பாரங்களாக சேர்ப்பின் நலமாயிருக்குமென நினைக்கிறேன்.

சாலியமங்கலம்
20—8—1921

T. V. G. வாசுதேவ நாயுடு.

(தற்காலம் வெளிவந்து கொண்டிருக்கும் நாவல்கள் பூர்த்தியானதும் மேற்கண்டவாறு செய்யப்படும்)

ஐயா, ஸ்ரீரங்கம், 29—8—21

குடியன் கதை படிக்க நன்றாயிருந்தது. சிறு கதையாயினும் நல்வழி—நீதி புகட்டக்கூடியதாய் எழுதக் கோருகிறோம்.

S. G. R.

ஐயா,

சென்ற மாதப் பத்திரிகையில் ஒருவர் நமது கதாரத்நாகரத்தை இங்கிலீஷ் பத்திரிகைகளைப் போல பெரிதாக்கும்படி யோசனை சொல்லியிருக்கிறார். இதனால் சந்தாவை அதிகப்படுத்தும்படி நேர்ந்துவிடும். ஆகையால் 40, 50, பக்கத்துக்குள் பல விஷயங்களை யெழுதி வழக்கம்போல் வெளிவருவது நல்லது. பேப்பர் விலை குறைந்தால் அதிகப் பக்கத்தோடு பெரிய புத்தகமாய் அநேக படங்களோடு எதிர்பார்க்கலாம்.

திருச்சி
20—8—21

பார்வதி

## பகவத்கீதாவாசகம்

முன் தொடர்ச்சி.

11. "(நீங்கள்) இதனால் தேவர்களை விருத்தியடையச் செய்யுங்கள்: அந்த தேவர்கள் உங்களை விருத்தி யடையச் செய்யட்டும்; (இவ்வாறு) ஒருவரை யொருவர் விருத்தி செய்கிறவர்களாய் மேலான நன்மையை யடையுங்கள்."

12. "தேவர்கள் யாகங்களால் விருத்தி யடைவிக்க பெற்றவர்களாய் உங்களுக்கு வேண்டிய போகங்களை கொடுப்பார்களன்றோ." அவர்கள் கொடுத்தவற்றை இவர்கட்குக் கொடாமல் எவன் அனுபவிக்கின்றானோ, அவன் திருடனே யாவான்.

13 யாகசேஷத்தை புசிக்கும் சாதுக்கள் சகல பாவங்களாலும் விடப்படுகிறார்கள். மற்று, தமக்காக எவர்கள் சமைக்கிறார்களோ, அந்தப் பாவிகள் பாவத்தை உண்கிறார்கள்.

14. 15. (உட்கொள்ளும்) உணவினின்று பிராணி(களின் சரீரங்)கள் உண்டாகின்றன. உணவு மழையினின்று உண்டாகின்றது: மழை யாகத்தினின்று உண்டாகின்றது: யாகம் கர்மத்தினின்று உண்டாகின்றது. கர்மத்தை ப்ரஹ்மத்தினின்று உண்டானதாக(வும்), பிரஹ்மத்தை அழிவில்லா பொருளினின்று உண்டானதாக(வும்) தெரிந்து கொள். ஆதலால், ஸகலத்தையும் பற்றிய ப்ரஹ்மமானது யாகத்திலே நிலை பெற்றதாம்.

16. பார்த்த! இங்கு எவன்பாவ ஆயுளையும் இந்திரிய விளையாட்டையும் உடையவனாய் இவ்வாறு செலுத்தப்பட்டுள்ள சக்கரத்தை அனுசரிப்பதில்லையோ அவன் வீணாக உயிர் வாழ்கின்றான்.

17. மற்று, எந்த மனிதன் ஆத்மாவினிடத்திலே மகிழ்ச்சி யுடையவனாய் ஆத்மாவிலேயே திருப்தி பெற்றவனாய், ஆத்மாவினிடத்திலேயே சந்தோஷமுள்ளவனாய் இருக்கின்றானோ அவனுக்கு (உலக வ்யவகாரமும் வேத வ்யவகாரமுமான) காரியமில்லை.

18. இங்கே (ஒன்று) செய்யப் பெற்றதனாலும், செய்யப் பெறாததனாலும் அவனுக்கு ஒரு பிரயோசனமும் இல்லையே இல்லை. இன்னும், இவனுக்கு சகல பூதங்களினிடத்தும் ஒரு பயனுக்காக ஆச்ரயிக்க வேண்டியது ஒன்றுமில்லை.

19. அதனால், நீ செய்ய வேண்டிய கர்மத்தைப் பற்றில்லாதவனாய் எப்பொழுதும் செய்யக்கடவாய்; ஏனெனில், பற்றற்றவனாய் கர்மம் செய்கிற புருஷன் மேலானதைப் பெறுகிறான்.

20. ஏனெனில், ஜனகர் முதலானோர்கள் கர்மத்தினாலேயே சித்தி பெற்றார்கள். நீ உலகத்தை நல்வழியில் நடக்கச் செய்தலை நன்கு ஆலோசித்தும் (கர்மத்தைச்) செய்யத் தகுந்தவனே ஆகிறாய்.

21. மேலானவன் எதைச் செய்கின்றானோ, அதையே மற்றை ஜனங்கள் (செய்கிறார்கள்): அவன் எதனை பிரமாணமாகக் கொள்கின்றானோ, அதனை உலகம் அநுசரிக்கின்றது.

22. பார்த்த! மூன்று உலகங்களிலும் எனக்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. (இனி நான்) அடைய வேண்டியதாய் (இப்பொழுது) அடையாதிருப்பது (ஒன்றும்) இல்லை. ஆயினும், கர்மத்தில் இருக்கவே இருக்கின்றேன்.

23. ஏனெனில்; நான் சோம்புதலில்லாதவனாய் எப்பொழுதாயினும் கர்மத்திலிரா விட்டால், பார்த்த! மனிதர்கள் எவ்வகையிலும் என் வழியை அநுசரிப்பார்கள்.

24. யான் கர்மத்தை செய்யாவிடில், இந்த உலகங்கள் அழிந்து போகும்: ஜாதிக் கலப்பிற்குக் காரணமுமாவேன். இந்த பிராணிகளைக் கெடுத்தவன் ஆவேன்.

25. பாரத! எப்படி அக்ஞானிகள் கர்மத்தில் பற்றுடையவராய்(க் கர்மத்தைச், செய்கிறார்களோ, அப்படியே ஞானி பற்றில்லாதவனாய் உலகத்தை நல்வழிப் படுத்த விரும்பி (கர்மத்தை)ச் செய்ய வேண்டும்.

26. ஞானியானவன் கர்மத்திற் பற்றுள்ள அக்ஞானிகளுக்குப் புத்திக் கலகத்தை உண்டாக்கக் கூடாது. ஊக்க முடையவனாய் ஸகல கர்மங்களையும் (தானும்) நன்றாகச் செய்து கொண்டு, (அவர்களையும்) செய்விக்க வேண்டும்.

27. அகங்காரத்தால் மனம் மயங்கி இருப்பவன் எவ்வகையிலும் பிரகிருதியின் குணங்களால் செய்யப்படுகின்ற கர்மங்களை "நான் செய்கின்றேன" எனக் கொள்கிறான்.

28. உயர்தோளா! குணங்களும் (அவற்றின்) தொழில்களுமாகிய (இ)வற்றின் பிரிவுகளினுடைய உண்மையையுணர்ந்தவனோ, 'இந்திரியங்கள் விஷயங்களின் வழியே செல்கின்றன' எனக் கொண்டு (கர்மங்களில்) பற்றுக் கொள்வதில்லை.

29. (எவர்கள்) ப்ரகிருதியின் குணங்களால் முற்றும்மயங்கியவராய்,குணங்களுடைய கர்மங்களிலே பற்றுக் கொள்கிறார்களோ, அந்த முற்றும் உணராத அக்ஞானிகளை முற்றும் உணர்ந்தவன் கலக்கும்படி செய்யக்கூடாது.

30. ஆத்மாவைப் பற்றிய மனத்தோடு ஸகல கர்மங்களையும் என்னிடத்து வைத்து, ஆசையற்றவனாய் மமகாரமில்லாதவனாய் துயரம் நீங்கிப் போர் செய்யக் கடவாய்.

31. எந்த மனிதர்கள் என்னுடைய இக்கொள்கையை இடக்குப் பேசாமல் நம்பிக்கையோடு எப்பொழுதும் அநுஷ்டிக்கிறார்களோ, அவர்களும் கர்மங்களால் விடப்படுகிறார்கள்.

32. ஆனல், இடக்குப் பேசுகின்ற எவர்கள் என்னுடைய இக்கொள்கையை அநுஷ்டிப்பதில்லையோ, அவர்களை, அவிவேகிகளாகவும் (ஸகுண நிர்குணங்களைப் பற்றிய) அறிவெல்லாம் பலவாறாக மயங்கியவர்களாகவும் அழிந்து போனவர்களாகவும் தெரிந்து கொள்.

33. ஞான முள்ளவனும்கூடத் தன்னுடைய பழக்கப்படி ஸ்வபாவத்திற்கு ஏற்ப நடக்கின்றனன்: பிராணிகள் (எல்லாம் தம்தம்) ஸ்வாபாவத்தை அநுசரிக்கின்றன. தடுப்பது என்ன செய்யும்?

34. விருப்பு வெறுப்புக்கள் ஒவ்வொரு இந்திரியத்தினுடைய விஷயத்திலேயும் அமைந்துள்ளன;

# இரத்தினமாளிகை

[முன் தொடர்ச்சி]

## பதினாறும் அத்தியாயம்

---

### 'கேடுவான் கேடு நினைப்பான்'

பொழுது விடிந்தது. இரண்டு தடவை வண்ணாரப்பேட்டைக்குப் போயும் இரங்கநாதம் காணப்படவில்லை. அக்கம் பக்கத்தில் விசாரித்ததில் 'நேற்றிரவு கூட வரவில்லை' என்று சொன்னார்கள். இதைக் கேட்டு கர்ப்ப நாயகம் யோசனை செய்ய ஆரம்பித்தான். இரத்தின மாளிகையில் நடந்த திருட்டு போலீஸாரால் ஒருவித முடிவுக்கு வந்துவிட்டால், சுமார் 500 ரூபாய் இரங்கநாதத்துக்குக் கொடுத்துவிட்டு அயல் தேசம் போய் விடுவதாகத் தீர்மானித்து வந்தான். முதல் நாளிரவு இரங்கநாதம் வீட்டில் இல்லாதது போலீசாருக்கு சந்தேகிக்க இடமுண்டாகும்; அதை அநுசரித்தே பேசவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே ஒரு சப் இன்ஸ்பெக்டரும் இரண்டு சேவகர்களும் இரங்கநாதத்தின் வீட்டை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். உடனே கர்ப்பநாயகம் அவர்களுக்குப் பொதுவில் ஒருசலாம் செய்து; நானும் அதற்காகத்தான் வந்தேன் என்றான். 'இந்த இரங்கநாதமுதலியார் நேற்றிரவு' இரத்தினமாளிகையில் இருந்தார். சாப்பாடான பிறகு தான் அவர் பட்டணம் போகிறேன், அவசர வேலை யென்று சொல்லிவந்து விட்டார்' என்றான். சந்தேகத்தை உறுதிப்படுத்த ஒரு தடை யொன்று ஏற்பட்டிருக்கிறது. ஒரு பத்திரிகை ஆபிசில் அவர் உதவி ஆசிரியராயிருக்கிறார். அவர் குற்றவாளி யென்று ருசுப்படுத்தக்கூடுமானல் எவ்வளவு வேலை வேண்டுமானலும் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே திரும்பினார்கள். கர்ப்பநாயகம் இரத்தினமாளிகைக்குப் போவதாக போலீஸாரிடம் சொல்லிக்கொண்டு சென்றான். போலீஸ்காரர்கள் தலைகள் மறைந்ததும், இரங்கநாதம் குடியிருந்த அறைக்குத் திரும்

பவும் சென்று கடிதத்தில் மடிக்கப்பட்ட ஒரு பொட்டலத்தை ஜன்னல் வழியாக வீசி எறிந்தான். அது மேஜைக் கடியில் விழுந்தது. சுற்று முற்றும் பார்த்து தான் செய்த வேலையை ஒருவரும் கவனிக்க வில்லை யென்று வெகு சந்தோஷத்துடன் சென்றான்.

சைனாபசார் வழியாக வரும்போது இரங்கனாதமும் மற்றொருவரும் மோட்டார் வண்டியில் வந்து கொண்டிருக்கக் கண்டான். இரங்கனாதம் கர்ப்பநாயகத்தைப் பார்த்தவுடன் கை தட்டி நிற்கச் செய்து அவனையும் தங்களோடு அழைத்துக்கொண்டு சென்றார். கர்ப்பநாயகத்தை மானேஜருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இரத்தின மாளிகையில் நடந்த விஷயங்களைச் சொல்லும்படி கர்ப்ப நாயகத்தைக் கேட்டார்கள். அவ்விஷயங்களைக் கற்பனையாகச் சொல்லி முடித்து, திருடர்களைக் கண்டு பிடிப்பதில் மிக்க சிரத்தையெடுத்துக்கொண் டிருப்பதாயும் சொன்னான். அவனுடைய முகத்தைப் பார்த்தும், தடுமாற்றமுள்ள வார்த்தைகளைக் கேட்டும்இவனே அதற்குக் காரணமாயிருக்கலாம் என்று இரங்கனாதம் நினைத்தார். அவன் தான் செய்தான் என்று நிரூபிக்க வேண்டுமே என சிந்திக்க ஆரம்பித்தார்.

இவர்களிடம் விடைபெற்று கர்ப்பநாயகம் மைலாப்பூர் போய்ச் சேர்ந்தான். இரத்தினமாளிகைக்கு இவன் போன சமயம் எப்படியிருந்த தென்பதை நேயர்கள் முன் அத்தியாய இறுதியில் படித்திருக்கலாம். தனபதி முதலியார், மனோரஞ்சிதத்தை 'எப்பொழுது வந்தாய்' என்று கேட்டுவிட்டு இரத்தினங்கள் வைக்கப்பட்ட மாளிகைக்குச் சென்றார். அந்த இடம் பூட்டப்பட்டு முத்திரை யிடப்பட்டிருந்தது. மனோரஞ்சிதம் இருக்குமிடத்துக்கு வந்து சேர்ந்தார். "தாங்கள் கவலைப்படவேண்டாம், திருடன் அகப்படாம லிருக்கப் போவதில்லை" என்று ரஞ்சிதம் சொன்னாள். நீங்கள் பட்ட கஷ்டம் ஒரு பக்கமிருக்க நமது அம்மாவும் ரொம்பக் கஷ்டப்பட்டு நேற்று இரவு வெகு நேரம் சென்று வந்தார்கள் என்று வேலைக்காரி சொன்னாள். அப்படியா, ரஞ்சிதம், நீ நேற்று காலையிலே வந்து சேர வேண்டியவளாயிற்றே, இரவு எந்த வண்டியில் வந்தாய் என்று கேட்டார். ரஞ்சிதம் நடந்த விஷயங்களை யெல்லாம் சொன்னாள். உன் தமயனை



இன்னும் பார்க்க வில்லையா என்றார். அவர்கள் எங்கே அழைத்துக் கொண்டு போய் அடைத்து வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. கர்ப்ப நாயகமும் ரஞ்சிதம் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்படுவது போல பாசாங்கு செய்தான். எப்படியாவது திருடர்களையுங் கண்டு பிடித்து, உன் தமயனையும் இவ்விடம் அழைத்து வர வேண்டிய முயற்சி செய்கிறேன். போலீசார்களும் இயன்ற உதவி செய்வதாய் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்றான். இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு சேவகன் தனபதி முதலியாரைக் கண்டு சலாம் செய்து இன்ஸ்பெக்டர் வெளியே காத்திருப்பதாய்ச் சொன்னான். உடனே எழுந்து வெளியே சென்றார். இன்ஸ்பெக்டர் தன் வண்டியில் அவரை ஏற்றிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தார். "தங்களுக்கு யார் பேரிலாவது சந்தேகமுண்டோ" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். என்னுடைய பங்களாவுக்கு அடிக்கடி வரக் கூடியவர் இருவர்; ஒருவர் கர்ப்ப நாயகம், மற்றவர் இரங்கநாதம். கர்ப்ப நாயகம் என்னோடு கூடவே இருந்தார். திருடர்கள் அவனையும் கட்டினார்கள். ஆகையால் அவர் மேல் எனக்கு சந்தேகம் அணுவளவு மில்லை—இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது இன்ஸ்பெக்டர் அப்படியானால் இரங்கனாத முதலியார் மேல் சந்தேகந்தானே என்று கேட்டார். 'நான் எப்படிச் சொல்லக் கூடும்' என்றார். 'அவர் திருடா விட்டாலும் திருடர்களுக்கு உதவியா யிருந்திருக்கலாம்' என்றார் இன்ஸ்பெக்டர். இரங்கநாதம் இருந்த வீட்டை சோதனை போட வேண்டி சப் இன்ஸ்பெக்டர், அவரையும் அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்; இவ்விதம் பேசும் போது டெலிபோன் மணி 'கிணுங் கிணுங்' என்றடித்தது. இன்ஸ்பெக்டர் என்னவென்று கேட்டு பதிலளித்தார். தனபதி முதலியாரைப் பார்த்து இன்னும் ஐந்து நிமிஷம் இருந்தால் சற்று துப்பு தெரிந்து கொள்ளலா மென்றார். அந்த ஐந்து நிமிஷமும் மனோரஞ்சிதம் விஷயத்தைப் பேசினார். ஸ்டேஷன் வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. சப் இன்ஸ்பெக்டர் உள்ளே வந்து கையில் வைத்திருந்த இரத்தினங்களுள்ள ஒரு கடிதப் பொட்டலத்தைக் கொடுத்தார். இன்ஸ்பெக்டர் அதைப் பிரித்துப் பார்த்து ஆச்சரியப்பட்டு சோதனை செய்யும் போது கிடைத்ததா என்று ஸப்இன்ஸ்பெக்டரைக் கேட்டு

விட்டுஅதை தனபதி முதலியாரிடம் காட்டி, 'இவை தங்களுக்குச் சொந்தமா பாருங்கள்' என்று கொடுத்தார். ஒவ்வொரு இரத்தினத்தையும் நன்றாய்ப் பார்த்து இவையனைத்தும் என்னுடையது தான் என்று சொன்னார். இரங்கனாதம் வீட்டை சோதனை போட்டதில் கிடைத்தது. அவருக்கு அரஸ்டு வாரண்டு அனுப்பி போலீஸில் வைத்திருக்கிறோம் என்று இன்ஸ்பெக்டர் சொன்னார். என்னுடைய பங்களாவில் முக்கியமான இரண்டு அறைகளை பூட்டி முத்திரையிட்டு வைத்திருப்பதால், திறந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தனபதி முதலியார் கேட்டுக் கொண்டார். கமிஷனரிடம் அனுமதி பெற்று தனபதி முதலியாரோடு சென்று அவ்வறைகளைத் திறந்தார்கள். மாளிகையில் முக்கியமான ஒரு பெட்டி களவாடப் பட்டிருக்கிறதென்று போலீசுக்குத் தெரிவித்தார். அப்பெட்டிக்குள் இருந்த இரத்தினங்கள் ஒரு லட்சத்துக்கு மேல் விலை யுள்ளவை யென்றும் தெரிவித்தார். இன்ஸ்பெக்டர் வெளியே சென்றதும், ரஞ்சிதம் என்றழைத்தார் பதிலில்லை. கர்ப்பநாயகம் வெளியே சென்றார். அவரைப் பின் பற்றி மனோரஞ்சிதம் போய் விட்டதாக வேலைக்காரர்கள் தெரிவித்தார்கள்.

---

## பதினேழாம் அத்தியாயம்

---

### துப்பறிதல்.

முந்திய அத்தியாயத்தில் சொல்லியபடி கர்ப்பநாயகம் இரத்தின மாளிகையை விட்டுச் சென்றதும், ரஞ்சிதம் ஓர் இளைஞனைப் போல் உடுப்பணிந்து, தலைக்கோர் தொப்பியையும், கையில் ஓர் புத்தகத்தையும் வைத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்து சென்றாள். அவன் ஒரு டிராம் வண்டியில் ஏறினான். ரஞ்சிதம் அவனுடைய பார்வைக் கெட்டாமல் பின் பக்கமாய் ஏறிச்சென்றாள். அவன்



'ஆரிஸ் பிரிட்ஜு'க்கு டிக்கட்டு வாங்கியதை யறிந்து தானும் அவ்விதமே வாங்கினாள். மவுண்டு ரோட்டில் இறங்கி ஒரு ரிக்ஷா வண்டியில் ஏறி புதுப் பேட்டைக்குச் சென்று கூவ நதியோரமாயுள்ள ஒரு பெரிய கட்டடத்துக்குள் சென்றான். ரஞ்சிதமும் பின்னால் சென்று அடுத்தவீட்டில் நின்று கொண்டிருந்தாள். 'இந்த ரெயிலுக்கே போகவேண்டும். அடுத்த வண்டியில் திரும்பிவிடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு வாசற் படிக்கு வந்தான். அவனுக்குப் பக்கத்தில் இளமங்கை யொருத்தி நின்றுகொண்டிருந்தாள்! 'ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்' என்றாள். 'என்மேல் சந்தேகிக்க இடமில்லை. இரங்கனாதத்தின் வீட்டை இன்று சோதனை போடுவார்கள். போலீசாருக்குப் போதுமான உத்தியோகம் உண்டாய்விடும். இனி பயமில்லை' என்றான். 'அவள் நேற்றிரவு என்னைவிட்டு எப்படியோ தப்பிவிட்டாள் ஆயினும் குற்றமில்லை' என்றாள் அந்த மெல்லிய நல்லாள்!. சரி நான் போய் விட்டு மாலை வருகிறேன், என்று சொல்லிக்கொண்டு ரிக்ஷாவண்டியில் ஏறினான்: தன்னை வஞ்சித்து மறைத்தவள் இவள்தான் என்று ரஞ்சிதம் நன்றாய் அறிந்து அவ்வீட்டின் அடையாளத்தையும் பார்த்துக் கொண்டாள். கர்ப்பநாயகம் எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போவதைக் கண்டு பின் தொடர்ந்தாள்.

கர்ப்பநாயகம் சைதாப்பேட்டைக்குச் சென்றான். பெருமாள் கோவில் தெருவிலுள்ள ஒரு சிறிய வீட்டுக்குள் புகுந்து ஒரு பெண்மணியோடு பேசிக் கொண்டிருந்தான். ஒரு மணி நேரம் தங்கியிருந்தான். தான் வைத்திருந்த இரத்தினங்களில் மட்டமான நாலை யெடுத்து பம்பாயிலுள்ள சேட் ஒருவருக்கு அனுப்பத் தீர்மானித்தான். உடனே அவைகளை ஒரு சிறு பெட்டியில் அடக்கம் செய்து பார்சலாகக் கட்டி யெடுத்துக் கொண்டுபோய், தபாலாபீசில் ரிஜிஸ்டர் செய்து அனுப்பிவிட்டு ஒரு ஜட்கா வண்டியிலேறி சென்னைக்குத் திரும்பினான். இதை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ரஞ்சிதம் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று முக்கால் மணி நேரம் காத்திருந்து ரெயிலேறி எழும்பூருக்குச்

சென்றாள். ஸ்டேஷனை விட்டு வெளியே வர எத்தனிக்கும் போது தனது சகோதரனைக் கண்டாள்.

* * *

இரங்கனாதம் குடியிருந்த வீட்டை சோதனை செய்து, அவ்விடத்திலிருந்த இரத்தினங்களை வைத்து மடித்த கடிதப் பொட்லத்தை யெடுத்துக்கொண்டு சப் இன்ஸ்பெக்டர் மைலாப்பூருக்குச் சென்ற விஷயத்தை முன்னேரிடத்தில் படித்தது ஞாபகமிருக்கலாம். சோதனையில் கிடைத்த இரத்தினங்களைக் காரணமாக வைத்துக்கொண்டு, இரங்கனாதத்தை அரஸ்டு செய்து அழைத்துக் கொண்டு போனார்கள்.

கர்ப்பநாயகம் துர்க்குண முள்ளவனென்று அறிந்திருந்தும், சில சமயம் பணங் கொடுத்து உதவி செய்ததை நினைத்து அவன் நட்பை ஏற்றுக் கொண்டதால் இத்தகைய தீங்குக்கு ஆளாக நேர்ந்தது. சிலர் ஒரு பெரிய வேலை செய்வதற்கு சில மாதங்களுக்கு முன்னமேயே எந்தெந்த வகையில் உதவி தேவையோ அதைச் செய்து தயவைச் சம்பாதித்துக் கொள்வதுமுண்டு. பேராசை பிடித்த கர்ப்ப நாயகத்துக்கு எப்படியேனும் தான் பணக்காரனாக வேண்டு மென்பது எண்ணம். குருட்டுப்பூனை விட்டத்தில் பாய்ந்ததுபோல, கெடுமதி கண்ணுக்குத் தோன்றவில்லை. பிறரை வஞ்சித்து அவர்கள் பொருள்களைத் திருடி பணக்காரனாவது விந்தையிலும் விந்தையே.

இரங்கனாதம் அரஸ்டு செய்யப்பட்டும் அவர் மனங்கலங்காதிருந்தார். அவர் முகத்தில் எவ்வித மாறுதலும் தோன்றவில்லை. சுகத்தையும் துக்கத்தையும் தராசில் வைத்து சமனிடையாய் தூக்குவதுபோல மனத்தை ஒரு வழியில் நிறுத்தி, இன்னும் என்ன நடக்கப் போகிறதென்று கவனித்துக்கொண்டிருந்தார். என்றாலும் சதா காலம் கடவுளைத் தியானித்த வண்ணமிருந்தார்.

ஸ்டாண்டர்டு ஆபீஸ் மானேஜர் விசேஷ முயற்சியெடுத்து ஜாமீன் கொடுத்து அழைத்து வந்தார்.



தங்கள் வீட்டில் இரத்தினங்கள் இருக்கக் காரணமென்ன? என்று கேட்டார் மானேஜர். எல்லாம் முன் செய்த வினையேயன்றி வேறல்ல. கையில்காலணா இருந்தால் கஷ்டம் வந்துவிடுமென்று தங்களிடம் நான் பணம் கொடுத்து வைத்து வேண்டும்போது சொற்பம் சொற்பமாய் வாங்கிக் கொள்வது தங்களுக்குத் தெரியாதா? யாரோ ஒருவர் தன் குற்றத்தை மறைக்க வேண்டி இங்ஙனம் செய்திருக்கிறதாகத் தெரிகிறது என்று மிக்க கவலையோடு சொன்னார். இரங்கனாதம் யாராயிருக்கலாம் சொல்லுங்கள் என்று கேட்டார். இன்னார் என்று எப்படிச் சொல்லமுடியும் கண்ணால் கண்டு ஒரு விஷயத்தைத் தெரிவிப்பது நலம். யாரோ ஒருவர் செய்த சூது என்று தெரிகிறது. மனதில் ஏதோ சந்தேகம் உண்டாயிற்று. அதனால் அங்ஙனம் சொன்னேன் என்றார் இரங்கனாதம். வேறொருவர்தான் செய்திருக்க வேண்டும். சந்தேகத்தின் மேல்தான் உண்மை வெளிப்படும். நீங்கள் யாரை சந்தேகிக்கிறீர்கள் சொல்லுங்கள் என்றார். நான் யாரை சந்தேகிக்கிறேனோ அவர் உண்மையாய் இதில் சம்மந்தப்பட்டிருந்தால் அதி சீக்கிரம் அகப்பட்டுக்கொள்ளுவார் என்று இரங்கனாதம் சொன்னார். போலீஸார் உங்கள் மேல் சந்தேகப்பட்டிருக்கிறார்கள். அம்மட்டோடில்லாமல், அரஸ்டு, ஜாமீன் இரண்டும் ஏற்பட்டிருக்கிறதே; அதற்கென்ன செய்கிறதென்று கேட்டார். தாங்கள் சொல்வது நியாயந்தான். நாமிருவரும் நான் குடியிருந்த வீட்டுக்குச் சென்று விசாரிப்போம் என்று இரங்கனாதம் சொன்னார்.

அவ்விதமே அன்று மாலை வண்ணாரப்பேட்டைக்கு இருவரும் சென்றார்கள். வீட்டை வாடகைக்குக் கொடுத்த ஒரு கிழவியினிடம், என்னை யாராவது தேடி வந்தார்களோ என்று கேட்டார். கால்சட்டை போட்டு வருவாரே அவர் தான் இரண்டு தடவை வந்தார். இரண்டாவது தடவை அதிக நேரம் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே வாசற்படிக்கருகில் நின்று கொண்டிருந்தார். நேற்றிரவு ஒரு போலீஸ் சேவகர் தேடி வந்தார். கடைசியாக போலீஸார் சோதனை போட்டதுதான் தங்களுக்கும் தெரியும் என்றாள். கால்சட்டை போட்டு வரும் சிநேகிதர் கர்ப்ப நாயகம் தானே, என்று

மானேஜர் கேட்டார். அவர் தான், ஆனால் ரத்தினங்களை அவர் போட்டார் என்று எப்படி சொல்ல முடியும் என்று இரங்கனாதம் சொன்னார். கர்ப்ப நாயகம் இரத்தினமாளிகையில் திருட்டுப்போனதைப்பற்றி வெகு கவலையாய் நம்மிடம் சொன்னாரே என்று மானேஜர் கேட்டார்.

அதனால் அவர் திருடவில்லை யென்று சொல்லமுடியாது. ஒருவேளை தான்செய்த குற்றத்தை மறைப்பதற்கு பாசாங்கு செய்யலாம் என்று சொன்னார். தங்களுக்கு சிநேகிதர் என்று சொல்லுகிறீர்களே, அப்படியானால் இத்தகைய குணமுள்ளவர் என்று இன்னும் தெரிந்து கொள்ளவில்லையா என்று மானேஜர் கேட்டார். இம்மாதிரி வேலை செய்யக்கூடியவர் என்று தெரியும்; ஆகையினாலே தான் அவர்மேல் சந்தேகம் உண்டாயிற்று என்று சொல்லும்போது வீட்டுக்கருகாமையில் வர, பேச்சை நிறுத்திவிட்டார்கள். இவர்களுடைய வரவுக்காக ஒருவர் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தான் கபட நாடகத் தலைவனென்று சொல்லத் தக்க கர்ப்ப நாயகம்.

கர்ப்ப நாயகம் இருவருக்கும் நமஸ்காரம் செய்து, அவர்கள் அருகில் வந்ததும், என்ன ஆச்சரியம் தங்கள் மேல் போலீஸார் சந்தேகித்தார்களாமே! தங்கள் வீட்டை சோதனை போட்டதில் சில ரத்தினங்கள் கிடைத்ததென்றும் சொன்னார்கள். தாங்கள் போலீஸார் வசம் இருப்பதாகக் கேள்விப்பட்டு விடுவிப்பதற்கு முயற்சி செய்யலாம் என்று வந்தேன். நல்லவேளையாய், இவர்கள் உதவி செய்தார்கள் என்பதை அறிந்தேன் என்று சொன்னான். நம்மாலாவது யாதொன்றுமில்லை. நடக்க வேண்டியது நடக்கும். பட வேண்டியதை பட்டுத் தீரவேண்டும் என்று மெதுவாய்ச் சொன்னார் இரங்கனாதம். மானேஜர் கர்ப்ப நாயகத்தை உற்றுப்பார்த்த வண்ணமாயிருந்தார்.

## பதினெட்டாம் அத்தியாயம்

'தன்வினை தன்னைச்சுடும்'

"அண்ணா! இதுவரை எங்கிருந்தீர்கள்" என்று மிகுந்த ஆவலோடு கேட்டாள் மனோரஞ்சிதம். "நான் காஞ்சிவரத்தில் இருந்தேன்" என்றார். இருவரும் பேசிக்கொண்டு டிராம் வண்டியிலேறி மைலாப்பூருக்குச் சென்றார்கள்.

இரத்தின மாளிகையில் தனபதி முதலியார் தனக்கு தேக சௌக்கியமில்லை யென்று தனிமையாய் ஒரு அறையில் படுத்திருந்தார். வேலைக்காரர்கள் இருவரையும் தடுத்து, இப்பொழுது தான் நித்திரை செய்கிறார்கள், விழித்தெழுந்தவுடன் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். சகோதரனை மாளிகையில் இருக்கச் செய்து மனோரஞ்சிதம் மாத்திரம் இராஜம்மாள் வீட்டுக்குப் போயிருந்தாள்.

இருவரும் மிக்க அன்போடு க்ஷேமம் விசாரித்துக் கொண்டார்கள். இரத்தினமாளிகையில் நடந்த விஷயம் இராஜம்மாளுக்குக் கொஞ்சம் தெரிந்திருந்தாலும், ரஞ்சிதத்தையும் கேட்டாள். அவளும் தனக்குத் தெரிந்தவரை சொல்லி, தனக்கு கர்ப்பநாயகத்தைப் பற்றி மிகுந்த சந்தேகமாயிருக்கிறதென்றும் தான் ரகஸ்யமாய்ச் சென்று அறிந்த விஷயத்தையும் சொன்னாள். இராஜம்மாள் படித்த புத்திசாலியாகையால், அவைகளைக் கேட்டு சிந்தித்து, உனக்கு ஒரு உபாயம் சொல்லுகிறேன், அப்படியே செய்வாயானால் உண்மையை அறியலாம் என்றாள். அதற்கு ரஞ்சிதம், திருடன் யாரென்று திட்டமாயறிய வேண்டும், நிரபராதியான இரங்கனாத முதலியாரும் கஷ்டத்திலிருந்து நீங்கவேண்டும் என்றாள். திருநெல்வேலியிலிருந்து துப்பறிதலில் பிரசித்திபெற்ற மாணிக்கம் பிள்ளையவர்கள் இந்த ஊருக்கு வந்திருக்கிறார்கள். அவர்களை இன்று மாலை வரச் செய்கிறேன். நீ அவர்களிடம் விஷயங்களைத்

தெரிவித்துவிடு என்றாள். ரஞ்சிதம் அதை ஒப்புக்கொண்டாள். மாலையில் மாணிக்கம்பிள்ளை வந்தவுடன் ரஞ்சிதம் நடந்த விஷயங்களை யெல்லாம் சொன்னாள். அதை விசாரித்து தகுந்த வேலை செய்வதென்று ஒப்புக்கொண்டு சென்றார்.

நமது வாசகர்களுக்கு மாணிக்கம்பிள்ளையைப் பற்றி முன் படித்தது ஞாபகமிருக்கலாம். அவர் விசாரித்து தனபதி முதலியாருடைய புத்திரன் இன்னாரென அறியப்பட்டவர் யாவரோ, அவரே இப் பெரிய வில்லங்கத்தில் சிக்கியிருக்கிறதாய் நன்குணர்ந்துகொண்டு சென்றார்.

மனோரஞ்சிதம் இரத்தினமாளிகைக்குச் சென்றாள். தன் தமயன் (சந்தான கோபாலகிருஷ்ண முதலியார்) அம்மானோடு பேசிக்கொண்டிருக்கக் கண்டாள். கர்ப்பநாயகமும் அந்நேரம் வந்து சேர்ந்தான். ஒன்றும் அறியாதவன்போல், ஆச்சரியப்படுவதுபோல் கேட்டுக் கொண்டிருந்தான், "ரஞ்சிதம் உனக்கேன் இவ்வளவு கவலை, போலீசார் மூலமாய் எவ்வளவோ ஏற்பாடு செய்திருக்கிறேன். இங்கே கொள்ளை அடித்தவர்கள் தான் உங்களையும் மோசமாய் மறைத்து விட்டார்கள் போலிருக்கிறது. நானே முன்னின்று எல்லா வேலையையும் கவனிக்கிறேன்" என்று கர்ப்பநாயகம் சொன்னான். "தாங்கள் சொல்லுவதில் அணுக்கூடத் தப்பிதமில்லை. எல்லாம் சரியே. எனக்கும் அவ்வித அபிப்பிராயம் தான்" என்றாள். தனபதி முதலியார் கர்ப்பநாயகத்தை தன் பக்கத்தில் வந்து உட்காரும்படி கேட்டுக் கொண்டார். அவனும் அவ்விதமே சமீபத்தில் உட்கார்ந்தான். 'முக்கியமான இரத்தினங்களடங்கிய பெட்டி மாத்திரம் களவுபோயிருக்கிறது. அதை நினைக்க நினைக்க என் மனம் துயரக்கடலில் மூழ்குகிறது. நீ எப்படியாவது போலீசாருக்கு ஒத்தாசையாயிருந்து இரத்தினங்களை என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும்' என்று மிக்க பரிதாபத்தோடு சொன்னார்.

'கவலைப்படவேண்டாம், நான் உதவி செய்யக் கடமைப்பட்டவன்' என்று பதில் சொன்னான்.



ரஞ்சிதம் தான் பதில் சொல்லும்போது அவன் முகம் மாறுபட்டதைக் கண்டாள். அவள் சந்தேகம் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. அன்று கர்ப்பநாயகம் மத்தியானம் சாப்பிட்டுவிட்டு மாலையில் வெளியே சென்றான். ரஞ்சிதம் பின்தொடர்ந்து அவன் அறியாவண்ணம் மறைந்து சென்றாள். கர்ப்பநாயகம் புதுப்பேட்டைக்குப் போய் முன் சென்ற வீட்டுக்குள் புகுந்து ஒரு ஸ்திரீயை அழைத்துக் கொண்டு 'கெயிடி தியேட்டர்'ருக்குச் சென்றான். அந்த தியேட்டர் வாசலில் மாணிக்கம் பிள்ளை நின்று கொண்டிருந்தார். ரஞ்சிதம் அவரிடம் சென்று, இருவர் உள்ளே போயிருக்கிற விஷயத்தைத் தெரிவித்தாள். கர்ப்பநாயகத்தோடிருக்கும் ஸ்திரீதானே உன்னை சமாதானப் படுத்தி தனியான இடங்களில் வைத்திருந்தாள் என்று கேட்டார். அவள் தான்— தங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டாள். அதைப்பற்றி இப்பொழுது கேட்காதே சமயம் வாய்க்கும்போது சொல்லுகிறேன். இவர்கள் இந்த பயாஸ்கோப்புக்கு மாலை வரப்போகிறார்கள் என்பது தெரிந்து நான் இவ்விடம் வந்திருக்கிறேன். கர்ப்பநாயகம் இரத்தின மாளிகைக்கு வரும்போது, செய்கிற வேலையையும் பேசுகிற விஷயத்தையும் கவனமாய் அறிந்துவை என்றார். ரஞ்சிதம் விடைபெற்றுக்கொண்டு இரத்தின மாளிகைக்குச் சென்றாள். இனி நமக்கு கஷ்டமில்லை, மாணிக்கம் பிள்ளை நன்றாய் விசாரித்து உண்மையை கையும் மெய்யுமாய்க் கண்டு பிடித்துவிடுவார்கள் என்று ரஞ்சிதம் தனக்குள் சமாதானம் அடைந்தாள்.

கர்ப்பநாயகம் சில இரத்தினங்களை பம்பாய்க்கு அனுப்பியிருக்கிறதாகவும் இரண்டு வைரங்களை உள்ளூரில் விற்றிருக்கிறதாகவும் மாணிக்கம்பிள்ளை விசாரித்தறிந்தார். கர்ப்பநாயகம் மறுநாள் திடீரென பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றான். மாணிக்கம்பிள்ளையும் கூடவே தொடர்ந்தார்.

தனபதி முதலியாருக்கு கர்ப்பநாயகத்தினிடத்தில் அளவற்ற விசுவாசமுண்டு என்று சொல்லவேண்டுவதில்லை. கர்ப்பநாயகம் தான் அவசர காரியமாய் பம்பாய்க்குப் போகவேண்டியிருப்பதால், நேரில் வந்து சொல்லிக்கொண்டு போக முடியாதிருப்பதுபற்றி

விசனிப்பதாயும் ஒரு கடிதம் எழுதி அனுப்பினான். தனபதி முதலியார் அதைப் படித்துவிட்டு ரஞ்சிதத்தினிடம் கொடுத்தாள். அவள் படித்து வெகு நேரம் யோசித்துக்கொண்டிருந்தாள். தனபதி முதலியார் என்ன யோசிக்கிறாய் என்று கேட்டார். “இரத்தினங்களைத் திருடியது யாராயிருக்கலாம்” என்று ரஞ்சிதம் கேட்டாள். திருடினவர் இன்னாரெனத் தெரிந்திருந்தால் ஏன் இவ்வளவு கஷ்டம் என்று சொன்னார். நமது மாளிகையில் நெருங்கிப் பழகினவர் தான் இப்படிச் செய்திருக்கவேண்டும் என்று எனக்குத்தோன்றுகிறது என்று ரஞ்சிதம் சொன்னாள். சரி தான்—ரங்கனாதன் மேல் உனக்கு சந்தேகம், எனக்கு எவரிடத்திலும் சந்தேகமில்லை, நடக்கிறது நடக்கட்டும் என்று சொன்னார். நீங்கள் அந்த மாதிரி அர்த்தம் பண்ணவேண்டாம். நான் இரங்கனாதனைப்பற்றி ஒன்றும் நினைக்கவில்லை யென்று சொன்னாள். இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார். கடைத் தெருவில் இரண்டு வைரங்கள் விற்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லி, இதோ பாருங்கள் அவைகளை வாங்கி வந்திருக்கிறேன் என்று அவர் கையில் கொடுத்தார். தனபதி முதலியார் அவைகளைப் பார்த்து என்னுடையது தான் சந்தேகமில்லை யென்றார். அப்படியானால் தங்கள் இரத்தினங்களைத் திருடியது ரங்கனாத முதலியார் என்பது நிச்சயம். இரங்கனாத முதலியார் விற்றிருப்பதாகக் கணக்கிருக்கிறது என்று சொன்னார். இதைக் கேட்டதும் தனபதி முதலியார், அவன் அப்பேர்ப்பட்ட துர்க்குண முள்ளவனல்லவே, அவன் செய்திருப்பான் என்று நினைப்பதற்கில்லை. இன்னும் நன்றாய் விசாரியுங்கள் என்றார். இரண்டு அத்தாட்சிகளிருக்கும் போது இனி கேசை நடத்தவேண்டியது தான் என்றார் சப் இன்ஸ்பெக்டர். எப்படியாவது நான் இழந்து போன இரத்தினங்கள் கிடைத்தால் போதும் என்றார். எங்களாலான முயற்சி செய்கிறோ மென்று சொல்லி விடைபெற்று சென்றார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த மனோரஞ்சிதம் இன்னது செய்கிறதென்று தோற்றாமல் திகைத்துக் கொண்டிருந்தாள்.



கர்ப்பநாயகம் பம்பாய் போயிருக்கிறார். மாணிக்கம்பிள்ளை என்ன செய்கிறாரோ தெரியவில்லையே. அநியாயமாய் இரங்கனாத முதலியாரைத் தண்டித்துவிட்டால் என்ன செய்கிறது ஐயோ, பாவம்! நிரபராதியாயிற்றே. அவர் எவ்விதம் தப்புவார், இரண்டு அத்தாட்சிகளையும் கர்ப்பநாயகம் தயார் செய்து அபாண்டமான குற்றத்தைச் சுமத்துகிறாரே, இன்னும் என்ன தான் நடக்கிறது பார்ப்போம் என்று தனக்குள் எண்ணாதும் எண்ணிக் கொண்டிருந்தாள்.

---

## பத்தோன்பதாம் அத்தியாயம்.

---

### ‘விசாரணை’

‘பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்’ என்பதற் கிணங்க இரங்கனாத முதலியாரை ஜாமீன் கொடுத்து அழைத்து வந்தும் பயன்படவில்லை. சைனாபசாரில் இரண்டு வைரங்கள் விற்கப்பட் டிருக்கின்றன என்ற காரணமாய் கேஸை நடத்த வேண்டுமென்று போலீஸார் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இரங்கனாத முதலியாரை தொந்தரவு செய்தால் ஒருவேளை உண்மை வெளியாகுமென்று போலீஸாரில் சிலர் அபிப்பிராயப்பட்டனர். இவர் ஒரு கௌரவத் திருடராயிருக்கலாகாதா என்று ஒருவர் சந்தேகித்தார். இவ்விதமாக ஒவ்வொருவரும் தம் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். எப்படி யிருந்தாலும் விசாரணைக்குக் கொண்டு வந்தால் எல்லா உண்மையும் முறையே வெளியாய்விடும் என்று தீர்மானித்து மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தாவா செய்து விட்டனர். சாக்ஷிகளுக்கெல்லாம் சம்மன் சார்பு செய்து விட்டனர். கேஸ் முடியும் வரை இரங்கனாத முதலியாரை போலீஸ் பந்தோபஸ்தில் வைத்துக்கொண்டார்கள். எவ்வித ஜாமீனும் அனுகூலப்படவில்லை.

இரங்கனாத முதலியார் மேல் ஏற்பட்ட விவகாரம் பத்திரிகைகளிலெல்லாம்பிரசுரிக்கப்பட்டன. அதற்கு முந்திய மாதத்தில் அவர் எழுதிய 'இல்லற தர்மம்' என்ற நூலுக்கு பத்திரிகைகள் இவருடைய மேன்மையான கல்வித்திறமையையும், நூலின் சிறப்பையும் பற்றி பத்திரிகைகளெல்லாம் கோஷித்தன. இவருடைய மௌனத்தையும் நடப்பையுங் கொண்டு சிலர் திருடி விட்டு இவரைக் கோர்ட்டுக்கு இழுத்து கஷ்டத்துக்குள்ளாக்கினார்கள் போலும். இரங்கனாத முதலியார் நிரபராதியென நிரூபிப்பது சிரமமாகிவிட்டது. இதற்காக தனபதி முதலியாருடைய அபிப்பிராயத்தை அறிய வேண்டி ஸ்டாண்டர்டு பத்திரிகையின் மானேஜர் போயிருந்தார். அவருக்கு எவரிடத்திலும் சந்தேகமில்லையென்றும், இத்தகைய தீய தொழிலை இரங்கனாதன் செய்திருக்க மாட்டான் என்பதே முடிவான அபிப்பிராயமென்றும் தெரிவித்தார். ஆனால் தனபதி முதலியார் இரங்கனாதன் விஷயமாக எவ்வித சகாயமும் செய்யத் தயாராயில்லையென்றும், தான் இழந்த இரத்தினங்கள் எப்படியும் தனக்கு வந்து சேரும் என்ற நம்பிக்கையுண்டென்றும் சொன்னார். அவ்வளவு தூரம் தங்களுக்கு நம்பிக்கையுண்டாகக் காரணமென்னவென்று கேட்டார். உயர்தரமான இரத்தினங்கள் களவாடப்பட்டிருப்பதால், பெரிய இரத்தின வியாபாரிகளிடம் தான் விற்பனைக்குப்போகும், அவர்கள் என்னுடையது என்று நன்றாய்க் கண்டு கொள்வார்கள் என்பதாக தனபதி முதலியார் சொன்னார். தனபதி முதலியாரால் நன்மை தீமையெதுவும் உண்டாகாதென யூகித்துக் கொண்டார்.

சென்னையிலுள்ள பிரபல வக்கீல்களிடமும், பாரிஸ்டர்களிடமும் யோசனை செய்து பார்த்தார். இரங்கனாத முதலியார்தான் திருடியிருக்க வேண்டும் என்பதற்கு இரண்டு பலமான அத்தாட்சிகள் போலீஸார் வசமிருக்கின்றன. அவை எவ்வளவு தூரம் உண்மையா யிருக்குமோ தெரியவில்லை. மேலும் இரங்கனாத முதலியாருக்கு விரோதமாக எவரும் இருக்கிறதாகத் தெரியவில்லை. ஆனால் கர்ப்பநாயகத்தின்மேல் இரங்கனாத முதலியாருக்கு சந்தேகமுண்டு. என்றாலும் அதைப்பற்றி ஒரு விபரமும் தெரிவிக்கமாட்டேன் என்கிறார். இவ்விதமாக மானேஜர் பலவித யோசனை செய்தார்.



கேஸ் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. போலீஸார் செய்த பிராதின்படி சாட்சியங்களை விசாரித்தார்கள். இரங்கனாதமுதலியார் பல விதத்திலும் இந்தக் கேஸில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று எண்ணும்படியாயிருந்தது. இரங்கனாத முதலியாருக்காக ஒரு வக்கீல் அவருடைய குணநிசயங்களைப்பற்றி எடுத்துச் சொல்லி அதிக நேரம் வாதித்தார். இரத்தினங்களைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாதென்றும், எல்லாம் கட்டுப்பாடான விவகாரமா யிருக்கிறதென்றும், அவரை நிரபராதியென்று நிரூபிக்க ஒருவாரம் தவணை கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். கோர்ட்டார் சம்மதித்தார்கள். சென்னையிலுள்ள சில பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, தக்க ஜாமீன் கொடுத்து இரங்கனாத முதலியாரை மறு விசாரணை வரை மீட்டுக் கொண்டார்கள்.

போலீஸார் மேற்கொண்டு வேலை செய்ய இஷ்டப்படவில்லை. கர்ப்பநாயகத்தைக் கண்டு பிடித்தால் ஒரு வேளை உண்மை வெளியாகக் கூடும் என்று இரங்கனாத முதலியார் தெரிவித்தார். மறு விசாரணைக்குக் குறிப்பிட்ட தேதிக்குள் கர்ப்பநாயகத்தைக் கண்டு கொள்ள முடியாதென்று தீர்மானித்துவிட்டார்கள். கர்ப்பநாயகம் இருக்குமிடத்தைத் தெரிவிக்கும்படி பத்திரிகைகளிலும் வெளியிட்டார்கள். பம்பாய்க்குப் போயிருக்கிற விஷயம் சிலருக்குத் தெரிந்திருந்தாலும், பம்பாயில் இன்னவிடத்தில் இருக்கிறார் என்பதும் தெரியவில்லை.

இரங்கனாதத்துக்குப் பரிந்து பேசினவர்களும், ஜாமீன் கொடுத்தவர்களும் மிக்க வாட்டமடைந்தார்கள். மாசற்ற ஒருவரைக் காப்பாற்ற முடியாதிருப்பது பற்றி இன்னது செய்கிறதென்று அறியாமல் தவித்தார்கள். குறிப்பிட்ட தேதியில் விசாரணை நடக்கப்போவதுபற்றி ஏற்கெனவே பத்திரிகைகளில்வெளியாயிருந்தபடியால் அயலூர்களினின்றும் அநேக அபிமானிகளும், நண்பர்களும் வந்து சேர்ந்தார்கள். சில பாரிஸ்டர்கள் சட்டத்தை ஆதாரவாக்கிக்

கொள்ளமுடியாது, ஆனால் சமயோசிதமாக நியாயங்களை எடுத்துச் சொல்லி வாதித்துப் பார்க்கலாம் என்று தீர்மானித்தார்கள். பத்துமணிக்கெல்லாம் கோர்ட்டில் அளவற்ற ஜனங்கள் குழுமியிருந்தார்கள். இரங்கனாத முதலியாருடன் அநேக பிரபுக்கள் வந்திருந்தார்கள். முதலாவது தனபதி முதலியார் விசாரிக்கப்பட்டார். இரங்கனாத முதலியாருடைய வக்கீல் தனபதி முதலியாரை சில கேள்விகள் கேட்டார். கடைசியாக இரங்கனாதத்தைப்பற்றித் தெரிந்ததைச் சொல்லும்படி சொன்னார். அவ்விதமே நடந்தவற்றைச் சொன்னார். இரங்கனாதத்தின் நற்குணத்தையும், பெருந்தன்மையையும் பற்றி கோர்ட்டாருக்கு எடுத்துச் சொன்னார்கள். இரங்கனாத முதலியார் தான் திருடினார் என்பதை நேரில் கண்டவர் எவருமில்லை. மேலும் ஒரு கூட்டத்தார் சென்று கொள்ளையிட்டதாகச் சொல்லப்படுகிறது. இவரோ ஒரு கிரந்த கர்த்தா. ஒரு பத்திரிகைக்கு உதவி ஆசிரியராக இருக்கிறார். இவர் மிக்க கௌரவமுள்ளவர் என்பதை இதனால் தெரிந்துகொள்ளலாம், என்று பாரிஸ்டர் ஒருவர் பேசினார். சர்க்கார் வக்கீல் எதிர்த்து வாதம் செய்தார். ஒரு கூட்டத்தார் இவருக்குட் பட்டிருப்பது நிச்சயம். அதனால் சொற்ப ரத்தினங்கள் இவர் வசம் இருந்தன என்றும் சொன்னார். போலீசார் அழுத்தமாக இவர் (இரங்கனாத முதலியார்) இந்தக் கேசில் முற்றிலும் சம்பந்தப்பட்டவர் என்றும் மற்றவர்களை கண்டு பிடிக்க தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதென்றும் தெரிவித்தார்கள். கோர்ட்டார் போலீஸார் வாதத்தை ஏற்றுக்கொண்டு தீர்ப்பு சொல்ல தீர்மானித்து விட்டார்கள். ஜனங்கள் எல்லோரும் என்ன சொல்லப்போகிறாரோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். மாலை 4-மணிக்குக் குற்றப் பத்திரிகை படிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். என்றாலும் கூட்டம் கலைந்து வெளியே போகவில்லை. மாலையில் கூட்டம் அதிகப்பட்டதேயன்றி குறையவில்லை. தீர்ப்பு சொல்வதற்கு முன் இரங்கனாத முதலியாரை போலீசார் சூழ்ந்து கொண்டார்கள். அக்கூட்டத்தின் மத்தியில் ஒரு பெண் ஓடி வந்து மாஜிஸ்ட்ரேட் முன் நின்று, இரங்கனாத முதலியாருக்கு இந்தக் கேசில் யாதொரு சம்பந்தமுமில்லை.

# கதாரத்னாகரம்

தனிப்பிரதி அணா 4. வருடசந்தா ரூ. 2.

வெளிநாடுகளுக்கு ரூ. 3-8.

1921—அக்டோபர்

## அட்டவணை.

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | மனோரஞ்சிதம் | 177 |
| 3. | இரத்தின மாளிகை | 179 |
| 4. | தேவாரக்கச்சேரி | 184 |
| 5. | இயற்கை யழகு | 185 |
| 6. | விடுகதைகள் | 190 |
| 7. | வாழ்வின் மர்மங்கள் | 191 |
| 8. | சிறு மணித்திரள் | 192 |
| 9. | ஒரு விநோதக் கதை | 193 |
| 10. | தமிழின் பெருமையும் அதன் தற்கால நிலைமையும் | 204 |
| 11. | பலதுளி பெருவெள்ளம் | 213 |

4- FEB 1922

## ஒரு புது நூல்.

கதாரத்னம் நமது கதாரத்னாகரம் முதலிரண்டு தொகுதிகளிலும் வெளியானவைகளிலிருந்து 6 சரித்திரங்கள் 4 கதைகள், 2 நாவல்கள் முதலானவைகளை யெடுத்து கதாரத்னம் என்ற பெயருடன் தனி நூலாக வெளியிட்டிருக்கிறோம். வாசிப்பதற்கு அவ்வளவும் ருசிகரமானது.

இதன் விலை அணா 12.

நமது சந்தாநேயர்களுக்கு ,, 10.

மானேஜர், சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

குறிப்பு:—சந்தாநேயர்கள் கடிதம் எழுதும்போது கதாரத்னாகரம் சந்தாதார் என்று குறிப்பிட்டு எழுதவும்.

# கடவுள் வணக்கம்.

## திருச்சிற்றம்பலம்.

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார்
அச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னாரூரெம்
பிச்சைத் தேவா வென்னான் செய்கேன் பேசாயே.

பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டே னாட்பட் டேனுன் னடியேனே.

அடியே னல்லேன் கொல்லோ தானெனை யாட்கொண்டிலை கொல்லோ
அடியா ரானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார்
செடிசே ருடல மிதுநீக்க மாட்டே னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே.

காணுமாறு காணே னுன்னை யந்நாட் கண்டேனும்
பாணேபேசி யென்றன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணேபெண்ணே யாரமுதே யத்தா செத்தே போயினேன்
ஏணாணில்லா நாயினே னென்கொண்டெழுகே னெம்மானே.

மானேர் நோக்கி யுடையாள் பங்கா மறையீ றறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக் கரியாய் சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே.

புறமே போந்தோம் பொய்யும் யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்த வடியார் மற்றொன் றறியாதார்




சரி! நான் போய்விட்டு மாலை வருகிறேன், என்று சொல்லிக்கொண்டு ரிக்ஷா வண்டியில் ஏறினான். தன்னை வருந்தி
மறைந்தவள் இவள்தான் என்று ரஞ்சிதம் நன்றாய் அறிந்து அவ்வீட்டின் அடையாளத்தைப் பார்த்துக் கொண்டாள்

கடவுள் துணை


KATHA
கதாரத்னகரம்
RATNAKARAM


ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்


| | | |
|---|---|---|
| Vol. 4. | October, 1921 | No. 5. |
| தொகுதி 4. | துன்மதிஹூ அக்டோபர்மீ | பகுதி 5. |


# மனோரஞ்சிதம்.

ஒரு வருடத்தில் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் 50,000000 டாலர்கள் பெறுமான பொத்தான்கள் செய்யப்பட்டன.

* * *

கப்பல் துறைகளில் மிகப்பழமையானது ஏடனைச் சேர்ந்த மாயால என்பதாகும். இவ்விடத்தில் தான் ஏடனைச் சேர்ந்த சுதேசிகள் வசிக்கிறார்கள்.

* * *

ஐர்லாந்திலிருந்து கிரேக்கர்கள் பத்தாயிரம் குதிரைகளை வாங்க உத்தரவு செய்திருக்கின்றனர். இதுவரை பெல்பாஸ்டி லிருந்து கிரீஸுக்கு 1500 குதிரைகள் அனுப்பப் பட்டிருக்கின்றன.

* * *

மரக்கறி வகைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்களைக் கொண்டு மோட்டார்களுக்கு உபயோகப் படுத்தப்படும் 'பெட்ரோல்'

செய்யும் விதத்தைக் கண்டு பிடித்திருப்பதாக டுலெளஸ் என்னுமிடத்தைச் சேர்ந்த ஓர் அறிஞர் கூறுகிறார்.

* * *

ஜப்பானில் முதல் முதலாக சென்றவருடம் அக்டோபர் மாதத்தில் தான் ஜனக்கணக்கு எடுக்கப்பட்டது. ஜனக்கணக்கு எடுக்கும் விஷயமாக பேருதவி புரிந்த 2,90,000 பேருக்கு வெகுமதி அளிக்க ஒஸ்லாக தங்கசாலையில் பதக்கங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

* * *

மாஜிஜெர்மன் கப்பல்கள் கிரேட்பிரிட்டனால் விற்கப்பட்டன. பிரிட்டிஷ் நேச தேசவியாபாரிகளும் மாஜி எதிரிகளின் வியாபாரிகளும் அவைகளை வாங்கிக்கொண்டனர். பிரிட்டிஷ் நேசதேச வியாபாரிகள் வாங்கிய கப்பல்களின் மொத்த நிறை 13,50,000 டன்களாகும். மாஜிவிரோதிகளின் வியாபாரிகள் வாங்கின கப்பல்களின் மொத்த நிறை 70,000 டன்களாகும்.

* * *

அமெரிக்காவிலிருந்து கிடைக்கும் சமாசாரங்களால் ஜியார்ஜியாவிலும், ஆர்மேனியாவிலும், ஆஜர் பெய்சானிலும் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பாகுஎன்னுமிடத்தில் வாந்திபேதியின் கொடுமையினால் தினமொன்றுக்கு நாலாயிரம்பேர் இறந்து விடுகின்றனராம். ஆயிரக்கணக்கான குழந்தைகள் சீதபேதியினாலும் இதர தொத்து வியாதிகளாலும் மடிந்து போகின்றன.

* * *

இங்கிலாந்திலுள்ள ஒரு பாங்குக்குள் பதினைந்து வயதுள்ள பையன் ஒருவன் சென்று நூற்றுக்கு $5\frac{1}{2}$ வீதம்ஏற்பட்டுள்ள கடன் பத்திரம் ஒன்று தனக்குவேண்டு மென்றுகேட்டான். குமஸ்தா பத்திரத்தைக் கொண்டு வரத் திரும்பிச் செல்லப் பார்த்துப் பையன் பாங்குக்குச் சொந்தமான ஒரு கட்டு நோட்டுக்களை எடுத்துக் கொண்டு, பிடிக்க வந்தவர்கள் கையில் அகப்படாமலே ஓடியே போய்விட்டான்.

* * *

டோனல்ட் பி. மாக்மில்லின் கூட்டத்தார் ஆர்ட்டிக் பிரதேசத்தில் பெரியதோர் பொற்சுரங்கம் இருக்கிறதென்றும் அதைக்கண்டு பிடிக்கத் தாங்கள் செல்லப் போவதாகவும் கூறுகின்றார்கள். உறை

## இரத்தினமாளிகை

(முன் தொடர்ச்சி)

கர்ப்பநாயகம் தான் திருடினதென்றும், தான் தப்பிக்கிறதற்காக வேண்டியே இரங்கனாத் முதலியார் மேல் சந்தேகிக்கும்படி செய்து விட்டார் என்றும், தன்னையும் தன் தமயனையும் வஞ்சித்த விவரங்களையும் சொல்லி, தன்னை வஞ்சித்த ஸ்திரீகள் கர்ப்பநாயகத்தோடிருக்கிறவர்களென்றும் அவர்களைக் காட்டிக்கொடுக்க முடியுமென்றும், இரங்கனாத் முதலியாரை தப்புவிக்கவேண்டி, குற்றஞ் செய்தவரை பொருளுடன் கண்டுபிடிக்கப் பாடு பட்டதாகவும், சப் இன்ஸ்பெக்டர் மாணிக்கம் பிள்ளை கர்ப்பநாயகத்தைப் பின் தொடர்ந்து விபரம் தெரிவிப்பதாகச் சொன்னவர் நாளது வரை காணப்படவில்லையென்றும் சொன்னாள். இவ்விதம் தெரிவித்தது மனோரஞ்சிதம் என்று வாசகர்கள் அறிந்திருப்பார்கள். கோர்ட்டாரும் மற்றோரும் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். பிறகு மாணிக்கம் பிள்ளையைப் பற்றி விசாரித்தார்கள். பம்பாயிலிருந்து அன்று வந்திருக்கவேண்டும், வராததற்குக் காரணம் தெரியவில்லை என்று தெரிவித்தார்கள். மறுநாள் பன்னிரண்டு மணிவரை பார்ப்போமென்று கோர்ட்டார் சொல்ல

---

ந்துகிடக்கும் ஆர்ட்டிக் பிரதேசத்தில் பெருத்ததோர் பொன்சுரங்கம் இருக்கிறதென்று எஸ்கிமோக்களும் கூறுகின்றனர். அவ்விடத்தில் வெள்ளையர்களால் கண்டு பிடிக்கப்படாத உலோகவகைகளும் மலைகளும் அழகிய ஏரிகளும் நிறைந்து கிடப்பதாக எஸ்கிமோக்கள் கூறுகின்றனர்.

* * *

அமெரிக்காவைச் சேர்ந்த, சிகாகோவுக்குச் சமீபத்தில் சும்மிட் என்ற விடத்தில் ஒரு பழைய சுரங்கம் இருக்கிறது. இச்சுரங்கத்தில் அநேக மோட்டார்கள் வண்டிகள் இருப்பதை நியூயார்க் போலீசாரும் இன்ஷூரன்ஸ் கம்பெனியாரும் ஆராய்ச்சிசெய்து வருகின்றனர். இச்சுரங்கம் நூறு அடி ஆழம் முழுமையிலும் தண்ணீர்நிரம்பியிருக்கிறது. இதுவரை அச்சுரங்கத்திலிருந்து 30 மோட்டார் வண்டிகள் எடுக்கப்பட்டன. ஜலமூழ்கிகள் இன்னும் அச்சுரங்கத்தில் நூறு வண்டிகள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள்.

நவசக்தி.

எத்தனிக்கும் போது மாணிக்கம்பிள்ளை சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்திறங்கி யிருக்கிறதாய் டெலிபோன் மூலமாக விஷயம் கிடைத்தது. கால்மணி நேரத்துக்குள் போலீஸ் கோர்ட்டுக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது எந்த நிலைமையிலிருக்கிறதெனக் கவனித்தார். நிரபராதியான இரங்கநாதத்தைச் சுற்றி சில போலீஸ்காரர்கள் நிற்பதைக்கண்டு, கேஸை தாக்கல் செய்த இன்ஸ்பெக்டரிடம் விசாரித்தார். கேஸ் விசாரணை முடிந்து தீர்ப்பு சொல்லும் சமயம்; இரங்கனுதத்தை தண்டிக்கப் போகிறுர்கள் என்றுர். கேஸ் ருஜூவாய் விட்டதா வென்று கேட்டார். அத்தாட்சியாயிருந்த இரண்டு விவகாரங்களை எடுத்துக் காட்டினுர். கேஸ் முழுதும் பிரண்டு போயிருக்கிறது என்று எழுந்து நின்றுர். உடனே மாஜிஸ்ட்ரேட் அவரைநோக்கி, இந்தக் கேஸைப் பற்றி தங்களுக்குத் தெரிவிக்கக் கூடுமா என்று கேட்டார். மாணிக்கம்பிள்ளை சொன்னதாவது:—

"இந்தக் கேஸைப் பற்றிய முழுவிபரத்தையும் நன்றுய் விசாரித்து வைத்திருக்கிறேன். திருட்டுப்போன இரத்தினங்களில் அநேகம் கிடைத்துவிட்டது. தனபதி முதலியாரை சூதாகவே இரங்கனுத முதலியாரின் உதவியைக் கொண்டு கர்ப்பநாயகம் சிநேகமாக்கிக் கொண்டார். படிப்படியாய் அவருடைய பொக்கிஷ நிலைமையைத் தெரிந்து கொண்டு, அவ்வளவையும் கைப்பற்ற முயற்சி செய்து வந்தார். தனபதி முதலியாருடைய குழந்தை சிறு பிராயத்தில் காணப்படவில்லை யென்றும் அக் குழந்தையை கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் ஒரு பெரிய பிரபு வளர்த்து வந்தாரென்றும், ஆரம்பத்தில் பத்திரிகைகளில் பிரசுரித்து பூக்கடை போலீஸ் ஸ்டேஷனிலும் எழுதியுமிருந்தார். கர்ப்பநாயகம் தன்னை அவர் பிள்ளையென்பதாகத் தெரிவித்துக் கொண்டார். ஆதாரமில்லாமல் நம்ப முடியாதென்று தனபதி முதலியார் சொல்லிவிட்டார். அதன் பிறகு 4, 5 போக்கிரிகளைத் தயார் செய்து கொள்ளை யடித்துவிட எண்ணங் கொண்டான். தனபதி முதலியார் தனக்குச் சொந்தமான மனோரஞ்சிதம் என்னும் பெண்ணை விவாகம் செய்துகொடுக்க நினைத்திருந்தார். ஆனுல் மனோரஞ்சிதத்துக்குச் சம்மதமில்லை. கர்ப்ப



நாயகம் கொள்ளையடிப்பதற்குத் தடையாக மனோரஞ்சிதம் திருச்சினுப்பள்ளியிலிருந்து வருகிறுள் என்பதை அறிந்து, ஒரு மோட்டார் வண்டியை கர்ப்பநாயகம் அனுப்பி வஞ்சகமாய் அழைத்து வந்து புதுப்பேட்டையிலுள்ள ஒரு பங்களாவில் வைத்திருந்தான். தன்னை மோசஞ் செய்துவிட்டதா யறிந்த மனோரஞ்சிதம் உடனே கடிதம் எழுதி போலீஸ் கமிஷனருக்கு அனுப்பினுள். அந்தக் கடிதம் மறுநாள் கிடைத்தது. அன்று இரவு அடையாற்றிலுள்ள ஒரு வாசகசாலையிலிருந்து டெலிபோன் மூலமாய் மனோரஞ்சிதம் கமிஷனருக்குத் தெரிவித்தாள். அதே இரவில் தான் இரத்தின மாளிகையிலும் கொள்ளை நடந்தது. தனபதி முதலியார் இவனை முற்றிலும் நம்பி அவன் யோசனையைக் கேட்க ஆரம்பித்தார். நாலைந்து அயோக்கியர்களை அன்றிரவு இரத்தினமாளிகையில் 'பதுங்கி யிருக்கச் செய்து, சமயம் பார்த்து தனபதி முதலியாரைக் கயிற்றுல் கட்டி, தானும் திருடர்கள் கையில் அகப்பட்டதாக தனபதி முதலியார் தெரிந்து கொள்ளும் வண்ணம் தன்னையும் கட்டும்படி செய்து, முதலாவது தனபதி முதலியாரை ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றி அடையாற்றுக்குப் போகும் வழியில் போட்டுவிட்டு, அந்த மனிதனை அழைத்து வருவதாகச் சொல்லிவந்து கர்ப்பநாயகத்தின் கட்டை அவிழ்த்துவிட அவன் இரத்தினப் பெட்டியை எடுத்துக் கொண்டு மோட்டார் வண்டியில் ஏறி தன் வீடு சென்றுன். அதில் சில இரத்தினங்களை கடிதத்தில் வைத்து மடித்து ரங்கனுதத்தின் வீட்டில் போட்டுவிட்டான். இரண்டு ரத்தினங்களை, ரங்கனுதத்தின் பெயரைத் தன் பெயரெனச் சொல்லி விற்றுவிட்டான். சில ரத்தினங்களை சைதாப்பேட்டையிலிருந்து பார்சலாகப் பம்பாய்க்கு அனுப்பினுன். அப்படி அனுப்பும் போது மனோரஞ்சிதம் பின் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். ரங்கனுதத்தின் மேல் கேஸ் உண்டாகி, அரஸ்டுவாரண்டு ஏற்பட்டு ஜாமீன் மேல் விட்ட சமயத்தில் திடீரென பம்பாய்க்குச் சென்றுன். நானும் பின் தொடர்ந்து சென்றேன். பம்பாய் போலீசில் வாரண்டுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். ஒரு சேட்டுக்குப் பார்சல் அனுப்பிய விபரம் தெரியவந்தது. மற்ற பல ரத்தினங்கள் அவன் கைவசமிருந்தன. பம்பாய் போலீசாரால் ரத்தினங்கள் கைவசப்படுத்தப்பட்டு

முத்திரையிட்ட பெட்டியில் இதோ கொடுத்திருக்கிறார்கள். உள்ளூரில் வாங்கின செட்டியாரையுங் கண்டு பிடித்துக் கொள்ளலாம். கர்ப்பநாயகத்தை அரஸ்டு செய்து கொண்டு வந்திருக் கிறேன்.

கோர்ட்டார்:—ரங்னாதம் நிரபராதி என்பதற்கு சற்றும் சந்தேகமில்லை.

மாணிக்கம் பிள்ளை:—இன்னொரு முக்கியமான விஷயம் இப்பொழுதே தெரிவிக்க வேண்டியதா யிருக்கிறது. அதாவது தனபதி முதலியார் அநேக வருஷங்களுக்கு முன் தவறிப் போன அவரது புத்திரனைப்பற்றி விசாரிக்கும்படி தெரிவித்திருந்தார். அவ்வை முற்றிலும் துப்பறிந்து ரங்கனாதம் தான் தனபதி முதலியாருடைய புத்திரன் என்று நான் தெரிந்து கொண்ட போது, அபாண்டமான பெருங் குற்றம் அவர் மேல் சாட்டப்பட்டிருந்த படியால் அதையும் நிவர்த்தித்தேன். இந்தக் கேஸைக் கண்டு பிடிப்பதற்கு மனோரஞ்சிதம் அநேக வழிகளை எடுத்துச் சொன்னாள். அப்பெண்மணி செய்த வேலை குறிப்பிடத்தக்கது. ரங்கனாதத்தை வளர்த்து படிக்க வைத்த வீட்டில் விசாரித்த போது குழந்தையின் இடுப்பில் ஒரு மோதிரம் இருந்த தாகவும், அது தற்காலம் ரங்கனாதத்தினிடம் இருக்கிறதாகவும் அவர் தன் பெற்றோரைக் கண்டு பிடிக்க அதிகப் பிரயாசை யெடுத்து வருவதாயும் அறிந்தேன். அவர் தனபதி முதலியாருடைய பிள்ளை யென்று யான் சொல்லாமலே விளங்கும்.

இதை மிகப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த கோர்ட்டாரும் மற்றோரும் ஆச்சரிய மடைந்தனர். பழியொரு பக்கம், பாவம் ஒரு பக்கம் என்பது கலிகால விந்தை போலும் என்று பலர் பேசிக் கொண்டனர். இரங்கனாதத்தை அகாரணமாய்க் கோர்ட்டுக் கிழுத்து பலவித தொந்தரவு எற்பட்டது பற்றி கோர்ட்டார் வருந்துவதாயும், இச்சமயம் அவர் தன் தந்தையை இன்னவரெனக் கண்டு கொண்டது ஓர் அதிர்ஷ்டம் என்றும் கோர்ட்டார் சொன்னார்கள். தனபதி முதலியார் இரங்கனாதத்தைக் கட்டிப் பிடித்து 'அப்பா அருமைக் குழந்தாய்' என்று மார்போடணைத்தார். மனோரஞ்சிதம் புன்னகை பூத்த முகத்தோடு இரங்கனாதத்தைப் பார்த்தாள். கோர்ட்டு கலைந்



தது. கர்ப்பநாயகத்தைப்பற்றி மறு நாள் விசாரிக்கப்படுமென்று சொன்னார்கள். ஸ்டாண்டர்டு பத்திரிகை மனேஜர் உள்பட நால்வரும் இரத்தனமாளிகைக்குச் சென்றார்கள். அன்றிரவு விசேஷ விருந்து நடந்தது. அவர்கள் அப்பொழுது அனுபவித்த ஆனந்தத்தை வாசகர்கள் தான் அளவிட்டுக்கொள்ள வேண்டும். 'மலைபோல் வந்த துன்பம் பனிபோல் நீங்கும்' என்னும் முதுமொழி இரங்கனாதம் விஷயத்தில் நிதர்சனமாயிற்று என்று பேசிக்கொண்டார்கள்.

மறுநாள் கைது செய்யப்பட்டு வந்த கர்ப்பநாயகத்தின் கேஸ் விசாரிக்கப்பட்டு அவனுக்கு தக்க சிக்ஷை விதித்தார்கள்.

களவு போன இரத்தினங்க ளெல்லாம் யதாப்ரகாரம் அந்தந்த ஸ்தானங்களை அடைந்தன. சின்னாட் சென்றதும் இரங்கனாத முதலியாருக்கும் மனோரஞ்சிதத்துக்கும் விவாகம் வெகுவிமரிசையாய் நடைபெற்றது. சுபம்.

முற்றிற்று.

# தேவாரக் கச்சேரி

## சென்னையில் இசைப்புலவர் திருநெல்வேலி

## ஸ்ரீமான் சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தி

சென்னை கோவிந்தப்பநாய்க்கன் தெருவிலுள்ள சௌந்திரிய மஹாலில் மேற்கண்ட ஓதுவா மூர்த்திகள் இரண்டு தடவை சைவ சமயக் குரவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத்தை இன்னிசைக் கருவிகளுடன் கச்சேரியாக நடத்தினார்கள். சென்னை நகருக்கு இது புதிதாகவே இருந்தது. தேவாரம் சுவாமி பவனி போகும்போது பின்னால் பாடிக்கொண்டுபோவது வழக்கம். அதைப் பக்திமான்கள் கேட்பதும் வெகு சொற்பம். பக்கவாத்தியத்தோடு கச்சேரியை வெகு அருமையாய் நடத்தினார்கள். போலீஸ் கமிஷனர் திவான் பகதூர் பவானந்தம் பிள்ளை அவர்கள், ஹைகோர்ட்டு வக்கீல்களான மெஸ்ஸர்ஸ் சல்லா குருசாமி செட்டியார், நல்லசிவம் பிள்ளை, அனந்தராமய்யா, சுதேசமித்ரன் ஆபீஸ் ஜெனரல் மானேஜர் மிஸ்டர் வி. ஆர். ஸ்ரீநிவாசய்யங்கார், பி. ஏ. மற்றும் பிரபுக்களும் வியாபாரிகளும் வந்திருந்து இன்புறக்கேட்டு ஆனந்தித்தார்கள். தேவாரத்தின் இசையையும், அதன் அருமை பெருமைகளையும் அறிந்துகொள்வதற்கு நல்ல சமயம் வாய்த்ததுப்பற்றியும் பதங்கள் விளங்க சிறப்புடன் இனிய குரலில் ஓதுவாமூர்த்தி அவர்கள் பாடிய திறமையைப்பற்றியும் சிலர் எடுத்துக்கூறினார்கள். சென்னைமாநகரில் திருநெல்வேலிப் பிரபுக்கள் அநேகர் இருந்தும் சிலர் வராதிருந்தது விசனிக்கத்தக்கது. திருநெல்வேலி ஜில்லா வாசியும் காசியில் பட்டு வர்த்தகத்தில் பிரசித்தி பெற்றவரும் மெஸ்ஸர்ஸ் கெ. எஸ். முத்தையகம்பெனியின் தலைவருமான ஸ்ரீமான் கெ. எஸ். முத்தையா ஓதுவாமூர்த்தியின் பெயர் பிரபலமாகும் பொருட்டு பற்பல விதமாகவும் புது மாதிரியாகவும் விளம்பரம் செய்தார்கள். அதன்பலனாக திரளான ஜனங்கள் கேட்டு ஆனந்தித்தார்கள். ஸ்ரீமான் முத்தையாவோடு நமது கதாரத்னாகரம் பத்திராதிபர் எம். ஏ. நெல்லையப்பர் அவர்களும் வேண்டிய முயற்சி செய்தார்கள். கச்சேரி கலைந்ததும் கெ. எஸ். முத்தையா அவர்கள் தமது கிரகத்திற்கு ஓதுவாமூர்த்தி அவர்களை அழைத்துச் சென்று உயர்ந்த பட்டு வஸ்திரமொன்றை சன்மானமாக அளித்தார்கள். நமது பத்திராதிபர் அவர்களும் விருந்தளித்து தக்க சன்மானம் செய்தார்கள்.

சங்கரலிங்கம்.

# இயற்கையழகு

மன்னார்குடி T.-S. சுந்தரேசய்யர் எழுதியது.

(முன் தொடர்ச்சி)

அத்தடாகத்தை கண்டதும், என் மனது திடீரெனப் பாய்ந்து அவ்வியற்கையழகை இறுகக் கட்டிக் கொண்டது. ஆகா அங்கு வசிப்பவர் தேவர் என நினைத்தேன். அத்தடாகத்தில் 2 படித் துறைகளை கட்டப்பட்டிருந்தன. அதன் ஜலம் என்னை நல்லோர் மனதென மதிக்கும்படி வெகு ஸ்வச்சமாயும் பரிசுத்தமாயும் இருந்தது. நாலு பக்கங்களிலும், மகிழ பாரிஜாதம் முதலிய புஷ்ப விருக்ஷங்கள் வரிசை வரிசையாய் சோபித்தன. அத்தடாகம் முழுமையும் தாமரை இலைகளும் புஷ்பங்களும் நிரம்பிக் கிடந்தன. வெள்ளை நிறமுள்ள அழகிய பக்ஷிகள் ஆணும் பெண்ணுமாக சந்தோஷமாய் விளையாடிக் கொண்டிருந்தன. இதைக் கண்டவுடன் எனக்கு பல எண்ணங்கள் உதித்தன. உங்களிடம் சொன்னால் என்ன; இத்தடாகம் மனிதன் சிருஷ்டித்தானா? இல்லை என நிச்சயித்து நல்ல வேளையாய் ஈசன் மனித சஞ்சார மதிகமில்லாத இங்கு இதை சிருஷ்டித்தாரே என சந்தோஷித்தேன். அவ்வழகிய தாமரை மலர்கள் ஏராளமாய் எங்கும் மலிந்து கிடந்ததால் இங்குள்ளவர்களுக்கு பகுத்தறிவு இல்லையோ என சந்தேகித்தேன்; நல்ல வேளையில் நம் பட்டணத்துள்ளோர்க்கு இவ்வாச்சரியம் தெரியாமல் இருக்கிறதே என எண்ணி உள்ளம் பூரித்தேன்; நம்மைப்போல் இங்கு யாராவது வந்து பார்த்து விடுவார்களோ வென பயந்தேன். பார்த்தாலென்ன? கூட்டம் கூட்டமாக வந்து இதனழகை தொலைத்து விடுவார்களென நடுங்கினேன்.

இப்படி யோசித்துக் கொண்டே ஜலத்தின் மேலுள்ள ஒரு படியில் உட்கார்ந்து கொண்டு உற்று நோக்கினேன். அடாடா!

என்ன! வித விதமான அழகிய மீன்கள் விளையாடிக் கொண்டிருந்தன. சென்னையில் நாலு மீனைப்பிடித்து ஒரு பெட்டியில் அடைத்து வைத்துக் கொண்டு அரையணா வாங்கிக் கொண்டு காட்டுகிறார்கள். இதைக் கண்டவுடன் என் மனது உண்மையாய் வெடித்து வெளியில் வந்து விடும் போல் தோன்றியது. எனக்கு அங்குள்ள ஒவ்வொன்றும் ஆச்சரியமாய்த் தோன்றிற்று என்றாலும் இதைக் கண்டவுடன் நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே யில்லை. கீழுள்ள படியும் வெகு சமீபமாய் தெரிந்த படியால் வெகு அலக்ஷியமாய் காலை வைத்து விட்டேன். முழங்காலுக்கு மேல் ஜலம் வந்து விட்டது. சந்தோஷத்தோடு ஜலத்தையும் ஒரு கை அள்ளிக் குடித்தேன். கருப்பஞ்சாறு ருசியுள்ளதென்கிறார்கள். சீ! வீண் பெருமை அதற்கேற்பட்டிருக்கிறதென மதித்தேன். பட்டணத்தில் பைப்பு ஜலத்தைக் குடித்துப் பழகிய எனக்கு இந்த ஜலத்தையே அருந்திக் கொண்டிருந்தால் போதுமெனத் தோன்றிற்று. ஜலத்திற்கு இதன் ருசியை அறிந்தே, அமிருதம் எனப்பெயரிட்டிருக்கின்றனர் என்று தீர்மானித்தேன். ஆநந்த பரவசனாகி அப்படியிலேயே உட்கார்ந்து விட்டேன்.

அப்பொழுது சுமார் 5 மணி இருக்கும்; ஆகா ஒருகாற்று வீச ஆரம்பித்தது. அக்காற்று சரீரத்தில் பட்டதும் ஒரு நிமிஷத்தில் மெய்ம்மறந்து ஒன்றும் தெரியாமல் இருந்தேன். பட்டணத்திலும் காற்று வாங்க சமுத்திரக்கரை போவதுண்டு; பல்லை இளித்துக் கொண்டு கிழக்கு நோக்கி நிற்பேன்; சீ! அக்காற்றும் காற்றா! ஒரு க்ஷணத்தில் இக்காற்று என்னை சுவர்க்கத்தில் ஏற்றிவைத்து விட்டதே.

பட்டணத்தில் கிடந்து தவித்த எனக்கு அடடா இது ஒரு அவஸ்தை. சிறு கிராமத்தில் ஒரு பகுதி எங்கும் நிச்சப்தமாயிருக்கிறது. மேகக்கூட்டம் போல் எங்கும் ஒரே மரச்சோலை. அதன் நடுவில் ரமணீயமான ஓர் தடாகம். பக்ஷிகளின் ஆலாபம் தேவகானம் போலிருக்கிறது. தேவாமிருதம் போன்ற தண்ணீர். தனிமையாய் படியில் உட்கார்ந்து கொண்டேன். மந்தபவனன் அங்குள்ள சகல குஸுமங்களுடையவும் வாசனையைக் கிரகித்து வர்ஷித்துக் கொண்டு மெதுவாய் வீச ஆரம்பித்தான். நான் விழித்திருக்கிறேனா? தூங்கு



கிறேனா? அல்லது ஸ்வப்னமா? நேயர்களே! சொல்லுங்கள். ஸ்வர்க்கத்தில் இதைவிடவா சுகம். அதெப்படி இருக்கமுடியுமென தர்க்கம். நிச்சயமிருக்காது என்பது தான் ஸித்தாந்தம். அடா வாஸ்தவமா அது—ஆம் வாஸ்தவம் தான்.

அத்தடாகத்தின் படியில் உட்கார்ந்து கொண்டு இன்ப ஸாகரத்தில் ஆழ்ந்து விட்டேனா. அம்மலையமாருதமும் என்னை ஒரு க்ஷணத்தில் கண்மூடச்செய்து விட்டது. எவ்வளவு நேரம் அப்படியிருந்தேனென, எனக்கு தெரியாது—யாரோ பனிநீர் வாரியிறைப்பது போல திடீரென ஒரு உணர்ச்சி தோன்றிற்று. திடுக்கிட்டு கண் விழித்தேன். நான்கு பக்கமும் பார்த்தேன். ஒருவரையும் காணேம்; ஆச்சரியமடைந்து உயர நோக்கினேன். தனது அரும் கிரணங்களை வாரியிறைத்துக் கொண்டு பூர்ண சந்திரன் ஆகாச வீதியில் தோன்றினன். தினந் தோறும் அவ்வழகைக் கண்டு களிப்பதுண்டு. பல சமயம் உதயமாவதைக் காண சமுத்திரக்கரையிலும் போய் நிற்பேன். அன்று ஒரு அபூர்வ காக்ஷியாகவே தோன்றிற்று. இச்சிறு கிராமத்திற்கு தனிச் சந்திரனோ வென சந்தேகித்தேன். இது மடமை என உடனேயே தீர்மானித்து விட்டேன். ஆகா! சந்திரன் ஒருவனே யானாலும் இயற்கை யமைப்புக்கு தகுந்தபடி பலவிதமாய் தோன்றுவானோவென ஊகித்தேன்; சில நிமிஷத்தில் அவனழகைக் கண்டு என் மனம் தாண்டவமாடியது.

தண்ணீர் ஊற்றி, ஈரம் காயாமல் சிறு பாத்திகளிலிருந்த அழகிய செடிகள் அப்பொழுதே தன் புஷ்பங்களை மலரச் செய்ததால் சந்திரனை கண்டு சிரிப்பது போல தோன்றிற்று. ஒரு பக்கத்தில் அழகிய கொடிகளை கண்டதும் ஓகோ காந்தை என நினைத்து தனது கரங்களால் இறுகக் கட்டிக் கொள்ளுகிறானென மதித்தேன். மற்றொரு யிடத்திலோ, இளம் ஒட்டு மாமரங்களின் கிளைகள் அக்காற்றினால் சிறிது ஆடிக்கொண்டே யிருந்தன. சபாஷ்! அக்கொடியாளிடம் பொறாமை கொண்டு தன்னிடம் சந்திரனை கைகாட்டி அழைக்கிறதென, நிச்சயித்தேன். சிறுமகிழ மரமொன்றில் சிறு பறவை ஒன்று வெகு இன்பமாய் சப்தித்தது. இவ்வினத்தையும் கண்டு அம்மரம் தன்னிடம் கூவி அழைக்கிறது

போல் தோன்றிற்று. இப்படி என் மனதை நான்கு திசையிலும் திரியவிட்டு எவ்வளவோ முயன்றும் அடக்கி விடுவதற்கில்லை. கொஞ்ச நேரம் ஆச்சரியமும் சந்தோஷமும் நிறைந்து ஒன்றுமறியாமல் நாலு பக்கமும் பார்த்துக்கொண்டு நின்றேன்.

இங்குள்ள அனைவருமே என்னை போல் இவ்வழகை கண்டு களிப்பார்களா? என ஒரு சந்தேகம் ஜனித்தது. ஒரு வஸ்துவினிடம் ஆசை கொள்வது மனதின் தன்மையை பொருத்ததேயல்லாது பொருளின் குண விசேஷத்தாலல்லவென தீர்மானித்தேன். இவ்வழகைக்கண்டு களிக்கும் தன்மையுள்ள மனதுடையவர்கள் மகா உத்தமர்கள் என்பதே எனது சித்தாந்தம். கல்வியாலும் இத்தன்மை யடைய முடியாதது; மற்ற எந்த விதத்தாலும் இதை அனுபவிக்க முடியாது; பிறக்கு முன்னமேயே ஈசன் இதை மனமுவந்து அருளவேண்டும். சூக்ஷ்ம சக்தியும் ஜீவகாருண்யமும் நிறைந்து துவேஷமற்ற குணமும், கவலையற்ற தன்மையுமுள்ள மனதே இவ்வியற்கை யழகை கண்டு களிக்கும்.

இயற்கை யழகுக்கு இவ்வளவு பெருமையுண்டென இதுவரை நான் மதித்ததே கிடையாது. மனதிலுள்ள கவலையனைத்தையும் ஒரு நொடியில் போக்கும் ஆற்றலுடையது. இச்சக்தி எந்த வித்தௌஷதங்களுக்கும், எந்த மகா மந்திரங்களுக்கும் இல்லை எனலாம். சுருக்கிச் சொன்னால் இச்சக்தி வேறெதற்குமே இல்லை என்று சொல்லவேண்டும். இதை அறிந்தே முனிவர்களும் வயது சென்ற அரசர்களும், மனச் சாந்தியடைய, வனாந்தரம் செல்லுகிறார்கள் போலிருக்கிறது.

கல்வி கற்பது, ஈசனையும் அவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற பொருள்களின் தத்துவங்களையும் குண விசேஷங்களையும் அறிந்து சந்தோஷப்படுவதற்கே. இது வரை ஆயிரக்கணக்கான பொருளை இக்கல்விக்காக செலவழித்து விட்டதாக தாயார் சொல்லுகிறாள். நானும் ஒரு நிமிஷமோயாதுபடித்து அலுத்துவிட்டேன். அடாடா இவ்வியற்கையழகின் பெருமையை ஓரிடத்திலாவது வர்ணிக்கவில்லையே; சந்திரனைப்பற்றி பிரஸ்தாபமே இல்லை. காற்



றின் பெருமையையே காணோம். இம்மரங்களைப்பற்றி எங்குமே சொல்லவில்லை. சீ! இதை ஏன் இப்படி மறைத்து வைக்கவேணும். அனைவரும் அனுபவித்தால் குறைந்துவிடுமா? என்று எண்ணினேன். ஒரு ஞாபகம் வந்தது. ஆகா நாம் படித்த புஸ்தகங்களனைத்தும், ஆங்கிலேயர்களால் எழுதப்பட்டதல்லவா. இப்பெருமையை அவர்கள் எங்கு கண்டார்கள். இக்காற்றும் சந்திரனும் அவர்களுக்கு சத்துருவல்லவா. அவர்கள் கிணற்று தவளை போல் தான் கண்டதே சுவர்க்கம் என சாதிக்கும் தன்மையுடையவர்கள். இப்பெருமையை அனுபவித்து நாம் சொன்னாலும் அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இந்திய கவிகள் வெகு அழகாய் வர்ணித்திருப்பார்கள் என்று எண்ணினேன்.

ஐயோ சுவர்க்கத்தில் பிறந்து வாழும் இந்தியர்களுக்கு நரகத்தின் இன்பங்களை வர்ணிக்கும் பாடத்தை வீணே கற்பித்து பாழாக்குகிறார்களே என துக்கித்தேன். இவ்வளவு மடமை எப்படி நமது தேசத்தை சூழ்ந்து கொண்டதென அறியாது விசனித்தேன். என் தாயின் செல்வமும், எனது அருமை இளம்பருவமும் வீணாயிற்றே என நினைத்து உள்ளமுருகினேன். என்னைப் போலவே பல லக்ஷக்கணக்கான சிறுவர்கள் இப்பாதக நாட்டுக்கே நஷ்டமாகி விட்டார்களென நினைத்தவுடன் என்னை அறியாமல் கண்களில் நீர் தாரை தாரையாய் பெறுகிற்று.

அநேக புத்திமான்களான சிறுவர்கள்—தங்களுக்கு ஒன்றுமே தெரியாத இதர தேச இயற்கை பொருள்களையும் கதைகளையும் பற்றியே கற்பிக்கப்படுவதால்—தங்களுடைய மனதுக்கு பிடிக்காமல் சரிவர கதை தெரிந்து கொள்ளாமல் இருப்பதுடன் பின்பும் தங்களுக்கு உபயோகமுள்ளதல்லவென கவனிக்காமல் இருந்து பரிக்ஷைகளில் தவறி விடுகிறார்கள். இதனால் வீண்செலவும் தேக பிரயாசையும் ஏற்படுகிறது. இவர்களுக்கு பிரத்தியக்ஷத்தில் காணக் கூடியதும் இந்திய நடையுடை பலன்களை அனுசரித்து எழுதப்பட்டதுமான இந்திய பூர்வீக அரசர்களுடையவும் மகான்களுடையவுமான கதைகள் கற்பிக்கப்பட்டால் மனதைகவர்ந்து புத்தியை விசாலிக்கச்செய்து நல்ல நடத்தையையும் விருத்தி செய்யும். இவ்விந்திய காவியங்களை இவ்வியற்கை யழகை நன்கு

விளக்கிக் காட்டும். எனது பொருளும் காலமும் இதுவரை வீணே முடிந்ததென நிச்சயித்தேன். நாளை முதல் அரை க்ஷணமும் ஓயாது காளிதாஸன் கம்பன் போன்ற மகா கவிகளால் எழுதப்பட்ட கிரந்தங்களையே படிப்பதென தீர்மானித்தேன்.

ஆகாசத்தை உற்று நோக்கி திடுக்கிட்டேன். ஆகா இரவு எட்டு மணியாய் விட்டது. எனது அருமை தாய் என்னை காணுமல் புழுப்போல் துடிப்பாளே என நினைத்து வெகு வேகமாய் திரும்பலானேன்.

நேயர்களே! நாளைமுதல் இந்திய மகா கவிகள் செய்த அருங் காவியங்களையே படிப்பான் என்பதிலும் படிக்க ஆரம்பித்ததும் அவன் மனது பரமானந்த மடையுமென்பதிலும் சந்தேகமுண்டா? சுபம்!

## விடுகதைகள்.

1. முன்னாலே கட்டுண்டு அறுப்புமுண்டு, முனை குலைந்த பெண்களெல்லாம் சீ சீ என்ன, பின்னாலே கிழியுண்டு, தையல் நில்லாள் பிடித்திருப்பார், கைக்குள்ளாள் சுத்தக்காரி, சொன்னாலும் பேர் கொஞ்சம் வேலைக்காரி, சொகுசான இக்கதையைச் சொல்லுவீரே.

2. மேலே கல்கட்டு, கீழே கல்கட்டு, மத்தியிலே கனக சிறு பாம்பு, தக்கனுருக்கு வார்த்தை சொல்லி தன் கூண்டில் தானிருப்பதைச் சொல்லுவீர்.

3. காலையில் கோட்டை கட்டி கடும்பகல் யுத்தம் செய்து மாலையில் பிரித்துப் போடும் மல்லரிவர் யார்?

4. பலபேருக்கு ஒரு குடுமி.

5. அடி சிவப்பு, நடுபச்சை, உச்சி வெள்ளை.

6. சித்திரப்பின்னல் கோட்டைக்குள் போகவழியுண்டு, திரும்ப வழியில்லை.

சென்ற செப்டம்பர் மீ வெளியான விடுகதைகளுக்கு விடைகள்.

1. நாற்காலி 2. வாழை 3. பச்சீஸ் 4. தாழம்பூ 5. பேனும்

# வாழ்வின் மர்மங்கள்

1. **பாவனை:**—ஒரு தொழிலில் பழக்கமுள்ளவன் மற்றொரு தொழிலைச் செய்வதென்றால் மிகுந்த கஷ்டமாயிருக்கும். அத்தொழிலுக்கும் அனுபவம் வேண்டியதாயினும் சிலர் தெரிந்தது போல் பாவனை செய்து காரியத்தை நடத்துவார்கள்.

2. **மௌனம்:**—யார் எந்த விஷயத்தைப்பற்றி பேசினாலும், பதில் சொல்லும்படி கேட்டாலும் ஒன்று முதல் பத்து வரை மனதில் எண்ணி—மௌனங்காட்டி பிறகு பதில் சொல்லவோ தலையை அசைக்கவோ சிந்திப்பார்கள்.

3. **தன்குற்றம் தெரியாது:**—வழக்கமாய் குரட்டை விட்டு தூங்குகிறவர், வேறு ஒருவர் வீட்டுக்குச் சென்று தூங்கினால்--இன்னும் இரவில்லென்றால் எவரும் திடுக்கிட்டுப் பயப்படுவார். தன் வீட்டிலோ, பனங்காட்டு நரி சல சலப்புக்கு அஞ்சாதென்பது போலாகும். இதில் இன்னொரு ஆச்சரியம்; குரட்டை விட்டு பயங்கர சப்தமிட்டு தூங்குகிறீர்களே! என்று கேட்டால் நான் அப்படி தூங்கவில்லை, யென்றும் சொல்லுவார்கள். நாசி அடைப்பட்டு வாயால் சுவாசம் விடுவதால் உண்டாகும் சப்தம்-திருடன் வர அஞ்சுவான் என்பர் சிலர்.

4. **வாய் வெட்டு:**—அதைச் செய்வேன் இதைச் செய்வேன் என்று ஆடம்பரமாய்ப் பேசுகிறவர்கள் செய்கையில் 'மூன்றும் பேஸ்து' போல் பேந்தப்பேந்த விழிப்பார்கள்.

5. **ஆரம்ப சூரத்துவம்:**—ஒரு வேலையில் ஒருவன் புகுந்ததும் புதிய யுக்திகளைச் சொல்வதும், கணக்குகளைப் புரட்டுவதும், குற்றங்களை யெடுத்து வீசுவதும், இட்டவேலையை தடபுடல் செய்து தான் அசாத்தியன்—கெட்டிக்காரன் என்று மற்றோர் தெரிந்து கொள்ளும்படி செய்வான். சில நாட்சென்றதும் படிப்படியாய், மிளகாய்ப் பொடியில் நெய் வார்த்தது போல் காரமடங்கி, பெட்டிப் பாம்பாக இருந்து விடுவான்.

# சிறுமணித்திரள்

உன் நெஞ்சை முதலில் பரிசுத்தப் படுத்துவாயாக. நீ எக்காலும் கடவுளையே நம்பி யிருப்பதுண்மையானால், உனக்கு யாதொரு துன்பமு மில்லை. உனது பிறப்பும், உன் பணமும், நீ வகிக்கும் உயர்ந்த உத்தியோகமும், உன்னை வாஸ்தவத்தில், சீரியோனாக்காது. ஆனால் நீ செல்கிற நன்மார்க்கமும், செய்கிற நற்கருமங்களு மட்டுமே, உன்னை மேன்மைப் படுத்தும்.

நற்குணமே நன்னிலைக்குக் கொண்டுவரும். துற்குணம் உன்னைக் கட்டாய மழித்து விடும்.

தாராள நெஞ்சினனாயிரு. கடின சித்தனா யிருக்காதே.

சத்தியமே உன் வாழ்நாளாகிய கட்டடத்தின் முதல் அஸ்திவாரக்கல்லா யிருக்கட்டும்.

அன்பு, தியாகம், பயமின்மையே வாழ்நாளின் கொள்கைள்.

நீ நன்மார்க்கனா யிருந்தால் மட்டுமே யன்றி, உன்னிட முள்ள நிலையற்ற செல்வத்தை காமுற்று உன்னை எவரும் அணுகார்.

அடிமையாய் ஒரு க்ஷணமுமிராதே. மனோ தைரிய முடையவனாயும், ஞானவானாயும், சுதந்தரியாயும் இரு.

சுதந்தரவானே நீ அகம்பாவமா யிருந்தால் உன்னை யாருமிகழ்வர்.

கஷ்டம் நிலையற்றதே. சகடக்கால் போல் மாறும் கஷ்டம் மனமுவந்த அணிகலன். ஏன்? அதுவே வாழ்க்கையை புனிதப்படுத்துவது.

பேராசை பெரு நஷ்டம். உனக்குக் கடவுள் கொடுத்ததைக் கொண்டு திருப்தியுடன் வாழ்.

ஈஸ்வர பயபக்தியே ஞானத்துக் காரம்பம்.

உன் ஆசைகளை அடக்குவாயாக.

உன் பகைவர்களைக் கூட துன்புறுத்தாதே.

குறிப்பு:—சென்றவாண்டில் எளியேன் பற்பல பேராபத்துகளில் ஆண்டவனருளால் சிக்கி பன்மாதங்கள் தன்னந் தனியே வசிக்க நேரிட்ட காலை, அடியேன் இப்போது வெளியிட்டிருக்கும் சிறு மொழிகள் ஆங்கிலத்தில் இயற்றப் பட்டன. தானறிந்ததை பிறருமறியும் வண்ணஞ் செய்ய வேண்டியது கடமையென்றதை சிரமேற்கொண்டு, மொழி பெயர்த்து இச்சஞ்சிகை வாயிலாய் என்போன்ற சிறுவர்களுக் குபயோகமாகுமாறு வெளியிட முன் வந்துளேன். இதனை மனமுவந்து ஏற்றுப் பிரசுரிக்க இணங்கிய பத்திராதிபரவர்கட்கு என் மனமார்ந்த வந்தனம். குற்றத்தைக் களைந்து, குணத்தை ஏற்றருள யாவரையும் கேட்டுக் கொள்கிற அன்பன்

எம். பி. எஸ். வேலாயுதம், சென்னை.

## *திருவாவடுதுறை ஆதீனத்தின் வெற்றி.

திருவாவடுதுறை பண்டார ஸன்னதியார் ஹைகோர்ட்டு அப்பீல் அனுகூலமானதைப் பற்றித் திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் மீது திருப்பனந்தாள் ஆதீனகர்த்தராகிய ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் புகழ்ந்து பாடியது.

மாசிலா மணியெனுஞ் சுப்பிரமணிய
தெய்வ சிகாமணியே நின்னை
யாசிலா மணியென்பே னிற்கெதிரி
லாமணிசொற் களவோ வில்லை
கேசிலா மணியென்னக் கடலொலிக்குங்
கிளர்ச்சிதனைக்கேட்டே சென்னைக்
கோசிலா மணியருநன் கறிந்துசெய
சமவென்னக் குறித்திட் டாரால்,

# ஒரு விநோதக் கதை.

## நியாயம் ஒரு பக்கம்

## சட்டம் ஒரு பக்கம்

திருநெல்வேலி ஜில்லாவிலே, அரியூரென்னும் கிராமத்திலே நமசிவாயம் பிள்ளையென்ற மிராசுதாரொருவர் இருந்தார். அவருக்கு ஒரு மகளுண்டு. அவளுடைய கலியாணத்தை வெகு சிறப்பாக நடத்தவேண்டு மென்ற ஆசையை யுடையவராய்த் தன் கையில் பணமில்லா திருந்தும் ஆசையை நிறைவேற்றும் பொருட்டு அக்கிராமத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் சேதுப்பிள்ளையிடம் போய் கலியாணச் செலவுக்காக 5000 ரூபாய் கடன், தன்னுடைய சொத்து அடமானத்தின் பேரில் வேணுமென்று கேட்டார். சேதுப்பிள்ளை உள மகிழ்ச்சி யடைந்து திடீரென்று பணங்கிடைப்பது கஷ்டமென்றும், நடப்பு வட்டிக்குப் பணம் கிடையாதென்றும் அதிகவட்டி கொடுக்கும் பக்ஷத்தில் பணம் வரவழைத்துத் தர முடியுமென்றும் பாசாங்கு செய்தார். மிராசுதார், சேதுப்பிள்ளை ஏற்படுத்தியவட்டி தருகிறதாக ஒப்புக்கொண்டு தன்னுடைய சொத்தை யடமானஞ் செய்து கொடுத்து ரூ 5000 வாங்கித் தன் மகளுடைய கலியாணத்தை வெகு சிறப்பாகவும் விமரிசையாகவும் நடத்தினர்.

பதினொன்று வருஷங்கள் கழிந்தன. நமசிவாயம் பிள்ளை வாங்கின கடனுக்குக் கடுவட்டி தருகிறதாக ஒப்புக்கொண்டமையால் சேதுப்பிள்ளை பணத்துக்கு அவசரப்படவில்லை.

இப்படியிருக்க மத்தியில், சேதுப்பிள்ளைக்கும் நமசிவாயம் பிள்ளைக்கும் சமாதானக் குறைவு ஏற்பட்டது. நமசிவாயம் பிள்ளையின் பந்து ஒருவர் தன்னுடைய சொத்தை வாழ்விப்பு அடமானமாக சேதுப்பிள்ளைக்கு எழுதி வைத்திருந்தார். ஆனால் சேதுப்பிள்ளை அச்சொத்தை யடைய முடியவில்லை. கிராமங்களில் ஒரு பணக்

காரன் தன்னுடைய அக்கிரமச் செயல்களைத் தடுக்கும் பக்ஷத்தில் நியாயத்துக்காக உழைக்கும் எதிரியின் பேரில் ஒரு பிரியாதுசெய்து தன்னுடைய பணத்தினால் அவனை யடக்க முயல்வதுண்டு. அவ்விஷயங்களைக் கவனிக்க கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் கிடையாது. கிராமத்தார்கள் தங்கள் தங்கள் பணத்துக்கேற்றவாறு கோர்ட்டுகளில் பணத்தைச் செலவு பண்ணி கெட்டுப்போவார்கள். உண்மை யொரு பக்கமிருக்கும் ஆனால் சட்டருசுத்தான் கோர்ட்டில் ஒப்புக்கொள்ளப்படும். ஆகவே கிராமவாசிகள் கோர்ட்டுக்குப் போவதால் பணத்தை யிழந்து கெட்டுப்போவார்கள். இம்மாதிரியாக நமசிவாயம் பிள்ளையின் பந்துவுக்கு விரோதமாய் சேதுப்பிள்ளை ஒரு பிரியாது கொடுத்தார். கடன்காரர்கள் தங்களுக்கு பணம் கொடுத்தவர்களுடைய கக்ஷிக்கு அனுகூலமாக சாக்ஷிசொல்லுவது வழக்கமாகையால் சேதுப்பிள்ளையும் தனக்கு அனுகூலமாக நமசிவாயம் பிள்ளை சாக்ஷி சொல்லுவாரென்று எதிர்பார்த்தார். அதைக் குறித்துச் சொல்லவும் சொன்னார். ஆனால் நமசிவாயம் பிள்ளை அவருடைய வேண்டுகோளுக்கு இணங்காமலிருந்ததோடு எதிராளிக்கு அனுகூலமாயும் சாட்சி சொன்னார். இச் செய்தி சேதுப்பிள்ளைக்கு கோபம் மூட்டவே பழிக்கு பழி வாங்குவேனென்று நமசிவாயம் பிள்ளையைப் பார்த்து சபதமிட்டார். உடனே நமசிவாயம் பிள்ளை எழுதிக் கொடுத்திருந்த அடமானப் பத்திரத்தின்படி ஏற்பட்டுள்ள தொகை ரூ 25000-க்கு சேதுப்பிள்ளை கோர்ட்டில் நம்பரைத் தாக்கல் செய்தார்.

நாளடைவில் நமசிவாயம் பிள்ளைக்கு சம்மன் வந்தது. அவர் கூடத்திலுட்கார்ந்து கொண்டு அதிக வருத்தத்துடன் சம்மனைத் திருப்பி திருப்பி வாசித்துக் கொண்டிருந்தார். அவருக்கு 'கோர்ட்' என்பது தெரியாதபடியால் அதைப்பற்றி நினைக்கிற பொழுதெல்லாம் அச்சமும் பயமும் ஏற்பட்டது. அத்துடன் பெரிய கோர்ட்டாகிய சப் ஜட்ஜிடமிருந்து சம்மன் வந்தபடியாலும், சம்மனில் குறிப்பிட்ட நாளிலும் குறிப்பிட்ட நேரத்திலும் அவர் நியாயஸ்தலத்தில் தயாராய் வந்திருக்க வேண்டுமென்றும் இல்லாத பக்ஷத்தில் கொடிய தண்டனை விதிக்கப்படுமென்றும் எழுதியிருந்தபடியாலும் அவர் அதிகக் கவலையுடனிருந்தார். தவிர



சம்மன் கொண்டு வந்த சேவகனும் அவருடைய பயத்தை அதிகரித்துவிட்டுப் போனான். 'ஆடு நனைகிறதென்று ஓநாய் கவலையுண்டது,' போல் கோர்ட்டு விவகாரங்களில் அனுபோகமுள்ள சுப்பையா பிள்ளை யென்றவர் நமசிவாயம் பிள்ளையின் வருத்தத்தைக் கண்டு மனம் உருகுவது போல் அவரிடம் வந்து அவ்வருத்தத்தை நீக்குவதற்கு முயலுவதாக நடந்தார். சுப்பையாபிள்ளைக்கு ஊர் இரண்டுபட்டால் கொண்டாட்டம், ஊரில் கட்சிகள் ஏற்படுத்தி ஒரு கட்சியில் நின்று வேலை செய்து அவர் ஜீவனம் செய்வார். எக்கட்சிக்காரர்களுக்கும் சொற்ப சம்பளத்துக்குப் பொய் சாட்சி சொல்லுவாரவர். வக்கீல் நியமிப்பதற்கும் அவர் தயாராயுதவி செய்வார். அவ்வுதவிக்கு வக்கீலுக்குக் கொடுக்கும் தொகையில் நாலிலொரு பங்கு கமிஷனை எடுத்துக் கொள்ளுவார். கிராமத்தாரில் யாருக்காவது கோர்ட்டில் வேலையிருந்தால் அவருடன் போய் கோர்ட்டிலிருக்கும் உத்தியோகஸ்தர்களுடன் பேசிக் காரியத்தை முடிப்பார். இம்மாதிரி அவர் செயவதின் காரணமாக அவருக்குச் சட்டம் நன்றாய் தெரியுமென்று கிராமவாசிகள் அபிப்பிராயங் கொண்டு யம். யல்., என்றும் பட்டம் வைத்தார்கள். நாரதர் என்னும் பட்டம் வைத்தார் ஒரு சிலர். இச்சமயந்தனக்கு நல்ல தருணம் வந்ததென்று நினைத்து நமசிவாயம் பிள்ளையிடம் வந்து ஐயா! தங்கள் கையில் வைத்திருக்கும் கடிதம் என்ன? அதைப் பார்த்தால் சம்மன் போல் தெரிகிறதே! உங்களை யாராவது சாட்சி போட்டிருக்கிறார்களா?" என்று கேட்டார். நமசிவாயம் பிள்ளை துக்கத்துடன் சொன்னதாவது "இல்லை, என் நண்பரே! என்னை ஒருவரும் சாட்சி போடவில்லை. என்னுடைய மகள் கலியாணத்துக்காக கடன் கொண்டிருந்த தொகைக்கு சேதுப் பிள்ளை என் பேரில் நம்பர் போட்டிருக்கிறார்." சுப்பையா பிள்ளை:—ஆம் ஐயா! நானும் நம்பர் கணக்குப் பிள்ளையும் பத்திரத்தில் சாட்சிக் கையெழுத்துப் போட்ட ஞாபகமிருக்கிறது. நீங்கள் என்ன செய்கிறதாக உத்தேசம். பத்திரமும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. பணமும் சப் ரிஜிஸ்தரார் முன் உங்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. கோர்ட்டார் நம்பரை டிக்கிரி பண்ணுவார் என்பதில் தடையில்லை." என்று கூறினார். நமசிவாயம் பிள்ளை "சேதுப் பிள்ளை இப்பொழுது என்னுடைய ஜென்ம

விரோதி என்னுடைய சொத்து முழுவதையும் விற்றாயினும் அவருக்கு விரோதமாய்க் கட்சி போட்டுக்கடைசி வரை ஒரு கை பார்ப்பேன். என்னுடைய மனைவி நகைகளையுங் கூட விற்பேன். நான் ஒரு வேளாளன் அல்லவோ! என்னை நேற்று வந்த புதுப்பணக்காரன் ஜெயிக்கவா!” என்று கோபத்துடன் மறுமொழி கூறினார்.

சுப்பையர் பிள்ளை:—“ஐயா! ஆனால் நீர் என்ன செய்யக் கூடும். உம்மைத் தான் விலங்கு போட்டிருக்கிறதே” என்றார்.

நமசிவாயம் பிள்ளை:—“நீர் சொல்லுவது உண்மையே; ஆனால் கட்சி போட்டுப் பார்ப்பேன். ஜில்லாவில் கீர்த்தி பெற்ற வக்கீல் ராமசாமி ஐயரை நியமிப்பேன். அவர் சேதுப் பிள்ளை போட்ட நம்பரில் நான் ஜெயிப்பதற்கு எதாவது யுக்தி சொல்லுவார். வக்கீல்கள் வெகு சாமார்த்தியமுள்ளவர்கள்.

சுப்பையா பிள்ளை:—“நீங்கள் எதிர்வாதம் பண்ணுவது தீர்மானமாகில் நம்முடைய கணக்குப் பிள்ளையிடம் அதைப் பற்றி கலந்து பேசுவோம். அவர் ஒரு பெரிய நிபுணர். அவருடைய புத்திமதி நன்மையைத் தரும். ஆனால் அவருக்கு கொஞ்சம் கமிஷன் கொடுக்க வேண்டும். கணக்குப் பிள்ளைக்கு ஏற்பட்ட பதினை கொடுக்காத பக்ஷத்தில் அவர் ஒருக்காலும் உதவி செய்யமாட்டார்” என்று சொன்னார். உடனே கணக்குப் பிள்ளைக்கு ஆள் அனுப்பப்பட்டு அவரும் வந்து சேர்ந்தார்.

கணக்குப் பிள்ளை:— “அடியேன் என்ன சமாச்சாரம்?”

நமசிவாயம் பிள்ளை:—“ஐயா எனக்கு விரோதியா யிருக்கும் சேதுப்பிள்ளை என் பேரில் நம்பர் போட்டிருக்கிறார். நான் அதற்கு காலியாடப்போகிறேன். அந்த விஷயத்தில் உங்கள் அபிப்பிராயத்தைக்கேட்க ஆவலாயிருக்கிறேன். (ஐந்து ரூபாய் கொடுத்துக் கொண்டு) எனக்கு நீங்கள் வேண்டிய உதவி செய்ய வேண்டும். உங்கள் நன்றியை நான் என்றும் மறவேன்.”

கணக்குப் பிள்ளை:—(பணத்தை மடிக்குள் போட்டுக் கொண்டு) “ஐயா நீங்களும் நானும் பாரம்பரை சிநேகிதர்கள். உங்களுக்காக



நான் எதையும் செய்யத் தயார். நாளைக்கு நாம் திருநெல்வேலிக்குப் போய் வக்கீல் ராமசாமி ஐயர் அவர்களைக் கண்டு அபிப்பிராயங் கேட்போம். அவர் ஜில்லாவில் முதன்மையான வக்கீல்; அவர் நிச்சயமாய் நம்முடைய கக்ஷியை ஜெயித்துத் தருவார்.”

மறுநாள் மூவரும் திருநெல்வேலிக்குப் போய் சாயுங்காலம் ராமசாமி ஐயரவர்களைக் கண்டார்கள்.

கணக்குப்பிள்ளை:—“அடியேன், நமஸ்காரம்”

ராமசாமி ஐயர்:—“ஆசீர்வாதம்; வாருங்கள் வாருங்கள் க்ஷேமந் தானே? உங்கள் கூட வந்திருக்கிறவர்கள் யார்? எங்கேயோ பார்த்தது போலிருக்கிறதே”

கணக்குப் பிள்ளை:—“சுவாமிகளே, எங்களுக்கு ஒரு பெரிய சங்கடம் நேர்ந்திருக்கிறது. அதனால் உங்களிடம் வந்திருக்கிறோம். என்னுடைய நண்பர் பெயர் நமசிவாயம் பிள்ளை. அவர் எங்கள் கிராமத்து மிராசுதார்.”

ராமசாமி ஐயர் (இம்மாதிரி துன்பம் தனக்கும் கணக்குப் பிள்ளைக்கும் நன்மையைத் தருமென்று உள மகிழ்ச்சி கொண்டு) “நான் என்றும் தங்கள் ஊழியன்!”

கணக்குப் பிள்ளை:— கேஸின் தன்மையை வக்கீலுக்கு எடுத்துச் சொன்னார். வக்கீல் ஐயரும் கேஸுக்கு அனுகூலமான விஷயங்களைப் பார்ப்பது போல் தன் மேஜை மேலிருந்த பல சட்ட புஸ்தகங்களை அரை மணி நேரம் திருப்பிப் பார்த்துவிட்டு பின் நமசிவாயம் பிள்ளையைப் பார்த்து “உம்முடைய கேஸ் மிகவும் கடினமாயுள்ளது” என்றார். நமசிவாயம் பிள்ளை ஏதோ சொல்லுவதற்கு நாவெடுத்தார். ஆனால் கணக்குப் பிள்ளை அவரைப் பேசவிடவில்லை.

கணக்குப்பிள்ளை:—“கேஸ் கடினமென்பது எங்களுக்குத் தெரியும். அதற்காகவே உங்களிடம் அபிப்பிராயத்திற்கும் உதவிக்கும் வந்திருக்கிறோம். நமசிவாயம் பிள்ளை கட்சி ஜெயிக்கும் பட்சத்தில் நீங்கள் கேட்கிற தொகையை அவர் கொடுக்கத்தயார்.

ராமசாமி ஐயர்:—“உங்கள் கேஸுக்கு அனுகூலமாக ஒரு விஷயம் என் மனதிற்கு தற்சமயம் தோன்றுகிறது. உங்கள் கட்சி

ஜெயமடையக் கூடுமென்று நினைக்கிறேன். ஆனால் எனக்கு பீஸ் ஆயிரம் ரூபாய்.''

கணக்குப்பிள்ளை:—(ஆச்சரியத்துடன்) "எங்கள்மீது இரக்கங் கொள்ளுங்கள். அவ்வளவு பெருந்தொகை எங்களால் கொடுக்கத் தகாது.''.

முடிவில் வக்கிலய்யர் கேட்ட தொகையை நமசிவாயம் பிள்ளை தருவதாக ஒப்புக்கொண்டார். வக்கீல் குமாஸ்தா கணக்குப் பிள்ளையைத் தனியாகக் கூப்பிடவே, கணக்குப்பிள்ளை அவரிடத்தில் நமசிவாயம் பிள்ளை அய்யர் கேட்ட தொகையைக் கொடுப்பாரென்றும், அத்தொகையில் நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் தரவேண்டுமென்றும் சொன்னார். பிறகு கணக்குப்பிள்ளை நமசிவாயம் பிள்ளையைத் தனியாய் அழைத்துக் கொண்டுபோய் சேதுப்பிள்ளை காலையில் வக்கிலய்யரிடம் வந்திருந்ததாக குமாஸ்தா மூலமாய் தெரிந்தாரென்றும், அய்யரைத் தாங்கள் நியமிக்காவிடில் சேதுப்பிள்ளை நியமித்து விடுவதாகவும் சொன்னார். மத்தியில் குமாஸ்தா வக்கீலிடம் கணக்குப்பிள்ளை சொன்ன விஷயத்தையும் சொன்னார். நமசிவாயம்பிள்ளை வக்கீலுக்குத் தொகை கொடுக்க ஒப்புக்கொண்ட பிரகாரம் தன்னுடைய மனைவியின் நகைகளை விற்றுக்கொடுத்தார்.

ராமசாமி ஐய:—கணக்குப் பிள்ளையைப் பார்த்து "நீங்கள் பத்திரத்தில் சாக்ஷி கையெழுத்துப் போட்டீர்களென்று நினைக்கிறேன். உங்கள் கூடக் கையெழுத்துப் போட்டிருக்கிற சுப்பையா பிள்ளை யார்?''

கணக்குப்பிள்ளை:—"சுப்பையா பிள்ளை என்பவர் நமசிவாயம் பிள்ளையின் ஆப்த நண்பர்.''

ராமசாமி ஐயர்:--அவர் உங்களுக்காக சாக்ஷி சொல்லுவாரா.''?

கணக்குப்பிள்ளை:—"ஆம் சுவாமி, அவரும் நானும் நீங்கள் சொல்லச் சொல்லுவதை ஒப்பிவிக்கத் தயார்.''

வக்கீலய்யர்:—"நீங்களும் சுப்பையா பிள்ளையும் உங்கள் முன்னிலையில் நமசிவாயம்பிள்ளை பத்திரத்தில் கையெழுத்துப் போடவில்லையென்று சொல்லும் பட்சத்தில் நமசிவாயம் பிள்ளைக்குக் கக்ஷி ஜெயிக்கும்.''



கணக்குப்பிள்ளை:—"நிச்சயமாக நாங்களிருவரும் கோர்ட்டில் சொல்லுவோம். ஆனால் உண்மையில் எங்கள் முன்னிலையில் கையெழுத்துப் போட்டாரென்று உங்களிடத்தில் சொல்லுவதில் குற்றமில்லையே? ஏனெனில், இது கோர்ட்டு அல்ல. ஆனால் கோர்ட்டில் எங்கள் முன்னிலையில் அவர் அடமானப் பத்திரத்தில் கையெழுத்துப் போடவில்லையென்று உறுதியாய்ச் சொல்லுவோம்.'' என்றார்.

கணக்குப் பிள்ளையும் நமசிவாயம் பிள்ளையும் வக்கிலய்யர் வீட்டிலிருந்து வெளியே வந்ததும் நிழலுக்காக ஒரு மரத்தடியில் தங்கினார்கள். அச்சமயம் கணக்குப்பிள்ளை வக்கீலய்யருடைய திறமையைப் புகழ்வதோடு பின் வருமாறு கூறினார்.

"பெரிய வக்கீலை நியமிப்பதாலுண்டான அனுகூலம் இது. எந்த ருசுவை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுவாரவர். நம்முடைய சாக்ஷிகள் கோர்ட்டில் கிராவில் உடையாதபடி அவர்களை வீட்டில் வைத்துப் பாடஞ் சொல்லி வைப்பர். ஆனால் புது வக்கீலை நியமித்தால் அவருக்கு சட்டத்தின் அனுபோகமிராது. கேஸ்களை சமயங்களில் கெடுத்து விடுவார். இரண்டு நாட்களுக்கு முன் என் கிராமத்தார் ஒருவருடன் ஒரு புது வக்கீலிடம் போயிருந்தேன். எங்களுடன் எங்கள் சாக்ஷிகளையும் கூட்டிக் கொண்டு போய் கோர்ட்டில் அவர்கள் யாது சொல்ல வேண்டுமென்று அறிவிக்கும்படி கேட்டோம். அம்மனுஷன் எங்களைப் பலவாறு வைததோடு, சாக்ஷிகளுக்குப் பாடஞ் சொல்லி வைக்க மாட்டேனென்று சொல்லி தன்னுடைய வீட்டை விட்டு எங்களை துறத்திவிட்டார். ஆகவே சாக்ஷிகள் இன்னது சொல்லுவதென்று தெரியாமல் மயங்கவே கேஸ் எங்களுக்குப் பிரதிகூலமாயிற்று''

நாளடைவில் கேஸ் விசாரணைக்கு வந்தது. கக்ஷிக்காரர்கள் தங்கள் வக்கீல்களுடனும் சாக்ஷிகளுடனும் கோர்ட்டில் வந்து ஆஜரானார்கள்.

கோர்ட்டார் (பிராதை வாசித்துவிட்டு) "நல்லது, ராமசாமி ஐயரே! உங்கள் கக்ஷியென்ன ?''

ராமசாமி ஐயர் (நமசிவாயம் பிள்ளையால் எழுதப் பெற்றுள்ள ஸ்டேட்மெண்டை நீட்டிக் கொண்டு) "ஐயா வாதியால் பிறப்பிக்கப் பெற்றுள்ள அடமானப் பத்திரம் ஒழுங்கானபடி சாக்ஷிக் கையெழுத்துப் போடப்பட்டதில்லை. ஆகவே நாங்கள் அதைப் ஒப்புக் கொள்ளமாட்டோ மென்பது எங்கள் கக்ஷி,"

கோர்ட்டார் "ஓகோ! நன்று நன்று! இவ்விஷயத்தைப் பற்றி கீர்த்தி பெற்ற பிரிவி கௌன்ஸில் தீர்ப்புச் சொன்னது முதல் எந்தக் கேஸிலும் இந்தக் கக்ஷிதான்"

ராமசாமி ஐயர்:—"ஐயா, அநேக கேஸ்களில் அது உண்மையான கக்ஷி; ஏனெனில் பிரிவி கௌன்ஸில் தீர்ப்புக்கு முன் லேவா தேவிக்காரர்களுக்கு பத்திரமெழுதிக் கொடுக்கிறவன் 'கடன் வாங்கினது வாஸ்தவம்" என்று பத்திரத்தில் சாக்ஷிக் கை யெழுத்துப் போடும் பிரபுக்கள் முன்னிலையில் பத்திரத்தில் கை யெழுத்துப் போட வேண்டுமென்ற அவசியம் தெரியாமலிருந்தது. ஆனல் சில கேஸ்களில் இக்கக்ஷியை வேணுமென்று பொய்யாக பிறப்பி விக்கிறார்கள் என்று நான் ஒப்புக் கொள்ளுவேன்.

கோர்ட்டார்:— "உங்கள் கக்ஷிக்காரர் பத்திரத்தில் கண்ட தொகை வாங்கினது வாஸ்தவமா?"

ராமசாமி ஐயர்:—"ஸ்டேட்மெண்டில் கண்டப்ரகாரம் பத்திரம் பொய்யாகப் பிறப்பிவிக்கப்பெற்றது. சப்ரிஜிஸ்தார் முன் பிரதிவாதிக்குச் செலுத்தப் பெற்ற தொகை வாதிக்கு உடனே திருப்பிச் செலுத்தப் பெற்றது. இது தான் எங்கள் கக்ஷி. ஆனல் இவ்விஷயத்தில் எங்கள் கட்சியை ருசுப்படுத்துவது எங்களுக்குக் கஷ்டந்தான்"

இஷ்யூக்கள் தயாராயானதும் கோர்ட்டார் சேதுப் பிள்ளையைக் கூப்பிட்டு, அவர் சாக்ஷிகளைக் கொண்டு வரும்படிக் கேட்டார். தன் பக்கம் கக்ஷி பலமாயிருப்பதோடு சாக்ஷிகளும் போதுமானபடி யிருக்கிற தென்று நினைத்து சேதுப்பிள்ளை புதிய வக்கீல் ஒருவரை நியமித்திருந்தார். பெருந் தொகை கொடுக்க அவருக்கு இஷ்டமில்லை. அவருடைய வக்கீலுக்கு வேலை புதிது. அவர் சேதுப்பிள்ளையிடம் அவர் சாக்ஷிகள் உண்மையைச் சொல்லுகிறார்களா வென்று கவ



னிக்கச் சொல்லவில்லை. கணக்குப் பிள்ளையும் சுப்பையா பிள்ளையும் சோதிக்கப்பட்டார்கள்.

அவர்களிருவரும் நமசிவாயம் பிள்ளை அவர்கள் முன்னிலையில் பத்திரத்தில் கை யெழுத்துப் போடவில்லை யென்று சொன்னார்கள். நம்பர் கணக்குப்பிள்ளை சொன்னதாவது "நானும் சுப்பையா பிள்ளையும் ரிஜிஸ்திரர் ஆபீஸுக்கு வெளியில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்பொழுது நமசிவாயம் பிள்ளை பத்திரத்தை எங்களிடம் கொண்டு வந்தார். நாங்கள் அப்பத்திரம் அவர் எழுதிக் கொடுத்ததாவென்று கேட்டோம். அவர் 'ஆம்' என்று சொன்னார். உடனே சாக்ஷிக் கையெழுத்து நாங்களும் போட்டோம்" இம்மாதிரியாகவே சுப்பையா பிள்ளையும் சாக்ஷி சொன்னார். தாங்கள் உண்மையான சாக்ஷிக ளென்று கோர்ட்டார் அறியும் பொருட்டு அவர்களிருவரும் பணம் அவர்கள் முன்னிலையில் நமசிவாயம் பிள்ளைக்குக் கொடுக்கப்பட்ட தென்று சொன்னார்கள்.

கோர்ட்டார்—:(சேதுப்பிள்ளை வக்கீலைப்பார்த்து) "உம்முடைய பத்திரம் சட்டப்படி ருசுப்படுத்தப் படவில்லை யென்று அபிப்பிராயப் படுகிறேன்"

சேதுப்பிள்ளை:—"ஐயா, பிரதிவாதி எழ்தோ லஞ்சங் கொடுத்து என் சாக்ஷிகளைத் தன் பக்கம் பேசும்படி செய்து விட்டார்."

கோர்ட்டார்—"அநேகமாய் நீர் சொல்வது உண்மையாய்த்தான் தெரிகிறது. ஆனல் அந்த விஷயத்தில் நான் ஒன்றுஞ் செய்ய அதிகார மில்லை.

பத்திர மெழுதிக் கொடுத்தவர் சாக்ஷிகளின் முன்னிலையில் பத்திரத்தில் (தான் எழுதிக் கொடுத்ததாகக்) கையெழுத்துப் போட்டாரென்று சட்டப் பிரகாரம் சாக்ஷிகள் மூலமாய் ருசுப்படுத்த வேண்டுமென்று பிரிவிகௌன்ஸிலார் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அம்மாதிரி உம்முடைய கட்சியை ருசுப்படுத்தவில்லை.

162014

சட்டப்படி நமசிவாயம் பிள்ளைதான் பத்திர மெழுதிக் கொடுத்தாரென்று ருசுவாக வில்லை யென்று கோர்ட்டார் தீர்ப்புச் செய்தார்.

கோர்ட்டார்:— (சேதுப்பிள்ளையைப் பார்த்து, "பத்திரம் சட்டப்படி ருசுப்படுத்தப் படவில்லையாதலால் உம்முடைய நம்பரை நான் தள்ளவேண்டி யேற்படுகிற தென்று விசனமா யிருக்கிறேன்"

சேதுப்பிள்ளை— "ஐயா, சப்ரிஜிஸ்திரார் முன்பு நமசிவாயம்பிள்ளைக்கு பூராத்தொகை ஐயாயிரம் ரூபாயும் கொடுக்கப்பட்ட தென்று உண்மையாய்ச் சொல்லுவேன். ஆகையால் என் கக்ஷி உண்மையான கக்ஷி.

கோர்ட்டார்:— "நீர் சொல்லுவது முற்றிலு முண்மை தான். ஆனால் நியாயத்துக்கும் சட்ட ருசுவுக்கு மென்ன சம்பந்தம். எதிரே யிருக்கும் சட்ட புத்தகங்களை யெல்லாம் பார்த்தீர்களா? அவைகளை யெல்லாம் படித்த பிற்பாடு அனுபோகத்தில் சட்டம் ஒரு சங்கதி நியாயம் ஒரு சங்கதி யென்று நான் அறிகிறேன். எந்த வக்கிலை வேணு மென்றாலுங் கேளுங்கள். கோயிலுக்குப் போனால் நியாயங் கிடைக்கும். அப்புத்தகங்களைப் படித்தால் சட்ட யுக்தி தெரியும் என்பர்."

சேதுப்பிள்ளை:—"ஐயா, அப்படியானால் சட்ட மென்றால் நியாய மில்லை போலும்"

கோர்ட்டார்:—"நீர் சொல்லுவதுண்மை. பெரும்பான்மை சட்டம் நியாய மாகாது."

சேதுப்பிள்ளை:—"ஐயா, ஆகவே சட்டம் நியாயத்துக் கேற்பட வில்லையோ?"

கோர்ட்டார்—"அன்பரே, சட்டங்களில் சில, வக்கீலுக்கென்றே ஏற்பட்டிருப்பன வென்று எனக்குத் தோன்றுகிறது."

பாவம், இடியைக் கேட்ட அரவு போன்று அளவிலாத் துக்கமும் ஆச்சரியமு மடைந்து கோர்ட்டுக்குப்போனால் நியாயங் கிடைக்கு மென்று கையிலிருக்கும் பணத்தை ஏழை உயிர்ப் பிராணி



களை யிரையாக்கும் கழுகுகளுக்கு இரைத்து விட்டு வெறுங்கையாய் வீடுநோக்கு மநேகரைப் போல் சட்டம் நியாயத்துக் கில்லாமல் ஏன் ஏற்பட்டிருக்கிற தென்று சேதுப்பிள்ளை வியப்புடன் வீடுசேர்ந்தார்

ஒரு சில நாட்கள் கழிந்தபின், சேதுப்பிள்ளை போட்ட வேறொரு அடமானத் தொகை நம்பரில் அவர் கக்ஷிக்காக ராமசாமி ஐயர் ஆஜரானார்.

பத்திரத்தில் கண்ட சாக்ஷிகள் பிரதிவாதி பக்கம் சேர்ந்து விட்டனர். அவர்கள் முன்னிலையில் பத்திரம் எழுதிக்கொடுத்தவர் கையெழுத்துப் போட வில்லை யென்று சொன்னார்கள். நம்பர் தள்ளப் பட்டது.

இராமசாமி ஐயர் அவருடைய கக்ஷிக்காரருக்காக இந்த கேஸில் வெகு சாமர்த்தியத்துடன் வியவகாரம் பண்ணினார். தன்முன்னிருக்கும் மேஜையின் மேல் கையை யறைந்தார். பிரதிவாதி பக்கம் சேர்ந்து வாதிக்குத் துரோகம் பண்ணின சாக்ஷிகள் பொய்ச்சாக்ஷி சொன்னதற்கு நிந்தித்தார். ஒன்றும் பயனில்லை. வக்கீல், பொய்ச் சாக்ஷி சொன்ன கிராமத்தார்கள், சட்டம் ஆகிய மூன்றில் யார் பேரில் குற்ற மென்று வியப்படைந்தவராய் கோர்ட்டார் எழுந்து போயினார்.

எம். இ. வீரபாகு பிள்ளை.

# தமிழின் பெருமையும் அதன் தற்கால நிலைமையும்.

தமிழபிமானிகளே! பண்டைக் காலந் தொட்டு, நம் தொண்டை நாட்டில் நாமும் நமதண்டையிலுள்ளோர்களும் பேசிவரும் நம் தாய் பாஷை இப்பொழுது நம்முள் அநேகரால் அவமதிக்கப்பட்டு வருகிறதைக் கவனிக்க, மனம் மிகவும் வருந்துகின்றது. ஆனது பற்றி அவருக்கும் ஏனையோருக்கும் நம் தமிழ் பாஷையின் அருமை பெருமைகள் தெரிந்ததன் பின்னாலாவது தமிழை மிகுதியாக ஆதரிப்பார்களென்று எண்ணி இச்சிறு வியாசத்தை வரையலானேன்.

தமிழின் பெருமையை நாம் அறியப்புகுவதன் முன், தமிழின் இலக்கணத்தின் சிறப்பை அறிய வேண்டுவது ஒரு தலை. இப்பூவுலகின் கண்ணுள்ள பற்பல ஜாதியர்கள் பல் வேறு பாஷைகளைப் பேசி வந்தாலும், அவர்கள் வாயினின்று வரும் ஒலி ஒன்றே. தமிழர்கள் கூறும் "டோ" என்ற சப்தமும், ஆங்கிலேயர்கள் கூறும் "toe" என்ற சப்தமும் ஒன்றாயிருந்தாலும் எழுதும் போது அவை வெவ்வேறு விதமாகத் தோன்றுகின்றன. ஆகவே, எல்லா பாஷைகளிலும் எழுத்துகள் வித்தியாசமாகத் தோன்றிடினும் அவைகளுடைய ஒலியெல்லாம் ஒத்திருப்பது அறியற்பாலது. எப்பாஷைக்கும் மூலாதாரமாயுள்ளது அவற்றினுடைய இலக்கணமாகும். அவ்விலக்கணத்திற்கு மூலதாரமாயுள்ளது ஒலியேயாகும். ஆனது பற்றி எப்பாஷையானது ஒலியையே ஆதாரமாகக் கொண்டு ஏற்பட்டுள்ளதென்று தெளிவாகவும் விசிதமாகவும் தோன்று கின்றதோ, அப்பாஷையே சிறந்ததென்று கூறவேண்டும்.

இனி, ஒரு பொருளின் சிறப்பானது பிறிது பொருளோடு ஒப்பிட்டு நோக்கினாலன்றி உண்மையாக விளங்குதலில்லை. ஆகவே நம் தமிழின் ஒலி இலக்கணத்தை அறியுங்கால், இப்பொழுது சிறப்



புற்று விளங்கும் ஆங்கிலத்தின் இலக்கணத்தோடு அதை ஒப்பிட்டு நோக்குவது நம் கடமையாகும்.

இளமைப் பருவந்தொட்டு நமது பள்ளிக்கூடங்களில் "அ ஆ முதல் ஔ" ஈறாக உள்ள பன்னிரண்டும் உயிரெழுத்துக்களெனவும், "க் ங் முதல் ன்" ஈறாக உள்ளபதினெட்டும் மெய்யெழுத்துக்களெனவும், "க்+அ=க" என உயிரும் மெய்யும் சேருவதனால் ஏற்படும் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறும் உயிர் மெய்யெழுத்துக்களெனவும், "ஃ" என்ற முப்புள்ளியுடையது ஆயுதவெழுத்தெனவும் நாம் கற்றிருக்கிறோமே தவிர, அவ்வெழுத்துக்களின் ஒலியைப் பற்றி நாம் பள்ளியிற் பயின்றோமில்லை. நம் நாட்டிலுள்ள பல தமிழ் ஆரம்பப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் சிறு குழந்தைகளுக்கு அக்ஷராப்பியாசம் செய்விக்கும் பொழுதே ஆனா ஆவன்னா ஈனா ஈயென்னா (அ ஆ இ ஈ) யென தமிழ் எழுத்துக்களின் ஒலியைத் தாறுமாறாகச் சொல்லி வருகின்றனர். இது போன்று நமக்குக் கல்விகற்பித்து வந்த நம் தமிழாசிரியர்களுக்கும் தமிழின் ஒலியிலக்கணந் தெரியாதிருப்பதே நம் அறியாமைக்குக் காரணமென நினைக்கிறேன்.

உயிரெழுத்துப் பன்னிரண்டில் 'ஔ' 'ஐ' நீங்கலாக மற்றைய எழுத்துக்கள் தனித்து ஒலிக்கின்றன. ஆகவே உண்மையில் உயிரெழுத்துக்கள் பத்தேயாகும். "ஔ" "ஐ' என்ற இரண்டும் உயிர் கற்றைகள். 'ஔ' என்பது 'அ உ' சேர்ந்து ஒலிக்கின்றது. "அ" என்னும்போது வாய் அகன்று விரிந்திருக்கிறது. "உ" 'என்னும் போது வாய் குவிந்திருக்கிறது. 'அ' (ஔ) என்று 'அ' கரத்தையும் 'உ' கரத்தையும் சேர்த்து ஒலிக்கும் போது, அகன்று விரிந்திருந்த வாயானது முற்றும் குவிந்த வடிவத்தை அடைகின்றது. 'அ'கர 'உ'கரங்களுக் கிடையில் எண்ணிறந்த ஓசைகளிருக்கின்றனவாதலின் 'ஔ' என்பது பல ஓசைகளடங்கிய ஓர் ஓசை. இதில் 'அ' என்பது பதித்தன்மையையும் 'உ' என்பது பசுத்தன்மையையும் காட்டுகின்றன.

'ஐ' என்பது 'அ' 'இ' 'ய்' ஆகிய இம்மூன்றுஞ் சேர்ந்து ஒலிக்கின்றது. இவற்றில் 'அ' என்பது பதித்தன்மையையும் 'இ' என்பது பசுத்தன்மையையும், 'ய்' என்பது பாசத்தன்மையையும் விள

க்குகின்றன. "ந்+இ—நி" என்பதில் தனித்து நிற்கும் 'இ' என்ற உயிர் (ந்) மெய்யோடு சேர்ந்து உயிர்மெய்யாகும் பொழுது 'ந' கரத்தில் உயிரிருப்பதைக் காட்ட வளைவு அடையாளமிடுகின்றோம். ஆகவே 'ஐ' என்பதில் மேற்சொல்லிய 'அ இ ய்' என்ற ஒலிகள் அடங்கியிருப்பதை அவ்வெழுத்தே நன்கு காட்டுகின்றது. 'ஐ' என்பதில் 'எ' என்பது 'அ' என்னும் பதி எழுத்தையும், 'ஏ' என்பது 'இ' என்னும் பசுவெழுத்தையும் 'ய' என்பது 'ய்' என்னும் பாசயெழுத்தையும் அவ்வெழுத்தின் மூன்று பாகங்கள் தெரிவிப்பதையும், அம்மூன்றில் பதியே முதன்மையென்பதையும், பசு அதற்கடுத்ததென்பதையும் பாசம் கடைசியென்பதையும் காட்ட வரிசைக்கிரமமாக வைத்திருப்பதை அவ்வெழுத்தை எழுதும்போதே தெரிந்து கொள்ளலாமென்பதையும், பாசயெழுத்தாகிய 'ய்' என்றமெய் (அதாவது இந்த மெய்யாகிய உடல்) பெரிதாய்த் தோன்றினும், மற்றவைகளை விடத்தாழ்ந்துள்ளதெனக்காட்ட அவ்விரண்டிற்கும் கீழே வைக்கப்பட்டிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டியது.

இனி மெய்யெழுத்தைச் சிறிது கவனிப்போம். உயிரெழுத்துக்களைப்போல மெய்யெழுத்துக்கள் தனித்து இயங்குந் தன்மையுடையனவல்ல. அவைகளுக்குத் தனி ஒலி இல்லாதிருப்பினும் உயிரோடு சேருங்கால், அதற்கு ஒலி ஏற்படுகின்றது. "ப்+அ—" இதில் 'ப்' என்னும் உயிர் மெய்யை உச்சரிக்க ஆரம்பிக்கும் பொழுது வாயின் இரண்டு உதடுகளும் முதலில் சேருகின்றன. அப்பொழுது நாம் சொல்லப் புகுவதென்னவென்று ஒருவரும் இயம்ப இயலாது. ஆனால் 'அ' என்னும் உயிரைப் பின் உச்சரிப்பதனால் 'ப' என்ற ஓசையைக் கேட்கிறோம். ஆனது பற்றி மெய் தனித்தொலியாதென அறியவேண்டியது.

மெய்யாகிய நமது சரீரம் உயிரோடு சேர்ந்திருக்கும் பொழுது தான் இயங்குந் தன்மை உடையதென்றும், உயிரில்லாத பொழுது தனித்து இம் மெய் (பிணமாகு மாதலால்) இயங்காதென்றும், நமது உயிர் (ஆத்மா) தனித்து இயங்குந் தன்மையுடையதென்றும், நம் தமிழெழுத்துக்களே இந்து மத உண்மைகளைச் சிறிதளவாக அறிவுறுத்துகின்றன.



இனி ஆயுத எழுத்தைச் சிறிதாராய்வோம். ஆயுதவெழுத்தைப்பற்றித் தொல்காப்பியர் கூறவந்தவிடத்து முப்புள்ளியென மொழிந்ததற்கிணங்க, ஏன் இவ்வாயுதவெழுத்து முப்புள்ளிகளோடுகூடியதென நம்முள் அநேகர் சிந்தித்திருக்க மாட்டோம். மானிடர்களுடைய சுவாசாசயங்கள் இரண்டென்றும், அவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு குழாய் வெளிவந்து அவ்விரண்டும் ஒன்றாகின்றனவென்றும் 'தேகதத்துவ சாஸ்திரம்' (Physiology) வாசித்தவர்கள் நன்றாய் அறிவார்கள். சுவாசாசயங்களிலிருந்து வெளிவரும் வாயுவானது குழாயின் வழியாக வாயினிடத்தே வரும்பொழுது மேற்கூறிய உயிர், உயிர்மெய், ஆகிய எழுத்துக்களின் ஒலிகள் பல், உதடுகள், நாக்கு, மேல்வாய், தொண்டை முதலியவைகளில் ஒன்றோடொன்று சேருவதால் ஏற்படுகின்றனவென்பதை நாம் முயற்சித்துப் பார்த்தால் நமக்கு நன்றாய் விளங்கும். ஆனால் ஆயுதவெழுத்தினுடைய ஒலி அவ்விரண்டு குழாய்களும் சந்திக்குமிடத்தில் ஏற்படுகின்றது. ஆகவே முப்புள்ளி என்பது அவ்வொலிக்குப் பிறப்பிடமான, அம்மூன்று குழாய்களும் சந்திக்குமிடத்தைக் காட்டுகின்றது. இந்த ஆயுத எழுத்தின் ஒலி (ஹ்) என்பதின் மெல்லிய சப்தமாகும். இது நிற்க, இவ்வொலியைக் குறிக்கும் முப்புள்ளிக்கு ஆயுதவெழுத்து என நாமமிடக்காரணமென்னவெனில், எச்சாமான் செய்வதற்கும் ஆயுதமே மூலாதாரமாயிருத்தல் போல, தமிழ் ஒலிகள் யாவற்றிற்கும் ஆதிமூலமாய் இது விளங்குவதனால் இதற்கு 'ஆயுதவெழுத்து' எனப் பெயர் வந்ததெனக் காண்க. இவ்வெழுத்தினுதவியினால் மற்றையத் தமிழ் எழுத்துக்களினால் குறிப்பிடமுடியாத ஒலிகளையும் குறிப்பிட ஏதுவாகும். உதாரணமாக, கான்பஹதூர் என்பதில் 'ஹ' என்பது வடமொழியிலிருந்து வந்ததென்பது வெளிப்படை. இங்கு இவ்வாயுதவெழுத்தை உபயோகித்தால், "கான்பஃஅதூர்" எனத் தமிழ் எழுத்துக்களிலேயே அவ்வோசை கெடாமல் எழுதலாம். இது போன்று "மஹாத்மா" என்பதற்கு "மஃஆத்மா" எனவும் "Coffee" என்பதற்கு "காஃபி" எனவும், "Bharatha" என்பதற்கு "பஃஅரத" எனவும், "விஷம்" என்பதற்கு "விடஃஅம்" எனவும் தமிழ் எழுத்துக்களாலேயே எவ்வொலியையும் குறிப்பிடலாமென அறிக.

எனதன்பிற்குரிய தமிழ் மக்களே! இத்தகைய சிறந்த தமிழ் பாஷையிலிருக்கும் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒரே தனி ஒலி உண்டென்பதை நாம் நன்றாய் அறிகிறோம். ஆனால் நாம் அதிக ஆவலுடன் ஆதரிக்கும் ஆங்கிலத்திலோ ஒரு எழுத்துக்குப் பல ஓசைகளும் ஒரு ஓசையைக் குறிக்கப் பல எழுத்துக்களு மிருப்பதை அறிந்தால் அப்பாஷைக்கும் ஒலி இலக்கணத்திற்கும் எவ்வளவு வேறுபாடுள்ளதென எளிதில் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக:—

(1). ஒரே எழுத்துபல ஒலிகளுக்கு நிற்பது—

| | |
|---|---|
| 'a' என்ற எழுத்து. | call; any; mat; late; fare |
| 'e' ,, | met; metre; there |
| 'i' ,, | pin; pine; sir |
| 'u' ,, | put; but, |
| 'g' ,, | gin; gay |
| 's' ,, | Sing; sure; dogs; pleasure, island |

(2) ஒரே ஒலியைப்பல எழுத்துக்கள் குறிப்பிடுவது:—

| | |
|---|---|
| f என்ற ஒலி. | fill; graph; caugh; off |
| k ,, | king; cat; flock; chemist liquid; barque. |

(3) ஒலிக்கக்கூடிய எழுத்துக்கள் ஒலியில்லாதிருப்பது:—

though; through; high;

இன்னும் (A a.*A.a.*) இவைபோன்று ஆங்கில எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் எழுதும்போது பற்பல விதமாக எழுதுகிறார்கள். சகோதரர்களே! நாம் மிகுதியாகப் போற்றும் இந்த ஆங்கில பாஷையில் எழுத்துக்கள் பலவிதமாக எழுதப் படுவதனால் அவைகள் ஒவ்வொன்றும் ஸ்திரமல்ல வென்பதையும், அவ்வெழுத்துக்களுக்கு ஸ்திரமான ஒலியில்லை யென்பதையும் நமது தாய் பாஷையாகிய தமிழில் எழுத்துக்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியாக எழுதப் படுவதையும், அவ்வெழுத்துக்கள், ஒலிக்குத் தகுந்தபடி ஸ்திரமாக ஏற்பட்டுள்ளதையும் கவனிக்குங்கால் நம் தமிழின் பெருமை மற்றதைவிடச்சிறந்து விளங்குவது உள்ளங்கை நெல்லிக்கனியை



ஒக்கும். தவிரவும், ஆங்கிலத்தில்போலன்றி நம் தமிழில் உள்ள எழுத்துக்களில் மதஉண்மைகள் பொதிந்து கிடப்பதையும் முன்னமேயே சிறிதளவு கூறியிருக்கிறோம். இன்னும் விரித்துக் கூறுவதனவசியமாகையால் ஈண்டு சில சிறிய உதாரணங்களைமாத்திரம் எடுத்துரைக்கின்றேன்.

தமிழினுள் 'பிறப்பு' இறப்பு' என்னும் இவ்விரண்டு வார்த்தைகள் ஆங்கிலத்தில் 'birth' 'death' என்று முறையே வழங்கப்படுவதை ஆங்கிலங் கற்ற யாவரும் நன்கறிவார்கள். இந்த இரண்டு தமிழ் பதங்களிலுள்ள மத உண்மைகளை நன்றாய்க் கவனியுங்கள். பிறப்பு=ப்+இறப்பு (ப்+இ=பி). ஆகவே 'ப்' என்னும் மெய்யெழுத்து முன்னே தோன்றிய காலத்து இறப்பு' என்னும் வார்த்தை 'பிறப்பு' யெனவும் 'பிறப்பு' என்பதில் முன்னேயுள்ள 'ப்' என்ற மெய் கெட இறப்பு எனவும் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். அது போலவே மெய்யாகிய சரீரம் தோன்றியகாலத்து 'பிறப்பு' என்பதையும், மெய்யாகிய சரீரம் கெட்டால் 'இறப்பு என்பதையும், அறிவதோடுமெய் (சரீரம்) தோன்றுவதற்கு முன்னால் உயிர்(ஆத்மா) தனித்து நிற்பதையும், தோன்றின பிறகு (சரீரம் பிறந்த பிறகு) மெய்யோடு உயிர் சேர்ந்து (சரீரத்தோடு ஆத்மா சேர்ந்து) ஒன்றாய் நிற்றலையும்,மெய் (சரீரம்) கெட்ட பிறகு மறுபடியும் உயிர் (ஆத்மா தனித்து நிற்றலையும் நாம் கவனிக்குங்கால், நம் தமிழ் வார்த்தைகளின் சிறப்பை என்னென்றுரைப்பது !

> "அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்
> புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
> றுற்றுழியின் கை கொடுக்கும் கல்வியினூங்கில்லை
> சிற்றுயிர்க்குற்ற துணை"

எனக் குமர குருபர சுவாமிகள் கூறியவண்ணம் வீடாகிய மோட்சத்தை அடைவதற்குக் கல்வியே சாதனமா யிருக்கிறது. மோட்சவீட்டை அடையக் கருதுபவன் முதலில் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவனாயும், நன்றாய்க் கல்விகற்றவனாயுமிருக்க வேண்டும். பின்னர் நல்லொழுக்கங்களில் சிறிதும் வழுவுபடாமலிருக்க வேண்டும். நண்பர்களே! நமது வீட்டினுள் பிரவேசிப்பதற்கு முன், படிகளையும் கதவு நிலையையும் நடையையும் கடக்க வேண்டியிருத்தலை நீங்கள் அறிவீர்கள். சாதாரணமாக சகல வீடுகளும் தரை மட்டத்திற்குச் சிறிதளவு உயர்ந்தே யிருக்கும். ஆனது பற்றி குறைந்த பட்சம் இரண்டு படிகளுடையதாக யிருக்கும். இவற்றுள் முன்னேயுள்ளது கீழ்ப்படி; அப்பாலுள்ளது மேல்படி. இவைகளின் பொருளைக் கவனியுங்கள். வீடாகிய மோட்சத்திற்குப் போக விரும்புகிறவர்கள் முதலில் கடக்க வேண்டுவது கீழ்ப்படியாகிய கீழ்ப்படிதல், அதாவது தாய் தந்தை, குரு, அரசன் முதலான பெரி

யோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அதன் பின் கடக்க வேண்டுவது மேல்படி. அதாவது மேன்மேலும் கல்வி அபிவிருத்தி செய்து கொண்டிருக்க வேண்டும்.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவென்
றுற்றகலை மடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந்தயங் கூறவேண்டாம் புலவீர்
எறும்புக் தன்கையால் எண்சாண்."

எனப்பெரியோர் கூறிய வண்ணம், கல்வி கற்ற யாவரும் எல்லாங் கற்றுவிட்டோமென இருமாப்புக் கொள்ளாமல் தாம் கற்றது சிறிதளவாக எண்ணி மேன் மேலும் நல்ல நூல்களை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென அந்த 'மேல்படி' நமக்கு அறிவுறுத்துகின்றது. இதற்கப்பால் கடக்க வேண்டுவது நிலை. அதாவது நாம் கற்கும் நூல்களினிடத்து ஆராய்ந்தறிந்த விஷயங்களில் நம் மனதை நிலைக்கச்செய்ய வேண்டுமென்பதே. கடைசியிலுள்ளது நடை அதாவது நமது நடையில் (ஒழுக்கத்தில்) சிறிதும் தவறலாகாதென அறிவுறுத்துகின்றது.

"கற்றதனா லாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாள் தொழாரெனின்"

என திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம், நாம் கற்றதின் பிறகு கடவுளை வழிபட்டு, நூல்களில் கூறியபடி ஒழுக்கங்களில் நாம் சிறிதும் வழுவுபடாமலிருக்க வேண்டுமென்பதையும், அவ்விதம் மேற்கூறியபடி நடந்துகொண்டால் தான் வீடாகிய மோட்சத்தை அடையலாமென்பதையும், படி, நிலை, நடை, ஆகிய வார்த்தைகள் நமக்கு விளக்குவதையும் நாம் நன்றாய், அறியவேண்டியது. இவ்விதம் சாதாரண வார்த்தைகளிலும் வேதாந்த மத உண்மைகள் பொதிந்து கிடப்பதுபோன்று வேறு எப்பாஷையிலேனும் கிடக்கின்றதா.

இனி தமிழ் பாஷை இயல், இசை, நாடகம் என முத்தமிழுடையது எனவும், ஆசு கவி, மதுர கவி, வித்தாரக் கவி, சித்திரக் கவி என நாற்கவியுடையது எனவும் அறியலாம். இத்தன்மைய பாஷை தெய்வத்தன்மை யுடையதென்றால் எப்பாஷை இதற்குவமையாகும்—தெய்வத்தன்மையுடையதென விளக்க இங்கே சில உதாரணங்களை மாத்திரம் விளம்புவாம்.

(1) சமய குரவர்களி லொருவரான சுந்தரர் அவிநாசி யென்னும் திருத்தலத்தின் கண்ணே முதலை யுண்ட பாலனை உயிர்ப்பித்துக் கொடுத்து அன்னவனுடைய பெற்றோர்களை இன்புறுமாறு செய்வித்தது தமிழ் பாடலாலன்றோ.

2. பாண்டிய நாட்டு சமணராஜன் கட்டளைப்படி ஞான சம்பந்தர் ஏடெழுதி வைகையாற்றில் விட, அவ்வேடு எதிர் நோக்கிச்



செல்லவே, தமிழுக்குத் தெய்வத்தன்மை உண்டென்பது விளங்கவில்லையா?

3. கம்பநாடார் பாம்பு தீண்டிய பாலனைத் தன் தமிழ்க்கவியால் உயிர் பெறுவித்தார்.

4. வில்லிபுத்தூரார் தன் கண்களை அடைவதற்காக தமிழில் பாரதம் பாடினார்.

சுருங்கக் கூறின் தமிழ் வேதமென்று கூறப்படும். தேவாரமென்ன, திருவள்ளுவரியற்றிய குறளென்ன, ஔவை பாடிய நீதி நூல்களென்ன, கம்பரியற்றிய இராமாயணமென்ன, சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டருடைய புராணமென்ன, இன்னும் இவைபோன்ற கணக்கிடமுடியாத அநேக அருமையான நூல்கள் நம் தமிழ் பாஷையில் அடங்கி யிருக்கின்றன. இவ்வளவு சிறப்புள்ளதும் தனக்கு ஒப்புயர்வில்லாததுமான தமிழ், தாய்பாஷையாக நமக்குக் கிடைத்தது சிலாக்கியமே! நாம் செய்த பாக்கியமே! நம்முன்னோரிருந்த யோக்கியமே! நமது தமிழ் வேதங்களுரைக்குஞ் சத்திய வாக்கியமே! பாலெல்லாம் பசுவின் பாலாகுமா? நாம் பேசிவரும் நம் தாய் பாஷையாகிய தமிழும் பாஷை; ஏனையோர் பேசும் பாஷையும் பாஷை. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? பெற்றதெல்லாம் பிள்ளையாகுமா?

இனித் தமிழின் தற்கால நிலைமையைச் சிறிது விளக்குவாம். தமிழ் பாஷை நமக்கு சுயபாஷையா யிருந்தும் பெரும் பான்மையோருக்கு இது நன்றாய்த் தெரியாது. அநேகருக்கு ஆங்கில பாஷை தெரிந்த அளவு, தமிழ் தெரியாது. சிலர் தமிழில் பேசும்படி நேரிட்டால் நாழி தமிழுடன் குறுணி இங்கிலீஷைக் கலந்து தமிழை அலங்கோலப் படுத்துகிறார்கள். இவ்வாறு மனதிலுதித்த விஷயங்களை தமிழிலேயே சொல்லக் கற்றுக் கொள்ளாமலிருப்பது தமக்கும் தம் பாஷைக்கும் குற்றமென்றும் மதிப்புக் குறைவென்றும் அவர்களுக்கு தோன்றவில்லையே. ஆங்கிலேயர்களுக்கு ஆங்கிலேய பாஷையினிடத்தில் இருக்கிற அபிமானத்தில் லக்ஷத்தில் ஒரு பங்கு நம்தமிழருக்கு தமிழிடத்து உண்டானால் தாழ்ந்திருக்கும் தமிழ் முன் போல் உன்னத பதவியை அடையும். ஆனால் ஆங்கிலேயர்களைப் பின்பற்றி அவர்கள் நாகரீகத்தைக் கைக் கொண்டதினால் தமிழர்களுக்கு தமிளரிடத்தில் பற்றதிகமாகி விட்டது. அதாவது காப்பி, தேயிலை முதலியவைகளை இடைவிடாமல் உட்கொள்ளத் துணிந்ததினால் அவை வைப்பதற் கேதுவான தமிளர்களை அடிக்கடி கையாடுவார்கள். அந்தோ பரிதாபம்! பொதுவாகக் கல்லூரிகள் ஜனங்களின் ஒழுக்கங்களையும் நாகரீகங்களையும் சீர்திருத்துவதனால் அவைகளைப் பெரிய தொழிற்சாலைகளுக்கு ஒப்பிடலாம். இளமையிற் பழக்கம் சுடுகாடு மட்டுமல்ல

வா? தற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் கற்கும் மாணவர்களும், கற்பிக்கும் ஆசிரியர்களும் எதற்காகக் கற்கிறார்கள்? கற்பிக்கிறார்கள்? அந்தோ! தங்களுடைய ஒரு சாண் வயிற்றை வளர்ப்பதற்கும் பொருள் ஈட்டுவதற்குமேயன்றோ? இத்தகையோர் ஆங்கிலத்திலேயே அதிகப்பற்றுக் கொண்டு, நம் முன்னோர்களனுசரித்த ஆசாரங்களை விலக்கி, முடிவில் தமிழையும் மறக்கின்றனர். நமது ராஜதானியின் கண்ணுள்ள ஆங்கிலக் கலாசாலைகளில் சுதேச பாஷைகளை கற்பித்துவரும் விதம் யாவரும் அறிந்த விஷயமே. மாணவர்களும் ஆசிரியர்களும் சுயபாஷையைப் பயிற்சி செய்வதில் சிரத்தை எடுப்பதில்லை. ஆதலால் பட்டம் பெற்ற தலைமை உபாத்தியாயர்கள் சுயபாஷையில் நிரக்ஷர குக்ஷிகளாயிருப்பதுமன்றி, அதுவே பெருமையென்றுங் கருதுகின்றார்கள். ஒரு ஆங்கிலப் பாடசாலையில் தமிழ்ப் பண்டிதர் ஒருநாள் தனக்கு விடுதி வேண்டுமென்று தலைமை ஆசிரியருக்குப் பின்வருமாறு கடிதமெழுதினார்.

ஐயா,

'இன்று என் தலைவிதி வசத்திற்காக ரஜா வேண்டும். உத்திரவை எதிர்பார்க்கின்றேன்.

உழுவலன், நமசிவாயம்.

இதை வாசித்த தலைமை உபாத்தியர்யர் தலைவிதிவச மென்பதன் அர்த்தம் விளங்காமல், தம்மைப்போல் பட்டம் பெற்ற பல ஆசிரியர்களிடம் காட்டியும் தெரிய முடியாமல் கடைசியாகத் தமிழ்ப்பண்டிதரிடம் வந்து தலைவிதி வசமென்றாலென்ன என்று வினவ, அவர் காலஞ்சென்ற என் தலைவிக்கு இன்று திவசம் (ஸ்ரார்த்தம்). ஆகையால் இன்று என் தலைவி திவசத்திற்காக என்று எழுதியிருக்கிறேனேயன்றி வேறில்லையென மறுமொழி பகரவும், பட்டம் பெற்றவர்களெல்லாம் முறுவலித்துப் பண்டிதரை மெச்சினார்கள். புதிய மனைவியைக் கண்ட விடத்து யாராவது தனது தாயை மறந்து விடுவார்களா? இது எவ்வளவு மதியீனம். நமது தேசத்துக் கல்விச்சாலைகள் இத்தகைய கனவான்களை புதிய பட்டங்களைச் சூட்டி ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்காக வெளியே அனுப்புவதனால், தமிழ் பாஷை இவ்வளவு தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றது. இவ்விதம் நமது பள்ளிக்கூடங்களில் முதல் மரியாதை அன்னிய பாஷையாகிய ஆங்கிலத்திற்குக் கொடுக்கப்பட்டு வருகின்றபோது, அப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் தமிழை அசட்டை செய்கின்றனரென்று கூறுவது தவறு. கல்வி போதிக்கும் முறையைக் குறைகூற வேண்டுமேயன்றி அவர்களை நோவதில் பயனென்ன? இவ்விஷயத்தில் கலாசாலைகளுக்கு அதிகாரிகளாயிருப்பவர்கள் ஆத்மஞானத்தைப் போதிக்கும் தாய் பாஷையை ஆங்கிலத்துடன் கட்டாயப் பாடமாக வைப்பதோடு, நம் நாட்டின் சிறப்பையும், மதத்தின் பெருமையையும் போதிக்கவும் செய்யவேண்டியது. தற்சமயம் அவ்வதிகாரிகள் சீர்திருத்தஞ்செய்வதற்குமுன்னால், நம் மாணவர்கள் யாவரும் தமிழின் பெருமையை நன்குணர்ந்து, பாடசாலைகளில் தமிழை விருத்தி செய்ய சமயமில்லாதபோதிலும், தங்கள் ஓய்வுநேரங்களில் சிறந்த தமிழ்நூல்களை வாசித்தும் பத்திரிகைகளைப் படித்தும் தம்தாய் பாஷையை மேன்மேலும் கற்று விருத்தியடைய வேண்டியது.

V. வேதநாயக முதலியார்.

கடைய நெல்லூர்.

திருநெல்வேலி ஜில்லா.

# பலதுளி பெருவெள்ளம்

எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு எழுதியது.

**பனி** சிறிதென்று யாராகிலும் அதைத் திரஸ்கரிப்பதுண்டா? ஒரு பனித் துளியை யாரும் லக்ஷியம் செய்யார். ஆயினும் எது சிறியதோ அதைப் பத்திரப்படுத்திக் கொண்டால் பெரியதாயுள்ளது தானே பத்திரப்படும். காசுகளை ஒன்று சேர்த்துக் கூட்டினால் கடைசியில் கண்மணியான ரூபாயாகின்றன. காசைப் பத்திரப் படுத்துவோனுக்கு ரூபாயின் கவலை வேண்டியதில்லை. காசைப் பத்திரப்படுத்த ரூபாய் தானே பத்திரமாகுமென்று இங்கிலீஷில் ஒரு பழமொழியுண்டு. இது யதார்த்த மென்று மனிதர்கள் ஒப்புக் கொள்வார்களல்லவா?

* * *

ஆகிலும், சிறிய காரியத்தை ஜனங்கள் எத்தனை அற்பமாக மதிக்கின்றனர்; ஒரு பனித்துளியும், ஒரு தினையும் மனிதர்களுக்கு அலக்ஷியமாயிருப்பினும் விவேகிகளுக்கு அப்படியிரா. ஒரு காசு பொடிவிற்றுச் செல்வவான்களாயினோர் எண்ணிலர். ஐச்வரியவந்தராகியும் இன்னும் ஒரு காசு பொடி விற்றுத் தான் வருகின்றனர். வர்த்தகரின் கடைத் தெருவில் வேண்டிய தான்யங்கள் விழுந்து கிடக்கின்றன. அவைகளைப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்களென்றால் யார் லக்ஷியம் செய்வார்? ஆகிலும் தெருவில் விழுந்துள்ள

தான்யங்களைப் பொறுக்கி எத்தனை ஏழைகள் தங்கள் ஜீவனத்தை நடத்திக் கொள்ளுகிறார்கள். அந்த தான்யங்களை பசியால் வருந்தும் பக்ஷிகளுக்கு ஆகாரமாகின்றன. சிறிய பதார்த்தங்களை யலக்ஷியம் செய்வதும், பெரிய வஸ்துக்களை லக்ஷியம் செய்வதும் ஜனங்களுக்குள் ஸாமான்ய வழக்கம். விவேகிகள் அவ்விதம் செய்வார்களென்று சொன்னோமல்லவா?

* * *

மனிதர்கள் சிறியது பெரியது என்னும் பேதத்தை வைத்துக் கொள்ளக்கூடாதென்று பகவான் சிறிய பாபம், பெரிய பாபமென்ற பேதம் பாராட்டவில்லை. சிறிய பொய், சிறிய மோசம், சிறிய களவு என்ற பேத முண்டா? என்றைக்கும் இல்லை. இது மனிதர்கள் செய்து கொண்ட கற்பனை. சிறிய பையன் கெட்ட வார்த்தைகளைச் சொன்னால், அவனென்ன சிறிய குழந்தை; அவனுக்கு என்ன தெரியும்; குழந்தையின் வாயிலிருந்து எத்தனை அருமை யருமையான வார்த்தைகள் புறப்படுகின்றன; மதலாய் இன்னும் நன்றாய்த்திட்டு பார்க்கலாமென்று சொல்லிக் கொடுத்துக் கெடுக்கும் தாய் தந்தையர் பலருளர்.

* * *

குழந்தைகள் பொய் சொன்னாலும் வேறு கெட்ட காரியங்களைச் செய்தாலும், சிறியோர் செய்தால் சிறுகாரியம்; அதை நாம் குற்றமாய் நினைப்பது சரியல்லவென்று திரஸ்கரிப்பது வழக்கத்தில் வந்துவிட்டது. எனினும் விவேகிகள் என்ன சொல்வார்கள்? சிறுபோதில் தலை எடுக்கும் கிளை முட்களுக்கு ஸமானமான துர்க்குணங்களை நிர்மூலம் செய்யாவிட்டால், அவைகள் வர வர முற்றிக் கடைசியில் மரத்தை யொத்து, நிர்மூலம் செய்வதற்கு எத்தனை பிரயத்தினம் செய்தாலும் அஸாத்யமாகும். இவ்விதம் பிறகு துன்பம் நாட்டும் சிறுகாரியங்களை அலக்ஷ்யம் செய்வது விவேகிகளுக்கு அழகாகுமா?

* * *

சிறியதாய்த் தோன்றும் கெட்டகாரியத்தை விட்டு நடக்கும் விஷயம் ஒன்று மாத்திரமல்ல. சிறியதாய்க் காணப்படும் நற்காரியத்தைச் செய்யும் விஷயத்திலும் விவேகிகள் திரஸ்காரத்தை வகிக்கக்கூடாது. இதற்கொரு ஆங்கிலக் கதை யுண்டு. கருப்பு மோட்டங்களால் நிறைந்த ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு ஒரு நாள் குடியானவனொருவன் தன் வயலில் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். மழை பெய்யாவிட்டால் பயிரெல்லாம் உலர்ந்து போய்விடுமே என்ற வியஸனம் அவனைப் பிடித்துக் கொண்டிருந்தது. அம்மோட்டத்தி



லிருந்த ஒரு பனி குடியானவனுடைய முகத்தைப் பார்த்து மிகவும் பரிதாபமடைந்து தன்னோடுள்ள மற்றொரு பனிக்கு, "அங்கே பார்த்தாயா குடியானவனை; அவன் முகத்திலுள்ள சிந்தையைப் பார். பயிர் உலர்ந்து போய் விட்டால் அவன் குஞ்சு குழந்தைகள் ஆகாரமில்லாமல் அதிக ஸங்கடத்தை யடைவார்கள். ஐயோ! நானென்ன செய்யட்டும்? நான் எம்மாத்திரம்? என்னொரு பனியால் என்னவாகும்? ஆகிலும் அவனை சந்தோஷப்படுத்த அவனிடம் செல்லுகிறே" னென்று சொல்லித் தன்னிடத்தை விட்டுக்கீழே விழுந்தது. விழும் பொழுது மேலே மோட்டத்தையே திருஷ்டித்து நின்று கொண்டிருந்த குடியானவன் கண்ணின் மேல் விழுந்தது.

* * *

அப்பொழுதவன் கண்ணைத் துடைத்துக் கொண்டு, ஒகோ! இதென்ன மழைத் துளி விழுந்தது போலாயிற்று என்பதற்குள் மோட்டத்தில் நடந்த ஆச்சரியத்தை என்னவென்று சொல்லுவோம்! ஒரு துளி சொல்லிய வார்த்தையை மற்றுள்ளவைகள் கேட்டு, இந்நற்காரியத்தில் நமது மித்திரனைவிட்டு நாமிங்கிருப்பது ஸரியல்லவென்று சொல்லிக் கொண்டு நானும் வருகிறேன், நானும் வருகிறேன் என்று அம்மோட்டத்திலிருந்து முத்து மணிகளைப் போல் சரசர வென்று உதிர்ந்தன. குடியானவன் மழைவந்துவிட்டதென்று வீட்டுக்கு ஓடிப்போகு முன்னமே நனைந்து விட்டான். பனிகளெல்லாம் சேர்ந்து அவன் வயலை நிரப்பின. தலைகுனிந்து அழுவதைப் போல் தோன்றிக் கொண்டிருந்த பயிர்களெல்லாம் பிரகாசத்தோடு நிலையாய் நின்றன. வயலின் சுற்றுப் புறமும், ரஸ்தாவின் பக்கமும் பனி சேர்ந்து வெள்ளமாய்ப் பெருகி, நிலங்களை யெல்லாம் கண்டு மகிழும்படி செய்தது. ஒரு பனி செய்த காரியம் கடைசியில் என்னவாயிற்று?

தான் அற்பனென்று அறிந்திருந்தாலும், செய்யும் காரியம் சிறியதென்று நினைத்திருந்தாலும், சிறியனவெல்லாம் ஒன்று சேர்ந்தால், மிகப்பெரிதாய் முடியுமென்பதை மறக்காமல் சிறு காரியத்திலேயே நம்பிக்கை வைத்து பிரயத்தனம் செய்வது பிரதியொரு மனிதனுக்கும் பெருமை யல்லவா? கொஞ்சமா யிருப்பதில் நம்பிக்கை வைப்பவன், வெகுவாயுள்ளவைகளிலும் நம்பிக்கை கொள்வான். அற்பத்தில் அனியாயம் செய்வோன் அதிகத்திலும் அநியாயக்காரனாவான். இதில் அடங்கி யிருக்கும் கருத்தை மனிதர்களெல்லோரும் தங்கள் நடத்தைக்கு ஸூத்திரமாக வைத்துக் கொண்டால் பூலோகம் எத்தனை ரமணீயமா யிருக்கும். பாடசாலையில் படிக்

கும் பாலகர்கள் கிரமம் தவறாமல் நடந்து கொள்வார்களானால் அப்பாடசாலையின் கீர்த்தி எப்படிப்பட்டதாய் பிரகாசிக்கும். அப்பாலகர்கள் பெரியவர்களாய் புத்திசாலியாயும் ஸத்தியமாயும் நியாயவாதிகளாயும் நம்பிக்கை யுடையவர்களாயும் நடந்தால் அத்தேசத்துக்கு எத்தனை க்ஷேமம். பெரிய கார்க்கானாவில் வேலை செய்யும் ஆட்களெல்லாம், எஜமான் எதிரிலிருந்தாலும் இல்லாமற் போனாலும் ஒரே விதமாய் நம்பிக்கையோடு வேலை செய்தால், அவர்களால் எஜமானனுக்கு எத்தனை ஆதாய முண்டு. நாம் எதைச் செய்தாலும் பகவான் பார்க்கிறார். அவர் மகிழும்படி செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயத்தோடு செய்ய நிர்ணயித்துக் கொண்டால் சிறு காரியமாகட்டும், பெரிய காரியமாகட்டும் நன்றாய் நடக்கும். சிறிதென்று அலக்ஷியிக்கும் ஸ்வபாவம் அப்போது நமக்கு உண்டாகாது. எதையும் நாம் சரிவரச் செய்து முடிக்கப் பழகிக் கொண்டுவிடுவோம். நம்மைப் பார்த்துப் பிறரும் தங்கள் துர் வழக்கத்தைவிட்டு ஊக்கமுடையவர்களானாலன்றோ நமக்கு அது மேன்மை தரும். சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவுமென்பதை நாம் ஒரு போதும் மறக்கொணாது. வியாபார விஷயத்தில் இன்னும் இதை அதிக விசேஷமாய்க் கவனிக்கவேண்டும். வர்த்தகர்கட்கும் சிப்பந்திகட்கும் இது ஒரு உத்தமமான குறிப்பு.

* * *

முற்காலத்தில் ஒரு சிற்பி பிரதிமையினுடைய தலையின் பின்புறத்தில் மயிர்கூடத் தெரியும்படி வெகு பிரயாஸத்தோடு ஸூக்ஷ்ம வேலை செய்து கொண்டிருந்தான். இதைக் கண்டு ஒரு ஸ்நேகிதன், ஐயா! சுவரின் பக்கத்தில் மறைவாய் நிற்கும் தலையின் பின்புறத்துக்கு இத்தனை சிரமப்பட்டு வெட்டுகிறாயே, இதனாலென்ன பிரயோஜனம்? எனவே, சிற்பி, “நேசனே! மனிதர்கள் பாராவிட்டாலும் தேவதைகள் பார்த்து மகிழுவர்.” என்றான். ஆதலின் பகவான் நமக்கு நியமித்திருக்கும் காரியங்களைச் சிறிதாகட்டும் பெரிதாகட்டும், ஈசுவரன் பார்க்கிறார் என்ற எண்ணத்தோடு செய்து முடிக்கக் கடவோம். இவ்வாறு முடிக்கவேண்டுமென்ற உத்கிருஷ்டமான ஸங்கல்பம் நம் நெஞ்சிலே ஊன்றிவிட்டால், நாம் எந்த ஒரு சிறியதினிடத்தும், அது சிறியதென்று அலக்ஷிய சிந்தை கொள்ளமாட்டோம். சிறியதினிடத்தும் கௌரவ புத்தியுடன் மதிப்பு வைத்து எதையும் சரிவரச் செய்யும் தன்மைக்கு நாம் வந்து விடுவோம். அப்போது அது பல துளி பெருவெள்ளமாய் நம்மை உன்னத ஸ்தானத்துக்குக் கொண்டு செல்லும். அங்ஙனமே ஆவதாக.

---

# கதாரத்னாகரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 2.

வெளிநாடுகளுக்கு ரூ. 3-8.

1921—நவம்பர்

4- FEB 1922

## அட்டவணை.

| | பக்கம். |
|---|---|
| 1. கடவுள் வணக்கம் | 217 |
| 2. வாய்மை | |
| 3. சுகாதாரம் | 220 |
| 4. பெண்கள் பகுதி | 223 |
| 5. பிரபஞ்ச விலாசம் | 227 |
| 6. ஸ்ரீமத் பகவத் கீதா வாசகம் | 229 |
| 7. மதிப்புரை | 232 |
| 8. வியாபாரப்பகுதி | 233 |
| 9. ஷேக்ஸ்பியரைப் பற்றி ஒரு விநோத விருத்தாந்தம் | 235 |
| 10. இரதிசுந்தரி | 237 |
| 11. மாயாச்சாரியார் | 241 |

## ஒரு புது நூல்.

கதாரத்னம் நமது கதாரத்னாகரம் முதலிரண்டு தொகுதிகளிலும் வெளியானவைகளிலிருந்து 6 சரித்திரங்கள், 4 கதைகள், 2 நாவல்கள் முதலானவைகளை யெடுத்து கதாரத்னம் என்ற பெயருடன் தனி நூலாக வெளியிட்டிருக்கிறோம். வாசிப்பதற்கு அவ்வளவும் ருசிகரமானது.

இதன் விலை அணா 12.

நமது சந்தா நேயர்களுக்கு அணா 10.

மானேஜர், சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

குறிப்பு:—சந்தாநேயர்கள் கடிதம் எழுதும்போது கதாரத்னாகரம் சந்தாதாரர் என்று குறிப்பிட்டு எழுதவும்.

# கடவுள் வணக்கம்

## திருச்சிற்றம்பலம்.

தாரா யுடையா யடியேற் குன்றா ளிணையன்பு
பேரா வுலகம் புக்கா ரடியார் புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங் குன்றா ளிணையன்புக்
காரா யடியே னயலே மயல்கொண் டழுகேனே.

அழுகே னின்பா லன்பா மனமா யழல்சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண் டுன்னைப் பணிகேனே.

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய வடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி யதுவு மரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே.

யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
　வந்து முந்திநின் மலர்கொ டாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
　மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ யெளியை யாகிவந்
　தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
　கடைய னாயினேன் பட்ட கீழ்மையே.



Photo] [K. S. Muthian

ஸ்ரீ காசி, தஸாஸ்வமேத காட்

கதாரத்நாகரம் அனுபந்தம்.

கடவுள் துணை

KATHA கதாரத்நாகரம் RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

—ஔவை குறள்

Vol. 4. தொகுதி 4. | November, 1921 துன்மதிஸு நவம்பர்மீ | No. 6. பகுதி .6

# வாய்மை

எவ்வகைப்பட்ட பெருஞ் செல்வத்தை ஒருவன் அடையப் பெற்றானேயாயினும் பிறருடைய உதவியில்லாவிடத்து அவன் உலகத்தில் தனித்திருந்து இல்வாழ்க்கையினாலாகிய இன்பத்தை நுகர்ந்து உயிர் வாழ்வது அரிது. பெருஞ் செல்வமுடையான் பிறருடைய உதவியில்லாமலே எத்தகைய இன்பத்தையேனும் நுகரக்கூடாதோ என்னின், நுகருதல் கூடாது என்பதே அறிஞர் துணிபு. பெருஞ் செல்வமுடையான் அதிக இன்பத்தை நுகர அவாக் கொள்ளுங் காலத்துத் தனது செல்வத்தைப் பலருக்கும் பிரதி பலனைத் தந்து அவர்களுடைய பல முகத்தாலும் பெற்றுவருகின்றானென்பதை நாம் அநுபவசித்தமாகக் காண்கிறோம். அங்ஙனம் பிறருக்குச் செல்வத்தைப் பிரதி பலனை வழங்குவதற்குச் சக்தியற்றவன் அவர்களுடைய உதவியைப் பெறாமல் இன்பத்தை இழக்கிறான். இது தான் செல்வ

முடையானுக்கும் வறியனுக்கும் உள்ள பேதம். இதனால் நமது உலக வாழ்க்கை இன்பத்துக்கு ஏனையோருடைய உதவி அத்தியாவசியமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. உலக வாழ்க்கையை விட்டொழிந்த துறவிகள் முதலிய தூயோருக்குப் பிறருடைய உதவி வேண்டுவதில்லையே என்போமாகில், அவர்களும் தேக உபாதைகளை நிவர்த்தித்துக் கொள்வதற்காக இல்வாழ்வானது துணையை நாடுகின்றார்கள் என்பது,

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை"

என்னும் பொதுமறை வாக்கியத்தால் இனிது விளங்குகின்றது. ஏக சக்கிராதிபதியாய்த் தனி அரசு செய்யும் மஹாராஜன் முதல் கடைப்பட்ட குடியானவன் ஈறாகவும், நுண்ணறிவு பெற்ற கல்விமான் முதல் மந்த மதியினனாகிய கயவன் ஈறாகவும், உலக வாழ்க்கையை முற்றத்துறந்த தவசி முதல் உலக வாழ்க்கையையே சதமென மதித்திருக்கும் உலோகாயிதன் ஈறாகவும், புஜபல பராக்கிரமம் பெற்ற சுத்தவீரன் முதல் அதிபல ஹீனன் ஈறாகவுமுள்ள யாவரும் பரஸ்பர உதவியினாலேயே உலகத்தில் உயிர் வாழ்ந்து வர வேண்டியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட வாழ்க்கைக்குத் தான் ஜன சமூக வாழ்க்கை என்று பெயர். மேற் கண்ட அனைவரையும் ஒருங்கு சேர்த்து ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வரும்படி செய்வதற்கும், ஜன சமூக வாழ்க்கை நடை பெற்று ஓங்குவதற்கும் தக்கதோர் கருவி வேண்டியதல்லவா? வாய்மை என்னும் ஒன்றையே ஜகதீசன் அக்கருவியாக அமைத்து வைத்திருக்கின்றனர். வாய்மை என்பது மெய்மையாகும்; வாய்மை என்னும் பதம் வாயினிடத்து உண்டாதல் என்று பொருள்படும். அந்தப் பதம் மெய்மை அல்லது உண்மை என்னும் அர்த்தத்தில் ஆன்றோரால் உபயோகிக்கப்பட்டு வருவதை யோசித்துப் பார்க்கையில், மனிதனுடைய வாயினிடமாக இயற்கையில் உண்டாகி வெளிப்படுவது மெய்மையே யன்றிப் பிறிதன்று என்பது தெளிவாய் விளங்குகிறது. ஆகவே, மெய்யுரைத்தல் நமது இயற்கைக்கு ஏற்றதென்றும், பொய்யுரைத்தல் நமது இயற்கைக்கு ஏற்றது அன்றென்றும், வாயைக்கொண்டு நாம் வசனிக்கும் ஒவ்



வொரு வார்த்தையும் மெய்யாகவே இருத்தல் வேண்டுமென்றும் மானிட லட்சண சாஸ்திரிகள் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். நமது இயற்கைக்கு ஏற்றதைச் செய்வது அதிக சுலபமென்பதையும், ஏலாதவற்றைச் செய்வது அதிக கஷ்டமானதென்பதையும் ஒருவரும் மறுக்கார். இரண்டு காலால் நடப்பது ஒவ்வொருவருக்கும் இயற்கை; இரண்டு கால்களையும் மேலே தூக்கிக்கொண்டு இரண்டு கரங்களினாலும் கழைக் கூத்தர்களைப் போல் நடப்பது நமது தேகதத்துவ லட்சணத்துக்கு விரோதமாதலின், அது எவ்வளவு மகா கஷ்டமான காரியமாயிருக்கிறதோ அதுபோல், மனித இயல்புக்கு விரோதமாய் பொய் யுரைக்கும்போது இன்னாரின்னாரிடத்தில் இன்னின்ன சமயத்தில் இன்னின்ன பொய்யை இன்னின்னவிதமாகக் கூறியிருக்கின்றோமென்பதை யெல்லாம் ஞாபகத்தில் பதித்துவைத்து வருத்தமுற்றுப் பெரும் பயனை அடைவதைக் காட்டிலும், மானிட இயற்கைக்கு ஏற்றவாறு சுலபமாய் வாஸ்தவத்தைப் பேசிச் சொற்ப பயனையடைந்து சுகித்து வாழ்வதே அதி உத்தமம் என்பதை எப்படிப்பட்ட பெரும் பொய்யனும் ஒரு காலத்தில் ஒப்புக்கொள்ள நேரிடும். ஆகவே உலகத்தில் மனமொழி மெய்களினால் வருந்திப் பாடுபட்டுப் பயனை யடையத்தக்க சகல தொழில்களிலும் பொய்யுரைத்துச் சீவிப்பது மகா கஷ்டமான தொழில் என்பது ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்கவேண்டிய விஷயமாகும்.

## பொய்யா மொழி

1. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
   தீமை யிலாத சோலல்

கருத்து:—பிறருக்குத் தீமையைத் தராத சொற்களைச் சொல்லுதல் சத்தியம் என்பதாம்.

2. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்த பின்
   றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

கருத்து:—தானறிந்த பொய்யைச் சொன்னால் தன் மனமே தன்னைக் கெடுக்கும் என்பதாம்.

# சுகாதாரம்

**மனிதன்** அனுபவிக்கிற சகல சம்பத்துகளில் நோயற்ற வாழ்வே முக்கியமானது. தேக உறுப்புகளின் தொழிலை அனுசரித்தும் வாயு, உஷ்ணம், சீதளம் இவை முதலியவைகளை அனுசரித்தும் நமது தேக சௌக்கிய மிருக்கும்; ஆகையால் அடியில் கண்டிருக்கிற சில முக்கிய விஷயங்களை அனுசரித்து நடந்தால் நமது ஆயுள் காலத்தில் பெரும்பாலும் சரீர சௌக்கியமாய் சுகமுற்று வாழலாம்.

சில வருஷங்களாய் யாவரும் சுகபரிபாலனத்தைக் குறித்து கவனிக்கிறார்கள். நாளுக்கு நாள் ஜனசங்கியை அதிகப்படுவதினாலும் பட்டணங்களும் நாட்டுப்புரங்களும் விர்த்தியாகிறதினாலும், ஜன நெருக்கமுள்ள விடத்தில் தொத்து நோய்கள் அடிக்கடி கண்டு வியாபிக்கிறதினாலும், நாம்யோசிக்கப்போகிற விஷயத்தைக்குறித்து சர்க்காரிலும் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. நமது தேக சௌக்கியம் பிராணனுக்கு இரண்டாவதாகும்; அறிந்திருக்க வேண்டிய விஷயங்களில் இது முக்கியமானது.

நமது தேசத்தில் சௌக்கிய பரிபாலன விதிகளை அனுசரித்து நடக்கிறவர்கள் மிகவும் குறைவே. இந்த விஷயத்தை பாடசாலைகளில் கற்பித்துக்கொடுத்தால் மிகுந்த நன்மை யுண்டாகும்.

‘பரிசுத்தம் கடவுளுக் கடுத்தஸ்தானம்’ என்ற தோர் ஆங்கிலப் பழமொழி யுண்டு. சிலர் அடிக்கடி வியாதிக்குட்படுவது தெரிந்திருக்கும்; வியாதி வருவதற்குக் காரணங்கள் தெரிந்திருக்கும்; சில சமயங்களில் யூகித்தறிவதென்றால் பிரயாசை



யாயிருக்கும்; சுகாதாரத்துக்கான விதிகளை அனுசரித்து நடந்தால் வியாதி அணுகாது. தேக ஆரோக்கியத்துக்காக கடவுள் நமக்கு அநேக பொருள்களைக் கொடுத்திருக்கின்றார். அவைகளை உணர்ந்து உபயோகிக்க வேண்டியது நமது கடமை. வாயு, தேக சுத்தி, வஸ்திரம், போஜனம், நித்திரை ஆகிய இவைகளைக் குறித்துச் சில கிரமங்களுண்டு. அவைகளை அனுசரித்து நடந்துவரின் சுக ஜீவியாய் வாழலாம்; முறை தவறினால் ரோகமணுகும். தாய் தந்தைகளாலும் தாதிகளாலும் கிரமமாய்ப் பரிபாலனம் செய்யாத குழந்தைகள் தற்காலம் சுகஸ்திதியில் காணப்பட்ட போதிலும், பிறகு வயது அதிகரிக்கும்போது வியாதி அணுக ஆரம்பிக்கும்; வைத்திய சிகிச்சையும் மித்திரர்களுடைய உபசரணையும் நிஷ்பலமாகிவிடும்.

சாதாரணப் பொருள்களை அலக்ஷியம் செய்வது நமது வழக்கம். வாயு, ஜலம் ஆகிய இவ்விரண்டு சாதாரண பதார்த்தங்களையும் அவைகளின் பிரயோஜனத்தையும் நாம் கவனிப்பதரிது. தேக சுகத்துக்கும் சம்பத்துக்கும் சாதகமாகவே கடவுள் அவைகளைக் கொடுத்திருக்கிறார்.

தன் சரீர சௌக்கியத்தைப்பற்றி ஏன் அதிக ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்; தேக ஆரோக்கியங் கெட்டிருந்தாலும் செல்வம் இருந்தால் போதாதா வென்று சிலர் கேட்பார்கள். பணத்தைக் கொண்டு நல் மருந்தைப் புசித்து சுகப்பட்டுவிடலாமென்பதாகும். இப்படிச் செய்வது கெட்டுப்போன கடியாரத்தை ரிப்பேர் செய்தது போலாகும். வியாதி வந்த பிறகு சிகிச்சை தேடுவதைவிட தேகத்தைப் பிணிக்கிடமின்றி காப்பாற்றுவதே சிலாக்கியமாகும். மருந்தால் குணப்படுத்திக் கொள்ளலாமென பிணிக்கிடமாவது மதியீனமாகும்.

மனதையும் தேக பலத்தையும் எவன் தன் முயற்சியால் காப்பாற்றிக் கொள்ளுகிறானோ, அவன் இப்பிரபஞ்சத்துக்கு நன்மை செய்யப் பாத்திரனா யிருக்கிறான். சுக போகங்களை அனுபவிக்க யோக்கியமுள்ளவனாகிறான்.

தேக சம்ரக்ஷணைக்காக நமது தேகத்தில் இருதயம், நுரையீரல், அன்னாசயம், மூளை ஆகிய பலவித உறுப்புகளுண்டு; ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேகமான தொழிலுமுண்டு. மூளை புத்தியைத் தருகின்றது; இருதயம் இரத்தத்தை சர்வாங்கமும் வியாபிக்கச் செய்கின்றது. நுரையீரல் கறுத்த கெட்ட இரத்தத்தைச்

சிவப்பித்து, பரிசுத்தமாக்கி விடுகின்றது. தீனிப்பை அன்ன பானாதிகளைத் தகித்து விடுகின்றது. ஒவ்வொரு உறுப்புக்குடைய பிரத்தியேகத் தொழில் கிரமமாய் நடந்து வருவதே 'தேகசௌக்கியம்'; அது விகற்பப்படுவதே 'அசௌக்கியம்'; அதனை வியாதியென்று கூறுவர். தேக சௌக்கியத்தை விகற்பப் படுத்துகிற காரணங்கள் அனந்தம்; அக்காரணங்கள் நம்மைப் பெரும்பாலும் அணுக வொட்டாமல் செய்வதற்குச் சில விதிகளுண்டு. அவைகளில் சில முக்கியமானவைகள் மாத்திரம் இதனடியில் விவரிக்கப்படும். அந்த விதிகளை யனுசரித்து நம்மால் கூடியவரையில் நடப்போமாகில் இவ் வுலகவாழ்க்கையிலிருக்குமளவும் சரீர சௌக்கியத்தையும் தீர்க்காயுளையும் சந்தான சௌபாக்கியங்களையும் பெற்று மங்களகரமாக ஜீவித்திருக்கலாம்.

மகாத்மா காந்தியும் தேகாரோக்கியத்தைப் பற்றி அனுபூதியில் எழுதி யிருக்கின்றார். இது இந்தியாவின் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு புத்தக ரூபமாய் வெளி வந்திருக்கிறது. எல்லோரும் படித்துணரவேண்டிய நல் விஷயமாகும். சில வருஷங்களுக்கு முன்னே பள்ளிக்கூடங்களில் 'சுகவழி' என்ற நூலை பாடமாக ஏற்படுத்தி யிருந்தார்கள். பிற்காலத்தில்அது முற்றிலும் நீக்கப் பட்டுப் போய் விட்டது. தற்காலம் கலா சாலையில் சுகாதாரத்துக்கான நூல்களை அவசியம் ஏற்படுத்த வேண்டும் என்று கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இதனால் இனி நன்மை உண்டாகலாம்.

சௌக்கிய பரிபாலனத்துக்கு முக்கியமாய் அனுசரிக்க வேண்டிய விதிகளாவன;—

1. பரிசுத்த முள்ள காற்றுள்ள இடத்தில் வாசஞ் செய்ய வேண்டியது.
2. நிர்த்தோஷ ஜலபானஞ் செய்ய வேண்டியது.
3. போஜனக் கிரமத்தை அனுசரிக்க வேண்டியது.
4. சரீர சுத்தி, சுத்தவஸ்திரம் இவைகளைக் கவனிக்க வேண்டியது.
5. மல மூத்திராதிகளை அடக்காமல் காலக்கிரமத்தில் நீக்க வேண்டியது.
6. காற்றுள்ள விடத்தில் உலாவுதல்.
7. மனதைக் களங்கமன்றி, வேலை யில்லாமல் உல்லாசமாய் வைத்துக் கொள்ளுதல்.
8. நித்திரையை மிதப்படுத்தல்.
9. வாசஸ்தலத்தை சுத்தமாய் வைத்தல்.
10. தொத்து வியாதிகளாகிய, விஷபேதி, அம்மை முதலியவைகள் அணுகா வண்ணம் எச்சரிக்கையா யிருத்தல்.

# பெண்கள் பகுதி

## தாய்மார்களுக்கு சில போதனை

பல் முளைக்கும் பருவம்:—டாக்டர் பர்ச் என்ற ஒரு நிபுண வைத்தியர் "பல் முளைக்கும் பருவம்" என்ற அதிகாரத்தில் பின்வரும் அட்டவணை யொன்று எழுதியிருக்கின்றார். அதைப்படித்தால் உங்களுடைய குழந்தைக்குப் பல் முளைக்குங் காலமும் முறையும் எத்தன்மையதென்று உங்களுக்குத் தெரியவரும்.

1. சுமார் ஏழுமாதம் அல்லது எட்டு மாதமானபின் கீழ் அலகில் நடுப்பல் இரண்டு முளைக்கும். அதற்குக் 'கடிப்பல்' என்று பெயர். அது எப்பொருளையும் முதலில் கடித்துத் தின்பதற்குதவும்.

2. சுமார் ஏழரை மாதம் அல்லது எட்டுமாதமானபின் மேலலகில் நடுப்பல் இரண்டு முளைக்கும்.

3. சுமார் ஒன்பதாவது மாதத்தில் கீழலகில் பக்கத்துப் பல் இரண்டு முளைக்கும்.

4. அம்மாதிரி பத்தாவது மாதத்தில் மேலலகில் பக்கத்துப் பல் இரண்டு முளைக்கும்.

5. பன்னிரண்டு பதின்மூன்று மாதங்களில் கீழலகில் முன் கடைப்பல் இரண்டு தோன்றும்.

6. சுமார் பதினான்கு மாதங்களாய பின் மேலலகிலுள்ள கடைப்பல் முளைக்கும்.

(7) பதினாறு இருபது மாதங்களுக்குள் கூர்ப்பல்கள் நான்கும் முளைப்பன.

(8) பின் கடைப்பல் மேலலகில் இரண்டும் கீழலகில் இரண்டும் இருபது முப்பது மாதங்களில் முளைப்பன.

ஆக எல்லாஞ் சேர்ந்து பற்கள் இருபதாகின்றன. இம் முறையில்தான் பெரும்பான்மை பற்கள் தோன்றுவன. அவைகள் மேற்கூறிய காலங்களிலும் முறையிலும் தோன்றவில்லை யென்றால்

அதனால் யாதொரு குற்றமுமில்லை. ஆனால் உங்களுடைய குழந்தையின் வாயை யடிக்கடி கவனிப்பது நன்று. வெகு காலங் கழித்து பல் முளைத்தால் அதைப்பற்றி வைத்தியரிடம் கேட்பது உசிதம். ஒரு வேளை பல் காலத்தில் முளைப்பதற்கேற்றவாறு சரியான ஆகாரத்தை உட் கொள்ளாமலிருக்கலாம். சில குழந்தைகளுக்கு யாதொரு வியாதியும் கஷ்டமுமின்றி இலகுவாய் பல் முளைக்கும் ஏனைய குழந்தைகளை பல் முளைக்குங் காலத்தில் நோய் பீடிக்கும். வழக்கமாக அக்காலத்தில் சுரமாவது வயிற்றோட்டமாவது குழந்தைக்கு வரும். அல்லது கொஞ்ச நாட்களாக அமைதியாயிராது. அக்காலத்தில் வெயிலில் கொண்டு போகாமல் அதை அமைதியாயிருக்கும்படி செய்யவேண்டும். விளக்கெண்ணெய் கொடுத்து மலம் சரியாய்ப் போகும்படி செய்வதோடு விசேஷ ஆகாரம் அதற்குக் கொடுக்கக்கூடாது. பல் முளைக்கும் பருவத்தில் ஏற்படும் வயிற்றோட்டம் அபாயமானது. ஆகவே அதைக்கூடிய சீக்கிரத்தில் மருந்து கொடுத்து நிறுத்த வேண்டும்.

## இரண்டாவது அதிகாரம்.

### ரோகசம்சர்க்கத்தைப் பற்றிய கோள்கை.

கண்ணுக்குத் தெரியாத புழுக்களினால் ஒட்டு நோய் வருமென்ற கோள்கை:—கண்ணுக்குத் தெரியாத புழுக்கள் நீரிலும் காற்றிலும் இருக்கின்றனவென்று நீங்களெல்லாரும் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா? புழுக்கள் நமக்கு பகவான் சிருஷ்டித்துள்ள கண்களால் பார்க்க முடியாதபடி வெகு சிறிதாயுள்ள பல் வகைப் பூச்சிகள். பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தால் அவைகளை நாம் பார்க்கலாம். அவைகள் மற்றப் பூச்சிகளைப்போல் தோன்றியும் பெருகியும் அழிவன. நாம் அவைகளைப் பார்க்க முடியாமலிருந்தபோதிலும், அவைகள் உயிருடன் இருக்கின்றனவென்றும் ஒவ்வொரு வகையும் தங்களுக்கேற்பட்ட வேலையைச் செய்கின்றனவென்றும் அறிகிறோம். நீங்கள் அனைவரும் அவைகள் எவ்வளவு சீக்கிரத்தில் பெருகுகின்றனவென்றும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அவைகள் அதிசீக்கிரத்தில் பரவுகின்றனவென்றும் உணர்வீர்கள். அவை அநேகப்பலவகைத்து; அவைகளில் எல்லாம் தீங்குசெய்வனவல்ல. சில ஆகாயத்திலே தோன்றிப் பெருகுகின்றன. பின் காற்று அடிக்கிற பக்கம் போகின்றன. மற்றவை நீரில் தோன்றி வசிக்கின்றன. ஒரு சில மானிடர் உடம்பிலும் பிராணிகளினுடம்பிலும் தோன்றிச் சீவிக்கின்றன. ஆனால் எல்லாம் அவைகளுக்கு சரியான ஆகாரமும் இடமும் அமைந்தால் அதிசீக்கிரத்தில் பரவிப் பெருகுமென்பதில் ஐயமில்லை.



நமக்கு அசௌக்கியத்தையும் நோயையும் உண்டாக்கும் புழுக்களைப்பற்றி உங்களுக்கு நன்றாய்த் தெரியும். அநேகமாக ஒவ்வொரு வியாதியும் ஒவ்வொருவகைப் புழுவினால் வருமென்பது நீங்களெல்லாமறிவீர்கள். அவரை விதை விதைத்தால் சுரை முளைக்குமோ? இல்லை. அதுபோல் காலராப் புழு ஒருவன் உடம்பில் புகுந்தால் காலராவே அவனுக்குண்டாகும். அம்மை நோயையுண்டாக்கும் புழு ஒரு உடம்பில் புகுந்தால் அவ்வுடம்பு அம்மை நோயால் பிடிக்கப்படும். இப்படியே ஒவ்வொரு வியாதிக்கும் அததற்கேற்பட்ட புழுவிருக்கின்றது. இந்தப் புழுக்கள் மற்றப் பேர்களுக்கு பல வழிகளில் பரவுகின்றன. ஒருவர் இருமுகிற பொழுதாவது தும்முகிறபொழுதாவது அவருக்கிருக்கும் வியாதி பக்கத்திலிருப்பவரைப் பிடிக்கும். உதாரணமாக ஒரு குழந்தை குத்து இருமலால் பிடிக்கப்பட்டால் அது இருக்கிறபொழுது பக்கத்தில் வரும் ஒவ்வொரு குழந்தையும் அந்நோயால் பீடிக்கப்படும். அம்மை நோயைப்போன்ற தொத்து வியாதி தொட்ட மாத்திரத்தில் ஒருடம்பிலிருந்து மற்றொருடம்புக்கு சீக்கிரம் பரவும். இவைகளெல்லாம் நம் கண்ணுக்குத் தெரியா; ஆனால் நூற்றுக்கணக்கான புழுக்கள் காற்றில் பரவுகின்றன. காலரா வயிற்றுளைச்சல்போன்ற மற்ற வியாதிகள் அவைகளால் அவஸ்தைப் படும் மனிதர்களுடைய மலத்திலும் வாந்தியிலும் பரவுகின்றன. மலத்திலும் வாந்தியிலும் கோடிக்கணக்கான புழுக்களிருக்கின்றன. ஒவ்வொரு புழுவும் சமயம் வாய்க்கும் பக்ஷத்தில் ஒவ்வொருவருக்கும் வியாதியைத் தரும். இங்கே தான் ஈக்களினாலுண்டாகும் அபாயம் வருகிறது. ஈக்கள் மலபாதை போயிருக்குமிடத்திலிருந்து பறந்து வருகிறதனால் புழுக்களைப் பரவச் செய்கின்றன. அவைகள்

எங்கே யிருந்து வருன்றகினவென்று உங்களுக்குத் தெரியுமா? அவைகளின் காலும் சிறகும் சுத்தமா யிருக்கின்றனவா வென்று உங்களால் கண்டு பிடிக்க முடியுமா? அவைள் காலரா இருக்கிற இடத்திலிருந்து வந்ததென்றும் அதில்லாத இடத்திலிருந்து வந்ததென்றும் உங்களாலறிய முடியுமா? ஆகவே அவைகள் வந்து அணுகாதபடி நீங்கள் கூடிய வரைத் தடுக்க வேண்டும். நல்லதா யிருந்தாலும் சரி கெட்டதாயிருந்தாலும் சரி. அவை நமக்குக் கொடிய விரோதிகள். அவைகள் அநேக வியாதிக்ளுக்குக் காரணமாயிருக்கின்றன. ஈக்கள் சாக்கடையிலும், அசுத்தமான கஷ்சுக்களிலும், உரக்குப்பைகளிலும் வசிக்கின்றன. ஆகவே அசுத்தமான வஸ்துக்கள் உங்கள் பக்கத்திலிருக்குமாகில் ஈக்களினால் உங்களுக்கு அபாயங்கள் ஏற்படும்.

அநேக புழுக்கள் தூசியாலும் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்கு பரவப்படுவன. ஆயிரக் கணக்கான ஜனங்கள் நடக்கும் பாதையிலுள்ள தூசி அநேகவகைப் புழுக்களையுடைத்து; உதாரணமாக கொடைக்கானலை யெடுத்துக் கொள்ளுங்கள். ரோட்டில் தூசி அதிகமாயிருக்கிறதென்றும் அவ்வூரில் மழை பெய்யாமலிருந்தால் அத்தூசியினால் இன்புளுவன்ஸா (Iinfluenza) ஜுரமும் ஜளிப்பும் அநேகருக்கு வருகிறதென்றும் எந்த வைத்தியரும் உங்களுக்குச் சொல்லுவர்.

M. E. வீரபாகு பிள்ளை.

---

## பொய்யா மொழி.

3. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா உளன்.

கருத்து:—பொய்யாத உள்ளமுடையோன் உயர்ந்தோர் உள்ளத்திலிருப்பான் என்பதாம்.

4. மனத்தொடு வாய்மை மொழியிற்றவத்தொடு
தானஞ் செய் வாரிற் றலை.

கருத்து:—உண்மை சொல்லுவோன் தவம், தானம், செய்பவரினும் மேலாவன் என்பதாம்.

# பிரபஞ்ச விலாசம்.

நன்மொழிகள்:—செவிக்கு இன்பமாயும், மனதிற்குப் பிரியமாயுமுள்ள வார்த்தை சொல்பவர்கள் அநேகர் கிடைப்பார்கள். கடைசியில் இது தீயவழியில் விடுமென்பதையும் முதலில் உணர்வதில்லை. நல்வழி காட்டும் வார்த்தைகள் கர்ணகடூரமாயும், மனதிற்கு அப்பிரியமாயும் 'இருக்கும். இதைச் சொல்பவரும் சிலரேயாகும்; ஒருக்கால் சொல்பவர் கிடைத்தாலும் கேட்பவர் கிடைப்பதரிது. நூற்றிலொன்றோ ஆயிரத்திலொன்றோ உள்ளார் போலும்.

ஸ்திரப்படுத்தி விடுதல்:—ஒருவர் மதியின்மையாலோ, கோபத்தினாலோ, ஒருவர் மேல் ஒரு பழியைச் சுமத்தினால், மற்றவர்களாவது அதைத் தீர விசாரித்து, ஆய்ந்தோய்ந்து யோசியாமல், மிக்க நிபுணர்கள் போல அதையே ஸ்திரப்படுத்தி விடுகிறார்கள்.

சிநேக லக்ஷணம்:—தன்னால் இயன்ற உபகாரம் வஞ்சனையில்லாமற் செய்வதும், சுகதுக்கங்களைத் தனக்கு வந்ததுபோல் நினைப்பதும், தன்னுயிரினும் மிக்கதாகக் கொள்வதும் சிநேகித லக்ஷணம். அப்படியிருக்க என் சிநேகிதனுக்கு அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்பது சரியல்ல. அப்படிச் செய்வது நம் கடமையாகும். அதை விரோதிக்குச் செய்திருந்தால் இன்னும் சிலாக்கியம்.

கிரஹசாரம்:—ஒரு வஸ்து களவுபோனால், அதைத் திருடினவர்கள் இருக்க, சில சமயங்களில் குற்றமற்றவர் மீதில் அதிக சந்தேகமுண்டாகி விடுகிறது; இது கிரஹசாரம் போலும்.

இக்காலம்:—இக்காலத்தில் பணக்காரர்களிடம் அதிக லோபத்வமும், ஏழைகளுக்குத் தாராள மனதும், சில பிராமணர்களிடம் ஆசாரஹீனமும், அல்லாதாரிடம் ஆசாரமும் குடிகொண்டிருப்பது கலியின் மகிமை போலும்.

வீண் விரயத்தில் தாராளம்:—சிலர் நல்விஷயமாய்ச் செலவழிக்க எனக்கு சக்தியில்லை; நான் ஏழை; கடவுள் கொடுத்தால் செய்யலாம் என்கிறார்கள். வீண் விரயம் எவ்வளவாகிலும், கடன் பட்டாகிலும் செய்யத் துணிகிறார்கள்.

சிலரது ஜென்மப் பிரகிருதி:—சிலர் பெரியோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் நல்ல பிள்ளைகள்போல் பாவனை காட்டுவதே தவிர, ஓர் சமயத்தில் பெரியோர் ஏதாகிலும் சொன்னால் அதை அங்கீகரியாமல் புண்படும் வார்த்தைகளைப் பிரயோகித்து வருவது சிலரது ஜென்மப் பிரகிருதி.

மணப் பெண்ணின் மனது:—ஒரு மணமகளுக்கு—தனக்கு விவாகம்—என்ற ஓர் சந்தோஷம் இருப்பினும், மாமியார் வீட்டில் வாழ வேண்டுமே என்ற பயமும் ஒன்றுண்டு.

உண்டானபோது கோடானுகோடி:—நாம் நல்ல ஸ்திதியிலிருக்கும்போது, தம்முடைய குறைகளைச் சொல்லி நம்மிடம், பிடுங்கித் தின்னவோ, ஏதேனுமோர் சகாயத்தை வேண்டியோ பல முறை நம் வீட்டுக்கு வருகிறார்கள். தெருவில் கண்டாலும் கள்ளக் கும்பிடு போட்டு, பல்லை யிளித்து இரண்டுபர்லாங்கு தூரம் நம்முடன் பேசிக் கொண்டேவருவார்கள். நம்மால் ஒன்றும் கொடுக்க சாத்தியப்படாதென்கிற ரகசியம் தெரிந்து விட்டால் அவர்கள் நம் வீட்டிற்கு வருவதையே விட்டு விடுகிறார்கள். தெருவில் கண்டாலும் மெயில்போல் நடக்கப் பார்க்கிறார்கள்; அல்லது குடையாலோ புஸ்தகத்தாலோ முகத்தை மறைத்துக்கொள்கிறார்கள். இது விசுவாசக் கொக்குகளின் இயல்பு.

இன்பம் ஒரு மின்னல்போல.—இரவும் பகலும்போல மாறி மாறி, சுகமும் துக்கமும் உண்டாகக் கூடிய இவ்வுலகின்கண்மானிடர்களுக்கு இன்பம் தரும் நாள் தன்னை யறியாமலே வந்து மறைந்து போய் விடுகிறது; துன்பத்தைக் குறித்தே பலரும் வருந்துகிறார்கள்.

அன்பு மனது :—சொந்த பந்துகளாயினும், உடன் பிறந்தாராயினும், அன்னியராயினும்—அன்பானது மனங் கலந்த இடத்தையே நாடுகிறது.

நாலுபேர் கூட்டம்:—நாலுபேர் சேர்ந்த ஒரு வாலிபக் கூட்டத்தில்—ஒவ்வொருவன் ஒவ்வொரு விஷயத்தில் சமர்த்தனாயிருப்பான் எல்லா சமர்த்தும் பொருந்தினவன் அருமை. ஏதும் அறியாதவனும் அருமை.

வெளி டம்பம்:—இக்காலத்தில் கையில் அதிக பணம் வைத்திருப்போர் தான் பஞ்சை வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றுமில்லாதவனுக்கோ அட்டகாசம். தலைப்பாகை மாற்றுகள் அதிகம். எவ்வளவு டம்பம் உண்டோ அவ்வளவுக்கு ரகசியக் கடனும் இருக்கக்கூடும்.

சில நண்பரின் போக்கு:—சில நண்பர்கள் தங்கட்கொரு காரியம் இருந்தால், தம் சிநேகிதரோடு புன் சிரிப்போடும், மந்தஹாஸத்தோடும் வேடிக்கையாய் வார்த்தையாடுகிறார்கள். தம் நண்பன் ஒரு காரியார்த்தமாய்ப் பேச வந்தால் தங்களைக் கடுஞ் சித்தமுடைய மிருகங் களாக்கிக் கொண்டு, மஹா கௌரவ வெறி கொண்டவர்கள்போல் இரண்டொரு வார்த்தை சொல்லிவிட்டு மெள்ள நழுவி விடுகிறார்கள்.

# ஸ்ரீமத் பகவத் கீதாவாசகம்

(முன்தொடர்ச்சி.)

ஒருவனும் அவற்றின் விருப்பு வெறுப்புக்களின் வசத்தை அடையக்கூடாது; ஏனெனில், அவை இவனுக்கு விரோதிகள்.

35. நன்கு அனுஷ்டிக்கப்பட்டதான பிறருடைய தர்மத்தைக் காட்டிலும் குணமில்லாத நன்கு அனுஷ்டிக்கப்படாத தன் தருமம் மேலானது; தன் தருமத்திலே சாதல் நல்லது; பிறருடைய தர்மம் பயத்தை விளைப்பது.

அர்ச்சுனன் சொல்லலுற்றான்.

36. வார்ஷ்ணேய! இனி, இப்புருஷன் ஒன்றனைச் செய்ய விரும்புகின்றிலனாயினும், வலிய ஏவப்பட்டவன் போல், எதனால் தூண்டப்பட்டு பாவத்தைச் செய்கிறான்.

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார்.

37. இது காமம்: இதுவே கோபம்: இதுவே ரஜோகுணத்தினின்று உண்டாவது: பெருந்தீனியுடையது: மிகப் பொல்லாதது: நீ இங்கே இதனைச் சத்துருவாக தெரிந்து கொள்.

38. நெருப்புப் புகையாலும், கண்ணாடி அழுக்காலும் எவ்வாறு மூடப்பட்டிருக்கின்றனவோ, கருவானது பையினால் எவ்வாறு மூடப்பட்டிருக்கின்றதோ, அவ்வாறு அதனால் இது மூடப்பட்டிருக்கின்றது.

39. கௌந்தேய! ஞானிக்கு எப்பொழுதும் சத்துருவும், விஷய நுகர்ச்சியால் நிரம்பாததும் அதிலே திருப்தி வாராததுமான காமமாகிய இதனால் அறிவு மூடுண்டு கிடக்கிறது.

---

சிரிக்கும் நண்பன்:—கடுகடென நிற்கும் நண்பன் சிரிப்புடன் நம் முன்பு பேச வருவானாகில்—ஏதோ அவனுக்கு நம்மால் ஆக வேண்டிய காரியம் ஒன்றிருக்கிறதென்ற அர்த்தம்.

பிராயம்:—சாதாரணமாய் ஆண் பாலருக்கு 20-வயதிலிருந்து 35-வயது வரையில் முக ஜாடைத் தோற்றம் ஒரே மாதிரியில் தான் இருக்கிறது. பெண்பாலருக்கு 16-வயதிலிருந்து 25-வயது வரையினும் சரியாய் இத்தனை வயதென்று குறிப்பாய்த் நிர்மாணிக்க முடிகிறதில்லை.

கடன்:—ஏழைகள் வயிற்றுக் கொடுமையால் கடன்பட, பணக்காரர்களோ அதிகச் செலவு, டம்பம், பேராசை, இவற்றால் கடனாளிகளாகிறார்கள். (பிரஜாநுகூலன்)

40. இந்திரியங்களும் மனமும், புத்தியும் இதனுடைய இருப்பிடம் எனப்படுகின்றன. இது இவற்றின் வழியாக அறிவை மறைத்துத் தேகியை பலவகையாக மயக்குகின்றது.

41. அதனால், ஏ! பரதரிர் சிறந்தோனே, நீ முதலில் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு, சாஸ்த்ர அறிவையும் அனுபவ அறிவையும் அழிக்கின்ற பொல்லாத இதனைக்கொன்று விடு.

42. ஞானிகள் இந்த்ரியங்களை மேலாகக்கூறுகின்றனர். இந்திரியங்களைக்காட்டிலும் மனம்மேலானது: மனத்தைக்காட்டிலும் புத்தியோ மேலானது: புத்தியைக்காட்டிலும் மேலானது எதுவோ அது ஆத்மா

43. உயர்தோழ! நீ இவ்வாறு புத்திக்கு மேலானதை அறிந்து, மனத்தை மனத்தால் நிறுத்தி, வெல்லுதற்கு அரிதான காமமாகிய சத்துருவைக் கொல்லு.

## நான்காம் அத்தியாயம்: ஞானயோகம்.

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார்.

1. இந்த அழிவிலா யோகத்தையான் விவஸ்வானுக்கு உபதேசித்தேன். விவஸ்வான் மனு ப்ராஜாபதிக்கு உபதேசித்தனன். மனு இக்ஷ்வாகுவுக்கு உபதேசித்தனன்.

2. இவ்வாறு பரம்பரையாக வந்த இதனை ராஜரிஷிகள் அறிந்திருந்தார்கள். வெகுகாலமானமையால் பரந்தப அந்த யோகம் இப்பொழுது சிதைந்து போயிற்று.

3. இந்தப் பழமையான அதே யோகமானது, நீ என்னுடைய பக்தனாகவும் தோழனாகவும் இருக்கிறாயென உனக்கு என்னால் இன்று கூறப்பட்டது; ஏனெனில், இது உயர்ந்த இரகஸ்யமாம்.

அர்ச்சுனன் சொல்லலுற்றான்.

4. உங்களுடைய பிறப்பு பிந்தினது; சூர்யனுடைய பிறப்பு முந்தினது இப்படியிருக்க நீங்கள் முதலில் அந்த யோகத்தை அவனுக்கு அருளிச் செய்தீர்கள் என்ற இதனை, நான் எவ்வாறு அறியலாகும்;

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார்.

5. அர்ச்சுன! உனக்கும் எனக்கும் பல பிறவிகள் சென்று போயின. அவற்றை யெல்லாம் யான் அறிவேன்; நீ அறியமாட்டாய் பரந்தப!

6. பிறவாதவனானாலும், குறைவிலாத்தன்மையனானாலும், பூதங்களுக்கு ஈச்வரனானாலும், யான், என் மாயையை வசப்படுத்திக் கொண்டு என் மாயையினால் பிறக்கின்றேன் அவதரிக்கின்றேன்.



7. பாரத! உலகத்திலே தருமத்திற்குக் குறைவும் அதர்மத்துக்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் யான் என்னைப் படைத்துக் கொள்கிறேன்.

8. நல்லோரைப் பாதுகாத்தற்கும், தீயன செய்வோரை முற்ற ஒழித்தற்கும், தர்மத்தை நன்கு நாட்டுதற்கும் யான்யுகந்தோறும் அவதரிக்கின்றேன்.

9. திவ்யமான என்னுடைய அவதாரத்தையும் செய்கையையும் எவன் இவ்வாறு உண்மையாய் அறிகிறானோ, அவன் தனது உடலை விட்ட பின்பு மறுப்பிறப்பைப் பெறுவதில்லை; அர்ஜுன! அவன் என்னை அடைகிறான்.

10. பொருள்களிலே ஆசை பயம் கோபம் இவை நீங்கியவர்களாய், என் மயமானவர்களாய், என்னை புகலடைந்தவராய் ஞானமாகிய தபஸினால் பரிசுத்தரான அநேகர்கள் என் தன்மையை அடையலானார்கள்.

11. எவர்கள் என்னை எவ்வாறு அடைகிறார்களோ அவர்களை நான் அவ்வாறே அனுக்கிரஹிக்கின்றேன். பார்த்த! மனிதர்கள் எவ்வாற்றானும் என் வழியை அனுஸரிக்கிறார்கள்.

12. தாம் செய்யும் கர்மங்களின் சித்தியை—பயன் கை கூடுதலை—விரும்புகிறவர்கள் இங்கே தேவதைகளை ஆராதிக்கிறார்கள்; ஏனெனில், கர்மத்தினால் உண்டாகும் சித்தியானது, மனுஷ்ய லோகத்திலே விரைவாக ஆகின்றது.

13. நான்கு ஜாதியும், குணம் கர்மம் என்றவற்றின் பலவகையான அளவிற்குத் தக்கபடி என்னால் படைக்கப்பட்டன. யான் அதனைச் செய்தவனாயும், அதனைச் செய்யாதவனாக நிர்விகாரியாக இருக்கிறேன் என்று என்னை நீ அறியக்கடவாய்.

14. "கர்மங்கள் என்னைப் பற்றா: கர்மத்தின் பயனிலே எனக்கு அவா இல்லை" என எவன் என்னைத் தெரிந்து கொள்கின்றானோ அவன் கர்மங்களால் கட்டப்படான்.

15. இவ்வாறாக அறிந்து ஸம்ஸாரத்தினின்றும் விடுபட விரும்பிய முன்னோர்களாலும் கர்மமான்து செய்யப்பட்டது. ஆகலால் முந்தின பண்டைக்காலத்தில் முன்னோர்களால் செய்யப்பட்ட கர்மத்தையே நீ செய்யக் கடவாய்.

16. காமமென்பது என்ன? அகர்மமென்பது என்ன? என்ற இதிலே, அறிவுடையோரும் மயங்கி விட்டார்கள். நீ எதனை அறிந்து, தீமையினின்றும் விடுவிக்கப்படுவாயோ, அந்த கர்மத்தையும் அகர்மத்தையும் யான் உனக்கு உபதேசிப்பேன்.

# மதிப்புரை.

காசி அல்லது புண்ணிய பூமி:—(கே. எஸ். முத்தையா கம்பனியின் தலைவரும் நமது நண்பருமான ஸ்ரீமான் கே. எஸ். முத்தையா எழுதிய மேற்கண்ட நூலொன்று எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்நூல் உயர்ந்த கிளேஸ் பேப்பரில் அச்சிடப்பட்டு, அநேக ஆப்டோன் படங்களுடன் சுத்தப் பதிப்பின் சுந்தரமுங் கொண்டொளிர்கின்றது. விலை அணு 12. வேண்டுவோர் கே. எஸ். முத்தையா அண்டு கம்பனி, தபாற் பெட்டி 99 சென்னை என்று எழுதவும்.

தமிழ் நாட்டிலிருந்து காசி யாத்திரை போகிற புண்ணியசீலர்களுக்கு மிக்க அனுகூலமாயுள்ளது இந்நூல். காசி யாத்திரைக்குப் போகிறவர்கள் போகும் வழியில் பார்க்கவேண்டிய ஸ்தலங்கள், காட்சிகள் முதலானவைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. க்ஷேத்திர மகிமை, தீர்த்த மகிமை, மூர்த்தி மகிமை ஆக இம்மூன்றும் அமையப்பெற்றது இக் காசிமாநகர் ஒன்றே. காசிக்குப் போகாதவர் அநேகர் இருந்தாலும், காசியை மனத்தால் நினையாதவர் ஒரு சிறிதேனுமிரார் என்றே சொல்லவேண்டும். பூர்வ புண்ணியமிருந்தாலன்றி மூர்த்தி, தீர்த்த யாத்திரை போவது அரிதென்பர் பெரியோர். நித்திய சுகத்தை அடைவதற்கு அதாவது ஞானத்தைப் பெறுதற்கு முதலாவது சித்தசுத்தி அவசியமாதலால், அதற்கு நிகரற்று விளங்குவது காசி யென்னும் புண்ணிய பூமியே. அங்கே நம் தமிழ்பாஷை அபூர்வம். இந்துஸ்தானி பாஷை மிகுதியாய் வழங்கிவருகிறது. ஆகையால் தமிழ் மக்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்நூலாசிரியர் திருநெல்வேலி வாசியாவர். சுமார் இருபது வருஷ காலமாய் ஸ்ரீ காசியில் பட்டுவர்த்தகம் செய்து அந்நகரின் அனுபவம் மிகுதியும் பெற்றுளராதலால் இந்நூலை யெழுத இவரே தக்கவராவர். காசிக்ஷேத்திரத்தின் திருநாமங்கள் சப்த நாமங்களின் விபரம், தற்கால ஸ்திதி, தீர்த்தயாத்திரையின் விபரம், முக்கியமாய் தரிசிக்க வேண்டிய சந்நிதிகள், இன்னும் அடுத்தாற்போல் பார்க்கவேண்டிய பூரி ஜகந்நாதம் முதலான விடங்களைப்பற்றியும் சாங்கோ பாங்கமாய் எழுதப்பட்டிருக்கிறது. வடதேசத்திய யாத்திரைக்கடுத்த ஸ்தலங்களையும் ஆங்கு கவனிக்கவேண்டிய ஆபூர்வ விநோதங்களும்எழுதப்பட்டிருக்கின்றன. சுருங்கச் சொல்லில் யாத்ரிகர்களுக்கு இந்நூல் உற்றதோர் நண்பனைப்போல் உதவக்கூடிய தென்றாலும், இந்நூலை வாங்கிப்படித்து, சித்திரக் காக்ஷிகளைக் கண்ணுறுவோரும் மிக்க பாக்கியசாலியென்றே சொல்வோம். சிறுவர் சிறுமியர் முதல் எல்லோரும் படிக்கக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் இந்நூலை வாங்கிப் போற்றுதல் பெரும் புண்ணியமாகும்.

# வியாபாரப் பகுதி

## நிர்வாகம்.

நிர்வாகம் என்பதைத்தான் மானேஜ்மெண்டு என்றுசொல்வது வழக்கம். இதைப் பற்றி வியாபார தந்திரத்தில் விளக்கி யிருக்கிறோம். நிர்வாகம் செய்வோருக்கு ஏஜண்டு, அதிகாரி, காரியஸ்தர், மானேஜர் என்று பல பெயர் வழங்குகிறது. இவர்கள் எஜமானர்களுக்குப் பிரதி நிதியாவர். எஜமானனுக்குரிய கௌரவத்தையும் பொருள்களையும் தொழிலின் மர்மத்தையும் காப்பாற்றிக்கொடுக்க கடமைப்பட்டவர்களாகும். உத்தியோகத்தை விட்டு எக்காரணத்தைக் கொண்டு நீங்கினாலும் தொழிலின் மர்மங்களையும், குறைகளையும் எவருக்கும் சொல்லக்கூடாது. ஏன் சொல்லக்கூடாது என்ற ஐயம் உண்டாகலாம். எஜமானனது குணத்தை யெடுத்துச் சொல்லி நான் அவர்களிடம் உத்தியோகமாயிருந்தேன் என்றால் அதற்கு விசேஷ மதிப்பு உண்டு. கேட்கிறவர் அந்த எஜமானனுடைய குண குணங்களை அறிந்திருந்தாலும், அந்த விடத்தில் சொல்வன்மையினால் கௌரவம் ஏற்படும். நிர்வாகிக்கு தனக்குள்ள வேலைக்காரர்களை அடக்கியாளும் திறமை வேண்டும். ஒரு காரியஸ்தலத்தில் படிப்படியாய் உயர்ந்த ஸ்தானத்தை அடைவது ஸ்லாக்கியம். புதியதோர் இடத்துக்கு காரியஸ்தனாய் அமர நேருங்காலத்து அதிக ஜாக்கிரதையாயும், பொறுமையாயும், இருக்க வேண்டும். முதலாவது எஜமானன் அல்லது மேலதிகாரியின் குண குணங்களையும் நோக்கத்தையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். மற்றும் எஜமானனுக்கு உதவியாயுள்ள உத்தியோகஸ்தர்களின் யோக்கியதையை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேலையிலும் தெரிந்து கொள்ளலாம். தனக்கு ஏற்பட்ட அந்தஸ்தைக் கொண்டு பெருமைப் படுத்திக் கர்வங் கொள்ளலாகாது. அந்தஸ்து உயர உயர, அன்பு பெருக வேண்டும். நிதானத்தையும் கௌரவத்தையும் அனுசரிக்க வேண்டும். ஒரு வேலையில் இருப்பவர் மேலாம் பதவியைப் பெற இஷ்டமுள்ளோர் எல்லோரையும் ஆதரித்து, சமயம் வாய்க்கும்போது உயர் பதவிக்கு நாடுவார்கள். மற்றும் சிலரோ வாயாடியாய் எல்லோர் மேலும் குற்றங் குறை கூறிக்கொண்டு மனிதர்களின் தராதரமறியாமல், எல்லாம் தனக்கொருவனுக்கே தெரியுமென்றும், கோபுரந்தாங்கும் பொம்மையைப்போல் தான் இல்லாவிட்டால் எஜமானன் வேலை நடவாதென்ற எண்ண

முள்ளவனாய் ஒரே உத்தியோகத்தில் அழுந்திக் கிடப்பான். நிர்வாகம் தொழிலுக்குத் தக்கபடி இருக்கும். தான் அடக்கியாள வேண்டிய வேலைக்காரர்களின் குற்றங்களை அனாவசியமாய் தலைவர்களிடம் சொல்லக்கூடாது. தானே சரிப்படுத்தி சமாதானமாகவோ கண்டிப்பாகவோ நடத்தி ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். (ஒரு வேளை சொல்லி விட்டால் என்னவாகும் என்றால், நிர்வாகத்திறமையில்லையென்று நினைக்க நேரிடும். அதன் முடிவை அந்த அந்தஸ்திலுள்ளவர்களே தெரிந்து கொள்ளலாம்) வேலைக்காரர்களின் குற்றங்களைக் கண்டுங் காணாதது போலிருக்கவேண்டும். ஏனென்றால் சிலர் தம் குற்றங்களை தாமே உணர்ந்து கொள்வார்கள். கெடுதல் செய்யவேண்டுமென்று யோசிக்கிற வேலைக்காரர்களின் குற்றங்களை அப்போதைக் கப்போது கண்டித்து சீர்திருத்தவேண்டும். வேரைவெட்டும் பூச்சிக்கு உற்பத்திஸ்தானம் இங்கேதான். அவரவருக்குப் போதுமான வேலையில்லாவிடில் ஆகாசக் கோட்டைக்கு அஸ்திவாரம் போடுவார்கள்.

சில வேலைக்காரன் எஜமானனைவிட கெட்டிக்காரன் என்ற எண்ணம் தடித்து நிற்கும். அந்த எஜமானனை வேலைக்காரனாகவும், வேலைக்காரனையும் எஜமானனாகவும் செய்யக் கடவுளுக்குப் போதுமான அவகாசமில்லை போலும்.

ஒரு காரியஸ்தர் எஜமானனைவிட நிர்வாகத்தில் திறமையுடையவராயிருக்கலாம். எஜமானன் சும்மா இருந்ததால்தான் அந்தத் திறமை கிடைத்ததாகையால் அதற்கு அவருடைய ஆசீர்வாதமும் பக்கபலமென்று நினைக்கவேண்டும். எஜமானனுக்கு ஒன்றுந் தெரியாது எல்லாம் தான் செய்வதாக நினைத்தால் கர்வம் என்ற கருமேகம் புத்தியை மழுங்கச் செய்துவிடும்; காரியஸ்தர் வேலைக்காரர் முதலானவர்களுக்கு, எஜமானனை அப்போதைக் கப்போது பலனளிக்கும் தெய்வமென்றே கருதவேண்டும். வேலையின் கூலி என்று சிலர் நினைக்கக்கூடும். வேலை அகப்பட்டும் கூலிகிடையாமல் திண்டாடுவோரை நினைத்துப் பாருங்கள். மாதக் கணக்காக சம்பளம் பெறாமல் அவதிப்படும் துர் அதிர்ஷ்டசாலிகளின் முகத்தைப் பாருங்கள். இப்பொழுது ஒருவரின் ஞாபகம் நினைவுக்கு வருகிறது. ஒரு எஜமானன் தன் குமாஸ்தாவுக்கு பதினைந்து ரூபாய் சம்பளத்தை பதினேழாகச் செய்ய பத்து (அப்ளிகேஷன்) மனு சமர்ப்பிக்க நேர்ந்தது. இதையும் ஒரு தடவையாவது மொத்தமாக குறித்தநாளில் வாங்கினதில்லை. ஒன்றிரண்டாகவே வாங்கித்தீர்வான். இதுவும் வேலையின் கூலிதானே! சிந்தித்துப் பாருங்கள்.

சில எஜமானர்களிடம் முன்கோபம் அதிகமிருக்கும். அவர்களிடம் விசேஷ நற்குணமும் இருக்கக் காணலாம். கோபமுள்ளவிடத்தில் (நல்ல)குணமுண்டு என்பது பழமொழி. சில காரியஸ்

## ஷேக்ஸ்பியரைப்பற்றிய
# ஒரு விநோத விருத்தாந்தம்.

இங்கிலாந்திலே கவிச் சக்கிரவர்த்தி என்று கீர்த்தி பெற்ற ஷேக்ஸ்பியர் என்னும் கவீஸ்வரர் தாம் உலகோபகாரார்த்தமாகச் சொற்சுவை பொருட்சுவைபட அளவிறந்த நீதிகளைப் புகட்டி இயற்றிய நாடகங்களுக்குள்ளே ஒன்றின் காப்புடைத் தலைவனாகிய அரச வேஷத்தைத் தாமே போட்டுக்கொண்டு அனேக பிரபுக்களுக்குமுன் நாடகத்தை நடத்தி வருகையில் இங்கிலாந்து தேசத்தை அக்காலத்து அரசுபுரிந்து வந்த எலிஸபெத் என்னும் மகாராணியார் ஷேக்ஸ்பியருடைய வரம்பிகந்த கல்வித் திறத்தைப் பலவாறாகக் கேள்வியுற்று அந்த நாடகத்தைக் கண்டு களிக்கும் பொருட்டுப் போயிருந்தனர். புறத்தே கொண்ட இராஜ கோலத்

---

தர்களுக்கு அதிகாரம் ஓரளவு பட்டிருக்கும். சில எஜமானர்கள் தங்கள் காரியத்தை காரியஸ்தர்கள் சொந்தமாகப் பாவித்து வருவதற்கு எற்றபடி அதிகாரம் வேண்டிய அளவுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இது மானேஜர் என்று சொல்லப்படுகிற அதிகாரியின் யோக்கியதையைப் பொருத்தது.

அதிகாரிக்கு முன் யோசனை யிருக்கவேண்டும். தனக்குட்பட்டு வேலை செய்கிறவர்களிடம், கடன் கைமாற்று வாங்கக்கூடாது. தனக்குக் கட்டுப்பட்டவர்களிடம் தான் கட்டுப்படக்கூடாது. அவர்களின் சிபார்சையும் ஆதரவையுந் தேடக்கூடாது. ஆனால் அவர்களுக்கு சிபார்சு செய்யலாம், ஆதரவாயிருக்கலாம். அதிகாரஸ்தானத்தில் நடைபெறவேண்டிய விஷயங்களை அனுபவ ரஸ்தாவில் தெரிந்து கொள்ளவேண்டும். எத்தகைய அதிகாரத்தையும் குறிப்பிட்டு விவரித்து எழுதுதல் கூடாதகாரியம். ஏனென்றால் அனுபவத்தில் கண்டுகொண்டதை பிற்காலத்தில் தந்திரமாக உபயோகித்து வருவது கால இயல்பு.

துக்கேற்றபடி ஷேக்ஸ்பியருக்கு மனதிலும் இராஜ கம்பீரத்வம் இருக்கிறதா இல்லையா என்னும் சந்தேகம் மகாராணியாருக்கு உண்டாயிற்று. அப்போது இராஜ வேஷங்கொண்ட ஷேக்ஸ்பியர் இராஜ கம்பீரத்தோடு, ஏவலாளி வேஷங்கொண்ட ஒருவனை அந் நாடகச் சரித்திர சம்பந்தமான சில குற்றேவல்களைச் செய்யும்படி கட்டளை யிட்டனுப்புகிற சந்தர்ப்பமாயிருந்தது. அச்சமயத்தில் மகாராணியார் தமது கரத்திலிருந்த கைக்குட்டை அகஸ்மாத்தாய் நழுவி விழும்படி விட்டார். அவ்விதம் நழுவி விழுந்த கைக்குட்டையை உடனே எடுத்து மகாராணியாரிடத்தில் கொடாவிடில் மகாராணியாரிடத்தில் காட்டவேண்டிய இராஜ விஸ்வாசத்தைக் குடிகளில் ஒருவராகிய ஷேக்ஸ்பியர் காட்டாது அவமதித்ததாக எண்ணப்படுவார், உடனே குனிந்து அக்குட்டையை எடுத்து மகாராணியாருக்கு இவர் கொடுப்பாராகில் அந்நாடகத்தில் அப்போது தாம் வகித்திருந்த இராஜ கெம்பீரத்துக்குத் தாழ்வு சம்பவிக்கும் ஆகவே அச்சமயத்து ஷேக்ஸ்பியர் இருதலைக் கொள்ளி எறும்பு போலாயினர். ஆயினும் அவரது அகன்ற கல்வித் திறமும் நிகரற்ற புத்தி கோசரமும் அப்போது அவருக்குக் கைகொடுத்தன. தான் கட்டளையிட்டுக் கொண்டிருந்த ஏவலாளியை நோக்கி,

எக்கட்டளையை யியற்று தன்முன்னென்
தங்கை கைக்குட்டையைத் தாமதியாதெடு.

என்று கை நீட்டுதலும் ஏவலாளி அக்குட்டையை எடுத்துத் தன் கரத்தில்கொடுக்க, அதைவாங்கி ஷேக்ஸ்பியர்மகராாணியரை நோக்கி தங்காய்! இதோ நின் கைக்குட்டை என்று சொல்லி இராஜ கம்பீரத்துடன் கொடுத்து விட்டனர். இதைக் கண்ட பிரபுக்களும் மகாராணியாரும், பேஷ், சபாஷ், என்று கரகோஷம் செய்து கவீஸ்ரவரை மெச்சிக் கொண்டாடினார்கள். ஷேக்ஸ்பியர் அத்தருணத்தில் தம் தங்கை யென்று மகாராணியாரிடத்து முறை பாராட்டியது யாவரும் அதிசயிக்கற்பாலது.

# இரதி சுந்தரி.

அல்லது

# பின்புத்திக்காரி.

(ஜூன் மாதம் கதாரத்னாகரம் 47-வது பக்கம் தொடர்ச்சி.)

அந்த அம்மாள் சிறிது சந்தோஷமடைந்தவர் போல் காண்பித்து யார் அம்மா என்னைத் தேடி வருவானேன்; என மெதுவாக மெல்லிய குரலில் வினவினாள்.

பிறகு இரதி சுந்தரி தன் வரலாற்றைச் சொல்ல சந்தோஷமடைந்தவளாய் குழந்தையையும் அவளையும் ஆசீர்வதித்து அனுப்பினாள். ஆனால் இரதி சுந்தரிக்கோ அவளை விட்டுப் பிரிய மனமில்லை. பிறகு அந்த ஸ்திரீயையும் அழைத்துக் கொண்டு தங்களிருப்பிடம் வந்து சேர்ந்தாள்.

மோகனதாஸும் இரதி சுந்தரியின் தமையனோடு வந்து சேர்ந்தான். தனது தமையனையும் அந்த அம்மாளையும் கண்ட சந்தோஷத்தினால் சில நாட்கள் வரை இரதி சுந்தரி கவலையற்றிருந்தாள்.

இரதி சுந்தரியின் தமையனாகிய நாராயணதாஸ் தன் தங்கை வனம் நாடிச் சென்றது கேட்டுப் பார்க்கவந்தான். வந்தவன் சில நாட்கள் வரை அவ்விடமிருந்து தனது தங்கையின் குணத்தை அறிந்து வேண்டிய சில நற்புத்திகளைப் புகட்டி தேறுதல் சொல்லிச் சென்றான். போகும் பொழுது தான் கல்கத்தாவுக்கு அடுத்த சித்பூர் ஜெமீனில் வேலை பார்ப்பதாகவும் தான் வேண்டிய முயற்சி செய்து மோகனதாஸையும் கல்கத்தாவுக்கு வரவழைத்துக் கொள்வதாயும் சொல்லிப் போயினர். அதனால் இரதி சுந்தரியும் சற்று நம்பிக்கை யடைந்து, தமையனது பதிலை எதிர்பார்த்தவளாயிருந்தாள்.

பல நாட்கள் சென்றன. ஒருவரையுங் காணோம். ஒருநாள் ஒரு வண்டி வந்து வாசற்படியண்டை நின்றது. மோகனதாஸ் குழந்தையை யெடுத்துக் கொண்டு யார் எனப்பார்க்க வெளியே வந்தான். பார்த்தவன் மருண்டு போனான். புதிய தோராள். சரேலென வீட்டுக்குள் நுழைந்தது. இரதி சுந்தரி என விளித்த சப்தத்துடன் உட்சென்றது.

மோகனதாஸும் சற்றுக் கலவரமடைந்தவனாய், உள்ளே வந்தான். வந்தவர் பெரிய மனிதராகத் தோற்றினமையால் ஓர் ஆசனத்தில் அமர்த்தினான். இருவரும் அமர்ந்தனர். இரதி சுந்தரியும்

குழந்தையைக் கையில் வாங்கி வைத்துக்கொண்டு, மோகனிடமே நின்றாள். அப்புதியவர் ஒரு பையிலிருந்து ஒரு வைரமோதிரத்தை யெடுத்து குழந்தையின் கையில் போட்டார். தான் நாராயண தாஸ் வேலை பார்க்கும் ஜெமீனின் முதன் சம்பிரிதி யென்று சொல்லிக்கொண்டு, சில விளையாட்டுச் சாமான்களை பூபேந்திரனிடம் கொடுத்தார்;

தனது தமையனால் இவர் இடம் தெரிந்து வந்தவரென்று அறிந்த இரதி சுந்தரியும் அவருக்கு வேண்டும் உபசரணைகள் செய்து வந்தாள்; வந்தவர் அகாரணமாய் அதிக நாள் தாமதித்துக்கொண்டு, இரதி சுந்தரியை தங்கை யென்றமுறை பேசிவந்தார்.

ஒரு நாள் வழக்கம் போல் மோகனதாஸ் வேலைக்குச் சென்றார். புதிய மனிதராகிய சந்திரவதனன் கூடாரத்தினுள்ளே யமர்ந்திருந்தார். அவர் மனம் போன போக்கெல்லாம் போய், பிறர் மனதையும் கவர எண்ணங்கொண்டார், இரதி சுந்தரியின் அழகே அவரை அதிக காலம் அவ்விடம் தாமதிக்க செய்தது. இன்ப சாகரத்தில் மூழ்கிவிட்டான் எப்போதும் அவளுடைய முக தரிசனமே ஆனந்தம் என அநுபவித்துக் கொண்டிருந்தார். ஆஹா! என்ன முகம் நிறைமதியினிடத்திலும் களங்கமிருக்க இம்மாதினிடத்தில் யாதொன்றையுங் காணேமே! நடுக்காட்டில் வசிக்கும் மான்களை இழிவுபடுத்த வந்தன போல் அவளது ஒளி பொருந்திய கண்கள் இருக்கின்றனவே, அவள் உடல் மெல்லியமாந்தளிரினும் மிருதுவாயிருக்கின்றது. ஆஹா! சப்த மேகங்களும் சேர்ந்து வந்தாலும் அவள் கரிய கூந்தலுக்கிணையாகா! அவள் சொற்கள் தேன் பொழிகின்றனவே. அவள் பாதங்கள் செம்பஞ்சு வைத்தது போலிருக்கின்றனவே! இப்படி எண்ணி எண்ணி மனமிடிந்துவரும் பொழுது அவள் கண்கள் இமைத்தால் அவை தன்னை யழைத்தனவோ என்ன பெருந்துயர் உருவான். தன்னை விரும்புவாளோ வென ஐயுறுவான் எப்படியும் இவளைப் பாராது போவதில்லை யெனத் தீர்மானிப்பான். இவளை யடைவதே தன் பிறப்பின் பலனென நினைப்பான் ஒருவேளை. அவள் மறுப்பளேல் முயற்சிகள் புரிந்தும் பயனடையாவிடில் பயனற்ற ஜன்மமாகும் என்று கலங்கினான். அடிக்கடி அவளுடன் பேசுவான். அவள் மறுமொழிக்கு இஞ்சி தின்ற குரங்குபோல் எதிர்பார்த்திருப்பான். என் செய்வான் காமி; காமத்தின் தன்மையிதென வறியான் போலும். படைப்பின் தன்மைபுணரான் போலும்.

ஒருநாள் மோகனதாஸ் தன் வழக்கம்போல் காரியத்தின் மேல் போயிருந்தான். அச்சமயம் சந்திரவதனன் இரதிசுந்தரியை யணுகி சற்று உரையாடலான். ரதி சுந்தரி நீயேன் இங்கிருந்து கவலையுறவேண்டும். இதுவோ நடுக்காடு. வழிபடக் கோயில்



கூட கிடையாது. மான் போல் மயங்கி நிற்கிறாயே! இதென்ன சிறைச்சாலையா? உன் இனத்தாரை விட்டுப் பிரிப்பதற்கு நீ எதில் தாழ்வு. கேவலம் இம் மனிதன் பணத்திற்கு உழைக்குமிடத்தில் அப்பணத்தைக் கண்டு ஆனந்திக்க வந்தவளா! பண்டையிலும் நீ பணமறியாயா! என்ன ஒன்றும் பேசாமலிருக்கிறாய்! என்றான்.

ஐயா! தாங்கள் சொல்வது நியாயமே. ஆனால் கற்புடைய பெண்டீர்க்கு கணவனே தெய்வம் ஆதலால் இதைவிட எனக்கு வேறு கோயிலும் வேண்டுமோ, பணம் என்ன பெரிதா! நிலையாயுள்ளதா! என்று விடை பகர்ந்தாள்.

சந்திரவதனனின் முகமோ சூரியனைக் கண்ட சந்திரனைப் போல் வெளுத்துப் போய்விட்டது. என்றாலும் பலவிதமாய்ப் பேசி அவள் மனதை தன் வசப்படுத்த வேண்டும் என்று உறுதி பண்ணிக்கொண்டான்.

“அம்மா, நீ சொல்வது நியாயமே. உன் கணவனைவிட்டு நீ பிரிந்திருக்க வேண்டுமென்று ஒருநாளும் நான் சொல்லமாட்டேன். அவரோ மகா சாமர்த்தியசாலி இவருக்குக் கல்கத்தாவில் கூடவா தக்க வேலை கிடைக்கவில்லை என்று நினைத்து சொன்னேன்.

“ஏதோ அவர்களுக்கு இந்த வேலையில் பிரியம் உண்டாய் விட்டது.

“என்ன இருந்தாலும் உங்களுடைய அந்தஸ்துக்கு இந்த வனவாசம் ஆச்சரியம் தான். நான் இவ்வழியாகப் போகிறதாய் அறிந்த உனது தமயன், உன்னையும் பார்த்து வரும்படி சொன்னார். மேலும் இங்கிருப்பதில் உனக்குக் கொஞ்சமும் சம்மதமில்லை யென்றும் சொன்னார்.

“எங்கள் அண்ணா சொன்னார்களா?

“இல்லையெனில் எனக்கு இங்கென்ன வேலை, தலைவிதி என்ன செய்கிறது, என்று இருக்கிறாய் என்பது எனக்குத்தெரியவில்லையா? கௌரவமாகப் பார்த்துப் போவதென்றால் வந்ததினமே புறப்பட்டுப் போயிருப்பேனே.

“எங்கள் அண்ணாவைத் தெரியும் என்று சொன்னீர்கள். எத்தனையோ பேர் தெரிந்தவர்களிருக்கலாம். அதில் தாங்களும் ஒருவராயிருக்கலாமென்றெண்ணினேன்.

“என் வேலையை யெல்லாம் விட்டு நான் எதற்காகத் தங்க வேண்டும். உங்கள் குடும்பத்தைப்பற்றிய சங்கதிக ளெல்லாம் தெரியும்.

“இதெல்லாம் நீங்கள் சொன்னால் தானே தெரியும்.

“என்னாலான உபகாரம் செய்யலாமென்று எண்ணினேன்.

“நீ வருவதாயிருந்தாலும் அழைத்துக் கொண்டு போகத் தயாராயிருக்கிறேன்.

இரதி சுந்தரி தனக்குள் அதிக நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள். சகோதரன் இருக்குமிடம் போகத் தீர்மானித்து குழந்தையை வேலைக்காரியைப் பார்த்துக் கொள்ளும் படி ஏற்பாடு செய்தாள். தனக்கு கானகத்தில் இருந்து வாழ்வதற்கு இஷ்டமில்லையென்றும், தன் சகோதரன் வீட்டுக்குப் போவதாயும் ஒரு கடிதம் கணவனுக்கு எழுதிவைத்து விட்டு வழிப்போக்கனோடு சென்றாள்.

## இரண்டாவது அத்தியாயம்.

கதிரவன் கொடுமையை ஒரு சிறிதும் கவனியாது கானகத்தில் மோகன தாஸனும் நெற்றி வியர்வை நிலத்தில் விழவும், தனக்கிட்ட வேலையை செவ்வனே நடத்தி, தன் எஜமானர்களைத்திருப்தி செய்வதென்ற ஒரே கருத்தை மனதிற் கொண்டு வேலை செய்துதன் கூடாரத்துக்குத் திரும்புங்கால்மனைவி எதிர் கொண்டழைப்பது வழக்கம். அன்று மனைவியைக் காணவில்லை. ஒரு பக்கத்தில் குழந்தைஅழுகிற சப்தம்கேட்டது. கூடாரத்துக்குள்ளே சென்று குழந்தையைப் பார்த்தான். மனைவி காணப்படவில்லை. ரதி, ரதி என்று இரு முறை கூவி அழைத்தான். ஆனால் வேலைக்காரி அடுத்த கூடாரத்திலிருந்து வந்து சேர்ந்தாள்.

இரதி சுந்தரி புதிய ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து தன் மேனி அழகை அடிக்கடி பார்த்துக் கொள்வது வழக்கம். தன் அழகு இவ்வுலகில் எந்தப் பெண்ணுக்குமில்லையென்ற இறுமாப்புக் கொண்டவள். கணவனிடத்திலாயினும் குழந்தையிடத்திலாயினும், அன்பு என்பதே கிடையாது. குடும்பத்தில் தனித்த ஒரு மனிதனுக்கு இப்பேர்ப்பட்ட மனைவி வாத்திருந்தால் அவன் அடையும் சுகம், திருப்திசமாதானம்யாது? மனைவியைத் திருப்திசெய்வதில் கண்ணுங் கருத்துமாயிருந்தும் ஒரு பயனுமில்லை. வேலைக்காரி, என்ன சொல்லுகிறது என்று தியங்கி நின்றாள். 'ரதி எங்கே போயிருக்கிறாள்' என்று மோகனதாஸ் கேட்டார். அம்மா தமயன் வீட்டுக்குப் போகிறதாய்ச் சொல்லி விட்டுப் போய் விட்டார்கள் என்றாள். இதைக் கேட்டதும் பெரு மூச்செறிந்து ஒரு நாற்காலியில் அப்படியே சாய்ந்தார். 'பொற்றாலியோடு எவையும் போம்' என்பதின் கருத்து மனைவி உயிருடன் இருந்தும் உதவா நிலைமையிலிருக்கும் போதும் பொருந்தும். மனைவி தன்னை விட்டு பிரிந்ததற்காக வருந்துவாரா, அலக்ஷியம் செய்து போனது பற்றி துக்கிப்பாரா? தாரமும் குருவும் தலை விதிப்படி என்பதை ஒவ்வொரு குடும்பத்தாரும் அன்றன்று அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாகும். மோகனதாஸ் நடுக்கடலில் திசையறியாமல் தியங்கும் கப்பலைப் போலானார். அன்று முதல் தனக்கு கஷ்டம் உண்டாயிருக்கிறதாய் நினைத்துக் கொண்டார். அப்பொழுதே வேலை வேண்டாமென்று இராஜினாமா செய்து விட்டு குழந்தையை அழைத்துக் கொண்டு கல்கத்தாவுக்குச் சென்றார்.

(தொடரும்)



# விநோத கதா மஞ்சரி

## கதை 1.

## மாயாச் சாரியார்.

ஜூன் மாதத்தில் ஒரு நாள் பகல் 11 மணி இருக்கும். சென்னை கிடங்குத் தெருவில் வெயில் தலை வெடித்துப் போகும்படி காய்ந்து கொண்டிருந்தது. கடைகளிலிருந்து சாமான்களை ஏற்றும் பார வண்டிகளும், அதிவேகமாய்ச் சென்று கொண்டிருக்கும் ரிக்ஷாக்களும் ஜட்காக்களும், பெரிய காட்டு எருமைகளைப் போல் முக்காரம் போட்டுக் கொண்டு எதிரில் இன்னது வருவதென்று கவனிக்காமல் மூர்க்கமாய் ஓடும் மோட்டார்களும் ஆகாயத்தில் வானம் இறைந்து கொண்டு செல்வது போல் சீறும் மோட்டார் சைகில்களும், வயஸ் சென்ற பெரிய மனிதனைப் போல் ஒய்யாரமாய் அசையும் மாட்டு வண்டிகளும் மனித ஸஞ்சாரத்தை வீம்புவைத்துத் தடுப்பது போல் நாற்சந்திகளில் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்தன.

சென்னையிலுள்ள தகுந்த மனிதர்கள் ஆண் பெண் யாவரும் நீலகிரிக்கும் கொடைக்கானலுக்கும் பெங்களூருக்கும் திருக்குற்றாலத்திற்கும் போய்விட்டார்கள். இதுவும் நியாயந்தானே. குளிர்ச்சியுள்ள தேசங்களில் தலை முறை தலை முறையாய்ப் பிறந்து வளர்ந்தவர்கள். இந்தப் பாழும் சென்னையின் கோடையை யார் ஸஹிக்கமுடியும். மேலும் அபாரமான வேலைகளைச் செய்தும் மூளை

களைத்துப்போயிருக்கையில், சற்று ஒய்வு காலம் இல்லாவிட்டால் உயிர் தரிக்குமா? தேசத்திற்கு இவர்களால் ஆக வேண்டிய கார்யம் நிறைவேறுவது எப்படி? குடி மூழ்கிப் போய்விடாதா? வெள்ளைக்காரர்கள் கெட்டார்கள். அவர்களுக்கென்ன வெறும் மிருகங்கள். நமது பிரபுக்களையும் சீமாட்டிகளையும் சொல்லு.

இப்படி சென்னையில், பஞ்சம் பிளேக் முதலிய கொடிய நோய் வந்த ஊர்களில் போல் பிரபுக்களெல்லாம் கண்ணில் படாதபடி மறைந்து விட்டனர்.

கைலாஸவாத்தியார் தெருவிலிருக்கும் கவர்ன்மெண்ட் கண்காக்ஷிச் சாலையில் ஸரஸ்வதீ மஹால் என்ற டிபார்ட்மெண்டில் வந்து கூடும் ஜனங்களை சற்று கவனிப்போம். அவர்களுக்குக் கோடையில்லை. மழையில்லை. இடியில்லை. மின்னலில்லை. ஒவ்வொரு தேசத்திலிருந்தும் வெகு விசித்திரமான ஜனங்களைப் பொறுக்கியெடுத்துச் சூதாட்டத்தில் பாய்ச்சிக்காய்களைக் குலுக்கி உருட்டிப் போடுவதுபோல் அந்தப் புத்தக சாலையில் குலுக்கி விட்டெறிந்தது போல் காணப்பட்டது. இந்து தேச சரித்திரத்தைப் பிராசீன தஸ்தாவேஜுகளின்படி எழுதுவதற்காக பழைய குப்பைகளை அவிழ்த்து உதறிப் பார்த்துக் கொண்டிருக்கும் சரித்திரப் பயிற்சியுள்ள பட்டதாரிகளும், பரங்கிக்காரர் இத்தேசத்தில் குடியேறிக் கம்பெனியை ஏற்படுத்தின காலம் முதலாய் ஜமீன்களிலும் பாளயங்களிலும் நடந்த பழைய வியவஹாரங்களையும் ஸர்க்காருக்கும் பாளயக்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் பட்டாக்களையும் சாஸனங்களையும் புரட்டிப் பார்த்துக் கொண்டு தங்களுடைய கக்ஷிக்காரனுக்கு அனுகூலமான ஆதாரம் ஏதாவது கிடைக்குமாவென்று கண்ணில் எண்ணெயைக் குத்திக் கொண்டு பரிசோதிக்கும் வக்கீல் குமாஸ்தாக்களும், வாரப்பத்திரிகை மாதாந்தப் பத்திரிகை கதா குஸுமமஞ்சரீ கதாரத்னாகரம் கதைக் களஞ்சியம் முதலியவைகளுக்கு வியாஸங்களும் சிறு கதைகளும் எழுதுவதற்காக ஸாமக்ரீகளைச் சேர்க்க வந்த நிருபர்களும், க்ஷேத்ரய்ய பதங்கள் தேவாரப் பதிகங்கள் சித்தர் பாடல்கள் முதலியவைகளின் ஏட்டுப் பிரதிகளைத் தேடி



எடுத்துச் சுத்தமான பாடங்களைப் பலிப்பிப்பதற்காக அங்கே வந்து கூடும் பண்டிதர்களும், வித்வான்களும், புலவர்களும், பிறருடைய உபத்திரவமில்லாமல் இளைப்பாறுவதற்காக ஏதாவது ஒரு புஸ்தகத்தைப்பற்றுக் கோலாய் வைத்துக்கொண்டு ஓர் மூலையில் வெயில் தணியும் வரையில் தூங்கும் ஸுக வாஸிகளும், எப்பொழுதும் ஏதோ ஒரு புஸ்தகத்தைத் தேடிக் கொண்டேயிருந்து, யாரோ அதை அப்பொழுது தான் எடுத்திருக்கிறார்களென்று சொல்லும் புஸ்தகசாலை குமாஸ்தாவிடம் தகரார் செய்து கொண்டிருப்பவர்களும் வரிசை வரிசையாய் பெரிய பெரிய புஸ்தகங்களை எடுத்து; நான்கு புறத்திலும் மலை மலையாய்க் குவித்துக் கொண்டு, அவைகளுக்கு நடுவில் தவம் செய்பவனைப் போல் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொன்றையும் பிரித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் பண்டிதப் பிடிகளும் அங்கே வழக்கப்படி முறை தவறாமல் பராக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

வெயிலினது கொடுமையால் மேற் சொன்னவர்களில் பெரும்பாலும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள். படிக்கும்பொழுது அவர்கள் செய்யும் முக்கல்களும் உறுமல்களும் ராகமிழுப்பதும் இன்னும் பல வித விகாரமான சப்தங்களும் காதில் விழவில்லை. ஆனால் அதற்குப் பதிலாய் பல ஸ்வரத்திலும் பல ஸ்தாயிகளிலும் பல காலப் பிரமாணத்திற்கு ஒத்தும் பல ஸ்வரவின்யாஸங்களுள்ளதுமான குறட்டை தினுசுகள் ஓயாமல் இங்கிலீஷ் பாண்ட் வாசிப்பது போல் கேட்கப்பட்டது.

அன்று நமது மாயாச்சாரியார் அந்த ஸரஸ்வதி மஹாலுக்கு ஏதோ ஒரு காரியமாய்ப் போகும்படி நேர்ந்தது. அவர் எங்குங் கண்ட திருமேனியாகையால் அவருக்குத் தெரியாதவர்களில்லை. அவரை அறியாதவர்களுமில்லை. ஆகையால் படிக்கும் ஹாலில் ஒரு ஆசனங்கூடக் காலியில்லாமல் நிறைந்திருந்தாலும் ஆசாரியர் பிரவேசித்த ஐந்து நிமிஷத்திற்குள் நல்லகாற்றும் வெளிச்சமும் அமைந்த இடத்தில் ஓர் ஸுகமானநாற்காலியில் அவர் வீற்றிருப்பதையும் அவருக்கருகில் நாலைந்து குமாஸ்தாக்களும் அங்குள்ள ஸேவகர்களும் நீ நானென்று போட்டி போட்டுக் கொண்டு அவருக்குப்

பாக்கு வெற்றிலை கொண்டு வந்து வைப்பவனும் சோடா லெமினெட் கலர் முதலியவைகளைப் பட் பட்டென்று வெட்டிப்பவனும், சிரம பரிஹாரத்திற்காக விசிருகிறவனும் புஸ்தக ஜாப்தாக்களைக்கொண்டு காட்டுகிறவனுமாய் பலாப்பழத்தை ஈக்கள் மொய்த்துக் கொண்டிருப்பதுபோல் சூழ்ந்து கொண்டார்கள். லக்ஷாதிபதிக்கும் கவர்னருக்கும் அங்கே அவ்வளவு செல்லாது. அவரிடத்தில் என்ன மயக்கமோ. அவர் கையில் என்ன மாயப் பொடி வைத்துக்கொண்டிருக்கிறாரோ! இவ்வளவிற்கும் ஏராளமாய் அவர்களுக்கு ஒன்றும் வாரி கொடுப்பதையும்காணோம். நுட்பமாய்க் கவனித்தால் அவர் ஒவ்வொருவரிடத்திலும் வெகு பிரியமாயும் குளுமையாயும் பேசுவதும் அவரவர்களின் யோக க்ஷேமங்களை நுட்பமாய் விசாரிப்பதும் அவரவர்களுக்கு அவச்யமாயும் பிரியமாயுமிருக்கும் விஷயங்களைத் தெரிந்து சொல்வதுமே காரணமென்றெண்ணுகிறோம்.

ஸகல சௌகர்யங்களையும் செய்யப் பெற்று, அவர் தாம்பூலந் தரித்து, கலரைப்பருகி, ஏதோ ஒரு புஸ்தகத்தை குறிப்பிட்டு கொண்டு வரச் சொல்லி, தன் அடியார்களுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு வெகு ஊக்கமாய் அந்த நூலைப் படித்துக்கொண்டிருந்தார். அது ஞான வெட்டியான். ஆசாரியருக்கு வைத்யத்திலும் வாதத்திலும் கற்பங்களிலும் பிரமையுண்டு.

அவருக்கு ஸமீபத்தில் ஓர் பெஞ்சி போடப்பட்டிருந்தது. அதை யொட்டி ஓர் எழுதுவதற்குத் தகுந்த மேஜையும் பேனா மசிக்கூடு ஒத்துக் காயிதம் விசித்திரமாய் வேலை செய்யப்பட்ட இரும்புக் குண்டுகள் பளிங்குத் துண்டுகள் ஊசி கத்திரிக்கோல் பேனாக் கத்தி முதலிய முஸ்தீப்புகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. அதின் கோடியில் யாரோ ஒருவன் உட்கார்ந்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனை உற்றுப் பார்க்கையில் அவன் மேட்டு வளையை நோக்கி, வெறித்துப் பார்த்துக் கொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்ததாய் ஆசார்யருக்குப்பட்டது. பழைய சட்டையும் பனிக் குல்லாவும் மாட்டுக் கொம்பில் கட்டப்பட்ட வெள்ளெழுத்து மூக்குக் கண்ணாடியும் அதின் காயிதக்கூடும் மாதக் கணக்காய் க்ஷவரகனைக் காணாத தாடியும் மீசையும் பக்கத்



தில் திறந்து வைத்திருக்கும் ஓலைப் பாக்குப் பெட்டியும் அந்தப்பேர்வழி பட்டணத்தானல்ல, ஏதோநாட்டுப்புறமென்றுபறையடித்தன. மேஜையிலும் பெஞ்சியிலும் பல கடிதங்கள் அரை முக்கால் கால் எழுதிக் கிறுக்கப்பட்டு இறைந்து கிடந்தன. ஏதோ ஓர் முக்கியமான கடிதத்தை எழுத ஆரம்பித்து அதை சரியாய் முடிக்கத் தெரியாமல் பல தடவை எழுதி எழுதிக் கிழித்தெறிந்து கொண்டேயிருந்ததாய்த் தோன்றிற்று. அவனைச் சுற்றிலும் கன்றுக்குட்டிகளைப் போன்ற புஸ்தகங்கள் சிதறிக்கிடந்தன. வம்சாவளிகளும் நிகண்டுகளும் சிறப்புப் பெயர் அகராதிகளும் பிரபுக்களின் சரித்திரச் சுருக்கங்களும் பெரிய குடும்பங்களின் சரித்திரங்களும் மாதாந்திரப் பத்திரிகைகளின் பழையபிரதிகளும் ஒன்றை யொன்று முட்டித் தள்ளிக்கொண்டிருந்தன. இவை போதாமல் சமாசாரப் பத்திரிகைகளிலிருந்து ஒரே விஷய ஸம்பந்தமான நிருபங்களைக் கத்தரித்தெடுத்து அழுத்தமான கடிதத்தில் ஒட்டிவைத்து அவை மடங்கி கிழிந்த இடங்களில் ஒட்டுப்போட்டிருந்த கைப் புத்தகங்களும் மேஜையில் பரப்பப்பட்டிருந்தன.

சுமார் அரைமணி வரையில் மாயாச்சாரியர் அந்த ஆசாமியை கவனித்துக் கொண்டிருந்தார். அவன் தியானத்திலிருந்து விழித்துக்கொண்டு ஏதோ மேட்டு வளையிலிருந்து தன திஷ்டதேவதை கிருபை செய்து தான் விரும்பின விஷயத்தை உபதேசித்ததுபோல் அசட்டுச் சிறிப்புடன் ஒவ்வொரு வார்த்தையாய் யோசித்து எழுதி கடிதத்தை முடித்து, அதற்கு மறுபடியும் ஓர் நகல் செய்து அதைக் கவரில் மடித்துவைத்து விலாசத்தை வெகு ஜாக்கிரதையாய் எழுதி கையிலெடுத்துக் கொண்டு எழுந்தான். மேஜையில் அடுக்கியிருந்த பெரிய புத்தகங்களில் ஒன்றை அகஸ்மாத்தாய் முழங்கையால் தட்டிவிட்டான். அது பூமியில் விழுந்து, அருகில் ஸுகமாய்த் தூங்கிக் கொண்டிருப்பவர்களைத் திடுக்கிடச் செய்தது அதைக் குனிந்து, எடுத்துக் கொண்டிருக்கையில் ஆசார்யர் மின்னலைப் போல் திரும்பிப் பார்த்து, அந்த மேல் விலாஸத்தைப் படித்துக் கொண்டார். மஹாகனம் பொருந்திய யதிராஜுலு செட்டியார் அவர்கள் 47 முனியப்பநாயக்கன் தெரு வென்று எழுதியிருந்தது.

அந்த அசாமி புத்தகங்களை இரண்டு மூன்றாய் எடுத்து, பெரிய குமாஸ்தாவிடத்தில் சேர்ப்பித்து, தாம் கொடுத்திருந்த ரசீதுகளை வாங்கிக்கொண்டு மறுபடியும் அந்த மேஜையிடத்தில் வந்தான். அதற்குள் மாயாச்சாரியர் வெகு ஸாமர்த்தியமாய் அவனுடைய ஒத்துக் கடிதத்தை எடுத்துத் தன் மேஜையில் வைத்துக்கொண்டு தன்னிடத்திலிருந்த ஒத்துக் கடிதத்தை அவனுடைய மேஜையில் மாற்றி வைத்து விட்டார். அவருடைய முன் யோசனையும் யுக்தியும் சுக்ராசார்யருக்கும் சாணக்யனுக்கும் வராது. அந்தப் பேர்வழி அவர் நினைத்தது போல் ஒத்துக் கடிதத்தைக் கவனித்துப் பார்த்து, மேல் ஏட்டைக் கிழித்துத் தூளாக்கிக் கையில் சுருட்டிக் கொண்டு போய் விட்டான். ஒத்து கடிதப் புஸ்தகம் மாற்றப்பட்டிருக்குமென்று, அவன் கனவிலும் நினைக்க நியாயமுண்டா?

ஆசார்யர் உடனே மேஜையின் கீழ் கிழித்துப் போடப்பட்டிருந்த ரசீதுத் துண்டுகளைத் தேடி எடுத்து சிரமப்பட்டு சேர்த்து வைத்துப் பார்க்கும் பொழுது அதில் ஸபாபதி நாயகரென்று கையொப்பம் செய்யப் பட்டிருந்ததைக் கண்டார். தமிழ்எழுதி யிருந்த விதத்தைக் கவனித்து, அவருக்கு இந்தப் பாஷையில், அதிக பரிச்சயமில்லையென்றும்அதை விட தெலுங்கு நன்றாய்த்தெரியுமென்றும் ஊஹித்தார். தமிழில் ஒருகடிதத்தை எழுதுவதற்கு இவ்வளவு நேரமானதும் இவ்வளவு கஷ்டப்பட்டதும் நியாயமேயென்று முடிவு செய்தார். இந்தக்கடிதம் வெகு முக்கியமானதாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதுஎழுதும் பொழுதுஉபயோகித்த ஒத்துக் காகிதங் கூட பிறர் கையில் விழக்கூடாதென்று அவ்வளவு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றுவதற்கு வேறு காரணமென்ன? அசாமியைப் பார்த்தாலோ யாசகக்கடிதம் எழுதும் தினுசாகத் தோன்றவில்லை. இதை நன்றாய் விசாரிப்பதில் பயனுண்டென்று நமது ஆசார்யர் முடிவு செய்து ஸமயோசிதமாய் தான் ஒத்துக்கடிதங்களை மாற்றினதைப் பற்றி ஸந்தோஷித்து, அங்கே நின்று குமாஸ்தாவிற்கு ஓர் ஜாடை செய்து விட்டு தான் நாயகரைப்பின் தொடர்ந்தார். அங்குவாசலிலிருந்தசேவகனிடத்திலிருந்து தன்கைக்கழியை வாங்கிக்கொள்ள



சற்று நேரமாயிற்று. அதற்குள் நாயகர் மறைந்தார். ஆசார்யர் விடேன் தொடேனென்று பின் தொடர்ந்து கூட்டத்தைச்சாதுர்யமாய் விலக்கிக்கொண்டு, தெருக்கோடியில்போய் கூப்பிடு தூரத்தில் தன் ஆசாமியைக்கண்டு பிடித்து ஒரு மணிநேரம் வரையில் அவன் கண்பார்வையிலிருந்து விடாமல் அவன் போகும் சந்து பொந்துகளில் தானும் பிடிவாதமாய் விழுந்து, முடிவில் அவன் கேதாரக்குப்புநாயக்கன் வீதியில் ஏதோ ஒரு வீட்டில் திடீரென்று மறைவதைக் கண்டார். ஆசார்யர் கண்ணும் கருத்துமாயிருந்தால் அதற்கருகிலிருந்த ஓர் தெருலாந்தரை அடையாளம் வைத்துக்கொண்டு சற்றுநேரம் தங்கி அவ்வழியேசென்று கடைக்கண்ணால் பார்த்தார். அந்தப்பேர்வழி அந்த வீட்டில் ஒரு அறையின் கதவைத்திறந்து உள்ளே போவதைக்கண்டார். வீட்டிற்கு வெளியில் ஒரு பித்தளைத்தகட்டில் ரஹஸ்ய விசாரணை ஆபீஸ் சென்னையின் கிளை யென்று வரையப்பட்டிருந்தது. ஆசார்யர் அதைக்கவனித்துக்கொண்டு அந்தத்தெருக்கோடி வரையிலும் போய் அடுத்த சந்தில் மறைந்து, சில நிமிஷங்களுக்குப்பிறகு திரும்பி வந்து, அந்த வீட்டிற்கு எதிர் வாடைக்கு ஸமீபமாய்த் திரும்பிவந்தார். அதற்குள் அந்த விசாரணை ஆபீசிலிருந்து யாரோ ஒருவன் அவஸரமாய் வெளியில் வந்து சமுத்திரக்கரையை நோக்கி, அதிவேகமாய்ப்போவதைக்கண்டார். ஒரு நிமிஷங்கூடத்தயங்காமல் ஆசார்யர் இரண்டு கோல் தூரத்தில் வேறுகார்யமாய்ப் போகிறவரைப்போல் நாயகரைப்பின் தொடர்ந்தார். ஆனால் புத்தகசாலையில் கண்ட்பேர்வழி இவர் தானென்று எளிதில் சொல்லமுடியாது. சட்டைதலைப்பாகை அரைவேஷ்டி பாதரக்ஷை முதலியயாவும் மாறிவிட்டன. கன்னத்தில் அடர்ந்த கிருதாவும் குஸ்தியும் தலையில் பித்துப் பாகையும் கையில் வெள்ளிக் கொண்டையிட்ட மலாக்காப் பிரம்பும் காலில் ஆப் பூட்ஸும் நெக்டை காலரும், மணிக்கட்டு கெடியாரமும் நெற்றியில் அடர்ந்த விபூதியும் குங்குமப்பொட்டும் ஆசாமியை அடையாளமே தெரியாமல் செய்துவிட்டன. ஆனால் நமது ஆசார்யரை ஏமாற்றுவதற்கு திரிமூர்த்திகள் ஒன்று சேர்ந்தாலும் முடியுமோ! மாயாவிகளுக்குப் பரமசாரியர். சம்பரன் நமுசி காலநேமி மாரீசன் வாதாபி விப்பிரசித்தி

கால நாபன் முதலிய அஸுர சிரேஷ்டர்களும் இந்திரஜித்தும் இவனுடைய பெயரைச் சொல்லி நமஸ்கரித்துத், தங்களுடைய தொழிலை ஆரம்பிப்பது வழக்கம்.

நாயகர் திடீரென்று ஒரு ஜட்காவண்டி தங்குமிடத்தில் வரிசையாய் நின்று கொண்டிருந்த வாஹனங்களை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே டிராம் வண்டிவர நாயகர் ஸந்தோஷத்துடன் அதின் முதலாவது கட்டத்தில் ஏறிக்கொண்டார். அதுவரையில் ஆசார்யர் அங்கிருந்த ஓர் புஸ்தகக்கடையிலுள்ள சாமான்கள் விலையை வெகு ஊக்கத்துடன் விசாரித்துக் கொண்டிருந்தார். அங்கேவைக்கப்பட்டிருந்த நிலைக்கண்ணாடியில் நாயகருடைய நடவடிக்கைகள் யாவும் நன்றாய்ப்பிரதிபலித்ததே ஆசார்யரின் புஸ்தக வியாபாரத்திற்குக்காரணம். ஓரேபாய்ச்சலாய் டிராம் வண்டியின் பின்தட்டில் தாவி உட்கார்ந்தார். அங்கிருந்து நாயகரை நடுவிலிருந்த கண்ணாடி வழியாய் நன்றாய் கவனிக்கலாம். சற்றுதூரம் போன பிறகு நாயகர் இறங்கி, காடா முத்தியாலுத்தெருவில் நுழைந்ததைக்கண்டார். வெகுவேகமாய் நடந்துபோய்க்கொண்டிருக்கும் அந்த ஆசாமியை ஆசார்யர் குறிதவறாமல் அதற்கு எதிர்த்த வாடையின் வழியாய்ப் பின் தொடர்ந்து 65 நம்பர் வீட்டுவாசலில் நின்ற ஒரு சேவகருடன் எதையோபேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தார். நாயகர் ஒரு காயிதத்தை அவனிடத்தில் கொடுத்து அதனுடன் வெகு சாதுர்யமாய் எதையோகையில் வைத்து அமுக்கினதையும் கவனித்தார். பிறகு அந்த நாயகர் மறுபடியும் வந்தவழியாய்த்தெருக்கோடிவரையில் சென்று, ஆதியப்பநாயகன் தெருவிற்குப்போகும் சந்தில் நுழைந்ததைக்கண்டார்.

இனி தனக்கு அங்கே வேலையில்லையென்று நிச்சயித்து, ஆசார்யர் தன் ஜாகைக்கு வந்து, தான் வெகு ஜாக்கிரதையாய் மடித்துச்சட்டைப்பையில் வைத்துக்கொண்டிருந்த ஒத்துக் கடிதத்தை எடுத்துப்பார்த்தார். நாயக்கர் ஜே பேனாவால் எழுதியிருந்தார். அதில் சௌகரியமு முண்டு. அசௌகரியமுமுண்டு. அக்ஷரங்கள் தனித்தனியாயும் தெளிவாயும் எழுதப்பட்டிருந்தாலும், பேனாபட்



டையாயிருந்ததால், ஒன்று மற்றொன்றுடன் கலந்து ஜன்னல் ஜன்னலாய் மசிஊறியிருந்தது. ஆசார்யர் சற்று நேரம்கழித்து, ஒத்துக்கடிதத்திலிருக்கும் எழுத்திற்கும் ரசீதிலிருக்கும் பெயருக்கும் கிழித்தெறிந்த ரசீதிலுள்ள பெயருக்கும் ஒத்துப் பார்த்தார். பூதக் கண்ணாடி வைத்தும் பரீக்ஷித்தார். இரண்டுக்கும் அதிக வேற்றுமையில்லை. தன் உண்மையான பெயரையே கடிதத்தில் எழுதியிருப்பதாய்த் தெரிந்தது. பெயரை மாற்றியிருந்தால் இன்னும் வம்பல்லவா? பிறகு அதில் குறுக்கும் நெடுக்கும் கோணலும் ஓரமும் ஜன்னல் பின்னலாய் தெளித்திருந்த அக்ஷரங்களை ஏதாவது முழு வார்த்தைகளாய்ச் சேர்த்துக் கண்டு பிடிக்கப்பார்த்தபொழுது ஆசார்யருக்குப் பிராணன் போய் பிராணன் வந்தது. முதலில் பார்க்கும் பொழுது, அஸாத்யமென்று தோன்றும் இடைஞ்சல்களால் அதைர்யமடைந்து பின்வாங்குகிறவர் அவரல்ல. மென்மேலும் தைர்யத்தையும் பிடிவாதத்தையும் விருத்தி செய்வதற்கே அந்த இடையூறுகள் கருவியாய் உபயோகப்பட்டன. மறுபடியும் அந்த ஒத்துக் கடிதத்தில் நாயக்ருடைய எழுத்துக்களென்ன அதற்கு முன் அதை உபயோகித்தவர்கள் எழுதின அக்ஷரங்களென்னவென்று முதலில் பிரித்துப் பார்த்துக் கொண்டார். ஸந்தேகம் வந்த இடங்களில் ரசீதிலுள்ள கையெழுத்தை உதவியாய் வைத்துக் கொண்டு வெகு நேரம் அவைகளிலிருந்து ஏதேனும் உருப்படியான சமாசாரத்தைக் கண்டு பிடிக்க முயன்றார். நல்லகாலத்தால் அந்த ஒத்துக்காயிதம் அதிகமாய் அடிபடவில்லை. முடிவில் நகலாய் எழுதின கடிதத்தை ஒத்தியிருந்த பாகத்தில் வேறு எழுத்துக்கள் அதிகமாய்க் கலக்கவில்லை. அதற்கு முன் செய்யப்பட்ட நகல்களை ஒத்தியிருந்த கடிதத்தைக் கிழித்து, நாயகர் பத்திரப்படுத்தி விட்டாரென்று தோன்றிற்று. பூதக் கண்ணாடியை வைத்துப் பார்த்துப் பார்த்து, ஆசார்யருக்குக் கண் பொட்டையாய் விட்டது. தலைவலி ஆயிரம் கோடாலிகளைப் போட்டுப் பிளப்பது போலிருந்தது. ஆனாலும் ஓரே பிடிவாதமாய் உட்கார்ந்து, வேலை செய்து அடியிற் கண்ட விடுதியான வார்த்தைகளைப் பிரித்தெடுத்தார்;—92 ——வரசு —கண்டு—வசத்தில் — அண்ணன் — வியாபாரம்—தயவு—பிரஸ்தாபம்— ஒளிக்கப்பட்டது — கிடைத்தது—

32——2.

சரித்திரம்—, கை தூக்கி, உபயோகம்— ஆயிரம்— வேண்டும்— குடும்பம்— நோட்டுகள்—யாதொன்றும்— சபாபதி நாயக்கர்.—

இதைத் தவிர வார்த்தைகளின் துண்டுகளும் தனி எழுத்துக்களும் காணப்பட்டன. இவைகளை வேறொரு காயிதத்தில் எழுதி வைத்துக் கொண்டு பிறகு அவை அந்த ஒத்துக்காயிதத்தில் எங்கெந்த விடத்தில் இருக்க முடியுமென்று உத்தேசமாய் அளவு பார்த்து, முடிவில் அவைகளை ஒழுங்கு படுத்தினர்.

அந்த மயக்கம் சற்றுத் தெளிந்து புத்தி ஸ்வாதீனப்படுவதற்கும் கண்ணின் விறுவிறுப்பு குறைவதற்கும் வெற்றிலைப் பெட்டியைத் திறந்து, அதி சொகுஸாய்த் தயார் செய்திருக்கும் பாக்குத் தூளையும் அசல் ஐயம்பேட்டை வெற்றிலையையும் ரஸாயன முறையாய்க் கலந்து உபயோகித்தார். அப்பொழுது தபாற் சேகவன் நாரதரென்ற தினசரிப்பத்திரிகையைக் கொண்டு வந்து கொடுத்தான். ஆசார்யர் அதிலுள்ள நிருபங்களின் தலைப்பெயர்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆயினும் அவருடைய ஞாபகமெல்லாம் தலை காலில்லாமல் சிதறிக் கிடக்கும் அந்தக் கடிதத்திலேயே இருந்தது. மை இருட்டான ஓர் அறையில் ஸூர்யகிரணம் பளீரென்றடித்தால் அதிலுள்ள பதார்த்தங்களும் கதவுகளும் ஜன்னல்களும் இருக்குமிடம் தெளிவாய்த் தெரிவதுபோல் அந்தப் பத்திரிகையை அலக்ஷியமாய் கண்ணோட்டமிட்டுக் கொண்டிருந்த ஆசார்யர் எதையாவது நிறுத்தி வாசிப்போமென்று நினைத்து ஓர் சமாசாரக் குறிப்பைப் படித்தார்.

சில வாரங்களுக்கு முந்தி நடந்த ஓர் ஸம்பவத்தைப் பார்த்தால் நமது தேசத்திலுள்ள பரம்பரை பிரபுக்களுக்கும் ரங்கூன் கொழும்பு பினாங்கு மோர்சு ஸைகோன் ஹோங்காங் நேடால் ஜமீகா முதலிய விடங்களில் ஏராளமான தோட்டங்களும் பெரிய வியாபாரங்களும் எவரால் நடத்தப்படுகின்றனவோ அந்த லக்ஷாதிபதிகளுக்கும் கோடீஸ்வரர்களுக்கும் குபேரர்களுக்கும் விவாஹ ஸம்பந்தங்கள் வரவர அதிகரிக்கின்றன வென்று தோன்றுகின்றது. ஒரு புறத்தில் உயர்ந்தகுலமும் காலங்கண்ட பிரபு பரம்பரையும் நாகரீகமு முண்டு. ஆதிகாலத்தி லிருந்த ஐஸ்வர்யப் பெருக்கு வற்றிப்போயிற்று; மற்றொரு புறத்திலோ மட்டிற் கடங்காத ஐஸ்வர்யம் குவிந்துகொண்டே வருகிறது. பிறப்பு, படிப்பு, நாகரீகம், பிரபுத்வம் முதலிய மேன்மைகளில்லை. இவ்விரு வகுப்பினரும் தங்களுக்கு வேண்டியதைப் பிறரிடத்திலிருந்து ஸம்பாதித்துக்கொண்டு, பிறரிடத்திலில்லாததைத் தாங்கள் கொடுத்து, ஒன்றோடொன்று கலந்து ஸம்பூர்ண யோக்யதையுடன் விளங்குவது நமது தேசத்திற்கு அதிகப் பெருமையைக் கொடுக்கிறது. இதுவரையில் பராபரியாய்க் கேள்விப்பட்டிருந்த ஒரு ஸந்தோஷ சமாசாரம் இப்பொழுது உறுதியாயிற்று. நமது நகருக்கு ஓர் திலகம் போல் விளங்கும் யதிராஜலு செட்டியார் அவர்கள் சிங்கப்பூர் செட்டியாரென்று ஜகத் பிரஸித்தமான வேணுகோபால செட்டியாரின் ஒரே புத்திரியான ஆண்டாளம்மாளை அதிசீக்கிரத்தில் விவாஹஞ் செய்வாராம். சென்ற நவராத்திரி உத்ஸவம் நடந்தபொழுது பூந்தமல்லி ரோட் ஜெகன்மோஹன விலாஸில் செட்டியார் அவர்கள் நடத்தின உத்ஸவங்களுக்கு அழைக்கப் பெற்றவர்கள், அந்த அம்மாளின் அதிரூப லாவண்யத்தையும் கல்வித் திறமையையும் பாட்டிலும் வாத்யங்களிலும் இந்திர ஸபையிலுள்ளவர்களையும் பழிக்கும் பயிற்சியையும் மனதைக் கவரும் ஸ்வபாவத்தையும் ஒரு நாளும் மறக்கமுடியாது.



அந்தப் பத்திரிகையை வீசி எறிந்துவிட்டு, ஆசார்யர் தான் வெகு சிரமப்பட்டுக் குறித்த கடிதத்தை மறுபடியும் உற்றுப் பார்த்தார். உடனே அவருக்கு அடங்காத ஆச்சர்யமும் ஸந்தோஷமும் உண்டாயிற்று. அதோபார், அதுவரையில் இன்னதென்று தலைகால் தெரியாமல் ஏமாற்றிக் கொண்டிருந்த சிங்க என்ற எழுத்துகள் ஒரு முழுவார்த்தையா, அல்லது ஓர் பாகமாவென்று அவர் தத்தளித்துக் கொண்டிருந்தார். இப்பொழுதல்லவா வெட்ட வெளிச்சமாயிற்று. சிங்கப்பூரென்று தெரிந்தது. உடனே அபாரமான தைர்யமுண்டாய் மறுபடியும் சமாசாரப் பத்திரிகையைப் பிரித்துப் படித்தார்.

“பல வருஷங்களாய் பட்டணம் செட்டியாருடைய சொத்துக்கள் அவ்வளவு நல்ல ஸ்திதியிலில்லை. வெள்ளத்தாலும் காய்ச்சலா

லும் முன்னோர்களின் ஊதாரித்தனத்தாலும் கார்யஸ்தர்களின் அயோக்கியத்தனத்தாலும் குடியானவர்களின் வஞ்சனையாலும் குத்தகைக்காரர்களின்பிடிவாதத்தாலும் ஏராளமான தோப்புகளும்துரவுகளும் புஞ்சைகளும் நஞ்சைகளும் கிராமங்களும் சீரழிந்து, அந்தக் குடும்பத்தின் புராதன அரண்மனை பழுது பார்ப்போரில்லாமல் இடிந்து விழுந்து, வஸிப்பதற்குத் தகாத நிலைமையிலிருந்தது. இப்பொழுதிருக்கும் செட்டியார் தனக்கு அந்தச் சொத்து கிடைக்குமென்று எண்ணவேயில்லை. அவருக்குமேல் இரண்டு ஸகோதரர்கள் இருந்தார்கள். ஆனால் நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறதல்லவா? இவருடைய பெரிய தமயன் ஒரு நாள்வேட்டையாடிக் கொண்டிருக்கும்பொழுது அகஸ்மாத்தாய்த் துப்பாக்கியால்காயம் பட்டிறந்தார். அவருக்கடுத்தவர் நல்ல படிப்பும் லோகஞானமும் உள்ளவர். அநேக சங்கங்களிலேயும் போர்டுகளிலும் கௌன்ஸில்களிலும் மெம்பர்; சட்ட சபையில் அங்கத்தினராய் வருவதற்கு பலமான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தார். ஆனால் ஏதோ தெய்வச் செயலாய் டாக்டர் அனுப்பியிருந்த மருந்துகளில் சரியான திராவகத்திற்குப் பதிலாய் பூச்சிகளைக் கொல்வதற்காக வைக்கப்பட்டிருந்த விஷம் கலந்த மருந்தைக் குடித்து இறந்தார். அவர்களுக்குப் பிதாவான பெரிய செட்டியார் ஒருநாள் தன் அரண்மனைக்கு ராத்திரி பத்து மணிக்குப்பிறகு வேறொரு கிராமத்திலிருந்து வரும் பொழுது வழிதப்பி, ஏதோ ஒரு பாழும் கிணற்றில் விழுந்திறந்தார். இப்படி ஆச்சர்யமான ஸம்பவங்களால் குடும்பத்தின் தலைவனாய் வந்திருக்கும் யதிராஜலு செட்டியார் அவர்கள் சென்னையில் ஸ்திரமாய் வஸிக்க நிச்சயித்திருக்கிறார். அவரை குதூஹலத்துடன் பிரார்த்தித்து வரவேற்காத பிரபுக்களும் ஸபைகளும் உத்யோகஸ்தர்களுமுண்டோ! சிங்கப்பூர் செட்டியாரின் புத்திரியை விவாஹஞ் செய்யும் பாக்கியம் இவருக்கு வாய்த்ததைப் பற்றி அவரைப் புகழாதவர்களில்லை. இந்த விவாஹம் இதுவரையில் ஒருவரும் பார்த்திராத விமர்சையுடன் நடக்குமென்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.”

ஓகோ! இந்த நாயகர் பலே போக்கிரி யென்று தோன்றுகின்றது. ஸாதுக்களையும் மானிகளையும் பயமுறுத்தி அவர்களிடத்



திலிருந்து பணம் அடிக்கும் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவன். இவ்வளவு தானா? நோட்டுகளென்றும் ஆயிரமென்றும் எழுதினதற்கு இதே கருத்தாயிருக்கவேண்டும். காயிதத்தின் ஸாராம்சம் நன்றாய் விளங்கிற்று. ரொக்கமாயில்லாமல் நோட்டுகளாய் ஆயிரமென்று கண்டிருக்கிறது. ரூபாயாக விருக்கவேண்டும். எவ்வளவு ஆயிரமோ இது பெருந்துகையல்லவா? எந்த ரஹஸ்யத்தை வைத்துக் கொண்டு இவ்வளவு ஏலம் போடுகிறானோ, தெரியவில்லை. அது வெளியில் தெரிந்தால் பெரிய ஆபத்தை உண்டாக்கக் கூடியதாய் இருக்கவேண்டும். ஸாமான்யமானால் இவ்வளவு விலை பெறுமா? சமாசாரப்பத்திரிகையை நன்றாய் கவனித்தால் ஏதோ குடும்பரஹஸ்யம் இருப்பதாக யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. இது ஒருபெரியசுற்றலென்பதற்கு ஸந்தேகமில்லை. ஆசார்யருக்கு சுற்றல்களென்றால் அன்னாஹாரம் வேண்டியதில்லை. சிக்கல்களை ஒழுங்குபடுத்துவதும் ரஹஸ்யங்களைக்கண்டு பிடிப்பதும் பிறரால் செய்யப்பட்ட சுழல்களையும் உபாயங்களையும் யுக்திகளையும் வெளிப்படுத்துவதுமே பிழைப்பு. ஸம்பந்தமில்லாமலும் அரைகுறையாயுமிருந்த வார்த்தைகளைப் பல தடவை ஒழுங்குபடுத்தி, ஒத்துக்கடிதத்தில் அங்கங்கே மறைந்துகிடந்த எழுத்துக்களைக்கண்டுபிடித்துச்சேர்த்து சிலவிடங்களில் உத்தேசமாய் தானே கவனஞ்செய்து முடிவில் ஒரு விதமாய் அந்தக்கடிதத்தைப் புனர் ஜன்மம் எடுக்கும்படிசெய்தார்.

.92 நம்பர் வரதப்பமுதலித் தெரு
சென்னை.

ஐயா!

சிங்கப்பூர் செட்டியாருடைய குமாரத்தி ஆண்டாளம்மாளை தங்களுக்கு விவாஹஞ்செய்து கொடுப்பதாய் சமாசாரப்பத்திரிகைகளால் அறிந்தேன். தங்களுடைய பலவித அசௌகரியங்கள் அதினால் தீரும். ஆனால் தங்களுடைய குடும்பத்தைப்பற்றின சில விவரங்கள் என்னிடத்தில் கிடைத்திருக்கின்றன. தங்களுடைய ஸம்மதியைக்கேட்டுக்கொண்டு அவைகளைச்சிங்கப்பூர் செட்டியாரிடத்திலும் அவருடைய மகளிடத்திலும் தெரிவிக்கலாமென்றிருக்கிறேன். அவர்களுக்கு அது வெகு முக்கியமாயும் அவச்ய

மாயும் தோன்றுமென்பதில் ஸந்தேஹமேயில்லை. அவை வெளிக்கு வருவதில் தங்களுக்கு பெரிய அவமானமும் துக்கமும் நேரும். நான் சீக்கிரத்தில் சென்னையைவிட்டுத் தென்னாப்பிரிக்காவிற்குப் போய் ஏதாவது வியாபாரஞ்செய்யலாமென்றிருக்கிறேன். அதற்கு எவ்வளவு குறைந்தாலும் ரூபாய் 3000 முதல் வைக்கவேண்டியிருக்கும். அந்தப்பணத்தை எப்படியாவது நான் சேகரிக்கவேண்டியிருப்பதால் பிறரிடத்தில் கேட்பதைவிட தங்களிடத்திலேயே கேட்டு வாங்கிக்கொள்வது நியாயமாயிருக்கும். எனக்குத்தெரிந்த விஷயத்தை பிறருக்குத்தெரிவித்து, எனக்கு வேண்டிய பணத்தை ஸம்பாதிக்கும்படி வைக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். ஆகையால் மேற்சொன்ன தொகையை எனக்குக்கிடைக்கும்படி செய்தால் தங்களுக்கு யாதொரு விதமான கவலையும் வருத்தமும் அசௌகரியமுமில்லாதபடி பார்த்துக்கொள்வது என்கடமையாகும்.

இப்படிக்கு
தங்கள் விதேயன்,
சபாபதி நாயக்கர்.

ஸரஸ்வதிமஹாலில் அவ்வளவு சிரமப்பட்டு எழுதின கடிதம் ஏறக்குறைய இவ்விதமாகவே இருக்கலாம். தபாலில் போட்டால் ஒருவேளைச்சரியாய்ப்போய்ச்சேருமோ சேராதோவென்று ஸந்தேஹப்பட்டு நாயகர் அதை தானே கொண்டுபோய் சேர்ப்பித்தார். இப்படி அவருடைய யுக்தியைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினதில் ஆசார்யருக்குள்ள ஸந்தோஷம் இவ்வளவு அவ்வளவென்றில்லை. அப்படி இருக்க வேண்டியது நியாயந்தானே. அதில் பிசகென்ன? சமாசாரப் பத்திரிகையில் கண்டிருந்த விஷயங்களை வைத்துக் கொண்டு நாயகர் நல்ல வேலை செய்தார். அந்தந்தக் காலத்திலுள்ள பத்திரிகைகளையும் செட்டியாருடைய குடும்பத்தின் தஸ்தாவேஜுகளையும் கண்டெடுத்து, அந்தந்த விடங்களிலுள்ள மனிதர்களைத் தந்திரமாய் விசாரித்து, மற்ற சங்கதிகளை வெளிக்குக் கொண்டு வந்திருக்கலாம். ரஹஸ்யமாய் சமாசாரங்களை விசாரிக்கும் ஆபீஸில் நாயகர் ஒரு மெம்பரோ; அல்லது முதலாளியோ; அதன் மூலமாய் மேற் சொன்ன விஷயங்களைக் கண்டு பிடித்தார். கடிதத்தில் குறித்திருந்த மேல் விலாஸம் மோசடியென்பது நிச்சயம்,



தன்னுடைய கடிதங்களுக்குப் பதில் அனுப்புவதற்காக அதை ஏற்படுத்தி யிருக்கலாம். அங்கே பல மனிதர்களுக்குக் கடிதங்கள் வருமென்றும் அந்தந்த விலாஸக்காரர்கள் அங்கே ஒரு நாளும் காணப்படுவதில்லையென்றும் அங்கிருந்த கடிதங்கள் எப்படியோ போய்ச் சேருகிறதென்றும் ஆசார்யருக்கு ஏற்கெனவே தெரியும். இவ்வளவு கஷ்டப்பட்டு கண்டு பிடித்த விஷயத்தை வேறு விதமாய்ப் பரீக்ஷை பார்த்து, உறுதிப் படுத்தவேண்டுமென்று தோன்றிற்று. பகல் முழுவதும் அந்த வேலையாகவே யிருந்ததால் இருட்டினவுடன் ஆசார்யர் தன் வேஷத்தை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தார். அன்று காலையில் நாயகர் செட்டியாரைப் பார்க்க முடியவில்லை. கடிதத்தைச் சேவகன் கையில் கொடுத்தனுப்ப வேண்டி யிருந்தது. இப்பொழுது வெளியில் போயிருந்தாலும் ராத்திரி போஜனத்திற்கு வீட்டிற்கு வர வேண்டியதல்லவா? ஆகையால் சற்று நேரம் காத்திருக்கும்படி நேர்ந்தாலும் பாதகமில்லை.

செட்டியாருடைய மாளிகைக்குப் போய் வாசலிலிருந்த போயியைக் கூப்பிட்டு, "செட்டியார் அவர்களை ஓர் அவசர காரியமாய்ப் பார்க்க முடியுமா" வென்றார்.

அதுவரையில் அவ்வளவு அன்புடன் தன்னிடத்தில்பேசி அறியாதஅந்த வேலைக்காரன் ஆசார்யரைக் கண்டுமயங்கி, ஆனாலும்ஜாதிஸ்பாவம் விடாமல் ஏதாவது கையில் விழுமோ வென்று நினைத்து, "ஸ்வாமி! நான் எப்படிச் சொல்ல முடியும். பிரபுக்களின் சித்தம் ஒரே விதமாய் இருக்குமா?" வென்றான். உடனே ஆசார்யர் ஏதோ கையில் வைத்து அழுத்தினார். அந்த போயி வேறு மனிதனாய் மாறி தங்களுடைய பெயரென்னவென்றான். ஆசார்யர் "என் பெயர்" அவசியமில்லை. இன்று காலையில் இங்கே வந்திருந்த நாயகரிடத்திலிருந்து முக்கியமான சமாசாரம் கொண்டு வந்திருக்கிறேனென்று சொன்னால் போது" மென்றார்.

சற்றுநேரத்திற்குப் பிறகு வேறொரு சேவகன் வந்து, அவரை அழைத்துக் கொண்டு மாடிக்குப் போய் ஓர் அறையில் விட்டான். அங்கே உட்கார்ந்திருந்த செட்டியார் எழுந்து, ஆசார்யர் செய்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளாமல் ஸேவகன் வெளியில்

போனவுடன் நீர் இங்கே நாளைக்கு வருவீரென்றல்லவா எண்ணியிருந்தேன். ஆனாலும் பாதகமில்லை. இங்கே வந்திருக்கிறபடியால் உமது காரியத்தைச் சுருக்கமாய் சொல்லும். வெளியில் போகவேண்டு" மென்றார்.

ஆசார்யர் "தாங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் நாயக்கர் விஷயமாய் யாதொரு கவலையும் எனக்கில்லை. அவரைக் கைதியாய்ப் பிடிக்க வந்தேன்."

"கைதியாய்ப் பிடிக்கவா?"

"ஆம். நான் ரஹஸ்ய போலீஸைச் சேர்ந்தவன். ரங்கூனிலிருந்து சில கலஹக்காரர்கள் இங்கே வந்திருப்பதாய் டிபார்ட்மெண்டுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அவர்களைப் பிடித்து மறுபடியும் அனுப்பவேண்டும்."

"ஆனால் இங்கே வரும்படியான சிரமம் தங்களுக்கேன்?"

"எனக்கு வேண்டிய ஆசாமிகள் இருவர். ஒருவனுடைய பெயர் வேணு. அவனும் தங்கவேலு வென்ற வேறொருவனும் இந்தத் தெருவில் இன்று காலையில் காணப்பட்டதாயும் தங்கவேலு இந்த வீட்டிற்குள் வந்ததாயும் ரிப்போர்ட்டு கிடைத்திருக்கிறது."

"இந்தக் கதை யெல்லாம் என்னிடத்தில் ஏன்சொல்லுகிறீர்?"

"வேறொன்றுமில்லை. ஒரு ஸப் இன்ஸ்பெக்டரை அவர்களுடைய தகவல்களைக் கவனிக்கும்படி நியமித்தோம். அவருடைய அஜாக்கிரதையால் வேணு ஏமாற்றிவிட்டு மறைந்தான். அவனை எப்படியாவது கண்டு பிடிக்கும் விஷயத்தில் தாங்கள் ஸர்க்காருக்கு ஒத்தாசை செய்ய ஆக்ஷேபிக்க மாட்டீர்களென்ற நம்பிக்கையுடன் தங்களிடத்தில் வரத் துணிந்தேன். தங்களைப்பார்க்க வந்த தங்கவேலுவைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னால் மிகுந்த உபகாரமாயிருக்கும்."

அது வரையில் ஆசார்யரை உட்காரச் சொல்லாமல் அலக்ஷ்யமாய்ப் பேசி வந்த செட்டியார் திடீரென்று மாறி, "அப்படியா? தயவு செய்து உட்காருங்கள். இதோ, தாம்பூலம். தங்களுடைய பெயர் ஏதோ?"

ஆசார்யர் உட்கார்ந்து தாம்பூலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு போட்டுக் கொள்ளாமல் "என் பெயரா? ஜஸ்வந்தராவ் என்பார்கள்."


# கதாரத்னாகரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 2.

வெளிநாடுகளுக்கு ரூ. 3-8.

1921௵ டிசம்பர்௴] [துன்மதி௵ கார்த்திகை௴


4- FEB

## அட்டவணை

பக்கம்.


1. கடவுள் வணக்கம்
2. விசேஷ வர்த்தமானம் 241
3. விநோதக் குறிப்புகள் 246
4. வேலையில் அன்பின் பெருக்கு 248
5. கற்பு 249
6. திருக்குறள் 255
7. வியாபாரக் குறிப்புகள் 256
8. வாழ்வின் மர்மங்கள் 257
9. பகவத்கீதா வாசகம் 260
10. இராதி சுந்தரி 263
11. விநோத கதா மஞ்சரி 265


### கதாரத்னாகரம் 3-ம் தொகுதி.

நமது கதாரத்னாகரம் மூன்றாவது தொகுதி வேண்டுமென்று அநேகர் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். 1920 நவம்பர்௴ முதல் தொடர்ந்த நாவல்கள் ஆரம்பம் செய்திருக்கிறபடியால் அந்த மாதத்திய—அதாவது 6-வது சஞ்சிகையிலிருந்து 12-வது சஞ்சிகை வரை ஆக 7-ம் கிடைக்கும். 7 சஞ்சிகைகளின் ரூ. விலை 1-4-0.

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

மையி லங்குநற் கண்ணி பங்கனே
 வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலா
 லரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்கு வெண் ணீற்று மேனியாய்
 மெய்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
 போவ தோசொலாய் பொருத்த மாவதே.

பொருத்த மின்மையேன் பொய்மை யுண்மையேன்
 போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
 மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
யரத்த மேனியா யருள்செ யன்பரும்
 நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
யிருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
 வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
 யேல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
 டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை யெம்பிரா
 னேது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
 காட்டி மீட்கவும் மறுவில் வானனே. —மாணிக்கவாச

---

சென்ற அக்டோபர்மீ வெளியான விடுகதைகளுக்கு விடைகள்

1. துடைப்பம். 2. நாவு. 3. வண்ணான்.
4. வெள்ளைப்பூண்டு. 6. எலிப்பொறி.

கதாரத்நகரம் அநுபந்தம்



வேல்ஸ் இளவரசர்

கடவுள் துணை

KATHA கதாரத்நகரம் RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்

தோதிய நூலின் பயன்

—ஔவை குறள்

Vol. 4. தொகுதி 4. | December, 1921 துன்மதி௵ டிசம்பர்௴ | No. 7. பகுதி 7.

# விசேஷ வர்த்தமானம்.

## இந்தியாவில் இளவரசரின் விஜயம்.

வேல்ஸ் இளவரசர் பம்பாய்த் துறைமுகம் வந்து சேர்ந்தவுடன் முனிஸிபல் சபையார் அவருக்கு ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். அதற்கு மறுமொழி யளிக்கையில் வேல்ஸ் இளவரசர் கூறியதாவது:—

கனவான்களே! கனவான்களே,

என்னை மிக்க அன்புடன் வரவேற்றதற்கு முதலில் உங்களுக்கு வந்தனமளிக்கின்றேன். இந்தியாவிற்கு விஜயஞ் செய்து இங்குள்ள பலருடைய நட்பையும் பெற நான் வெகுநாளாக எதிர்பார்த்திருந்தே னென்பதை இப்பொழுது எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இந்தியா செய்த காரியங்களையும் இனிச்செய்யு

விருக்கும் காரியங்களையும் நான் நேரில் கண்டு பாராட்ட விரும்புகின்றேன். உங்களுடைய கஷ்டத்தை அறிய விரும்புகின்றேன். உங்களுடைய கோரிக்கைகளையும் உணர்ந்து கொள்ள ஆவல் கொள்ளுகின்றேன். என்னை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். நானும் உங்களை அறிந்து கொள்ள விரும்புகின்றேன். மேனாட்டிலிருந்து இளவயதுடையவனும் அந்நியனுமாகிய நான் இப்பூர்வீக நாட்டிற்கு வந்து இந்நாட்டைப்பற்றிய விஷயங்களை அறிந்து கொள்வதில் சற்று கஷ்டமிருக்குமென நினைக்கும்போது எனக்குப் பயமுண்டாகின்றதெனினும் அநுதாபத்துடன் நடந்துகொண்டால் எல்லாவற்றையும் உணரலாம் என்ற எண்ணமெனக்கிருப்பதால் கொஞ்சம் ஆறுதலுண்டாகின்றது. குழந்தைப் பருவமுதலே எனக்கு இந்தியாவினிடம் அநுதாப மேற்பட்டிருக்கின்றது. இந்நாட்டினரிடம் விக்டோரியா மஹாராணியார் காட்டிய அன்பின் வழியே நானும் வளர்க்கப்பட்டேன். எட்வர்ட் அரசரும் அந்த அன்பின் காரணமாகவே வேல்ஸ் இளவரசராக விருந்தபோது இந்நாட்டிற்கு விஜயஞ் செய்தார். அவர் தமது சுற்றுப் பிரயாணத்தில் இந்தியாவைப்பற்றி உணர்ந்து கொண்டது அவர் இறக்கும் வரையில் உதவியா யிருந்தது. என் தாயாரும் என் தந்தையாரும் இந்நாட்டிற்கு இரண்டு தடவை விஜயம் செய்திருக்கின்றனர். அவர்கள் இந்தியா விஷயத்தில் எத்தகைய அபிமானம் கொண்டிருக்கிறார்களென்பதையும் உங்களின் நன்மையை அவர்கள் எவ்வளவு அதிகமாக் நாடுகின்றார்களென்பதையும் நீங்கள் யாவரும் நன்றாய் உணர்ந்திருக்கிறீர்களென்று நினைக்கின்றேன். இத்தகைய அநுதாபம் குடிகொண்டிருக்கும் இச்சமயத்திலேயே நான் இந்தியாவில் காலடி வைத்தேன். நீங்கள் எனக்களித்த வரவேற்பும் நான் கொண்டிருக்கும் அநுதாபமும் ஒன்று சேர்ந்து இந்நாட்டைப் பற்றிய விவரங்களை நான் அறிந்து கொள்ள உதவிசெய்யுமென நினைக்கிறேன். பம்பாய் முனிஸிபல் சபையாராகிய உங்களுக்கிருக்கும் பொறுப்பைக் காண எனக்கு உங்களிடம் பொறாமையே உண்டாகின்றது. நீங்கள் வகிக்கும் பொறுப்பு சாமானியமானதல்ல. அத்தகைய பொறுப்பை நீங்கள் பெருமையாகவே கொள்ளலாம். இப்பெரிய பட்டணத்தை



அபிவிருத்தி செய்ய நீங்கள் போட்டிருக்கும் திட்டத்தைப்பார்க்க விரும்புகின்றேன். பம்பாய்க்கு ஏற்பட்டிருக்கும் ஸ்தானமும் பெருமையும் அபூர்வமானது. மற்ற பட்டணங்கள் பம்பாய் வியாபாரத்திலும் கைத் தொழிலிலும் முன் அணியில் நிற்பதைக் கொண்டு இப் பட்டணத்தோடு போட்டிப் போடலாம். சரித்திர விசேஷத்தில் பம்பாயை தோற்கடித்து விடலாமென மற்ற பட்டணங்கள் நினைக்கலாம். அவைகள் தங்களிடம் இயற்கை வனப்பு அதிகமாக விருப்பதாகப் பெருமைபேசிக் கொள்ளலாம். ஆனால் பம்பாய்க்கென விருக்கும் ஒரு சரித்திரப் பெருமையை மாத்திரம் அதனிடமிருந்து மற்ற எந்தப்பட்டணமும் கைப்பற்றிக்கொள்ள முடியாது. பம்பாய் நகரம் இந்தியாவின் வாயிலாக விளங்குகின்றது. இவ்வாயில் வழியாகவே பலர் வந்து கீழ் நாட்டையும் மேனாட்டையும் ஒன்றாகப் பிணைத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியாவுக்கு ஒரு ஸ்தானம் சம்பாதித்துக் கொடுத்தனர். இந்தியாவை விட்டுப் பல மாணவர்கள் இங்கிலாந்துக்குச் சென்று பல விஷயங்களில் அநுபவமடைந்து மீண்டும் இத்துறைமுகம் வந்து சேர்ந்து இந்தியருக்குத் தங்கள் அநுபவத்தை எடுத்துச் சொல்வதைப்பற்றி இப்பொழுது நினைத்துப் பாருங்கள். இந்தியாவை அபிவிருத்தியடையும்படிச் செய்யவும் சமாதான வழியில் நடத்தவும் நூற்றுக்கணக்கான பிரிட்டானியர் இந்தத் துறைமுகத்திற்குத் தான் வந்தனர். இந்தியாவில் பல வருஷங்களிருந்த பின் இந்தியாவின் அபிவிருத்தியைப் பற்றிச் சொல்ல கிரேட் பிரிட்டனுக்குப் புறப்படுவதானாலும் அவர்கள் இந்தப் பட்டணத்திற்கு வந்து தான் போக வேண்டும். யுத்தகாலத்தில் ஆயிரக்கணக்கான இந்திய சோல்ஜர்களைப் போர் முனைக்கு அனுப்பியது இந்தத் துறைமுகந்தானென்பதை பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் என்றும் மறக்காது. யுத்தத்தில் களைப்படைந்து திரும்பிய சோல்ஜர்களையும் இப்பட்டணமே முதன் முதலாக வரவேற்றது. யுத்தகாலத்தில் பம்பாய் வாசிகள் செய்த உதவிக்காக அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் வந்தனமளிக்கின்றேன். இந்நாட்டின் அபிவிருத்தியில் என்றைக்கும் எனக்கு அநுதாபமிருக்கும். பம்பாய் நகர முன்னேற்றத்திலும் எனக்குக் கவலையிருக்கும். அன்புடன் என்னை வரவேற்றதற்காக மீண்டுமொரு

முறை வந்தன மளிக்கின்றேன். உங்களுடைய ராஜவிசுவாசத்தையும் என் தந்தையாருக்கு அறிவிக்கின்றேன். இந்தப் பட்டணத்தின் வனப்பு என்றும் என் மனத்தில் அழியாமலிருக்கும்.

முனிசிபல் உபசாரப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமுன் மகா மேன்மை தங்கிய இளவரசர், மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியிட மிருந்து கொண்டுவந்த அடியிற்கண்ட செய்தியை வாசித்தார்:—"எனது குமாரன் இந்தியாவில் முதன் முதலாக அடி வைக்கும் நாளாகிய இன்றையதினம், இந்திய மக்களுக்கும் இந்திய மன்னர்களுக்கும் வந்தன மளிக்கிறேன்; உங்களிடம் எங்களுக்குப் பரம்பரையாக இருந்துவரும் அபிமானத்தை மீண்டும் ஊர்ஜிதப்படுத்துவதற்கறிகுறியாகவே எனது குமாரன் வருகிறார். எனது தகப்பனார் இளவரசரா யிருந்தபோது தமது இப்பெரிய கீழ் நாட்டு ஏகாதிபத்யத்தைப் பார்த்துச் சென்றிருக்கிறார். அவர் பட்டத்துக்கு வந்த பிறகு நானும் இந்தியாவுக்கு வந்து பார்த்துப்போகும் பெருமையையும் பெற்றதுண்டு. எந்த நம்பிக்கையுடனும் உற்சாகத்தோடும் நாங்கள் அவ்வாறு வந்து பார்த்துச் சென்றோமோ, அதே மாதிரி எனது குமாரனும் வந்திருக்கிறார். அவர் உங்களைப் பார்க்கவரும் இன்றையதினம் எனது சொந்த இந்தியா என் ஞாபகத்துக்கு வருகின்றன. இந்தியாவின் வனப்பும், மறக்கக்கூடாத சரித்திரமும் மஹத்தான நாகரீகச் சின்னங்களும், இந்தியரின் பக்தியும் என் மனதைவிட்டு அகலவில்லை. அந்த பக்தியை மகா யுத்தத்தின் போதும் இந்தியர் நிரூபித்து விட்டார்கள். உங்கள் மத்தியில் எனது குமாரன் உலாவும்போது, அவனைப்பற்றிய ஞாபகமே எனக்கிருக்கும்; எனது ராணியாருக்கும் அதே ஞாபகந்தான். ராஜவிசுவாசியான நண்பர்களுக்கு இச்செய்தியை எனது குமாரர் கொண்டு வருகிறார். உங்களுடைய கஷ்ட சுகங்களில் எனக்குள்ள அநுதாபம் என்றைக்கும் குறையாது. அதுவும் சமீப காலந்தொட்டு மிக அதிகமென்றே சொல்வோம். உலகமெங்கும் ஒரு புதிய மஹத்தான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

மற்ற தேசங்களைப்போல் இந்தியாவும் புதிதாக எழும் பல பிரச்னைகளைத்தீர்த்துக் கொள்ளவேண்டியிருக்கின்றது. புதிதாகக்



கிடைத்திருக்கும் அதிகாரங்களும் பொறுப்புமே அதற்கிருந்து வரும் பலமாகும். லார்டு ரீடிங்கைத் தலைமையாகக் கொண்ட கவர்ன்மெண்டினுடையவும் அதனுடைய உத்தியோகஸ்தர்களுடையவும் உதவியைக்கொண்டு சரித்திர பூர்வமாக உங்களுக்கு ஏற்பட்டுள்ள பெருமைக்குத் தக்கபடியும் எதிர்காலத்தில் உங்களுக்குச்சந்தோஷத்தை உண்டு பண்ணத்தக்க விதமாகவும் அந்த பிரச்னைகளைத் தீர்த்துவைத்துக்கொள்ள வேண்டு மென்றும் கிரமமான அபிவிர்த்தியின் அமைதியின்மைக்குக் காரணமாகவுள்ள அம்சங்கள் மறைந்துவிடு மென்பதுமே எனது நம்பிக்கை. உங்களுடைய சுகதுக்கங்கள் என்னுடையனவே. உங்களுக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடிய எல்லா விஷயங்களிலும், உங்கள் க்ஷேமத்தைப் பெருக்கக் கூடிய எல்லா காரியங்களிலும் எனக்குப் பூரணமான அநுதாபமிருக்கின்றது. எனது புதல்வர் இது காறும் தொலை தூரத்திலிருந்து உங்களுடைய க்ஷேம லாபங்களைக் கவனித்து வந்தார். இப்போது உங்களிடையே வந்து பரஸ்பரம் நல்லெண்ணத்தைப் பெருக்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம்.

அவர் உங்களுடைய நாட்டை விட்டு விலகும் போது உங்களின் மனம் அவரைத்தொடர்ந்து செல்லு மென்றும் அவருடைய எண்ணமெல்லாம் உங்கள் மீதே யிருக்கு மென்றும் நான் நினைக்கின்றேன். பல வருஷங்களாக எத்தகைய அநுதாபத்துடன் என் அரசாங்கத்தினருக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தமிருந்ததோ அந்த சம்பந்தம் இன்னும் அதிகமாகப் புலப்பட வேண்டும். நல்லறிவும் திருப்தியும் இந்தியாவில் பெருகி சுயேச்சை பெற்றதும் நான் உழைப்பதும் எனக்குப் பின் என் புதல்வர் உழைக்க விருப்பதுமான இந்த ஏகாதிபத்யத்தில் இந்தியா தேசிய பெருவாழ்வு அடைய வேண்டு மென்பதே என் பிரார்த்தனை.

---

# விநோதக்குறிப்புகள்

## ஒரு வைத்தியனும் சிறுவனும்

மிக்க மனக்கவலை யோடும் பயந்து கொண்டும் ஒருசிறுவன் ஒரு டாக்டரிடம்போய், ஸார் என் இருதயத்தில் யாதோ வியாதி பற்றிக் கொண்டது. மூச்சு திணருகிறது. நான் அதிக காலம் ஜீவிக்க முடியுமென்று சொல்வதற்கில்லை என்று சொன்னான்.

“நான் சென்ஸ்! சிகரட்டு பிடி பிடிப்பதை விட்டுவிடு.

“ஸார், நான் இதுவரை புகை பிடிப்பதே கிடையாது.”

“ஸரி, இனி மதுபானம் செய்யாதே”

“எனக்குக் குடிக்கிற வழக்கமில்லையே”

“அப்படியானால் இரவில் சீக்கிரம் படுக்கைக்குச் சென்று அதிகமாய் நித்திரை செய்.

“இரவெல்லாம்—பத்துமணி நேரம் இடைவிடாத தூக்கந் தான் ஸார்”

“ஓஹோ! அப்படியானால் நான்—சொல்லக்கூடியது ஒன்று தான் உண்டு. நீ இவ்வுலகத்துக்கு மிகவும் நல்ல பிள்ளை யாதலால், இயற்கையான மரணத்துக்கே விட்டுவிடுகின்றார்.

## ஒரு புதிய வியாபாரியின் யோசனை

குருசாமி என்ற ஒருவன் ஜவுளி வியாபாரம் செய்கிறதற்குத் தீர்மானித்து, பெரிய வியாபாரிகளிடம் சரக்குகள் வாங்கி தொழில் நடத்திவந்தான். படிப்படியாய் விர்த்தியாகும் இவனுடைய தொழிலைக் கண்டு பெரிய ரங்கில்தாஸ் சேட்டு என்பவர் ஜவுளி சரக்கு



களைகடனாகக் கொடுத்தார். தவணைப்படி பணம் கொடுபடாததை கண்டு அடிக்கடிகடிதம் எழுதிவந்தார். அதாவது முதற்கடிதத்தில் கணக்குகளைப் பார்த்து வரும்போது அவர் கணக்கில் பாக்கி நிற்கிறதைக் கண்டு ஞாபகப்படுத்துகிறோ மென்றும், மறு கடிதத்தில் வேலைத் தொந்தரவால் எங்கள் முதற் கடிதம் கண்ணிற் படவில்லை போலும் என்றும் படிப்படியாய் காரசாரமாய் எழுதினார். எதற்கு மே பதில்இல்லை. மனிதனின்யோக்கியதையை அறிந்து, நேரில் ஒரு வேலைக்காரனை அனுப்பி பணத்தைக் கேட்கவேண்டும்; அதற்கும் மௌனம் சாதித்தால் லாயர் நோட்டீஸ் அனுப்பி கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டு முதல் குமாஸ்தாவை நேரில் அனுப்பினார். அவன் குருசாமிசெட்டி கடைக்குச் சென்று என்ன ஐயா எழுதின கடிதங்களுக் கெல்லாம் பதில் எழுதாமலிருந்து விட்டீர்களே என்று விசாரித்தான். அதற்கு குருசாமி செட்டி சொன்னதாவது—ஐயா நீங்கள் தாராளமாய் சரக்கை எனக்குக் கடன் கொடுத்தீர்கள்; நானும் அவ்விதமே கடனாக அநேகருக்குக் கொடுத்து விட்டேன். அதை எப்படி வசூல் செய்கிறதென்பது தெரியாமலிருந்தது. நீங்கள் எழுதிய கடிதத்தைப் போல் எனக்குக் கொடுக்கவேண்டிய ஆசாமிகளுக்கும் எழுதினேன். பண மெல்லாம் வசூலாய்விட்டது. தங்கள் எஜமானனுக்கு எனது நன்றியைச் செலுத்தவேண்டும் என்றான். குமாஸ்தாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது. அதை அடக்கிக் கொண்டு நல்லதையா, பணத்துக் கென்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டான். இன்னும் நாலைந்து பேர் என்ன எழுதியும் பணம் அனுப்பவில்லை அதற்காகத் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்றான் குருசாமி செட்டி. அந்த சங்கதி எனக்குத் தெரியாது, நீங்கள் பணம் கொடுக்காவிட்டால் லாயர் நோட்டீஸ் அனுப்பி கோர்ட்டில் தாக்கல் செய்வார் எஜமான் என்றான். நல்லது அந்த வழியையுந் தெரிந்து கொண்டேன். பணத்தை ஒருவாரத்தில் கொண்டு வந்து கொடுத்து விடுவதாகச் சொல்லுங்கள் என்றான்.

# வேலையில் அன்பின் பெருக்கு

நீ செய்கிற வேலைகளி லெல்லாம் அன்பிருக்கட்டும். சொற்ப வேலை செய்தாலும் மன மகிழ்ச்சியோடு செய். உன் மனம் குளிர்ந்து இனிமையோ டிருக்கட்டும். உனக்கு எதுவும் தூரத்திலில்லை. எந்த வேலையைச் செய்வதிலும் உனக்கு கஷ்டமிராது. உன் வேலையே திறமை யுடையதாயிருக்கும். உலகம் உன் புன்னகை முகத்தை நோக்கும். இப்பொழுது உனதன்பு உலகெலாம் பெருகும். அதற்கு விலை மதிப்பிட முடியாது. அன்பின் எல்லை காணுதை திருப்தியே அதன் விலையாகும்.

# கற்பு

கற்பு என்பது ஆண், பெண், இருபாலர்க்கும் பொதுவாயுள்ளது. இது அவரவர்கள் தங்கள் நிலையினின்றும் வரம்புகடாவத் தன்மையே யாம். தற்காலம் ஆடவர்கள் கற்பென்பதெல்லாம் பெண்பாலர்களே யறிந்து ஒழுகி, நடக்க வேண்டிய குணம் என்று விட்டுவிட்டனர். அது போலத் தாங்களும் ஒரே பெண்ணை யன்றி வேறு எவரையும் கண்ணேறிட்டும் பார்க்கக்கூடாதென்பதை மறந்தனர் போலும். ஆடவர்களுக்குங் கற்புண்டு என்பதற்கு நளன் முதலியவர்களே சான்றாவார். நளன் தன்னைத் தோழியர்கள் சூழவிருந்தும் அவர்களிடம் அவன் மனது பற்றாது ஓர் அரசப்புள்ளாகிய அன்னம் சொன்னமொழியிற் தமயந்தியைக் காதலியாகக் கருதினனே அதுவே கற்பு. கற்பு என்பது ஒருவர் மேல் ஒருவர் கொள்ளும் காதலன்று. தான் முதல் முதல் நினைந்ததையும், அவ்வழிச் சென்று தான் கருதியது அடைந்த காதலையும், பின்னர் அதனிடத்து வெறுப்புறாது எவ்வமயமும் ஒரே அன்புத் தன்மையாயிருத்தலையும், அதன்கண் பின்னர் பல பிழைகள் கண்ணுற்றாலும் அன்பு குறையாமலும் எப்படியும் தான் ஆதியில் செல்லவிட்ட மனதை வேறிடத்திற் செல்லாமல் காப்பதுவே கற்பு. இது யாவருக்கும் எளிதன்று. இவ்வாறு கற்பென்பது இருபாலர்க்கும் பொதுவாயிருந்தாலும், பெண்கள் தான் கற்பைக் காக்கவேண்டுமென்று வாதிப்பாருமுளர். அது எவ்வாறாயினும் ஆகுக.

ஆடவர்கள் தன்னைப் பெற்றதாய் தந்தையரை மறவாமலிருத்தலும், தன் உயிர்த் தோழனொருவனோடு கேண்மை எவ்விதத்தாயினும் முறிவு படாமலிருத்தலும், தனக்கு கல்வியையும், ஞானத்தையும் போதித்த குரவர்களிடத்து அன்பு மாறாதிருத்தலும், தன்

பெற்றோர் மனப்படி மணம் செய்து கொண்ட ஒரு பெண்ணைத் தவிர மற்றப் பெண்களை எல்லாம் தாயாகவும் சகோதரியாகவும் பாவித்து நடத்தலும், தன் மனமொத்த நல்லாளுடன் சேர்ந்து இல்லறவியலைத் தவறாது நடத்துதலும், ஆகியவைகளை உடைத்தாயிருத்தல் வேண்டும். இதன்படி நடப்பவர்களே கற்புள்ளவர்கள். ஆடவருக்குக் கற்பு உளதோ வெனின் முற்றுந்துறந்த பட்டினத்தடிகளும் 'என் கற்பைக்குலத்தாண்டி' என இரங்கியிருக்கின்றதால் உண்டு என விளங்குகிறது.

இனிப் பெண்பாலர்க்கே கற்பு அவசியமுடைத்து என்பதைமறுத்தற்கில்லாது யாவரும் ஒப்புக்கொள்வர். இக்கற்பு தற்காலம் நாகரீக முதிர்ச்சியுடைய தென வாய்ப்பறை அடிக்கும் மேல் நாட்டில் கையாளப்படுவதில்லை. ஆங்கிலத்தில் மனைவி கணவனைப் பார்த்துச் சொல்லும் ஒரு பழமொழி "உன் பிள்ளையும், என் பிள்ளையும், நமது பிள்ளையுடன் முறண்டன" என்பது உண்டு. ஆனால் அவர்களுள்ளும் சிலர் தாங்கள் மன மொத்து காதலித்தவர்களை அடையாவிடில் கன்னிகைகளாகவே யிருந்திருப்பார்களெனத் தெரியவருகிறது. பெண்கள் இளம்பருவத்தில் பெற்றோருக்கும், மணந்தபின் கணவற்கும கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென விருக்கிறது. வளர்ச்சிப் பருவத்தில் அச்சுறுத்துவார் இலரேல், அவர்கள், மனஞ்சென்றவாறுபோய்பின்னால் அவமானத்துக்கும், பழிச்சொல்லுக்கும், மெய்க் கேட்டிற்கும் ஆளாகின்றனர். தன்னை யறியாது காதலென்னும் ஓர் உணர்ச்சி தோன்ற யாவனை மனத்தினால் வரித்தாளோ அவனையே யடைதற்கெண்ணி, வருந்தி யுழைத்துப் பெறின், அவள் கற்புடையாள். அன்றேல் அவள் மனம் முன் சென்றுறைந்த ஓரிடத்திலிருந்து பிரிவதற்கிசையாது. அப்படிநேரின் அவள் உயிர்விடுவாள். அல்லது பெரிதும் துயருள் ஆழ்வாள். தன்னை மணந்தவனுக்கு இன்பம் தாராள். மனமொத்து மணந்த கணவனே பெரிதென்று நடந்தவற்றை அரிய பெரிய நூல்களினாலும் கேள்வியினாலும் தெரிகின்றோம்.

இனிப்பெண்கள் கற்புடையராயின் கணவனுக்கு மேல் தெய்வமில்லை என்னும் எண்ணத்தினராகவும் அவனுக்குச்



சய்யும் ஊழியமே திருப்பணியாகவும், அவன் உண்டபின் ண்பதே தேவதா பிரசாதமாகவும், அவன் துயின்ற பின் ர் துயில்தலே தன் கடமையாகவும், கொண்டு நடப்பர். ற்புடைய பெண்டிர் கணவனெய்தும் சுக துக்கங்களைத் தானும் டன் அநுபவித்தல் வேண்டும். இதனாலன்றோ பண்டையில் ீதாப்பிராட்டியாரும் தன் கணவராகிய இராமமூர்த்தி கான்புகுகின்ற காலை தனக்கு அவருடன் காட்டிலிருப்பதைவிடக் காட்டிலிருப்பதே மேல் என்று.

"பரிவிகந்த மனத்தொடு பற்றிலா
தொருவுகின்றனை யூழியருக்கனும்
எரியு மென்பதியாண்டைய தீண்டுநின்
பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடென்றாள்"—கம்பராமாயணம்.

எடுத்துரைத்தாள். மேலும் நளன் காடு செல்லும்பொழுது தமயந்தியும் நளன் கேட்டபிறகே எடுத்துரைத்துத் தன் தகப்பன் வீடு செல்லத்தடை சொல்லுங்கால் "மாற்றருங் கற்பினார் மகிழ்நர்கான் செல வேற்று நாடுறைவது விழுமிதோ" என்று சொல்லி யிருக்கிறாள்.

"அன்பர் துஞ்சிடிற்றுஞ் சுதலாங்கவர்
துன்பமெய் திடிற்று முமத்துன்புற
வின்ப முற்றி டினின்புற்றிருத்தலே
மன் பெருந்தவங் கற்புடைமாதர்க்கே.

உலகத்தில் யாவரும் கிடைத்தற் கரியபொருளைச் சார்வதற்குத் தவம் முடித்தல் வேண்டுமென்பர். தவம் முடித்தல் யாதெனுமொரு கடவுளை நினைத்துச் சில காரியங்கள் முடிவுபெறும் பொருட்டுச் செய்து கொள்ளுதல் ஒன்று, மற்றொன்று யாதொன்றையுங் கருதாது செய்தல். தவம் முடித்தல் ஆண் பெண் இரு பாலர்க்கும் உரித்து. ஆடவர் குடும்பத்துடன் தவம் செய்தலுக்கு முனைத்துக் கினிய மனையாட்டியும், செல்வமும், ஏவலும் வேண்டும்.

மகளிர்க்கோ அவ்வாறில்லை. தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை." என்ற பொய்

யாமொழிப்படி யாவற்றிலும் கணவர்க்கு ஐக்யப்படுதலே மேலானது. அதுவும் மனமொத்த ஐக்யமா யிருக்கவேண்டும். கற்புடைய பெண்டிர்க்குக் கணவனே தெய்வம் என்பதால் கடவுளை வணங்காவிட்டாலும், கணவன் கடவுள்தானென்று எவ்விதத்திலும் பாவித்துக் கண்முன்பாகக் காணும் கணவற் கடவுளை ஏன் வணங்கக் கூடாது? அவ்வாறு வணங்கியதால் அல்லவோ முன்காலத்துக் கற்புடைப் பெண்டிர் மல்கினர். அத்தன்மை வாய்ந்த பெண் பாலர் வாயிலிருந்து ஏதாவது ஒரு சொல் கிளம்பினும் சிலைமே லெழுத்துப்போல் உண்மையாய் நடைபெற்றுவிடும். இதற்குக் கன்ணகியும், நளாயினியும் சான்றாவர். பெண்கள் கோயில் குளம் போகுதல் விரதம் முதலியவைகள் அனுஷ்டித்து தேகத்தை வாட்டுதல் முதலிய கர்மங்கள் செய்ய வேண்டுவதில்லை. எவ்விதத்திலுங் கணவர் வாழ்க்கையில் சம்பந்தமுற்றிருத்தலே முக்கிய தவம். "பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்", "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" முதலிய ஆன்றோர் அறநூல்களின் வாக்கியங்களும் பெண்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகளைக் கற்பிக்கின்றன. அதற்குச் சான்று திருவள்ளுவர் மனைவியின் தன்மையேயாகும். அவள் தன் கணவன் கட்டளைப்படி அவர் சாப்பிடும்பொழுது ஒரு ஊசியும் கிண்ணத்தில் தண்ணீரும் வைத்து வந்தாளே யொழிய அது ஏனென்பதைத் தெரிந்து கொண்டாளில்லை. முடிவில் வள்ளுவரே அவள் மரணத்தருவாயில் அவளுக்கு அந்தச் சந்தேகமும் வேண்டாமென்பதை விளக்கியுள்ளாரென்று கேள்விப்படுகிறோம். எப்பொழுது பெண்கள் கணவன் சொற்படி நடக்கவேண்டும் என விதி ஏற்பட்டதோ அப்பொழுது அவர்களுக்கு எதிர்த்துரையாடவாவது, புத்தி சொல்லவாவது முடியாத காரியம்.

இவ்வாறு கற்புடைய பெண்டிர்கள் நிறைந்திருந்த நாடு நமது தாய் நாடு. மேலும்.இக்கற்பே பெண்களுக்கு உள்ள ஆபரணங்களிலும் சிறந்தது. அகலிகை எனபாள் இந்திரனது துற் செயலால் தன் கற்பை இழக்கும் பொழுதும் இந்திரனைப் பார்த்து

"பொன்னால் மணியாலாம் பூண்களுக்கு மேலாம் பூண்
மின்னுடையாவைக்கும் மேலாடை—இன்னுவிக்



கேற்றமாம் ஆவி நிறை யேழையருக்கந் நிறையைத்
தோற்றலினும் உண்டோதுயர்.

என்னும் செய்யுளால் தனது கற்பை யிழக்க மனமில்லாமல் வேண்டி வேண்டி யிரந்திருக்கிறாள். இன்னும் அவன் தன் தேகத்தைச் சிதைவு உண்டுபண்ண வேண்டு மென்றாலும் பண்ணிக் கொள்ளச் சொல்லினாள்.

"அஞ்சலிப்பே னன்றி யறிமொழிகள் கூறுவேன்
எஞ்சலில் பல் ஊழி வாழ்கென்றி சைப்பேன்—மிஞ்சி
நிறையை யழியாமலுயிர் நீக்கப் புகுந்தால்
அறிக இது சத்திய மென்றாள்.

இவ்வாறு பல விதமாகத் தன் கற்பைக்காக்கப் பாடு பட்டிருக்கிறாள். இதனாலும் கற்பென்பதைப் பண்டைக் காலத்திலிருந்தே பழக்கத்தில் கொண்டு வந்திருக்கின்றனர்.

கற்பெனப்படுவது மனவுறுதியே யாகும். ஐம்புலன்களும் நுகர்வதற்கு மனதின் உதவி வேண்டி யிருக்கிறது. மனவுறுதியில்லையேல் கண்ணால் தான் பார்த்த பிற ஆடவரையும் அவர் போன்றவர்களையும் பார்க்க இச்சை கொள்வதும், காதானது இனிய குரலுடைய மற்றவரின் ஒலிக்கிச்சை கொள்வதும், மெய் பிறருடன் சார்வதில் விருப்புக் கொள்வதும், மூக்கு, நா அததன் வழியே சென்று அதனால் வருமின்பத்தைக் கொள்வதும் வழக்கமாகிவிடும். இதனால் மனதினாலும் பரபுருடரைத் தீண்டுதல் கூடாதெனவிளங்குகிறது.

கற்புடைப் பெண்டீர்களில் முதன்மையாய் நிற்பவள் கண்ணகியேயாவாள். அவளே கற்புடைத் தெய்வம்.

இன்றுணை மகளிர்க்கின்றியமையாக்
கற்புக் கடன் பூண்டவித் தெய்வமல்லது
பொற் புடைத் தெய்வம் யாங்கண்டிலமால்"
—சிலப்பதிகாரம்—

என்பதினாலும் கண்ணகியைத்தவிர வேறு உயர்ந்த கற்புடைத் தெய்வம் இருக்குமெனச் சொல்ல முடியாது. ஏனென்றால் தன்

கணவன் தன்னை மாலையிட்ட தின முதல் கூத்தி வழிப் பட்டமையும், தன்னுடன் சேராதிருந்ததையும் நோக்காது, அவன் செலவுக்கு வேணும்மட்டும் உதவிவந்தனள். அவளுக்குத் தன் காதலனுக்குப் புத்தி புகட்டத் தெரியாததன்று. அது கற்புடைப் பெண்களுக்கு அழகல்லவாதலால் தான் ஒன்றும் எடுத்து உரையாடாது அவன் இச்சைப்படியே சென்றனள்.

இன்னும் கோவலன் காதற் கணிகைக் குதித்த பெண்ணாகிய மணிமேகலைக் காதையில்,

"காதலரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது
இன்னுயிரீவரீயாராயின்
நன்னீர்ப் பொய்கை யினளியெரிபுகுவர்
நளிபெரிபுகா அராயினன்பரோ
குடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம்படுவர்
பத்தினிப் பெண்டிர்"

என்பதனால் அக்காலத்தில் தன் காதலரிறந்தால் கற்பு மகளிர் செய்யும் தன்மை விளங்குகிறது. உடன் கட்டையேறல் நமது நாட்டிலிருந்து வந்ததாக அறிகிறோம். உடன் கட்டை ஏறுவதற்கு அவர்களது மனவுறுதியே காரணம். காதலன் மரித்த பின் தனக்கு மிகும் காமநோயால் இச்சரீரம் வாடுவதை விட தாங்களே சரீரத்தை இதுகாறும் எதற்கு பயனுடையதாயிருந்து சென்றதோ அத்துடன் செல்லட்டும் என்னும் ஓர் வகை மனவுறுதி.

இவ்வாறு கற்புடைப் பெண்டீரை மனையாட்டியாக அடையும் பாக்கியத்தையுடையவன் என்றும் மழுங்காத கீர்த்திவானாய் விளங்குகிறான். கண்ணகியினது கற்பினால் கோவலன் பெயர் நிலை நிற்பதும், "எம்மைத்தீண்டு வீராகிற்றிரு நீலகண்டம்" என்று சொல்லி கணவனைத்தன் சரீரத்தால் தீண்டாது வெளிக்குத் தம் பதிகள் போன்று நடந்து வந்தகாலத்தில் சிவபெருமானால் வெளிப்படுத்தப் பட்டதினால் திருநீலகண்டரது சரிதம் நிலவுவதும், காண்கின்றோம்,



கற்புடையபெண்கள் தனது கணவனது பெயரைச்சொல்லக் கூடாது. எப்படி மந்திரங்களை அந்தரங்கமாய்ச்சொல்லிக்கொள்ளவும், அதையே நினைத்து, நினைத்ததைப்பெறவும் கூடுமோ, அம்மாதிரியே கணவனது திருநாமத்தையும் மந்திரமாகக்கருதி, தியானஞ் செய்வார்கள்.

இத்தன்மையவர்களை மனையாட்டியாக அடைந்தவர்களது புகழ் எப்பொழுதும் என்பதற்கு மேற்கோள். மாசில் சீர்ப் பெண்ணினுட்கற்புடையாள் பெற்றானும்" என்று திரிகடுகத்தில் வருவதால் தெரிந்து கொள்க.

இன்னும் நமது நாடுதன் தொன்மைத்தன்மைகளில் மேம்பாடுற்று கற்பரசியாகவாழும் பொருட்டு எல்லாம் வல்லமுழுமுதற் கடவுளை வணங்கி இப்பெரிய விஷயத்தை எடுத்துரைத்ததில் குற்றமிருப்பின் படிப்போர் நீக்கிக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

S. சங்கரலிங்கம்

# திருக்குறள்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகை சான்ற
சொற் காத்துச் சோர் விலாள் பெண்.

சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

# வியாபாரக் குறிப்புகள்

1. உத்தியோகம் செய்பவனும், தொழில் நடத்துவோனும் காரியஸ்தலங்களில் வருவோர்களிடம் உறவாடிப் பேசக்கூடாது. அவர்களுக்குப் பெரிய நன்மை செய்பவனைப் போல் பாசாங்கு பண்ணக்கூடாது. உனக்கு பொறுப்பாய் இட்ட வேலையைச் செய். உன் சொந்தக்காரணத்தால் எவரையும் நிறுத்தி வைக்காதே.

2. காரியமாக வருவோரிடம் வேடிக்கையாகவும் விநோதமாகவும் பேசாதே. கிளைக்கதைகள் சொல்லாதே; அவர்கள் எதிர்பார்த்து வந்த காரியத்தை முடித்துக்கொடு.

3. உன் கஷ்டத்தையும் தொந்தரவையும் வருவோரிடம் சொல்லி யழாதே. அவை நீர் மேற் குமிழி என்று நினை. கஷ்டத்தை வெளியிடுதல் கௌரவமாகாது— பெருமையாகாது. உன்னிடம் வந்தவருக்கும் பலகவலை யிருக்கும். ஆகையால் உன் கஷ்டத்தில் பங்கெடுத்துக் கொள்ள தயாராயிருக்க மாட்டார்.

4. வருவோரிடம் உன் எதிராளி போட்டிக்காரனைப் பற்றிப் பேசாதே. அவனும் இருக்கட்டும் என்ற அபிப்பிராயத்தோடு பேசு. உத்தியோகத்திலும் ஒருவருக்கொருவர் பொறாமை யிருக்கும். எல்லோருக்கும் ஏற்றத்தாழ்வுண்டு. வருவோருக்கு அந்த ரகஸ்யம் தெரியாமலிருக்கட்டும்.

5. கடவுள் படைத்த மனிதவர்க்கத்தில் யானும் ஒருவனென்றே பேசு. பேசுவதில் பெருமைபடுத்திக்கொள்ளாதே.

6. நீ உத்தியோகம் செய்யும், காரியஸ்தலத்துக்கு அகாரணமாய் பந்துக்களையும் மித்திரர்களையும் அழைத்துச் செல்லாதே. ஒருக்கால் அபூர்வமாய் அழைத்துப் போகச் சென்றாலும் சொந்த விவகாரங்களை அங்கே பேசாதே.

7. நிறைவான திருப்தியோடு இட்ட வேலையைச் செய். உன் மனதிலுள்ள அன்பின் பெருக்கை உன் முகமே காட்டிக் கொடுக்கும்.

8. பிறர் அல்லது உனது (அதிகாரி) எஜமானன் காரணங் கண்டோ காணாமலோ கண்டிக்கும் போது மௌனமா யிரு. பதில் சொல்லும் படி கேட்டாலொழிய பேசாதே.

9. எப்பொழுதும் பிறருக்கு உபகாரமாகவே யிரு. உதவி செய்ய முந்திக்கொள். பணிவான வார்த்தையை அன்போடு சொல்; தொழிற்சாலையில் உன்னைச் சேர்ந்தவர்கள் உன்னை அன்போடு பார்க்கும்படி நடந்துகொள். [வால்ட் மேஸன்]

# வாழ்வின் மர்மங்கள்

## பெற்றோர்களும் பிள்ளைகளும்.

ஸ்ரீமதி காந்திமதி எழுதியது.

பெற்றோருக்குக் குழந்தைகளிடத்தில் விசேஷ அன்பு இருந்து வரும். சிலர் வெளியே காட்டிக் கொள்வார்கள். சிலர் மனதில் அன்பை வைத்துக் கொண்டு



பிள்ளைகளைக் காணும்போதெல்லாம் கடு கடுவென புலியைப்போல் கோப முகத்தைக் காட்டி பேசும்போது வெடு வெடு வென்று பேசுவார்கள். பிள்ளைகளை சிறு பிராயத்தில் அடக்கி ஒடுக்கி வந்தாலும் சில பெற்றோர்கள் வயது வந்த பிறகும், இன்னும் அவன் உத்தியோகத்தில் அமர்ந்த பிறகும், அளவுக்கு மிஞ்சிய கண்டிப்பையும் தண்டிப்பையும் விடுகிறதில்லை. இன்னும் சிலர் பிள்ளைக்கு விவாகம் ஆனபிறகும் அதட்டுவதையும் அடிப்பதையும் விடுகிறதில்லை. இம்மாதிரியான துர்ப்பழக்கங்களைப் பற்றி எப்பொழுதாவது சிந்தித்தும் பார்ப்பதில்லை. தனக்குப்பிறகு தனது பிள்ளை தன்னுடைய கௌரவத்தை வகிக்கக்கூடியவன் என்பதை நினைத்துப்பார்ப்பது மில்லை. வயது வந்த பெரிய பிள்ளையை பலபேர் முன்னிலையில் கண்டிப்பதும் தண்டிப்பதும் பெரிய அவமானத்துக்கு இடமாகும். அநேக குடும்பங்களில் பிதாமுகத்தில் விழிக்காதபடி

ரோசமுள்ள பிள்ளைகள் ஓடிவிடுகிறார்கள். பிள்ளையைப்பார்க்கும் போது குளிர்ந்தமுகத்தோடு பார்ப்பதில்லை. அல்ப குற்றத்திற்கும் பிரமாதப்படுத்துகிறது. இம்மட்டோடன்றி வருவார் போவாரிடம் நமது பையன் சங்கதியைக்கேட்டீர்களா? என்று பாரதமாக ஒப்பிக்கிறது வேறு. இவ்வளவும் போதாக்குறைக்கு கோள்சொல்லிக் கோவிந்தனைப்போல் பிதாவுக்கு உபதேசம் செய்து வந்தால் அக்குடும்பத்தில் சமாதானங்கிடையாது.

நின்றால் குற்றம், இருந்தால்குற்றம், நடந்தால்குற்றம், படித்தால் குற்றம், இவைகளை அடுக்கி ஊசியைப் போல் பிதாவின் மனதில் தைக்கும்படி அடிக்கடி சொல்லி வந்தால், பிள்ளைக்கு சித்திரவதை வேறு வேண்டியதில்லை. 'தந்தையடித்தால் தாயணைப்பாள்' என்று சொல்லுவது வழக்கம். தாயும் பிதாவைப்பின்பற்றினால் அப்பிள்ளையின் கதி அதோ கதி தான்.

பிதா தனக்குள்ள புத்தியும் குணங்களும் தன் பிள்ளையிடம் இருக்குமென்று நினைப்பதில்லை. தங்கத்தைப்புடம் போடுவது போல் உன்னத ஸ்தானத்தை அடையவேண்டு மென்று நினைத்துக் கண்டிப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருக்கிறார். பல பேர்களுக்கு முன்னிலையில் தன் பிள்ளையையாவது, உத்தியோகஸ்தனையாவது கண்டித்தால் அவர்களுக்குள்ள அவமானத்தில் இவருக்கும் பங்குண்டு. எப்படியெனில், இப்பேர்ப்பட்ட துர்க்குணமுள்ள பிள்ளையா என்று நினைக்க நேரிடுகிறது. பிதாவையோ—இவ்வளவு முன் கோபியா பொறுமையற்றவரா, பிள்ளையை நாலுபேர்க்கெதிரில் அவமானப் படுத்துகிறாரே, நிதான புத்தியற்றவர் போலும் என்று நினைக்க வேண்டியதாகிறது.

வயது வந்த பிள்ளையை கண்டிக்க அவசியம் நேரிடும் போது ஒருவருமில்லாத தனித்த இடத்தில் அழைத்து நிதானமாய் விசாரித்து உண்மையை அறிந்து அதற்கேற்றபடி நடந்து கொள்வது உத்தமம்.

தந்தை தன் பிள்ளையின் குற்றத்தைக்கண்டு விசாரித்து அடித்துக் கண்டித்தாலும், பிறகு தாயானவள் அப்பிள்ளைக்குத் தேறுதல் சொல்லி, 'இனி ஒருகாலும் அப்படிக் குற்றம் செய்யாதே, நல்ல பிள்ளையாய் நடந்து கொள்' என்று சாந்தமாயும் இனிமையாயும் சொல்லிப் போற்றவேண்டும். தந்தை பிள்ளையைக் கண்டிக்கும் போது மத்தியில் தாய் புகுந்து எவ்வித வேலையையும் செய்யக்



கூடாது. ஏனென்றால் சிலருக்குக் கோபம் வந்தால், தங்களுடைய மனைவியையும் அடித்து விடுவதுண்டு. வேற்று மனிதராயிருந்தால் உதாசினமாய்ப் பேசி விரோதித்துச் கொள்வார்கள் ஒரு காரியத்தின் சித்திக்கே சிறிது கோபக்குறி காட்ட வேண்டியதை விட்டு கடுஞ் சினங் கொள்ளும் சுபாவமுண்டு. இன்னும் சிலருக்குக் கோபம் வந்தால், தீர விசாரியாமல் தீர்ப்பும் தண்டனையும் செய்து விட்டு, பிறகு உண்மை வேறுவிதமாய் வெளியாக, தான் செய்த தவறுதலை நினைத்து துக்கிப்பதுமுண்டு. பெற்ற பிள்ளையாச்சே என்று கூட நினைத்துப்பார்ப்பதில்லை. ஏதோ அக்கம் பக்கங்களில் நடந்த விர்த்தாந்தங்களை நினைத்து இப்பத்திரிகைக்கு எழுதினேன். என் போன்ற சில பெண்களும் கணவன் வெளியிலிருந்து வந்தவுடன், பிள்ளைகள் செய்த குற்றத்தைச் சொல்லி கோபமுண்டாக்குகிறார்கள். அதனால் வரும் தீமை பன்மடங்காகும்.

பிள்ளைகள் படிக்கவில்லை என்றுசிலர் அடிக்கடி தண்டிக்கிறார்கள். நயமும் பயமும்காட்டி, நடக்கிறதில்லை. பரீக்ஷையில் தேறவிட்டால் பிள்ளைகளைப் படாதபாடு படுத்தி விடுகிறார்கள். இந்த தொந்தரவைச் சகிக்க முடியாமல் சில சிறுவர்கள் ஆற்றிலும் குளத்திலும் விழுந்து இறந்து போகிறார்கள். சில தந்தைகள் தங்கள் பிள்ளைகளின் குணாகுணத்தை அறிந்து கொள்ளாதிருப்பது விசனிக்கத் தக்கது. சொன்ன சொல்தவறாமலும், பொய் சொல்லாமலும், காரியத்தில் கண்டிப்பும், விவகாரங்களில் வெட்டொன்று துண்டு இரண்டு என்று பேசியும், வைராக்கிய சித்த முடையவராயும், மந்தமாயும், மௌனமாயும் இத்தியாதி குணங்களில் ஒன்றிரண்டு அமைந் திருக்கும். அவர்களின் குணத்தைக் கண்டு தந்தை அதற்கேற்றவாறு நடந்து கொள்ளாவிடின் கஷ்டம் சம்பவிக்கு மென்று சொல்ல வேண்டுவதில்லை. தந்தையின் மூர்க்க குணத்துக் கஞ்சி சிலர் அயல் தேசம் போய்விடுகிறார்கள். குழந்தைகள் இளம்பிராயத்தில் வெகு துடுக்காகவும் இருக்கலாம். ஆறுமாத ஒருவருடக் குழந்தையினிடமும் கோபத்தைக் காட்டுகிறார்கள். இதுவிஷயமாய் எழுதிக்கொண்டு போனால் அதிகமாய் விடும் என்று சில வார்த்தைகள் எழுதி முடித்து விடுகிறேன். புருஷர்களின் கோபத்தைத் தணித்து ஆற்றுதற்கு நம் சகோதரிகளே சமய சஞ்சீவியாகும். குடும்பங்களில் கூடுமான வரை குழந்தைகளை அன்போடு போற்றி வளர்த்து வருவதே மேலானது.

# ஸ்ரீமத் பகவத் கீதா வாசகம்

17. ஏனெனில் கர்மத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது உண்டு. விகர்மத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது உண்டு. அகர்மத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது உண்டு. கர்மத்தின் போக்கானது அறிதற்கு அரியது.

18. எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காணக்கூடுமோ, எவன் அகர்மத்திலும் கர்மத்தைக் காணக் கூடுமோ, அவன், மனிதர்களுள் அறிவுள்ளவன்; அவன் ஞானநிஷ்டையைக் கூடினவன், கர்மங்களெல்லாவற்றையும் செய்தவன்.

19. எவனுடைய கர்மங்களெல்லாம், ஆசையும் அபிமானமும் அற்றனவோ; ஞானமாகிய தீயினால் ஸகல கர்மமும் எரிக்கப்பட்டனவோ, அவனே ஞானிகள் "பண்டிதன்" என்கிறார்கள்.

20. கர்மத்தின் பயனிலே பற்றைவிட்டு, எப்பொழுதும் திருப்தியுடையவனாய் ஆச்ரயமின்றி நிற்கின்றவன் கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும், அவன் ஒன்றுஞ் செய்கின்றானே இல்லை. ஆச்ரயம் ஒரு பொருளினுடைய அபேக்ஷை

21. ஆசை நீங்கி, மனத்தையும் தன்னையும் இந்திரியங்களோல சரீரத்தையும் அடக்கி, தனது பணம், நிலம், முதலிய ஸகல உடமைகளையும் விட்டுவிட்டு, சரீர கர்மத்தை மாத்திரம் செய்பவன் பாவத்தை யடையமாட்டான். சரீரகர்மம்—சரீரம் நிலைத்திருப்பதற்கு மாத்திரம் வேண்டிய கர்மம்

22. தானாகக் கிடைப்பதைக்கொண்டு திருப்தியடைந்தவன், த்வந்தவங்களைக் கடந்தவன்: பொறாமை இல்லாதவன்: உணவு முதலியன கிடைத்தலிலும் கிடையாமையிலும் ஒப்ப நிற்பவன். அவன் ஒன்றச் செய்தாலும், அதனால் கட்டப்படான்.



23. பற்றில்லாதவனாய், விடுபட்டவனாய், ஞானத்திலே மனம் நிலைத்தவனாய்ப் பகவானுக்காகச் செய்கிறவனுடைய கர்மமெல்லாம் கரைந்து போகின்றன:

24. அர்ப்பிப்பது ப்ரஹ்மம்: ஹவிஸ் ப்ரஹ்மம்: அக்கினியாகிய ப்ரஹ்மத்திலே யஜமானனாகிய ப்ரஹ்மத்தால் ஹோமஞ் செய்யப்படுதல் ப்ரஹ்மம்: ப்ரஹ்மமாகிய கர்மத்திலே ஸமாதியுள்ள அவனால் அடையப்படுவதும் ப்ரஹ்மமே.

25. சில கர்ம யோகிகள் தேவதைகளுக்கே யஜ்ஞத்தைச் செய்கிறார்கள்: வேறொருவர், ப்ரஹ்மமாகிய அக்நியிலே ஆத்மாவை ஆத்மாவினாலேயே ஹோமஞ் செய்கிறார்கள்.

26. மற்றையோர்கள் செவி முதலிய இந்திரியங்களை அடக்கமென்னும் அக்னிகளில் ஹோமஞ் செய்கிறார்கள். வேறொருவர் ஓசை முதலிய விஷயங்களை இந்திரியங்களென்னும் அக்னிகளில் ஹோமஞ் செய்கிறார்கள்.

27. மற்றையோர்கள், இந்திரியங்கள் பிராணன் என்றவற்றின் தொழில்களை யெல்லாம் ஞானத்தால் பிரகாசிக்கப்பட்ட ஆத்ம அடக்கமென்னும் யோகாக்நியிலே ஹோமஞ் செய்கிறார்கள்:

28. மற்றையோர் திரவியமென்னும் யஜ்ஞத்தை யுடையவர். தபஸ் என்னும் யஜ்ஞத்தை யுடையவர்: அவ்வாறே யோகமென்னும் யஜ்ஞத்தை யுடையவர்: ஓதுதலென்னும் யஜ்ஞத்தை யுடையவர்: ஞானமென்னும் யஜ்ஞத்தை யுடையவர். இன்னும் சில யதிகள் கடுமையான விரதங்களை யுடையவர்.

29. சிலர் அபானத்தில் பிராணனை ஹோமஞ் செய்கிறார்கள்; அவ்வாறே சிலர், பிராணனில் அபானத்தை ஹோமஞ் செய்கிறார்கள். சிலர் பிராண அபானன்களுடைய போக்குகளைத் தடுத்து, பிராணாயாமத்திலேயே கருத்தூன்றியவராய் இருக்கிறார்கள்.

30. சிலர் மிதமான ஆகார முடையவராய் வாயுக்களை வாயுக்களில் அர்ப்பிக்கிறார்கள். இவர்களெல்லோருமே யஜ்ஞங்களை அறிந்தவர்கள், கீழ்க்கூறிய யஜ்ஞங்களால் பாவந்தேயப் பெற்றவர்கள்.

31. யஜ்ஞத்தின் சேஷமான அமிருதத்தைப் புஜிப்பவர்கள் சாச்வதமான ப்ரஹ்மத்தை அடைகிறார்கள். யஜ்ஞமில்லாதவனுக்கு இவ்வுலகம் இல்லை; கௌரவரின் சிறந்தோனே மற்றையது எங்கிருந்து இல்லையே இல்லை.

32. இவ்வாறு பலவகையாயுள்ள யஜ்ஞங்கள் வேதத்தின் முகத்திலே விரிந்துள்ளன. அவை யெல்லாம் கர்மத்தினாலானவை யெனத் தெரிந்து கொள். நீ இவ்வாறு தெரிந்து தீமையினின்றும் விடுபடுவாய்.

33. பரந்தப! ஞானமென்னும் யஜ்ஞமானது திரவியங்களாலாகும் யஜ்ஞத்தைப் பார்க்கிலும் மேலானது; பார்த்த! ஸகல கர்மமும் ஞானத்திலே மிச்சமில்லாது முடியப்பெறுகின்றன.

34. ஸாஷ்டாங்க நமஸ்காரத்தினாலும் கேள்வியினாலும்பணிவிடையினாலும்அதனை அறிந்து கொள்; உண்மையைக்கண்டுணர்ந்த ஞானிகள் ஞானத்தை உனக்கு உபதேசிப்பார்கள்.

35. பாண்டவ! நீ அதனை அறிந்து மறுபடியும் இவ்வாறு மயக்கத்தை அடையாயோ எதனால் ஸகலப் பொருள்களையும் நீ உன்னிடத்தும் என்னிடத்தும் காண்பாயோ, அந்த ஞானத்தைத் தேடிக்கொள்.

36. நீ பாவஞ் செய்தோர் எல்லாரையும் பார்க்கிலும் அதிக பாவஞ் செய்தவனானாலும் ஞானமாகிய தெப்பத்தினாலேயே ஸகல பாவங்களையும் கடந்திடுவாய்.

37. அர்ஜுனா! ஜ்வலிக்கின்ற தணலானது விறகுகளை எவ்வாறு நீறாகச் செய்கின்றதோ அவ்வாறே ஞானமென்னும் தணலானது ஸகல கர்மங்களையும் நீறாகச் செய்கின்றனது.

38. ஞானத்திற்கு ஸமமாகத் தூய்மையைச் செய்வது இங்கு இல்லையே இல்லை. யோகத்தால் சீர்திருத்தப்பட்டவன் அதனைத் தானே தன்னிடத்து தக்க காலத்தில் அடைகிறான்.

39. நம்பிக்கையோடு ஊக்கமும் உடையவனாய் இந்திரியங்களை நன்கு அடக்கியவன் ஞானத்தை யடைகிறான் ஞானத்தை அடைந்த பின்னர் தாமதமில்லாது உயர்ந்த ஒழிவைப்பெறுகிறான்.

40. அறியாதவனும் நம்பாதவனும் ஸந்தேகத் தன்மையனும் கெட்டுப் போகிறார்கள். ஸந்தேகத்தன்மையனுக்கு இவ்வுலகம் இல்லை. மற்றை உலகமும் இல்லை ஸுகமும் இல்லை.

41. தனஞ்சய! யோகத்தால் கர்மத்தைத்துறந்து ஞானத்தால் ஸம்சய மறப்பெற்று கவனத்தோடிருப்பவனைக் கர்மங்கள் கட்டமாட்டா.

42. அதனால் நீ அஜ்ஞானத்தாலுண்டாகி நெஞ்சிலே நினைத்திருப்பதாய் ஆத்மாவைப் பற்றிய இச்சந்தேகத்தை ஞானமென்னும் அரிவாளால் அரிவியோகத்தைக்கைக்கொள், பாரத! எழுந்திரு.

# இரதிசுந்தரி

அல்லது

# பின்புத்திக்காரி.

(முன்தொடர்ச்சி)

சித்பூர் முழுதும் தேடிப் பார்த்தார். அங்கே மனைவி யிருக்கும் இடம் தெரியவில்லை. தான் அன்பாய் நேசித்து வந்த மனைவி வஞ்சித்து ஓடிவிட்டபடியால், எங்கேனும் தோற்றுவாளாயின் அவளை ஈட்டியால் குத்தி விடுகிறதென்று தீர்மானித்தார். தான் தனியாயிருந்திருந்தால் எங்கேனும் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டு பொழுதைப் போக்கலாம். குழந்தையொன்று இருப்பதால் என்ன செய்கிறதென்று யோசனை செய்து ஒரு வீட்டை அமர்த்தி அதிலிருந்து வந்தார். சில நாட்கள் சென்றதும் செலவுக்குப் பணமில்லாது பற்றி எங்கேனும் உத்தியோகம் கிடைக்குமா வென்று முயற்சி செய்தார்.

நாலைந்து வியாபாரிகள் ஒன்று கூடி ‘வங்கைநேசன்’ என்ற பத்திரிகையை நடத்தி வந்தார்கள். தக்க அனுபவமுள்ளவர்களைக் கொண்டுகவனிக்கப்படாததால் அபிமானமுள்ளவர்கள் மாத்திரம் ஆதரித்து வந்தார்கள். அப்பத்திரிகையை நிர்வாகம் செய்யத்தக்க மனிதர் கிடைக்கமாட்டாரா என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பத்திரிகைக்கு ஆதாரமாய் அநேக வியாபாரிகள் இருந்தாலும் போட்ட தொகையைத் திரும்பவும் எடுத்துக் கொள்ளும் உத்தேசமில்லை. உள்ளதும் போய், நஷ்டத்துக்கு ஈடு கேளாதிருந்தால் போதுமென் றிருந்தார்கள். அச்சிறந்த ‘வங்கைநேச’னுக்கு கலா சமுத்திரத்தை வாரியுண்ட கவிவாணர், சரஸ்வதி சந்திர சட்டர்ஜி பத்திராசிரியராய் அமர்ந்து வேலை செய்து வந்தார். அவரிடத்தில் ஒருவிசேஷமுண்டு; எத்தனை மாதம் சம்பளங்கொடாதிருந்தாலும் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்பதே கிடையாது. பிரதி மாதமும் வேலைக்காரர்களுக்கு சம்பளத்தை கஷ்டப்பட்டுக் கொண்டே கொடுப்பார்கள். ‘வேலை நிறுத்த’ மில்லாத மாதமேயிராது. இந்த ரகஸ்யங்களை அறியாத மோகனதாஸ் ஆங்கொரு

வேலை காலியா யிருப்பதுபற்றி ஒரு நண்பரிடம் தெரிவித்தார். வங்கைவாசியை செவ்வனே நடத்த வேண்டுமென்று பேராவல் கொண்டார். "வங்கை வாசி'யின் நிர்வாக அங்கத்தினர்களில் ஒருவரான சித்தரஞ்சன போஸ் சிபார்சுசெய்து வேலையில் அமர்த்தினர். மிக்க அன்போடும் விஸ்வாசத்தோடும் வேலை செய்து வந்தார். சம்பளம் மறு மாதம் இருபதாந்தேதி கிடைத்தது. ஹாரிசன் ரோட்டில் வாடகைக்கு ஒரு அறையில் இருந்துகொண்டு குழந்தையையும் பாதுகாத்து வந்தார். ஒழிந்த நேரத்தில் மைத்துனர் இருக்குமிடத்தை விசாரித்துப் பார்த்தார். 'வங்கைநேசன்' வெளிப்பகட்டில் தேர்ந்திருந்தாலும் அஸ்திவாரமில்லாத கட்டடம் போல் இருந்தது. 'வங்கை நேசன்' ஒவ்வொருநாளும் வெளியாகுமா என்றே சந்தேகிக்க இடமுண்டாகும். எவ்விதத்தும் இரவு எட்டு மணிக்காவது அல்லது மறுநாள் பத்துமணிக்குள்ளாகவாவது வெளிவந்துவிடும். இவ்விதம் நித்தியகண்டம் பூரணஆயுளாக நடந்துவந்தது. முதல் மாதச் சம்பளத்தைத் தான் உறுப்படியாக—மொத்தமாக வாங்கினர். மறு மாதம் சில்லரையாகப்பெற நேர்ந்தது. 'வங்காளி' என்ற தினப்பதிப்பின் விஷயங்களை அப்படி அப்படியே பிரசுரித்து விடுவார்கள். உதவி ஆசிரியர்கள் பகல் ஒரு மணிக்கு உத்தியோகத்துக்கு வந்து காரிய ஸ்தலத்தில் உலாத்தி நித்திரை செய்வது தான் உத்தியோகம். அந்த விடத்தில் எட்டுபேர் மொத்தம்; ஆனால் அத்தனை பேர்களும் எஜமான்; ஆசிரியர் மகானுபாவர், மகாகவி, தாடியை ஒரு முழம் உருவிக் கொண்டே ஆபீஸை பிரபஞ்சமாக நினைந்து சர்வ சாட்சியைப் போல் இருந்து போவார். மூன்றும் மாதம் சம்பளம் வருமோ வராதோ என்ற சந்தேகம் மோகனதாஸுக்கு வந்து விட்டபடியால், வேலையை விட்டால் போதுமென்றாய் விட்டது. அவருடைய தரித்திரம் அவருக்கு முன்னே சென்று 'வங்கை நேசனில்' இருந்தது போலும். வேலையை இராஜினமா செய்து விட்டு பாக்கிப்பட்ட சம்பளத்தை வாங்க எவ்வளவோ முயற்சி செய்தார். பிரம்மப் பிரயத்தனமாக முடிந்தது. அவர் சாப்பிட்ட விடுதிக்கு மூன்று மாதப் பணம் கொடுக்க வேண்டியதாயிருந்தது. அவருக்கு ஒவ்வொரு நாளும் ஒரு யுகம் போலிருந்தது. அவருக்கு ஊக்கமில்லை, உற்சாகமில்லை. பெரிய இடத்தில் விவாகம் செய்து கொண்டதற்கு பலன் இதுதானே! ஐயோ, ஒரு ஏழைப் பெண்ணைக் கலியாணம் செய்துக் கொண்டிருந்தால் இந்தக் கஷ்டம் வந்திராது என்று நினைத்து சிந்தை நொந்தார். இருந்த வீட்டையும் காலி செய்து விட்டார். சத்திரங்களில் தங்கிவந்தார். பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதற்கிணங்க அவர் படுந்துயரைத்தை அளவிட்டுச் சொல்ல முடியாதிருந்தது.

# உழைப்பினால் வராத உறுதிகள் ஒன்றுமே யில்லை:

உழைப்பு என்ற சொல்லுக்கு 'உழைத்தல்' ஆகும். 'உழைப்பு' 'முயற்சி' என்பன ஒரு பொருட் சொற்கள். 'விடாமுயற்சி' யென்னுந் தொடர் 'இடைவிடப் படாத முயற்சி' யெனவுணர்த்தாநிற்கும்.

மானிடரும் இதர வுயிர்களும்:—இம்மண்ணுலகின் கண் கடவுள் உயிர்களைப் படைத்ததின் நோக்கம் வாளா விருத்தற்கன்று. மானிடராற் கையாளப்படாதவோர் இருப்புத்துண்டு எவ்வாறு துருப்பிடித்து, ஒளிகெட்டு, இறுதியிற் பொடிப் பொடியாயுடைபடுகின்றதோ, அங்ஙனமே உயிர்ப் பிராணிகள் யாவும் தத்தமயவங்களைச் செவ்வனே யுபயோகிக்காவிடில், அவைகளுங் கேடடையும்; ஆத்மாக்களின் அறிவும் மயங்கும்; எனவே சரீரம் நாசமுறும். காயமிந்நிலையடையவே மனமுந்தன் வேலையில் அசதியை யடையும். ஆகையால் சகல வுயிர்களும் ஊக்கமுடைத்தாயிருத்தல் வேண்டும். எல்லாவற்றினும், பகுத்தறிவு பெற்ற மானிடரே கணமேனுஞ் சும்மா விருத்தலொண்ணாது.

உழைப்பின் இன்றியமையாமை:—இவ்வாறாக முயற்சியுடைமை மிகவுமவசியமான தெனத் தோன்றுகின்றது. இனி, இப்பூகோளத்தின் புராதன நிலைமையையும், தற்காலமது அடைந்திருக்கு முன்னதப் பதவியையும், நாம் சற்று நேரம் ஊன்றிப்பார்க்கின், அவ்வித வுயர்வுக்குக் காரணம் நன்கு புலப்படும். பல்வகையபிவிருத்தியும், நாகரீக மூக்கத்தாலுதித்த வுறுதிப்பொருள்களே. அக்காலத்து வாழ்ந்த முதியோர்கள் முயற்சி யுடையரா யிருந்திலரேல், தற்காலத்து நாமனுபவிக்கும் இருப்புத்தொடர் வண்டிகளும், நீராவிக் கப்பல்களும், ஆகாயக் கப்பல்களும், மின்சார விளக்குகளும், தந்திச்சாலைகளும் சர்வ கலாசாலைகளுமின்னும் பல்வேறு பலன் பயக்கும் பொருள்களும் நம் கண்ணுக்குப் புலப்படவுங் கூடுமோ?

உழைப்பின் பயன்கள்:—முயற்சியுடையார்பால் லெக்ஷிமி மிக மலர்ந்து திரவிய முதவி நிற்பள். முயற்சியில்லா சோம்பேரிகளிடத்து மூத்தாளே என்றும் குடிகொண்டிருப்பாள். அழுக்காறு, அவா, களவு, பொய், கொலை முதலிய ஐவகையும் அவர்களிடத்து மலிந்து காணப்படுவன.

இதுபற்றியே, நம் நாயனாரும்,

> "முயற்சி திருவினை யாக்கும்
> முயற் றின்மை யின்மை புகுத்திவிடும்."

எனக் கூறியுள்ளார். முயற்சி தன்னை வகிப்பவரிடத்திலுள்ள குறையை நீக்குவது மன்றி, தானுறையப் பெறுபவரது மித்திர பந்துக்களுக்கும் பரோபகாரஞ் செய்விக்கும். ஊக்கமுடையோர் உளம் எஞ்ஞான்றும் மகிழ்ச்சிக்கே உறை விடாகும்.

முடிபுரை:—"முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்னும் ஔவையார் வாக்கும் நாயனார் கூற்றைச் சிற்றுரையில் தொகுத்தலேயாகும். இன்னும் விடாமுயற்சியால் விதியையும் வெல்லலாம். இதுபற்றியே நீதிநெறிவிளக்கத்தில் குமர குருபர சுவாமிகள்,

> "உலையா முயற்சிகளைகளு வூழின்றி
> வலிசிந்தும் வன்மையுமுண்டே உலகறியப்
> பான் முளை தின்று மறலியுயிர் குடித்த
> கான் முளையே போலுங்கரி"

என நவின்றுள்ளார்கள். ஆகையால் "உழைப்பினால் வாராத உறுதிகள் ஒன்றுமேயில்லை"

· M. E. வீரபாகு பிள்ளை.



"அப்படியா? என்றால் இயன்ற ஒத்தாசையை ஸர்க்கார் விஷயத்தில் செய்வதற்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் காலையில் இங்கே வந்தவன் பெயர் வேணுவல்ல."

"அது எனக்குத் தெரியும். அவனுடன் வந்த தங்கவேலுவைப்பற்றியல்லவா தங்களைக் கேட்கிறேன்"

"அதுவும் அவன் பெயரல்ல. நான் ஆசாமியைப்பார்க்கவேயில்லை. அவன் வந்தபொழுது நான் வீட்டிலில்லை. ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறான். நாளைக்குக் காலையில் 11- மணிக்கு வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்."

"தங்களிடத்தில் என்ன பெயரென்று சொன்னான்"

"சபாபதி நாயகர்."

"அப்படியா? அவனுடைய ஸஹஸ்ர நாமங்களில் அது ஒன்றாயிருக்கலாம். எனக்குத் தெரியாது. அவன் இங்கே வந்த காரியம் என்னமோ."

செட்டியார் சற்றுத்தயங்கி, விரல்களைச் சுடுக்கிக் கொண்டு சும்மாயிருந்தார்.

ஆசார்யர் "என்னை மன்னிக்கவேண்டும். அது எப்படியானால் எனக்கென்ன. தங்களுக்கு அவன் பரிசயமாயிருப்பதால் கேட்டேனேயொழிய வேறல்ல."

"பரிசயமா? நன்றாய்ச் சொன்னீர். அந்த படவாவைப்பற்றி இன்று வரையில் நான் கேட்டதே யில்லை" யென்று கையை ஓங்கி மேஜை பிளர்ந்து போகும்படி ஒரு குத்துக் குத்தினார். கோபத்தால் இன்னது செய்கிறோமென்று தெரியாமல் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து, "இதை எனக்குக் கொடுக்கும்படி சொல்லி விட்டுப் போயிருக்கிறான். அந்தப் போக்கிரிக்கு என்னையும் என் குடும்பத்தினரையும் பற்றின ஏதோ சில விஷயங்கள் எப்படியோ தெரிந்திருக்கின்றனவாம். அது உண்மையானால் அவைகளை வெளிப்படுத்துவதால் எனக்கு மிகுந்த அசௌகரியம்

நேரிடுமாம். அவனுக்கு 3000 ரூபாய் நோட்டுகளாய் ஏதோ ஒரு மேல் விலாஸத்திற்கு அனுப்பினாலும் நேரில் கொடுத்தாலும் அந்த விஷயமான தஸ்தாவேஜுகளை யெல்லாம் என்னிடத்தில் கொடுத்துவிட்டு, இந்த தேசத்தை விட்டே ஓடிப்போவானாம். தலையை வெட்டினாலும் வாயைத் திறக்கமாட்டானாம்." "அப்படியா? எனக்கு இது வரையில் இது தெரியாதே. இப்படியும் ஓர் தொழில் வைத்துக் கொண்டிருக்கிறானா? இதுவும் செய்வான். இன்னும் அநேகமும் செய்வானென்று எனக்குத் தெரியும். ஆனாலும் இவ்வளவு அபாயகரமான வேலையில் இறங்குவதாயிருந்தால் நடைமுதல் சிலவுக்கே வெகு திண்டாட்டமாய் இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது."

"அதென்னமோ எனக்குத் தெரியாது. இந்தப் பயல் இப்படி அடா பிடியாய்க் கொள்ளையடிப்பதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறானென்று எனக்கு ஸந்தேஹமில்லை."

"தாங்கள் அவன் சொன்னபடி பணம் கொடுப்பதாய் ஏதாவது உத்தேசமுண்டோ! தங்களுடைய சொந்த விஷயத்தைப்பற்றி நான் கேட்டதை மன்னிக்கவேண்டும்"

"அடாடா; அதிலென்ன தோஷம்? அவனுக்கு ஒரு பைசா கூட கொடுக்கக்கூடாதென்று எனக்கு எண்ணந்தான். ஆனாலும் எனக்குத் தெரிந்தவரையில் வேறு வழியைக் காணேன். இப்படிச் சிறுகச் சிறுக அவன் என்னிடத்திலிருந்து பணத்தை கறக்கும்படி இடம் கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும். அல்லது அவனை விரோதித்துக் கொண்டால் அதைக் காட்டிலும் ஏராளமான தொகை நஷ்டமாகும். அதைத் தவிர ரூபாயால் மதிக்கக்கூடாத இன்னும் எவ்வளவோ நஷ்டங்களுண்டு."

இப்படிப் பேசிக்கொண்டே அவருடைய பார்வை அகஸ்மாத்தாய் எதிரிலிருக்கும் சுவற்றில் தங்கப்பட்டம் போட்டு மாட்டப்பட்டிருந்த ஓர் படத்தின் மேல் விழுந்தது. பால்யமும் அழகும் ஸந்தோஷமும் புத்தியும் குதி கொள்ளும் ஓர் சிறு பெண்ணின் உருவப்படம். அதின் ஒரு மூலையில் தங்களு



டைய அன்பிற்குரிய ஆண்டாளென்று, நக்ஷத்திரம் போன்ற எழுத்தில் வரையப்பட்டிருந்தது. செட்டியாரின் பார்வையை கவனித்துக் கொண்டிருந்த ஆசார்யர் அதையெல்லாம் ஒரு நொடியில் மனதில் பதித்துக் கொண்டார். செட்டியார் நிதானித்துக் கொண்டு கடுகடுத்த குரலுடன் இந்த நாயக்கனா? அல்லது வேறு எந்தப் பெயராயிருந்தாலும் சரி. நாளைக்கு அந்தத் திருட்டுப்பயல் இங்கே வரும் பொழுது நீங்கள் அவனைக் கைது செய்ய முடியாதோவென்றார்.

"நான் என்ன செய்கிறது. அவனைப் பற்றி யாதொரு போலீஸ் சார்ஜுமில்லையே! தேசா தேசத்திலுள்ள கலஹக்காரர்களுடன் கூட்டுறவுண்டென்பது மாத்திரம் எல்லாப் போலீஸ் டிபார்ட்டுமெண்டுக்கும் தெரியுமே யொழிய இது வரையிலும் ஒன்றிலும் அகப்படாமல் வெகு சாலக்காய்த் தப்பித்துக் கொண்டு வருகிறான். எங்களுக்கு வேண்டியவன் இவனல்ல, வேணுவே."

"இவனையும் சேர்த்து நீங்கள் ஜெயிலில் அடைத்து விடுவதற்கு ஏதாவது வழி யிருந்தால் சொல்லுங்கள். அந்த விஷயத்தில் நான் பின் வாங்கவில்லை."

"என்னால் கூடுமானால் இது வரையில் செய்யமாட்டேனா? தாங்கள் சொன்னதைக் கேட்ட பிறகு போக்கிரித் தனத்தில் இவன் வேணுவிற்குப் பின் வாங்கியவனல்லவென்று எனக்கு நிச்சயமாய்ப் படுகிறது. ஆனால் ரங்கூன் போலீஸார் இவனை மாத்திரம் பிடித்தனுப்பும்படி சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் தங்களை ஏமாற்றிப் பயமுறுத்திப் பணம் வாங்கப் பார்த்தானென்று ஒரு வார்த்தை போலீஸில் எழுதி வைத்தால் அப்புறம் தங்களிஷ்டப்படி செய்யக் காத்திருக்கிறேன்"

"வேண்டாம். வேண்டாம். இந்த சங்கதி ஒருவருக்கும் தெரியக் கூடாதென்றல்லவா இவ்வளவு சிரமப்படுவது. அந்த தர்ம சங்கடத்தில் நான் மாட்டிக் கொண்டிருக்கிறேனென்று அந்தப் பயலுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையாலல்லவா இவ்வளவு தைர்யமாய் விசை வைத்து முறுக்குகிறான்."

"அப்படியானால் பணத்தை எண்ணிவிடுவதை தவிர வேறு வழி இல்லை யென்று தான் சொல்ல வேண்டும்."

செட்டியார் பெரு மூச்சு விட்டு தலையைக் கையால் தாங்கிக் கொண்டு "ஆனால் தங்களுக்கு வேறு யுக்தி தோன்றவில்லை யென்று நினைக்கிறேன்."

அவர் கேட்ட விதத்தைப் பார்த்தால் மிகுந்த கிலேசத்துடன் ஒரு வழியும் தோன்றாமல் வெளியில் செல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிப்பதாய் விளங்கிற்று.

ஆசார்யார் "இதில் யாதொரு சிக்கலுமில்லையே! இந்தப் பயலால் தங்களுக்கு ஏதாவது விசேஷ கெடுதி நேருவதா யிருந்தால் அதை எப்படியாவது தடுக்கவிரும்பினால் அந்தவிஷயத்தில் ஸர்க்காருடைய் உதவியையும் பெற்றுக் கொள்ளக்கூடாதென்றிருந்தால் வேறு என்ன தான் உபாயம்"

"செட்டியார் சற்றுநேரம் மேஜையின் மேல் விரலால் பராக்காய் கெத்து வாசித்துக் கொண்டிருந்து பிறகு ஆசார்யரைப் பார்த்து இப்பொழுது பாதி கொடுத்து அவன் தேசாந்திரம் போனதாய் அங்கிருந்து தெரிவித்த பிறகு பாக்கித் தொகையை அங்குள்ள ஓர் பாங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளும்படி ஏற்பாடு செய்யலாமென் றெண்ணினேன்.

"ஸர்வோத்தமமான யோசனை. அந்தப்பயல் இங்கிருந்து தொலைந்தானென்றாவது நிச்சயமாய் நம்பலாம். எல்லா சங்கதிகளையும் யோசித்தால் அவனுக்கு ரொக்கமாய் கொடுப்பதே நலம். செக்கு எழுதிக் கொடுத்தால், இந்த சங்கதி வெளியில் வரக்கூடாதென்று தாங்கள் சொன்னதற்கு விரோதமாய் முடியும். நோட்டுகளாய்க் கொடுத்தால் மாற்றுவதற்கு அவன் கஷ்டப்படுவான். அப்படியும் உங்களுடைய உத்தேசம் நிறைவேறுது. போய் வருகிறேன். இந்த விஷயத்தில் தங்களுக்கு என்னால் யாதொரு உதவியும் செய்ய முடியாததைப்பற்றி வருந்துகிறேன்."

"அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள். தங்களுடைய யோசனை எனக்கு வெகு உபயோகமாய் இருந்ததென்று நினைக்



கிறேன்" மேஜையிலிருந்த மணியை அடித்து வேலைக்காரன் வந்தவுடன் "இவர்களை நமது மோட்டார்காரில் கொண்டுபோய் அவர்களுடைய ஜாகையில் விட்டுவா" வென்றார். ஆனால் ஆசார்யர் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி, வண்டியை அனுப்பிவிட்டார்.

மறு நாள் 11 மணிக்கு செட்டியார் மாடி அறையில் உட்கார்ந்திருந்தார். பல கடிதங்கள் தபாலில் வந்து கவனிக்கப்படாமல் மேஜையில் கிடந்தன. கையில் பிரித்து வைத்துக் கொண்டிருந்த சமாசாரப் பத்திரிகையில் கண் நாடியிருந்தாலும் அது வர வர தன் கருத்திலிருந்த விடத்திற்குச் சென்றது. முன் சொன்ன உருவப்படத்தை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அவரை அறியாமல் கண்ணீர் பெருகி, பத்திரிகையின் மேல் விழுந்த ஓசையைக் கேட்டு, விழித்துக்கொண்டு பத்திரிகையை எறிந்து விட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு கூட்டில் அடைக்கப்பட்ட புலியைப்போல் அவ்வறையில் அதி வேகமாய் முன்னும் பின்னும் நடந்து கொண்டே யிருந்தார். அப்பொழுது தெருக்கதவை யாரோ இடித்த சத்தம் காதில் விழுந்தது. உடனே ஒரு வேலைக்காரன் உள்ளே வந்து, "ஸ்வாமீ! சபாபதி நாயக்கர் தங்களுடைய பேட்டிக்காகக் கார்த்துக் கொண்டிருக்கிறா" ரென்றான்.

வரச்சொல்லென்றவுடன் நாயக்கர் அவர்கள் வெகு முறுக்காய் உடை தரித்துக் கொண்டு உள்ளே வந்து வெகு வணக்கமாய் செட்டியாருக்கு வந்தனஞ் செய்து, "தங்களுடைய தர்சனத்திற்காக—"

"ஓய்! அந்தக் கதை யெல்லாம் வேண்டாம். உபசாரம் போதும். நீர் நேற்று இங்கே கொடுத்த கடிதத்தைப்படித்தேன். பணத்திற்காக நீர் விற்கத்தயாரா யிருக்கும் சமாசாரமென்ன சொல்லு"மென்றார். தானும் உட்காரவில்லை. நாயக்கரையும் உட்காரச் சொல்லவில்லை.

"சிங்கப்பூர் செட்டியாருக்கு முக்கியமாய்த் தோன்றும் சில விஷயங்கள்"

"அப்படியானால் அதை அவரிடத்தில் போய்ச் சொல்லிக் கொள்ளும்"

இது கேவலம் வியாபார முறை. தங்களுக்கு முக்கியமானதென்று எனக்குத் தோன்றின ஒரு விஷயத்தை விற்பதற்காகத் தங்களிடத்தில் வந்திருக்கிறேன், அதை வாங்கத் தங்களுக்கிஷ்டமில்லை. சரி; சிங்கப்பூர் செட்டியாரிடத்திற்குப்போகிறேன். ஒருபைசா கூடக் கேட்காமல் அவரிடத்தில் சொல்லுகிறேன். அதைக்கேட்ட பிறகு ஒரு வேளை எனக்கு வேண்டியதை அவர் கொடுக்கலாம். கொடுக்காமலு மிருக்கலாம். ஆனால் அவ்வளவு நன்றியற்றவரா யிருப்பாரா? நான் ரங்கூனில் இருந்தவன். செட்டியாருடைய கடையில் வேலை பார்த்தவன். அவருடைய ஸ்வபாவம் எனக்குத் தெரியும். கண்மூடித்தனமாய் ஒன்றையும் செய்யமாட்டார். தங்களுடைய தகப்பனும் இரண்டு தமயன்களும் எவ்விதமாய் மரணமடைந்தார்களென்று நான் எடுத்துச் சொல்லி, தஸ்தாவேஜுகளால் ருஜுப்படுத்தினால் அந்தக் குடும்பத்தில் பிறந்த தங்களுக்கு தன்னுடைய பெண்ணைக் கொடுக்க சம்மதிக்கமாட்டார். விஷயம் இதே. இங்கே முதல் முதல் வந்தேன். வாங்குவதற்குத் தங்களுக்கு மனமில்லை. கார்யம் பலிக்கு மிடத்திற்குப் போகிறேன். என் பேரில் குற்றமில்லை. அப்புறம் எப்படியாகுமோ. நன்றாய் யோசித்துக் கொள்ளுங்க"ளென்றான்.

"அவனுடைய கழுத்தைத் திருகுவதற்குச் செட்டியாருடைய கைகள் துடித்தன. ஆயினும் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு இதெல்லாம் கட்டிவையும். இந்த தேவரஹஸ்யம் உமக்கு என்னமாய்த் தெரிந்தது"

"என்னமாய்த் தெரிந்ததா? எனக்குத் தெரியாவிட்டால் வேறு யாருக்குத் தெரியும். பிரைவேட் சமாசார விசாரணை ஆபீஸை வைத்து நடத்தும் எனக்குக் குறிப்பான புள்ளிகளைப் பற்றி ஒவ்வொரு விஷயத்தையும் தெரிந்து கொள்வதே வேலை. என் சக்தியோ அபாரமானது. என்—"

"வாயை மூடு. கேட்டதற்கு மாத்திரம் பதில் சொல்வது போதும். உனக்கு இதை ருஜுப் படுத்துவதற்கு ஆதாரமான தஸ்தாவேஜுகள் எங்கே, யென்றார்.



நாயக்கர் தான் கொண்டு வந்திருந்த தோல்பையிலிருந்து நாடாவால் கட்டப்பட்டிருந்த ஓர் காயிதச் சுருளைச் செட்டியாரிடத்தில் கொடுத்து, 3000 ரூபாய் எனக்குக் கொடுத்தால் இவைகளைத் தங்களிஷ்டப்படி செய்யலா" மென்றார்.

செட்டியார் ஏதோ துஷ்ட ஜந்துவைத் தொடுவது போல் அந்தக் கட்டை வெறுப்புடன் அவிழ்த்து, ஒவ்வொரு கடிதமாய்ப் படித்துப் பார்த்து "ஓய்! இந்தக் காயிதக் குப்பலின் விலையென்ன?" வென்றார்.

"ரூபாய் 3000 என்று சொல்லி யிருக்கிறேனே"

"என்ன தாறுமாறாய்ப் பேசுகிறீர். ஏகத்தாராய் வாரிக் கொடுத்தாலும் இது ஒரு ரூபாய் கூடப் பெறாது. இதற்கா 3000 ரூபாய்."

"இந்தக் கடிதங்களுக்காகவில்லை. நான் ஒருவரிடத்திலும் சொல்லாமலிருப்பதற்காக பணம் கொடுக்கவேண்டும். இந்தக் கடிதங்களின் விலை ஒரு ரூபாயோ அரை ரூபாயோ. இவைகளில் அநேகம் இப்பொழுது கிடைக்காது. மற்றவைகளை ஸம்பாதிப்பதற்கு பணம் கொஞ்சமாய்ப் பிடிக்குமோ. இவைகளுக்காக தாங்கள் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை; நான் இந்த சங்கதியை வெளியிடாமலிருப்பதற்காகவல்லவா ரூபாய் கேட்கிறேன். அப்பொழுது இவைகளை இனமாய் எடுத்துக் கொள்ளலாம்."

"அப்படியா? என்ன தாராளம்! என்ன கருணை!"

"பரிஹாஸம் பண்ணமாட்டீர்களா? ருஜுவா வேண்டும். அதோ அந்தக் காயிதக் கட்டில் இருக்கிறது போதாதோ. அந்த சங்கதிகள் நடந்த காலத்திலிருந்தவர்களெல்லாம் இப்பொழுது மலையேறி விட்டார்கள். ரிக்கார்ட்டுகளைக் காட்டாவிட்டால் ரங்கூன் செட்டியார் நம்புவாரா? தங்களுடைய தகப்பனும் தமையன்களும் இறந்த பொழுது நடந்த போலீஸ் விசாரணை ரிப்போர்ட்டுகள் அதோ விருக்கின்றன. எல்லோரும் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். மூத்தவர் தற்செயலாய் துப்பாக்கி வெடித்து

அதனால் சாக வில்லையென்று டாக்டர் பிரமாணமாய் எழுதி வைத்திருக்கும் உறுதிமொழி அதோ விருக்கிறது. அடுத்த தமயனுடைய உத்திரவால் விஷத்தை வாங்கிக் கொண்டுவந்த வேலைக்காரனுடைய வாக்கு மூலம் அதோ விருக்கிறது. இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியார் தங்களுடைய தகப்பனார் ஸ்வபாவமாய் இறக்க வில்லையென்று ருஜுப்படுத்தி, பாலிஸி பணத்தை கொடுக்க மாட்டோமென்று எழுதின கடிதத்தின் நகல் அதோ விருக்கிறது. அடே அப்பா! இவைகளை ஸம்பாதிப்பதற்கு பணம் கொஞ்சமாகவா பிடித்தது. அதன் அருமை ரங்கூன் செட்டியாருக்கு நன்றாய்த் தெரியு" மென்றார்.

"நீ சொல்லுகிறபடி நான் செய்தால் நீ ரங்கூனுக்குத் திரும்பிப் போவா யென்று நிச்சய மென்ன?"

"என் வார்த்தையை நம்புவதைத் தவிர வேறில்லை."

"அதெல்லாம் என்னிடத்தில் பலிக்காது. ரங்கூனுக்குப் போய்ச் சேர்ந்ததாய்க் கடித மெழுதினால் உடனே பணத்தை அனுப்பி விடுகிறேன்."

"பண மில்லாமல் இங்கிருந்து போவதெப்படி? இங்கே நான் கொடுக்க வேண்டியவர்களுக்கு என்ன ஸால்ஜாப் சொல்லி விட்டுப் போவேன். என்கையிலிருந்த பணமெல்லாம் இந்த வேலையில் கரைந்து போய் விட்டது.

"அப்படியானால் இப்பொழுது நீர் கேட்டதில் பாதித்தொகை வாங்கிக் கொள்ளும். ரங்கூனிலிருந்து எனக்கு எழுதினால் அங்கே என் ஏஜண்டை உமக்கு மிகுதியைக் கொடுக்கும்படி உத்திரவு செய்கிறேன்."

நாயக்கர் நோட்டுகளைப் பார்த்தவுடன் சற்றுத் தயங்கினார். சிங்கப்பூர் செட்டியாரிடத்தில் போய் தனக்கு வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்வதாய் வாயடி அடித்துப் பார்த்தார். பலிக்கவில்லை. செட்டியாரோ செய்வதாய்த் தோற்றவில்லை. ரூபாயோ கண்ணைக் காட்டி அழைத்தது. சிங்கப்பூர் செட்டியாரிடத்தில் சாவரன் ஒரு வேளை கிடைத்தாலும் கிடைக்கலாம்; சவுக்கடி கிடைப்பது நிச்சயமென்று தெரியும். கையில் அகப்பட்டதை ஏன் விடவேண்டும்.



அதைக் கனிவத்துக் கொண்டிருந்த செட்டியார் நோட்டுகளை எடுத்து மேஜையில் வைத்து விட்டு, மூன்று 500 ரூபாய் பைகளை மேஜையின் மேல் வைத்தார். நாயக்கருக்கும் நோட்டுகளை இப்படி மாற்றுவதென்ற கவலை ஒழிந்தது. தன் கையிலிருந்த காயிதக் கட்டுகளை செட்டியாரிடத்தில் கொடுத்து, அடுத்த கப்பலில் என்னைப் பார்க்கலாம். ரங்கூனுக்குப் போனவுடன் தங்களுடைய கடை ஏஜண்டினிடத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நமஸ்கார" மென்று வந்தனஞ் செய்து, தெருவில் வந்து ஒரு கோச்சு வண்டியை பேசிக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு விடும்படி சொன்னான். "ஆனால் நாலு வீட்டிற்கு அப்பால் லாந்தல் கம்பத்தில் சாய்ந்து கொண்டிருந்த ஓர் அசாமி வண்டிக்காரனை ஓர் ஜாடை செய்து தடுத்து, நாயக்கரிடத்தில் வந்து ஸபாபதி நாயக்கரவாள்! நான் ஸி ஐ டி இன்ஸ்பெக்டர். தனபால் ஸிங்க். யத்திராஜலு செட்டியாரிடத்திலிருந்து பொய்த் தகவல் சொல்லி பயமுறுத்தி, ரூபாய் 1500 ரொக்கமாய் ஐந்து நிமிஷத்திற்கு முன் வாங்கினதற்காக உம்மை வாரண்டின் மேல் கைது செய்திருக்கிறேன். கூச்சலிட்டாலும் தப்பிக்க முயன்றாலும் கைவிலங்கு மாட்டுவேன். அவச்யமானால் சுட்டுக் கொல்லவும் எனக்கு அதிகாரமுண்டு. பதில் பேசக்கூடாது. சொல்லவேண்டியதை மாஜிஸ்டிரேட் முன்பாகச் சொல்லிக் கொள்ளலா" மென்றார்.

"வண்டியில் ஏறி நாயக்கருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கதவைச் சாத்தி, வண்டிக்காரனுக்கு ஜாடை செய்தார். வண்டி காற்றாய்ப் பறந்தது. நாயக்கர் ஒன்றும் தோன்றாமல் சற்று பிரமித்து, பிறகு திடப்படுத்திக் கொண்டு, என்னைக் கைது செய்வதற்கு உனக்கென்ன அதிகாரம். நீ போலீஸ்காரனென்பதற்கு அடையாளமெங்கே? என் பேரிலுள்ள வாரண்டைக் காட்டு பார்ப்போ" மென்றார்.

"இரைந்து பேசாதே. செட்டியார் பிரமாதஞ் செய்து உன் மேல் புகார் எழுதி வைத்திருக்கிறார். வாரண்டைக் கோர்ட்டில் பார்த்துக் கொள்ளலாம்."

"அவன் போக்கிரிப்பயல். என்னைப் போன்ற பெரிய மனுஷனைப் பற்றி—"

"சை! வாயை மூடு. நீ சொல்லவேண்டிய தெல்லாம் கோர்ட்டில் வந்து உன் பாட்டனிடஞ் சொல்லிக்கொள். பேசாமல் என்னுடன் வருகிறாயா? இல்லாவிட்டால்—."

"ஐயோ! என்னை எங்கே கொண்டு போகிறாய். ஜெயிலுக்கு வரமாட்டேன்."

"அடே! கழுதை! உன்னை யார் ஜெயிலுக்குக் கொண்டு போகிறார்கள். மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் உன்னைத் துலைத்துத் தலை முழுகுகிறேன்."

"நான் வரமாட்டேன். இதென்ன விளையாட்டென்று நினைக்கிறாயா? நான் பர்மாவைச் சேர்ந்தவன். சென்னைப் போலீஸிற்கு என்னைப் பிடிக்க அதிகாரமில்லை. பர்மா கமிஷனருக்குத் தந்தியடிக்கிறேன் பார்."

எழுந்து கதவைத் திறந்து வெளியில் போகப் பார்த்தான். ஆசார்யர் அவனை ஒருகையால் கழுத்தைப் பிடித்து நெறித்துத் தன் காலடியில் தள்ளி "மடப்பயலே! அப்பொழுதே சொன்னேனே! ஒகோ! என்ன சட்டைப் பையில் கைத்துப்பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறாயா? பலே போக்கிரிப் பயலாயிருக்கிறா" யென்று சொல்லிக்கொண்டே கண் பிதுங்கி, மூர்ச்சை போய் ஒன்றும் தோன்றாமல் சாணிக் குப்பையாய்க் கிடந்த நாயக்கருடைய சட்டைப் பையிலிருந்து ஒரு சாவியை எடுத்துத் தோல் பையைத் திறந்து, அதில் மூன்று 500 ரூபாய்கள் இருக்கக் கண்டு, அதை மறுபடியும் பூட்டிச் சாவியைத் தன் பையில் போட்டுக் கொண்டார்.

அதற்குள் நாயக்கர் பிரமை தெளிந்து, தலையை நிமிர்ந்து, ஆசார்யரை எலி பூனையைப் பார்ப்பதுபோல் கடைக் கண்ணால் திருட்டுத்தனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான்; வண்டி திடீரென்று நின்றுவிட்டது ஆசார்யர் தலையை வெளியில் நீட்டி, "என்ன சங்கதி" யென்றார். "வந்துவிட்டோ" மென்றான் வண்



டிக்காரன்; போலீஸ் கமிஷனர் ஆபீஸ் பத்தடி தூரத்தில் இருந்தது. ஆசார்யர் "அடே 748! இங்கே வா" வென்று யாரையோ கூப்பிட்டுக்கொண்டு கதவைத்திறந்து, இறங்கி, ஆபீஸை நோக்கி நடந்தார். அந்த சமயத்தில் கோர்ட்டிலிருந்து தற்செயலாய் நாலைந்து கானிஸ்டேபில்கள் ஏதோ அவசரகார்யமாய் வெளியில் வந்தார்கள். நாயக்கர் இதையெல்லாம் பார்த்துக் கிலி பிடித்து கோச்சு வண்டியின் மற்றொருகதவை மெதுவாய்த்திறந்து வெளியில் நழுவி, செத்தேன் பிழைத்தே னென்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட்டமெடுத்தான். அந்தத் தெருக்கோடி தாண்டி அடுத்த சந்தில் திரும்புவதற்கு முன் எதிரில் வந்த ஒரு கானிஸ்டேபிலின் மேல் முட்டிக்கொண்டு விழுந்தான். அவனும் திடுக்கிட்டு, புலியைக் கிலி பிடித்ததென்றதைப்போல் தன்னையும் தாக்கக் கூடியவன் யாரென்று ஆச்சர்யமடைந்து, சற்று தூரத்தில் நின்று ஆசார்யரைக்கூவியழைத்து; "எதற்காக இந்த அசாமி இப்படி, என்மேல் விழுந்து தலைவிரிகோலமாய் ஓடுகிறா" னென்றான்.

போலீஸ் ஆபீஸை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த ஆசார்யர் ஒன்றுந் தெரியாதவரைப்போல் திரும்பி, "அடே போக்கிரிப் பயலே! ஓடுகிறாயா?" வென்று தானும் துரத்தினார். அதைக்கண்டு கானிஸ்டேபிளும் அவருடன் ஓடினான். இவர்களுடைய காலடிச் சத்தத்தைக் கேட்ட நாயக்கர் மாயமாய்ப் பறந்தார். சற்று தூரம் போனபின் ஆசார்யர் "அடே அப்பா! என்னால் முடியாது. அந்தத் திருட்டுப் பயல் துலைந்தால் துலையட்டும். என் கெடியாரத்தைச் சட்டைப் பையிலிருந்து திருடினதற்காக அவனை ஸ்டேஷனுக்கு இழுத்துக்கொண்டு வந்தேன். சாமான் அகப்பட்டுவிட்டது. நீ சிரமப்பட்டதற்காக இதை வெற்றிலை பாக்கிற்கு வைத்துக்கொள்ளென்று நாலணாவை அவனுடைய ஜேப்பில் ஓசைப்படாமல் போட்டு விட்டு, ஓர் ஜட்காவைப் பிடித்துக்கொண்டு தன்னிருப்பிடம் சென்றார். நாயக்கர் தலை தப்பினது போதுமென்று எடுத்த ஓட்டத்தில் ரூபாய் 1500 வைத்திருந்த தோல்பையை கோச்சு வண்டியில் வைத்துவிட்டு வந்தோமென்ற ஞாபகமேயில்லை. ஆனால் ஏழைகளுக்கு இறங்குகிறவரும் அநாதைகளை ரக்ஷிக்கிறவருமான நமது மாயாசாரியர் அவன் மேல் கிருபைகூர்ந்து அதை எடுத்து

பத்திரம் பண்ணி வைத்தார். ஸபாபதி நாயக்கர் வந்து கேட்டால் கொடுப்பதற்குத் தயாராகவிருக்கிறார். எப்பொழுது வந்து கேட்கப்போகிறாரென்பது மாத்திரம் ஈச்வரனுக்கும் தெரியாது.

கதை—II

## முத்துமாலை

பயோனீரென்ற ஆங்கில சமாசாரப் பத்திரிகையில், ஒருநாள் அடியிற் கண்ட வர்த்தமானம் வரையப்பட்டிருந்தது.

“பஞ்சாப் தேசத்திலுள்ள ஸோமலா நாட்டின் மஹாராஜா, நேற்று சுமார் பகல் இரண்டரை மணி நேரத்திற்கு, மஸூரியென்ற விடத்தில் பரலோகஞ் சென்றார். வாயு ஜ்வரத்தாலுண்டான ஹிருதய வியாதி மேலிட்டதே அதற்குக் காரணம். தான் ஸமீபத்தில் மரணமடைவதை அறிந்த அவ்வரசன், தனக்கு மிகவும் நம்பிக்கையுள்ள டேய்லரென்ற ரெஸிடென்ட் துரையைத் தருவித்துக் கடைசி வரையில் அவருடன் பேசிக்கொண்டிருந்தார். அதற்கு ஐந்து மணிக்குப் பிறகு, ஸோமலாவில், வயஸ் முதிர்ந்த திவான் ஸாஹிப், பட்டத்திற்கு வார்ஸான இளவரசனுக்கு, அந்த துக்க ஸமாசாரத்தைச் சொல்லப் போகையில், யாரோ ஒருவன் தூண் மறைவிலிருந்து அவர் மேல் பாய்ந்து, குத்திக் கொன்றான்.

இறந்த அந்தப்பட்டத்திற்குப் போட்டி ஏற்பட்டால், கலகமும் குழப்பமும் கொலையும் நேருவது வழக்கம். ஆனால், இந்த விஷயத்திலோ, அப்படி யாதொன்றுமில்லை. காலஞ் சென்ற மஹாராஜா, வயதாலும் நற்குணங்களாலும் நீதி தவறாத செங்கோலாலும், யாவருக்கும் கண்ணுக்குக் கண்ணாயிருந்தவர். ஒரு விரோதியுமில்லாத அஜாத சத்துருவென்றே அவரைச் சொல்லவேண்டும். அவருடைய மூத்த குமாரனான கோபால விஹ்ம மஹாராஜாவிற்கு வயஸ் 19. நன்றாய் இங்கிலீஷ் படித்தவர், தகப்பனுக்குத் தகுந்த



புத்திரன்; தேக அசௌக்யத்தால் மஹாராஜா ராஜ்யத்தை விட்டு வெளியில் இருக்க நேர்ந்தபொழுது, இளவரசையே ஸகல கார்யங்களையும் பார்க்கும்படி நியமித்துப் போனார். ஆகையால், இவ்விருவருக்கும் மிகுந்த ஒற்றுமையும் விச்வாஸமும் நம்பிக்கையுமுண்டு. மஹா ராஜாவிற்குச் கெடுதியைச் செய்து இளவரசு அடையவேண்டிய பயன் யாதுமில்லை. மேலும், படுகொலையுண்ட திவான் ஸாஹிப் வெகு காலமாய் ராஜ்யத்தில் பாடுபட்டவர். அரசனுக்கும் பிரஜைகளுக்கும் நடு நிலையாயிருந்து, இருவருடைய க்ஷேமத்தைக் கோரிச் சற்றும் பயமில்லாமல், தன் கடமையைச் செய்யும் தீரன். ஆகையால், இந்தக் கொலை நடந்ததற்குக் காரணம் யாதென்று தெரியவேயில்லை.

ஸோமலா தேசம் மஸூரியிலிருந்து 500 மைல் தூரத்திற்கு மேலிருக்கும். அங்கிருந்து ஸோமலாவிற்கு ஒரே தந்தி, மஹாராஜா மரணமடைந்த தினத்தில் கொடுக்கப்பட்டது; ரெஸிடென்ட் துரை, திவான் ஸாஹிப்புக்கு, ரஹஸ்யமான ஸங்கேத வார்த்தைகளால், மஹாராஜாவின் மரணத்தைத் தெரிவித்தார். மறுநாட்காலைக்கு முன் ஸோமலாவில் அந்தச் சமாசாரம் தெரிய சற்றும் நியாயமில்லை.

“இந்தியா கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தை நன்றாய் விசாரித்து, இனி இவ்வித ஸம்பவங்கள் இதர ஸமஸ்தானங்களில் நேராதபடி, தகுந்த ஏற்பாடுகளைச் செய்வார்கள்.”

எங்களுடைய கிளப்பில் இந்த விஷயத்தைப்பற்றி அன்று முழுவதும் பேசிக்கொண்டிருந்தோம். என் பட்டாளத்துக் கர்னல் துரை, என்னைப் பார்த்து “இது உனக்குத் தகுந்த வேலையே. ஸர்க்கார், உன்னையும் அர்ஜுன ஸிங்கையும் ஓயாமல் இவ்விதமாய் வேலை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். பட்டாளத்தில் நியாயமாய் உங்களுக்கேற்பட்ட வேலை செய்வதற்கு, உங்களுக்கு அவகாசம் கிடைப்பதில்லை. அது யாருடைய குற்றம்? ஸர்க்காருடையதல்ல. ஒவ்வொரு தடவையிலும், தவறாமல், நீங்கள் ஒப்புக் கொண்ட கார்யத்தை, மேலதிகாரிகள் எதிர்பார்ப்பதற்கதிகமாய்ச் செய்து முடித்தால், மென்மேலும் உங்களுக்கு வேலை கொடுக்காமலிருப்பார்களா? இந்த உபத்ரவத்திற்காகவாவது

இந்தத் தடவை அனுப்பின கார்யத்தை முடிக்காமல், அபஜயத்துடன் திரும்பிவா. உன்னிடத்திலுள்ள மதிப்புக் குறைந்து, உன்னைத் தொந்திரவு செய்யமாட்டார்கள். எனக்கும் பட்டாளத்து வேலை சரியாய் நடக்கு''மென்று வேடிக்கையாய்ச் சொன்னார்.

நான் அதை ஒப்புக்கொள்ளாதவனைப் போல் சிரித்து "அதெங்கே? ரெஸிடென்டு துரை வெகு நிபுணர். அந்த நாட்டில் நீக்குப் போக்குகள் யாவும் அவருக்கே நன்றாய்த் தெரியும். எங்களுடைய உதவி அவருக்குச் சற்றும் வேண்டியதில்லை'' யென்றேன்.

அவர் "எனக்குத் தெரியாது. இந்தியா கவர்ன்மெண்டிலுள்ள வில்லாதி வில்லனான மந்திரியும், போலீஸ் அதிகாரியும், அர்ஜுனஸிங்கின் தூசி விலை பெறுவார்களா? இவ்வளவு காலம் அவனுடன் நெருங்கிப் பழகியும், உனக்கேன் தெரியவில்லை? பழகப் பழகப் பாலும் புளிக்குமென்பது நிஜமாயிற்''றென்றார்.

மறுநாட் காலையில் துருப்புகளின் கபார்த் முடிந்த பிறகு கர்னல் துரை என்னை அழைத்து, "நேற்று நாம் யோசித்தபடியல்ல. இது இன்னும் பிரமாதமான விஷயமாய்த் தோன்றுகிறது. இளவரசான கோபாலஸிங்கும் மாயமாய் மறைந்தானாம். நீயும் அர்ஜுனனும் ஸோமலாவிற்குப் போகவேண்டுமென்றும், ஒரு பூரா பட்டாளத்தையும் சில நாள்கள் அங்கே தங்குவதற்கு வேண்டிய ஆஹாரத்தையும் யுத்தத் தளவாடங்களையும் தயார் செய்யும்படிக்கும் ஸர்க்கார் கண்டிப்பாய் உத்திரவு செய்திருக்கிறார்க''ளென்றார்.

அப்படியே நாங்கள் லாகூரிலிருந்து ஸோமலாவிற்கு அதிவேகமாய்ப் போய்ச் சேர்ந்தோம். டைலர் துரை வெகு ஸரஸி; ஆங்கிலேய பெரிய அதிகாரிகளைப்போல், கர்வமும் இறுமாப்பும் கொண்டவரல்ல. வெகு நாளைக்கு முன், அவர் இங்கிலாந்திலிருந்து வந்தபொழுது, பம்பாயில் என்னுடன் தாராளமாய்ப் பேசிப் பழகினது போல், இப்பொழுதும் என்னை வெகு பிரியமாய் வரவேற்றித் தனக்குத் தெரிந்த யாவற்றையும் ஒளிக்காமல் என்னிடத்தில் சொல்லி, "எப்படியாவது இந்தக் கோடி முறுக்கைச் சரிப்படுத்தி, என் பெயர்



கெடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது உன் பொறுப்பு. வேறொருவனை இப்படி நம்பமாட்டேன். வேறொருவனிடத்தில் இப்படிக் கேட்டுக்கொள்ள மாட்டேனெ''ன்றார்.

மஹாராஜாவின் பிரேதத்தைப் பனிக்கட்டியில் பத்திரம் செய்து, ஸ்பெஷல் ரயில் வழியாய் ஸோமலாவிற்குக் கொண்டு வந்தார்கள். அங்கே புராதன குலாசாரப்படி, வைதிகக் கிரியைகளுடன், அவருக்குத் தகனம் முதலிய சடங்குகள் நடத்த வேண்டும். திவான் ஸாஹிப்பிற்கு உத்தரகிரியைகள் கிரமமாய் நடந்தேறின. மஹாராஜா காலஞ்சென்ற மறுநாள் ராத்திரியிலேயே இளவரசான கோபாலஸிங் காணாமல் போனார். வேறு விசேஷமில்லை. அந்த நகரமெங்கும் அல்லோலகல்லோலமாய், ஒன்றும் தோன்றாமல், ஒருவர் சொன்னதை மற்றவர் சொல்லாமல், தட்டுக்கெட்டுத் தடுமாறி, ஒரே குழப்பமாயிருந்தது. ஸமஸ்தான உத்யோகஸ்தர்களாவது, வேலைக்காரர்களாவது, நடந்ததை விபரமாய்ச் சொல்ல முடியாமல், தோன்றினபடியெல்லாம் கதை கட்டினார்கள். ஆனால், பொக்கிஷத் தலைவனான ராமச்சந்திர பண்டிதர் மாத்திரம் சற்றும் கலங்காமல், மனக்குழப்பமில்லாமல், தெளிவான புத்தியும் தடையற்ற யுக்தியுமுடையவராய் யாவற்றையும் நடத்தி வந்தார்; அவரோ கோடீஸ்வரன்; லௌகிக வைதிக சாஸ்திரங்களில் நிபுணன். ஹிமயமலையைப்போல் கலங்காத தீரன்; ஸமுத்ரத்தைப் போல் ஆழ்ந்த ஹிருதயமுள்ளவன்; கம்பீரமான உருவமும், நிகரற்ற தேஹ வலிமையும், மனதைக் கவரும் அழகும் வாய்ந்தவன். நாங்கள் வரும் வரையில் ராஜ்யத்தில் ஸகல கார்யங்களையும் பார்த்து வந்தான். திவான் ஸாஹிப்பின் பிரேதக்கிரியைகளை வெகு சிறப்பாய் நடத்தினான்; மஹாராஜாவின் உத்திரக் கிரியைகள் தகுந்தபடி நடப்பதற்கு வேண்டிய ஸகல ஏற்பாடுகளையும் குறைவறச் செய்தான். காணாமற்போன கோபாலஸிங்கைத் தேடுவதற்கு அபாரமான முயற்சிகளைச் செய்தான்.

நாங்கள் அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டவுடன், வெகு ஜாக்ரதையாயும் மெதுவாயும், தனக்குத் தெரிந்ததைச் சொன்னான். அவன் கேவலம் நிஜத்தையே சொல்லுகிறவனென்றும்,

அதனால் பிறருக்கு உண்டாகும் கெடுதியைப் பற்றி மிகுந்த வருத்த மடைந்தவனென்றும், எங்களுக்கு பார்த்த வுடனேயே தெரிந்தது.

கோபால ஸிங்கின் தாய் வெகு காலத்திற்கு முன்பே மரண மடைந்தாள். ஆனால், மஹாராஜாவின் பிரிய பார்யைகளில் ஒருத்தி யான மோதீபாய் என்பவளுக்கு ஏழு வயதுள்ள ஓர் புத்திரனுண்டு. அவனுக்குத் தகுந்த ஏற்பாடுகள் காலஞ்சென்ற அரசனால் குறை வரச் செய்யப் பட்டிருந்தன.

இதெல்லாம் டைலர் துரைக்குத் தெரியாதவிஷயமல்ல. ராமச் சந்த்ர பண்டிதர் இதைச் சொன்னவுடன், ஒருவரை யொருவர் உற் றுப் பார்த்தார்கள். ஆனால், ஆழ்ந்த நெஞ்சும் அஞ்சாத தைர்யமு முள்ள பண்டிதர், தன் வார்த்தைகளுர்கு ஏதோ விசேஷமான கரு த்து வைத்துப் பேசுவதாய், முகஜாடையால் சற்றேனும் காட்டிக் கொள்ள வில்லை.

நானும் துரையும் பண்டிதருமே தனித்திருந்தோம். அர்ச்சு னன், கேவலம் பட்டாளத்து குமாஸ்தா வென்னும்; துருப்புகளை ஆஜர்பார்ப்பது முதலிய வேலைகள் மாத்திரம் அவனுக்குரியவை யென்றும், அதைத் தவிர எங்களிருவருக்கும் வேறு ஸம்பந்த மில்லையென்றும், அங்கிருந்த ஜனங்கள் நினைக்கும்படி நடந்து கொண்டோம்.

டைலர் துரை "அந்த ராணி எங்கேயென்"றார். பண்டிதர் "அந்தப் புரத்தில்" மற்றவர்களைப் போல், டைலரைப் பார்த்து, ஸாஹிப் என்றாவது துரைவாள் என்றாவது சொல்வதற்கு இணங் காத பண்டிதருடைய மனப்பான்மை தெரிந்தது. துரை நான் அவளைப் பார்க்க வேண்டும்;" "பண்டிதர்—முடியாது. அவள் கோ ஷாவென்றறியீர்களா?" டைலர்—"நானென்ன குழந்தையா? நானும் இவரும் அந்தப் பெண்ணை இவ்விடத்தில் ஒருமணிக்குள் எப்படியாவது பார்க்க வேண்டும்" "பண்டிதர்" எனக்கென்ன? இது வெளியில் தெரிந்தால் பெரிய அதிருப்தியும் கல்ஹமும் உண் டாகும் இப்பொழுது இருப்பதே போதாதா?"


# கதாரத்னாகரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 2.

வெளி நாடுகளுக்கு ரூ. 3-8.

922ஞ ஜனவரிமீ] [துன்மதிஞ தைமீ


3- MAY 1922

## அட்டவணை


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | இல் வாழ்க்கை அல்லது சமுசாரம் | 267 |
| 3. | மதிப்புரை | 271 |
| 4. | திருவாசகத்தின் பெருமை | 272 |
| 5. | அன்பு | 277 |
| 6. | கோபமும் அதனாலாகிய தீமையும் | 265 |
| 7. | பொறை யுடைமை | 290 |
| 8. | விநோத கதா மஞ்சரி | 33 |


## கதாரத்னாகரம் 3-ம் தொகுதி.

நமது கதாரத்னாகரம் மூன்றாவது தொகுதி வே ண்டு மென்று அநேகர் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். 1920 நவம்பர்மீ முதல் தொடர்ந்த நாவல்கள் ஆரம்பம் செய்திருக்கிற படியால் அந்த மாதத்திய—அதாவது 6-வது சஞ்சிகையிலிருந்து 12-வது சஞ்சிகை வரை ஆக 7-ம் கிடைக்கும். 7 சஞ்சிகைளின் ரூ. விலை 1-4-0.

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

வான நாடரு மறியொ ணாதநீ
மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
யேனை நாடருந் தெரியொ ணாதநீ
யென்னை யின்னிதா யாண்டு கொண்டவா
வூனை நாடக மாடு வித்தவா
வுருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.

விச்ச தன்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய வன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயினுங்கொலார்
நானு மங்ஙனே யுடைய நாதனே.

உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
யுடைய னேபணி போற்றி யும் பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி யாதியு
மந்த மாயினாய் போற்றி யப்பனே. —மாணிக்க வாசகர்

கதாரத்நாகரம் அனுபந்தம்.



பழைய லைட்ஹவுஸ்.



சென்னை ஹைகோர்ட்டு.

கடவுள் துணை

KATHA கதாரத்நாகரம் RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்

Vol. 4. தொகுதி 4. | JANUARY, 1922 துன்மதி௵ ஜனவரி௴ | No. 8. பகுதி 8.

# இல் வாழ்க்கை அல்லது சமுசாரம்

இல்லற வாழ்க்கை யென்பதும் குடும்ப வாழ்க்கை, சமுசாரம் என்பதும் ஒரே கருத்தைக் கொண்டதாகும். சமுசாரம் என்பது வாழ்க்கைத் துணைவி. அதாவது மனைவி, மக்கள், உற்றார், பெற்றார், உறவின் முறையார் என்று சேர்ந்து வாழும் வாழ்வே சமுசாரம் எனப்படும். மனைவி என்ற பதத்துக்குப் பதிலாக பெண்சாதி, ஸ்திரீ, வீட்டுக்காரி, பெண்டாட்டி என்பதாக லௌகீகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் சில வகுப்பினர் மனைவியின் பெயரைச் சொல்லுவதில்லை. பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூடாதென்ற கட்டுப்பாடுண்டு. அதனால் 'ஏ' உன்னைத்தானே, கூப்பிடுகிறது தெரியவில்லையா, என்ன செய்கிறாய் என்று பெயர் சொல்லிஅழைப்பதற்குப் பதிலாகக் கூறுகிறார்கள்.

இந்த நாகரீக காலத்தில் அநேகமாக பெயர் சொல்லி அழைப்பதே கௌரவமாக எண்ணப்பட்டு வருகிறது.

புருஷன் பெண்சாதி இருவரும் சேர்ந்து வாழினும் அல்லது புருஷன் பெண்சாதி புத்திரர் இவர்களில் ஒவ்வொருவரின்றி ஏனைய இருவரும் ஒரு குடும்பத்தில் வாழ்வதுண்டு. புருஷன் பெண்சாதி இருவருக்கும் பிறந்த புத்திரரும் புத்திரிகளும் பருவமடைந்து புத்திரருக்கு நாயகிகளும், புத்திரிகளுக்கு நாயகர்களும் வாய்த்து பேரன் பேத்தி எடுத்து ஆல்போல் தழைத்து வேரூன்றி செழித்து வாழுங் குடும்பங்களுமுண்டு. ஸ்திரீ புருஷர் இருவருக்கும் எழுபது எண்பது வயது ஆவதற்குள் இவர்கள் சந்ததிவிருத்தியாய்சுமார் ஐம்பது, அறுபது பேர் புத்திர பௌத்திரர்களாய் வாழ்ந்தகுடும்பங்களுமுண்டு. இத்தகைய குடும்பத்தில் முதல்தாயும் தந்தையும் விருத்தாப்பியராய் ஓட உலாவ சக்தியற்று இருப்பினும் இவர்களுடைய புத்திரரும் புத்திரிகளும், ஆல் தழைத்துப் பெருகியபோது அதனுடைய அடிமரம் தனது கிளைகளைப் பொறுக்க சக்தியற்றதால் கிளைகளினின்று இறங்கிய விழுதுகள் ஆங்காங்கு நிலத்தில் ஊன்றிப் பருத்துக் கிளைகளைத் தாங்குவது போல், தங்கள் தாய் தந்தையாரைக் காப்பாற்றுவார்கள். முன்னையகாலங்களில் பெற்றோர்களை பூசனிப் பழங்களை உறியில் வைத்து பாதுகாப்பது போல் அவர்கள் பழுத்த பழமாயும் உயிர் நீங்காமையால் மிருதுவான படுக்கை அல்லது ஆசனமிட்டு உறியில் வைத்து கஞ்சியும் பாலும் ஊட்டிவந்தார்களாம்.

அப்போதைக் கிப்போது மனிதர் வாழ்நாள் குன்றிவிட்டது. அக்காலம் கள்ளங்கபடற்றது. ஆனால் கல்வி மிகுதியாயில்லை. இவ்வளவு குடும்பம் பெருகி இருப்பினும் அண்ணன் தம்பிமார்க் குள்ளாகவாயினும் ஓரகத்திமார்களுக் குள்ளாகவாயினும், நாத்திமார்களுக் குள்ளாகவாயினும் சண்டை சச்சரவு இருப்பது அரிது. மேலும் குடும்பத் தலைவர்களுக்கு மிகுதியும் பயந்து அடங்கி நடந்து வந்தமையால் சச்சரவு உண்டாயினும் பகலவனைக் கண்ட பனிபோல் நீங்கும். குடும்பஸ்தருக்குள் ஒற்றுமை விசேஷம். ஒற்றுமை யென்பது பெரியோர் சொல்லை சிறுவர் அசட்டை செய்யாமையே. இங்ஙனம் நாலாபக்கங்களினும் வேரூன்றி நிலைபெற்ற குடும்ப ஆல விருக்ஷத்தை இதராளுடைய பழிப்பு வெறுப்பு புறங்கூறல் என்னும் சண்டமாருதம் என்ன செய்யும். இத்தகைய குடும்பம் பிரிவின்றி கட்டுண்டு இருப்பதற்கு குடும்பஸ்தருக்குள்ளாகிய திருப்தியே முதற்காரணம். எந்தக் குடும்பத்தில் திருப்தி விசேஷப் பட்டு வாழ்கின்றனரோ அக்குடும்பம் அழியாது. அதின் பெருமை குன்றின் மேலிட்ட விளக்காகப் பிரகாசிக்கும். குடு-



ம்ப க்ஷேமத்திற்கும் விருத்திக்கும் பெண்களே முதற்காரணம். பெண்களுக்குள் ஒற்றுமையின்மை, பொறாமை யென்னுங் குணங்கள் அவர்கள் தங்கள் பேதமைத் தனத்தாலும், பேதமையை விலக்கப் போதுமான கல்வி கல்லாமையாலும், அவர்களிடத்தில் மிகுதியும் குடிகொண்டிருக்கின்றன. இத்தகைய குணங்கள் பொருந்தியிருப்பதனால் தான் ஓரகத்திமார்கள் வாசம் செய்யும் குடும்பத்தில் சண்டை சச்சரவு அதிசீக்கிரத்தில் நேரிடுகின்றன. இப்பெண்மணிகளைச் சமாதானம் செய்ய புருஷர்களால் ஆகாமையால் அவர்கள் சொல்லுக் கிணங்கி வெவ்வேறாகப் பிரிந்து தனித்தனியாக சமுசாரஞ் செய்ய ஆரம்பிக்கின்றனர். முற்காலங்களில் கட்டோடே வாழ்ந்தால் கனம் பெறலாமென்கிற பழமொழிக் கிணங்க குடும்பத்தில் என்ன மனக்குழப்ப மிருப்பினும் வேறு பிரியாமல் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தனர். வெள்ளைக்காரருக்குள் பிள்ளைகள் கல்வி கற்று சுயமாக சம்பாதிக்க சக்தி வாய்ந்து கலியாணம் செய்து கொண்ட நாள் தொட்டு அப்பிள்ளையும் புதுமணப் பெண்ணும் தனித்து வாழ்வது வழக்கம். இத்தகைய வழக்கம் நம்மவர்களுக்குள் இல்லை. குடும்பத்தில் ஒற்றுமையைப் பெரிதுங் கருதி பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் பருவம் அடைவதற்கு முன்னமே விவாகம் செய்வித்து விடுவதுமுண்டு. இதற்கு காரணம் இல்லாமலில்லை. மாமனார் மாமியார் இவர்களுடைய குணகுணங்களையும் மூத்தார் மைத்துனர்களுடைய குணகுணங்களையும் அறிந்து அவரவருக்குத் தக்கபடி பழகி அன்னியோன்னியமாக வாழும் பொருட்டேயாகும். தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பதுபோல ஒரு குடும்பத்துக்கேற்ற பெண்மணி வாய்க்காவிடத்து அதனால் வரும் தீமையை ஓரளவிட்டுச் சொல்லிமுடியாது. இவ்வுலகில் மாமியும் மருமகளும் ஒத்து ஒரு குடும்பத்திலிருப்பதென்றால் குதிரைக் கொம்பாகவே இருக்கிறது. இதனைச் சிந்தித்துப் பார்ப்போமானால் பெண்களுக்கும் கல்வி அவசியமென்றே சொல்ல வேண்டும். மாமி மருமகளுக்குள் வேற்றுமை ஏற்படும்போது தாய்க்கும் பிள்ளைக்கும் மனவருத்தம் ஏற்படுகிறது. புருஷனோ ஒருவர் பக்கமும் சேர்ந்து பேச சக்தியற்றவனாக திகைத்து நிற்கிறான். ஒருவன் இவ்வுலகில் அதிர்ஷ்டமுள்ளவனா வென்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவ-

னுக்கு வாழ்க்கைத் துணைவியாகவரும் மனைவியின் குணத்தைக் கொண்டே அறிந்து கொள்ளலாம்.

புருஷனுக்கு அடங்காப்பிடாரியாய் வாய்த்த பெண் பிள்ளை வாழும் வீட்டை, வீடென்று அழைப்பதைவிடக்காடென்பது நன்று. ஔவையார் அறத்தை இல்லற மென்றும் துறவற மென்றும் இரண்டு வகையாகப் பிரித்து இவற்றில் துறவறத்தைவிட இல்லறமே நன்றென்று "இல்லற மல்லது நல்லறமன்று" என்று கூறியுள்ளார். பெண்டு பிள்ளைகளோடு கூடிவாழ்ந்து செய்யும் கிருத்தியங்கட்கு அழிவில்லை. ஒரு வஸ்துவைப் பார்க்க வேண்டில் இரண்டு கண்களும் ஒரே நோக்காய்ப் பார்த்தால் மாத்திரம் அது புலப்படும். இதைப்போலவே குடும்பத்தில் யாதாவது நற்காரியங்களைச் செய்ய ஆரம்பிக்குங் காலத்தில் புருஷன் போனவழி பெண்சாதி போகாமலும், பெண்சாதி போன வழி புருஷன் போகாமலும் இருந்தால், தம்மில் யாரேனும் எடுத்த நோன்பு நிறைவேறுமா? ஒரு கூட்டிலிட்ட பூனையும் எலியும் போல ஒரு வீட்டிலுள்ள புருஷனும் பெண்சாதியும் நாள் முழுதும் சண்டையிட்டுக் கொண்டிருந்தால், அவர்கள் கதி என்னவாகும்! இருவரில் ஒருவராவது சகித்துப் போவதென்றால் அக்குடும்பத்துக்கு நற்கதியுண்டு என்று சொல்லக் கூடும். சில புருஷர்களும் பெண்களும் மூர்க்கத்தனங் கொண்டு தாங்கள் பிடித்ததே பெரும் பிடியென்று தீராக் கோபங் கொண்டு போர் செய்யத் தலைப்படுகின்றனர். சில சமயம் இருவர் கோபமும் மக்கள் மேல் பாய்வதுண்டு. இருவர் மனமொத்து வாழும் வாழ்க்கை இத்துணைக் கேடுடைத்ததாயின், இல்வாழ்க்கை எங்ஙனம் நீடிக்கும்? வாழ்க்கையில் சுக துக்கங் கலந்தே இருக்கும். சமுத்திரம் பெரிதென்பார். அதனினும் பெரிது சமுசாரமாம். அதனால் சம்சாரசாகரம் என்று மிகைபடக் கூறுவதுமுண்டு. ஏற்றத்தாழ்வை தலைவர்கள் சமப்படுத்தி சமாதானமாக வாழ்க்கையை நடத்துவது சாலச்சிறப் புடையதாகும். சமுசார வாழ்க்கை நலம் ததும்பியது * வீடு. இந்த வீடே மோட்சத்தை யளிக்கும்.

* (வீடு—வாசஸ்தலம், வீடு—மோக்ஷம்.)



# மதிப்புரை

## தனபாக்கியம்

தனபாக்கியம் அல்லது ஒரு அதிருஷ்டவதியின் சரித்திரம் என்ற நாவல் ஒன்று எங்கள் பார்வைக்கு அனுப்பப்பட்டது.

இந்நூலில் கிராமத்தில் செட்டாகவாழ்வதைப்பற்றியும், நகரத்தில் அளவுக்கு மிஞ்சி ஆடம்பர செலவிடுவதைப்பற்றியும் குறிப்பாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. தனபாக்கியம் என்னும் கதாநாயகியின் பெருந்தன்மையும், ஆழ்ந்த அறிவும், இன்னும் அரிய பல குணங்களும், சந்தர்ப்பத்துக்கேற்ற விடங்களில் விஸ்தாரமாகவும், வாழ்க்கையில் சாதாரணமாக சம்பவிக்கக் கூடிய சங்கடங்களும் அதனால் நேரக்கூடிய அங்கலாய்ப்பும், ஆங்கு கையாளும் பொறுமையும் அதனால் உண்டாகும் லாபமும், இன்னும் உபயோகமான அநேக விஷயங்களைப் பொதிந்து அனுபவமாக எழுதப்பட்டிருக்கிறது. படிப்பவர்க்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாயும், முற்றிலும் படித்து முடிக்கக் கூடிய அவ்வளவு ஸ்வாரஸ்ய முள்ளதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. எளிய நடை. யாவரும் படிக்கக் கூடிய தன்மையில் அமைக்கப்பட்டிருக்கிறது. 8 படங்களுடன் கூடியது.

இதன் விலை ரூ. 2.

சென்னை மைலாபூர் அலயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

## உலக ரகஸ்யம்

மாதம் இருமுறை வெளிவரும் ஒரு புதிய பத்திரிகை. ஈரோட்டிலிருந்து வெளிவருகிறது. முதல் மூன்று சஞ்சிகைகளும் வரப்பெற்றோம். இந்தப்பத்திரிகை புதிய முறையில் அழகான சித்திரங்களுடனும், தமிழாராய்ச்சி, உபயோகமுள்ள பல வியாசங்கள், இன்னும் தொடர்ந்த நாவல்களும் வெளியாயிருக்கின்றன. தமிழ் நாட்டுக்கு புதிய பத்திரிகைகள் வெளி வருவது தேச முன்னேற்றத்துக்கு அறிகுறியாகும். பத்திரிகைகளின் அபிவிர்த்தி யெல்லாம் போற்றுவாரைப் பொருத்ததா யிருக்கிறபடியால் தமிழ் மக்கள் முன் வந்து வாங்கி ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம். பத்திரிகை பார்ப்பதற்கு மனோகரமாய் சுத்தப் பதிப்பாய் சுந்தரமுங் கொண்டொளிர்கின்றது. பாண்டித்தியமுள்ள ஸ்ரீமான் சி. கு. நாராயணசாமி முதலியார் பத்திராதிபராயிருந்து நடத்தி வருகிறார். வருட சந்தா ரூ. 5.

ஓம் சிவாயநம:

# திருவாசகத்தின் பெருமை

## திருவாசக மென்னும் பெயரிலக்ஷணம்.

திருவாசக மென்பது திருமயமான வாசக மெனப் பொருள்படும். இங்குத் திருவென்பது அருட்டிரு. எனவே, அருட்பொலிவினையுடைய வாசக மெனப் பொருள் விரிக்கப்படும். அருள்நாதவடிவான வாசகம் என்றுஞ் சொல்லலாம். திருவாசகம் அழகிய வாசகத்தை யுடைய தென அன்மொழித் தொகையாய் திருவாதவூரடிகள் அருளிச்செய்த தமிழ் வேதத்திற்குக் காரணக்குறியாயிற்று. வாசகமாவது, வேதத்துட் பொருளை எடுத்து விரித்துரைக்கு மொழியாம். வேதத் துட்பொருளாவது, பிரணவப் பொருளாகிய சிவமாம். ஆகவே, பிரணவமே வாசகம், பிரணவப் பொருளாகிய சிவமே வாசகத்தின் பொருள் அல்லது வாச்சியம் எனவே, சிவத்தின தியல்பையும் சிவனைத் தலைப்படு முபாயத்தையு முணர்த்து நூல் என்பது முடிந்த பொருளாம். இதை தமிழ்வேதமென்றும், எட்டாந் திருமுறையென்றும், அம்பலத்தான் எழுது மறையென்றும் ஆன்றோர் கூறுவர். கல்லையுங் கனியவைக்குந் திவ்விய வாய்ச் சொல்லாதலால் மாணிக்க வாசகமென்றும், மணிவாசகமென்றும் திருநாமமிடுவர்.

நூலாசிரியர்:—இது சைவ சமயாச்சாரிகளாகிய நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப் பெற்றுள்ளது. இவருடைய ஊர் திருவாதவூர். இவர்காலம் அரிமர்த்தன பாண்டியன் காலம். இற்றைக்கு சுமார் நாலாயிர வருஷங்களுக்கு முன்னுள்ளவர். இவர் பாடிய ஏனைய நூல் திருக்கோவையாகும். இவர் பூர்வாச்சிரம நாமம் வாதவூரர். இவர்க்குப் பாண்டியனால் சூட்டப்



பட்ட பெயர் தென்னவன் பிரமராயன். மாணிக்கத்தை யொப்ப அழகிய வாசகத்தைத் திருவாய் மலர்ந்தருளியதாலும், திருக்கோவையைப் பாடி யருளியதாலும், மாணிக்க வாசக சுவாமிகளென்றும், கோவை வேந்தரென்றும் முறையே இவர் அழைக்கப் பெற்றார்.

திருவாசகத்தின் உண்மை:—பிறவித் துன்பத்தைக் கடக்க வேண்டினோன் ஓதற்பாலதாகிய வாசகம் பிரணவம். அது வொன்றே துன்பத்தைப் போக்கி இரக்ஷிப்பது. அதுபற்றியே "பாசமெனுந் தாழுருவி உய்யநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை, ஐயனெனக்கருளியவா றார் பெறுவார் அச்சோவே" எனத் திருவாதவூரடிகள் இந்நூலகத்தே அருளிச் செய்ததுமா மென்க.

அதனுண்மை:—"சிவாயநம வென்று சிந்தித் திருப்பார்க்க பாய மொருநாளுமில்லை" என ஔவையாரும், பிரணவத்தில் நித்திய சிந்தை யுள்ளவனுக்கு எங்கும் பயமில்லை யென, ஏனையொரு நூலாசிரியருங் கூறுமாற்றாற் றுணியப்படும். 'நமசிவாயவாழ்க'வென்று முதலிலும், "நாதன்றாள்வாழ்க" என்று கடையிலுமாகத் திருவாதவூரடிகள் திருவாய்மலர்ந்தருளியது பிரணவமே வாசகமென்பதும், பிரணவப் பொருளாகிய சிவமே வாசகத்தின் பொருள் அல்லது வாச்சியமென்பதுங் காட்டும்.

அதன் முறை:—திருவாதவூரடிகள் முத்திக்குச் சாதனமாக வெடுத்துக்கொண்ட வுபாயம் பக்தியேயாம். சிவனைத் தலைப்படும் உபாயம் வேதம், ஆகமம் ஆகிய இவைகளை விடச்சிறப்புப் பெற்றதாயுள்ளது பக்தி. பக்தியாவது "பிரிந்த நாயகி தன் நாயகனைக் கூடுமாறு கொள்ளுந் தணியாப்பெருங் காதல் போல ஆன்மாக்கள் சிவனைக் கூடுமாறு கொள்ளுங் கலங்காப் பேரன்பாம்" என்றுள்ளார் ஓர் புலவர். மால், அயன் முதலியவர்களாலுங் காண்டற்கரிய சிவனைக் காண்டற்கு உபாயம் பக்தியைத் த்விர வேறில்லை யென்று, "பத்திவலையிற்படுவோன்" எனச் சிவனுக்கு ஓர் உண்மைத் திருநாமம் சூட்டி அதனால் விளங்கவைத்தார் நம் அடிகள். பத்தியோகம் சாதித்தற் கெளிதும் மிகச் சிறந்ததுமாம். அருளையே தமக்குத் திருமேனியாகவுடைய சிவனை நினைந்து உள்ளம் நெக்கு நெக்குருகி வேறறக் கலக்கவேண்டு மெனப் பேரவாக்கொண்டு நிற்கும் ஆன்மாவுக்கு அவர் வெளிப்படாதிருப்பின், அது அவர் அளவிலாப் பெருங்கருணைக் கோர் குற்றமாகுமல்லவோ?

அது பற்றியே பக்தியானது சிவதரிசனத்திற்குச் சிறந்த உபாயமெனத் திருவாதவூரடிகளால் மேற் கொள்ளப்பட்டது. தெய்வப் புலமை வாய்ந்த நாயனாரும் "அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழ்" என்றும், ஸ்ரீமத் சங்கராசாரி சுவாமிகளும் "பக்தி எதைத் தான் செய்யாது" என்றும், திருமூலரும் "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்றுந் திருவாய் மலர்ந்தருளினர்.

திருவாசகத்தின் பகுதி:—வாதவூரடிகள் "நமச்சிவாய வாஅழ்க" என்பது முதலிய நான்குதிருவகவன் முதற்கொண்டு, திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற் சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தி, திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி, கோயின் மூத்ததிருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம், செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, திருக்கழுக்குன்றப்பதிகம், கண்டபத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்பத்து, அச்சப்பத்து, திருப்பாண்டிப்பதிகம், பிடித்தபத்து, திருவேசறவு, திருப்புலம்பல், குலாப்பத்து, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, எண்ணப் பதிகம், யாத்திரைப்பத்து, திருப்படையெழுச்சி, திருவெண்பா, பண்டாயநான்மறை, திருப்படையாட்சி, ஆனந்தமாலை, அச்சோப்பதிக மீறாகபலவகைப் பகுத்துச் செந்தமிழ் வேதமருளிச்செய்தார்.

திருவாசகத்தின் இயல்பு:—திருவாசகம் அன்பு மயமாகவுள்ளது. கல்லாக்கருங்கன் மனமுடைய கயவரையும் அவர் செவிவழிப்புக் குருக்கித் தன் வசப்படுத்துவது. கேட்டோரின் ஊனையுமுயிரையுமுருக்கி ஞானானந்தத்தைப் பெருக்கிப் பிறவா முத்திநெறியில் அவர்களைச் செலுத்துமியல்பினது. ஞானப்பொருள் குறித்த வுருவகங்களா மென்னும்படியான பாடல்களையுடையது. சிவனுடைய குணங்களையும் செயல்களையும் எடுத்துப் புகழ்வது. அடிகளுடைய நிலையையும், அவர் படுந்துன்பங்களையும் எடுத்துரைப்பது, "நின் வாசகத்தை யொருவர் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென் ஊன் கலந்து வுயிர் கலந்து வுவட்டாமலினிப்பதுவே' என்றார் இராமலிங்க சுவாமிகளும். மற்றும், "நின் வாசகத்தைக் கேட்ட பொழுதங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும், வேட்டமுறும் பொல்லாவிலங்குகளும் மெய்ஞ்ஞான, நாட்டமுறும் என்னில் இங்கு நானடைதல் வியப்பன்றே" என்றும் அவரே கூறிப்போந்தார்:—



இனி மணிவாசகத்தை யெண்ணுதொறும் காமமிகு காதலன் தன்கல விதனைக் கருதுகின்ற ஏமமுறு கற்புடையாளின்பத்தைக் காட்டினு மின்பமெய்துவதே என்றார் ஒரு புலவர்.

திருவாசகத்தின் சிறப்பு:—திருவாசகமாகிய செந்தமிழ் வேதந் தன்னை யன்போடோதுவாரைப் பிறவிக்கடலினெடுத்து அவர்க்குச் சிவானந்த மாக்கவல்லதென்பது,

"தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மென்னுந்தேன்"

என்னுமான்றோரனுபவத் திருவாக்கானறியப்படும். இனி ஔவைப் பிராட்டியார் "தேவர் குறளும் திரு நான்மறை முடிவு மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை திருவாசகமுந் திரு மூலர் சொல்லு மொருவாசக மென்றுணர்" என்று சிறப்பித்துக் கூறினார். மற்றும்,

"வள்ளுவர் நூல் அன்பர் திருவாசகந் தொல் காப்பியமே
தெள்ளு பரி மேலழகன் செய்தவுரை—யொள்ளிய சீர்த்
தொண்டர் புராணந் தொகைச் சித்தியோராறுந்
தண்டமிழின் மேலாந்தரம்"

என்றார் பிறரும். தவிர ஏனைப் புலவர் ஒருவர் வேதத்தை விட திருவாசகம் சிறப்புப் பெற்றது என்று விளக்கி யருளினர். அது வருமாறு:—

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணனுரை யெனு மாரண மொழியோ
வாதி சீர் பரவும் வாத வூரண்ணன்
மலர் வாய்ப் பிறந்த வாசகத்தேனோ
யாதோ சிறந்ததென் குவீராயின்
வேத மோதின் விழி நீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவாசகமிங் கொருகாலோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துருகக் கண்கள்
தொடு மணற் கேணியிற் சுரந்து நீர் பாய
மெய்ம் மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி
யன் பராகு நான்றி
மன்பதை யுலகில் மற்றையரிலரே."

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கு முருகார்" என்பது பழமொழியே யாதலின் அதன் சிறப்பையும் உண்மையையும் எடுத்துக் கூற வேறு சான்றும் வேண்டுமோ?

முடிபுரை:—இது காறுங் கூறிய வாற்றால், திருவாசகமென்னும் பெயரினிலக்கணமின்னதென்றும், திருவாசகத்தைத் திருவாய் மலர்ந் தருளியவர் யாரென்றும், திருவாசகத்தில் கூறப் பட்டுள்ள விஷயமும் உண்மையு மென்னவென்றும், திருவாசக நூலின் முறை யென்னவென்றும், திருவாசகத்தை யோதினால் பயன் யாதென்றும், திருவாசகத்தின் இயல்பும் பெருமையும் எத்தகைத் தென்றும் நன்கறியப்படும்.

திருச்சிற்றம்பலம்.

3—1—22. M. E. வீரபாகு பிள்ளை.

## * திருவாசகத்தை விரிவாய்ப் படிப்பதற்குதவும் நூல்கள்.

(1) யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள் எழுதியுள்ள குறிப்புரையுடன் பதிப்பிக்கப் பட்ட திருவாசகம்.
(2) போப் ஐயர் அவர்கள் ஆங்கில மொழிபெயர்ப்புடனுள்ள திருவாசகம்.
(3) திருவிளையாடற் புராணம்.
(4) திருப்பெருந்துறைப்புராணம்.
(5) கடவுண் மகாமுனிவர் அருளிச்செய்த திருவாதவூரடிகள் புராணம்.
(6) இராமலிங்க சுவாமிகளருட்பா.
(7) சுவாமி வேதாச்சலம் எழுதியுள்ள திருவாசக விரிவுரை (சஞ்சிகை)
(8) நால்வர் நான்மணிமாலை.
(9) வேதாச்சல சுவாமிகள் எழுதியுள்ள 'மாணிக்க வாசகர் காலம்' என்ற வியாசம்.
(10) கனம் அநவரதநாயகம் பிள்ளையவர்கள் எழுதியுள்ள தமிழ்ப்பெருமக்கள் சரித்திரம்.

(11) Age of Manikka Vasagar, by M R: Ry, S. A. Tirumalai Kolundai Pillai Avl, B. A.

(12) Manikka Vasagar and His Date by M. R. Ry, K G. Sesha Aiyar Avl, B. A. B. L., M. R. A. S.

(13) Manikka Vasagar and the Early Christians of Malabar By M. R. Ry, T. Ponnambalam Pillai Avl.

(14) Heritage of India Series. 'Hymns of the Tamil Saivite Saints' By Kingsbury and Philips Esq.

* மேற்கண்ட நூல்கள் கிடைக்கு மிடம்:—சேதுராம் அண்டு கோ நெ. 9. மூக்கர் நல்லமுத்து தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஓம்

# அன்பு

அன்பு சிவமிரண் டென்பரறிவிலார்
அன்பே சிவமாவதாருமறி கிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந் திருந்தாரே.

திருமூல நாயனார் திருமந்திரம்.

அன்பு என்பது நமதுள்ளத்தில் பிறர் பால் ஏற்படும் சாத்விக நெகிழ்ச்சி அல்லது ஆர்வம். கடவுள் நம்மிலிருக்கிறார். நாம் கடவுளிலிருக்கிறோம் என்பதை எவரும் ஒத்துக்கொள்வர். அக்கடவுளின் திருவுருவே அன்பு என்றால் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட நாம் நம் போன்ற மானிட வர்க்கத்தினரிடமும், இதர ஜீவஜந்துக்களிடமும் அன்பு பூண்டொழுக வேண்டுமென்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவேண்டியது. அன்பானது இடத்துக்குத் தக்கவாறு வேறுபடும். நாம் முதலில் நம்மைப் பத்து மாதஞ் சுமந்து பெற்ற அன்னையிடமும், அன்னையிடமாக தந்தையிடமும், பின்னர் நமது அறியாமையையகற்றி கல்வி ஞானம் புகட்டும் ஆசானிடமும், ஆபத்திலுதவும் நண்பர்களிடமும், வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியிடமும், இன்பத்தைக் கொடுக்கும் புத்திர புத்திரிகளிடமும், அறிவு விர்த்தியாக ஆக சகல ஜீவ பிராணிகளிடமும், தேசத்தினரிடமும், பின்னர் எல்லாம் வல்ல ஈசனிடமும் அன்பு செலுத்துகிறோம். தாய் தந்தையரிடத்தும், புத்திர புத்திரிகளிடத்தும் அன்பிற்கு, ஆசை, பாசம் என்றும், நண்பரிடத்துச் செலுத்துமன்பிற்கு சிநேகம், நட்பு என்

றும், குருவிடமும் கடவுளிடமும் செலுத்தும் அன்பிற்கு பக்தி என்றும், மனையாட்டியிடம் செலுத்துமன்பிற்கு, காதல் என்றும், ஜீவ பிராணிகள் முதலியனவிடம் செலுத்துமன்பிற்கு இரக்கம், ஜீவகாருண்யம், என்றும் அறிஞர் சொல்வர்.

நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் கூடி வாழவும், ஒருவருக்கொருவர் எல்லாவிதத்திலும் உபகாரமாயிருக்கவும் கடவுளால் படைக்கப்பட்டிருக்கிறோம். அப்படிக் கூடிவாழவேண்டும். நாம் பிறருக்கு உபகாரமாயிருக்கவேண்டும். நம்மால் நம்மையண்டினவர் நலமடையவேண்டும் என்றால் அன்பு என்ற ஒப்பற்ற மருந்தை உட்கொண்டால் தான் முடியும். ஒருவருக்கொருவர் தன்னலமற்ற அன்பு பூண்டொழுகின்றான் ஒருவரிடம் மற்றொருவருக்கு நம்பிக்கையும், ஒற்றுமையுமேற்படும். அப்படி ஒற்றுமை யேற்பட்டால் கூடிவாழ ஏதுவுண்டாகும். திருவள்ளுவ நாயனாரும்—

அன்பிலா ரெல்லாந்தமக்குரியரன் புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

என்று கூறியிருக்கிறார்.

அன்பிற்கு ஒருவரையறை கிடையாது. கடவுளே அன்புருவமென்கிறபோது அவருக்கு ஒருவரையறை யிருந்தால் அன்புக்கும் ஒருவரையறை யிருக்கும்.

அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழார்வலர்
புன்கணீர் பூசறரும்.

என்ற வள்ளுவர் வாக்கே மேற்கூறியவற்றை நிலை நாட்டும்.

நாம் ஒவ்வொருவரும் கைம்மாறு கருதாமல், கடவுள் கொடுத்த இச்சரீரத்தாலும், மனத்தாலும், வாக்காலும், செய்கையாலும், பிறருக்கு ஊழியம் செய்யவேண்டும். நமக்கு இத்தேகம் பரோபகாரத்துக்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் மட்டும் உண்டும், உடுத்தும், உறங்குவதற்குமல்ல. பிறப்பில், பணத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்றும், பந்துக்கள், அன்னியர், என்றும், நட்டோர், பகைவர் என்றும் தாரதம்மியம் பாராட்டாது எல்



லோரும் ஈசன் முன்னிலையில் சரிசமமே; அவர்முன் எவ்வித வித்தியாசமும் கிடையாது என்று தெளிந்து "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ள பேர்களும் முடிவொலொரு பிடி சாம்பர்" என்ற ஆன்றோர் வாக்கையுள்ளத்தில் ஊன்ற வைத்து, யாரிடத்தும் இன்சொல் வழங்கி, ஒருவித உபகாரமும் எதிர்பாராது, நாம் நமது ஊழியத்தை செய்யவேண்டும். நாம் செய்யவேண்டியது கைங்கரியமேயன்றி அதன் பலனை எதிர்பார்ப்பது நமது வேலையல்ல. ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்த நன்மைக்குந் தீமைக்கு முரிய பலனையளிக்க பரமேஸ்வரன் காத்திருக்கிறார்.

"நன்றி யொருவற்குச் செய்தக்காலன்னன்றி
என்று தருங்கொலென வேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருதலால்."

என்று ஔவையார் உரைத்தபடி வருவது வருங்காலத்தில் வரும். நான் அன்புடையேன் என வாயினால் சொன்னால் மட்டும்போதாது. தன்னல மறுப்பு, தியாகம் இவற்றிற்கு எப்போதும் முதற்படியிலேயே நிற்கவேண்டும். எப்போது தியாகஞ்செய்ய சமயம் வாய்க்கிறது என்று எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டும். கிடைத்த சமயத்தை அலட்சியமாய் விட்டுவிடாமல், சிறிய காரியமாயிருந்தாலும், பெரிய காரியமாயிருந்தாலும், தலையிட்டு ஈடேற்றி நமதன்பைச் செய்கையிலும் நிரூபிக்கவேண்டும். தியாகமூர்த்திகளாய் விளங்கி கடவுள் கருணைக்குப் பாத்திரர்களான சிலர்களை பெரிய புராணத்தில் காணலாம்.

தியாகத்துக்கு முற்படுவோர் பலவித கஷ்டங்களுக்கு இலக்காக வேண்டியது வரும். அப்படி இல்க்கானாலும் முடிவில் அவர்களுக்கு என்றுமழியாப் புகழே யுண்டாகும். சைவ சமயாசாரியர்களில் திருநாவுக்கரசு சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் பட்டிருக்கும் கஷ்டங்களும், பின்னர் அவர்களடைந்த மகிமையும், நமது நாட்டில் உலக சிரேஷ்டரெனவும், அன்பே யுருக்கொண்டவரெனவும், தியாகமூர்த்தியெனவும், புகழ்பெற்ற நமது நாயன்மார்களின் மகிமையே நன்கு விளக்கற்பாலது.

தவிர, நாம் அங்கஹீனர்களிடமும், வாக்கிலா ஜீவன்கள் எனக் கருதப்படும் ஊர்வன, நடப்பன, நீர் வாழ்வன, முதலிய இதர ஈஸ்வர சிருஷ்டிகளிடமும் காருண்யத்துடனும், இரக்கத்துடனும் நடந்து கொள்ளவேண்டும். அங்கஹீனர்கள் முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனை யனுபவிக்கிறார்கள். அவர்களைக் கண்ணுறும்போது இழிவான பார்வையுடன் பார்க்காமலும், வன்னெஞ்சுடன் செல்லாமலும் இருக்கவேண்டும். அவர்களுக்கு நம்மாலியன்ற உபகாரத்தை அன்புடனியற்றி அவர்களைக் களிப்பிக்கவேண்டும். ஏனென்றால் அவர்கள் மனங் கன்னித்துடித்தால் அது கூரியவாளாக்கும். நமது தந்தையார் நமது வீட்டில் நல்ல ஸ்திதியிலிருக்கும் ஒரு புத்திரன், கேவலஸ்திதியி லிருக்கும் மற்றொரு புத்திரனை இழிவாய் நடத்தலாவது வேறு எவ்வித அபகாரஞ் செய்யவாவது சம்மதிப்பாரா? ஒருக்காலும் மாட்டார். அதுபோலவே நமது பரம பிதாவான கடவுளும் சம்மதிக்கார்.

தவிர இதர ஜீவஜந்துக்களை உபத்திரவப் படுத்தக்கூடாது. அவைகளை அகாரணமாய் அடிக்கவாவது, எக்காரணத்தையிட்டும் உயிர்வதை செய்யவாவது கூடாது. பஞ்சமாபாதகங்களில் உயிர்வதையு மொன்றாதலால் இக்கொடிய செய்கையை யறவே எவரு மொழிக்க வேண்டும்.

இது பற்றியே—

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙனமாளுமருள்.
பொருளாட்சி போற்றாதார்க்கில்லை யருளாட்சி
யாங்கில்லையூன் றின்பவர்க்கு.

அவிசொரிந்தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர் செகுத்துண்ணாமை நன்று.
கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லாவுயிருந் தொழும்.



பொல்லாப்புலாலை நுகரும்புலையரை
எல்லாருங்காண வியமன்றன் தூதுவர்
செல்லாகப்பற்றித் தீவாய்நரகின்
மல்லாக்கத்தள்ளி மறித்துவைப்பாரே.

கொல்லிடுகுத்தென்று கூறியமாக்களை
வல்லிடிக்காரர் வலிக்கயிற்றாற்கட்டிச்
செல்லிடுநில்லென்று தீவாய்நரகிடை
நில்லிடுமென்று நிறுத்துவர்தாமே.

என்று திருமூல நாயனாரும் நமக்கு அறிவூட்டி யிருக்கின்றனர்

உலகம் மகிழ்வது இன்சொலாலன்றிக் கடுஞ்சொலாலல்ல என்பதையும் நாம் அறிய வேண்டும். நாம் எவரைச் சந்தித்த போதும், அவர் நண்பராயிருந்தாலும், பகைவரா யிருந்தாலும், அறிமுகமுடையரா யிருந்தாலும், அன்னியரா யிருந்தாலும், எப்போதும் அடக்கத் தோடும், மரியாதையுடனும், நடந்து, இன்சொல் வழங்கி ஒழுக வேண்டும். எல்லோரும் ஒரேவித அபிப்பிராயமுள்ளவர்களாயிருக்க மாட்டார்கள். நாம் எதிர்பார்க்கிறபடிக்கும் இருக்க மாட்டார்கள். இதற்காக நமது மனதை புண்படுத்தவாவது, அவர்கள் வேறுவித நோக்கத்துடனும் அபிப்பிராயத்துடனு மிருக்குங்காலை, அவர்களை நமது வழிப்படிக்கே கொண்டுவரப் பிரயத்தனப்படவாவது கூடாது. நமது ஐந்து விரல்களுமே ஒன்றுபோலில்லை. ஒன்றுக்கொன்று வித்தியாச மிருக்கின்றன. ஆகையால் பிறரும் நம்போலவே மிருக்க வேண்டுமென நினைப்பது மதியீனம். எவ்வளவு தூரம் ஒத்துப்போக சாத்தியமோ அவ்வளவுதூரம் ஒருமிக்கச் சேர்ந்து வாழவேண்டும். அநாவசியமாக இன்னொருவர் விவகாரங்களில் தலையிடல் ஆகாது. அது மனஸ்தாபத்தை விளைவிக்கும். எப்படி நமது தேகத்தின் பல அவயவங்களும் ஒத்துழைத்தால் தான் நமது தேகம் நல்ல ஸ்திதியிலிருக்க முடியுமோ, அப்படி நாம் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர், ஆடை நழுவுங்கால் தானாக உடுக்க விரைந்து வரும் கைகள் போல, எப்போது முபகாரிகளா யிருந்து, மனஸ்தாபங்களை யறவே யொழித்து, அன்பைப் பெருக்கி சந்தோஷமாக

வாழ வேண்டும். உலகம் அன்பு என்கிற பாசக்கயிற்றாலே கட்டப்பட்டிருக்கிறது. அப்பாசக் கயிற்றை வன்சொல் எந்நாளும் துண்டித் தெறிய முடியாது. ஏனென்றால்:—

"இன்சொலாலன்றி யிருநீர் வியனுலகம் வன்சொலாலென்றும் மகிழாதே" என்று பெரியோர் அனுபவ ரீதியாக விதித்திருக்கின்றனர். எப்படிப் பட்ட கொடிய பகைவராயிருந்தாலும், அவர் நமக்கு என்ன கேடுகளை யியற்ற யத்தனித்திருந்தாலும், அவர்களை வென்று நம்பக்கம் சேர்க்க ஒரே வழிதானுண்டு. என்னவென்றால் "அன்பு" தான். இது தவிற வேறுயாரும் ஒருவழிகாட்டமுடியாது. ஒருவன் இம்மார்க்கத்தைக்கையாண்டே தன் கொடிய விரோதிகளை தன் வழிக்குத்திருப்பிக்கொள்ள முடியும். இதுவே தர்மம்.

முகத்தானி மிர்ந்தினி நோக்கி யகத்தானா
மின் சொல்லினதே யறம்.

சிறுமை யுணீங்கியவின் சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

என்ற திருவள்ளுவர் வாக்கே இதனை நிலைநாட்டும். நாயனாரே வன் சொல் வழங்குவதன் அறியாமையை தெள்ளிதில் நாமறியுமாறு

இன்சொலினி தீன்றல் காண்பாரெவன் கொலோ
வன் சொல் வழங்குவது.

என்றும்

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனி யிருப்பக் காய் கவர்ந்தற்று.

என்றும் உபதேசித்திருக்கின்றார்.

இனி அன்புக்கு முறண்பாடான, பகை, கோபம், என்றதைக் கையாளுவதன் தீங்கைச் சிறிது கூறி முடிக்கிறேன்.

அன்புக்குச் சத்துரு பகைமை. ஆனால் எதிர்த்து நிற்க முடியாத கோழை விரோதியே. சுய நலத்தால் ஆசையும், ஆசையால்,



கோபமும், கோபத்தால், பகைமையு முண்டாகின்றன. பகைமை முற்றி விட்டால் கலகம். கோபம் நம்மைப் பலகீனராக்கி விடுகிறது. இதை ஒவ்வொருவரும் தங்களையே சோதித்து அறிந்து கொள்ளலாம். என்ன தான் கோபம் ஒருவருக்கு வந்தாலும் உடனே அடக்கிக் கொள்ள வேண்டும்.

கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்
கோபத்தான குடனுங் கோல மாற்றினான்
கோபத்தாலிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தாலிறந்தவர் கோடி கோடியே.

என்று கோபத்தின் கெடுதியை அறிந்து கொள்ளுகிறோம். ஆகையினாலே, "ஆறுவது சினம்" என்றபடி கோபத்தை யடக்கி

"தன்னைத் தான் காக்கிற் சினங்காக்கக் காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்".

என்ற தேவர் வாக்கை மதித்து நம்மைக் கோபத்தினின்றுங் காத்துக் கொள்ளவேண்டும். நம் உறவினரோ, நண்பரோ, அல்லது எவரோ அறிந்தோ அறியாமலோ நமக்கு இடையூறு விளைத்தால், அதனைப் பாராட்டாமல் அவர்கள் இழைத்த பிழையை அவர்களுணருமாறு நயவுரைகளால் எடுத்துரைத்து, உடனே தீங்கை மறத்தல் வேண்டும். எத்தனை கெடுதி ஒருவர் செய்திருந்த போதும், அவரால் தினையளவாகிலும் நன்மை நமக்குக் கிடைத்திருந்தால், அத்தனை நன்மையையே பாராட்ட வேண்டும். கூடிப் பிரியலாகாது. பழமையை நோக்க வேண்டும். நமக்குத் தீங்கிழைத்தோர் தலை நாணும் படி அதற்குப் பதில் நாம் அவர்களுக்கு நன்மை செய்து விடுதலே தர்மம். நமக்கு நேரிடும் நன்மைகளும், கேடுகளும் நமது முன் வினைப்படி வந்தவை என்று தெளிந்து கொண்டோமானால், எவர்மீதும் பகைமை உண்டாகாது. ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்ட பலனளிப்பது ஈசன் தொழிலேயல்லாது நம்முடையதல்லவென்று நம்பி, எவற்றிற்கும் ஆதிகார

ணமாயிருப்பவர் கடவுளே—"அவனன்றி யோரணுவுமசையாது" என்றதைக் கைக் கொண்டு அன்பு மயமாயிருக்க வேண்டும்.

இது காறும் அன்பு இன்ன தென்பதையும் அதை மனம் வாக்கு, காயம் என்ற மூன்றாலும் அனுசரிக்க வேண்டுவதின் அவசியத்தையும், பகைமையை மேற் கொண்டால் வருங் கேடுகளையும் அன்பை மேற் கொண்டால் வரும் நன்மைகளையும் ஒருவாறு கூறியுள்ளேன். அன்பிலார்க்கு இவ்வுலகில் வாழ்வில்லையாதலாலும் அன்பின் முதிர்ச்சியாகிய அருளில்லார்க்கு அவ்வுலகில் வாழ்வில்லையாதலாலும் அன்பைக் கையாண்டே அருளையடைய வேண்டுதலாலும்,

"என்பே விறகாயிறைச்சி யறுத்திட்டுப்
பொன் போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகியகங்குழைவார்க் கன்றி
என்போன் மணியினை யெய்த வொண்ணாதே".

என்ற திருமந்திரப் பாசுரத்தின்படி மெய்யன்பே, கடவுளைக் காண வழியாயிருப்பதாலும், அடியார்க் கெளியனும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் முதலிய நால்வர் அன்பு வலையிற் சிக்கி அவர்களுக்காகப் பேரின்பமளித்த சர்வேஸ்வரன் நமக்கும் அருள்பாலிக்குமாறு நமது உள்ளன்பால் பூஜித்து நற்கதியடைவோமாக.

உற்றாரை யான் வேண்டேனூர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் மினிஅமையும்
குற்றாலத்தமர்ந் துறையுங் கூத்தா! உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.

—திருவாசகம்.

எம். பி. எஸ். வேலாயுதம்,
சென்னை.

# கோபமும் அதனாலாகிய தீமையும்

பிறர் நம்மிலும் மிக்கவராயிருக்கினும், நமக்குச்சமானமானவராயிருக்கினும், நம்மினுங்குறைந்தவரா யிருக்கினும், ஒரு காரியத்தைச் செய்தவிடத்து அது நம்முடைய மனதுக்கு ஒவ்வாவிட்டாலும், நமக்குத்தீங்கை விளைத்தாலும், அவர்களை அந்தக்காரியத்துக்காகத் தண்டிக்க நம்மைத் தூண்டுந் துர்க்குணமே கோபமென்று சொல்லப்படும். இந்தக் குணம் எப்படிப்பட்ட சத்புருஷனுக்கும் ஒரு காலத்திலுண்டாகும் என்று மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுகிறார்கள். சகல உணர்ச்சிக்கும் மூலாதார ஸ்தானமாகிய மூளையினின்றும் பற்பல நரம்புகள் தேகமுழுவதும் வியாபித்திருக்கின்றன. இந்நரம்புகள், ஆன்மநிலையாகிய மூளைக்கு உணர்ச்சியுண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக்கொண்டுபோய்த்தெரிவிக்கும் நரம்புகளென்றும், மூளையிடத்துண்டாகும் உணர்ச்சியைவெளிக்குத்தெரிவிக்கும் நரம்புகளென்றும், இருவகையுள்ளன. ஒருவன் நம்மைத்திடீரென்று தோளில் குத்தினனென்று வைத்துக்கொள்வோம். நம்மை அந்தப்படிக்குத்தினவனை மறுபடியும் நாம் அதே மாதிரியாய்க்குத்தவேண்டியதென்று நாம் எண்ணங்கொள்ளுவதற்கு முன்னமே அவனைக்குத்தவோ வேறே எதற்கோவெகுசீக்கிரத்தில் நம்முடைய கை எழுகின்றது. இதற்குக் காரணம் யாது? அவன் நம்மைக்குத்திய உடனே அதிசீக்கிரத்தில் அவ்விஷயத்தை ஆன்மநிலையாகிய மூளைக்குச் சில நரம்புகள் தெரிவிக்கின்றன. அங்கு நிகழும் உணர்ச்சியை வெளிக்குத்தெரிவிக்கும் வேறே சில நரம்புகள் அதிஅற்புதமான வேகத்துடன் இயங்கி நம்முடைய கரத்தை தூக்குகின்றன. ஸ்மரணை தப்பித் தூங்கிக்கொண்டிருக்கும் ஒரு

வனுடைய கரத்தை நாம் கிள்ளினால் அவன் தன்னுடைய கரத்தை உடனே மடக்கிக்கொள்ளவேண்டு மென்கிற எண்ணங்கொள்ளா திருந்தும் அவனுடைய கரம் உள்ளுக்கு வாங்கிக் கொள்வதை யாகிலும், முன்னிருந்த நிலையிலிருந்து வேறே நிலைக்குத்திரும்புவதையாகிலும் நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். உணர்ச்சியுண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக்கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகள்—மூளையினிடத்துண்டாகும்உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகள் என்னும் இருவகை நரம்புகளின் அதிவேகமான இயக்கமேமேலெடுத்துக் காட்டப்பட்டதற்குக்காரணம்:—

ஒருவன் தன் மொழிகளினாலாவது செய்கை களினாலாவது நமக்கு அருவருப்பான உணர்ச்சியை உண்டாக்குங்காலத்து உடனே அவனைத்திட்டவாகிலும் அடிக்கவாகிலும் வேறே யாதொரு தீங்கைச் செய்யவாகிலும் எழும் மன நிலைமைக்குத் தான் கோபம் என்று பெயர். மேற்கண்ட இருவகையான நரம்புகளின் இயக்கமே அதற்குக்காரணம். ஒவ்வொருவனுக்கும் கோபம் என்பது இயல்பில் உதிக்கத் தக்கதோர் குணமாயிருக்கிறது. இவ்விருவகையான நரம்புகளும் தாழ்ந்த ஜீவராசிகளுக்கும் அமைந்திருக்கிறபடியால் அவற்றிற்கும் கோபம் என்னுங்குணம் இயற்கையாயிருக்கிறது. இக்குணத்தை முழுவதும் போக்குவது சாத்தியமல்லாத காரியமாயிருக்கினும் ஒவ்வொருவனும் அதைத் தன்னுடையபுத்தியினால் அடக்குதல்கூடும். அந்தப்படி அடக்காது விடுவோமாயின் பெருத்த தீமைகள் நமக்கும் ஏனையோர்க்கும் சதா உண்டாய்க் கொண்டேவரும். நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் தத்தம் மனதுக்கிசைந்தவாறு பற்பல காரியங்களைச் செய்து கொண்டுவருகையில் அபிப்பிராய பேதத்தினால் நம்மனதுக்கு அவை ஒவ்வாவிட்டால் நம்மிடத்தில் கோபம் பிறந்துகொண்டேயிருக்கும். அதைக் கூடுமானவரையில் அடக்க முயலவேண்டியது நம்முடைய கடமை. அறுவது (முழுவதும் அற்றுப்போவது) சினம் என்று கூறாமல் ஆறுவது (தணியத்தக்கது) சினம் என்று ஔவையார் கூறிய அருமையை யோசித்துப்பார்க்கையில் மனிதனுடைய மனோதத்துவ லட்சணத்துக்குச் சினம் இயற்கையானகுணமென்பதையும், அதை அறவேபோக்குவது எப்படிப்



பட்டவனுக்கும் அசாத்தியமென்பதையும் அதை ஒவ்வொருவனும் தன்னுடைய மனோதிடத்தைக்கொண்டு தணிக்கவேண்டிய தென்பதையும் அறிவிக்கவே அம்மாது சிரோன்மணி அங்ஙனம் கட்டளை யிட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஒருபெரியவர் ஒரு ஊரில் யார் என்ன சொன்னபோதிலும் கோபிக்கிறதேயில்லையென்று பிருது கூறிக்கொண்டிருந்தார். அதைக்கேள்வியுற்ற ஒரு அஹசியக்காரன் அவரிடத்திற் சென்று, சுவாமி! தங்களுக்கு எப்போதும் கோபம் வருகிறதேயில்லையா? என்றான். அவர் அவனைநோக்கி அதிசாந்தமாய் அப்பா! எப்போதும் வருகிறதேயில்லை யென்றார். மறுபடியும் அவன் அப்படியே கேட்டான். அவர் அதற்கும் அதே மாதிரியாய் விடைபகர்ந்தார். மீண்டும் முப்பது நாற்பது தரம் அவன் அதேகேள்வியைத்திருப்பித்திருப்பி மூச்சுவிடாமல்கேட்டுக் கொண்டேயிருந்தான். அப்போது அப்பெரியவர் சீ! சீ! நீ முட்டாளாயிருக்கின்றாய், எத்தனை தடவை உனக்கு உத்தரவு சொல்லுகிறது போ என்று முகங்கடுத்துக்கூறினார். இதைக்கண்டமாத்திரத்தில் அவன் சுவாமி! இதோ தங்களுக்கு இப்பொது கோபம் பிறந்ததே, எப்போதும் கோபிப்பதில்லை யென்னும் பிரதாபம் வெட்ட வெளிச்சமாயிற்றே என்று பரிகாசம் செய்து கொண்டே போய் விட்டான். ஆகையால் எப்படிப் பட்டவனிடத்தும் ஒரு காலத்தில் கோபம் தன்னை யறியாமலே உதிக்கும். காமக்குரோதாதிகளை அறவே விட்டொழிந்த துறவிகளுக்கும் சினம் ஒரு காலத்தில் உண்டாதலியற்கை; ஆனால் அவர்களுடைய கோபம் பிறருக்கு நன்மையையே விளைவிக்குமென்றும், ஆதலால் அதை மறக் கருணை யென்றும் சாஸ்திரம் கூறுகிறது.

கோபம் பெரும்பாலும் மனோதிட மற்றவனுக்கும் அகங்காரிக்குமே அடிக்கடி உண்டாகும். பாலியர்களுக்கும் வயோதிகர்களுக்கும் அடிக்கடி சொற்ப விஷயங்கள் காரணமாகவும் கோபம் உண்டாகின்றதை யோசிக்கையில், கோபத்தை அடக்குவதற்கு மனோதிடமும் தேகதிடமும் அத்யாவசிய மென்று தெரிய வருகிறது. கோபம் உண்டாகும்போது மாத்திரம் அதைச் சற்றே அடக்கி விட்டால் அதின் வேகத்துவம் வெகுவாய்க் குன்றும். ஒருவரைக் கோபிக்க மனமெழும்பொது நெடுங் கணக்கை ஒருவிசை மனப்பாட

மாகச் சொல்லி விட்டுப் பிறகு கோபித்துக் கொள் என்று ஒரு பண்டிதர் கூறுகிருர். அதை ஒருதரம் சொல்லி முடிப்பதற்குள்ளாகக் கோபம் தணிந்தே போய் விடு மென்பது அனுபவபிரசித்தம்.

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக்குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண் படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ"

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினன்
கோபத்தான குடனுங் கோலமாற்றினன்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினன்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே"

என்று கோபத்தால் விளையும் பெருங்கேட்டைக் குறித்து மூதறிஞர் பலவாருகக் கூறியுளார். உலக சரித்திரமும் அதற்கு சாட்சி பகரத்தக்கதாயிருக்கிறது.

ஒருவன் நமக்கு யாதொரு தீங்கான காரியத்தைச் செய்கையில் அவனை அதற்காகத் தண்டிக்க வேண்டுமென்கிற எண்ணங் கொண்டல்லவா நாம் அவனைக் கோபிக்கின்ருேம்? நாம் அந்தச் சமயத்தில் கோபியாது பொறுமையுடன் சும்மாவிருந்து விடுவோமாயின் நமது பொறையுடைமையே அவன் மனச்சான்றுடையவனுயிருந்தால் அவனது மனதை யறுக்கும். இது மனுதத்துவ லட்சணம். அந்த சமயத்தில் நாம் கோபித்துக் கொண்டு, அவனுக்குப் பிரதி பலனுக யாதொரு தீங்கைச் செய்வோமானுல் அப்போது எவ்வளவு நமக்கு மனச்சந்துஷ்டி உண்டாகுமோ அதை விட ஆயிரமடங்கு அதிகமாய்ப் பொறை யுடைமையாற் பெரு மகிழ்வு பின்புண்டாகும். இக்கருத்தை யமைத்தே

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்றுவிடல்"? என்றும்



"ஒறுத்தார்க்கொருநாளையின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந்துணையும் புகழ்', என்றும்

தெய்வப் புலவர் தமது தமிழ் மறையில் கூறியுள்ளார். அன்றியும் மனிதனிடத்திலுள்ள ஒவ்வொரு துர்க்குணமும் பிறர்க்கும் தனக்கும் தீமையைத் தரத்தக்கனவா யிருக்கின்றன. அவற்றுள் சில தனக்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவாயும் மற்றும் சில பிறர்க்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவாயும் இருக்கின்றன. இவ்விருவகைக் குணங்களுக்குள் தனக்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவற்றி லெல்லாம் கோபம் நடுநாயகம். ஆகையினுல் தான்,

"தன்னைத்தான்காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ்சினம்."

என்ற நாயனுர் தமது உத்தர வேதத்திற் கட்டளை யிட்டிருக்கின்றனர். தன்னிலு மிக்காரிடத்தில் ஒருவன் கோபங்கொள்ளக் கூடாதென்று நாம் வற்புறுத்திக்கூற வேண்டுவதில்லை; ஏனெனில் அதனுல் விளையும் பலப்பிராப்தியே அவனுக்கு வெகு சீக்கிரத்தில் புத்தி கூறத் தக்கது. ஒருவனும் தன்னிலும் கல்வி, செல்வம் பலம் முதலியவற்றில் குறைந்தவனிடத்துச் சினங்கொள்ளா திருத்தலே பெருமையாகும். அது தான் பொறை யுடைமைக்கு அழகு. "எல்லா மதுகையுர னுடையாளன் பொறுக்கும் பொறையே பொறை."என்று மேலோர் கூறியிருக்கின்ருர்கள்.

இவ்வளவு தீயதான ஓர் குணத்தை ஜகதீசன் மனிதனிடத்து ஏன் அமைத்து வைக்க வேண்டும்? என்னும் வினு நம் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வோர் காலத்தில் நிகழக்கூடும் அல்லவா? லௌகிக தருமத்தை நடத்திக் கொண்டுவரும் ஒருவனிடத்தில் கோபம் முற்றுமே இல்லையென்று வைத்துக் கொள்வோம். அவன் கூட்டுறவு கொள்ளும் ஏனையோரிடத்துப் பொய்-களவு-கொலை முதலிய தீக்குணங்க ளிருப்பதனுல் அவற்றினின்றும் அவன் தப்பிப்பிழைப்பதற்காவது அவற்றை அவர்களிடத்தி லிராமல் ஓட்டுவதற்காவது அவனிடத்தில் சிறிது சினம் இருத்தல் அத்தியாவசியம். ஒருவன் தன்னுடைய அருமைப் புதல்வன் தீயகாரியங்களைச் செய்

யக் கண்டகாலத்து உடனே அவனைத் தண்டிக்க வேண்டியது தந்தையாகிய தன்னுடைய பெருங்கடமை யல்லவா? அவனை அந்தப் படி தண்டிப்பதற்குச் சினம் சிறிது வேண்டியதல்லவா? அவனிடத்தில் சினம் முற்றுமே இல்லையானால் அப்புதல்வனைத் தண்டிக்க அவனுக்கு மனம் எழுதல் அரிது. இவ்விதமான சினத்தைத் தான் பெரியோர் மறக்கருணை என்பார். ஆகவே நடுவு நிலைமையுடனிருந்து இந்த விஷயத்தை யோசித்துப் பார்க்குமிடத்து, சினம் வரம்பு கடந்து சென்றால் ஜன சமூக வாழ்க்கைக்கும் சினங்கொள்வோருக்கும் பெருங்கேட்டைத் தருமென்றும், ஏனைய தீக்குணங்களிருக்கிற படியினால் அவற்றை அளவு கடக்கவொட்டாமைக்குச் சினம் சிறிதிருத்தல் ஜன சமூகவாழ்க்கைக்குக் கேடல்லவென்றும், எப்படிப்பட்ட சாதுவினிடத்திலும், சினம் முற்றுமே யில்லாமற் போகாதென்றும், அதைக் கூடிய வரையில் தணித்துக் கொண்டே வருவது தான் உத்தம புருஷனுடைய குணமென்றும் தெரிய வருகிறது.

---

## பொறை யுடைமை

---

அகழ்வாரைத் தாங்கு நிலம் போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப்படும்.

—திருக்குறள்.



மறுபடியும் ஒருவரை யொருவர் வெறித்துப் பார்த்தார்கள், அந்த விஷயத்தின் கஷ்ட ஸூகங்களெல்லாம், டைலர் துரைக்குப், பண்டிதரைப் போல் அவ்வளவு நன்றாய்த் தெரியும்; அந்த விஷயமும் அவருக்குத் தெரியாததல்ல. இப்படி யிருக்க இந்தப்பிரயோஜனமற்ற வீண் வார்த்தை யேன்?

ஸமஸ்தானங்களிலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதிகள் சில விஷயங்களிலும் சில ஸமயங்களிலும் கடுமையாயும் பிடிவாதமாயுமிருந்தே தீரவேண்டும். அப்படியே டைலர் துரையும் பண்டிதரை மேலே பேசவிடாமல் "சரி; மோதிபாய் என்னும் முக்தாபாயை இங்கே உடனே அழைத்துக்கொண்டு வரவேண்டும். நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோமெ"ன்றார்.

பண்டிதருக்கு ஒரு புறத்தில் டைலருடைய அதிகார தோரணையைப் பற்றிக் கோபம். ஆனால், வேறு எக்காரணத்தாலோ தன் எண்ணப்படி காரியங்கள் நடை பெற்று வருகின்றனவென்று ஸந்தோஷமும் புலப்பட்டது. ஒன்றும் பேசாமல் வெளியில் போய் விட்டார்.

டைலர் "இவனைக் கண்டால் எனக்கு வெறுப்பும் அச்சமும் உண்டாகின்றன. ஸமஸ்தானங்களிலுள்ள உத்யோகஸ்தரிடத்தில் ஏதாவது குறைகளுண்டு. இவனோ ஆழம் கண்டு பிடிக்கமுடியாத அஸாமியாயிருக்கிறா"னென்றார்.

கதவுகள் படேரென்று சாத்தித் தாள் போடப்பட்டன; ஆண் காற்று அடிக்காமல் ஒவ்வொரு வேலைக்காரனும் மறைந்தான்; ஒவ்வொரு வாசற்படிக்கு வெளியிலும் பாரா வைக்கப்பட்டது. அந்தப்புரத்திலிருந்து யாரோ புருஷர்களிருக்குமிடத்திற்கு வரப்போகிறார்களென்று எல்லோருக்கும் தெரிந்தது. ஓர் மூடு பல்லாக்கில் யாரோ வந்து இறங்கி, திரையைத் திறந்து, நாங்களிருக்கும் அறையில் வலையால் முகத்தை மறைத்துக் கொண்டு உள்ளே புகுந்தாள். எங்களைத் தவிர வேறொருவருமில்லை யென்றறிந்தே, வலையை எடுத்து விட்டுச் சற்றும் தயங்காமலும் தழதழக்காமலும், டைலரால் கொடுக்கப்பட்ட நாற்காலியில் உட்

கார்ந்தாள். கண்களில் நீர் கரைபுரள, இருகைகளையும் குவித்து, "ஸாஹிப்! தாங்கள் என்னைக் கேட்கப் போவதை நன்றாய் அறிவேன். ஆனால், நான் குற்றமற்றவள்; என்குழந்தைக்குத் தகப்பனை மஹாராஜா என் அன்பிற்குரியவர்; என்பிராணநாதன்; காலஞ்சென்ற திவான் ஸாஹிப் பரமதயாளு. வெகு தாராளமானவர்; பெருந்தன்மை யுள்ளவர்; எனக்கு அவரிடத்தில் எல்லையற்ற மதிப்பும் பக்தியு முண்டு. சின்னமஹாராஜாவை நான் பார்த்ததில்லை. ஆனால், அவரைப் பற்றி ஜனங்கள் வெகு பெருமையாய்ப் பேசுகிறார்கள். நான் ஒரு பாபத்தையுமறியேன். என்னைப் பிறர் தடுக்காதிருந்தால், என் பிராணநாதனை வானுலகத்திலும் பின் தொடர்ந்து, அங்கும் அவருக்கு ஊழியஞ் செய்யும் பாக்கியத்தையே பெறும் பேறாய்க் கருதுவே" னென்றாள்.

அவளைப் பார்த்தவுடனேயே, அவள் நிரபராதி யென்று முடிவு செய்தேன். டைலருக்கோ சந்தேஹம் தீரவில்லை. "முக்தாபாய்! நாங்கள் உன்னை யாதொரு குற்றமும் சாற்றவில்லையே. ஏன் வீணாக நிரபராதி யென்று வாதாடுகிறாய்" யென்றார். அவள் "திவான் ஸாஹிப்பைக் கொல்வதற்கும் சின்ன மஹாராஜாவை அப்புறப்படுத்துவதற்கும் நான் ஏதோ சதியாலோசனைசெய்தேனென்று உங்களுடைய காதில் விழவில்லையோ? என் குழந்தையைச் சிங்காதனத்தில் வைக்க வேணுமென்று நான் பகிரதப் பிரயத்தனஞ் செய்வதாய்ப் பண்டிதர் இதுவரையில் உங்களிடம் சொல்லாமலிருக்க மாட்டாரே" யென்றாள்.

டைலர் தன் மனக்கருத்தைச் சற்றேனும் பார்வையால் காட்டிக்கொள்ள வில்லை. அவ்வளவு பழக்கமில்லாத நான், என் எண்ணத்தை மறைக்க முடியவில்லை. அதைக் கண்டு, அந்த மாதுசிரோமணி, என்னைப் பார்த்துக் கை கூப்பி, "ஸ்வாமீ! பண்டிதரை நம்பவேண்டாம். அவரைப் பற்றி யாதொரு கெடுதலும் நான் சொல்லத் தயாராயில்லை. ஆனால், ஏதோ தன் சொந்தக் காரியத்தை உத்தேசித்து, என்னைப் பற்றி அபாண்டமான வார்த்தைகளை உங்களிடத்தில் சொல்லி யிருக்கிறார். பாருங்கள், என் கணவ



னுக்கும் இந்த ஸமஸ்தானத்திற்கும் துரோஹி யென்றும் பெயர் எடுப்பதைக் காட்டிலும் நான்—"

நானும் டைலரும் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, அவருடைய கையிலிருந்த ஓர் நுட்பமான கட்டாரியைப் பிடுங்கி, அவளை உட்காரச் செய்தபாடு பிருஹ்மப் பிரயத்தனமாயிற்று. "முக்தாபாய்! இதுவரையில் விழுந்த கொலை போதும். நீ உயிருடனிருந்தால், எங்களுக்கு எவ்வளவோ உபகாரமாயிருக்கும். நீ குற்றவாளி யல்லவென்று நாங்கள் நிச்சயித்து விட்டோம். கொலைகாரர்களை எப்படியாவது கண்டுபிடித்துத் தண்டிப்பதில் நீ உதவி செய்யவேண்டும். உன் மகனை ஜாக்ரதையாய்க் காப்பாற்றிவா. வாயைத் திறக்காமல் எதையும் கவனித்துக் கொண்டிரு" வென்றார். இன்னும் சில வேறு சங்கதிகளைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்துவிட்டு, அவளை அனுப்பி விட்டோம்.

வெளியில் காத்துக் கொண்டிருந்த அர்ஜுனன், எல்லோரும் பார்க்கும்படியாய்ப் பட்டாளத்து ஆஜர் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு என்னிடத்திற்கு வந்தான். தனியே இருப்பதை அறிந்து, "முக்யமான சமாசாரம். மஹாராஜாவின் பிரேதம் வந்து சேர்ந்தது. காஜீபாத் ஜங்க்ஷனில் சற்றுநேரம் தங்கினபொழுது யாரோ பிரேதப் பெட்டியைத் திறந்து, பனிக்கட்டியை உடைத்து, அவருடைய கழுத்தைச் சுற்றியிருந்த உடையைக் கலைத்து, ஏதோ ஒரு பொருளுக்காக அவஸரமாய்த் தேடியிருக்கிறான்" நாங்கள் "என்ன! என்ன! கழுத்தை——" யென்றோம். அர்ச்சுனன் "அது கிடக்கட்டும். அரண்மனையில் சில பழைய ஸ்நேகிதர்களைக் கண்டுபிடித்தேன். திவான் ஸாஹிப் குத்திக் கொல்லப்பட்ட பிறகு அவருடைய கழுத்தைச் சுற்றியிருந்த உடையையும் இப்படியே பிரித்திருக்கிறது.——"

இதைக் கேட்டவுடனே, டைலர் தேள் கொட்டினதுபோல் தாவிக் குதித்து, தன் சட்டைப்பையிலிருந்து ஓர் சிறிய தோல் பெட்டியை எடுத்து, அதிலுள்ள ஓர் விசித்திரமாயும் நுட்பமாயும் வேலை செய்யப்பட்ட தங்கச் சங்கிலியையும், அதிலிருந்து தொங்

கின தங்கக்கம்பிகளால் பின்னப்பட்ட ஓர் பையையும் எனக்குக் காட்டி, "இதோ பாருங்கள்! அவர்கள் தேடின சாமான் இதே. நேற்று ராத்திரி இதை என்னிடத்திலிருந்து திருடுவதற்காக மூன்று தடவை என் அறையில் புகுந்தார்கள். என் மேஜையின் கீழில் கட்டப்பட்டிருந்த வேட்டை நாய் குலைத்து என்னை எழுப்பிவிட்டது. இம்மாதிரி இடங்களில் நாம் உயிரைக் கையில் வைத்துக் கொண்டு பிழைக்க வேண்டுமெ"ன்று அந்தப் பையைத் திறந்து காட்டினான்.

அதில் நேர்த்தியான எஃகால் செய்யப்பட்ட மூன்று சாவிகளிருந்தன. ஒன்று யானையைப் போலும், மற்றொன்று புலியைப் போலும், மூன்றாவது உதிக்கும் சூரியனைப் போலும், வெகுசாதுர்யமாய் அமைக்கப்பட்டிருந்தது.

அவைகளைக் காட்டி, டைலர் "அவர்கள் இவ்வளவு சிரமப்பட்டு திருடப் பார்த்த பொருள் இதே. மஹாராஜாவின் ரஹஸ்ய பொக்கிஷத்தின் இந்தச் சாவிகள் எப்பொழுதும் அவருடைய கழுத்தில் தங்கச் சங்கிலியில் கட்டித் தொங்கவிட்டிருக்கும். இவைகளுக்குப் பிரதி திவானிடத்தில் உண்டு. அரசன் மரணமடையும் தருணத்தில், அந்த அறையிலிருந்த யாவரையும் வெளியில் போகச் சொல்லிக், கதவையும் ஜன்னல்களையும் சாற்றித் தன் கழுத்திலிருந்து இந்தச் சங்கிலியை எடுக்கச் சொல்லி, "உங்களைத் தவிர வேறொருவருக்கும் இது தெரியாது. ரஹஸ்ய பொக்கிஷமும் அதிலுள்ளவையும் எனக்கும் திவானுக்கும் யுவராஜாவிற்குமே தெரியும். இந்தச் சாவிகளை என் குழந்தையிடத்தில் கொடுங்கள். வேறொரு——." இதற்குள் வெளிப்புறத்தில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. அரசன் நடு நடுங்கிச், சாவிகளை ஜாக்ரதையாய் மறைக்கும்படி எனக்கு ஜாடை செய்தார். அதற்குப் பிறகு அவர் மூர்ச்சையடைந்தார்; தனியே அவருடன் பேசத் தருணம் வாய்க்கவில்லை" யென்றார். அர்ச்சுனன் சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்தான். "வேறொரு ஜோடி திவானிடத்திலிருந்ததோ?" டைலர் "அப்படித் தோன்றுகிறது. ஆனால் இப்பொழுது யாரிடத்திலோ" நான்



"இதில் ஸந்தேஹமென்ன? சின்ன மஹாராஜாவிடத்திலே தானிருக்கும். ஏன்? சாவிகளைக்கைப்பற்ற நினைத்து, யாரோ திவானைக் கொன்றிருக்க வேண்டும். அவரோ மிகவும் வயஸ் சென்றவர்; அரசனே சாகுந்தருணத்திலிருந்தான்; ஆகையால், அதைச் சின்ன மஹாராஜா விடத்தில் முன்பே கொடுத்திருப்பார்" டைலர் "இப்படியிருக்கலாமென்று தோன்றுகிறது. ஆனால், கோபாலலிங்க் எங்கே போனான்." நான் "இந்தச் சாவிகளைத் தன்னிடத்தில் வைத்துக் கொண்டிருந்தால், இதற்கு முன்பே பிணமாயிருப்பான். ஆனால், பத்திரமான ஓரிடத்தில் அவைகளை மறைத்திருந்தால், எங்கேயாவது கைதி செய்யப்பட்டிருப்பான். அவைகளைக் கொடுத்தாலொழிய வெளியில் வரப்போகிறதில்லை" அர்ஜுனன் "ராமசந்திர பண்டிதர் கோடீஸ்வரராம். அவரே திவானயிருக்கவேண்டுமென்று, ஊரிலெல்லோரும் ஒரே முகமாய்ச் சொல்லுகிறார்கள். இதிருக்கட்டும், இந்தச் சாவிகளுக்கு ஓர் அச்சு எடுக்க முடியுமா?" டைலர் "ஒழிந்த வேளைகளில் பூட்டுச் சாவிகளில் நுட்பமான வேலைகளைச் செய்வது எனக்கு மிகுந்த ஸந்தோஷம். நானே இதற்குப் பிரதி செய்து தருகிறேன்." அர்ச்சுனன் "சீக்கிரம் செய்யுங்கள். அவைகளைப் பிறகு ஒருவன் திருடக் கூடிய இடத்தில் வைப்போம். அவனைப் பின் தொடர்ந்தால் நமக்கு அனேக நுட்பங்கள் தெரியும். எல்லாவற்றிற்கும் முதலாய் அந்தப் பொக்கிஷ அறையை நானே நேரில் பார்க்கவேண்டும்."

அப்படியே நாங்கள் அவ்விடத்திற்குச் சென்று, முதலாவது சாவியால் வெளிப்பூட்டைத் திறந்தோம். கதவு மின்னலைப்போல் திறந்து, சுவரில் மோதும் தருணத்திலிருந்தது. அதின் ரஹஸ்யத்தையறிந்த அர்ஜுனன், அதைப் பாதி வழியில் தடுத்து, ஓர் மூலையில் அழுத்தினான். உடனே அது அசையாமல் நின்றது. அந்தக் கதவு, சுவரில் மோதியிருந்தால், கோட்டைக்கு வெளியிலிருந்து ஓர் பெரிய பீரங்கி வெடித்திருக்கும். உள்ளே புகுந்து பார்க்கையில், ஒரே இருட்டாயிருந்தது. அர்ஜுனன் தன் கையிலிருந்த விளக்கை யேற்றித், தலைக்கு மேல் பிடித்தான். வரிசையாய் அனேக மண்டபங்களும், இரு பக்கத்திலும் தாழ்வாரங்களும்

காணப்பட்டன. அங்கே தரை முதல் அடுக்கடுக்காய்ப் பெரிய இரும்புப் பெட்டிகள் விசித்திரமான பூட்டுகளுடன், இடைவெளியில்லாமல் அடுக்கப்பட்டிருந்தன. கோடிக்கணக்காய் நாணயங்களும், ஆபரணங்களும், நவரத்னங்களும், தங்கப்பாளங்களும் அவைகளில் நிறைந்திருந்தன. எங்களுடைய நுட்பமான சாவிகள் இவைகளுக்குச் சற்றும் உதவவில்லை.

மேகாடி மண்டபத்திற்கு வலது கைப்புறத்தில் ஓர் சிறிய அறை காணப்பட்டது. இரண்டாவது சாவியால் அதைத் திறந்து பார்க்கையில், ஐரோப்பாவில் செய்யப்படும் பலவகையான இரும்புப் பெட்டிகளும் பீரோக்களும் காணப்பட்டன. இங்கே முக்கியமான தஸ்தாவேஜுகளும், ஸமஸ்தான பிருதுகளும், ஆபரணங்களும் இருக்கலாமென்று நினைத்தோம். இரண்டாவது சாவி ஒரு பீரோவைத்திறந்தது. அதைக் கண்டே அந்த இரும்புப் பெட்டிகளை ஒவ்வொன்றாய் கவனித்துத் திறக்கப் பார்க்கையில், ராஜபுடானாவில், பரம்பரையாய் சித்திர வேலை செய்து வந்த ஓர் குலத்தாரால் அரசனுக்காக செய்யப்பட்ட ஓர் சிறிய கல்லிழைத்த தங்கப்பெட்டி மூன்றாவது திறவுகோலால் திறக்கப்பட்டது.

அதில் பட்டு மெத்தையின் மேல் ஓர் ஹாரம் வைக்கப்பட்டிருந்தது. உடனே அவைகளிலிருந்து ஓர் ஒளி உண்டாய் தீபத்தின் வெளிச்சத்தை மங்கலாகச் செய்தது. அதில் 40 நல்ல முத்துகள் கோர்க்கப்பட்டிருந்தன. அவைகளைவிடப் பருமனுள்ளவை வேறெங்கும் காணேன். ஒவ்வொன்றும் அறுபதாயிர ரூபாய்க்குக் குறையாதென்று ரத்ன பரீக்ஷகர்கள் மதித்தார்கள். ஒவ்வொரு முத்திற்கும் நடுவில் விலையுயர்ந்த ரத்னங்கள் கொத்துக் கொத்தாய்த் தொங்கவிடப்பட்டிருந்தன.

இவ்வளவு காலம் ஸமஸ்தானத்திலிருந்து பழகின டைலருக்கு ரஹஸ்ய பொக்கிஷமாவது, இந்த முத்துமாலையாவது இருக்கின்றன வென்றே தெரியாது. இந்த முத்துக்களும் ரத்னங்களும் எங்கே யிருந்தனவோ? அவைகளைத் தேடிக் கண்டுபிடித்து கொண்டு வருவதற்கு, எவ்வளவு சிரமப்பட்டதோ? என்ன சிலவா



யிற்றோ? எவ்வளவு பெயர்கள் உயிரைக் கொடுத்தார்களோ? இவைகளால் எவ்வளவு துரோஹமும் கலஹமும் மனக்கொதிப்பும் ஆத்திரமும் த்வேஷமும் யுத்தங்களும் பொய் பித்தலாட்டங்களும் நேர்ந்தனவோ? எவ்வளவு குரூரமான செயல்களுக்கு இவை காரணமாயினவோ? எத்தனை கைமாறிற்றோ? எத்தனை மனிதர்களின் கண்களை மயக்கிற்றோ? மூளையைக் கலக்கிற்றோ? மனதைக் கல்லாக்கிற்றோ? எத்தனை பேர் இதைத் தேடிக் கொண்டு அலைகிறார்களோ? எவ்வளவு குடும்பங்கள் தலைகுனிந்தனவோ? இன்னும் சற்று நேரம் அங்கேயிருந்தால், என் மனதும் கெட்டிருக்கும்.

டைலர் சற்று நேரம் பிரமித்து நின்று, பிறகு புருவங்களை நெரித்து, எதையோ யோசித்துக் கொண்டிருந்தார். அர்ச்சுனன் சற்றேனும் பரபரப்பில்லாமல், "பண்டிதர் கொள்ளைப் பணக்காரர்; ஆனால், இந்த ஹாரத்தை அவர் வாங்க முடியாதே" என்றான். டைலர் "வாங்கினால் தானே? திருடக் கூடாதென்று எழுதியிருக்கிறதோ" வென்றார்.

அன்று சாயங்காலத்திற்குள் டைலர் மாறுச் சாவிகளைத் தயார் செய்து, தன் மேஜையின்மேல் எல்லோரும் பார்க்கும்படி வைத்துப், பண்டிதரை அழைத்து, ஏதோ ராஜ்யகார்யமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். வார்த்தையோடு வார்த்தையாய்க் "காலஞ் சென்ற மஹாராஜா தன் ரஹஸ்ய பொக்கிஷத்தின் சாவிகளை என்னிடத்தில் கொடுத்திருக்கிறா" ரென்றார். பண்டிதர் அதை ஒரு கடிதத்தில் குறித்துக் கொண்டார். வேறு யாதொரு முக ஜாடையாலும் தன் கருத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. இவன்கல் நெஞ்சனென்று டைலர் சற்று அச்சமுற்றார்.

அந்த உபாயம் பலிக்காமல் போனதால், டைலர் துரை "பண்டிதரே! சின்ன மஹாராஜாவைப்பற்றி ஏதாவது சமாசார முண்டோ" வென்றார். பண்டிதர் "சமாசாரமென்ன? முக்தாபாயின் பிள்ளையை சிங்காதனத்தில் வைக்கவேண்டுமென்று ஓர் சதியாலோசனை நடந்து கொண்டிருக்கிறது. இது அவளுக்குத் தெரியுமோ தெரியாதோ? அந்தக் குழந்தைக்கு போதுமான வயஸ் வரும் வரையில்

போஷகனையும் கார்டியனையுமிருக்கலாமென்று நினைக்கிறவர்கள் எவ்வளவோ" வென்று சற்று அழுத்தமாய்ச் சொன்னான். டைலர் "அப்படியானால், அந்தக் கலகக்காரர்களைக் கண்டு பிடிப்பது எப்படி" யென்றார். பண்டிதர் "எனக்கென்ன தெரியும்? இதை வெகு ஜாக்கிரதையாய் மறைத்திருக்கிறார்கள்; ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். முக்தாபாயின் மகன் பட்டத்திற்கு வந்தால், அவளுடைய முக்கியமான மந்திரிகளே இந்தக் கலஹத்திற்குத் தலைவர்கள். கோபாலஸிங்கை மறைத்தவர்களும் அவர்களே"யென்றார்.

இதற்கு என்ன ஆக்ஷேபம் சொல்ல முடியும்? டைலர் துரைக்கும் பண்டிதரிடத்திலுள்ள ஸந்தேஹம் சற்றுக் குறைந்தது. ஆயினும், முடிவுவரையில் அவரை நம்பாமல் பரிசோதிக்க வேணுமென்று நிச்சயித்தார். பேசி முடியும் பொழுது அந்தச் சாவிகளை எடுத்துப் பண்டிதர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே கைப் பெட்டியில் வைத்துப் பூட்டினார். எங்களுடைய வேலைக்காரர்களும் குமாஸ்தாக்களும் எங்களால் வேண்டிய வரையில் வெகுமதி செய்யப்பட்டு, எங்களுடைய மனிதர்களாய்ப் பண்டிதரையும் முக்தாபாயையும் அவர்களைச் சேர்ந்தவர்களையும், இமை கொட்டாமல், இரவு பகலாய்க் கவனித்து, அவர்களைப்பற்றின எல்லா சங்கதிகளையும் அப்போதைக்கப்போது எங்களுக்குத் தெரிவித்தார்கள்.

மறு நாள் நானும் டைலர் துரையும் அவருடைய பங்களாவின் மொட்டை மாடியில் அஸ்தமித்த பிறகு காபியையும் ஹுக்காவையும் வைத்துக் கொண்டு பொழுது போக்கினோம். அதே ஸமயத்தில், நாங்களும் அர்ஜுனனும், மஹாராஜாவின் ரஹஸ்ய பொக்கிஷ அறையில், இரும்புப் பெட்டிகளின் மறைவில், அர்ஜுனனுடன் காத்துக்கொண்டிருந்தோம். அதெப்படி? நாங்கள் யோகிகளா? நினைத்த ரூபங்களை யெடுத்து, ஒரே ஸமயத்தில் பல விடங்களில் தோன்றக்கூடிய சித்தர்களா? இல்லை. அந்த ரயில்வே, ஸ்டேஷனிலிருந்து ஒரு ஆங்கில இஞ்சின் ஓட்டுகிறவரையும் கார்டையும் தருவித்து, எங்களைப்போல் வேஷம் தரிக்கச் செய்து, மாடியில் உட்காருவித்தோம். வேலைக்காரர் முதலிய யாரும் மாடியில் போகக்கூடாதென்று கடுமையாய் உத்திரவு செய்து, பிறர் நம்பும்படிக்கு, டைலருடைய வேட்டை நாயையும் மாடிக்குப் போகும் வழியில் கட்டி வைத்தோம்.



ஒன்பது மணி அடித்தது. எங்களுடைய பிரதிநிதிகள் இருவரும், மாடியின் மேல், தங்களுடைய மேலதிகாரிகளின் குறைகளையும், அக்கிரமங்களையும் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது மஹாராஜாவின் ரஹஸ்ய பொக்கிஷ அறையின் கதவு சத்தமின்றி திறந்தது. அதின் யந்திரரஹஸ்யத்தை அறிந்த யாரோ ஒருவன், அதை அபாயம் நேராத அளவு திறந்து வைத்து விட்டு உள்ளே வந்தான். அடிமேல் அடி வைத்துக் கொண்டு, வாசற்படிக்கருகில் நின்று, தன் கையிலிருந்த விளக்கைத் தலைக்கு மேல் பிடித்து, நாற்புறமும் வெகு நுட்பமாய்க் கவனித்துப் பார்த்தான். நாங்கள் வடக்குக் கோடியில் பெரிய இரும்புப்பெட்டிகளின் மறைவில் பதுங்கியிருந்தபடியால், எங்களை ஒருவரும் காண முடியாது. நாங்களும் வெளியில் நடக்கும் விஷயங்களைப் பார்க்க முடியாது. தீபம் அசையாமல் இருந்ததாதல், அதைப் பிடித்துக் கொண்டிருந்த மனிதன் ஓரிடத்தில் நின்று கொண்டு, கவனித்தானென்று அறிந்தோம். தெற்குக் கோடியில் இரண்டாவது அறைக்குப் போகும் வழி வைக்கப்பட்டிருந்தது. பொக்கிஷ அறையில் ஒருவருமில்லை யென்று அறிந்து, அந்த மனிதன் சற்று வேகமாய் உள்ளே சென்று, முதலாவது அறையைக் கடந்து, இரண்டாவது அறையின் கதவினருகில் சென்றான்.

நாங்கள் எதிர் பார்த்தபடியே அந்த மனிதன் ராமச்சந்திர பண்டிதரே. ஒப்பற்ற மனோ பலமும் கலங்காத தைர்யமும் அவனுடைய முகத்தில் விளங்கின. அந்தப் பொட்டை இருட்டில் தீபவெளிச்சத்தில், அவனுடைய ஆஜாநுபாவாஹுவான உருவமும், மூர்க்கமான பார்வையும், முன்காலத்து ராவணன், இந்தரஜித் முதலிய ராக்ஷஸர்களைப்போல் பார்ப்போர் கண்டு நடுங்கும் படியிருந்தன.

நாடகஸ்தலம் தயார் செய்யப்பட்டு, மற்ற நாடக பாத்திரங்கள் தங்கள் தங்களிடத்திலிருந்து கொண்டு, கதாநாயகனுடைய

வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவனும் வந்து விட்டான். இனி முதலாவது காக்ஷி ஆரம்பிக்கவேண்டியது தான் பாக்கி.

நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது, அவன் இரண்டாவது கதவைத்திறந்து, சுற்றிலும் ஜாக்கிரதையாய்ப்பார்த்து விட்டு, உள்ளே நுழைந்தான். நானும் டைலரும் அவனைப்பின் தொடர எழுந்தோம். ஆனால், அர்ஜுனன் எங்களைக்கையைப் பிடித்து இறுத்தினான். அவன் நன்றேசெய்தான். அந்த க்ஷணத்தில் பண்டிதர், கையில் விளக்குடன் வெளியில் வந்தார். நெருப்புப்பறக்கும் கண்களுடன், பூமி, சுவர், பக்கங்கள், மேன் கூரை யாவற்றையும் உற்றுப்பார்த்தார். சத்துருக்களின் ஜாடை கூடக்காணப் படவில்லை. அப்பொழுதும் அவனைக்குற்றஞ்சாட்ட எங்களுக்குத் திடமான காரணங்களில்லை. தான் அந்த ஸமயத்தில் அங்கே வந்திருந்ததற்கு ஏதாவது ஒரு ஸால் ஜாப் சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம். பிறகு அவன் பயம் தீர்ந்தது; ஸந்தேஹ மின்றி அறைக்குட் புகுந்தான்.

நாங்கள் அடிமேல் அடியாய் நகர்ந்து, அறையின் வாசலுக்கெதிரே நின்று பார்க்கையில், பண்டிதன் பெட்டியைத்திறந்து, தங்கச்சிமிழிலிருந்த முத்தாஹாரத்தை எடுத்துபார்த்துக்கொண்டிருந்தான். இன்னும் ஸந்தேஹமென்ன? மறை வென்ன? அர்ஜுனன் கத்தியை உருவினான். நானும் டைலரும் கைத்துப்பாக்கிகளைத்தூக்கினோம். உடனே ராஜப்பிரதிநிதி, பரபரப்பில்லாமல் தெளிவாய் "பண்டிதனே! திவானை வேலைதீர்த்தது போல், கோபாலஸிங்கையும் பைசல் செய்து விட்டாயோ" வென்றார்.

பெட்டியின் மேல்தீபம் வைக்கப்பட்டிருந்தது. முத்து மாலையின் பிரகாசத்தையும் அழகையும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த பண்டிதன், கையும் களவுமாய் அகப்பட்டான். அவனுடைய தலையில் பேரிடி விழுந்தது போல், அந்த வார்த்தைகள் அவனைத் தூக்கி வாரிப்போட்டிருக்கும். ஆயினும், அந்த மனிதனுடைய நெஞ்சழுத்தத்தையும் ஆண்மையையும் கலங்காத தீரத்தையும் என்ன சொல்வேன்! கண்ணிமை மயிர்கூட அசையாமல், முகத்தில்



சற்றேனும் வர்ணம் மாறாமல், பரபரப்பின்றித் திரும்பி, எங்களைப் பார்வையால் எறிக்கிறவன் போல், பதில் சொல்வது அவச்யமல்லவென்றும், கௌரவக்குறைவென்றும் மதித்து, மௌனமாய் நின்றான். மனிதன் விரும்பக் கூடிய எல்லா மேன்மைகளும் பொருந்தியிருந்தும், பேராசையுற்று, மனிதத் தன்மையையே முற்றிலும் துறந்து, பதினாலு உலகங்களையும் அவைகளிலுள்ள தேவாஸுர மனுஷ்யர்களையும் துரும்பாய் எண்ணித், தயக்கம் பயமென்பது லேசமுமில்லாமல், எங்களை எதிர்த்து நின்றான். அதைக் கண்டு டைலர் கோபத்தால் மெய்மறந்து,"கோபாலஸிங் எங்கே? திருட்டுப் பயலே!" யென்றார்.

அது வரையில் ஒன்றிற்கும் அசையாமல், கலங்காமலிருந்த பண்டிதன், அந்த வார்த்தை பொறுக்காமல், கோப மூர்ச்சையிலிருந்து கிளம்பி, பெட்டியின்மேலிருந்த பித்தளை விளக்கை எடுத்துச் சுழற்றி, எங்கள் மேல் எறிந்தான். முன்னால் நின்ற டைலர் தானாகவே தலை குனிந்தான். அந்தத் தீபம் எனக்கும் அர்ஜுனனுக்கும் நடுவில் வாசல்படிக்கு வெளியில் வந்து விழுந்தது. அதிலிருந்த தைலம் நெருப்புப் பிடித்தெரிந்தது. மூன்று துப்பாக்கி வெடிகள் பட பட வென்று கேட்கப்பட்டன. டைலர் தள்ளாடிக் கீழே விழுந்தார். பண்டிதன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, என்னைச் சுட்டு வீழ்த்தப்பார்த்தான். குண்டு என் தலைப்பாகையில் பதிந்தது. உடனே அர்ஜுனன் கையை நீட்டிக் கத்தியால் குத்தினான். பண்டிதர் ஓர் பெருங்கூச்சலிட்டுக் காயத்தையும் தாங்க முடியாத உபத்ரவத்தையும் நிகரற்ற மனோவலிமையால் அலக்ஷ்யஞ் செய்து, அடக்கி, பதிலுக்கு பதில் வாங்காமல் போவதில்லையென்று அருகில் வந்த யமனைத் துரத்தியடித்து, அர்ஜுனனுடைய தலைக்குச் சரியாய் தன் கைத் துப்பாக்கியைத் தூக்கிச் சுட்டான். அவனுடைய தேகத்தில் பதித்த கத்தியைப் பிடுங்கி யெடுக்க அவகாசமில்லாமல், அர்ஜுனன் கத்தியை விட்டுப் பண்டிதனுடைய கையைப் பிடித்துத் திருகினான். ஒருவரையொருவர் இறுகக்கட்டி இழுத்துக்கொண்டு பூமியில் விழுந்தார்கள். விளக்கு அணைந்தது. இருட்டில் ஓர் வேட்டுக் கேட்கப்பட்டது குறியில்லாமல் ஓர் வெடி மேல் மண்டபத்தில் பதிந்தது.

நான் ஓர் நெருப்புக்குச்சியைக் கிழித்துப் பார்த்தேன். டைலர் வெகு கஷ்டத்துடன் எழுந்து நின்றார். "ஒன்றும் மோசமில்லை; மோசமில்லை. தோள் எலும்பு மாத்திரம் ஒடிந்திருக்கலாமென்று எண்ணுகிறேன்" னென்றார். உடனே அர்ஜுனனும் எழுந்து கலைந்த உடையையும் அவிழ்ந்த தலைப்பாகையையும் சரிப்படுத்திக் கொண்டான். "ஸ்வாமீ! என்னை மன்னிக்கவேண்டும். பண்டிதனைக் கொல்லாமலிருக்க முடியவில்லை. அவனை விட்டிருந்தால், நம்மெல்லோரையும் நிச்சயமாய்க் கொன்றிருப்பான். பாருங்கள்! இன்னுமொரு கைத் துப்பாக்கி வெடிக்காத குண்டுகளுடன் இவனுடைய அரைக்கச்சையி லிருக்கிற" தென்றான்.

இதற்குள் அரண்மனை வேலைக்காரர்கள் அங்கே கூட ஆரம்பித்தார்கள். ஆகையால், நான் பொக்கிஷ அறைக்கு வெளியில் துருப்புகளை பந்தோபஸ்தாய்ப் பாரா வைத்தேன். டைலர் ராஜ்ய உத்யோகஸ்தர்களை ஸபை கூட்டினார். முத்துமாலையோ பண்டிதனுடைய தேகத்தின் கீழ் கிடந்தது. அதுவரையில் அது வாங்கின காவுகளில் இதுவும் சேர்ந்தது.

பண்டிதனுடைய சதியாலோசனையில் சேர்ந்தவர்கள், மற்றவர்களைக் காட்டிக்கொடுத்துத், தாங்கள் தப்பினார்கள். அரண்மனைக்குப் பின்பக்கத்திலுள்ள ஓர் குளத்தில் கோபாலஸிங்க், உயிரற்று மிதந்து கொண்டிருந்தான்.

டைலர் துரை தேக ஸௌக்யமடைந்த பிறகு, தீர விசாரித்த பொழுது, உண்மை வெளியாயிற்று. இவை யாவற்றிற்கும் வேர்ப்பூச்சியான ராமச்சந்திர பண்டிதன், தனித்தனியாய் இரண்டு ஏற்பாடுகளைச் செய்தான். மசூரியென்ற விடத்தில், தந்தியாபீஸ் வேலைக்காரர்களில் ஒருவனை வசப்படுத்திக் கொண்டு, மஹாராஜாவின் மரண சங்கதியை முதல் முதல் அறிந்தான். அதற்கு முன்பே டைலருடைய ஆபீஸிலிருந்து ரஹஸ்ய தந்தி முறையைத்திருடி வைத்துக்கொண்டான். பிறகு திவானுடைய கொலையும், அரசனுடைய பிரேதத்தைக் கலைத்துத் தேடினதும் டைலரின் மாற்றுச் சாவிகளைத் திருடினதும் வரிசையாய் நடந்தன.



இரண்டாவது, முக்தாபாயின் புத்திரனுக்குப் பட்டம் கிடைக்கவேண்டுமென்று அவளுக்கே தெரியாமல் ஓர் கலகத்தைத் தூண்டி விட்டான். அதின் பயனாகக் கோபாலஸிங்க் சுருக்கிட்டுக் கொல்லப்பட்டான். யாவற்றிலும் அவனுக்காக வேலை செய்தவர்கள் அவனை இன்னாரென்று அறியார்கள். அவன் வெகு நம்பிக்கையாய் வைத்துக்கொண்டிருந்த இருவரும் முடிவில் எங்களுக்கு வசப்பட்டார்கள். இந்தப் பெரும் குழப்பத்தில், தான் ஸந்தேகப்படாமல், விலையற்ற முத்துமாலையைக் கைப்பற்றிக் கொண்டு, ராஜ்யத்தில் ஸர்வாதிகாரியாய் விளங்கவேண்டுமென்று எண்ணியிருக்கலாம்.

ஆனால், கோபாலஸிங்க் மரணமடைந்தவிதம் மாத்திரம் எங்களுக்குப் புலப்படவில்லை.

ஆறு மாதங்கள் கழித்து, முக்தாபாயின் புத்திரனை இளவரசாக்கி, அவனுக்கு வேண்டிய வித்தை முதலியவைகளைக் கற்பிப்பதற்கு, ஸர்க்கார் தகுந்த ஏற்பாடு செய்தார்கள். அதைக்கேட்டவுடன் அர்ஜுனனுக்கிருந்த கடைசி ஸந்தேகமும் நீங்கிவிட்டது. "ஸ்வாமி! அரண்மனைக்கு வெளியில் செய்யப்படும் கலகங்களும் சதியாலோசனைகளும், அந்தப் புரத்தில் நடக்கும் யோசனைகளுக்கு ஈடாகுமோ? கடவுளின் கருத்தையறிந்தாலும் அறியலாம். பெண்பாலாரின் கருத்தையறிவது ஸாத்யமல்ல" வென்றான். அவன் சொல்வதில் பிசகென்ன? முக்தாபாய், ஸோமலா நாட்டு இளவரசருக்குக் கார்டியனாய்க் குடிகளால் தெய்வமாய்க்கொண்டாடப்படுகிறாள். புத்திசாலி யென்றால் முக்தாபாயா? அல்லது, ராமச்சந்திரபண்டிதரா?

## கதை—III

# இடைக் கொள்ளை

ஒரு நாள் ராமாச்சாரியர் தன் வீட்டு மாடியில் உட்கார்ந்துகொண்டு, பம்பாயிலிருந்து காலைத் தபாலில் வந்த ரவிவர்மா படங்களை வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார். திடீரென்று வாசல் கதவை யாரோ இடித்த சத்தம் கேட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் ஓர் கனவான் அவரைப் பார்க்க வந்திருப்பதாய் வேலைக்காரன் தெரிவித்தான். "உள்ளே அழைத்து வா"வென்றவுடன், ஓர் நடு வயதுள்ள மனிதன், வைதிகமாய்ப், பஞ்சகச்சமும், சிறு குடுமியும், பளபளவென்று வெளுத்த பூணூலும், கழுத்தில் ருத்திராக்ஷமும், நெற்றியில் தாவள்யமான விபூதியும் துலங்க உள்ளே வந்தார்.

ஆசார்யர் அவரை உற்றுப்பார்த்து, அடையாளம் தெரியாமல் தயங்கி நிற்க, அந்த மனிதன் சற்று ஆச்சர்யமடைந்தவர் போல் "என்ன ஆசார்யர்வாள்! இவ்வளவு மறதியா?" வென்று நமஸ்காரஞ் செய்தார்.

இந்தக் குரலைக் கேட்டவுடன் ஆசார்யர் திடுக்கிட்டு, "அடே! தாங்களா? என்ன அசட்டுத்தனம், சுத்தமாய் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை, கோடி நமஸ்காரம். மன்னிக்கவேண்டும். மஹாதேவய்யர்வாள்! க்ஷேமந்தானே; ஊரில் எல்லாரும் சௌக்கியந்தானா? சாம்பு எப்படியிருக்கிறான்? நல்ல பையன். உங்களிடத்தில் பிராணன். அடே! யாரடா? கோபாலா! ஐயர்வாளுடைய சாமான்களை மாடியில் கொண்டுவந்து வைத்துக், கண்மூடிக் கண் திறப்பதற்குள், பல்பொடி, வாஸனை ஜலம், ஸ்பெஷல் காபி, டிபன், தாம்பூலம் தயாராகட்டும். ஐயர்வாள்! தாங்கள் இந்த நாற்காலியில் சற்று தயவு செய்யுங்கள்."



ஐயர் "தப்பிதம் முற்றிலும் தங்களுடையதல்ல. என்னை ஒரே தடவை தான் பார்த்தீர்கள். அதுவும் நான் வேறு தினுசாய் மாறியிருந்த ஸமயம்."

ஆசார்யர் "அப்படியொன்றுமில்லை. வேறொருவனாயிருந்தால் பறந்து போயிருப்பான். தங்களுடைய மனோதைர்யம் யாருக்கு வரும்"

ஐயர் "அடே! அப்பா! அந்தப் பைத்தியசாலையில் என்ன பாடு பட்டிருப்பேன்! நினைக்கும்பொழுது மயிர் கூச்சல் எடுக்கிறது. அதிருக்கட்டும். தாங்கள் மஹாநுபாவர் அகஸ்மாத்தாய் என்னுடைய ஸ்திதியைக் கேள்விப்பட்டு, வெகு சாதுர்யமாய் உபாயம் செய்து, அந்த துஷ்டர்களின் தந்திரங்களை வெளிப்படுத்தி, எனக்கு உயிரையும், புத்தியையும், சுகத்தையும், மரியாதையையும் கொடுத்த தங்களுடைய பெருந்தன்மையை என்னவென்று மெச்சட்டும்."

நாகேச்வரய்யர் தன் தமையனுடைய சொத்திலிருந்து பண்டிதருக் கௌறு அனுப்பின ரூபாய் 500 போனவழி யாருக்குத் தெரியும்?

ஆசார்யர் "இந்த அல்ப விஷயத்தைப் பற்றி பிரமாதமாய்ப் பேசுவதுபோதும். இவ்வளவு தயவுசெய்து என்னை வந்து பார்த்ததால் மிகவும் தன்யனானேன்."

ஐயர் "வேறு வழியென்ன? நான் எவ்வளவு எழுதியும் தாங்கள் வருவதில்லை. நானாவது வந்து பார்ப்போமென்று புறப்பட்டேன்."

ஆசார்யர் "என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? ஒரு நிமிஷமாவது ஓய்வில்லை. இந்த ஜெனரல் ஏஜண்டுத் தொழிலை விட்டுத் துலைக்கலாமென்றால், வெகு காலமாய்ப் பழகின நண்பர்கள் நிர்ப்பந்தம் செய்கிறார்கள். முரட்டுத்தனமாய் அவர்களை எப்படித் தட்டிவிடுகிறது?"

ஐயர் "சரி ஒரு அவஸரமான விஷயத்தைப்பற்றித் தங்களிடத்தில் யோசனை கேட்க வந்திருக்கிறேன்."

ஆசார்யர் "தாங்கள் என்னைப்பற்றி ஏதோ பிரமாதமாய் நினைத்திருக்கிறீர்கள். என்னால் செய்யக்கூடிய எவ்வித சகாயமும் தங்களுடைய் கையிலிருப்பதாய் நம்பலாம்."

ஐயர் "வேறொன்றுமில்லை. என் பங்களாவிற்கு ஐந்து மைல் தூரத்தில் என் அத்தை பெண்ணிருக்கிறாள். அவளுடைய புருஷன் ஓர் பெரிய மிராசுதார்; பரம்பரையாய்ப் பிரபு; எனக்கும் அவர்களிடத்தில் வெகு விசுவாசம். சில காலமாய் அவள் வெளி தேசங்களிலிருந்து வைரம், கெம்பு, புஷ்பராகம், நீலம், முதலிய கல்லுகளைத் தருவித்து, முடிப்பாயும், நகைகளாயும் செய்து தகுந்த கனவான்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறாள். இது அவளுடைய புருஷனுக்குத் தெரியாது. போன வருஷம் பெருத்த நஷ்டம் வந்தது. பணத்திற்கு வெகு முடை உண்டாய்த் தன் புருஷனைக் கேட்கப் பயந்து, தன் கல்லிழைத்த அட்டிகையை ஒரு கம்பெனியில் வைத்து அதன் பேரில் கொஞ்சம் தொகை கடனாக வாங்கினாள். அந்த நகை குடும்பத்தில் வெகு காலமாய் இருந்துவருகிறது. வாங்கின ரூபாய் 1000 இது கணவனுக்குத் தெரிய வேண்டாமென்று எண்ணி அந்த அட்டிகையைப் போல் வேறொன்று சூது நகையைச் செய்து வைத்துக் கொண்டாள்."

"ஒரு வாரத்திற்கு முன் அதின் நடுக்கல் கழன்று விழுந்துவிட்டது. கம்பெனியார் அதை மறுபடியும் வைத்துக் கட்டுவதற்கு இரண்டு வாரமாகுமென்றார்கள். ஆனால் இரண்டு நாளைக்குள் ஓர் கல்யாணத்திற்குப்போக வேண்டியிருந்தது. அட்டிகையைப் போட்டுக்கொள்ளாவிட்டால், புருஷனுக்கு ஸந்தேஹமுண்டாய், எங்கேயென்று கேட்பார். இன்ன செய்வதென்று தெரியவில்லை. கம்பெனிக்காரரைக் கேட்டதில், அசல் அட்டிகையைக் கொடுப்பதாயும், சூது, நகை பழுது பார்த்துக்கொடுத்தவுடன் இதைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்றும், இது வரையில் ரூபாய் 1000த்துக்குப் பிராம்ஸரி நோட் எழுதிக்கொடுக்க வேண்டுமென்றும், அசல் நகையைத் திருப்பிக் கொடுத்தவுடன் நோட்டை ரத்து செய்வதாயும், அது வரையில் வட்டி உண்டென்றும் சொன்னார்



கள். அதை ஒப்புக்கொண்டு, அவள் அட்டிகையை வாங்கிக் கல்யாணத்தில் போட்டுக் கொண்டு ராத்திரி கழற்றி வைத்தாள். மறுநாள் காலையில் பார்க்கும்பொழுது நகைப் பெட்டி காலியாய் இருந்தது. பூட்டுத் திறக்கப்படவில்லை. கீல்களில் மாட்டியிருக்கும் கம்பியை நெம்பிக் கழற்றியிருந்தது."

இதனால் அவளுக்குப் பித்துப் பிடித்ததுபோலாயிற்று. அசல் நகையைத்திருப்பிக் கொடாவிட்டால் கம்பெனிக்காரர் பிராம்ஸரி நோட்டின்மேல் பிரயாது செய்து விடுவார்கள். ஸேவிங்கிஸ் பாங்கியிலோ 200, அல்லது 300 ரூபாய்க்குமேல் அவளுக்குப் பணமில்லை. ஒன்றும் தோன்றாமல், நேற்று என்னிடத்தில் வந்து "இந்த விஷயம் என் புருஷனுக்குத் தெரிந்தால், மிகுந்த மனஸ்தாபமுண்டாகும் இதற்கென்ன வழி" யென்றாள்."

நான் "உடனே புறப்பட்டுக் கம்பெனியாரிடத்திற்குப் போய் தொகை சாடாவையும் செலுத்தி, புரோநோட்டையும் சூது நகையையும் வாங்கிக் கொண்டு வந்தேன். ஆனால், அசல் நகையை எப்படியாவது கண்டு பிடிக்கவேண்டும். போலீசாரிடத்தில் இதை ஒப்புவிக்க இஷ்டமில்லை. ஆகையால், தங்களுடைய யோசனையைக் கேட்பதைத்தவிர வேறொன்றும் எனக்குத் தோன்றவில்லை."

ஆசார்யர் "ஏதாவது திருட்டு போன வழி தெரிகிறதா?"

ஐயர் "யாரோ பலே கைகாரனே, இந்த வேலை செய்திருக்க வேண்டும்."

ஆசார்யர் "தடையமே லகுவாய்க் கண்டு பிடிக்கக் கூடியது. அதை விற்பது வெகுகஷ்டம்; அழித்தாலும் மாற்றினாலும் நஷ்டம் இதைத் திருடினவன் ஒன்றும் புத்தியில்லாத கற்றுக்குட்டியாய் இருக்கவேண்டும். அல்லது பக்காத் திருடனாயிருக்கவேண்டும். திருட்டுப்போன விதத்தை யோசித்தால் அஸாமி லேசானவனல்ல. அவனுக்கு இந்த நகையிலுள்ள கல்லுகளை விற்பனை செய்வது சிரமமில்லை. ஆகையால், உங்களுடைய நகை அதே ரூபத்துடன் திரும்பி வருமென்று நம்பவேண்டாம்.

ஐயர் "அந்தச்சூதுநகையைச் சற்றுப்பார்க்கிறீர்களா?" வென்று, ஓர் நகைப் பெட்டியைத் தன் பையிலிருந்து எடுத்து, நீலமமலின் மேல் கிடந்த வயிர அட்டிகையைகாட்டினர். அது பார்ப்பவர்களின் கண்ணைப்பறித்தது.

ஆசார்யர் "முதல் தரமான வேலை. வெகு நேர்த்தியாயிருக்கிறது. தொழிலாளியே மோசம் போவான். இதை என்னிடத்தில் சிறிது காலம் வரையில் வைத்திருக்கலாமா?"

ஐயர் "தடை யென்ன? அவளுடைய புருஷன் சென்னைக்கு ஏதோ காரியமாய்ப்போயிருக்கிறார். வருவதற்கு இரண்டு மூன்று வாரம் செல்லும்,"

ஆசார்யர் "அவ்வளவு போதும். மறந்துபோய்விட்டேன்; தங்களுடைய தம்பியைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே."

ஐயர் "என்ன செய்யட்டும்? நான் எவ்வளவோ நன்மை செய்திருக்க, அதற்குப்பதிலாக என்னைப்பைத்தியமென்று பெயரிட்டு, ஆஸ்பத்திரியில் அடைத்தான். என் சொத்தைக் கரியாய் அடித்தான். அதெல்லாம் போகட்டும், நிஜமாய் எனக்குப்பைத்தியம் பிடிக்கும்படி செய்யப் பார்த்தான். நான் ஒருவருக்கும் கெடுதி செய்ய விரும்பமாட்டேன். கூடிய வரையில் பொறுமையுடனிருக்க வேண்டு மென்றேபார்க்கிறேன். ஆயினும், அவனை மறுபடியும் என் வீட்டில் அழைக்கவாவது அவனுடன் பேசவாவது அவனைப் பார்க்கவாவது மனம்வரவில்லை. ஸமீபத்தில் என் அத்தை மகள் போயிருந்த கல்யாணத்திற்கு அவனும் வந்திருந்தானும். எங்களிருவருக்கும் பேச்சுவார்த்தை யில்லை யென்று மாத்திரம் எல்லோருக்கும் தெரியுமேயல்லாது, அதற்கு உண்மையான காரணத்தை நான் வெளிப்படுத்தவில்லை"

ஆசார்யர் "நீங்கள் செய்தது சரியே. இந்த விஷயத்தில் இனி காலதாமத மில்லாமல் வேலை செய்யவேண்டி யிருக்கிறது. ஆகையால், நான் தங்களிடத்தில் இப்பொழுது உத்திரவு வாங்கிக் கொள்ளுகிறேன். ஏதாவது விசேஷ மிருந்தால் உடனே தெரி



விக்கிறேன். அதைரியப்பட வேண்டாம். நல்ல சொத்து மோசம் போகாது"

ஐயர் "எனக்கும் ரயிலுக்குப் போக வேளையாயிற்று. எல்லாவற்றிற்கும் போக்கு வரத்துச் செலவுக்காக இந்தச் சில்லறை கையிலிருக்கட்டும். இதை வேறு. விதமாய் எண்ணக் கூடாது. சென்ற தடவை கூட என்னால் தங்களுக்கு எவ்வளவோ கவலையும் தேஹச்ரமமும் பணச் செலவும் நேர்ந்தன. இப்பொழுதாவது என்னிஷ்டப்படி நடக்கவேண்டும். இந்த விஷயத்தில் என் பிடிவாதத்தை மாற்றக் கூடாது. உத்திரவு பெற்றுக் கொள்ளுகிறே" னென்று மூன்று 100 ரூபாய் நோட்டுகளை மேஜையின் மேல் வைத்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல், ஒரு நிமிஷம் கூடத் தங்காமல், அதிவேகமாய் இறங்கிப் போய்விட்டார்.

ஆசார்யர் (தனக்குள் சிரித்துக்கொண்டு) "வலுவில்வரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைப்பார்களா?" வென்று, அந்த நோட்டுக்களைப் பத்திரப்படுத்தி, ஸ்நாநம் போஜனம் முதலியவைகளை சீக்கிரமாய் முடித்துக் கொண்டு, வழக்கப்படி பிரயாணத்திற்கு வேண்டிய முஸ்தீப்புடன் ஸ்டேஷனுக்கு வந்து, அடுத்த வண்டியில் ஏறினர். தன்னுடன் கொண்டுவந்த சமாசாரப் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டும், ஆழ்ந்த யோசனையில் புத்தியைச் செலுத்திக் கொண்டும் பொழுதைப் போக்கினர்.

மஞ்சக்குப்பம் ஸ்டேஷனில் வண்டி கால்மணி தங்கிற்று. ஆசார்யர் காபி சாப்பிட்டு ரயில் பிளாட்பாரத்தில் உலாத்திக்கொண்டிருந்தார். வண்டி நகரும் ஸமயத்தில் ஒருவன் அதிவேகமாய்ப் பரந்து கொண்டுவந்து, தானிருந்த இரண்டாவது வகுப்பு வண்டிக்கு அடுத்த அறையில் பாய்ந்து விழுந்தான். கூலியாட்கள் அவனுடைய பெட்டி படுக்கைகளை வாரி உள்ளே எறிந்தார்கள்.

ஆசார்யர் "நாம் இவனை எங்கேயோ பார்த்த ஞாபகமாயிருக்கிறதே" யென்று ஞாபகத்தை வருவித்துக் கொண்டிருந்தார். சற்று நேரம் கழித்துக் கையைச் சொடுக்கி, "ஓஹோ! அப்படியா? சென்னை மனமோஹன விலாஸ் பெயர் வழியல்லவா? சரிதான் நமது ஸாதுக்

குழந்தை நாகேச்வரன்! ஒருதடவை பார்த்ததுதான். அதுவும் நாளாயிற்று. இவன் எங்கே வந்தான்? எங்கே போகிறான்? இதைக் கவனிக்கவேண்டும். என்ன எனக்கும் வரவர புத்தி மழுங்குகிறது போலிருக்கிறது. மாதுவய்யர் சொன்னது ஞாபகமில்லையே; அந்தக் கல்யாணத்தில் அவனும் வந்திருந்தானும். பலே! இன்னும் வேறு யோசனையேன்? தன் தமயனுடைய ஆஸ்தியை இஷ்டப்படிக்கையாடுவதை நான் தடுத்த பிறகு, எங்கெங்கேயோ சோற்றுக்குப் பறந்து, மறுபடியும் இங்கே வந்து அகப்பட்டதை சுருட்டிக்கொண்டிருக்கிறான். ஐயோ! பாவம்! இப்பொழுதும் என் கண்ணில்படவேண்டுமோ? தெய்வமே அவனுக்கு என்னை யமனாகக் கொண்டு வந்து விடுகிறது. நான் என்ன செய்வேன்? இவனுக்கும் காணாமற் போன வையிர அட்டிகைக்கும் பதினெட்டு பொருத்தங்களுமுண்டு. இனி தூங்கக் கூடாதெ"ன்று அங்கேவந்த கார்டைப் பார்த்து, "ஐயா என் வண்டியில்பேச்சுத் துணையில்லாமல், எவ்வளவு நேரம் கூட்டிலடைத்த குரங்குபோல் ஒண்டியாயிருப்பது? அடுத்த வண்டியில் யாரோ ஒரு கனவான்மஞ்சக் குப்பத்தில் ஏறினார். சென்னை போகும் வரையில் அவரோடாவது பேசிக் கொண்டிருப்பேன். சற்றுத் தயவு செய்து அவரை இங்கே வரச் சொல்லுங்கள். அல்லது நானாவது அங்கே வரலாமாவென்று கேளுங்களெ"ன்றார்.

கார்டு, "ஐயா! அவர் செங்கல்பட்டில் இறங்குகிறார். டிக்கெட் அது வரையில் தானிக்கிறது. அந்த ஜங்க்ஷனிலிருந்து வேறெங்கே போகிறாரோ"

ஆசார்யர் "சரி தங்களை வீணாய் சிரமப்படுத்தினே"னென்று மன்னிப்புச் சொல்லி விட்டுச் செங்கல்பட்டு ஜங்க்ஷனில் வண்டி நின்றவுடன் இறங்குகிறவர்களை கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நாகேசுவரய்யர் வண்டி ஊதும் வரையில் இறங்காமல், திடீரென்று வெளியில் வந்து, ஒரு கூலியாளையழைத்து "இந்த மூட்டைகளை வெளியில் கொண்டுபோய், நல்ல ஜட்கா வண்டி பிடித்துச் சாமராவ் ஹோட்டலுக்குப் பேசிவை"யென்று, தான் துரைகளின் சாப்பாட்டு அறையில் புகுந்தார்.



இதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த ஆசார்யர், தன் சாமான்களுடன் வண்டியை விட்டு இறங்கி, அங்கிருந்த ரயில்வே போலீஸ்காரன் ஒருவனை யழைத்து ஓர் ஜாடை செய்தார். அவன் அதை அறிந்து கொள்ள முடியாமல் விழித்தான். அவனுடைய அருகில் சென்று, எதையோ காதில் சொல்லிச் சட்டைப்பையிலிருந்த ஓர் படத்தையோ கடிதத்தையோ வெள்ளிப்பட்டத்தையோ எடுத்து அவனுக்குக் காட்டினார். அவன் உடனே வெகு வணக்கமாய் ஸலாம் செய்து, "யஜமானனுடைய உத்திர வென்னவெ"ன்றான்.

தான் போலீஸ் டிபார்ட்மெண்டில் ஏதோ பெரிய உத்தியோகஸ்தரோ அல்லது ரஹஸ்ய போலீஸ் இன்ஸ்பெக்டரோவென்று அவன் எண்ணும்படியான ஆதாரங்கள் ஆசார்யரிடத்தில் எப்பொழுதும் தயாராயிருக்கும்.

"ஓய், கான்ஸ்டேபில்! அதோ சாப்பாட்டு அறையில் இப்பொழுது புகுந்த மனிதனை ஜாக்ரதையாய்ப் பின் தொடர்ந்து, நன்றாய்க் கவனித்து, ஸகல விஷயங்களையும் ஒன்று விடாமல் எனக்கு ரிப்போர்ட் செய். இவ்வூரை விட்டு, வேறிடத்திற்கு அவன் போகப் பார்த்தால்உடனே அதை என்னிடத்தில் சொல்லியனுப்பிவிட்டு, நீ அவனைப் பின் தொடர்வாய். இங்கே முதல் கிளாஸ் பிரயாணிகள் தங்கும் அறையில் எனக்குக் கிளப்பிலிருந்து ஆஹாரம் வரட்டு"மென்றார். போலீஸ்காரன் வணக்கமாய் மிலிட்டெரி ஸலாம் செய்து, அதி வேகமாய்ச் சென்றான்.

சாயங்காலையில் சென்னைக்குப் போட் மெயில் புறப்படும் வேளைக்கு 10 நிமிஷங்களுக்கு முன், நாகேச்வரய்யர் தடபுடலாய்ச் சாமான்களுடன் ஸ்டேஷனுக்கு வந்தார். அவருக்குப் பின்னால் போலீஸ்காரனும் காணப்பட்டான். ஆசார்யர் அவனை அருகில் அழைத்து "மற்றதெல்லாம் பிறகு பேசிக்கொள்வோம். அவன் வாங்கும் டிக்கெட்டை எனக்கும் ஒன்று வாங்கிவாவெ"ன்றார். பிறகுதான் வண்டி வந்தவுடன் அதில் ஏறி வெளியிலிருந்த ஜனங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். அதற்குள் போலீஸ்காரன்

வந்து பம்பாயிக்கு ஒரு டிக்கெட்டைக் கொடுத்து, "ஸ்வாமி! இந்த ஸ்டேஷனிலிருந்து இன்னும் இரண்டு டிக்கெட்டுகள் இன்று பம்பாய்க்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மனிதன் ஒன்றும் யாரோ செட்டியார் ஒன்றும் அவைகளை வாங்கினார்கள். உள்ளே வரும்பொழுது அவ்விருவரும் ஏதோ ஜாடை செய்து கொண்டார்கள். வெவ்வேறு வண்டியில் ஏறியிருக்கிறார்க"ளென்றான்.

ஆசார்யர் "நீ கார்டு துரையை அழைத்து, நான் இன்னாரென்பதை தெரிவித்துப், பம்பாயிக்கு இப்பால் அவர்களில் யாராவது இறங்கினாலாவது, வேறு அறைகளில் மாறினாலாவது தெரிவிக்கும்படி சொல்" லென்றார். போலீஸ்காரன் ஸலாம் செய்து, ஒதுங்கினான்.

ரயில் பம்பாயிக்குப் போகும் வரையில், நடுவிலுள்ள ஜங்க்ஷன்களில் கார்ட்டினிடத்திலிருந்து ரிப்போர்ட்டுகள் வந்து கொண்டிருந்தன.

பம்பாயில் இறங்கினவுடன், கார்டு துரை அங்குள்ள போலீஸ் கானிஸ்டேபிளுக்கு ஆசார்யருடைய விஷயத்தைத் தெரிவித்தான். அவன் உடனே வந்து, ஸலாம் செய்து, நின்றான். ஆசார்யர் அவனைக் குளிரப் பார்த்து, அவனுடைய பெயரையும் நம்பரையும் குறித்துக்கொண்டு "மேலதிகாரியினிடத்தில் உன்னைப்பற்றி சொல்லி விட்டுப் போகிறேன். அதோ அவ்விருமனிதர்களையும் கவனித்து அவர்கள் போகுமிடத்தை அறிந்து, இவ்விடத்தில் எனக்கு ரிபோர்ட் செய்வா"யென்று முதல் வகுப்பு பிரயாணிகள் தங்கு மறையில் போனார்.

அரைமணிக்கெல்லாம் போலீஸ்கரன் வந்து, தெண்டனிட்டு, "ஸ்வாமி! வடக்குக் கோடியில் ராமதாஸ் வாடி கால்வாய் ஓரத்திலிருக்கும் 47 வது நம்பர் ஜயசங்கர் ஹோட்டலில் இருவரும் தங்கியிருக்கிறார்கள். ஐயர் போய்க் கால் மணிக்குப் பிறகு மற்றொருவர் போனார். என்ன உத்திர"வென்றான்.

ஆசார்யர் "இப்பொழுது ஒன்றுமில்லை. இன்னும் ஒருவாரம்



வரையில் உனக்கு இங்கே பாரா போடாமலிருக்கும்படி ஏற்பாடு செய்துகொள்" ளென்றார்.

பிறகு அதிவேகமாய்ச் செல்லும் ஓர் வண்டியைப் பிடித்து, அந்த ஹோட்டலுக்கு அடுத்த தெருவில் அதை நிறுத்திப், பெட்டியையும் படுக்கையையும் கூலியாளை எடுத்துவரச் செய்து, தான் மெதுவாய் ஹோட்டலுக்குள் சென்றார். குமாஸ்தா அவரைக் கண்டவுடன் எழுந்து வணங்கி "என்ன உத்திர"வென்றான். ஆசார்யர் "ஒருவாரம் வரையில் இங்கே ஒரு கார்யமாய்த் தங்கியிருப்பேன். சந்தடி சச்சரவில்லாமல் நல்ல காற்றும் வெளிச்சமுமுள்ள ஓர் அறை எனக்கு வேண்டும். ஸ்நானம் போஜனம் முதலியவை மாடியிலேயே நடக்கவேண்டும்"

ஹோட்டலிலுள்ள அறைகளின் "பிளான்" ஒட்டித் தொங்கவிடப்பட்டிருந்த ஓர் படத்தைக் கொண்டுவந்து "ஸ்வாமீ! இதில் எந்த அறை தங்களுக்குச் சௌகரியமாயிருக்கு" மென்றான்.

அதற்குள் ஆசார்யர் பிரயாணிகளின் ஜாப்தாவை படித்துக் கொண்டிருந்தார். அதில் கடைசிப் பெயர் புஜங்கராவ் என்றிருந்தது. ஆசார்யர் "பலே! பேஷ்! படித்தவனல்லவா? நாகேச்வரன் என்றதற்குப் புஜங்கனென்று மொழி பெயர்த்துக் கொண்டான். ஓய் குமாஸ்தா! 19-ம் நம்பர் அறையில் என் சாமான்களைக் கொண்டு போகச் சொல்லு"மென்று மாடியில் ஏறினார்.

அவருக்கு முன் கூலிக்காரன் அறையில் சாமான்களை வைத்துக் கொண்டிருந்தான். ஆசார்யர் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தார். இரண்டுவரிசை அறைகள் நடுவிலுள்ள நடையால் பிரிக்கப்பட்டிருந்தன. ஒரு புறத்து அறைகளில் ஜன்னலிலிருந்து வீதியும் மற்றொரு வரிசை அறைகளின் ஜன்னலிலிருந்து கால்வாயும் காணப்பட்டன. ஜன்னலுக்குக் கீழே நாலடி அகலமுள்ள ஒரு தாழ்வாரம் மரத்தால் கட்டப்பட்டு, அந்த வரிசை முழுவதும் போய்க்கொண்டிருந்தது. அதில் அறைகளுக்கு நடுவில் கதவு போடப்பட்டிருந்தது. இரு வரிசைகளுக்கும் நடுவிலுள்ள நடையில் நல்ல மத்தியானத்திலும் சற்று வெளிச்சம் மட்டு. நாலு மணிக்கு இருட்டிவிடும்.

ஆசார்யர் ஸ்நானபானங்களை முடித்துக்கொண்டு சற்று நித்திரை செய்து விட்டு, வெயில் தணிந்தவுடன் தாழ்வாரத்தில் வந்து காற்று வாங்கிக்கொண்டிருந்தார்.

அடுத்த 18-ம் நம்பர் அறையிலிருந்து இருவருடைய பேச்சுக் குரல் கேட்டது. அந்த நகரத்தில் அபூர்வமான தமிழ் பாஷையா யிருந்தபடியால், ஆசார்யர் கதவண்டை நின்று உற்றுக்கேட்கும்படி நேர்ந்தது. "அப்பா! வந்து சேர்ந்தாயா? எனக்கு முன்பே இங்கே வந்திருப்பதாய்ச் சொன்னாயே!" அது நாகேச்வரனுடைய குரலென்று ஐயருக்குச் சொல்லவும் வேண்டுமோ?

"ஸ்வாமீ! மன்னியுங்கள். தண்டம். நானும் தாங்களும் ஒரே தடவையில் சேர்ந்து வந்தால் ஸந்தேஹம் உண்டாகு மென்று, சற்றுப்பிந்தி வந்தேன். நாலு நாளாய் சரியான சாப்பாடு தூக்கமில்லாமல் வெகு கஷ்டமாயிற்று. என்னைத்தெரியாமல் கண் அயர்ந்து விட்டேன். அடே அப்பா! என்ன செலவு! என்னைப்போன்ற ஏழைபாழைக்கு இது கட்டவே கட்டாது. குடி முழுகிப்போகும் தங்களுக்காக இங்கே வந்தேனே தவிர, ஒரு வேளைக்கு எட்டு அணா சாப்பாட்டிற்கும் ஒரு நாளைக்கு அறை வாடகை இரண்டு ரூபாய் கொடுப்பதற்கும் எனக்கென்ன கொட்டிவைத்திருக்கிறதா? நான் என்ன குபேரனா?" அது செட்டியாருடைய குரலென்று ஆசார்யர் மனதில் பதிவு செய்துகொண்டார்.

ஐயர் இந்தவேஷமெல்லாம் கட்டிவை. உன்னைப்போல் ஏழையுண்டோ? இந்த பம்பாயில், பாதி வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் வைக்கப்பட்டிருக்கும் முதல், உனக்கு வரும் வட்டிக்கு எந்த மூலை? எங்கே அறை வைத்துக்கொண்டிருக்கிறாய்?"

செட்டியார் "எங்கேயா? இதற்கு நேர் எதிர்த்த அறையே."

ஐயர் "சரிரொக்கம் வந்திருக்கிறதா?"

செட்டியார் "ஏதோ நாலுகாசு கஷ்டப்பட்டு ஸம்பாதித்த பணம்"

"போதும். ரூபாயா? நோட்டா?"

# கதாரத்னாகரம்

தனிப்பிரதி அணா 4. வருஷ சந்தா ரூ. 2.

வெளி நாடுகளுக்கு ரூ. 3-8.

1922௵ பிப்ரவரி௴] [துன்மதி௵ மாசி௴

3- MAY 1922 [stamp partly illegible]

## அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | பக்கம் |
| 2. | நம்பிக்கையும் அதனால் விளையும் விசித்திரங்களும் | 291 |
| 3. | பத்திரிகையின் தன்மை | 300 |
| 4. | நல்லுரை | 304 |
| 5. | அநுபவ முத்துக்கள் | 305 |
| 6. | விநோத கதாமஞ்சரி | 57 |

### சந்தா நேயர்களுக்கு

விநோத கதா மஞ்சரி:—இப்பெயர் கொண்டு சிறிய நாவல்கள் சேர்க்கப்பட்டு வருவது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். நாலாம் தொகுதி 12ம்-சஞ்சிகையோடு விநோத கதா மஞ்சரி முதல் வால்யூம் பூர்த்தியாகும். அப்பொழுது சஞ்சிகையிலிருந்து பிரித்து தனி நூலாகச்செய்து கொள்ளலாம். அதற்கென்றே தனிப்பக்க நம்பர் தொடர்ச்சியாய் கொடுக்கப்பட்டு வருகிறது.

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய வன்பரி
லுரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே.

மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாட்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னாவினாற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சிர்கள் பாடவே.

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

—மாணிக்க வாசகர்.

திருச்சிற்றம்பலம்.

உ

கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்

Vol. 4. FEBRUARY, 1922 No. 9.
தொகுதி 4. துன்மதி௵ பிப்ரவரி௴ பகுதி 9.

## நம்பிக்கையும் அதனால் விளையும் விசித்திரங்களும்

நம்முடைய அகத்துறுப்பு புறத்துறுப்பு என்னும் கருவிகரணங்கள், இந்திரியங்கள் முதலியவற்றின் இயக்கத்துக்கு இடையூறு நேரிடுங்காலத்து நமக்குப் பிணியுண்டாவது வழக்கம். அப்படிப்பட்ட யாதொரு இடையூறும் நேரிடாவிடத்தும், மனோ பீதியும் நம்பிக்கை யின்மையுமே சிற்சில விஷயங்களில் தேகாரோக்கியத்தைக் கெடுத்துப் பிணி முதலியவற்றை உண்டாக்கி ஒவ்வோர் காலத்தில் மரணத்தையும் விளைக்கின்றன வென்று சில மனோ தத்துவ சாஸ்திரிகளும், வைத்தியர்களும் அநுபவசித்தமாகக் கூறுகிற்பர். மனோ பீதியும், நம்பிக்கை யின்மையும் எப்படி தேசத்தின்

சுகாதாரத்தைக் கெடுக்கத் தக்கனவோ அது போலவே மனேதிடமும், நம்பிக்கையும் நாம் சுக ஜீவிகளா யிருப்பதற்குப் பெருத்த காரணமா யிருக்கின்றன. நமக்குச் சிகிச்சை செய்ய வரும் வைத்தியர்கள் நம்முடைய நோயைப் போக்குவதில் பாண்டித்தியர்களென்றும், அவர்கள் கொடுக்கும் மருந்துகளும் சொல்லும் முறைகளும் நம்மைக் குணப்படுத்தத் தக்கன வென்றும், உண்மையில் நம்பாத நோயாளிகளுக்கு எவ்வளவு நன்றாய்ச் சிகிச்சை செய்த போதிலும் பிணி நீங்குவதில்லை யென்று சில ஐரோப்பிய வைத்திய பண்டிதர்கள் வற்புறுத்திக் கூறு நிற்பர்.

தமிழ் வைத்தியத்தைக் கரை கண்டுணர்ந்து உலகுய்ய அளவிறந்த வைத்திய சாஸ்திரங்களை இயற்றிய தேரையர் என்னும் சித்தர் பிணியாளிக் கிருக்க வேண்டிய குணத்தை அடியில் வருமாறு கூறுகின்றனர்.

"அருப்ப முறினரசேனினுந் தீர்ப்பானைக்கண்
டழைத்தலன்னையா திய்நமவ னென்றேர்தல்
விருப்ப முறத்தவ சிருத்தன் மெய்யன் பாடல்
வேண்டுட லீந்திடலுறை யேற்றுண்டலத்தைத்
திருப்வ வருந்துயாரற்றம் சாதங் கூறற்
செப்புளோடுங் கற்பன் மருந்தொழித்தலூழா
மிருப்ப கற்றுமுறை துயிற்றலிவை யுள்ளானே
விவனும் புகலுணர்க்கு மின்று நோயே."

இதன் பொருள்:— அரசனே யானாலும் தனக்கு வியாதி நேரிட்டவிடத்து வைத்தியரை உபசரித்து அழைத்தல், அன்னை — பிதா — குரு தெய்வம் ஆகிய இவர்கள் இந்த வைத்தியரே என்று கருதுதல், விருப்ப முண்டாகும்படி ஆசனங் கொடுத்து அவரை இருக்கச் செய்தல், உண்மையான அன்பு பாராட்டுதல், மருந்துக்கு வேண்டிய திரவியங்கொடுத்தல், அந்த மருந்தைப் புசிப்பதற்குத் தடையாயுள்ள வெகுட்டல் முதலியவற்றைச் சகித்துக் கொள்ளுதல், மருந்து சாப்பிடுவதனால் உண்டாகும் குணாகுணங்களை உண்மையாகச் சொல்லுதல், வைத்தியர் சொற்படி அடங்கி நிற்றல், கொடுத்த மருந்தில் நம்பிக்கையற்று வேறே கண்ட கண்ட மருந்துகளை புண்ணுதிருக்தல், பூர்வ கர்மத்தினால் நோய்



சம்பவிக்கிற காரணத்தினாலே அதனை நிவர்த்தி செய்து கொள்ளுவதற்குத் தானம், தருமம், நவக்கிரக சாந்தி முதலியவற்றைச் செய்தல், என்னும் இக்குணங்களைப் பிணியாளி உடையவனா யிருப்பானாகில் அவன் பெயரை உச்சரிப்பவர்களுக்கும் வியாதி அணுகாது.

இதை யோசிக்கையில் வைத்தியரிடத்தும் அவர் கொடுக்கும் மருந்திடத்தும் நம்பிக்கை வைத்து ஒழுகுதலே பிணி நீங்குவதற்கு ஓர் வித உபாயம் என்பதைப் பூர்வீக இந்துக்கள் வெகு நன்றாய் அறிந்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்து தேசத்தில் வியாதியாயிருந்த ஒரு ஸ்திரீக்கு ஒரு வைத்தியர் வெளிப்புறத்தே தடவுவதற்காக ஓர்வித மருந்தையும், உள்ளுக்குச் சாப்பிடுவதற்காக ஓர் வித மருந்தையும், ஓர் கடிதத்தில் கண்டெழுதிக் கொடுத்தார். அக் கடிதத்தை அப்பெண்பால் ஓர் மருந்துச் சாலையில் எடுத்துக் கொண்டு போய்ப் பணம் கொடுத்து அந்த மருந்துகளைத் தரும்படிக் கேட்டனள். அவ்விரண்டு மருந்துகளும் சற்றேறக் குறைய ஒரே நிறமுள்ளதாயும் ஜலமயமானதாயும் இருந்த போதிலும், வெளிப்புறத்தில் பூசுவதற்கான மருந்தில் பாஷாணங் கலந்திருந்த படியால் அது வார்த்திருந்த புட்டியின் மேற் புறத்திலே "பாஷாணம்" (Poison) என்று சிவப்புக் கடுதாசியில் அச்சிட்டு ஒட்டியும், உள்ளுக்குச் சாப்பிடுவதற்கான மற்றொரு மருந்தைச் சாதாரணமாய் மற்றொரு புட்டியில் வார்த்தும் அந்த மருந்துச் சாலைக்கு அதிபதி அந்த ஸ்திரீயினிடத்தில் கொடுத்தனர். அப்படிக் கொடுக்கும் போது அவர் அம்மா, சிவப்பு கடிதம் ஒட்டப்பட்டிருக்கிற இந்தப் புட்டியில் வார்த்திருக்கும் மருந்திலே பாஷாணம் கலந்திருக்கிறது, இது வெளிக்கு மாத்திரம் தடவத்தக்கது, ஜாக்கிரதை, மறந்து இதை உள்ளுக்குச் சாப்பிடப் போகிறாய் என்று எச்சரிக்கை செய்து அனுப்பினார். அம்மாது அவ்விரு மருந்துகளையும் அதி ஜாக்கிரதையாய்த் தனித் தனியே தூர தூரமாய் இரண்டு மாடங்களில் வைத்திருந்து வைத்தியர் சொன்ன முறைப்படி உபயோகித்துக் கொண்டிருக்கையில் அவளுடைய மைத்துனன் வேடிக்கையாக அவளுக்குத் தெரியாமல் "பாஷாணம்" என்றெழுதி யிருந்த கடிதம் எந்த புட்

டிக்கு ஒட்டியிருந்ததோ அதை மெதுவாகக் கிழித்து உள்ளுக்குச்
சாப்பிடும் மருந்து இருந்த மற்றொரு புட்டிக்கு ஒட்டி விட்டு ஒன்
றுந் தெரியாதவன் போல் கூடிக் குலாவிக் கொண்டிருந்தான். இந்
தக் காரியம் நடந்ததற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னமே பிணி
யாளி உள்ளுக்குச் சாப்பிட வேண்டிய மருந்தை உள்ளுக்குச் சாப்
பிட்டும், வெளிக்குத் தடவ வேண்டிய பாஷாணம் கலந்த மருந்தை
வெளிக்குப் பூசியும் வேறே வேலையா யிருந்தாள். சற்று நேரம்
பொறுத்து அகஸ்மாத்தாய் அவ்விரண்டு மாடங்களையும் பார்த்த
போது உள்ளுக்குச் சாப்பிடும் மருந்து இருக்க வேண்டிய விடத்தில்
சிவப்புக் கடிதம் ஒட்டிய புட்டி யிருப்பதைக் கண்டு,
ஓ! ஓ!! எப்படியோ கை பிசகினால் புட்டிகள் இடம்
மாறி விட்டன, இப்போதுதான் சற்று நேரத்துக்கு முன்
நாம் இந்தப் பாழும் புட்டியிலிருந்த மருந்தைத் தானே சாப்
பிட்டு விட்டோம், ஐயோ! ஐயோ!! மோசம் வந்து விட்டதே! என்ன
செய்வேன்!! பாஷாணம் உள்ளுக்குப் போயிற்றே! இன்றோடே
முடிந்தது என் வாழ்நாள், என்று மனோபீதி கொண்டு தத்தளித்துப்
பாயில் வீழ்ந்தனள். உடனே அரை மணி நேரத்திற்குள் தொண்
டையும் வயிறும் கப கப என்று எரிகிறதென்றும், மயக்கமாய்த் தலை
சுற்றுகிறதென்றும் அவள் முறையிட்டனள். சற்று நேரத்திற்
கெல்லாம் மூர்ச்சையாயுமானாள். வீட்டிலுள்ள எல்லோரும் பயந்து
வைத்தியரை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவர் அவளு
டைய மூர்ச்சையை சற்றே தெளிவிக்க, அவள், ஐயா, தெரியாமல்
பாஷாணம் கலந்த மருந்தை உள்ளுக்குச் சாப்பிட்டு விட்டேன்,
என்று வற்புறுத்திக் கூறினாள். இதைக் கேட்ட வைத்தியர் உடனே
பாஷாண முறிப்பான ஒரு மருந்தைக் கொடுத்தார். அது எவ்வ
ளவும் அவளைக் குணப்படுத்த வில்லை. பாஷாணத்தை உட்
கொண்டு விட்டதாக அவள் கொண்டிருந்த தப் பெண்ண
மும் நம்பிக்கையும் பீதியும் அவளுடைய மனதில் நன்றாய்ப்
பதிந்து வேரூன்றி விட்டபடியால் முறி மருந்து அவளை
எவ்வளவும் குணப்படுத்தாமற் போயிற்று. ஆனால் பாஷா
ணத்தை வாஸ்தவத்தில் உட்கொண்டிருந்தால் என்னென்ன குறிகள்
தோன்றுமோ அவையெல்லாம் அவளிடத்துத்தோன்றின. அடிக்கடி



அவள் நினைவு தப்பியும் பேசலாயினாள். இவ்வளவுக்கெல்லாம் கார
ணனாயிருந்த மைத்துனன் பயந்து, நம்முடைய பரிகாசம் என்ன பிர
மாதமாய்விட்டதே! என்று துக்கித்து வைத்தியரிடத்தில் தான்வேடி
க்கை யார்த்தமாகச் செய்த விஷயத்தை ஒன்றும் மறைக்காமல் ஆதி
யோடந்தமாய்ச் சொன்னான். அவர் உடனே பிணியாளியை எழு
ப்பி அவளிடத்தில் அந்த விருத்தாந்தத்தை அவனைக் கொண்டு
சொல்லுவித்ததோடுங் கூடத் தானும் பன்முறை நீ உண்டது
பாஷாண மல்ல, பயப்படவேண்டாம், என்றும் சொன்னார். என்ன
சொன்ன போதிலும் அவள் பாஷாணங் கலந்த மருந்தைச் சாப்பி
ட்டு விட்டதாகக் கொண்டிருந்த நம்பிக்கையும் அதனால் விளைந்த
மனோ பீதியும் மாறவில்லை. அதன் பின் சிவப்புக் கடிதம் ஒட்டப்
பட்டிருந்த புட்டியைக் கொண்டு வரச்சொல்லி அவர் அதிலிருந்த
மருந்தை அவள் பார்க்கும்படி தானே உள்ளுக்குச் சாப்பிட்டு, இது
எவ்வளவும் பாஷாணமல்ல, இதனால் உனக்கு அபாயம் நேரிடாது,
நீ பயப்படாதே என்று அன்று முழுமையும் சொல்லிக்கொண்டிருந்
தார். பிறகு அவளுடைய மனோபீதியும் தப்பெண்ணமும் கொஞ்
சம் கொஞ்சமாக மாறி ஒருவாறாக அவள் குணப்படுவதற்கு நாலை
ந்து தினமாயின.

பிரான்ஸ் தேசத்தில் மரணசிட்சை விதிக்கப்பட்ட ஓர் குற்ற
வாளியின் விஷயமாக மனோதத்துவ சாஸ்திர உண்மைகள் சிலவற்
றைக் கண்டறிய வேண்டு மென்று பிரபல வைத்தியரொருவர் அந்
தத் தேசத்து சக்கிரவர்த்தியாரிடத்தி லிருந்து சில ஆண்டுகளுக்கு
முன்னர் அனுமதி பெற்றுக் கொண்டனர். அந்த வைத்தியர் அக்
குற்றவாளியைப் பார்த்து, அப்பா நீ செய்த குற்றத்துக்காக எப்படி
யும் நீ இறக்க வேண்டியவன் தான், ஆனால் உனக்கு எவ்வளவும்
சிரம மில்லாமல் யான் உன்னை மரிக்கச் செய்யப் போகின்றேன்,
உன்னைக் கத்தியினால் வெட்டி அங்கச்சேத முதலியதைச் செய்தால்
உனக்கு அதிக அவஸ்தையா யிருக்கும், உன் தேகத்தின் ஓர் பாகத்
தில் மெல்லக்கீறி அதன் மூலமாக உன்தேகத்திலுள்ள உதிரத்தை
யெல்லாம் யான் வெளிப்படுத்தி விடுகிறேன், அவ்வண்ணம், உதிர
மெல்லாம் வெளியில் வந்து வீழ்ந்தவுடனே நீ இலேசாக மரித்து

விடுவாய் என்று சொல்ல, அவன் ஐயா, இது எனக்குப் பெருத்த சகாயமாக விருக்கும். அங்ஙனமே செய்தருள்வீராக என்று மறுமொழி கூறிச் சர்வ சித்தமாய் நின்றான். உடனே அந்த வைத்தியர் அவனுடைய இரண்டு கண்களையும் குட்டையினால் நன்றாய்க் கட்டிவிட்டு அவன் கழுத்தின் மேல் தோலைமாத்திரம் ஓர் ஊசியைக் கொண்டு மெல்லக் கீறினார். அதிலிருந்து வாஸ்தவத்தில் எள்ளளவும் உதிரம் கீழே விழவே இல்லை. மேற்கண்டபடி கீறியவாய்க்குச் சமீபமாக ஓர் கிண்ணத்தைப் பிடித்துக் கொண்டு அதில் தண்ணீரை அக்குற்றவாளி கேட்க மெல்ல வார்த்துக் கொண்டிருக்கும்படி ஒரு ஏவலாளிக்கு அவர் கட்டளை யிட்டனர். தன் கழுத்தில் கீறியதினாலே தான் அதன் மூலமாக உதிரம் அருகிலிருந்த பாத்திரத்தில் விழுந்து கொண்டிருக்கிறதென்று அக்குற்றவாளி பூரணமாக நம்பி மனோ பீதி கொள்வதற்கு இவ்வேற்பாடு அனுகூலமா யிருந்தது. அருகிலிருந்தவர்களும் வைத்தியரும் சிறிது பேசிக் கொண்டிருக்கும் போது இடை இடையே "ஐயோ! ஐயோ!" என்றும், "இன்னும் சற்று நேரந்தான்" என்றும் "முடிவாகி விட்டது" என்றும் பரிதாபம் தோன்றச் சொல்லிக் கொண்டே வந்தார்கள். இந்தப்படி ஐந்து ஆறு நிமிஷம் சென்ற பின்பு கழுத்துக்குச் சமீபமாகப் பிடித்துக்கொண்டிருந்த பாத்திரத்தில் தண்ணீர் வார்த்துக்கொண்டிருப்பதை மெல்ல நிறுத்திச் சொட்டு சொட்டு என்று துளித்துளியாகத் தண்ணீர் விடும்படி வைத்தியர் சைகை செய்தனர். பிறகு அதையும் நிறுத்திவிடும்படி குறிப்பித்தனர். இவ்வாறு சப்தம் முற்றும் நின்று போய் விட்டவுடனே தன் உதிரமெல்லாம் வெளியேவந்து விட்டது, இனி ஒரு துளியும் தேகத்தில் இல்லை என்று பூரணமாக நம்பி மதிமோசம் போன அக்குற்றவாளி கீழே விழுந்து இறந்தான். வாஸ்தவத்தில் ஒரு துளி உதிரமும் விரயமாகாதிருந்தும் அந்த வைத்தியர் செய்த தந்திரத்தினால் பூரண நம்பிக்கைகொண்டு மனோபீதி யடைந்து அதுகாரணமாகவே அக்குற்றவாளி மரித்தது என்ன விசித்திரம்!

மனோ பீதியினாலும் நம்பிக்கையினாலும் விளையத்தக்க விசித்திரங்களை அறிய ஐரோப்பாவில் மற்றொரு தேசத்திலே நாலைந்து



கனவான்கள் அவாக் கொண்டு நல்ல தேகாரோக்கிய ஸ்திதியிலிருந்த ஒருவனைப்பார்த்து, அப்பா ஐயையோ! நீ என்ன அதிகமாக தேகம் மெலிந்து போயிருக்கிறாய்? வெகு சீக்கிரத்தில் நீ இறந்து போவாய் போல் தோன்றுகின்றதே? என்று ஒரு கட்டுப்பாடாய் அடிக்கடி சொல்லிக்கொண்டே வந்தார்கள். இவர்கள் இந்தப்படி கூறிக்கொண்டு வருந்தோறும் தேகாரோக்கிய ஸ்திதியிலிருந்த அவன் நாளாவர்த்தியில் பற்பல வியாதிகளினால் மெலிந்து திகிலடைந்து இறுதியில் இறந்து போனான்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் திரிசிரபுரத்தை அடுத்த ஒரு கிராமத்தில் இவ்விஷயமாக விந்தை ஒன்று நடந்தது. அந்தக் கிராமத்துக்கு அரை மைல் தூரத்திலுள்ள காட்டில் இருந்த ஓர் ஆல மரத்தில் ஓர் பூதம் இருந்ததாக அந்த கிராமத்தவர் யாவரும் நெடுநாளாக நினைத்து வந்தார்கள். ஆகையால் அக்காட்டின் வழியாகத் தனியே அவ்வூரார் எவரும் போவதில்லை. இப்படியிருக்கையில் வெளியூரிலிருந்து அவ்வூரில் தங்க வந்த ஒருவன் அந்தச் செய்தியைக்கேட்டு அவ்வூரைப்பார்த்து, இது என்ன விபரீதம்? பூதம் என்கிற பதார்த்தம் ஒன்று இருப்பதாக எனக்கு எவ்வளவும் நம்பிக்கையில்லை. நீங்கள் யாராவது எப்போதாகிலும் அந்தப் பூதத்தைக் கண்டீர்களா? நீங்கள் சொல்வதெல்லாம் பொய் என்று மகா தைரிய சாலிபோல் பரிஹாசம் செய்தான். அதைக்கேட்ட அக்கிராமத்தவர்கள் அப்படியானால், நீ தனியே அங்கு சென்று அவ்விருட்சத்தின் மேல் ஏறி அதில் ஒரு ஆணியை அடித்து விட்டு இறங்கி வருவாயாகில் உனக்கு ஆயிரம் ரூபாய் இனாம் அளிக்கின்றோம் என்றார்கள். அவன் அதற்குச் சம்மதித்து ஒரு ஆணியையும் சுத்தியையும் எடுத்துக்கொண்டு மகா வீராவேசத்துடன் அக்காட்டுக்குத் தனியே சென்றான். அந்தப்படி செல்லுகையில் பூதமென்பது ஒன்று இல்லையென்பது வாசா கைங்கிரியமாக அக்கிராமத்தாருக்கு அவன் முன்னே சொல்லி விட்டபோதிலும், நெடுநாளைய பழக்க முதலியவற்றினால் உள்ளே பயம் மாத்திரம் அவனை விட்டகன்றிலது. ஆயினும் அங்கே சொன்னபடி சாதிக்க வேண்டுமென்கிற மானம் ஒரு புறம் தூண்ட அம்மரத்தின் மீதேறி மேலும் கீழும் நாற்

புறமும் சுற்றுச்சுற்றிப் பார்த்துக்கொண்டே அதிவிரைவாய் ஒரு கிளையில் ஆணியை அடித்தான். அப்படி அவசரமாக அடிக்கையில் அவன் போட்டுக்கொண்டிருந்த கம்பளச் சொக்காயின் கைமுன் தொங்கல் தளர்ச்சியாய்ச் சற்று நீண்டிருந்தபடியினாலும் அவன் பீதியினால் நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தபடியினாலும் தெரியாமல் அவசரத்திலே அச்சொக்காயின் கைமுன் தொங்கல் பாகத்தையும் சேர்த்து மரத்தில் ஆணியை நன்றாய் அடித்துவிட்டான். பிறகு கீழே இறங்கும்போது சொக்காயின் அந்தப் பாகம் மேலே இழுத்தமையால் ஓ! ஓ!! பூதந்தானிருந்து மேலே இழுக்கிறதென்று பயந்து இறந்து அப்படியே கிளையில் தொங்கிக் கொண்டிருந்தான். நெடுநேரமாகியும் போனவன் மீளாதபடியால் சந்தேகித்து அக்கிராமத்தார் எல்லாம் ஒன்றுகூடி அம்மரத்தினருகில் போய் நடந்த விருத்தாந்தத்தை யூகித்தறிந்து துக்கித்தார்கள்.

ஆகையால் பயங்கரத்தை விளைக்கத்தக்க யாதொரு வதந்தியுண்டாயிருக்கும் இடத்தில் எவ்வளவு தைரிய புருஷனாயிருந்தாலும் திடீரென்று அவசரப்பட்டுப் போவது சரியன்று. தற்காலத்தில் பூதம், பேய், பிசாசு என்பவற்றில் ஒருவனுக்கு நம்பிக்கையிராவிடினும் பாலியந் தொட்டு அத்தகுதிய நம்பிக்கையுள்ளவர்களுடன் தான் கூட்டுறவு கொண்டிருந்த தோஷத்தினால் மனம் ஒவ்வோர் காலத்துச் சலனப்பட்டுப் பீதியடைதல் கூடும். மனோதிடம் பூரணமாயிருந்தாலன்றி அப்படிப்பட்ட இடங்களுக்கு அவற்றைக் குறித்துண்டாயிருக்கும் வதந்தியை அலட்சியம் செய்து போதல் அபாயத்துக் கிடமாகும்.

பிணியாளிகள் கேட்டு அதைரியப்படும்படி வைத்தியர்களாவது, உறவினர், நண்பர்கள் முதலியவர்களாவது வார்த்தை யாடுதல் கூடாது. பிணியாளிகளை எவ்வகையினும் உற்சாகப் படுத்திக் கொண்டே வரவேண்டும். மூளையைப்பற்றி வியாதி கண்டு பிசாசு பிடித்திருக்கிறதென்று சொல்லப்படுகிற பிணியாளிகளுக்கு இந்திய மக்கள் செய்துவரும் பற்பல சிகிச்சைகளும், ஏனைய வியாதிஸ்தர்களுக்குச் செய்து வரும் திருஷ்டி கழித்தல் முதலாகிய பரிகாரங்களும்



அவர்கள் அனுஷ்டித்து வரும் மற்றும் அளவிறந்த வழக்கங்களும் யோசித்துப் பார்க்குமிடத்துச் சாஸ்திர யுக்தமாகவே யிருக்கின்றன. பெரும்பாலும் அவைகளெல்லாம் பிணியாளிகளின் மனோபீதியை யகற்றி அவர்களுக்கு மன அமைதி உண்டாக்கி அவர்களுடைய பிணிகளைப் போக்கி அவர்களைக் குணப் படுத்துவதற்கு ஏற்றவைகளாகவே இருக்கின்றன. அவற்றை விரிக்கிற் பெருகும்.

சௌகரியமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறவர்களை அயலூரில் வருவோர் சிலர், "ஏன் இளைத்துப் போய் விட்டாய் உடம்புக்கென்ன?" என்று கேட்பதைக் கௌரவமாக நினைக்கிறார்கள். உண்மையில் ஆரோக்கியம் கெட்டிருந்தால், அது விஷயத்தில் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு திருப்தி தரும் வண்ணம் பேசுவதோடு, மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய விதமாகப் பேசி திருப்தி செய்யவேண்டும்.

தொழில் முறையில் ஒருவனுக்கு உண்டாகும் அன்பும் உற்சாகமும் பரிசுத்தமான பக்தி முறைக்கும் எட்டுவிக்கும்

—அடிஸன்.

# பத்திரிகையின் தன்மை

## அதன் மூலமும், பலமும்.

### சமாசாரப் பத்திரிகை நடத்தும் தன்மை.

மேற்கூறிய விஷயத்தைப் பற்றி டைம்ஸ் பத்திரிகையின் பத்திராசிரியர் மிஸ்டர் விக்கம்ஸ்டீட் என்பவர் லண்டன் யுனிவர்ஸிடி மாணவர்களுக்கு செய்த பிரசங்கமாவது:—

பத்திரிகையை நடத்தும் தன்மை இயந்தர விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. பத்திராசிரியர்களுக்கு அதன் பலமும், வலியின்மையும் தெரியும். எவ்விதக் கொள்கையையுடைய பத்திராசிரியரும் நாளடைவில் ஜனங்களின் மனப்பாங்கை யறிந்து, உண்மை வழியைக் கடைப்பிடித்து, உள்ளன்புடன் பாடுபட்டு ஜனங்களின் ஆதரவைப் பெறுவார்கள்.

பத்திரிகாசிரியராக வர விரும்புவர்கள் பத்திரிகையின் கொள்கையையும், அக்கொள்கைகளின் காரணங்களையும், நாளடைவில் தெரிந்து கொள்ள வேண்டும், சிலர் தங்களால் தூண்டப்பட்டு தாங்கள் எழுதுவதில் அதிக நன்மை யிருப்பதாயும், வாங்கி வாசிப்பவர்கள் பிரியமாக வாசிக்கக்கூடுமெனவும், பொது நன்மையுண்டு எனவும் நினைத்து முன்வரப்பாடுபடுகிறார்கள். இவ்வெண்ணத்துடன் வருவது வழக்கமானாலும், அப்படி நினைத்து வருவது, ஓர் கொத்தன் (கொல்லத்தான்) ஓர் கட்டடத்துக்கு, அஸ்திவாரமும், சுவரும் கட்டி முடிவதற்குள் கோபுரம் கட்டி வைத்துவிட நினைப்பதுபோலாகும். ஒரு கொத்தனைப் போல் பத்திராசிரியர்களும் ஆழ்ந்த யோசனை கூறிய அறிவும், விசாலமான புத்தியும் அடைந்தவர்களாய் மேற்சொலிய அடிப்பலத்துடன் கிளம்ப வேண்டும்.

### பத்திராசிரியருக்கு இருக்க வேண்டிய துணைக் கருவிகள்

சுருக் கெழுத்தில் தேர்ந்தவராகவும், கையெழுத்து அச்சுப் பதிக்க தெரிந்தவராகவும், பிறமொழிகளில் பாண்டித்திய முடையவ



16201

ராகவும், எளிதில் கற்கக் கூடியதாயும் சுளுவாய் அறியக் கூடியதாயும் உள்ள கற்பனைகள் மலிந்ததாயும், சுயபாஷையில் தேர்ச்சியுண்டாயவ ராகவும் சமயத்திற்கு உதவக் கூடிய புஸ்தகங்கள் உடையவராகவும்' வியாசம் எழுதுவதில் நிபுணராகவும், நினைப்பில் களங்கமில்லாதவராகவும், தர்க்கிப்பதில் நிபுணராகவும் இருத்தல் பத்திராசிரியராக வருபவருக்கு நன்மைபயக்கும். இத்துடன் நன் நடத்தையும் நற்குணமும் ஒரு விஷயத்தை யூகித்து இது சரி இது தப்பு என்று அறியும் ஆற்றலும், பாரபக்ஷமின்மையும், ஜனங்களிடத் தன்பும் பயமின்மையும், எடுத்ததைச் சாதிக்கவல்ல வன்மையும், முக்கியமாயமைந்திருக்க வேண்டிய குணங்கள்.

பத்திரிகை நடத்துதல் வியாபார முறைமையிலாவது, தந்திர விஷயமாவது, உத்யோகமுறைமையிலாவது, நடத்துவதாயிருக்கும். ஆனால் அதில் ஆணோ, பெண்ணோ அத்தொழிலில் ஒரே கருத்துடையவர்களன்றி நடத்தலியலாது. பத்திராதிபர்களின் வாழ்நாட்களை ஒரு நாயின் வாழ்விற்கு ஒப்பிடலாம். யாவரும் தூங்குங் காலத்திலும் அவர்கள் வேலை செய்கிறார்கள் யாவருக்கும் குறிப்பிட்ட வேலையைச் செய்ய குறிப்பிட்ட காலமும், குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட வேலைகளும் இருக்க பத்திரிகை யாசிரியர்களுக்கு எந்நேரமும் வேலையிருந்து கொண்டு பத்திரிகைக்கு அடிமைப்பட்டு விடுகிறார்கள். பத்திரிகை நடத்துதல் ஆறுதலான தொழிலல்ல, அபாயங்களும், ஏமாற்றல்களும், குறைவுகளும், நிறைந்தவையாயிருந்தாலும், மானிடர்களில் அடையக்கூடிய மேலானபதவியாகவும், முழுநம்பிக்கையைக் கொடுப்பதாகவுமிருக்கிறது.

மேலும், மன அழுத்தமுள்ள தொழிற்றுறைபோனவன் ஒருவன் கையிலுமிருக்கிறது. இயந்திர மயக்கத்தினால் உலகத்தில் ஒரு கெட்ட பெயர் ஏற்பட்டு விடலாம். பத்திரிகையைப் பார்க்கும் பொழுது யாவருக்கும் மயக்கந்தருவதாயிருத்தல் கூடாது. இது தான் அனுபவ ஞானம். மயக்கமே மூனோ சக்தியாகிய காந்த சக்தி ஓடுவதற்குக் கருவியாயிருக்கிறது. காந்த சக்தியே உலகத்தையும் நிகழ்விக்கிறது. மயக்கம் தெளிவுபடவேண்டும். பத்திரிகாசிரியர்

பத்திரிகையை விளங்கும்படி செய்யவேண்டும். அமெரிக்கர்கள் சொல்லும் விதம் "வர்த்தகத்திற்குரிய சித்தாந்தம்" ஆகக் காட்ட வேண்டும். பத்திரிகை நடத்துதல் தொழிலுடன், ஒருகல்வி கற்பிப்பது போன்றுமாகும். பத்திரிகைகள் சுயேச்சையாய் விடப்பட்டால் ஒழிய முன்னேற்றமடையாது. சுதந்திரம் இல்லாவிட்டால் பத்திரிகை, வாசிப் போருக்கு பயத்தைக்கொடுக்கும்.

## அச்சின் சுதந்திரம்.

அச்சுக்கு சுதந்திர மளிக்க வேண்டுமென்று விரும்பினால் யாவரும் சம்மதிப்பதில்லை. அரசாங்கம் விரும்புவதில்லை. பணமுள்ளவர்கள் வெறுக்கிறார்கள். கீழ்தரத்திலுள்ளவர்கள் அலக்ஷியம் செய்கிறார்கள். இராஜீயக் கிளர்ச்சிக்காரர்களும் வெறுக்கிறார்கள். இருந்தாலும் அச்சுச் சுதந்திரத்தினால் சில நன்மைகள் உண்டு. பொது ஜன விடுதலைக்கு அரண் போன்றதும், ஒரு பிரிவினர், பொது ஜன விரோதமாகச் செல்லும் மார்க்கங்களை வெளிப்படுத்தி பொது ஜன அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கூடியதாயு இருக்கிறது. பொது ஜனங்களுக்குச் செல்வம் போன்றதாகிய அச்சு ஓர் வழக்காடியாக மதக் கூட்டங்களிலும் பொது மக்கட் கழகத்திலும், பொது ஜனக் கூட்டங்களிலும் நின்று நன்மை புரியும்.

நன்றாய் எழுதுவோர்களுக்கு பட்டங்கள் முதலியவைகள் கொடுத்து, அவர்களுடைய எண்ணங்களை யெல்லாம் ஒரு வழிப் படுத்தப்படும். அவரவர்கள் வீட்டுக்குச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை கையாண்டு பரிபாலிக்கப் படும். சில சமயங்களில் பொதுஜனங்கள் அவ நம்பிக்கை கொள்ளப்படும். பத்திராதிபர்கள் தாங்கள் செய்தவற்றை மறக்கமாட்டார்கள்.

## அடக்க முடைமை

லார்டு நார்த் கிளிவ் என்பவர் பத்திராதிபர்களி லெல்லாம் திறமை வாய்ந்தவரென்று நினைக்கப்பட்டார். அவரும் அடக்கமே யாவற்றிலும் நல்லது என்றும், பத்திராதிபர்கள் அடக்கமாயிருந்து எழுத வாரம்பித்தால் நலமாயிருக்கும் என்றும்



சொல்லி யிருக்கிறார். மிகவும் பெரியதோர் விஷயத்தை யாவரும் வாசிக்கு முறையில் சுருக்கி எழுதும் தன்மை மூளையைப்பொறுத்த வேலை. மாணவர்களைப்பார்த்து பலவிஷயங்களைத் தழுவுவது மிகவும் நல்லது, என்றும் அடக்கமே எழுதப் புகுவோர் யாவருக்கும் இருக்க வேண்டியதென்றும் சொன்னார்.

சில பத்திரிகைகள் சமாசாரப்பத்திரிகைகளாகவும், சில தங்கள் கக்ஷிகளிலுள்ள எண்ணங்களைமட்டும் கூறுவதாகவும் இருக்கின்றன. பத்திரிகை சமாசாரத்தை விற்க வந்தது. அதிகமாக நல்ல சமாசாரங்களையும், அவைகள் வாசிக்கத்தகுந்தவைகளாகவும், நம்பக்கூடியவைகளாகவும் இருக்கவேண்டும். இது சமாசாரப்பத்திரிகைக்கு வேண்டிய ஆதாரமாம். எந்த விஷயங்களைப் போடலாம், எவைகளைப் போடக்கூடாது என்று பார்த்துப்போடவேண்டும். வியாபார விஷயங்களும், அரசியல் விஷயங்களும் பிரசுரித்தால் ஜனங்கள் பத்திரிகையை வாசிக்கத்தொடங்கும். அவைகள் முடிவடைந்தபொழுது பத்திரிகை வெளிப்படுதல் தொகையில் குறையும்.

"பத்திரிகை நடத்தும் தன்மையில் இதற்குமுன் படித்தவிஷயங்கள் உங்களுக்கு உதவியாயிருக்கும். கையில் கிடைத்தனவற்றை மகிழ்வடைவீர்கள். உங்களது புது வழிகளைக் கண்டு பழைய பத்திராதிபர்களும், ஆச்சரியப்படுவார்கள். அதுவே பொது மக்களிடத்தில் வேலை செய்யும் பழைய வுண்மைகளை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அன்றன்று புது வாழ்நாள் உங்களுக்குப் பிறக்கும். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே வேலை செய்வீர்கள். ஆனால் ஆணோ பெண்ணோ தாங்கள் அடைய வேண்டிய உன்னத பதவியை அடைந்தவர்களைப்போல் களிப்படைவீர்கள். நீங்கள் உங்களிடமுள்ள தொழிலையும் வசியத்தையும் உணர்வீர்கள். ஏனென்றால் சிலருக்கு மிகுந்த உபகாரமாகவும், கெட்ட எண்ணங்களை ஒழிக்க பாடுபடும் அவர்களுக்கு உதவியாகவும், ஒவ்வொரு விஷயத்திலும் உள்ள தவறுதல்களை சண்டை போட்டு நீக்கவும், புது நாகரீகத்திற்கு வேண்டியவற்றை யளிப்பதாகவும் இருக்கிறது.

முடிவுவரையில் பயாஸ்கோப்பில் மவுனமாய்க் காட்டுவது போல் டைம்ஸ் பேப்பரைக் காட்டி, சமாசாரம் கொடுப்பவர்களும்

உதவி பத்திரிகாசிரியர்களும் வேலை செய்வதையும், இயந்திரமும் எழுத்துக் கோர்க்கும் இடங்களையும், பிரத்தியக்ஷமாய் எடுத்துக் காட்டி காலையில் ஜனங்கள் பத்திரிகை வாங்க வரும் கும்பலையும் மோட்டார் வண்டிகளில் பத்திரிகைகளை வைத்து ரயிலடிக்குக் கொண்டு போய் நாடு முழுதும் பரவச்செய்வதையும் சொல்லிமுடித்தார்.

# நல்லுரை.

1. நல்லோர் எதனையும் நல்லவாக்காண்பர்.
2. தீமைசெய்வதினும் தீங்குறல் நன்றாம்.
3. வஞ்சிப்பவரே அழிவர் வஞ்சகத்தால்.
4. நடிப்புறு பணிவு நலமிலா வஞ்சகம்.
5. வியப்பை விரும்பல்வீண் பெருமைக்கு வித்தாம்.
6. கடமையிற் கருத்துறல் கனிந்தமெய் ஞானமே.
7. களங்கப்பார் வையைக் கடியும்நற் கண்ணே.
8. வஞ்சகம் வெளிப்படின் நஞ்சினும் இழிவாம்.
9. வஞ்சகச் சமர்த்தன் வெளிப்படில் மூடன்.
10. அறிவிலா அழகர்சபையில், பொறியிலாக் குருடர் புண்ணியர்.
11. அவர் அவர் இயல்புக்கு ஏற்ற தொழில் தெரிந்தெடுக்கப்படுமாயின் உலகத்தில் ஒவ்வொரு பதவியும் சிறந்ததேயாம்.

மு. பொ. ஈ.
அன்பகம்,
முன்னீர்ப்பள்ளம்.

# அநுபவ முத்துக்கள்.

1. ஒன்றைப் பார்த்த பின்பே ஒன்பது சிந்தனை. அந்த ஒன்றில்லையாகில் ஒன்பது சிந்தனையும் இல்லை.

2. மனிதன் ஆநந்தத்துடன் இருக்கிறான். தனக்குத் துயரந்தரும் செய்தி தபாலில் வந்து கொண்டிருப்பதை அவன் அறியான்.

3. ஆ! அந்த நற்குணமுள்ள மனைவியின் முகம், ஆ! அந்த தேகாரோக்கியம்— நமது வாழ்க்கையை எத்துணைப் பாக்கியமுள்ளதாக்குகிறது!

4. ஆகாத காரியத்துக்கே தான் ஆத்ம துடிப்பு அதிகம். அதற்கே அதிக நாள் பாடு படுவதும், பலனின்றி ஓய்வதும்.

5. அவசரக் கோலத்தில் எந்த வேலைதான் பூர்த்தி பெறுகிறது? சட்டைப் பைக்குள் இருப்பதுகூடத் தெறிந்து கொள்ள முடியாது.

6. வேலையில் சௌகரியம் எற்படுவது அவரவருடைய ஒழுங்கு சீர்மையைப் பொறுத்தது.

7. கைகள் உன் வேலையைச் செய்யட்டும். மனம் கைகளுக்கு வேலையிட்டுக் கொண்டு, கடவுளையும் துதித்தபடி இருக்கட்டும்.

8. உன் சுதந்திரம் ஒழிந்ததென்றால், உன் கௌரவம் போயதென்று அருத்தம்.

9. யாருக்கானாலும் சரி—நன்மையையே செய். இதை ஒரு விரதமாகக் கொள்.

10. தனிமையையும், தவிப்பையும் மாற்றவல்லது அன்புடைய நண்பர்களின் தரிசனம். அதன் சக்தி அபாரம்.

11. எந்த வஸ்துவிலும் கடவுளை நீ காண நாடு. எத்தொழிலையும் அவரது ஏவலாக எண்ணிச் செய். கடவுளின் கருணையை உன் நெஞ்சம் அப்போது அறிந்து கொள்ளும். நீ அன்பின் ஊற்றாகி விடுவாய். எப்படி நினைக்கிறாயோ அப்படி நீ ஆவாய்.

12. கோபத்தை வெல்ல, அது உண்டான இடத்தை விட்டு உடனே விலகு. பிறரால் மூட்டப்படும் கோபத்துக்கு உடனே

தெய்வ பாடலொன்றை பாடு. நீ கோபத்தினிடம் வெற்றி பெற்று விடுவாய்.

13. மனிதர்களின் வார்த்தை ஓடி வந்து மறையும் அலைபோல. எழுத்தும் செய்கையுமே ஊன்றிப் பயன் நல்கவல்லது.

14. உற்றதோர் நண்பனை இழப்பது உடலில் ஒரு உறுப்பை இழந்தது போலாகும்.

15. தரித்திரம் ஆருவது அறிவு என்று ஒரு ஆங்கில வித்வான் கூறுகிறார்.

16. எந்த ஊரைச் சுற்றிப் பார்த்தாலும், மன மொத்த சொந்த ஊருக்கு இணையில்லை.

17. வெறும் வார்த்தைகளால் கோட்டை கட்டிய காலம் கடந்துபோய் விட்டது. இப்பொழுது காரியமே வேண்டும்.

18. ஒவ்வொரு ஜீவனும் தனக்குத் தனக்கெனப் பாடுபட, கடவுள் எல்லோருக்கும் பாடு படுகிறார்.

19. துக்கம்—ஒருவன் தன் உற்றதோர் உறவினர் இறந்து, அதற்கோர் செலையாக ஒரு சிறு மாது விதவையாகி விடக் கண்டபோது இடியுண்ட நாகம்போல் மனத்தில் படபடப்பு உண்டாகி, சுழற்காற்றில் சுற்றும் துரும்பு போல் திகைக்கிறான். அப்பொழுது தாகமேது—பசியேது—அமைதி ஏது. சிறிது நேரத்தில் மனம் சிந்தனையற்று இருண்டு போகிறது. தன்னை அறியாமலே கண்ணீர் ததும்பி ஒடுகிறது.

20. அதிக சந்தோஷமுள்ளவனுக்கும், அதிக துக்கமுள்ளவனுக்கும் பசி மந்தித்து விடுகிறது.

21. துக்கப்படுவோரை அப்பொழுதே சாந்தி செய்ய முடியாது. இரவு பகலாவது போல் படிப்படியாய் துக்கங்கரைய, அதன் பிறகே ஆற்றுதல் பொருந்தும்.

22. ஒரு இளைஞன் தன் மனைவியை இழந்தால் உடனே சமாதானம் "இன்னொரு விவாகத்துக்கு ஒரு பெண் காத்திருக்கிறது போலும். பல்லக்கில் ஏற பாக்கியம் இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். ஒரு சிறுமி தன் கணவனை இழந்தால் தலை விதி என்று வேதாந்தம் பேசுகிறார்கள்.

23. மனைவிக்காகத் துக்கிப்பவனைப் பார்த்து—போனவளுக்காக ஏன் அழுகிறாய், இவள் போனால் இன்னொருத்தி—எழுந்திரு என்று தேற்றுகிறார்கள். இறந்த பெண்ணிடத்து நன்றி காட்டுவது இப்படித்தானா?



"அசல் கவர்ன்மெண்ட் நோட்டுகள். போட்டால் முழங்கும். கூப்பிட்டால் ஏனென்று கேட்கும்."

"தெரியும். திருட்டுத்தனமாய் அடித்துப் போலீஸால் கண்டு பிடிக்கப்பட்டு, அடையாளமிட்ட பொய் நோட்டுகளை, ஒன்றிற்குப் பாதியாய் வாங்கி, அசலுக்கு அசலாய் என் தலையில் கட்டப்பார்க்கிறாயோ."

"நாங்கள் செட்டிமார் ஜாதி, தலைமுறை தலைமுறையாய்க் காசுக்கடை வியாபாரம். தகல்பாஜி வேலைகளுக்கு நாங்கள் ஆசாமியல்ல."

"அப்படித்தான் சொல்லுகிறார்கள். சரி, காரியத்தைப் பார்ப்போம். குலக்கிரமம் பேசுவதற்காக இங்கே வரவில்லை."

பிறகு பேச்சு நின்றுவிட்டது. ஆசாரியர் கதவின் சந்தின் வழியாய்ப் பார்த்தார். ஐயர் சட்டையையும் பனியனையும் கழற்றித் தன் கழுத்தில் ஓர் பட்டுக் கயிறால் கட்டித் தொங்கவிடப்பட்ட வலைப்பையிலிருந்து, மூங்கில் காகிதத்தில் பல தடவை சுற்றப்பட்டிருந்த ஒரு பெட்டியை எடுத்துத் திறந்து, மேஜையில் சூர்யப் பிரகாசம் போன்ற வயிர அட்டிகையை ஜன்னலிலிருந்து வெளிச்சம் நன்றாய் அடிக்கும்படி வைத்தார்.

ஆசாரியர் திடுக்கிட்டுத், தன் சட்டைப்பையிலிருந்த சூது நகையைப் பந்தோபஸ்தாய் இருக்கிறதா வென்று தடவிப் பார்த்தார். அசலும் நகலும் சற்றேனும் பேதமில்லாமல், அவ்வளவு சாதுர்யமாய்ச் செய்யப்பட்டிருந்தது.

செட்டியார் முதலில் சற்று ஆச்சர்யமடைந்து, அதை வெளிக்குக்காட்டாமல் அடக்கிக்கொண்டார்.

ஐயர் "என்ன குப்புஸ்வாமி! நீ பிறந்தது முதல் இப்படிப் பட்ட உருப்படியை எப்பொழுதாவது பார்த்ததுண்டா?"

"நல்ல நகை. கல்லுகள் பரவாயில்லை."

"பரவாயில்லையா? நன்றாய்ச் சொன்னாய்! உன் தலை முறையிலாவது இதைப் பார்த்திருப்பாயோ?"

"நல்ல நகை. ஆனால், இதைவிட நேர்த்தியான உருப்படி எவ்வளவோ பார்த்ததுண்டு."

"ஏய், செட்டி! நிறுத்து. யாரிடத்தில் முழம் போடுகிறாய் நீ நினைக்கிறதும் பார்க்கிறதும் உன்னிடத்திலேயே வைத்துக் கொள். நானென்ன குழந்தையோ? என்னைவிட உனக்குத் தெரியுமோ."

"தடையென்ன? தாங்களெங்கே? நானெங்கே? என்ன தெரிந்துகொண்டீர்கள்?"

"தெரிந்து கொண்டதா? எவ்வளவு குறைத்தாலும் 3000 ரூபாய்க்கு ஒரு நாகூர்ச்சல்லி குறைக்க முடியாது."

செட்டியார் இதைக் கேட்டவுடன், தேள் கொட்டினது போல், நாற்காலியிலிருந்து துள்ளிக்குதித்து, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு "ஐ ஐயோ! 3000 மா? எந்த ஊரில்? குடி கெட்டது".

"நான் சொன்னது காதில் விழவில்லையோ"?

"முன்னூறென்று சொன்னீர்கள். அல்லவா?"

"மூவாயிரம்—மூன்று ஆயிர ரூபாய் நோட்டுகள்—ஆறு ஐநூறு ரூபாய் நோட்டுகள்—முப்பது நூறு ரூபாய் நோட்டுகள்—தெரியுமா? இன்னொரு தடவை கேட்டால், நாலாயிரம்".

"என்னய்யா! தமாஷா? 3000 கொடுத்து இதை வாங்குவதற்கு ஒருவனுக்கும் பைத்தியம் பிடிக்கவில்லை."

"அடே, மட சாம்பிராணி! 3000 ரூபாய் பெறுமென்று சொன்னேன். நீ அவ்வளவு கொடுப்பாயென்று எண்ணினேனா?"

"என்ன தான் கொடுத்துத் தொலைக்கவேணும்?" "தொலைக்க வேணுமா? கசப்பு விழுங்குகிறாயோ? இதையே 10,000-த்திற்கு



யார் கழுத்திலாவது கட்டிவிடுவாய். ஒரேவிலை, பேரம் கிடையாது. ரூபாய் 1500 கீழே வை"—

"அடே, ராம! ராம! என்னை ஓட்டாண்டியாக்கித் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு போகும்படி செய்வதற்கா இங்கே வரச் சொன்னது? வியாபாரம் செய்து ஏதோ நாலு காசு ஸம்பாதிக்கிறதா? அல்லது இத்துடன் தலை முழுகிவிட்டு ஓ! லக்ஷ்மணா வென்று போகிறதா? தெரியவில்லை".

ஐயர் "இந்த ஜாலமெல்லாம் இன்னும் யாரிடத்திலாவது வைத்துக் கொள். இந்த நகையை நான் சொன்ன விலைக்கு எடுத்துக் கொள்ளுகிறாயா? இல்லையா? இல்லா விட்டால், வேறு யாரிடத்திலாவது பிடிவாதத்திற்காக 100-ரூபாய் குறைத்து கொடுப்பேன். தெரியுமா?

செட்டியார் "அடே, அப்பா! அவ்வளவு தொகை இங்கே என்னிடத்தில் ஏது?

ஐயர் "உன்னிடத்தில் இல்லாவிட்டால் வேறு எங்கேயும் அஸ்தமித்து விட்டதா வென்ன? வென்று அட்டிகையை பெட்டிக்குள் வைக்கப் போனான்.

செட்டியாருக்கு நகையை விடவும் மனதில்லை. குறைந்த விலைக்கு வாங்கவும் வேண்டும். "பேரம் வேண்டாம், ஒரே வார்த்தை. கரூர் ரூபாய் 1000 வாங்கிக் கொண்டு நகையைக் கொடுங்கள்".

ஐயர் எழுந்து, கதவைக் காட்டி, "வெளியில் போ" வென்றார்.

செட்டியார் "இதென்ன இப்படி கோபித்துக் கொள்ளுகிறீர்கள்? நான் சொன்ன விலைக்கு மேல் ஒரு காசு கூடப்பெறாது. ஆனாலும் பழகின தோஷம் பழைய கிராக்கியை விட மனம் வாவில்லை. எனக்கு நஷ்டம் வந்தாலும் வரட்டும். வேறொரு இனத்தில் உங்களிடத்திலிருந்து பற்றிக் கொள்ளுகிறேன். கூட 200-ரூபாய் வாங்கிக் கொண்டு என்னைத் தொந்திரவு செய்யாமல் விட்டு விடுங்கள்.

ஐயர் "இதென்ன விளையாட்டா? நான் வேலையற்றவனா? வெளி

யிலும் போய்த் தலையமாட்டாய். சொன்ன விலையையும் கொடுக்க மாட்டாய். கூழுக்கு மாசை, மீசைக்கு மாசையா? 1500 கொட்டு.

செட்டியார் "1200 இதோ பாருங்களென்று 12, 100-ரூபாய் நோட்டுகளைச் சீட்டைப் போல் கையில் வரிசையாய் வைத்துக் கொண்டு, ஐயருடைய கண்ணிற் கெதிரில் விசிறினர்.

ஐயர் "அடே செட்டி! நீ யென்ன செவிடா? பைத்தியமா? 1500 என்று ஒரு நாழிகையாய்க் கதறுகிறேனே! உன் காதில் விழவில்லையா?" வென்று கையை மடக்கி, மேஜையின் மேல் ஓங்கிக் குத்தினன்,

செட்டியார் பயந்து கிலிபிடித்து, எங்கே தன் கழுத்தைத் திருகித் தான் கொண்டு வந்த ரூபாயையும் அடித்துக் கொண்டு விடுவானோ வென்று திகில் பிடித்து, "இத்துடன் நான் கடையைக் கட்ட வேண்டியதுதான். இந்த நகை இதே விலைக்கு எங்கேயும் விற்கப் போகிறதில்லை.. என் கையிலேயே அழகப் பூசனிக்காய்க் கிடைக்கும் நஷ்டம் நஷ்ட" மென்று சொல்லிக் கொண்டு 15-நூறு ரூபாய் நோட்டுகளைப் பெரு மூச்சு விட்டுக் கொண்டு ஒவ்வொன்றாய் ஐயரிடத்தில் எண்ணிக் கொடுத்து, நகைக்காகக் கையை நீட்டினன்.

ஐயரோ இதைச் சற்றேனும் கவனிக்காதவரைப்போல், நகையை உற்றுப்பார்த்துக் கொண்டே ஒரு கையால் நோட்டுகளை சுருட்டிச் சட்டைப்பையில் அடக்கிக்கொண்டு; மற்றொரு கையால் நகைப்பெட்டியை செட்டியாருக் கருகில் நகர்த்தினர். அவன் அதை உடனே எடுத்து நுட்பமாய் கவனித்துப் பார்த்துக் கைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிக் கொண்டான்.

ஐயர் இந்த மாதிரி ஆயிரக்கணக்கான வியாபாரமே தினம் வழக்கம் போல், அலக்ஷ்யமாய் சிட்டி அடித்துக் கொண்டு, "ஓய், செட்டியார்! போனல் போகட்டும். இன்று உமக்கு இங்கே ஸர்தார் கிருஹத்தில் முதல்தர விருந்து செய்விக்கிறேன். பிறகு ம்யூஸியம், மீன்காலேஜ், பஞ்சாலை, ஸ்டீமர் முதலியவற்றைப் பார்த்து விட்டு, ராத்திரி ஸினிமாவிற்கும் நாடகத்திற்கும் போவோம். கலங்காதே, சிலவெல்லாம் என்னுடையது."



செட்டியார் "மஹாப்ரபூ! தங்களுடைய தாராளக் கைக்கும் உதார குணத்திற்கும் இது ஒரு வரவு செலவா?" வென்று வணங்கிக் கும்பிட்டு, நகைப் பெட்டியுடன் வெளியில் சென்றான்.

ஆசார்யர் இதை யெல்லாம் கதவின் இடுக்கு வழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்து, உருவத்தைச் சற்று மாற்றிக் கொண்டு, ஹோட்டலை விட்டு வெளியில் வந்து, தெருக் கோடியில் ஒரு பக்ஷணக் கடையில் புகுந்து, எதையோ வாங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஐயரும் செட்டியாரும் தமாஷாய் உடை தரித்துக் கொண்டு, அவ்வழியே போவதைக் கண்டார். அவர்களைப் பின் தொடர்ந்து, ஸர்தார் கிருஹத்தில் அவ்விருவரும் புகுந்த பிறகு திரும்பினர். வேகமாய் மாடியில் போய், ஆஹாரத்தை அங்கேயே தருவித்துப் போஜனம் செய்ய உட்கார்ந்தார். ஹோட்டலிலுள்ள மற்றப் பிரயாணிகள் போஜன கிரஹத்திற்குப்போயிருந்ததால்,மாடியில் ஒருவருமில்லை. ஆசார்யர் வரவர இருட்டின நடையில் வந்து பார்த்து, சந்தடியற்றிருந்ததைக் கண்டு, 37-ம் நம்பர் அறைக் கதவின் பூட்டைத் தன்னிடத்திலிருந்த பூட்டுதியால் ஒரு நிமிஷத்தில் திறந்தார். உள்ளே புகுந்து, கதவை மறுபடியும் பூட்டி, செட்டியாரின் கைப்பெட்டிக்காகத் தேடினர். காணவில்லை. வெளியில் போகும் பொழுது தன்னுடன் கொண்டு போய்விட்டாரா? என்ன? அல்லது, ஹோட்டல்காரரிடத்தில் ஒப்புவித்துப் போனரா? ஆனல், செட்டியாருடைய ஸந்தேஹ ஸ்வபாவத்தைக்கவனித்தால், ஒரு பொழுதும் ஒருவரை நம்பி, நகையைக் கொடுத்திருக்கமாட்டார். மறுபடியும் ஜாக்ரதையாய்த் தேடிப்பார்க்கையில், கட்டிலில் கிடந்த மெத்தையின் கீழ் ஓர் மூலையில் வைத்துத் தைக்கப்பட்டிருந்தது. அதின் பூட்டையும் லகுவாய்த் திறந்து, நகையை எடுத்து, அதைச் சுற்றி யிருந்த கடிதத்தில் தன்னிடத்திலுள்ள சூதுநகையைச் சுற்றி, அதே இடத்தில் வைத்துவிட்டு, கைப்பெட்டியைப் பூட்டி, முன்போல் வைத்துத் தைத்து வைத்துவிட்டுக் கதவண்டையில் வந்து நின்று உற்றுக் கேட்டார். சந்தடியைக்

காணோம். கதவைத் திறந்து, மெதுவாய்ப் பூட்டிவிட்டு, ஒருவர் கண்ணிலும் படாமல் வெளியில் போய்விட்டார். ராத்திரி போஜனமானவுடன், பிரயாணத்தின் சிரமத்தால் அயர்ந்து தூங்கி விட்டார்.

நெடு நேரம் கழித்துத், தான் படுத்திருந்த கட்டில் கிடு கிடுவென்று நடுங்கிற்று. திடீரென்று விழித்துக் கொண்டு, நகைப் பெட்டியைத் தேடிப் பார்த்தார். தலையணையின் கீழ் வைத்த விடத்தில் அசையாமலிருந்தது. அதற்குள் ரயில்வே ஸ்டேஷனில் ஒரு மணி யடித்தது. அடுத்த அறையிலிருந்து ஏதோ சத்த முண்டாயிற்று. கனமுள்ள ஓர் பதார்த்தம் கீழே விழுந்து, அங்கு மிங்கும் புரட்டப்பட்டது போல் தோன்றிற்று. ஆசார்யர் ஓசைப்படாமல் எழுந்து, ஜன்னல் கதவைத் திறந்து, வெளித் தாழ்வாரத்தில் வந்து, நடுக் கதவைத் தள்ளிப் பார்த்தார். அப்புறத்தில் தாழ் போடவில்லை, சற்றுத் திறந்து பார்க்கையில், அவ்வறையின் ஜன்னல் படீரென்று திறந்தது. ஆசார்யரும் நடுக் கதவைத் திறந்து, ஜன்னல் வழியாய் அவ்வறைக்குள் எட்டிப் பார்த்தார்.

"நாகேஸ்வரய்யன் கண் காது தெரியாமல் குடித்து விட்டுச் சட்டை சோடு முதலியவைகளைக் கழற்றாமல், ஜன்னலின்மேல், விழுந்து, அங்கிருந்து புரண்டு கீழே விழுந்து கிடந்தான். இதனால் ஹோட்டலில் வேறொருவரும் விழித்துக் கொள்ளவில்லையென்றறிந்து, ஆசார்யர் அவனருகில் நின்று பார்த்தார். ஐயர் தலைமயிர் உதிர்ந்து வெளுத்து, வழுக்கையடைந்து, கையும் காலும் பூதமாய்ப் பெருத்து, ஏற்றச் சாலைப்போல் வயிற்றைப்போட்டுக் கொண்டு, கும்பகர்ணனுக்குத் தம்பியாய் ரயில் குழாயைப்போல் பெருங்குரட்டை விட்டுக்கொண்டிருந்தான்." பார்க்க அருவருப்பாய், மாம்ஸ பர்வதத்தைப்போல், கறையும் சேறும் படிந்த உடையுடன், போட்ட கால் போட்ட கை அசையாமல் கிடந்தான்.

ஒன்றரை மணி யாயிற்று. ஒரு வேளை, முதல் தூக்கம் தெளிந்து, அவன் விழித்துக் கொள்வானோ என்னமோ? நாற்புரத்திலும்



நன்றாய்க் கவனித்துப் பார்த்து, அவனுக்கு ஸமீபத்திலுள்ள ஓர் மேஜையின் மேல் கிடந்த தோல் பையில் தேடிப் பார்த்து ஒன்றும் அகப்படாமல், அந்த அறையிலுள்ள மேஜைகளையும் அலமாரிகளையும் தேடிப் பார்த்தும் ஒன்றையும் காணவில்லை. முடிவில் ஐயரைக் கவனித்துப் பார்க்கையில், ஏதோ ஒன்று முண்டாய்க் காணப்பட்டது. தடவிப் பார்த்தார். சட்டையின் உள் பையில் ஓர் சுருள் நோட்டுகள் தலையை நீட்டிக் கொண்டிருந்தன. அதை லகுவாய் எடுத்து, வெளிச்சத்தில் எண்ணினார். சரியாயிருந்தது. நோட்டுகளைத் தன்னிடத்தில் பத்திரப்படுத்திக்கொண்டு, காலியாயிருந்த தோல் பையை மறுபடியும் சட்டையில் வைத்து விட்டார். ஜன்னலின் வழியாய்த் தாழ்வாரத்தில் வந்து, நடுக் கதவைத் தாள் போட்டுச் சுவரின் மேல் ஏறிக் குதித்து இப்புறம் வந்து, கதவை மறுபடியும் தாளிட்டுத் தன் அறையில் புகுந்து, கலைந்த தூக்கத்தை மறுபடியும் வருவித்து, நித்திரை செய்தார்.

மறுநாள் விடிந்து ஒரு ஜாமம் வரையில் எழுந்திருக்கவில்லை. எப்பொழுதுமில்லாத ஏதோ ஓர் பெருத்த சந்தடியும் கூக்குரலும் காதில் விழுந்து அவரைக் கிளப்பி விட்டன. "கூ கூ! கொள்ளை! கொள்ளை! திருட்டுப்பயலே! முடிச்சவுக்கி! போலீஸ்! போலீஸ்!" ஆசார்யர் விழித்துக்கொண்டு, கண்களைத் துடைத்து, படுக்கையில் உட்கார்ந்து, கவனித்துக் கேட்டு, அறைக்கதவைச் சற்றுத் திறந்து வைத்தார்.

"சீ, நாயே! இங்கே வந்து வாள் ஊளென்று கத்தி, ஏன் என் தூக்கத்தைக் கெடுக்கிறாய்? ஓடிப்போ வெளியிலே".

இது ஐயருடைய டமாரம்போன்ற குரலென்பதில் ஸந்தேஹமில்லை.

"ஐயையோ! நேனு ஸச்சிப்போயினானு, நா கொம்ப முனிகி போயிந்தி! தொங்க! தொங்க! போலீஸ், ரண்டி! லஞ்சாகொடகபைன ராரா. நீ தாடு தெஞ்சேஸ்தானு" (நான் செத்தேன். என் குடி முழுகிப்போயிற்று. திருடன், திருடன். போலீஸ்காரர்

வாருங்கள். மொட்டச்சி பிள்ளாய்! வெளியில் வாடா. உன் தாலியை அறுத்து விடுகிறேன். உன் மென்னைத் திருகிவிடுகிறேன்.

செட்டியார், ஆத்திரம் தாங்காமல், எள்ளுண்டையைப் போல், தொந்தியைத் தூக்கிக்கொண்டு, அங்குமிங்கும் நர்த்தனஞ் செய்தார்.

"அடே, கழுதை! என்னடா தாறுமாறுமாய்ப் பிதற்றுகிறாய்? என்ன வேண்டும்? சொல்லித்துலை."

"ஐயையோ! போய்விட்டது வயிர அட்டிகை. 10,000 ரூபாய்",

"சீ! பீடை போ வெளியிலே. குடித்துவிட்டு இங்கே வந்து கூச்சல் போடுகிறாயா?"

"குடியா, யார்? நீயா, நானா? என் நகையைத் திருடிவிட்டுக்கண்ணாடிக்கல்லை வைத்துத் தலைப்பா மாற்றித் தனம் செய்த போக்கிரிப் பயலே! இதுவும் போதாமல் என்னைக் குடியன் தடியனென்று வையவும் துணிந்து விட்டாயோ! கண்ணைப் பிடுங்கிவிடுவேன். தெரியுமா? யாரென்று நினைத்தாய்? மண்டப்பாடி ராமுடு செட்டி மகன், குப்புஸ்வாமி செட்டி. கபர்தார்! ஜெயிலில் அடைத்து, மண் தூக்கும்படி அடிக்கிறேன். தண்ணிமேல் ஏற்றி விடுகிறேன் பார்."

"இதென்ன சனியன். அந்தப் பாழும் நகையை இங்கே கொண்டு வந்து துலை. அதற்கு என்ன பேதி வந்திருக்கிறது? பார்ப்போம்."

மழை சற்று ஓய்ந்தது.

பிறகு "புத்தி கெட்ட நாயே! என்ன இப்பொழுது முழுகிப் போயிற்று?"

"என்னவா? உன் வயிர அட்டிகை வெறும் உடைந்த கண்ணாடித்துண்டு. என் பணத்தைக் கீழே வை".

"கண்ணாடியா? அடி, செருப்பாலே".



"என் ரூபாய் 1,500 கீழே வைக்கிறாயா? போலீஸைக் கூப்பிடட்டுமா?"

"இந்தா உன் தரித்திர ரூபாய். நாய்க்கு எறிவது போல் தலையைச் சுற்றி எறிகிறேன். தொழில் தெரியாத கழுதையைக் கட்டிக்கொண்டு அழுகிறதைவிட, வேறு யாரிடத்திலாவது இதை இன்னும் அதிக விலைக்கே கொடுக்கிறேன், பார்.

அடே! இதென்ன அந்தப் பாழும் நோட்டுகள்—"

மழை மறுபடியும் சற்று ஓய்ந்தது. பிறகு திடீரென்று கோடை இடி "செட்டித் தட்டுவாணி மகனே! என் பணத்தை வேலை விட்டாயோ".

"போக்கிரிக்கு முதல் பாதமே. என் நகையைத் திருடிவிட்டுத் திருட்டுப் பட்டமும் கட்டுகிறாயா? றொக்கம் கொட்டு. இல்லையா, போலீஸில் அடைத்துவிடுவேன்".

"எச்சில் பொறுக்கி நாயே! என்பையில் வைத்திருந்த நோட்டுகள் எங்கே?"

"பாப்பாரப்பயலே! என் கைப்பெட்டியில் வைத்திருந்த நகை எங்கேடா?"

"நோட்டுகள் எங்கே? இதற்காக வேண்டுமென்று களப்பில் எனக்கு அளவுக்கு மிஞ்சி சாராயம் வாங்கிக் குடிக்கச் செய்தாயோ? என் நகையை எத்திலே அடித்துக்கொண்டு போகலாமென்று பார்த்தாயோ? சரி. உன்னோடென்ன, என் நகை என்னிடத்தில் வந்துவிட்டது. திரிநேத்திரன் வந்தாலும் உனக்கு அதைத்திரும்பிக் கொடுக்கப்போவதில்லை".

"ஆகா! குசாலாய் வைத்துக்கொண்டு கோடீச்வரனாகலாம். தெருவில் கிடக்கும்கண்ணாடித்துண்டு".

"எதாயிருந்தாலும் உனக்கென்ன? எனக்குப்போதும். நீ திருடின நோட்டுகளை நீயே வைத்துக்கொள். நல்லவியாபாரம். அவரவர்களுடைய சொத்து அங்கங்கே யிருக்கட்டும்",

"ஐயையோ! கூ, கூ, ரூபாய் 1,500 கொள்ளை, கொள்ளை. கன்னக்கோல் பயலே! கொண்டுவா பணத்தை".

"இதென்னடா பீடை. இனி மூச்சுவிட்டால் உன் கழுத்தைத் திருகிவிடுவேன்."

தடதடவென்று ஓர் சத்தம் கேட்டது.

"ஓ, கூ, கூ! கொலை! கொலை! போலீஸ்! போலீஸ்! ஐயையோ! நாயனா, நாயனா!" வென்று வரவரத் தீனமாய் வார்த்தைகள் காதில் விழுந்தன. ஆசார்யர் வெகு ஜல்தியாய் உடை தரித்துக்கொண்டு, கீழே இறங்கி, மானேஜரை அழைத்து, நான் ஓர் அவஸரகார்யமாய்ப் புனாவிற்குப் போகவேண்டியிருக்கிறது. இதோ நாளை வரையில் கொடுக்கவேண்டிய சார்ஜ்ஜுகள் சரிதானா, கணக்குப் பார்த்துக் கொள்ளுங்கள். அடே, கூலி! ஒரு வேகமாய்ப்போகும் வண்டி பிடித்து, இந்த சாமான்களை எடுத்துவை. ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். ஓகோ! ஒரு சின்ன விஷயம், மறந்து விட்டேன். மாடியில் யாரோ இரண்டு பேர் சற்று உஷ்ணமாய்ப்பேசிக்கொண்டிருக்கிறார்கள். போய் வருகிறேன்."

சற்று நேரம் கழித்து, மாடி அறையின் கதவுகள் படீர் படீரென்று அடித்துக்கொண்டன. ஜன்னலிலுள்ள கன்னாடிகள் தூள் தூளாய் உடைந்து, வீதியில் விழுந்தன. அடியும் உதையும் கூக்குரலும் வரவர அதிகரித்தன. மானேஜரும் வேலைக்காரர்களும் திகைத்து நின்று, பிறகு தலைவிரிகோலமாய் மாடியில் பாய்ந்தோடினார்கள்.

ஆசார்யர் பம்பாயிலிருந்து புறப்படும் மெயில் வண்டியில், முதல் வகுப்பு அறையில், சௌக்கியமாய் காலை நீட்டிப்படுத்துக் கொண்டு தனக்குள் மெதுவாய், "அனாவச்யமான சிரமம். இந்த வம்பெல்லாம் நமக்கேன்? யார் எப்படிப்போனாலென்ன? தாக்ஷிண்யம். தட்டமுடியவில்லை. என்ன செய்கிறது? இனியாவது கண்டிப்பாயிருக்க வேண்டும். தர்மமே ஜயமென்று யோசனையில் ஆழ்ந்தார்.

—◇0◇—

## கதை—IV

## ராக்ஷதனுக்குப் புரோக்ஷதன்

---

பூவானல்லூரென்பது கோராப்பட்டு ஜில்லாவிலுள்ள ஓ ஷகர் பட்டணம். அதற்கு அரைமைல் தூரத்தில், கேசவய்யரென்ற பெரிய மிராசுதாருடைய பங்களாவும் தோட்டங்களும் வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட்டு கோர்ட்டுகளும் பள்ளிக்கூடங்களும் விடுமுறைக் காலங்களில் மூடப்படும் பொழுது, சென்னை முதலிய நகரங்களிலிருந்த வக்கீல்களாலும் உத்யோகஸ்தர்களாலும் வித்வான்களாலும் ஜே ஜே யென்று நிறைந்திருக்கும்.

கேசவய்யருக்குத்த மனைவியின் புத்திரன் மகாதேவன். அவன் இறந்த பிறகு மணந்த பார்யையின் மகன் நாகேஸ்வரன். கேசவய்யர் சிவபதமடைந்த பொழுது, தன் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை மஹாதேவய்யருக்கும், அதற்குச் சரியான பெறுமானமுள்ள ரொக்கத்தை நாகேச்வரய்யருக்கும் உயில் மூலமாய் பிரித்துக் கொடுத்தார்.

மஹாதேவய்யர் பரம ஸாது. இரக்கமுள்ளவர். தாராளமான ஸ்வபாவமுடையவர். பார்வைக்கு ஸாமான்யமா யிருப்பார். பிறருடன் வம்பு பேசுவது, வீண் காலக்ஷேபம் செய்வது, அவருக்கு வழக்கமல்ல. தன் வீட்டு வியவகாரங்களையும் பூஸ்திதியின் கவனிப்பையும் யோக்யமான கார்யஸ்தர்களிடத்தில் ஒப்புவித்துத் தான் தான தர்மங்களைச் செய்வதிலும், வேத சாஸ்திர கிரந்தங்களை பரிசீலனை செய்வதிலும், நோக்கமா யிருந்தார்.

நாகேஸ்வரய்யர் ஷோக் மனிதன். வெகு சக்கிரவட்டமாய் பேசுவார். பார்வைக்கு மன்மதன்போலிருப்பார். சீட்டு, சூது, ரங்கு, டெ

னிஸ், பில்லியர்ட்ஸ், புட்பால் முதலிய விளையாட்டுகளிலும், குதிரைப் பந்தயத்திலும், நாடகங்களைத் தயார் செய்து வேஷம் தரித்து நடிப்பதிலும் நிகரற்றவர். பார்வையாலும் பேச்சாலும் நாகரீக முள்ள மாதிரியாலும் முதல்தரமான ஆடையாபரணங்களாலும் ஸங்கீத ஸாஹித்யத் திறமையாலும் எல்லோரையும் மயக்கித் தன் வலையில் மாட்டக்கூடியவர்.

ஆனால், அத்திப் பழத்தைப்போல் அவ்வளவும் உள்ளுக்கு அழுகலும் புழுவுமே. மஹாமாயாவி; பெரிய ஆஷாடபூதி; ருத்திராக்ஷப் பூனை; ராவணஸந்யாஸி; பாப புண்யம், தயை தாக்ஷண்யம், ஈகை இரக்கம், மட்டு மரியாதை, யாவற்றையும் துறந்தவர். எதற்கும் துணிந்தவர். பரமநாஸ்திகன்; கொடுமையில் புலியையும், வஞ்சனையில் நரியையும் போன்றவர். ஸகல அக்கிரமங்களுக்கும் தீவினைகளுக்கும் ஓர் மியூஸியம்; ஸமுத்திரக் குடியன். பெண்ணென்று கடிதத்தில் எழுதிக்காட்டினால், துரத்துகிறவன்; அவன் கையில் அகப்பட்ட தனம் நவநிதியாயிருந்தாலும், கல்பக விருக்ஷமாயிருந்தாலும், மாயமாய்ப் பறந்துபோம். எப்பொழுதும் தான், தன்ஸுகம், பணம், இதைத் தவிர வேறு ஞாபகமில்லை. தன் காரியத்தை முடிப்பதற்காகத் தன்னைப்படைத்த கடவுளையும் காவுகொடுப்பான். அவன் சுற்றாத தேசமில்லை; பார்க்காத காக்ஷியில்லை; அறியாத பிரமுகனில்லை. எப்பொழுதும் பணம் பணமென்று ஒரே பறப்புதான். சேஷலோகம் வரையில் ஒரே வரட்சி.

சொத்து கைக்கு வந்தவுடன், சென்னை, பம்பாய், கல்கத்தா, மலையாளம், ரங்கூன், டில்லி, சிங்கப்பூர், ஜப்பான் முதலிய தேசங்களில் பல வருஷங்கள் வரையில் புண்யக்ஷேத்திர யாத்திரை செய்து கொண்டிருந்து, கையில் காசில்லாமல், கட்டத்துணியில்லாமல், அதுவரையில் சம்பாதித்த துர்க்குணங்களும் துர்வியாதிகளுமே ஆஸ்தியாய்க் கடைசியில் ஒருநாள் இரவில் 10-மணிக்குப் பூவானல்லூருக்கு வந்து, குளத்தங்கரைச் சாவடியில், கட்டையைப் போல் பிரக்ஞையற்றுக் கிடந்தான்.

மறுநாட் காலையில் இந்தச் செய்தியை அறிந்த மகாதேவய்யர், ஓடோடியும் வந்து, தன் தம்பியைப் பங்களாவிற்குக் கொண்டுபோய்



பல மாஸங்கள் வரையில் பிரபலமான வைத்யம் பார்த்துப், படாத பாடெல்லாம் பட்டு, யமனுடைய வாயிலிருந்து நாகேச்வரனைப் பிடுங்கி யெடுத்துப், பிராண தாரை வார்த்தார்.

அன்று முதல் நாகேச்வரய்யர் திண்ணையை விட்டு இறங்காமல், ஸேது பாவாஸ்வாமியைப்போல், குதிகாலில் மண்படாமல், மூல விக்ரஹமாய் எழுந்தருளி யிருந்தார். பழய தென்பும் பலமும் பேச்சும் முகவெட்டும் வந்து விட்டன. ஆனால், அது முதற் கொண்டு மகாதேவய்யருக்கு ஏழரை நாட்டுச் சனியன் பிடித்தது. எப்படியோ வீட்டில் சண்டையும் சச்சரவும் கலகமும் வயிற்றெரிச்சலும் கோழும் குண்டுணியும் திருட்டும் புரட்டும் வளர்ந்தோங்கின. மகா தேவய்யர் ஏதோ துர்தேவதை பிடித்தவர் போலும், தீராக்கவலைக் கொண்டவர் போலும்; லோக வாழ்க்கையில் வெறுப்புண்டவர் போலும், ஒன்றும் செய்யாமல், ஒருவருடனும் பேசாமல், ஒன்றையும் கவனிக்காமல், படிப்பையும் தான தர்மங்களையும் அனுஷ்டானத்தையும் விட்டு, ஏதோ ஏக்கம்பிடித்துத், தன் அறையை விட்டு வெளியில் வராமல், ஒரே மௌனமாய் உட்கார்ந்திருந்தார்.

குடும்ப வைத்தியர் கோபாலய்யர் கேசவய்யருக்கு உயிர்த்தோழன். அவரால் முன்னுக்கு வந்தவர். இப்பொழுது தளர்ந்த வயஸ்; காது டமாரச் செவிடு. ஆயினும், பழைய நற்குணமும் புத்திக் கூர்மையும் தொழில் ஸாமர்த்தியமும் குறைவற விளங்கின.

நாகேஸ்வரய்யர் பல தடவை அவரிடத்திற்குச் சென்று, வெகு நேரம் ஆலோசித்து, மகாதேவய்யருடைய தேஹஸ்திதியை நன்றாய்ப் பரீக்ஷிக்கச் செய்து, ராப் பகலாய்ப் படாத பாடெல்லாம் பட்டார். முடிவில், மகா தேவய்யருக்கு, புத்தி ஸ்வாதீனமில்லை யென்று வைத்தியர் நிச்சயித்தார். அவருடன் யாதொருவரும் பேச்சுக் கொடுக்கக் கூடாதென்று, அவரை மாடியில் தனியே ஓர் அறையில் வைத்து, அவரைக் கவனிப்பதற்கு நம்பிக்கையான ஓர் மனுஷ்யன் எப்பொழுதும் கூட இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். அவருடன் பிறந்த தம்பியைக் காட்டிலும் வேறு யாருக்கு அவ்வளவு கவலையுண்டு? ஆகையால், பக்கத்து அறையில் நாகேஸ்வரய்

யர் படுக்கையை வைத்துக் கொண்டார். ஆனால், வரவர மகாதேவய்யருடைய ஸ்திதி ஊழலாய்க் கவலைக் கிடமாயிற்று.

பிறகு சென்னையிலிருந்து ஓர் டாக்டரை வருவித்துக், கோபாலய்யரும் அவரும் நெடு நேரம் ஆலோசித்து, நாகேஸ்வரய்யரை அழைத்து, "உங்கள் தமயனார் இவ்விடத்திலிருப்பது உசிதமல்ல. இன்னும் ஆரோக்யமான காற்றும், சுத்தமான ஜலமும், மனத்திற்கும் உடலுக்கும் முற்றிலும் ஓய்வும், சில காலம் வரையில் அவஸ்யம். ஆகையால், திருவண்ணாமலைக் கருகில் துரைசுவாமி பண்டிதரென்ற ஓர்வைத்தியரிருக்கிறார் அவர் இவ்விதமான மனோவியாதியால்வருந்துகிறவர்களுக்காகவே ஆரோக்யமுள்ள ஸ்தலத்தில் பெரிய தோட்டத்தை அமைத்து, யாதொரு சந்தடியுமில்லாமல், பலர் ஒரே காலத்தில் ஸுகமாய் வஸிக்கக் கூடிய ஓர் பெரிய பங்களாவைக் கட்டி, நல்ல அந்தஸ்திலுள்ள கனவான்களுக்கே இடங்கொடுக்கிறார். மூளை வியாதிகளில் நிகரற்ற திறமை யுடையவர், தன் ஆயுள் முழுவதும் அதிலேயே உழைத்தவர். பணத்திற்கு ஆசைப்படுகிறவரல்ல. தர்மத்திற்காகவும், வித்யையிலுள்ள அபிமானத்திற்காகவும் பாடுபடுகிறவர். உங்கள் தமயனை அங்கே அனுப்புவதைத் தவிர எங்களுக்கு வேறு யோசனை தோன்றவில்லை"யென்றார்கள்.

நாகேஸ்வரய்யர் மனந்தாளாமல், கண்ணும் கண்ணீருமாய், மகா தேவய்யரை வெகு ஜாக்ரதையாய்த் திருவண்ணாமலைக் கழைத்துக் கொண்டு போய்த், துரைசுவாமி பண்டிதரிடத்தில் ஒப்புவித்து, பணத்தைப் பணமாய் பார்க்க வேண்டாமென்றும், கூடிய சீக்கிரத்தில் அவரை ஸ்வஸ்தம் படுத்தித், தன்னிடத்தில் ஒப்புவிக்கவேணு மென்றும் மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

பிறகு கலெக்டரிடத்தில் விண்ணப்பஞ் செய்து, டாக்டர்களுடைய ஸர்டிபிக்கேட்டையும் தாக்கல் செய்து, மகாதேவய்யருடைய தேஹ ஸ்திதி குணமாகும் வரையில், அவருடைய சொத்து முதலிய யாவற்றிற்கும் தானே கார்டியனாய் நியமிக்கப்படவேண்டுமென்று உத்திரவு பெற்றார்.



பட்டணத்திலிருந்து தருவிக்கப்பட்ட டாக்டர் செய்த முடிவு வெகு விசித்திரமானது. மகாதேவய்யர் மித மிஞ்சிக் குடித்ததால் மூளை கலங்கிவிட்டதாம். குழந்தை முதல் அவருடைய ஸ்வபாவத்தை யறிந்த கோபாலய்யரும், பட்டணத்து பெரிய டாக்டருடைய வாயடிக்கு அஞ்சி "ஆம். அப்படி யிருந்தாலு மிருக்கலா" மென்று ஒத்துப் பாடினார்.

ஆனால், நிஜமென்ன? குடிப்பதோ நாகேஸ்வரய்யன். பழி சுமப்பதோ அவருடைய முத்தண்ணா. இரவில் கண் காது தெரியாமல் குடித்து விட்டு, மாடிப் படியில் ஏறும் பொழுது கைப்பிடிக் கட்டையைப் பார்க்க முடியாமல், தலை குப்புற விழுந்துமோதிக் கொண்டு, ஆனைத் தலைபோல் ஒரு வாரம் விளங்கினான். பிறகு ராத்திரியில் பள பள வென்று மின்னும் ஓர் சாய எண்ணையால் அந்தக் கைப்பிடியைப் பூசித், தன் அறைக் கதவில் சாவி போட்டுத் திறக்கும் துவாரத்திற்கும் அதே அலங்காரம் செய்தான்.

இப்படித் தன் தமயனுடைய ஆஸ்தியைக் கைப்பற்றிக் கொண்டு, அவரைக் கண் காணாமல் மறைத்துவிட்டுப், பங்களாவை நல்ல வாடகைக்கு விட்டு, நிலங்களை குத்தகை யடைத்துத், தான் சென்னையில் ஸகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டு, கொஞ்ச மேனும் கவலையில்லாமல் காலம் கழித்தான்.

இது இப்படி நிற்க, கும்பகோணத்தில் ராமாசாரியரென்று, ஒரு அகடவிகட ஸாமர்த்தியசாலி இருந்தார். அவர் ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷ், தெலுங்கு முதலிய பாஷைகளில் நல்ல பாண்டித்ய முடையவர். ஆயினும், ஒருவரிடத்திலும் வேலைக்கு அமர்வதில்லை. சிலவுக்குத் தட்டில்லாமல் எங்கே யிருந்தோ பணம் மாத்திரம் வந்து கொண்டிருந்தது. வெகு சொகுஸாய்க் காலங் கழிப்பவர். ஒருவரோடும் அதிகமாய் நெருங்கிப் பழகுவதில்லை. யாராவது கேட்டால், தான் ஸுகவாஸியென்றும் ஜெனரல் ஏஜண்டென்றும் சொல்லிக் கொள்வார்.

ஒரு ஸமயத்தில் அவர் வேடிக்கையாய்ச் சென்னைக்குப் போய் விட்டு, ஊருக்குத் திரும்பும்பொழுது, பூவானூரில் இறங்கி,

வெங்குவய்யர் கிளப்பிற்குப் போனார். ஸ்நானஞ் செய்து, மடி கட்டிக் கொண்டு, சாப்பிட ஆரம்பித்தார். பக்கத்து இலையில் உட்கார்ந்திருந்த ஓர் வயஸ் சென்ற அய்யர் "ஓகோ! ராமய்யர்வாளா? வரவேணும். பார்த்து வெகு நாளாயிற்று. என்ன? இப்படி உபேக்ஷையாய் இருந்து விட்டீர்கள். வெகு தூரம் பிரயாணஞ் செய்தது போல் தோன்றுகிற"தென்றார்.

ஆசார்யர் "தாங்கள் யாரோ தெரியவில்லை————."

கிழவர் "மன்னிக்க வேண்டும். தங்களை இரண்டு நாழிகைக்கு முன் பார்த்த வுடனேயே, க்ஷேமம் விசாரிக்காதது என் குற்றந்தான். ஏது, ஏது! ரொம்ப மாறிவிட்டீர்களே அடையாளமே தெரியவில்லை."

ஆசார்யர் "என்னை வேறு யாரோவென்று நினைத்துப் பேசுகிறீர்கள். நான் இந்த ஊரல்ல."

கிழவர் "நானென்ன செய்கிறது? தங்களுடைய நண்பர் மாதுவைய்யர் போராதகாலத்தால் அப்படியாய் விட்டார். என்னிடத்தில் வஞ்சனையுண்டா?"

ஆசார்யர் (தனக்குள்) இதென்ன விபரீதம்! இவருக்குப்பிரங்கிச்செவிடுபோலிருக்கிறது. மேலும், நம்மை ஆள் மாறுட்டமாய் யாரோ யென்று நினைத்துப்பேசுகிறார். ஓஹோ இப்பொழுது நன்றாய் விளங்குகிறது. நான் இங்கு வந்தது முதல், இந்த ஹோட்டல் காரனும் பரிசாரகர்களும் எனக்குச் செய்யும் ராஜோபசாரத்தையும், மரியாதையையும் பற்றி, இனி நான் ஆச்சர்யப்பட வேண்டியதில்லை. மாதுவய்யர் யாரோ? அவருக்கு நண்பர் யாரோ? அவர் நானே யென்று இவர்கள் ஸத்யம் செய்வார்கள் போலிருக்கிறது. என்பெயர் என்னமோ தெரியவில்லை. அசட்டுத்தனமாய் அகப்பட்டுக் கொள்ளாமல், இவர்களுடைய வாயைப் பிடுங்கியே எல்லாவற்றையும் தந்திரமாய்த்தெரிந்து கொள்ளவேண்டும். (வெளிப்படையாய்) ஸ்வாமீ! தாங்கள் சொல்வது ஒன்றும் எனக்குப்புலப்படவில்லை" கிழவர் "சரிதான், நீங்கள் இந்த ஊரைவிட்டுப்போன



பிறகு எனக்குச் செவிடு அதிகமாய் விட்டது. கொஞ்சம் இரைந்து பேசவேண்டியது தான். பேச்சுக்குழாய் கொண்டு வந்தால் லகுவாயிருக்கும்." ஆசார்யர் "தங்களை இதற்குமுன் பார்த்ததில்லையே."

கிழவர், "என்ன? மாதுவய்யரா? அவரைப்பார்த்துச் சுமார்ஒரு வாரமிருக்கும். முன்போல் அடிக்கடி போக முடியவில்லை. சென்ற தடவை கண்டு பேசிக்கொண்டிருந்தபொழுது "கோபாலகிருஷ்ணய்யர் இன்னும் ஊருக்கு வரவில்லையோ" வெகு நாளாயிற்றே. என் தேஹஸ்திதி அவருக்குத் தெரிந்திருந்தால், உடனே இங்கு வந்திருப்பாரே யென்று ரொம்ப விசாரித்தார்".

ஆசார்யர் (தனக்குள்) "ஓஹோ, என் பெயர் கோபாலகிருஷ்ணய்யரா? அதைத்தான் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்க வேண்டியது. பகவானைப்போல் எனக்கும் ஸஹஸ்ர நாமம் சமீபத்தில் ஏற்பட்டுவிடும். (வெளிப்படையாய்) இதுவரையில் நானிந்த ஊருக்கு வந்ததேயில்லை".

கிழவர், "அதற்கென்ன? இங்கிருந்து ரயிலேறித்திருவண்ணாமலை ஸ்டேஷனில் இறங்கி, எந்த வண்டிக்காரனையாவது, "துரைஸ்வாமி பண்டிதர் வீட்டிற்குக் கொண்டுபோ வென்றால் ஒரு க்ஷணத்தில் கொண்டுபோய் விடுவான். அங்கே யாதொன்றுக்கும் குறைவில்லை. மாதுவய்யரை நீங்கள் அவஸ்யம் இப்பொழுதே பார்க்க வேண்டியது. இரண்டு மூன்று நாள்களில் நானும் வருவதாய்ச் சொல்லுங்கள். அடே அப்பா! தாங்கள் இங்கே இல்லாத பொழுது, என்னென்னமோ பிரமாதங்கள் நடந்துவிட்டன. அவனுடைய தம்பி நாகேச்வரன் தெய்வானுக்ரஹத்தால் இங்கே வந்திராவிட்டால், என்ன ஆயிருக்குமோ தெரியாது. அயோக்யப் பயல்கள் சிலபேர், மாதுவின் சொத்துக்காக ஆசைப்பட்டு, நாகேஸ்வரன் இந்த சூழ்ச்சி செய்து, தமயனை வெளிப்படுத்தினானென்று சொல்லுகிறார்களாம். வம்பளக்கிறவர்களுக் கென்ன? அவனுக்கு ஸமீப பந்து. இரவும் பகலும் அவனை விட்டுப் பிரியாமல், வேறொருவரையும் கிட்ட வரவொட்டாமல், ஸகல சுச்ரூஷையையும் தானே செய்துகொண்டு யாரிருப்பார்கள்? ஏராளமான சொத்து அவ

னுக் கில்லையா? பிச்சைக் காசுக்காக ஆசைப்பட வேண்டுமென்று அவனுடைய தலை யெழுத்தோ? மேலும், என்னைக் கேட்காமல் ஒன்றும் செய்கிறதில்லை. அதற்கு முன் அவனைப்பற்றி எனக்கு நல்ல அபிப்பிராயமில்லை. நேரில் பார்த்துப் பழகின பிறகல்லவா உண்மை வெளிப்படுகிறது? அவஸரமாய் ஒரு கேஸுக்குப் போக வேண்டி யிருக்கிறது. மன்னிக்கவேண்டும். திருவண்ணாமலையில் மறுபடியும் பார்த்துக் கொள்வோமென்று வெகு பிரியத்துடன் வந்தனம் செய்து, உத்திரவு பெற்றுக்கொண்டு, வாசலில் வந்து நின்ற குதிரைவண்டியிலேறிப் போய்விட்டார்."

ஆசார்யர் மென்மேலும் ஆச்சர்ய மடைந்து, தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்து, தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தான். ஹோட்டல் பரிசாரகர்களில் ஒருவன் அங்கே வந்து அருகில் உட்கார, அவனைப் பார்த்து, "ஐயா! என் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்ட பெரியவர் யாரென்று வினவினார்.

அதைக் கேட்ட அந்தப் பையன் திகைத்து, "என்ன! வைத்யம் கோபாலய்யரைத் தங்களுக்குத் தெரியாதா? பங்களாவில் தாங்கள் தங்கி யிருந்தபொழுது, எவ்வளவோ தடவை தங்களைக்கண்டு நெடுநேரம் பேசிக்கொண்டிருப்பாரே. ஆனால், நீங்கள் இங்கிருந்து போன பிறகு அவருக்கு அஸாத்யச் செவிடாய் விட்டது."

ஆசார்யர் (தனக்குள்) "என்ன அநியாயம்! இங்கிருக்கும் எல்லோருக்கும் ஒரே வாக்காய் சித்தப் பிரமை பிடித்ததா? அல்லது, எனக்குத் தான் ஏதாவது மயக்கமோ? (வெளிப்படையாய்) ஓய்! என்னங்காணும் இந்தப் புரளி? நான் இந்தக் கிழவரை இதுவரை பார்த்ததே யில்லை. இந்தப் பாழும் ஊரையும் உங்கள் பங்களாவையும் கண்டது யார்?"

பரிசாரகன் "ஆனால் தாங்கள் கோபால கிருஷ்ணய்யரல்லவா?"

ஆசார்யர், "கோபாலனுமில்லை கிருஷ்ணனுமில்லை."

பரிசாரகன், "என்ன ஆச்சர்யம்! யாரை வேணுமானால் கேளுங்கள். அங்கமடையாளம் குரல் எல்லா மப்படியே யிருக்குமா? ஆனால், தாங்கள் இல்லை யென்று சொல்லுகிறபடியால் நம்பாமல், என்ன செய்வது?"



ஆசார்யர், "அவர் யாரையா?"

பரிசாரகன், "பங்களா மகாதேவய்யர் அவர்களுக்கு உயிர் தோழன்."

ஆசார்யர், "பங்களாவா? மகாதேவய்யரா? அந்த உருப்படி யார்?"

பரிசாரகன், "அவர்தான் இந்தப் புறத்தில் பெரிய மிராசுதாராம்."

ஆசார்யர், "என்னைப்பார்த்தால் உங்களுடைய கோபால கிருஷ்ணய்யர் மாதிரி இருக்கிறதோ".

பரிசாரகன், "எங்கே வந்து சத்தியஞ் செய்யவேண்டும்? தாங்கள் வந்திருக்கிறீர்களென்று வைத்யருக்குச் சொன்னேன். உங்களுக்காகவே அவர் இங்கே தங்கினார்."

ஆசார்யர் சற்று ஆலோசித்து, "இதில் ஏதோ விசேஷ மிருக்கிறது. ஜாக்ரதையாய் பேசிக் கண்டு பிடிப்போம். கொடுக்கிற தெய்வம் கொல்லைவழியாலும் கொடுக்குமல்லவா" வென்று அந்தப் பரிசாரகனைப் பிரியமாய்ப் பேசி, வசப்படுத்திக்கொண்டு, தாம்பூலம் வகையறா தாராளமாய் உதவி, அவன் கையில் ஒரு ரூபாயை வைத்து அமுக்கிச் "சாம்பு! நான் ஒரு கார்யமாய் இங்கே அடிக்கடி வரும்படி யிருக்கும். ஜாடைமாடையாய் நம்மை விசாரித்துக்கொள். இதென்ன? வாணியன் துணியைத் திருடிக்கொண்டு வந்தாயோ? சீ! தலையைச் சுற்றி எறி யென்று, அதைப் பிடுங்கி வீதியில் எறிந்துவிட்டுத், தன் உடுப்புப் பெட்டியிலிருந்து ஓர் புதுச்சேரி லேஞ்சியை அவன் கழுத்தில் வீசினார். தலைகால் தெரியவில்லை சாம்புவுக்கு. கைகட்டி வணக்கமாய் நின்று கொண்டு, "மஹாராஜா! மஹாப்ரபூ! யஜமான்!" என்ற தினுசில் இறங்கிவிட்டான்.

ஆசார்யர் அவனை இப்படிப் பதப்படுத்தி, ஸாயங்காலத்தில், "வெளியில் சற்றுக் காற்று வாங்கி விட்டு வருவோம் வா வெ"ன்று சாம்புவை அழைத்துக்கொண்டு புறப்பட்டுச் சிறிது நேரத்திற்குள் நாம் இந்தக் கதையின் ஆரம்பத்தில் விவரித்த விஷயங்கள் யாவற்றையும் கறந்து விட்டார். வழியில் ஓர் வாய்க்காலிலிருந்து தண்ணீர் பாம்பு ஒன்று தவளையை கௌவிக்கொண்டு ஓடிற்று. சாம்பு அதைக் கண்டு, "நீங்கள் எப்பொழுதாவது வெள்ளிப் பாம்பைப் பார்த்திருக்கிறீர்களா?"

ஆசார்யர், "ஆகா! தீபாவளியிலும் ஊர்கோலத்திலும் பாம்பு வாணம் விடுவதுண்டு."

சாம்பு, "அப்படியில்லை. உயிரோடிருக்கும் வெள்ளிப் பாம்பு."

ஆசார்யர், "நான் பார்த்ததேயில்லை. நீ பார்த்ததுண்டோ?"

சாம்பு, "நானும் பார்த்ததில்லை. ஆனால், எங்கள் யஜமானன் வெள்ளிப்பாம்பு ஒன்றுமாத்திரமா? எல்லா வெள்ளி ஜந்துக்களையும் பார்த்திருக்கிறாராம். நான் அவர் வீட்டில் வேலைசெய்தவன். தர்மப் பிரபு வென்றால் அவருக்கே தகும். இந்தத் துடைகாலி அவருடைய தம்பி வந்தபிறகு, ஒவ்வொருவராய் விலக ஆரம்பித்தோம். அதற்கு முன் அவரைப் பற்றி யாதொரு புகாருமில்லை. இப்பொழுதும், என்னைக் கேட்டால், அவருக்கு யாதொரு தேக வியாதியாவது மனக்கலக்கமாவது இல்லையென்று பிரமாணஞ் செய்வேன்.

இந்தப்படும்பாவி 'நாகேச்வரன்' காலடி வைத்தான்; மூதேவி உள்ளே நுழைந்தாள். யஜமானனைப் பற்றி பல புகார்கள் ஏற்பட்டன. ஆறு மாசத்திற்குள் வைத்தியம் கோபாலய்யரை மயக்கி, அந்த வஞ்சகன், தன் தமயன் தனியே இருக்கக் கூடாதென்றும், தான் அடுத்த அறையில் படுத்து, அவனைப் பாதுகார்க்க வேணுமென்றும் போதித்து, அவ்விருவரும் சென்னையிலிருந்து ஒரு உதவாக்கரை வைத்யனைத் தருவித்து, ஓர் பஞ்சாயத்தைக் கூட்டி, யஜமானனுக்கு சித்தம் ஸ்வாதீனமில்லை யென்றும், அதிகக் குடியால் அப்படி வந்ததென்றும் முடிவு செய்தார்கள்,



அந்தப் பரம ஸாதுவைப்பற்றி அப்படிச் சொன்னால் நாக்கு அழுகிப் போகாதா? சொத்தைக் கொள்ளை யடிக்க வேண்டுமென்று சின்னவன் செய்த மாயம். இந்தக் கிழட்டு வைத்தியரும் அவன் ஆட்டி வைத்தபடி ஆடுகிறார். தன் ஆஸ்தியை யெல்லாம் ஊதி விட்டு, சோற்றிற்கு விதியில்லாமல், இங்கே வந்து, வளர்த்த கிடா மார்பில் பாய்ந்தது போல், தன் தமயன் செய்த பரமோபகாரத்திற்கு நல்ல பிரதி யுபகாரம் செய்தான். அவரையும் ஆஸ்தியையும் இந்த தர்ம புத்திரனிடத்தில் ஒப்புவிக்க வேண்டியது நியாயமே. ஆட்டு மந்தைக்கு நரியையும், பாலுக்குப் பூனையையும் காவல் வைத்தது போலாகும்.

இன்னொரு விஷயம் கேட்டீர்களா? பங்களாவைச் சேர்ந்த சூத்திரத்தெருவிலுள்ள குழந்தைகளுக்குக் காசு கொடுத்து, பாம்பு, பல்லி, தவளை, எலி, ஒணான், நாய்க் குட்டி, பூனைக் குட்டி, பன்றிக் குட்டி முதலியவைகளை பிடித்துக்கொண்டு வரச் சொல்லி, ஓர் அறையில் வைத்து, ஏதோ செய்து கொண்டிருக்கிறான். ஒரு நாள் நான் அந்த வழியாய்ப் போன பொழுது ஒரு பூனைக் குட்டி அந்த அறைக் கருகில் கிடந்து தவித்துக் கொண்டிருந்தது. என்னவென்று அதைத் தொட்டுப் பார்த்தேன். உடம்பில் ஒரு மயிரில்லாமல், வழ வழ வென்று க்ஷவரஞ் செய்திருந்தது. மேலெல்லாம் ஏதோ ஒரு பிசின் போன்ற ஓர் சாயம் தடவப் பட்டிருந்தது. வீட்டிற்கு வந்து பார்க்கும் பொழுது, இருட்டில் ஏதோ விரலின் நுனியில் ஒட்டிக் கொண்டு பள பள வென்று மின்னிற்று." அது வரையில் கவனமாய்க் கேட்டு வந்த ஆசார்யர் பிறகு சாம்பூ சொன்ன அக்கப்போரை அவ்வளவு காது கொடுத்துக் கேட்கவில்லை.

மறுநாள் அவர் அங்கிருந்து ரயில் மார்க்கமாய் திருவண்ணாமலைக்குப் போய்த், துரைசாமி பண்டிதரின் பங்களாவிற்கு வண்டி பேசிக் கொண்டு, பகல் சுமார் 12-மணிக்குப் போய்ச் சேர்ந்தார். வாசலில் உட்கார்ந்திருந்த சேவகனிடத்தில் கால் ரூபாயைக் கொடுத்து வெற்றிலை பாக்கிற்காக வைத்துக்கொள்ளென்று, "பண்டிதர்" எங்கேயென்று விசாரித்தார்.

அவன் ஸந்தோஷத்தால் அகமலர்ந்து, "ஸ்வாமீ! தயவுசெய்ய வேண்டு மென்று, ஹாலில் அழைத்துப்போய், ஓர் சோபாவில் சௌக்கியமாய் உட்காரு வித்தான்.

சற்றுநேரத்திற் கெல்லாம், தலைமை வேலைக்காரனைப்போன்ற ஒரு வாலிபன், அவரிடத்தில் வந்து வந்தனஞ்செய்து, "ஐயா! பண்டிதர் அவர்கள் அடுத்த கிராமத்திற்குப் போயிருக்கிறார்கள். நான் அவருடைய கார்யஸ்தன். மஹாதேவய்யர் அவர்கள் தங்களைப் பார்க்க மிகுந்த ஆவலாயிருப்பார். இப்படி என்னுடன் தயவுசெய்யுங்களென்று மாடியில் அழைத்துப்போய், ஓர் அறையின் கதவைத் திறந்து, உள்ளே தலையை நீட்டி "ஐயர்வாள்! உங்களுடைய நண்பர் கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் தங்களைப்பார்க்க வந்திருக்கிறா" ரென்று அறிவித்து, ஆசார்யரை அவ்வறைக்குள் போகச்செய்து, கதவைமெதுவாய்ச் சாற்றிக்கொண்டு, கீழே இறங்கிப்போய் விட்டான்.

உடனே ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவர், பரபரப்புடன் எழுந்து வந்து ஆசார்யரை உற்றுப்பார்த்து, ஆச்சர்யமடைந்து, "ஐயா! தங்களைப்பார்த்தால் கோபாலகிருஷ்ணய்யர் அல்லவென்று தெரிகிறதே! இதென்ன ஸங்கதி"யென்றார்.

அவர் துக்கத்தால் வாடித், தலைமயிர் நரைத்துத், தான் இனி சந்தோஷத்தையும் ஸுகத்தையும் அடைவோமென்ற ஆசையை முற்றிலும் விட்டவரைப்போல், சற்றுக்குனிந்த தலையுடன் மனதை எங்கேயோ செல்லவிட்டு நின்றார்.

ஆசார்யர், மெதுவாய் "ஐயா! குரலைத்தாழ்த்திப் பேசுங்கள். தங்களிடத்தில் வெகு முக்கியமான கார்யத்தைப்பற்றின ஓர் ரஹஸ்யத்தைச் சொல்ல வந்திருக்கிறே னென்று சத்தப்படாமல் கதவண்டையில் பாய்ந்து, திறந்து பார்த்து, ஒருவரும் ஒட்டுக்கேட்கவில்லை யென்றறிந்து, மாதுவய்யரிடத்தில் வந்து, "என்னை மன்னிக்கவேண்டும். தங்களைப்பார்த்துத், தனியாய்ப் பேசுவதற்கு வேறு வழியில்லாததால், தங்களுக்கு நெருங்கின மித்திரனை ஒருவருடைய பெயரைக் கொஞ்ச காலம் ஸ்வீகாரஞ் செய்துகொண்டு,



தெய்வச்செயலாய் அவரைப் போல் நானிருக்கும் காரணத்தால், இவ்வளவு சுலபமாய் இங்குவந்து தங்களைக்கண்டேன்."

மாதுவய்யர் ஒன்றும் தோன்றாமல், கையிலிருந்த புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டிக்கொண்டு, கடைக்கண்ணால் ஆசார்யரைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

அதைக் கண்டு நம்மவர், "ஐயா! சங்கதிகளைச் சுருக்கமாய்ச் சொல்லவேண்டியிருக்கிறது. என் பெயர் ராமாசாரியர். இருப்பிடம் கும்பகோணம். ஒரு கார்யமாய்ப்பூவாளூர் வெங்குவய்யர் ஹோட்டலில் தங்கின பொழுது, தங்களைப் பற்றின சில விஷயங்களை அகஸ்மாத்தாய் அறியும்படி நேர்ந்தது. இந்த நிமிஷத்தில் யார் இங்கேவருவார்களோ தெரியவில்லை. தங்கள் விஷயத்தில் நான் மிகவும் கவலைப்பட்டிருக்கிறே னென்றும், தங்களுடைய தம்பியின் மோசத்தால் தாங்கள் இங்கு அடைக்கப்பட்டிருக்கிறீர்களென்றும், வைத்தியம் கோபாலய்யர் வெகு லகுவாய் ஏமாற்றப்பட்டிருக்கிறா ரென்றும், தங்களை எப்படியாவது இங்கிருந்து வெளிப்படுத்த நிச்சயித்திருக்கிறேனென்றும், தாங்கள் நம்பினால் போதும். கவனியுங்க"ளென்று, தான் விசாரித்தறிந்த விஷயங்களைச்சுருக்கமாயும் கோர்வையாயும் சொல்லி, "இப்பொழுதாவது என்னை நம்புவீர்களா?" வென்றார்.

மாதுவய்யர் முகமலர்ந்து, "அது ஸாத்தியமோ, என்னமோவென்று நான் சொல்ல முடியாது. ஆயினும், யாதொரு காரணமுமில்லாமல், என்னிடத்தில் இரக்கம் பிறந்து, என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று சிரமப்படும் தங்களுக்கு என்ன செய்யப்போகிறேன்? ஆனால், ஒன்று கேளுங்கள். இருட்டின வுடன் விசித்திரமான தோற்றங்கள் என் கண்ணில் படுகின்றன; பொய்யல்ல; கனவல்ல; பிரம்மையல்ல; ஏன்? நேற்று ராத்திரிகூட நான் படுக்கையிலிருக்கையில், ஒரு முழம் நீளமுள்ள ஏதோ ஒரு ஜந்து தரையில் ஓடிக்கொண்டிருந்தது. தேகமெங்கும் பளபளவென்று மின்னிற்று. இனி இப்படி என் கண்ணிற்குப் பட்டுக் கொண்டிருந்தால், நிஜமாய் எனக்குப் பைத்தியம் பிடித்து விடுமென்று," கையால் முகத்தை

மூடிக் கொண்டு கண்ணீர் விட்டார். பிறகு "ஐயா! சென்ற ஆறு மாதங்களாய் நான் படும் பாட்டைச் சொன்னால், இதுவரையில் என் எனக்குப் பைத்தியம் பிடிக்க வில்லையே யென்று நானே ஆச்சரியப் படுகிறேன்."

ஆசார்யர், "தங்களுடைய படுக்கையறையைப் பார்க்கட்டுமா?" என்றார்.

ஐயர் அவரை அழைத்துக் கொண்டு அடுத்த அறையில் புகுந்தார். அங்கே படித்துக் கொண்டிருந்த ஒருவனைக் காட்டி "இவன் என்னுடன் எப்பொழுதும் இருக்கும் மனிதன்" என்றார். அவன் எழுந்து வந்தனஞ் செய்ய,

ஆசார்யர், அவனைப் பார்த்து "அப்பா,! பண்டிதரவர்கள் அடுத்த கிராமத்திற்குப் போயிருக்கிறாராம். அவசரகார்யமாய் நான் அவச்யமாய்ப் பார்க்க வேண்டியபடியால், உடனே அவரைப் போய் அழைத்து வரும்படி உன்னை சிரமப் படுத்தவேண்டி யிருக்கிற"தென்று, ஐயருக்குத் தெரியாமல் அவனுடைய கையில் ஒரு ரூபாயை வைத்து மூடினார். அவன் சற்றுத் திகைத்து, "ஸ்வாமீ! இதோ அழைத்து வந்து விட்டே"னென்று அதி வேகமாய் ஓடினான்.

"இவனை அப்புறப் படுத்திவிட்டேன் வாருங்க"ளென்று ஐயருடைய படுக்கை யறையில் புகுந்து, "இதற்கப்பால் என்ன விருக்கிற"தென்றார்.

ஐயர், "பண்டிதருடைய அறை. அங்கே அவரது மது கார்யஸ்தனவது எப்பொழுதுமிருப்பார்கள். இருபுறத்திலும் எனக்கு எப்படிப்பட்ட பந்தோபஸ்துநடக்கிறது, பார்த்தீர்களா!"வென்று பெருமூச்சு விட்டார்.

உடனே ஆசார்யர் அந்த அறையை மேலும் கீழும் பக்கங்களிலும் வெகு கவனமாய் ஒன்று விடாமல் பரிசோதித்தார். கட்டிலின் கீழே புகுந்து, ஏதோ ஒன்றை ஜாக்ரதையாய்த் தன் பணப்பையில் மறைத்துவிட்டு, ஐயரிடத்தில் வந்தார். அப்பொழுது அந்தக் காவலாள் உள்ளே வந்து வணங்கி, "ஐயா! நான் விசாரித்த

# கதாரத்னாகரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ.

வெளி நாடுகளுக்கு ரூ. 3-8.

1922ஹு மார்ச்சுமீ] [துன்மதிஹு பங்குனிம

3- MAY1922

அட்டவணை


1. கடவுள் வணக்கம்
2. மூளையினலாகத்தக்க வேலையும் அதை நடத்தும் விதமும் 307
3. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் 309
4. தாய்மார்களுக்குச் சில போதனைகள் 311
5. அனுபவ முத்துக்கள் 312
6. பிரபஞ்ச விநோதங்கள் 314
7. இரதி சுந்தரி 315
8. விநோத கதா மஞ்சரி 81


## சந்தா நேயர்களுக்கு

விநோத கதா மஞ்சரி:—இப்பெயர் கொண்டு சிறிய நாவல்கள் சேர்க்கப்பட்டு வருவது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். நாலா தொகுதி 12ம்-சஞ்சிகையோடு விநோத கதா மஞ்சரி முத வால்யூம் பூர்த்தியாகும். அப்பொழுது சஞ்சிகையிலிருந்து பிரித்து தனி நூலாகச்செய்து கொள்ளலாம். அதற்கென்றே தனிப்பக்க நம்பர் தொடர்ச்சியாய் கொடுக்கப்பட்டு வருகிறது

# கடவுள் வணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன்னு முத்தர கோசமங் கைக் கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

கொள்ளோர் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்வைச்செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண் டாய்நின் விழுத் தொழும்பின்
உள்ளேன் புறமல்லே னுத்தரகோசமங் கைக் கரசே
கள்ளே னொழியவுங் கண்டுகொண் டாண்ட தெக் காரணமே.

காருரு கண்ணிய ரைம்புல னாற்றங் கரைமரமாய்
வேருறுவேனை விடு திகண் டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னு முத்தர கோசமங் கைக் கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க வென்னை வளர்ப்பவனே.

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவு நீங்கியிப்பான்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண் டாய்வெண் மதிக் கொழுந்தொன்
றொளிர்கின்ற நீண்முடி யுத்தரகோச மங்கைக் கரசே
தெளிகின்ற பொன்னு மின்னும் மன்ன தோற்றச் செழுஞ்சுடரே.

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதிகண் டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக் கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே.

மறுத்தனன் யானுன் னருளறி யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்றொகுதி
மறுத்தெனை யாண்டுகொ ளுத்தர கோசமங் கைக் கரசே
பொறுப்பான் றேபெரி யோர்சிறு நாய்கடம் பொய்யினையே.

—திருவாசகம்

உ

கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவைதுறள்

Vol. 4. தொகுதி 4. | MARCH, 1922 துன்மதிஸு மார்ச்சுமீ | No. 10. பகுதி 10.

## மூளையினுலாகத்தக்க வேலையும் அதை நடத்தும் விதமும்

"தேகத்திலுள்ள எல்லா உறுப்புகளும் இயங்குவதற்கும், இவ்வியக்கத்தினால் நமக்குண்டாகும் சகல உணர்ச்சி பேதங்களுக்கும் மூளையே பிரதானமானது. அதை ஆன்மாவின் நிலையென்று மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுவர். தேகத்திலுள்ள கரணங்கள்—தத்துவங்கள் முதலிய யாவற்றினும் அது மிகவும் சிறந்ததென்பது, தேகத்தின் எல்லாப் பாகங்களினும் மிகவும் திண்ணிய மண்டை ஓடு அல்லது கபாலத்துக்குள் கடவுள் அதை அமைத்து வைத்திருக்கும் அருமையினாலேயே தெளிவாய் விளங்குகிறது. "நான் நினைக்கிறது நெஞ்சிலிருக்கிறது, வாயில் வாவில்லை." "அவன் வயிற்றைக் கிழித்தால் வாரடைக்கும் அக்ஷரம்

கிடையாது,” என்னும் சாதாரணப் பழக்கச்சொற்களை ஆதாரமாகக் கொண்டு, மூளையினுடைய அருமைப்பாட்டையும், சகல எண்ணங்களுக்கும் அதுவே உற்பத்தி ஸ்தானம் என்பதையும் புராதன இந்துக்கள் அறிந்திலர் என்று சில நவீன சாஸ்திரிகள் கூறுகிறார்கள். லலாடஸ்தானம்--பிரம்மரந்திரம்—துவாத சாந்தம்—என்னும் பதப்பிரயோகங்களையும், “எண்சாணுடம்புக்கு சிரசே பிரதானம்,” என்னும் பழமொழியின் தத்துவார்த்தத்தையும், சகல வியாதிகளுக்கும் தைல வர்க்கங்களைக் கொண்டு சிரசில் பிரயோகிக்க வேண்டியதென்று நம் இந்துக்களின் ஆயுள்வேதம் முறையிடும் உண்மைகளையும் அவர்கள் உணர்ந்திலர் போலும். ஏனைய எல்லா உறுப்புகளையும் இயக்கத்தக்க ஆன்ம நிலையும், உணர்ச்சி ஸ்தானமும், எண்ணமுதிக்கும் ஆதிபீடமும் சிரசென்பதை அறிந்தே நம்மனோர் சிரசைப்பிரதானமாகக் கொண்டார்கள்.

விடாது வருந்தி வாசிப்பதினால் மூளையின் சக்தி அதிகரித்துப் புத்தி விசாலப்படுகிறது. அதனால் மூளை எவ்வளவுங் கெட்டுப் போகிறதில்லை; தேக அசௌக்கியத்தினாலும் மனோ வியாகூலங்களினாலும் பயம்—திகில் முதலிய சங்கடங்களினாலுமே மூளை வெகுவாகக் கெட்டுப்போகின்றது.

புரூசே என்பவர் சொல்லுகிறதாவது:—சேனையில் காப்டனாயிருந்த தாவர்னீர் என்பவர் தேகாரோக்கிய ஸ்திதியிலிருக்கையில், கெட்ட சமாசாரங்களடங்கிய ஒரு கடிதத்தை வாசிக்கையிலே இடி விழுந்தாற்போல அசைவற்று நின்று, பாரிசவாயு கண்டு பேசச் சக்தியற்றவரானார். சில நாளைக்குப் பின்பு குணப்பட்டு வருகையில் அவருடைய மனைவியினிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதை வாசித்தவுடனே உதிரம் தலைக்கேறி பேச்சற்று, அசைவற்று, புத்தி மயங்கி மூன்று தினத்தில் மரணமானார். அவருடைய தலையை பரிசோதித்துப் பார்க்கையில், தலையிலுள்ள இரத்த நாடிகளில் உதிரம் அடைத்துக் கொண்டு மூளையில் சிறு கட்டிகள் எழும்பியிருந்தன.

இத்தியாதி அனுபவசித்தமான காரியங்களை வாசிக்கும்போது மூளை கெட்டுப்போவதற்குக் காரணம் மனோவியாகூலத்தை விளக்



கத்தக்க தோற்றங்களென்றே தெரியவருகிறது. வருந்தி வாசிப்பதினாலேயே மூளை கெட்டுப் போகிறதென்பது சாஸ்திர அயுக்தம். தேகத்தை ஆரோக்கிய ஸ்திதியில் வைத்துக்கொண்டும், போஜனம் உட்கொண்டவுடனே ஒரு மணி நேரம் வரையில் மூளைக்கு அதிக வேலை தராமலும் மாத்திரம் இருப்போமாகில் எவ்வளவு பிரயாசைப்பட்டு நாம் வாசித்தல் முதலிய மனோ வேலைகளைச் செய்து கொண்டு வந்தாலும் மூளை கெட்டுப் போவதற்கு இடமிராது. காலக்கிரமம் தப்பிப் போஜனம் செய்வதினாலும், அமிதமாய்ச் சாப்பிடுவதினாலும். சாப்பிட்டவுடனே சாவதானம் எடுத்துக் கொள்ளாமல், அதாவது ‘உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு’ என்பதற்கிணங்க ஓய்வின்றி மனோ வேலையில் பிரவர்த்திப்பதினாலும், வியாகூலங்கள் முதலிய சஞ்சலங்கள் மனதைக்கவர விடுவதினாலுமே தான் மூளை கெட்டுப்போய், தேகபலம் குன்றி நசித்துவிட நேரிடுகிறது. வேலைக்குத்தக்க ஓய்வு, சமாதானம், நிதானம், திருப்தி அவசியம்.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

பாண்டி நாட்டிலே அரிபுரத்திலே வேளாளர் குலத்திலே சுப்பையாபிள்ளை என்றொருவரிருந்தார். அவர் மிக்க செல்வத்தையுடையவர். நாத்திகப் படுகுழியில் வீழ்ந்தவர். புல்லிய மனத்தினர். நஞ்சினுந் தீயதாகிய இச்சையை நண்ணினவர். தீக்குணத்தவர். நிறையில்லாதவர். பேருண்டியை உடையவர். பெருந்துயிலையுடையவர். தீராச் சந்தேகமுள்ளவர். அவருக்கு அருந்ததி யொப்ப ஒரு நற்குண நற்செய்கை வாய்ந்த பெண் மனைவியானாள். அவள் தங்கணவனையே கடவுளாகக் கொண்டு வழிபடும் கற்பினையுடையாள். அவள் சொல்லின் வழியே தெய்வமும் முகிலும் நிற்குமாயின் அவளுடைய கற்பின் திறமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? துறந்தவர்களுக்கு உணவு முதலியன கொடுத்து, இறந்தவர்களுக்குத் தீக்கடன் நீர்க்கடன்களைச் செய்து பல தருமங்களையும் இயற்றி, விருந்தோம்பும் இல்லறத்தையே என்றும்

கைக்கொண்டு ஒழுகுபவள். புருஷன் சொற்கு அமைந்த மனையாள் அவளோடு கூடிவாழும் ஆடவனுக்கு அவளை யன்றிப் பின்னுமொரு பெரும் பேறு இவ்வுலகத்திலுண்டோ என்று உலகத்தார் கூறும்படி இலக்கணங்கள் சிறிதுங் குறைவின்றி நிறைந்த பெண். பிறவிக்கடலினின்றும் நீங்கும் பொருட்டு சிவபெருமானையும், சிவபெருமானுடைய திருவைந் தெழுத்தாகிய நமசிவாய வென்பதையுஞ் சிந்தித்து பேரின்பக்கடலின் மூழ்கித் தியானித்திருப்பாள். தீக்குணமே உடையவராய், அறிவு சிறிதும் இல்லாதவராய், காமப்பேய் பிடித்தவராய், பஞ்சாக்ஷர மென்னவென்றும் ஒரு சிறிதும் அறியாதவராகையால் அயல் வீட்டுக்காரர் பெயர் நமசிவாயம் பிள்ளை யென்றிருப்பதையும் தம் இல்லாள் நமசிவாய என்று ஓயாதோதுதலையுங் கண்டு இவள் நம்மேல் வெறுப்புக்கொண்டாள் போலும்; நமசிவாயம் பிள்ளையிடத்து வேட்கை வைத்து அவரைச்சேர விரும்புவாள் போலும்! இவளுடன் வாழ்தலினும் நரகத்து வீழ்தலே இனிது. இவளுடன் வாழும் நமக்கு இவளையன்றிப் பின்னுமோரி யமனும் நோயும் உண்டோ! பாதகி! சண்டாளி! நீலி! அவளுடன் நீக்கமின்றிப் பலநாட்பழகி அவளுள்ளத்திருக்கும் வஞ்சகம் நமக்குத் தெரிந்ததில்லையே; மனமொன்று வாக்கொன்று செய்கை யொன்றாகவோ இருக்கிறது; அவளிருந்தாலுஞ் சரி, இறந்தாலுஞ்சரி," என்று தன் மனதுக்குள் சூளுரை செய்தார். இவ்வாறு அவன் ஐயங்கொண்டு ஓர்நாள் இல்லத்தில் உணவு செய்தற்பொருட்டு அரிசி முதலிய எதுவும் வாங்கிக் கொடாது அவளைச் சோதிக்கும் பொருட்டு வெளியே போய் உணவு கழிக்கும் நேரத்தில் வீடுவந்துசேர்ந்தான். அன்று அவன் மனைவி மணலைவாரி சிவபெருமா னருளால் அமுது சமைத்து வைத்திருக்கக் கண்டான். ஆச்சரியத்தை யடைந்தான். நுகரும்பொழுது அரிசி யில்லத்திலில்லையே அமுது எவ்வாறு அமைத்தாய்" என்று மனைவியை வினவினார். அதற்கு அவள் மௌனஞ் சாதித்து "நமசிவாய" வென்று எந்நாளுங் கூறுவதுபோற் கூறினாள். முன்னரே ஐயங்கொண்ட அக்கயவர் அயல் வீட்டுப்பையல் உதவினான் போலுமென்றுட் கருத்தினராய் வாளை யெடுத்து அமுது படைக்குங் கரத்தைச்



சேதித்தார். அவள் கற்புக்கோர் குன்றாகலின் 'சிவாய நம'வென்று தன்னிலை பிறழாது கூறினாள். கூறவே வெட்டுண்ட கை எம்பெருமான் திருவருளால் முளைத்தது. ஆகவே "சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க்கு அபாயமொரு நாளுமில்லை" என்ற ஔவையார் வாக்கு துணிவு.

M. E. வீரபாகு பிள்ளை.

## தாய்மார்களுக்குச் சில போதனைகள்.

பொதுவாகக் கவனிக்கவேண்டிய சுகாதார விதிகள்:—புழுக்கள், கொசுக்கள், ஈக்கள் முதலிய வியாதியைப் பரவிக்கும் ஜெந்துக்களுக்கும் உங்கள் வீட்டுக்கும் என்ன சம்பந்தமென்று கேட்பீர்கள். இப்பொழுது வியாதியைக் கொண்டுவரும் பூச்சிகளைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொண்டீர்கள். இனி வீட்டிலும் வீட்டைச் சுற்றிலும் நீங்கள் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. அவைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

முதலில் உங்கள் வீட்டு முற்றத்திலுள்ளிருக்கும் ஒவ்வொன்றையும் சுத்தமாய் வைக்கவேண்டும். சுத்தமான முற்றத்தில் ஈவந்து நாடவே நாடாது. முற்றத்தில் எவ்விதமான உணவுப்பொருளையும் போடலாகாது. ஏனென்றால் தின்பண்டங்களைத் தேடி அநேக ஈக்கள் வந்தடைவன. சாக்கடையை சுத்த ஜலத்தினால் அடிக்கடி கழுவவேண்டும். கக்கூசுக்களை அடிக்கடி சுத்தமாய் வைத்திருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். முற்றத்தை அசுத்தப்படுத்தாமல் கக்கூசுக்கு எல்லாரும் போகவேண்டும். உங்கள் குழந்தை கக்கூசையுபயோகப்படுத்த முடியாதபடி அதிபாலியமா யிருந்தால் வீட்டிலேயே மலபாதைக்கு நன்றாய்ச் சுத்தப்படுத்தும் படிக்கான இடத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஜலபாதை வீட்டைச் சுற்றிலும் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அது காற்றைய சுத்தப்படுத்தி சுகத்துக்கும் தீங்கை விளைவிக்

கும். உங்கள் வீட்டில் பசு விருக்குமானால், மாட்டுத் தொழுவத்தைச் சுத்தமாய் வைக்கவேண்டும். ஏனெனில் சாணம் ஈக்களுக்கோர் உறைவிடம்.

மற்றொரு முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில் உங்கள் குடும்பத்தார் குடிக்கும் தண்ணீர் அசுத்தமென்று உங்களுக்கு சந்தேகமிருப்பின், அதை நன்றாய்க் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும். தண்ணீரில் காலராப் புழுக்கள் சீக்கிரத்தில் கலந்து விடும். காலரா வியாதி உங்கள் ஊரில் நடமாடும்பொழுது நீங்கள் குடிக்கும் நீரை நன்றாய் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும். பால் விலைக்கு வாங்கும் பொழுது பால் சுத்தமாயிருக்கிறதா வென்றும், பசு நோயில்லாததுதானா வென்றும், பாலைக் கறப்போன் பாலைக் கறக்கும்போது தன்னுடைய கைகளைக் கழுவினானா வென்றும், பால் கறக்கப்படும் பாத்திரம் சுத்தம் பண்ணப் பெற்றதா வென்றும், அசுத்த ஜலம் அதில் கலக்காமல் அவன் கொண்டு வந்தானா வென்பதை நீங்கள் நன்றாய் கவனிக்க வேண்டும்.

இவைகளைப்பற்றி உங்களுக் கேதாவது சந்தேகமிருப்பின் உங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கும் பாலை நன்றாய்க் கொதிக்க வைக்கவேண்டும், அல்லாவிடில் வயிற்றோட்டம், வயிற்றுளைச்சல், வாந்திபேதி முதலிய வியாதிகள் அவைகளுக்கு வரும்.

சமையல் சம்பந்தமாக நீங்கள் கவனிக்க வேண்டியது.

இது காறுஞ்சொல்லப்பட்ட பூச்சி களைப்பற்றிய செய்திகள் உங்கள் குடும்பத்துக்குத்தயார் செய்யும் ஆகாரத்திலும் கவனமிருக்க வேண்டும்.

M. E. வீரபாகு பிள்ளை.

---

## அநுபவ முத்துக்கள்.

1. நல்ல மனிதருக்கு ஒருவார்த்தை.
2. இளமையிற் கல்வி வாழ்வில் உயர்த்தும் கருவி.
3. கடவுள் நம்பக்க மிருந்தால் எதிரியு முண்டோ?
4. நீ பரிசுத்தமான ஆகாயத்தைப் பார்த்தால் உன் மனமும் சுத்தியாகும்.



5. எவ்வளவுக்கு கஷ்டம் அதிகப் படுகிறதோ அவ்வளவுக்கு நன்மை நெருங்கிவிட்டது.
6. ஊமை (சத்த மிடாத) நாயும் அமரிக்கையான ஜலமும் ஆபத்தானவை.
7. ஒவ்வொரு மனிதனும் சுமக்கத் தக்க பாரத்தையே ஏற்றுக்கொள்வான்.
8. நீ முயற்சியில் ஈடுபடு. கடவுள் உனக்கு உதவியாயிருப்பார்.
9. சிந்தனை செய்யாத எவனும் ஞான வானாக மாட்டான்.
10. அழகுடைய பொருள் மகிழ்ச்சியைத்தரும்.
11. ஆயிரம் நல்வார்த்தையைவிட நல்லோரின் முகதரிசனம் நன்மை செய்யும்.
12. கொடுக்கிற கையே, பிறகு சேர்த்து வாங்குகிறது.
13. ஒவ்வொன்றுக்கும் ஒரு காலம் உண்டு.
14. ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ள கஷ்டம் அபாரம், தாங்க முடியவில்லை என்று நினைக்கிறான்.
15. சித்த சுத்தியுள்ள வனுக்கு தொட்டதெல்லாம் சித்தி.
16. அநுபவத்திலிருந்து புத்தி தீக்ஷண்யம் உண்டாகிறது.
17. அவன் தன் மட்டில் உழைக்கிறான். உலகுக்கு (தந்நலமின்றி) உழைப்பவன் யார்?
18. ஒரு விசேஷமும் இல்லை யெனில் அதுவே நல்விஷயம்.
19. புண் ஆறும். நோக வைத்த சொல் நீங்காது. (மறவாது)
20. ஆண்டின் (வருஷ) முடிவுக்குள் நல்லதுகெட்டது என்று சொல்லி விடாதே.

# பிரபஞ்ச விநோதங்கள்.

காற்று வீசும் மெத்தை:—அமெரிக்காவில் விக்ஞான சாஸ்திரியொருவர் ஒரு புதுவிதமான மெத்தை யொன்று கண்டு பிடித்திருக்கிறார். சயனத்தில் படுத்திருப்போர் திரும்பிப் படுக்கும்போது உண்டாகும் அசைவினால் நித்திராபங்கம் ஏற்படாதபடி திரும்பிப் படுக்கும் பக்கத்திலிருந்து மனோகரமாய் ஒரு வகை காற்று எழுந்து படுத்திருப்பவர்மீது சுகமாக வீசுகிறதாம்.

குலைக்கும் பெட்டி:—ஒரு தச்ச நிபுணரால் புதிய நகைப்பெட்டியொன்று செய்யப்பட்டுள்ளது. பிறர் எவரேனும் வந்து அப்பெட்டியைத் தொட்டுவிட்டால் அது நாய்போல குலைக்க ஆரம்பித்துவிடுகிறதாம். அது அப்படியே 8-மணி நேரம் குலைக்கிறதாம். சொந்தக்காரர் வந்து அப்பெட்டியைத் திறந்து அதனுள்ளே இருக்கும் பித்தானை அமிழ்த்தினால் உடனே அது குலைத்தலை நிறுத்திவிடுகிறதாம்.

90 அடி மீன்:—நியூ யார்க் இயற்கை சாஸ்திரக்காட்சி சாலையில் ஒரு பெரிய மீனின் வாய் எலும்பு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மீன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிளோரிடா துறைமுகத்திற்கருகாமையில் கடலின் அடியிலிருந்து எடுக்கப்பட்ட மீனின் தாடை எலும்பு என்று சொல்லப்படுகிறது. அதன் இருபல் வரிசைகளும் கூடுமிடமாகிய தாடைப் பூட்டு எலும்பில் ஒரு மனிதர் தாராளமாக உட்கார்ந்து சாய்ந்து கொள்ளலாம். அந்த மீன் நீளம் 90 அடியிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

உலகத்திற்கு ஆபத்து:—தற்கால கிரகசாரங்களைக் கவனிக்குமிடத்து ஆரம்பித்துள்ள மார்ச்சு மாதம் முதல் ஆகஸ்டு மாதத்திற்குள் உலகப்பஞ்சமும், அமைதியின்மையும், உயிர்சேதமும் அதிகம் உண்டாகுமென்றும், இக்காலத்திற்குள் ஒரு பெரிய பூகம்பம் பூமியில் உண்டாகப் போகிறதென்றும், அது இவ்வுலகத்தை அசைத்து பெருத்த சேதத்தை எங்கும் விளைவிக்கக்கூடியதென்றும், உலக சரித்திரத்திற்குள்ளே இப்பொழுது ஆரம்பித்துள்ள 1922-ம் ௵ மிகக் கொடிய வருஷமென்றும் டெக்காவில் வான சாஸ்திரத்தில் நிபுணராயிருக்கும் ஸ்ரீமான் ராதாவல்லப வாஸகர் என்ற வக்கீல் வங்காளிப் பத்திரிகைக்கு எழுதி யிருக்கின்றார். —விநோதினி.

# இரதிசுந்தரி.

(முன் தொடர்ச்சி.)

## விதிவழி மதியா? மதிவழியே விதியா?

வரும் வினை வந்தே தீரும் என்பது போல மோகனதாஸுக்கு தரித்திரம் தலை விரித்தாட ஆரம்பித்தது. சத்திரத்தில் எத்தனை நாளைக்கு இருக்கமுடியும்? அதை விடுத்தும் வெளியே போக நேர்ந்தது. மனித வாழ்க்கை எவ்வளவு கேவலவாகுமென்று யாவர் கணக்கிட்டு சொல்லமுடியும். காலத்துக்கேற்றவாறு மதியும் ஒடுங்கிவிட்டது. பந்துக்கள் வீட்டுக்குப் போகலாமென்று சில வேளை நினைப்பதுண்டு. மனைவி மைத்துனர் இருக்குமிடமோ தெரியவில்லை, வேற்றிடங்களுக்குப் போவதால் என்ன நன்மையுண்டாகும். 'வாழ்ந்து கெட்டால் வகையாரோடு சேராதே' என்றதோர் பழமொழியுண்டு. சுகவாழ்க்கையில் தான் உறவினர். அந்தஸ்துக்குத் தக்க உபசாரம். நல்ல நிலைமையிலிருந்தால் நாலுபேர் வரப்போக இருப்பார்கள். நிராதரவான நிலைமையில் பிச்சையெடுத்தேனும் உண்டு வாழ்வதே நலமென்று எண்ணினார். அப்படியும் சில காலம் சென்றது. "எனது சுகவாழ்க்கை மனைவியோடா ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. எனது கல்வி எங்கே? நற்புத்தி எங்கே? ஏனோ இக்கதி எனக்கு? ஊக்கமன்றோ உயிர்த்துணை! ஏ பொன் மனமே இதுவரை எங்கு கெட்டொழிந்தனை? ஏ காளிதேவியே எனது கலங்கிய சித்தத்தை நிர்மலமாக்கினையே உனக்கு ஒரு கோடி நமஸ்காரம்" என்று தைரியங்கொண்டனர்.

காளி கோயிலில் திருவிழாவென்றும் வருவோருக்கெல்லாம் ஆகாரம் கொடுப்பதாகக் கேள்விப்பட்டு மோகனதாஸ் குழந்தையையும் அழைத்துக் கொண்டு சென்றார். இப்பொழுது அவரை அறிந்த எவரும் மோகனதாஸ் என்று சொல்லமுடியாது. நீண்ட தாடியும், அழுக்கடைந்த வஸ்திரமும் அவரை புது உருவமாக்கி

விட்டன. ஆனால் மனைவி எங்கு காணப்படினும் கொலை செய்து விடவேண்டுமென்று ஒரு ஈட்டி மாத்திரம். அவர் இடுப்பில் அகலாதிருந்தது. அவரை ஒரு நண்பர் சந்தித்து ஆச்சரியமடைந்தார்.

---

## மூன்றாம் அத்தியாயம்.

இவ்வுலகில் ஒவ்வொரு மனிதரும் துக்கப்படும்போது தன்னைப்போல் எவரும் துன்பப்பட்டிருக்கமாட்டார்களென்று நினைத்துக் கொள்வது இயல்பாகவிருந்து வருகிறது. விவாகமானதும் ஒரு பெண்மணி புருஷன் வீட்டுக்குப் போவதென்றால் மிகுந்த யோசனைக்குள்ளாகிறாள். முன்பின் பழக்கமற்ற இடமல்லவா என்றும், கணவனுடைய குணம் எவ்விதமோ என்றும் திகைத்துச் செல்லுகிறாள். புருஷன் வீட்டில் எல்லோரும் புது மனிதர். எல்லோருக்கும் நல்லவளாக நடக்க வேண்டியது முதற் கடமையாகி விடுகிறது. இதற்குள் அநேக ஸ்திரீகள் அப்பெண்மணியைப் பார்க்கவந்து இஷ்டம்போல் வாய்க்கு வந்த அபிப்பிராயத்தைச் சொல்லிச் செல்லுகிறார்கள். இது ஒரு புறமிருக்க, செல்வாக்குள்ள சீமான் வீட்டில் பிறந்த பெண்கள் செல்வமாய் வளர்க்கப்பட்டு விவாகம் செய்து கொடுக்கப் பட்டால் முதலாவது தங்கள் சௌகரியத்தையே பெரிதெனப் பார்த்துக் கொள்வதில், வாழ்வுக்கும் தாழ்வுக்கும், சுகத்துக்கும் துக்கத்துக்கும் பாத்தியப்பட்ட காதலனைக் கவனிப்பதில்லை. தன் தாய் வீடே தனக்கு ஸ்வர்க்க லோகமென நினைத்து திரும்பி விடுவதுமுண்டு. அந்த வகையில் நமது இரதி சுந்தரியையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதாகிறது. தன் புருஷனை அநாதியாக விட்டு, குழந்தையையும் அலக்ஷியமாக விட்டு தனியே வந்து அனுபவிக்கும் சுகம் யாதென இனி படித்தறிவோம்.

சந்திரவதனன் மிகுந்த சந்தோஷத்தோடு இரதி சுந்தரியை அழைத்துக் கொண்டு கல்கத்தாவின் ஒரு பாகமாகிய பகல்பூருக்குப் போய் ஒரு பங்களாவில் தங்கியிருந்தான். இரதிசுந்தரியின் தமயன் நாராயணதாஸ் உண்மையில் ஒருநாள் அவள் அழகைப் பற்றிப் பேசியதாலும், அவனும் தன்னிடம் உத்தியோகத்துக்கு அமர்ந்



திருந்ததாலும், எப்படியாவது அந்த இரதி சுந்தரியை அழைத்து வந்துவிடவேண்டுமென்று தீர்மானித்து, நாராயணதாஸை, அயலூரிலுள்ள தோட்டத்தைக் கவனிக்கும்படி சம்பளத்தையும் உயர்த்தி அனுப்பி விட்டான். அதன் பிறகு காட்டுக்குச் சென்று இரதிசுந்தரியை அழைத்து வந்த விஷயத்தை ஏற்கனவே வாசித்திருக்கிறோம்.

இரதி சுந்தரி பங்களாவுக்கு வந்து சேர்ந்ததும் தனது தமயன் வீட்டுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டாள். அதற்கு "ஏன் அவசரப் படுகிறாய், இருந்து போகலாம்" என்று சொன்னான்.

"இப்பொழுது என்னை தமயனார் வீட்டுக்கு அனுப்பி விட்டால், பிறகு அடிக்கடி வந்து போகிறேன். தாங்கள் செய்த நன்றியை மறக்கமாட்டேன்" என்றாள்.

நாராயணதாஸை இங்கே வரும்படி வேலைக்காரனிடம் சொல்லி அனுப்பியிருக்கிறேன். அவருடன் போகலாம். மத்தியானம் இங்கேயே சாப்பிட்டு விட்டுப் போகலாமே, ஏன் இவ்வளவு அவசரம்?" என்றான். இரதி சுந்தரி பதில் சொல்லாமல், தமயன் வரவை எதிர்பார்த்திருந்தாள். நாரயணதாஸ் வரவே இல்லை. அங்கேயே சாப்பிடும்படி வற்புறுத்தினார். தனது தமயன் ஏன் வரவில்லை என்று கேட்டாள். "ஆஹா! உனக்குச் சொல்ல மறந்து விட்டேன். அழைத்து வரப் போனவன் உடனே வந்து விட்டான். நாராயணதாஸை வெளியூருக்கு மாற்றி விட்டார்களாம். ஆபீசுக்குப் போய் விபரமாக விசாரித்துச் சொல்லுகிறேன். மேலும் திடீரென்று மாற்றுவதற்குக் காரணம் தெரியவில்லை. இருக்கட்டும். நீ கவலைப் படாதே" என்று சொன்னான். இரதீ சுந்தரி இவ்வித பதிலை எதிர்பாராதவளாகையால் சற்று திகைத்து என்ன செய்கிறதென்று யோசிக்கலானாள். அவனுடைய கெட்ட எண்ணத்தை அவள் அறிந்து கொள்ளமுடியவில்லை. தத்துவ விசாரணையுள்ளவர்களும், ஞானவான்களும், 'சரீரம் அநித்தியம், நீர்மேற் குமிழி' என்று சொல்லுவார்கள். ஆனால் இப்பேதைப் பெண்மணி தன் மேனி அழகு என்றும் பிரகாசிக்கத் தக்கதென்று நினைத்துக் கஷ்டத்துக் குள்ளானாள். இரண்டு நாள் அங்கேயே தங்கினாள். அவன் பேசுகிற வார்த்தை

களைக் கொண்டும், தமயன் விஷயமாகச் சொல்லும் விடையைக் கொண்டும் தன்னைக்கெடுப்பதற்கு வழி தேடுகிறான் என்று தெரிந்து கொண்டாள். இவனை விட்டுத்தப்பி எங்கு செல்லுகிறதென்று நினைக்கும் போது தேகம் சிலிர்க்க பயங்கொண்டாள். ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகவே போய்க்கொண்டிருந்தது. தன் கணவன் இருக்கு மிடத்துக்குத்திரும்ப போய்விடலாமென்றாலோ 'இந்தப்படுபாவி' கொண்டு போய் விடுவானா? அவனுக்கு காமவெறி தலைக்கேறி இருக்கிறது என்று அவள் தான் தப்பித்துக்கொள்ள வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தாள். கஷ்டத்தில் சிக்கிக் கொண்ட கவலையால் அவளுடைய முகம் வாடிவிட்டது. தேகம் குன்றிவிட்டது. காதலனை விட்டகன்றதும் தன் அழகையே மறந்தாள். தனக்கு இக்கதி நேரும் என்று கனவிலும் நினைத்திராள். எண்ணாதும் எண்ணி மனம் வருந்தினாள். முடிவில் தனக்குள் ஒரு தீர்மானம் செய்தாள். அதாவது மறு முறை அவன் தகாத வார்த்தையாடும் போது இணங்குவதாகப் பாசாங்கு செய்து, தான் காளியைப் பக்தி செய்பவள் என்றும், அதை உத்தேசித்து தன் தமயன் வீடு போக இருந்ததாகவும் தெரிவிக்கவேண்டுமென்றும் நினைத்த மாத்திரத்தில் தனக்குள் ஒரு சந்தோஷமுண்டாயிற்று. ஆஹா! எனக்கேன் இவ்வித அற்பசந்தோஷம்! துயரில் ஆழ்ந்தவனுக்கு துளி தேன் வாயில் வீழ்ந்தது போலிருக்கிறது என்று சிந்தனை செய்தாள்.

இரதி சுந்தரி இருந்த அறைக்குள் திடீரென சந்திரவதனன் புகுந்தான். அவள் அவனைக்கண்டு திடுக்கிட்டாலும் தைரியமாக எழுந்து நின்று பூமியை நோக்கி புன்னகை புரிந்து நின்றாள். சுந்தரி, இந்த பங்களா எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது பார்த்தாயா? அடுத்தாப்போலிருக்கும் புஷ்பவனத்துக்கு நீ போகவில்லையென்றே நினைக்கிறேன். இன்று உன் முகத்தைப்பார்க்க எனக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. என்னுடன் பேச மாட்டாயா என்றான். "பேசாமல் என்ன," என்று மெல்லிய குரலில் உரைத்து காலின் கட்டைவிரலை பூமியில் ஊன்றிக்கொண்டிருந்தாள். அவள் சொல்லிய இரண்டு பதங்களும் இன்பமாரி பெய்ததாக நினைந்து அகமகிழ்



ந்தான். "இங்கேயே இருக்க தடை யொன்றுமில்லையே" என்று சிரித்துக்கொண்டே கேட்டான். "மாளிகையைப்போலவே இருக்கிறது உங்கள் வீடு, எனக்கு என்ன தடை; ஆனால் இந்த மாதம் காளியைப்பக்தி செய்து விரதம் அனுஷ்டிக்க வேண்டியதாயிருக்கிறது. இதற்கு மாத்திரம் நீங்கள் உதவி செய்வதாயின், பிறகு தங்களை விடமேலான புருஷர் கிடையாது" என்றாள். "ஆஹா! அப்படியே, நடந்து கொள்ளலாம்" என்று பதில் சொன்னான். அன்று முதல் அவளிஷ்டப்படி தனித்த ஒரு அறையில் காளி தேவியைப் பக்தி செய்து தான் செய்த தவறுதலை பொறுத்தருள வேண்டுமென்றும், கணவனிடம் தன்னை சேர்ப்பிக்க வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்து வந்தாள்.

## நாலாம் அத்தியாயம்

இரண்டாம் அத்தியாயம் இறுதியில் மோகனதாஸ் காளி கோயிலுக்குப் போனதாகவும் ஆங்கோர் நண்பரைக் கண்டதாகவும் அறிந்தோம். பி. ஏ. வகுப்பில் படிக்கும் வரை உபேந்திர நாத் என்னும் ஆப்த நண்பர் சுமார் நான்கு வருஷம் அவரோடு ஒரே அறையில் படித்து வந்தார். மோகனதாஸின் அலங்கோலத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவரது இருகரத்தையும் பற்றி க்ஷேமம் விசாரித்தார். நெடு நாட் பழக்கமானதால் மோகனதாஸும் பேசாமலிருக்க முடியவில்லை. மனமொத்த நண்பரைக் கண்ட மாத்திரத்தில் அவருக்கு தன்னையறியாமலே உற்சாகமும் சந்தோஷமும் உண்டாயின. தாங்கள் பி. ஏ. தேறினதை மாத்திரம் அறிந்தேனே தவிர தங்களைக் கண்டு கொள்ள முடியவில்லையே என்று கேட்டார். மாணவர்களாயிருந்த போது ஒருவருக்கொருவர் உதவி புரிந்து, சகோதரர்களைவிட பன்மடங்கு அன்புடன் இருந்து வந்தது, மோகனதாஸின் நினைவுக்கு வந்தது. ஒருவர் தன் மனதிலுள்ள அந்தரங்கத்தை அன்னியோன்னியமான ஒரு நண்பரிடமாவது சொல்லாமலிருக்க முடியாது. வாய் திறந்து சொல்லாவிடினும் உற்ற நண்பர்

உடனே தெரிந்து கொள்ளக்கூடும். அப்படி அறிந்து கொள்பவரே உதவி செய்ய முயலுவர்.

"அன்பரே! பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது ஒன்றாயிருந்தது இப்பொழுது என் நினைவுக்கு வர எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறது. நீங்கள் என்ன உத்தியோகம் செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

நான் ஒரு பள்ளிக்கூடத்தில் எட்மாஸ்டராயிருக்கிறேன். இன்று தங்களைக் கண்டது எனக்கு ஆனந்தமாயிருக்கிறது: ஸ்வாமி ராமகிருஷ்ணரை தரிசிக்கப்போகிறேன். இருவரும் போவோம் என்றார். மோகனதாஸும் சம்மதிக்கவே குழந்தையையும் அழைத்துக்கொண்டு சென்றனர். அங்கே அநேக பிரபுக்களும் மாணவர்களும் குழுமி யிருந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் ஸ்வாமி பரமஹம்சர், வந்திருந்தவர்களைப் பார்த்து, கூட்டம் அதிகமாய் வந்திருக்கிறதைக்கவனித்து சந்தோஷிக்கிறேன் என்றார். ஸ்வாமி மோகனதாஸைப் பார்த்து, அம்பிகையினிடத்தில் தங்களுக்கு விசேஷ பக்தி யிருப்பதால், 'ஆலயம் தொழுவதேன்' என்பதாக ஒரு பிரசங்கம் செய்யுங்கள் என்று உத்திரவு செய்தார். இதைக்கேட்ட மாத்திரத்தில் மோகனதாஸுக்கு உடல் மயிர்க்கூச்சலிட, திடுக்கிட்டு, அப்பொழுதே அம்பிகையையும், ஸ்வாமியையும் மனதை விட்டு அகலாது நிறுத்தி, அவர் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார். ஸ்வாமியும் அவருக்கு ஆசி கூறி அனுப்பி வைத்தார். உபேந்திர நாத்தைப் பார்த்து நண்பரே! குருவி கழுத்தில் பனம் பழத்தைக் கட்டியது போல, அபாரமான விஷயத்தைப் பற்றிப் பேசும்படி ஒன்றும் தெரியாத எனக்கு ஆக்ஞாபித்தார்களே என்றார். கடவுளின் அனுக்கிரகமும், பேசும்படியான பாக்கியமும் தங்களுக்கில்லையானால் ஸ்வாமி சொல்லி இருக்காது. இனி தங்களுக்குள்ள கஷ்டம் நீங்கிற்று. இன்று முதல் தங்களுக்கு சுகமான வாழ்க்கையே. ஸ்வாமியை நினைத்து ஸ்தோத்தரித்துக்கொண்டு பேச ஆரம்பித்தால், அவருடைய கடாக்ஷத்தினால் நன்மையாகவே முடியும் என்றார்.



ஜனங்களெல்லாம் அமைதியாயிருந்தார்கள். மோகன தாஸ் எழுந்து நின்று ஸ்வாமியை நமஸ்கரித்து பின் வருமாறு பேசினார்.

அன்பர்களே, அடியேன் ஒரு நண்பர் உதவியால் ஸ்வாமியைத் தரிசித்துப் போக வந்தேன். பிரசங்கம் செய்ய போதுமான சக்தி அடியேனுக்கில்லை. அதற்குத் தயாராகவும் வரவில்லை. என்றாலும் குருஸ்வாமி உத்திரவுக்குட்பட்டு அவரருளினாலேயே யான் பேச எழுந்தேன்.

## ஆலயந் தொழுவதேன்?

உலகந் தோன்றிய நாள் முதற்கொண் டிதுகாறும், கடவுள் ஒருவருண்டு, அவர் தம்மை யன்போடு வழிபடுகின்றவர்க்கு அவர் தம் பக்குவத்திற் கேற்பப் புத்தியையும் முத்தியையு மருளுகின்றாரென்னும் நம்பிக்கை யுடையார் யாவரும் கடவுளை யேகாந்தமான விடத்திருந்து தியானித்து வருகின்றன ரென்பது மிகு பிரசித்தமாய விஷயமாம். கடவுள் அப்பி லுப்புப்போன்று எங்கும் ஏகரசமாய் விளங்குகின்றா ராயினும், அவரை நினைத்த விடத்தில் தியானிப்பது நம்மனோர்க்குக் கூடாதென்று கருதி, உலகியல்பு உயிரியல்பு, கடவுளியல்பு முதலியவற்றை நன்குணர்ந்தபெரியார் காலதேச நிமித்தங்கட் கேற்றவாறு வேவ்வேறு திறத்தினவாய ஆலயங்களை யேற்படுத்தினார்கள். ஒவ்வோர் ஆலயத்தையும் நாம் நன்கு கவனித்துப்பார்போமாயின், அது ஏதோவொரு பெரிய தத்துவத்தை விளக்குவதற்காகவே அமைக்கப்பட்டதென்பது நமக்கு நன்கு விளங்குவதாம். நாம் வழிபடும் ஆலயங்களுட் சென்று அங்குள்ள அமைப்புக்களை நோக்குவோமாயின், அத்தத்துவம் மிக வெளிதில் விளங்கும். சிவன் கோயிலில் துவஜஸ்தம்ப மிருப்பதையும் நந்தி சிவலிங்கத்தை நோக்கி யிருப்பதையும் சிறிதுற்று நோக்குவோமாயின் கடவுளைத் தியானிக்கும்போது துவஜஸ்தம்பம் போன்று அசையாதிருத்தல் வேண்டும்; நந்திபோன்று மனம் கடவுளை நோக்கி யிருத்தல் வேண்டு மென்றற் றிருட்டாந்தமாக விளங்குவனவாம். இவ்வாறே ஒவ்வோரமைப்பும் நமக்குக் கடவுளை வழிபடு முறைகளை

நன்கு விளக்குவதாக விருக்கின்றது. இத்தத்துவங்களை நன்கு உணராதவர்கள் ஆலயங்கட்குச் சென்று கடவுளை வழிபடுவது பற்றி யருவருப்புக் கொள்கின்றனர். ஆலயத்திற்குச் சென்று கடவுளை வணங்குவ தெற்றிற்கு? வீட்டிலிருந்தே கடவுளை வழி படுவது கூடாதோ வெனின், வீட்டிலிருந்து கடவுளை வணங்குவது நம்மனோர்க்குப் பெரும்பான்மையும் அமையாததாம்.

வீட்டிலிருக்கும் போது நம்மனோர்க்குப் பெரும்பான்மையும் குடும்பத்தைப் பற்றிய கவலையே யுண்டாவதன்றிக் கடவுளைப் பற்றிய சிந்தனை யுண்டாவதில்லை யென்பதற்கு ஒரு சாக்ஷியும் வேண்டுவதில்லையாம். நாம் வீட்டிலிருக்கும்போது என்ன செய்கின்றோம், எதுபற்றிப் பேசுகின்றோம், எதனை நினைக்கின்றோமென்று சிறிது கவனித்துப் பார்ப்போமாயின், அவையெல்லாம் பெரும்பான்மையும் குடும்பத்தைப் பற்றியனவாகவே யிருக்குமென்பது பிறழாது விளங்கும்.

குடும்பக் கவலைக் கடலுள் மூழ்கிப் பரலோகத்தையடைவது பற்றிச் சிறிதுஞ் சிந்தியாது தம் வாழ்நாளை வீணாளாகக் கழிப்பவர்கள் சில போதாவது கடவுளை வழிபட்டு நற்கதி யடைவார்களாக என்னும் நற்கருத்துடன் பெரியோர்கள் ஆலயங்களை யேற்படுத்தினர். இவ்வாலயங்களை யேற்படுத்திய காலத்தை வரையறுத்துக் கூறுவது ஒருவாற்றானும் முடியாததாம்.

கடவுளொருவருண்டு; அவர் தவறு செய்பவரைத் தவறாது தண்டிப்பார்; அவர் தம்மை யன்போடு வழிப்படுகின்றவர்கட்கு அவர் விரும்பியவற்றையெல்லாந் தகுதியறிந்து தருகின்றாரென்னுந் தீர்மான முடையாரில்லாத காலமின்மையின், ஆலயமில்லாத காலமுமில்லையாம். மேற்கூறிய தீர்மான முடையார் கடவுளை வழிபாடு செய்யஏற்படுத்திய விடமேஆலயமாம். இவ்விடத்தை வீட்டின்கண் ஏற்படுத்துவது பலவாற்றானும் தகுதியாயிராமை நோக்கி, ஒரு தனியிடம் அதற்கென்றேற் படுத்தப் பட்டது. இவ்வா றேற்படுத்திய விடம் ஆலயமென்று தொன்று தொட்டுச் சொல்லப்பட்டு வருகின்றது.

(தொடரும்)



தில், யஜமான் வருவதற்கு ராத்திரி 10 மணி யாகுமென்று சொல்லுகிறார்க"ளென்றான். ஆசார்யர் "சரி பாதகமில்லை. என்ன? மாது, விசாரப்படாதே. இங்கே இவ்வளவு சௌக்கியமாயும் அன்புடனும் சிரத்தையாயும் உன்னை இவர்கள் நடத்தி வருவது எனக்கு மிக்க ஸந்தோஷம். பண்டிதர் பரமஸாது; லோகோபகாரி. நான் சீக்கிரத்தில் கோபாலய்யருடன் திரும்பி வருகிறேனெ"ன்று தோளில் தட்டிக்கொடுத்து, ஸமாதானம் செய்து, வெளியே வந்து வண்டியிலேறி, ரயில்மார்க்கமாய் பூவாளூருக்குத் திரும்பி வந்தார்.

இருட்டி நாலு நாழிகை யாகும்பொழுது கோபாலய்யருடைய வீட்டைக் கண்டுபிடித்து, அங்கிருந்து ஸேவகனிடத்தில் "ராமாசாரியர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறாரென்று யஜமானனிடத்தில் சொல்"லென்றார். தானும் அவனுடன் உள்ளே புகுந்து, வைத்தியர் காதுக் குழாயைச் சரிப்படுத்திக் கொண்டு ஸேவகன் சொன்ன பெயரைக் கேட்பதற்கு முன் "வைத்தியர்வாள்! சௌக்கியந்தானே. இந்த அகாலத்தில் தங்களுடைய படிப்பிற்கு விக்கினம் செய்ததைப்பற்றி மன்னிக்க வேண்டு"மென்று ஓர் நாற்காலியில் உட்கார்ந்தார்.

வைத்தியர் "கோபால கிருஷ்ணய்யர்வாள்! நமக்குள் உபசாரமென்னத்திற்கு? மாதுவைப் பார்த்துவிட்டு வருவதுபோலிருக்கிறது. நான் சொன்னது சரியா யிருக்கிறதா"வென்றார்.

ஆசார்யர் "இப்பொழுதுதான் அங்கிருந்து வருகிறேன். தாங்கள் சொன்னபடி மாத்திரம் சரியாயில்லை. என்பெயரும் கோபாலகிருஷ்ணய்யரில்லை. கும்பகோணம் ராமாசாரியர்."

இதைக் கேட்டவுடன் கோபாலய்யருக்குக் கோபம் வந்து "ஐயா! இதென்ன அநியாயம்! நடை உடை குரல் முதலியவைகளில் கோபால கிருஷ்ணய்யரைப்போல் தாங்களிருப்பதை நம்பி மோசம் போய், ரஹஸ்யமான குடும்ப விஷயங்களை உங்களிடத்தில் சொல்லும்படி என்னை ஏமாற்றினதும் போதாமல், நீங்கள் போகக்கூடாத இடத்திற்குப்போய்ப், பார்க்கக்கூடாத ஒருவரைப் பார்த்து, எவ்விதமாகவோ அவரை வஞ்சித்து வந்திருக்கிறீர்கள்."

ஆசார்யர் "வைத்தியர்வாள்! நேற்று ஹோட்டலில் என்னிடத்தில் தாங்கள் பேசினபொழுது, நான் பல தடவை தங்களை எச்சரித்தேன். என் ஊரையும் பெயரையும் பல தடவைசொன்னேன். திருவண்ணாமலைக்கு நான் போனது நிஜமே. மாதுவய்யரைக் கண்டு பேசினேன். என் உண்மையான பெயரையும் நான் வந்த கார்யத்தையும் எடுத்துச் சொன்னேன். தங்களுக்கு நேரப்போகும் கெட்ட பெயரையும் அவமானத்தையும் தடுப்பதற்கும், தாங்கள் அறியாமல் செய்த ஓர் பெரிய அநியாயத்திற்குப் பரிஹாரஞ் செய்வதற்கும், நான் இவ்வளவு சிரமப்படுகிறேனென்று தங்களுக்கு நான் தெரியச் செய்த பிறகு, என்மேல் இவ்வளவு கோபிக்க மாட்டீர்கள். நடந்த சங்கதி இப்படியெ"ன்று தனக்குத் தெரிந்த விஷயங்களை விபரமாய் எடுத்துச் சொன்னார்.

அதைக்கேட்டு வைத்தியர் சற்றுக் கலங்கி, "நாகேசுவரன் என்னை ஏமாற்றினதாய் வைத்துக்கொள்வோம். சென்னையிலிருந்து வந்த டாக்டரும் பஞ்சாயத்தும் மோசம்போய் எப்படித் தீர்ப்பு செய்தார்கள்? கலெக்டர் வழியாக எல்லா விவஹாரங்களும் சட்டப்படி நடந்திருக்கின்றன. நீர் செய்தது கிரிமினல் குற்றமாகுமோ."

நான் இதை யெல்லாம் அறிவேன். நாகேசுவரன் தங்களையும், சென்னை டாக்டரையும் பைத்தியக்காரர்களாகச் செய்தான். மாதுவய்யருக்குப் பதிலாய் நீங்கள் பண்டிதருடைய வைத்திய சாலையிலிருக்கவேண்டும். என்மேல் சுமற்றின குற்றத்தை நாகேச்வரனிடத்தில் மாற்றி, ஸர்க்காருடைய சிலவில் ஆயுளுள்ள வரையில் சுகவாஸம் செய்விக்கவேண்டும்.

வைத்தியர் "இதென்ன ஐயா! வெகு பதட்டமாய்ப் பேசுகிறீர்? எங்களை மடையர்களாயும் குற்றவாளிகளாயும் தீர்த்துவிட்ட மஹா மேதாவியான தாங்கள், இதற்கு பதில் சொல்லுங்கள். மாதுவய்யர் சென்ற ஆறுமாதகாலமாய் இரவில் விசித்திரமான காட்சிகளைப் பார்த்து வருவது பொய்யா? நிஜமாயிருந்தால், அவருக்குச் சித்தப்பிரமை யென்பதில் ஸந்தேஹமென்ன?"

ஆசார்யர் "சற்றுப் பொறுங்கள். நாகேச்வரன் இங்கே வருவதற்கு முன் மாதுவய்யருக்குப் பைத்தியமில்லை; விசித்திரமான



காட்சிகளைப் பார்க்கவுமில்லை. வந்த பிறகே இவை நடந்து வருகின்றன. மாதுவய்யருடைய படுக்கை யறையில் தான் துணையாயிருக்க வேண்டுமென்று நாகேச்வரன் உங்களைப் போதித்துச், சரிப்படுத்தின தேன்? நாய், பூனை, எலி, பாம்பு, பல்லி, ஓணான், தவளை, முதலிய ஜந்துக்களை விலைக்கு வாங்கி, க்ஷவரஞ் செய்து, விசித்திரமான சாயம் கொடுத்ததேன்? இதற்குப் பூர்ணமான ருஜூ வைத்திருக்கிறேன். மேற்சொன்ன ஜந்துக்களை வர்ணம் பூசி, இருட்டில் மாதுவய்யருடைய அறையில் விட்டுவருவதை நீங்கள் கண்டீர்களா? அந்த வர்ணம் இருட்டில் பளிச்சென்று மின்னுவது உங்களுக்குத் தெரியுமா?"

வைத்தியர் "இதென்ன? ஆகாசப் பந்தலாயிருக்கிறது. நாகேச்வரனோ சென்னையிலிருக்கிறான்; மாதுவோ, திருவண்ணாமலையில் இருக்கிறான். இப்பொழுதும் இரவில் அந்தத் தோற்றங்களை அவன் பார்ப்பதற்கு, காரணம் என்னய்யா!"

ஆசார்யர் "காரணமா? பண்டிதருடைய வசத்தில் இருக்கிற வரையில் மாதுவய்யர் அவைகளைக் காண்பதில் ஆச்சர்யமென்ன?"

வைத்தியர் "என்னய்யா! அபாண்டமான பழியை பண்டிதர் மேல் சுமத்துகிறீரே! அவரும் இந்த வஞ்சனையின் உடந்தையோ?"

ஆசார்யர் "இன்னும் ஸந்தேஹமா? மாதுவய்யரின் படுக்கையறைக்குப் பக்கத்தில் பண்டிதரின் அறை இருக்கிறது. மாதுவய்யரின் கட்டிலின் கீழ் இந்தத் தடையங்களைக் கண்டெடுத்தேன். இதோ பூதக்கண்ணாடியால் பாருங்கள். பாம்பு பல்லி முதலிய ஊரும் ஜந்துக்கள் சட்டை உரிக்கும்பொழுது சிதறும் சிதழ்கள். இதிலுள்ள கோடுகளைப் பார்த்தால், ஸாதாரணமான பச்சோந்தியின் தலையிலுள்ள கோடுகளுக்கு ஸரியாயிருக்கின்றன. உங்களுக்கு ஸந்தேஹமிருந்தால், அதோ தங்களுடைய அலமாரியிலிருக்கும் ஜீவஜந்துக்களைப் பற்றின பெரிய நிகண்டுவில் பச்சோந்தியின் படத்தைக் கவனித்துப் பாருங்கள்; கோடுகள் ஒத்திருக்கும். இந்த பச்சோந்தியே நேற்றிரவில் மாதுவய்யருடைய படுக்கை யறையில் தோன்றின விசித்திரமான வஸ்து. பைத்தியத்தால் காணப்படும் பிரமையல்ல."

வைத்தியர் "ஆனால் நெருப்பைப்போல் பள பள வென்று பிரகாசித்ததாய் மாது சொல்லவில்லையா?"

ஆசார்யர் "சற்றுத் தயவு செய்யுங்கள். தீபத்தை இறக்குங்கள். இந்தச் சிதள்ளின் பின்புறத்தைக் கவனியுங்கள்."

விளக்கில்லாமல் அறை இருட்டினவுடன் ஆசார்யரின் கையிலிருந்த சிதழ்கள் கொஞ்சங் கொஞ்சமாய் பள பள வென்று மின்ன ஆரம்பித்தன." ஆசார்யர் "வைத்தியர்வாள்! இப்பொழுதாவது நம்பலாமோ!" வைத்தியர் "என்ன ஆச்சர்யம்! நான் இதுவரையில் தங்களிடத்தில் அவமரியாதையாய்ப் பேசினதை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். முன்பின் தெரியாத உங்களிடத்தில் எனது நண்பருடைய அந்தரங்க விஷயங்களைப்பற்றி நான் எப்படி கலந்து பேசமுடியும்." ஆசார்யர் "அது போகட்டும். மாதுவய்யரை நாம் எப்படி விடுவிப்பது." வைத்தியர்" அது வெகு சிக்கலான வேலை. சட்டப்படி நாகேச்வரனும் பண்டிதனும் சேர்ந்து மாதுவையும் சொத்தையும் பார்த்து வரும்படி கமிட்டியாய் கலெக்டரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அசைக்கத் திருப்ப முடியாது. நீண்ட வியாஜ்ய வியவஹாரம் செய்ய நம்மால் முடியாது. அவகாசமுமில்லை. மாதுவய்யர் அந்த இடத்திலிருக்கும் வரையில் இவ்விதத் தோற்றங்களைப் பாராமல் தீராது. வெகு சீக்கிரத்தில் உண்மையாய்ப் பைத்தியம் பிடித்து விடும். அவரை ரஹஸ்யமாய் வெளிப்படுத்தினால் கிரிமினல் குற்றத்திற்குட்படுவோம். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை." ஆசார்யர் "அந்தத் தொல்லை உங்களுக்கேன்? வேறு வழி யிருக்கிறது. நாகேச்வரன் கஜப் போக்கிரி. பண்டிதன் அவனுக் கேற்ற ஜோடி. சென்னை டாக்டரை நன்றாய்ச் சரிப்படுத்தித் தங்களுடைய கையில் போட்டுக் கொண்டார்கள். தாங்களும் தீரவிசாரிக்காமல், அவர் சொல்வதை நம்பி விட்டீர்கள். பஞ்சாயத்துப் பேர் வழிகள் உங்களுடைய அபிப்பிராயத்திற்கும் பிரத்யக்ஷமான ருஜுவிற்கும் கட்டுப்பட்டு, முடிவு செய்தார்கள். ஆகையால், அவ்விரண்டு குள்ள நரிகளை நாம் நியாயமாயும் வெளிப்படையாயும் எதிர்க்க முடியாது. இந்தக்கேஸில் ஸம்பந்தப்பட்ட ஸகல தஸ்தாவேஜுகளையும், நாகேச்



வரனும் பண்டிதனும் தங்களுக்கெழுதப்பட்ட கடிதங்களையும் என்னிடத்தில் கொடுத்து வையுங்கள். அவ்விரு காலாடிகளையும் எப்படியாவது பயமுறுத்திக், கண் காணமல் ஓடச் செய்கிறேன். பிறகு மாதுவய்யரின் பிரமையும் பைத்தியமும் தீர்ந்துவிடும். சட்டப்படி அவருக்குத் தாங்கள் ஸர்டிபிகேட் கொடுத்து அழைத்துக் கொண்டு வரலா"மென்றார்.

இரண்டு மூன்று தினங்களுக்குப்பிறகு, நாகேச்வரன், சென்னையில் தன் பங்களாவில் சுகமாய் ஸோபாவில் படுத்துக் கொண்டிருக்கும் பொழுது, வேலைக்காரன் உள்ளே வந்து, "ஐயா! பண்டிதர் அவர்களிடத்திலிருந்து ஒரு மனிதன் தங்களைப் பார்க்க வந்திருக்கிறா" னென்றான். நாகேச்வரன் "என்ன காரியம்." சேவகன் "என்னிடத்தில் சொல்ல மாட்டேனென்கிறான். ஏதோ வெகு முக்கியமான விஷயமாம். தங்களிடத்திலேயே தனியாய்ச் சொல்ல வேண்டுமாம்" நாகேச்வரர் 'அப்படியானால் அவனை இங்கே வரச்சொல்லு.'

சற்று நேரத்திற்கெல்லாம் ஓர் வேலைக்காரன், கிருதா கல்மா முதலிய அலங்காரங்களுடன், வெகு முறுக்காய் உள்ளே புகுந்து பட்டாளத்துச் சிபாயியைப் போல், வணங்கா முடியனாய் வணங்கி, ஓர் கடிதத்தைக் கொடுத்துப் "பண்டிதரவர்கள் இதற்கு பதில் வாங்கிக் கொண்டு வரச் சொன்னா" ரென்றான்.

ஐயர் சற்று பரபரப்புடன் அதைப் பிரித்துப் பார்த்து பின்வருமாறு படித்தார்.

திருவண்ணாமலை,
ஆகஸ்டு 15-ம் தேதி

என் அன்பார்ந்த நாகேச்வரா!

இதை என் கார்யஸ்தன் வசமாய் அனுப்பி யிருக்கிறேன். உடனே பதில் அனுப்பவும். மாதுவிற்காக நான் ஏற்படுத்தின வேலைக்காரன் சுத்தமடையன். நேற்று ராத்திரி கண் தெரியாமல் குடித்து விட்டு, வாயில் வந்ததை யெல்லாம் பாடிக் கொண்டு, உள்ளே வந்தான். நான் அவனைக் கடுமையாய்க் கண்டித்து, வேலையிலிருந்து நீக்கினேன். இன்று காலையில் அவன் என்னிடத்தில் தனியே வந்து "உங்களுடைய வேலைத்தனமெல்லாம் எனக்கு நன்

றாய்த் தெரியும். தகுந்தபடி பார்த்துக் கொள்ளுகிறே" னென்று, சில அந்தரங்கங்களைச் சொன்னான். "அடுத்த தடவை கலெக்டர் இங்கே பரிசோதனைக்கு வருவதற்கு முன் உங்களை ஜெயிலில் பார்க்கிறே"னென்று பயமுறுத்தினான். வெகு நேரம் அவனை ஸமாதானஞ் செய்து சரிப்படுத்தி, இன்னும் இரண்டு தினங்களில் இங்கிருந்து புறப்படும் கப்பலில் ஏறி, ஜாவா தீவிற்குப் போக சம்மதிக்கச் செய்தேன். அங்கே அவனுடைய தமயன் கரும்புத் தோட்டத்தில் மானேஜராய் இருக்கிறானாம். கையில் ரூபாய் 500 வாங்கிக் கொள்ளும்படி அவனை ஒப்புக்கொள்ளச் செய்தது பிரும்ம ப்ரயத்னமாயிற்று. ஜாவாவிற்குப் போனவர்களுக்குச் சிவபதம் கையில் கிடைக்குமென்றும், இவ்வுலகத்திற்குத் திரும்பி வருவதில்லை என்றும் லோகப்பிரஸித்தம். என் கார்யஸ்தன் கோவிந்தராவ், அவனை ஜாக்ரதையாய்க் கப்பலேற்றுவான். அவனிடத்தில் தொகையை ரொக்கமாய்க் கொடுக்கவும், நோட்டுகளும், செக்குகளும், வம்பில் மாட்டிவிடும்.

இப்படிக்கு

உனக்கு அவஸரமாய் எழுதும் உன் நண்பன்

துரைஸ்வாமி

இதைத் தனக்குள் படித்து, ஐயர் அதை மறுபடியும் ஊக்கமாய்க் கவனித்து, இதில் ஏதாவது வேறு அர்த்தம் வைத்திருக்கக் கூடுமோவென்று யோசித்தார். பிறகு "இதை எழுதும்பொழுது பண்டிதர் வெகு அவஸரமாயிருந்தாரோ!' யென்றார்.

கோவிந்தராவ் "அவர் எழுதும்பொழுது நான் பார்க்கவில்லை. ஆனால், இன்று காலையெல்லாம் ஏதோ மனக்கலக்கமா யிருந்தார்"

ஐயர் "என்ன காரணம்."

ராவ் "மாதுவய்யரின் வேலைக்காரன் குடித்துவிட்டு, யஜமானனைக் கண்டபடி திட்டினான். அவர் அவனை உடனே வேலையிலிருந்து நீக்கிவிட்டார். அவன் ஜாவாவிற்குப் போவதாய்ச் சொன்னபடியால், அவனுக்குப் பிரயாணச் செலவைக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டார்."



ஐயர் "வெகு நல்லகார்யம். பண்டிதருடைய தாராளம் லோகப்பிரஸித்தமே. உன்னை நான் பண்டிதர் வீட்டில் பார்த்ததாக ஞாபகமில்லையே."

ராவ் "தாங்கள் போனதடவை அங்கே வந்ததிற்குப் பிறகே நான் வேலையில் அமர்ந்தேன்."

ஐயர் வெகு நேரம் யோசித்து, ஒவ்வொரு வாக்கியமாய் தயங்கித் தயங்கி, எழுதி, அதையும் செட்டிகடைக்கு ஓர் கடிதத்தையும், ராவ்கையில் கொடுத்து, "இதை இந்த விலாஸமுள்ள பவழக்காரத் தெருக்கடையில் கொடுத்து, ரூபாய் 500 வாங்கிக்கொண்டு, அடுத்த ரயிலில் புறப்பட்டுத், திருவண்ணாமலை போய்ச் சேர்ந்து, பண்டிதரிடத்தில் கொடுப்பாய். இனி வேலைக்காரர்களை ஜாக்ரதையாய்ப் பார்த்து வைக்கவேண்டுமென்று சொல். வேணுமானால், இங்கிருந்து யாரையாவது அனுப்புகிறேன். இன்னும் ஒருவாரத்திற்குள் அங்கே வருவேனென்று தெரிவி".

ராவ் "தங்கள் உத்திரவுப்படி நடக்கிறே"னென்று வெளியில் வந்தான். ரயில் வண்டியில் உட்கார்ந்து, ரூபாயை மறுபடியும் எண்ணி, பத்திரப்படுத்திக், கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான்.

சென்னை மனமோஹன விலாஸ்,
ஆகஸ்டு 15-ம் தேதி.

அன்பார்ந்த துரைஸ்வாமீ!

உன் விசித்திரமான கடிதம் கிடைத்தது. அதின்படி ரொக்கம் 500 உன் கார்யஸ்தன் வசம் அனுப்பியிருக்கிறேன். ஆனால், இம்மாதிரி அடிக்கடி அசட்டுத்தனம் போனால் கட்டாது. நீ சற்று ஜாக்ரதையா யிருந்தால், அந்த வேலைக்காரன் இப்படி என்னைக் கிட்டிகட்டிப் பணம் வாங்கமாட்டான். இதை என் கையிலிருந்து கொடுக்கமுடியாது. உன் கணக்கில் வைத்துக்கொண்டு, உனக்கு அனுப்பும் பணத்தில் கழித்துக்கொள்வேன். இனியாவது தகுந்த பேர்வழியை மாதுவிற்கு வேலைக்காரனாய்ப் பார்த்துவை. அல்லது, இந்தக் குழப்பமெல்லாம் அடங்கின பிறகு இங்கேவா.

இப்படிக்கு
உன் நண்பன் நாகேச்வரன்.

இதைப்பார்த்துச் சற்று புன்சிரிப்புடன், ராவ் தன்மீசை, தாடி, கிருதா முதலிய அலங்காரங்களை எடுத்துவிட்டு, பழைய ஆசார்யராய் விளங்கிப், பூவானூரில் இறங்கி, வெங்குவய்யர் ஹோட்டலுக்குப்போய், போஜனஞ் செய்து, இரண்டு கடிதங்களை எழுதியனுப்பினார். முதலாவது

திருவண்ணாமலை.
ஆகஸ்டு 18-ம் தேதி.

அன்பார்ந்த நாகேச்வரா !

உன் பணம் வந்தவுடன் அந்தப் போக்கிரிப்பயலை என் கார்யஸ்தன் வசத்தில் ஒப்புவித்துக், கப்பலுக்கு அனுப்பிவிட்டேன். பிறகு அவனிருந்த அறையைப் பரிசோதித்துப், பார்த்தபொழுது, சில காயிதத்துண்டுகள் கிடந்தன. அவைகளைச் சேர்த்து ஒட்டிப்பார்த்தேன். பெரிய ஆபத்தில் கொண்டுவந்து விட்டிருக்கிறான்: வைத்தியம் கோபாலய்யருக்கு எல்லா சங்கதிகளையும் விவரமாய்த் தெரிவித்திருக்கிறான். அதற்காகப் பல தடவைகளில் ஏராளமான தொகையும் பெற்றிருப்பதாய்த் தெரிகிறது. மாஜிஸ்ட்ரேட்டின் முன்னிலையில் ஏதோ பிரமாண வாக்கு மூலம் எழுதி வைத்ததாயும், அதில் நம்மிருவரையும் சதியாலோசனை செய்து, மாதுவை அக்கிரமமாய் அடைத்து வைத்து, அவனுடைய சொத்தைக் கையாடின கிரிமினல் குற்றத்திற்காக நமது பேரில் வாரண்டிற்கு மனுக்கொடுத்திருப்பதாயும் கண்டிருக்கிறது. எது எப்படியிருந்தாலும், அடுத்த ரயிலில் புறப்பட்டு, தேஹ சௌக்கியத்திற்காகச் சில காலம் யாத்திரை செய்வதாய் உத்தேசித்திருக்கிறேன். வழக்கப்படி ஸகல செலவும் நீயே பொறுத்துக் கொள்வாயென்பதில் தடையில்லை. ரங்கூன் ராதாகிருஷ்ண லாலா தெரு, சாமிநாத ராவ் ஹோட்டலில் ஸந்திப்போம்.

இப்படிக்கு,
உன் நம்பிக்கையுள்ள
துரைஸ்வாமி.



இரண்டாவது:—

சென்னை,
மனமோஹன விலாஸ்,
ஆகஸ்டு 17-ம் தேதி.

அன்புள்ள துரைஸ்வாமி !

இனி எனக்குக் கடிதங்களை, நமது ரஹஸ்ய பாஷையில், சுதேசமித்திரன் 8-வது பக்கத்தில், விளம்பர ரூபமாய் எழுதவும். அடுத்த ரயிலில் பினாங்கிற்குச் சொந்தக்காரியமாய்ப் போய் வருகிறேன். நாளை மித்திரனில் என் விலாசத்தைத் தெரிவிக்கிறேன். அங்கு வந்து சேரலாம். பிறகு யோசித்துக் கொள்வோம். வைத்தியம் கோபாலய்யர் எப்படியோ நமது யுக்தியைக் கண்டு பிடித்து, ஒரு ரஹஸ்ய போலீஸ்காரனை அனுப்பி, நீ இல்லாத வேளையில் மாதுவைக் கண்டு பேசி, அவனையும் எச்சரித்திருக்கிறார். நம்மிருவரையும் கிரிமினல் குற்றத்திற்காக வாரண்டில் பிடிப்பதற்கு மனுக்கொடுத்திருக்கிறாராம். மற்றவை நேரில்,

இப்படிக்கு,
உன் நண்பன்
நாகேச்வரன்.

ஆசார்யர் ஒரு நாள் தன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு, சமாசாரப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கையில், சாம்பு திடீரென்று உள்ளே வந்து நமஸ்காரஞ் செய்து, "ஸ்வாமி! மாதுவய்யரவர்கள் தங்களை லக்ஷம் தடவை க்ஷேமம் விசாரித்துத், தன் வந்தனத்தைத் தெரிவித்தார். இந்தப் பழங்களையும் காய்கறிகளையும் தங்களுக்கென்றே பார்த்தெடுத்து 'அனுப்பி யிருக்கிறார். அங்கீகரிக்க வேண்டுமெ"ன்றான்.

ஆசார்யர் "அப்படியா? வெகு ஸந்தோஷம். அய்யரவர்கள் சௌக்கியமா? என்னிடத்தில் இவ்வளவு பிரியம் வைப்பதற்கு நானென்ன செய்தேன்? நீ கும்பகோணத்திற்கு இப்பொழுது தான் முதல் தடவை வருகிறாயோ."

சாம்பு "ஆமாம், மஹாராஜா இங்கே எல்லாம் வெகு விசித்திரமாயிருக்கிறது. நாங்கள் நாட்டுப்புறந்தானே."

ஆசார்யர் "மறுபடியும் ஐயர் அவர்களிடத்தில் வேலைக்கு அமர்ந்துவிட்டது போல் தோன்றுகிறது."

சாம்பூ "தடையென்ன. யஜமானன் சௌக்கியமாய்த் திரும்பி வந்த பிறகு எனக்கு வேறு இடத்தில் என்ன வேலை? நான் சொன்னது சரியாய்ப் போச்சுதா? பைத்தியமுமில்லை; சைத்தியமுமில்லை. அந்த மஹாநுபாவன் நாகேச்வரன் கட்டின கூத்தே. தாங்கள் அங்கே வந்து விட்டுப்போன உடனே வைத்தியம் கோபாலய்யர் இராப்பகலாய் சென்னைக்கும் கச்சேரிக்கும் நடையாய் நடந்து, என்னென்னமோ செய்து, யஜமானனுக்கு யாதொரு வியாதியுமில்லை யென்று கலெக்டருக்கு ருஜுப்படுத்தி, அய்யரவர்களை மறுபடியும் ஊருக்கு அழைத்துக் கொண்டு வந்தார். பையன்களெல்லோருக்கும் என்ன ஸந்தோஷம் தெரியுமா? இன்னும் ஒரு மாதம் வரையில் எங்களுக்குத் தலை கால் தெரியாமல், எப்பொழுதும் தமாஷும் உத்ஸவமாயிருந்தது.

ஆசார்யர் "நாகேச்வரய்யர் சங்கதி யென்ன?"

சாம்பு "சங்கதியா? ஆள் இருக்குமிடம் தெரிய வில்லை. இனி இந்த யுகத்தில் இங்கே தலை காட்டமாட்டான். அவனுடைய முத்தண்ணு பண்டிதனும் எங்கேயோ கம்பி நீட்டி விட்டான். சனியன் துலைந்தது. எப்படி யிருந்தாலும், அக்கிரமம் பலிக்குமா? எல்லாவற்றிற்கும் ஈச்சுவரர் ஒருவர் இருக்கிறாரல்லவா?"

ஆசார்யர் "ஸந்தேகமென்ன. நீ இன்னும் ஒரு வாரம் இங்கிருந்து விட்டுச், சித்திரை திருநாள் முடிந்த பிறகு திரும்பிப் போகலாம்.

## ஆப்கனிஸ்தான் அமீர்

"ஆப்கனிஸ்தான் தேசத்து அதிபதியான அமீர் ராவல் பிண்டியில் என்னுடன் அக்காலத்தில் இருக்கும்படி நேர்ந்ததாலும் புத்தியிலும் அனுபவத்திலும் பொறுமையிலும் சக்தியிலும் சிறந்தவராகையாலும் கில்கித் விஷயமாய் நடந்த தகரார் ஒன்றே நமக்கும் ஆப்கனிஸ்தானுக்கும் ஒரு நீண்ட யுத்தத்தைக் கிளப்பி விட்டிருக்கும். ருஷ்யாவிற்கும் இங்கிலாந்திற்கும் அப்பொழுதுள்ள ஸம்பந்தம் மிகவும் அதிருப்தியான நிலைமையிலிருந்தது." இவ்விதமாய் ஓர் இந்திய ராஜப்பிரதிநிதி பொதுவாய்ச் செய்த பிரஸங்கத்தில் அனேக ராஜிய ரஹஸ்யங்களை உள்ளடக்கிச் சொல்லி யிருக்கிறார்.

அவ்வளவு பெரிய பதவியிலிருக்கும் அதிகாரிகளின் பொதுவான வார்த்தைகள் உலகத்தாரால் வெகு நுட்பமாய் கவனிக்கப்படுகின்றன. ஸர்க்காரின் தங்கசாலையிலிருந்து வெளிவரும் நாணயங்கள் வழக்கத்தில் பரவிவிட்டால் எப்படி மறுபடியும் ஸர்க்காரிடத்தில் போய்ச் சேருவது அஸாத்தியமோ, ஜனங்களால் இஷ்டப்படி கையாடப் படுமோ, அப்படியே பெரிய ராஜ்ய தந்திரிகளின் வார்த்தைகளும் வெகு சாக்ரதையாய் வெளியிடப்படும். கில்கித் விஷயம் மாத்திரமென்று சொன்னதால் இன்னும் ஏதோ இதர விஷயங்கள் இருக்கின்றனவென்று ஊகிக்கலாம். வெகு அபாயகரமான கில்கித் விஷயம் ஓர் விதமாய் முடிந்ததைப்பற்றி யாவரும் கடவுளுக்கு வந்தன மளிக்கவேண்டும். ஆயினும் அடியில் சொல்லப்படும் விஷயமோ அதைக் காட்டிலும் கோடி மடங்கு அபாயமானது; சிலருக்கு மாத்திரமே தெரியும்; இதனால் விளையக்கூடிய கெடுதியும், அது தடுக்கப்பட்டதாலுண்டாகும் க்ஷேமமும், இவ்வளவென்று சொல்லி முடியாது.

ராஜப்பிரதிநிதி ராவல்ப் பிண்டியில் விஜயஞ் செய்யப்போவதை அறிந்து, ஆப்கனிஸ்தான் தேசத்தரசனை அப்தர் ரஹிமான்கான்

என்ற அமீர் தன் ஸகல பரிவாரத்தோடும் காபூலிலிருந்து புறப்பட்டு, அதி வேகமாய்ப் பிரயாணஞ் செய்து, பிரிட்டிஷ் சக்கிரவர்த்தியின் அதிகாரத்தை இந்தியாவில் வகிக்கும் பிரபுவை பேட்டி காண வந்தார். இவ்விரு மன்னர்களும் சேர்ந்திருக்கும் ஸமயத்தில் ஏதாவது விஷமம் செய்து, கலஹத்தை உண்டுபண்ணி விடவேண்டு மென்ற எண்ணத்துடன் ருஷ்யா தேசத்தின் ராஜ்ய தந்திரிகளும் தூதர்களும் ஆப்கானஸ்தானத்திற்கும் இந்தியாவுக்கும்நடுவிலுள்ள ஹஜாரா என்னும் நாட்டில் கருப்பு மலையைச் சுற்றின பள்ளத்தாக்கில் வஸிக்கும் ஹிந்துப் பக்கிரிகளைத் தூண்டிவிட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் கலஹம், கொள்ளை, கொடுமை முதலியவைகளை ஜீவனோபாயமாய் வைத்துக்கொண் டிருப்பவர்கள். பிரிட்டிஷ்காரரிடத்தில் அவர்களுக்குள்ள வெறுப்பிற்கும் விரோதத்திற்கும் எல்லையில்லை. அமீருடைய பரிவாரங்களில் மாறு வேஷம் பூண்டு கலந்து, மறுபடியும் தங்களுடைய ஜனன தேசமான இந்தியாவிற்கு வரப்பார்த்தார்களென்ற சமாசாரம் ஸர்க்காருக்கு எட்டிற்று. இதற்குமுன் பலதடவை இவ்விதமாய்க் கலகம் செய்ததற்காக இந்தப் பக்கிரிகளும், ஸன்யாஸிகளும் இந்தியாவிலிருக்கக் கூடாதென்று வெளியில் துரத்தப்பட்டார்கள். இந்தியாவின் வடமேற்கு எல்லையில் வைக்கப்பட்டிருக்கும் போலீஸார் இராப்பகலாய் இவர்களைக் கவனித்து வருகிறார்கள். இந்த ஸமயத்தில் ஏதாவது பிரமாதம் விளையாதபடி பார்த்துக் கொள்ளவேண்டு மென்று என்னையும் ராவல்பிண்டிக்கு அனுப்பினார்கள்; எனக்கு வடமேற்கு நாடுகளில் வழங்கும் பாஷைகளில் மற்றவரைக் காட்டிலும் மிகுந்த திறமை யுண்டென்பதே இதற்குக் காரணமாகும்.

நான் இந்தக் கார்யத்தை ஒப்புக்கொள்ளும் பொழுது என் இணைபிரியாத தோழனான அர்சுனஸிஹ்மன் என்னுடனிருக்கும்படி அனுமதி பெற்றேன். அர்சுனன் ஸர்க்காரிடத்தில் எல்லையற்ற விச்வாஸ முடையவன். ஆயுதப் பயிற்சியிலும் தேஹவலிமையிலும் தைரியத்திலும் நிகரற்றவன். பதற்றமில்லாமல் அமரிக்கையாய் கார்யங்களை ஆலோசிப்பதிலும் முடிவுசெய்த கார்யத்தை நடத்தும் போது மின்னலைப் போல் சற்றும் தயங்காமல் தாமதிக்காமல் அதி



வேகமாய் ஒருவராலும் தடுக்கப்படாமல் தன் எண்ணங்களை நிறைவேற்றுவதிலும் பெயர் பெற்றவன். போக்கிரிகளையும் திருடர்களையும் அயோக்யர்களையும் கண்டால் அவனுக்கு ஆத்திரம் பொங்கும். அவர்களுடைய சூழ்ச்சிகளை அறிந்து, அலுக்காமல் சலிக்காமல் எவ்வளவு காலமானாலும் அவர்களைப் பின் தொடர்ந்து, முடிவில் அவர்களை வேறு புகலிடமில்லாமல் செய்து தகுந்த சிக்ஷைக்குக் கொண்டு வருவதே அவனுக்குப் பிரியமான காரியம். எலியைக் கண்ட பூனையைப் போல் அந்த பக்கிரிகளைக் கண்டால் அவனுக்கு தேஹம் தெரியாமல் கோபம் வரும்.

ஹிந்து கோயில்களைப் பார்த்து, அவைகளைப் பற்றி ஓர் புஸ்தகம் எழுதுவதற்காக அங்கங்கே சுற்றித் திரியும் ஓர் பிரயாணியைப் போல் நான் வேஷம் பூண்டேன். அர்சுனன் தூரதேசத்து ஜமீன்தார்களுக்கும் பிரபுக்களுக்கும் விசித்திரமாயும் அபூர்வமாயுமுள்ள மிருகங்களின் தோல்களை வாங்கியனுப்பும் வியாபாரியைப் போல், கடைவீதியில் தங்கியிருந்தான்.

ஒருநாள் ஸாயங்காலையில் என் ஜாகைக்கு வந்து என் வேலைக்காரனை வெளியில் அனுப்பும்படி எனக்குக் கண்ஜாடை செய்து, நாங்களிருவரும் தனியே இருக்கும்பொழுது, மெதுவாய் "அய்யா! ஒரு முக்கியமான ஸமாசார" மென்றான். "அப்படியா? அதை உடனே சொல்"லென்றேன். ராஜாதி ராஜனான அமீர் அஞ்சாத நெஞ்சனும் போர்க்களத்தில் சத்துருக்களை கண்ட துண்டம் செய்வதில் சற்றும் பின்வாங்காம லிருப்பதற்கும் அவர் ஒழிந்த வேளையில் பொழுது போக்கும் விதத்திற்கும் கொஞ்சமேனும் ஒவ்வவில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் ஜபதப அநுஷ்டானம் முடிந்த பிறகு, இரண்டுமணி நேரத்திற்குக் குறையாமல் தன் தோட்டக்காரர்கள் கொண்டுவரும் புஷ்பங்களையும் செண்டுகளையும் பலவிதமாய் ஒழுங்குபடுத்துவதில் காலங் கழிக்கிறார். "இதென்ன? வேலையற்ற பெண்களின் தொழிலல்லவா?" "ஆம். அதனாலென்ன?" "நல்லவாஸனையுள்ள புஷ்பங்களை முகர்வதில் ஆசையுள்ளவர்கள் அந்த வழியாய் உயிர் இழந்திருப்பதைக் கேட்டிருக்கிறோமே. அமீருக்குக்

கொண்டுபோய் வைப்பதற்காக பல தோட்டக்காரர்களிடத்திலிருந்து அபூர்வமான புஷ்பங்களை நமது ராஜப்பிரதிநிதி தருவிக்கிறார். இவர்களுக்குத் தலைவனோ ஓர் ஹிந்து ஆடு மாடுகளுக்குப் புல் வைக்கோல் முதலியவை வாங்குவதற்காக நியமிக்கப்பட்ட ஒரு காபூல் தேசத்தான் அந்தப் புஷ்பங்களை வாங்கிவைக்கிறான். அவனோ அமீருக்கு ஜன்மசத்துருவான யாகூப்கானிடத்திற்கு அடிக்கடி போய் வருகிறான்.'' இதைக் கேட்டவுடன் நான் திடுக்கிட்டேன். ஆப்கனிஸ்தான் ராஜ்யம் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று வெகு காலமாய் கலகஞ் செய்து வருகிற யாகூப்கான். இந்தியா கவர்ன்மெண்டார் இவனுக்கு நல்ல பென்ஷன் கொடுத்து வருகிறார். காபூல் தேசத்தானுக்கு ஓர் வேலைக்காரனுண்டு. மற்ற வேலைக்காரர்களுக்கு அவன் இன்னானென்று தெரியாது. அவன் வெளிக்கு இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவனைப்போல், பேசிப் பழகினாலும் காசியில் ஆஞ்சனேய ஆலயத்தில் அவன் பூசை செய்வதைக் கண்டிருக்கிறேன். மேலும் ஒரு ரஹஸ்யம். அந்த ஆஞ்சனேய விக்ரஹமே இங்கே ராவல்ப்பிண்டிக்கு வந்திருக்கிறது;''. ''உனக்கென்ன பைத்தியமா? கோயிலிலிருக்கும் விக்ரஹத்தை 1500 மைலுக் கப்பால் கொண்டு வருவது ஸாத்யமா? குருக்கள் கோவில் அதிகாரிகள் ஸம்மதிப்பாரா?'' ''ஹிந்துக்களுக்குள் மதத்தில் வீராவேசம் கொண்டவர் யாரென்றால் இந்த ஆஞ்சநேய உபாஸகர்களே. இந்தியாவில் காசியென்பது மஹா புண்ய க்ஷேத்ரம். அங்குள்ள கோயில்களுக்குள் ஆஞ்சினேய மூர்த்தியின் ஆலயமோ வெகு மேன்மையுள்ளது. மிகவும் பரிசுத்தமானது; ஸாதாரண மனுஷ்யர்கள் நெருங்க முடியாது. இப்படியிருந்தும் அந்த விக்ரஹத்தைக் கோயிலிலிருந்து வெளிப்படுத்தி, இந்தியாவின் வடமேற்கு எல்லைக் கோடியில் துருக்கர்கள் வஸிக்கும் ஓர் நகரத்தில் கடைத்தெருவிலுள்ள ஓர் பாழும் வீட்டில் கொண்டு போய், ஒளிப்பதாயிருந்தால் எவ்வளவு மதவிரோதமான கார்யம். ஏதோ ஓர் பெரிய ராஜ்ய வ்யவஹாரம் இதைப் பொருத்திருந்தாலல்லாது இப்படிச் செய்ய இடம் கொடுப்பார்களா? ஆனால் காசியிலுள்ள இந்து குருக்களுக்கும் இந்தியாவை விட்டு வெளியேற்றப் பட்டுக், கருமலையின் பள்ளத்தாக்கில் வஸிக்கும் இந்து ஸந்யாஸிகளுக்கும் இடை



விடாமல் போக்கு வரத்து நடந்து கொண்டிருக்கிறது. ஒருவர்க்கொருவர் எப்பொழுதும் ஒத்து வேலை செய்கிறார்கள்''. ''அர்ஜுனா! இது வெகு பிரமாதமான விஷயம். நாம் சற்றேனும் அஜாக்ரதையாயாவது அலக்ஷ்யமாயாவது இருக்கக்கூடாது. அமீர் அந்தப் புஷ்பங்களைத் தொடுவதற்கு முன் நாம் அவைகளை நன்றாய்ப் பரிசோதிக்க வேண்டும். ஆகையால் நாளைக் காலையில் சுமார் 8 மணிக்கு பட்டாளத்தில் டேராவிற் கருகில் அகஸ்மாத்தாய்க் கண்டது போல் நாமிருவரும் சந்திக்க வேண்டும்'' இதற்குள் என் வேலைக்காரன் வந்து விட்டான். ஆகையால் நான் அர்ஜுனனைப் பார்த்து ''நீ இந்த மாதிரி தலைக்கால் தெரியாமல் விலை சொன்னால் உன் ஸஹவாஸமே எனக்கு வேண்டா''மென்று அதற்கு முன் அர்ஜுனன் என் கையில் கொடுத்திருந்த வெள்ளைக் குள்ள நரியின் தோலை வீசியெறிந்து அர்ஜுனன் அதை யெடுத்து, வணக்கத்துடன் என்னிடத்தில் திரும்பவும் கொடுத்து, தாங்களே இப்படிச் செய்தால் நான் யாரிடத்தில் சொல்லிக் கொள்ளுகிறது. இனி 10 ப் பேரம் இப்படிச் செய்தால் நான் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு ஓ லக்ஷ்மணா வென்று போக வேண்டியதுதா''னென்று முணு முணுத்துக் கொண்டே வெளியில் சென்றான்.

அன்றிரவில் நான் வெகு நேரம் வரையில் போலீஸ் சூப்ரின்டெண்ட் ஹேல் துரையுடன் கலந்து யோசனை செய்தேன். மறுநாட் காலையில் நானும் ஹேலும் வேடிக்கையாய் சவாரி செய்கிறவர்களைப் போல் கூடாரத்திற் கருகில் சந்தித்தோம். சற்று நேரத்திற்கெல்லாம் அர்ஜுனஸிங்கும் வந்து சேர்ந்தான். மூவரும் சற்று தூரம் சென்று அமீருக்காக அமைக்கப்பட்ட அரண்மனை வாயிலுக்கருகில் போகும் பொழுது அங்கே பாராக் கொடுத்துக் கொண்டிருந்த ஸோல்ஜர் முன்னமே ஹேல் துரையால் எச்சரிக்கப்பட்டிருந்த படியால் எங்களைத் தடுக்கவுமில்லை, பார்த்ததாகவும் காண்பிக்கவில்லை. நாங்கள் உள்ளே சென்று, அங்கே ஓர் பளிங்கு மேசையின் மூன்று வெள்ளிக் கூடைகளில் விசித்திரமாய் ஒழுங்கு படுத்தி வைக்கப்பட்டிருந்த பல அபூர்வமான புஷ்பங்களைக் கண்டோம். அவைகளுக்கு நடுவில் வெளுப்பும் சிவப்பும் கலந்த வர்ணமுள்ள

ஒரு ரோஜாச் செண்டு எங்கள் கண்களைப் பறித்தது. நான் அதிலிருந்து வீசும் நறுமணத்தை முகரக் குனிந்தேன், உடனே அர்ஜுனன் என்னைக் கையைப் பிடித்திழுத்து "வெகு நன்றாயிருக்கிறது. அமீருக்கு எது வந்தாலும் வரட்டும். அதற்காக நீங்கள் ஆபத்தில் மாட்டிக் கொள்ளலாமோ" வென்றான். ஹேறல் துரை அர்ஜுனனுடைய விச்வாஸத்தையும் உஷாரையும் பார்த்து, மெதுவாய்ச் சிறித்தான். அதற்குள் அர்ஜுனன் தன் சட்டையிலிருந்து ஓர் சிறிய நாய்க் குட்டியை எடுத்து ரோஜாப் புஷ்பச் செண்டிற்கருகில் பிடித்தான். உடனே அது ஆவலுடன் அதை முகர்ந்தது, அதைச்சற்றுநேரம் கவனித்து, அதற்கு யாதொரு கெடுதியும் நேராததைக்கண்டு, என் நண்பன் முகம் தெளிந்து, "இதுவரையில் பாதகமில்லை. இன்று காலை 5 மணிக்கு இந்த மலர்கள் கொய்யப்பட்டன. உடனே அவைகளைத் துணியால் மூடி, ஆஞ்சனேய ஆலயத்திற்குக்கொண்டு போய், மறுபடியும் 6. மணிக்கு அப்படியே மூடிக்கொண்டு வந்தார்கள். நான் முன் சொன்ன ஹிந்து இதை வாங்கி இங்கே கொண்டுவந்தான். இதில் ஏதோ மாயமிருக்கலாம். பரிசோதிக்கவேண்டு" மென்றான்.

நாய்க்குட்டியைக்கம்பளத்தின் மேல் வைத்து விட்டு, அந்தச் செண்டைக்கட்டியிருந்த கயிற்றை வெகு ஜாக்ரதையாய் அவிழ்த்தான். வெளிக்கட்டுத் தளர்ந்ததாலும் நடுவில் எங்கேயோ மாட்டிக் கொண்டிருந்தது. அதையும் கைவிரல்களால் பிரிக்காமல், ஹேறல் துரையின் சாட்டை முனையால்பிரித் தெடுத்தான். உடனே நாங்கள் மூவரும் பயத்தால் நடுங்கித், திடுக்கிட்டு, மூலையில் வேகமாய்ப் பாய்ந்தோம். சுண்டு விரலளவு ஓர் கரு நாகம் கரிய மாணிக்யத்தைப் போல் பளபளவென்று ஜ்வலித்துக்கொண்டு, அதிலிருந்து தாவி, மேஜையின் மேல் குதித்து, யார்மேல் பாய்வதென்று தோன்றாமல் தலையை அங்கு மிங்கும் ஆட்டிக்கொண்டிருந்தது. செண்டைக் கட்டியிருந்த கயிற்றைப்பிடித்து இழுத்ததால் அதன் தேகத்தில் உபத்ரவமுண்டாய், கோபம் மூண்டு, சீறிக்கொண்டிருந்தது. பகைவரின் தந்திரம் நன்றாய் வெளியாயிற்று. அந்த நாகம் கடித்தால் அதற்கு ஔஷதம் கிடையவே கிடையாது. கிருஷ்ணஸர்ப்பமென்று சொல்லும் நல்ல பாம்பின் கடிக்குத்தப்பினாலும் தப்பலாம்



இதின் விஷம் யமனுடைய காலபாசத்தைப் போன்றது. அர்ஜுனன் சாட்டையின் அடிக்கட்டையால் ஓரடியில் அதின் முதுகை ஒடித்து, ஒரு மூலையில் தூக்கி யிருந்தான். அது அங்கே படுத்திருந்த நாயின் மேல் விழுந்தது. மின்னலைப்போல் அர்ஜுனன் தாவி, நாகத்தின் தலையைக்காலால் நசுக்குவதற்குள் அது நாய்க் குட்டியைக்கடித்து விட்டது. அடுத்தநிமிஷத்தில் அந்தக்குட்டி கண் சுழன்று கீழே விழுந்திறந்தது. நானும் ஹேறல் துரையும் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றோம். இந்த ஜாதிப்பாம்பு வெகு பொல்லாதது. தன்னை உபத்திரவித்தவனை எதிர்த்துக்கடிக்கும் ஜாதியுமல்ல. மனிதனைக்கண்டவுடனே கோபாவேசங்கொண்டு பாய்ந்து கடிக்கும். சற்றுதப்பினால் நாங்கள் என்ன கதியாயிருப்போம். நமது சக்கிரவர்த்தியின் நண்பரும் அவரால் அழைக்கப்பட்ட விருந்தினருமான ஆப்கானிஸ்தான் அரசன் இன்னும் ஒரு மணிநேரத்திற்குள் இதே புஷ்பச்செண்டைக்கையாடி முகர்வார். அப்பொழுது என்ன நேர்ந்திருக்கும். அந்த அபாயமும் பழியும் யாருடைய தலையில் விழும். வேற்றரசனைத் தருவித்துத், துரோஹஞ் செய்து, மாயமாய்க்கொன்ற மஹாபாபி யென்று மாசுஷிமை தங்கிய நமது சக்கிரவர்த்தியல்லவா காலமுள்ள வரையில் கொடிய நிந்தைக்காளாவார். மேலும் இதனால் ஆப்கனிஸ்தானத்திற்கும் இந்தியாவிற்கும் மஹாயுத்தம் விளையும். இந்த ஸமயம் எப்பொழுது வாய்க்குமோவென்று நீண்டகாலமாய்க் காத்துக்கொண்டிருந்த ருஷ்ய கவர்ன்மெண்டார் திரவியம் ராணுவ பலம் தல வாடம் உத்தியோகஸ்தர்கள் முதலிய ஸகல விதத்தாலும் ஆப்கானியருக்கு உதவிபுரிந்து, பிரிட்டிஷ்காரர் தோல்வியடைவதற்கு எவ்வித முயற்சிகளையும் செய்வார்கள்; முடிவில் இந்தியாவை ஒரே கவளமாய் விழுங்குவார்கள். இவ்வளவையும் நன்றாய் ஆலோசித்து, ஆங்கிலேயரிடத்தில் தீராப்பகைகொண்ட இந்திய ஸன்யாஸிகள் இந்தச் சூழ்ச்சியைச்செய்தார்கள். இது பலித்திருந்தால் விளையும் விபரீதம் எண்ணமுடியாதது. பலிக்காமல் எப்படிச்செய்யப்பட்டதென்றும், யார் அப்படிச்செய்ததென்றும் வெளியில் தெரியுமோ?

மற்ற இரு கூடைகளையும் வெகு சாக்ரதையாய் அர்ஜுனன் பரிசோதித்துப் பார்த்தான்; கவலைக்கிடமில்லை. பிறகு முன் போல்

அவைகளைச் சாதுர்யமாய்க்கட்டி வைத்தான். அதைக்கண்டு போலீஸ் அதிகாரி "ஏன் வீண் சிரமம்? இதை உடனே ராஜப் பிரதிநிதிக்குத் தெரிவிக்க வேண்டும். இதில் ஸம்பந்தப்பட்ட கொலைக்காரப் பயல்களை சற்றேனும் இறக்கமில்லாமல் தண்டிக்க வேண்டு" மென்றான். ஆனால் அர்ச்சுனன் ஒன்றும் சொல்லாமல் என்னை உற்றுப்பார்த்தான். நான் அந்த ஜாடையை அறிந்து கொண்டு, "தாராளமாய்ப் பேசலாம், உனக்குத் தோன்றினதைச் சொல்"லென்றேன். அப்பொழுது என் நண்பன் "நாம் கடைத் தெருவில் இப்பொழுது ஏதாவது குழப்பம் செய்தால் பலர் அதனால் எச்சரிக்கையாய்த் தப்பித்துக் கொள்வார்கள். அவர்கள் இன்னாரென்று நமக்கு இப்பொழுது தெரியவில்லை; தெரிய வேண்டியது அவச்யம். அல்லது எதற்கும் துணிந்து, வெளிப்படையாய் ஏதாவது உபாயஞ் செய்து, அமீரைக் கொல்ல முயல்வார்கள். நாம் இப்பொழுது வாயைத் திறக்காமல், நடக்கும் ஸங்கதிகளை மாத்திரம் வெகு நுட்பமாய்க் கவனித்து வந்தால், இந்தச் சதியாலோசனையைப் பற்றி நமக்கு இன்னும் அதிகமாய்த் தெரியும். இந்த உபாயம் தவறிப் போனது ஏதோ ஒரு காரணத்தாலென்று இன்னும் தைரியமாய் யுக்திகளைச் செய்வார்கள். எது எப்படியானாலும் இவர்களுடன் வெளிப்படையாய் விரோதிப்பதும் ஆயுதங்களாலும் அதிகார பலத்தாலும் சண்டையிடுவதும் வீணே. திருடனைத் திருடனே பிடிப்பான். விஷத்திற்கு விஷமே ஔஷதம், முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டும். பிறகு உங்களுடைய இஷ்ட" மென்றான்.

நாங்கள் ஒவ்வொருவரும் சரிசரியென்று ஒப்புக்கொண்டோம். இறந்த பாம்பையும் நாயையும் என் சவுக்கத்தில் கட்டி எடுத்துக் கொண்டு, எங்களுடன் வெளியில் வந்தான். ஸோல்ஜர்களுடைய டாரா வரிசைகளைத் தாண்டின பிறகு அர்ஜுனன் வெகு தூரத்தில் உட்கார்ந்திருந்த ஓர் ஹிந்து வேலைக்காரனை நோக்கி, "அந்த மனிதனைக் கண் பார்வைக்குள்ளேயே நாம் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டு" மென்றான். உடனே ஹேல் துரை அங்கு நின்றுகொண்டிருந்த இரண்டு போலீஸ் கானிஸ்டேபிள்களை அழைத்து எதையோ சொன்னான். அவர்கள் அந்த வேலைக்காரனைக் கைப் பிடியாய்க்



கொண்டுபோய் விட்டார்கள். "அவனை என்ன செய்யச் சொன்னா" யென்றேன். "ஆறு மாதம் கடுங்காவல் போடச் சொன்னே"னென்றான். "என்ன குற்றத்திற்காக" வென்றேன். குற்றமா? அந்த வம்பெல்லாம் நமக்கேன்? குற்றமும் அதற்கு வேண்டிய ஸாக்ஷிகளும் தாஸ்தாவேஜுகளும் எப்படியாவது தயாராகும். இதையெல்லாம் நாம் நுட்பமாய் விசாரித்துக்கட்டா" தென்றான்.

## இரண்டாம் பாகம்

ஆஞ்சனேய மூர்த்தியின் குருக்கள் காணமல் போன தங்களுடைய கூட்டாளி. தங்களுக்கு துரோஹம் செய்து எங்கேயோ மறைந்தானென்றும், வேறு உபாயம் சீக்கிரத்தில் செய்தே தீரவேண்டு மென்றும் நிச்சயித்தார்கள். ஆனால் இதை யெல்லாம் எப்படியோ உடனே தெரிந்து கொண்ட அர்ஜுனன் அவர்களுடைய அடுத்த ஆலோசனை இன்னதென்று மாத்திரம் அறியமுடியவில்லை. ஆனால் ராஜப்பிரதிநிதியின் சொந்த நம்பிக்கையுள்ள வேலைக்காரர்களே அமீருக்கு வேண்டிய புஷ்பங்களைக் கொடுத்து வரும்படி ஹேல் துரை ஏற்பாடு செய்தான்.

இரண்டு மூன்று தினங்களுக்குள் ஓர் பெரிய தர்பார் நடக்கும். அப்பொழுது அமீர் ராஜப்பிரதிநிதியின் ஸபைக்கு வருவார். அக்காலத்தில் ஏதாவது கலஹமோ, ரஹஸ்ய உமாயமோ நடக்கு மென்று அர்ஜுனவிங்க் எவ்விதமாகவோ நிச்சயித்தான். ஆனால் அதின் விவரம் பூர்ணமாய் அவனுக்குத் தெரியாததால் அதைப் பல மணி நேரம் வரையில் கடுமையாய் யோசித்து, முடிவில் கடைத் தெருவிலுள்ள ஓர் வீட்டில் தன்னைச் சந்திக்கும்படிச் சொன்னான். அப்படியே செய்தேன்; ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நானும் அவனும் இரண்டு பட்டாணித் துருக்கர்களைப் போல் மாறு வேடம் பூண்டு வெளியில் வந்து ஆஞ்சனேய மூர்த்தியின் விக்ரஹம் வைக்கப்பட்டிருக்கும் வீட்டிற்குச் சென்றோம். அந்த வேளையில் அங்கே ஒருவருமில்லை; துருக்கர்கள் நிறைந்த பட்டணத்தில் ஹிந்து தெய்வத்தின் விக்ரஹம் வெகு தூரத்திலிருந்து கொண்டுவந்து வைக்கப்பட்டதென்று அந்த

ரஹஸ்யமான கக்ஷியைச் சேர்ந்த சிலருக்குத் தவிர மற்ற ஒருவருக்கும் தெரியாது. அதை வெளியில் சொன்னாலும் எல்லா சமாசார பத்திரிகைகளிலும் வெளியிட்டாலும் ஒருவரும் நம்பமாட்டார்கள்.

ஆஞ்சனேயருடைய விக்ரஹம் ஏழு அடி உயரமுள்ளது; கருங்காலிமரத்தால் வெகு சாதுர்யமாய் அமைக்கப்பட்டு, தங்கமுலாம் பூசப்பெற்றது. அதன் கண்களுக்கு பதிலாய் இரண்டு விலையற்ற வைரக் கற்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை அந்த இருள்பாதி நிறைந்த அறையில் இரண்டு மின்ஸார தீபங்களைப்போல் பிரகாசித்தன. நாங்கள் அந்த அறையை வெகு சாக்ரதையாய்ப் பரிசோதித்துப் பார்த்தோம். யாரும் ஒளிந்து கொள்ளவாவது ஒட்டுக் கேட்கவாவது இடமில்லை. இதை முன்பே யறிந்த எனது நண்பன் அந்த விக்ரஹத்தை வெகு ஊக்கத்துடன் கவனித்துக் கொண்டிருந்தான். இவ்வளவு பெரிதும் பாரமுள்ளதுமான ஒரு விக்ரஹத்தை ரயில்மார்க்கமாய் எவருக்கும் ஸந்தேஹமுண்டாகாமல் எப்படிக் கொண்டு வந்தார்களென்பது ஆச்சரியமாக விருக்கிறது. அதின் நிறை இவ்வளவென்று பார்க்கும்பொருட்டு நாங்கள் பக்கத்திற்கு ஒருவராய் அதைப் பிடித்துத் தூக்கினோம். வெகு கனமுள்ளதென்று நினைத்து,மிகுந்த தேஹபலத்தை உபயோகித்தோம். ஆனால் நாங்களிருவரும் ஒருவர்மேலொருவர் விழுந்து முட்டிக்கொண்டு விக்ரஹத்தை கீழே தள்ளிவிட்டோம். உள்ளே முற்றிலும் கூடாயிருந்தது; இந்தமரம் நன்றாய் உலர்ந்து விட்டபடியால் சற்றேனும் பளுவில்லை. அது கீழே விழுந்து உடையாமல் தாங்கிப்பிடித்து நிறுத்தினோம். தாராளமாய் இருவரும் அதற்குள் பதுங்கியிருக்கலாமென்றறிந்து, எங்களுடைய பார்வையாலேயே பேச்சில்லாமல் மேல் நடக்கவேண்டிய கார்யங்களை ஏற்படுத்திக் கொண்டோம்.

மறுநாள் மாலையில் நாங்கள் ஹேல் துரையுடன் அங்கே சென்று, ஓர் இடுக்கின் வழியாய்ப் பார்த்தோம். உள்ளே யாரோ ஒரு பக்கிரி விக்ரஹத்திற்குமுன் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்துகொண்டு ஏதோ ஸ்தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் எழுந்திருக்குமுன் அவனைப் பிடித்துக் கட்டி வாயை



அடைத்து, முன் கைதி செய்யப்பட்ட அஸாமியுடன் சேர்த்துவிட்டோம். அவன் யார் தெரியுமா? என் பழைய பேர்வழி ராமதயாளென்பவன்.

பிறகு நானும் அர்ஜுனனும் அந்த விக்ரஹத்திற்குள் மறைந்து கொண்டோம். நாங்கள் வேண்டிய ஆயுதங்களைத் தரித்திருந்தோம். ஹேல் துரையும் அவருடைய நம்பிக்கையுள்ள வேலைக்காரர்களும் அந்தக் கட்டடத்தைக் சூழ்ந்து கொண்டிருந்தார்களென்றும், நாங்கள ஒருதடவை கைத்துப்பாக்கியை விடித்தால் அடுத்த நிமிஷத்தில் அவர்கள் உள்ளே பாய்ந்து வேலை முடிப்பார்களென்றும் எங்களுக்கு நன்றாய்த் தெரியும். அந்த விக்ரஹம் வெகு சாதுர்யமாய் வேலை செய்யப்பட்டிருந்தது; உள்ளே யிருந்து வெளியில் நடக்கும் விஷயம் ஒன்றும் தெரியாமல் அவ்வளவு நுட்பமாய்க் கோர்க்கப்பட்டிருந்தது; ஆனால் மூச்சு விடுவதற்கும் வெளியில் நடக்கும் விஷயங்களைக் கேட்பதற்கும் சற்றேனும் தடையில்லை.

வெகு நேரமாயிற்று; எனக்கு தேஹமெங்கும் வலியெடுத்து மறத்துப்போயிற்று. அர்ஜுனனோ வெகு சாவகாசமாய் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தான். உடனே யாரோ உள்ளே வந்த காலடிச் சத்தம் கேட்கப்பட்டது; வரவர கூட்டம் அதிகமாயிற்று. விக்ரஹத்திற்கு பூஜை நடந்தது. அவர்கள்பேசிக் கொண்டிருந்த பாஷையின் நுட்பங்கள் என்னுடனிருந்த அர்ஜுனனுக்கும் தெரியவில்லை. நான் அதற்குமுன் வெகு நாளாய் வங்காளிகளின் கிராமப் பேச்சுகளையும் குருக்களுடைய ஸங்கேதங்களையும் சந்நியாசிகளின் விசித்திரமான பிரயோகங்களையும் வெகு சிரத்தையாய் நான் படித்ததின் பயன் இப்பொழுது கிடைத்தது. மாதவன் எங்கே ? யென்று ஒருவன் கேட்டான். “எனக்குத் தெரியாது. மத்யாஹ்ன போஜனத்திற்குப் பிறகு இங்கே வருவதாய்ச் சொன்னா”னென்று வேறொருவன் பதிலளித்தான். “இது நமது கார்யத்திற்கு சற்றேனும் அனுகூலமில்லை. காபூலிலிருந்துவந்த நமது நண்பனோ மாயமாய் மறைந்தான். மாதவனும் அவனைப்பின் தொடர்ந்தான். ஹெட் போலீஸ் ஆபீஸில் ஏதாவது சமாசாரம் தெரிந்ததா வென்று முதல்வன் கேட்டான். “ஒன்றுமில்லை. இப்பொழுது

162011

போலீஸிலுள்ள பயல்களெல்லாம் ஷியா மதத்தைச் சேர்ந்த கழுதைகள். ஸூர்ய வெளிச்சம் முகத்தில் அடித்தாலொழிய பகலென்று அவர்களுக்குத் தெரியதென்று இரண்டாவது மனிதன் சொன்னான். அவனே ஆடுமாடுகளுக்குத் தீனி வாங்கிப்போடும் வேலையில் இருக்கிறவன்.

அவர்கள் அதற்குப் பிறகு மெதுவாய் பேசிக் கொண்டிருந்தார்கள். அதிலிருந்து நான் தெரிந்து கொண்டது என்னவென்றால் இந்தச் சதியாலோசனைக்காரர்கள் அமீரை பிரிட்டிஷ் எல்லைக்குள் இருக்கும் பொழுதே கொல்லவேண்டு மென்று முடிவு செய்தார்கள். தங்களுடைய அரசனைக் கொன்றது பிரிட்டிஷ்காரனென்றே நம்பி, ஆப்கன் தேசத்தார் அனைவரும் இந்தியாவின்மேல் படையெடுப்பார்கள். அந்த ஸமயத்தில் ருஷ்யன் துருப்புகள் அவர்களுடன் சேர்ந்து, அவர்களுக்கு எவ்வித உதவியையும் புரியக் காத்துக் கொண்டிருந்தன. மேலும் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு அரசனும் தன் கதியும் அப்படியே ஆகுமென்று நம்பி, கலஹஞ் செய்து ஆப்கானியருடன் சேருவார்கள். இந்தியாவில் வெள்ளைக்காரர்களின் ஆழ்ச்சியொழியும். அயோத்யாவிலுள்ள மஹாத்மா சென்று, திருவிழாவில் ஜனங்களுக்குச் செய்த உபன்யாசத்தில் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் காரர்கள் 100 வருஷத்தில் தொலைந்து விடுவார்களென்றும் ஹிந்துக்களுடைய ராஜ்யம் மறுபடியும் நிலைபெறுமென்றும் ஹிந்துரஹஸ்ய மதக்கிரந்தங்களில் கண்டிருப்பதாய்ச்சொல்லவில்லையா? அந்தக்காலம் இப்பொழுது வந்து விட்டது. எல்லாம் ஒத்துக்கொண்டது. இப்படி பொது ஜனங்களின் நோக்கத்தையறிந்து, வெகு ஸாமர்த்தியமும் ஆழ்ந்த யோசனையுமுள்ள சில தந்திரிகள் இந்தச் சதியாலோசனையைச் செய்தார்கள். எட்டு மாஸங்களுக்குப்பிறகு பிரிட்டிஷ் ராஜப்பிரதிநிதி சட்டஸபையில் உபன்யாஸஞ் செய்யும் பொழுது இதை மனதில் வைத்துக் கொண்டே பேசினார்.

இப்படி நான் யோசித்துக்கொண்டிருக்கையில் "காபூலிலுள்ள ருஷ்யன் நமக்குக் கொடுத்த அந்த விசித்திரமான தந்திரம் எங்கே? அது இப்பொழுது நல்ல ஸமயத்தில் நமக்கு ஒத்துக்கொள்ளு"



மென்று ஒரு துருக்கன் சொன்னான். ஏதோ ஒரு பதார்த்தத்தை எல்லோரும் வெகு ஆவலுடன் பரிசோதித்துப்பார்த்துக் கொண்டிருந்ததாகத்தெரிந்தது. அது இன்னதென்று மாத்திரம் எங்களுக்குப்புலப்படவில்லை. அப்பொழுது அவர்களில் ஒருவன் "இது வெடிகுண்டென்று சொல்லப்படும். கையில் வைத்துக்கொண்டு வீசியெறிந்தால் விழுந்த விடத்திற்கு அருகிலுள்ள கட்டிடம் மனிதன் மிருகம் முதலிய யாவையும் பொடிப் பொடியாகச் செய்யும். இதற்குள் கெடியாரத்தைப்போன்ற ஓர் யந்திரத்தை வைத்து, இன்ன மணி இவ்வளவு மினிட் ஸெகன்ண்டில் வெடிக்கும்படி அதைக் கணக்காய் வைப்பது முண்டு. ஸந்தேஹமுண்டாகாதபடி இதைப் புஸ்தகரூபமாயும் தலைக்குட்டை ரூபமாயும் இன்னும் ஸந்தேஹத்திற்கு இடமில்லாத வஸ்துக்களைப்போலவும் செய்வதுண்டு. தற்காலத்திலுள்ள ஆயுதங்களுக்குள் இதே மிகவும் அபாயகரமானது. இதை வெகு சாக்ரதையாய் உபயோகிக்கவேண்டு மென்றான். உடனே அங்கிருந்தவர்கள் வெகு தூரம் விலகிப் போனார்கள். கைதவறிகீழே விழுந்தால் என்ன நேருமோவென்று விக்ரஹத்திற்குள் நாங்களிருவரும் பெருங்கவலை கொண்டோம். ஆனால் அது வெடிப்பதற்கு வேண்டிய திருகுகளும் வெடிகளும் வைக்கப்படவில்லையென்று சொல்லி, அந்தத் துருக்கன் மற்றவர்களை ஸமாதானம் செய்தான். அமீர் மறுநாள் ராஜப் பிரதிநிதியை பேட்டி கண்டு விட்டு திரும்பி வருகையில், கடைவீதியிலுள்ள ஒரு வீட்டின் மேல் மாடியிலிருந்து அவ்வரசனுடைய வண்டியில் இந்த வெடிகுண்டைப் போடவேண்டுமென்று முடிவு செய்தார்கள். அப்பொழுது உண்டாகும் குழப்பத்தில் அந்தக் கட்டத்திலுள்ளோர்கள் கொல்லைவழியாய் விழுந்தோடி தப்பலாமென்று தைரியங் கொண்டார்கள். அதைக் கேட்டவுடன் அவர்களின் மேல் பாய்ந்து, கண்டதுண்டமாய் வெட்டிக் கொல்லவேண்டு மென்று எனக்கு ஆத்திரம் பொங்கிற்று. அதையறிந்து அர்ஜுனன் என் தோளைப்பிடித் திருத்தினான்.

பிறகு அந்தத் துருக்கன் வெளியில் போனான்; மற்றவர்கள் ஆஞ்சனேயருக்குப் பூஜைசெய்து வெள்ளைக்காரரை இத்தேசத்தி

லிருந்து துரத்தும்படி தங்களுக்கு அனுகூலம் செய்யவேணுமென்று பலவிதமாய் வேண்டினார்கள். அமீருடைய கொலையும் அதன்மேல் நடக்கும் யுத்தமும் அவர்களுக்கு ஓர் பொருட்டல்ல. தங்களுடைய உத்தேசத்தை முடிப்பதற்கு ஓர் கருவி மாத்திரமே.

எல்லோரும் போனபிறகு நாங்கள் வெளியில் வந்து, வலித்து மறத்துப்போன கைகால்களை ரக்த ஓட்டம் வரும்படி தேய்த்துக் கொண்டு, ஹேறல் துரையைக் கண்டு பிடித்து, நடந்த ஸங்கதிகளைத் தெரிவித்தோம். அதைக் கேட்டு அவன் "ஐயோ! நல்ல ஸமயம் தவறிப் போயிற்றே. நீங்கள் மாத்திரம் ஏதாவது கலஹம் செய்து அவர்களை சண்டைக் கிழுத்திருந்தால் அவர்களில் ஒருவனாவது தப்பியிருக்கமாட்டான். எந்த வழியாய் வந்தாலும் அவர்களைப் பிடிக்க என் மனிதர்களைத் தயாராய் வைத்திருந்தேனே யென்றான். "அப்படியானால் அது எல்லோருக்கும் தெரியும். நமது ராஜப் பிரதிநிதியும் அமீரும் இதை வெளிக்குக் கொண்டு வருவதில் விருப்பமுள்ளவர்களல்ல. ஆகையால் நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால் முன்னாடி ஒருவருக்கும் தகவல் சொல்லாமல் கடைசி நிமிஷத்தில் திடீரென்று அமீருடைய வண்டிகள் போவதாய் ஏற்படுத்தியிருக்கும் வழியை மாற்றி, வேறு தெருவின் வழியாய்க்கொண்டு வரவேண்டு"மென்று அர்ஜுனன். சொன்னான் "அப்படிக்கூடாது. இந்தப் பயல்கள் ஓடிப் போவார்க"ளென்று ஹேறல் சொன்னான். "ஒருவனும் ஓடவும் மாட்டான்; தப்பவும் மாட்டான்; நாளை அவர்களுடைய ஆயுவின் முடிவென்று நம்புங்க"ளென்று அர்ஜுனன் சொன்னான். ஹேறலின் புத்தியில் அதுபடவில்லை; இருந்தாலும் அர்ஜுனனுடைய யுக்தியையும், புத்தியையும் கண்டவன். செண்டில் கருநாகத்தை வைத்த சூழ்ச்சியைக் கண்டுபிடிப்பதை நினைத்து, அர்ஜுனன் சொல்வதற் கிணங்கினான்.

# கதாரத்னாகரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 2.

வெளி நாடுகளுக்கு ரூ. 3-8.

)22௵ ஏப்-மே௴] [துன்மதி௵ சித்-வைகாசி௴

## அட்டவணை

24 JUL 1922


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | மனோதர்மம் | 323 |
| 3. | சிந்தனைத் திரட்டு | 326 |
| 4. | மதுவிலக்கு | 327 |
| 5. | தினத்தியானங்கள் | 328 |
| 6. | இரதிசுந்தரி | 331 |
| 7. | பத்திரிகா பிரயோஜனம் | 335 |
| 8. | ஸ்ரீமத் பகவத்கீதா வாசகம் | 336 |
| 9. | விநோத கதா மஞ்சரி | 105 |


## சந்தா நேயர்களுக்கு

விநோத கதா மஞ்சரி:— இப்பெயர் கொண்டு சிறிய நாவல்கள் சேர்க்கப்பட்டு வருவது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். நாலாம் தொகுதி 12-ம் சஞ்சிகையோடு விநோத கதா மஞ்சரி முதல் வால்யம் பூர்த்தியாகும். அப்பொழுது சஞ்சிகையிலிருந்து பிரித்து தனி நூலாகச்செய்து கொள்ளலாம். அதற்கென்றே தனிப்பக்க நம்பர் தொடர்ச்சியாய் கொடுக்கப்பட்டு வருகிறது.

# கடவுள் வணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கண் ணந்தணனா யறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய்.

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
ஆரா வமுதா யலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய்.

இந்திரனு மாலயனு மேனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்றந்த
அந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய்.

வான்வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டூன்வந்து ரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய்

கடவுள் துணை

கதாரத்னாகரம்
KATHA RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
— ஔவைக்குறள்

24 JUL 1922

Vol. 4. } 1922 APRIL, MAY { Nos. 11, 12.
தொகுதி 4. } 1922-ம் ௵ ஏப்ரல், மே ௴ { பகுதி 11, 12.

## மனோதர்மம்.

கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தில் ஒவ்வொரு உயிரும் தன் கருமங்களை முடித்துக் கொள்வதெல்லாம் மனதினால்தான். மனமானது பிறவி நோய் முதலான எல்லாப் பிணிகளுக்கும் வித்தாயிருக்கிறது. இம்மனம் ஒரே நிலையாய் எப்பொழுதும் நிற்கும் குணமுடையதில்லை. ஒன்றைவிட்டு ஒன்றைக் குரங்குபோல் பற்றிக் கொண்டே போவதினால் இதற்கும் மனக்குரங்கு எனப் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இதை அதன் வழிச் செல்லவிடாது புத்தியால் தன் வழிப் படுத்துதலுக்கே மகான்களெல்லாம் தவமும், பற்றவர்கள் நோன்பும் இருந்து வருகிறார்கள். இம்மனது ஒரு கண்ணாடி போன்றது. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் நமக்குப் பின்னால் வரப்போகிறவைகளை குறிப்பாக உணர்த்துகிறது.

"மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என நமது ஆன்றோர் அருளியவாறு கண்டு கொள்க. இம் மனவழிப்பட்டுச் செல்லுதலே எல்லாவிதத் துன்பங்களுக்குங் காரணம். முதலில் மனவழிச் செல்லும்பொழுது எல்லாம் இன்பமாகத் தோன்றினாலும், பின்னால் அடைவது துன்பம் என்பது யாவரும் தங்களது வாணாளில் கண்கூடாகத் தெரிந்தது. இதனால் அறிஞர்கள் மட்டும் மனவழிச் செல்வதில்லை. "மோன மென்பது ஞானவரம்பு" என்ற ஆத்திசூடிச் செய்யுளும், "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்ற திருக்குறளும் வேடதாரிகளான மௌனச் சாமிகளைப் பற்றி எழுந்ததல்ல. உண்மையாக இருந்தவாறே யிருந்து அனுபவித்தல் வேண்டுமென்னும் பழமொழிப்படி மனோ அடக்கத்தைத் தவிர வாயடக்கம் முதலியவைகள் ஞான நெறிக்கு உயர்ந்த வழியாகா. நாவடக்கம் ஒன்றுக்கே உலகம் புகழுமானால் உண்மை மன அடக்கத்திற்கு யார்தான் புகழமாட்டார்கள். ஆனால் மனவழிச் சென்று தங்கள் இஷ்டம்போல் நடந்துகொண்டவர்கள் உலகப் பழிப்புக்குமாளாய், மறுமைக்கு வேண்டியவற்றைச் செய்யாதவர்களாயும் போய்விடுகிறார்கள். இந்த மனதைத் தன் வழிப்படுத்த விரும்புகிறவர்கள் நல்லவர்கள் தொடர்பினாலும் நல்ல நூல்கள் ஆய்வதினாலும், நல்ல எண்ணங்களையே எண்ணுவதினாலும், தப்பித்துக் கொள்ளலாம். ஒருவன் துன்பம் அடைகின்ற காலத்தில் தன்னையறியாமலே "யான் முன்னாளில் யாருக்கு எவ்வித கெடுதலைச் செய்தேனோ" என்று புலம்புகிறான்.

தற்காலத்தில் தேகபலத்தை விட மனோபலத்துக்கு வலிவு அதிகம் என்பதை மேல் நாட்டு அறிஞர்களெல்லாம் கண்டு பிடித்து வருகிறார்கள். இம்மனோவலிவால்தான் முன்னுள்ள முனிவர்களும், அடியார்களும் சில அரிய செய்கைகளை நிகழ்த்தியுள்ளார்கள்.

நன்கு பழக்கப்பட்ட குதிரை தன் வழிச் செல்லாது பழக்கத்தினாலும் ஓட்டுகிறவன் சைகைகளாலும் ஒழுங்காகச் செல்லுதல் போல, பக்திலயப்பட்ட மனமானது இயற்கை பலத்துடன் கடவுளின் அருளையும் பெற்று அற்புதங்களை நிகழ்த்துகின்றது. திரு



நாயன்மார்களில் ஒருவராகிய குங்குலியக்கலயநாயனார் என்பவர் அரசனால் எவ்வித பாடுபட்டும் நிமிர்த்தமுடியாத சிவலிங்கத்தை தனது மனோ பலத்தாலும், கடவுளிடத்திலிருந்த பேரன்பினாலும் தானே நிமிர்த்திவிட்டார்.*

ஒருவன் பிறருக்குச் செய்ய நினைத்த தீமையெல்லாம் தனக்கே முடியும். கெடுதியைப் பிறருக்குச் செய்ய நினைப்பவனே கெடுவான் என்பதை "கெடுவான் கேடு நினைப்பான்" என்னும் பழமொழியால் அறிகிறோம். மனதுக்கு நினைத்தல், மறத்தல் என்னும் இரண்டு தொழிலுண்டு. பிறருக்கு நன்மையை நினைத்தவன் நன்மையையும், தீமையை நினைத்தவன் தீமையையும் அடைகின்றான். "நன்மை செய்தார் நலம் பெறுவர், தீமை செய்தார் தீமையுற்று நலிவர் தாமே" எனப்பழமொழி விளக்கச் செய்யுளாலறியக் கிடக்கிறது. இன்னும்

"மண்ணுலகிற்பிறர் குடியை வஞ்சனையாற் கெடுப்
பதற்கு மனதினாலே,
புன்னிடினு முரைத்திடினும் வன்றானே கெடுவ
னென்பதுண்மையன்றோ,
தென்னவன் சோழன் பணியுந்தண்டலை நீணெ
றியாரே தெரிந்து செய்யுந்,
தன்வினை தன்னைச் சுட்டோட்டப்பம் விட்டைச்
சுடவுந்தான் கண்டோமே.

என்னும் செய்யுளால் மனதினால் உன்னிடினும் வாக்கினால் உரைத்திடினும் தானே கெடுவன் என்றவுண்மை விளங்குகிறது. ஆகையால் ஒவ்வொருவரும் சுகமாக வாழ்வதற்கு அவர்கள் மனது தான் காரணமென்று வெள்ளிடை மலைபோல் தெற்றென விளங்குகிறபடியால் அவரவர்கள் "மனம்போல் வாழ்வு" என்ற பழமொழியை யாவரும் வழங்கிவருகிறோம்.

---

* மனோ சக்தியால் எவ்வித காரியமும் சித்தியடையும் என்பதற்குப் பெரிய புராணசான்று.

சரீரத்தை நீரால் கழுவி சுத்தி செய்கிறோம். அதைப்போலவே மனத்தையும் கழுவவேண்டும். எப்படியெனில் கடவுளைப்பக்தி செய்து ஒருநாளில் கொஞ்ச நேரமாயினும் துதிக்கவேண்டும். இப்படிப் பழகி வருவதோடு, விவகாரங்களில் மனத்தை நல்வழிப் படுத்தியே பழகவேண்டும். ஒருவன் தன் மனதை எவ்வளவுக்கு ஒருமைப்படுத்துகிறானோ அவ்வளவுக்கு நன்மையே உண்டாகும். இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணமாயுள்ளது மனம். ஆனால் துன்பத்தை எவரும் விரும்புவதில்லை. மனம் ஐம்புலன்களின் வழியால் இன்பநுகர்ச்சிக்கே முயற்சி செய்கிறது. பிறருக்கு நன்மை செய்வதாலும், ஏற்போர் மகிழ்வுறுவதாலும் இன்பம் உண்டாகிறது. இதைச் சிந்தித்தே "மனம்போல் வாழ்வு" என்று நம்மனோர் சொல்வது வழக்கம்.

## சிந்தனைத் திரட்டு.

1. ஆசை அதிகரித்தால் துன்பம், ஆசை குறைந்தால், துன்பமும் கொஞ்சம், ஆசையே யில்லாவிடில், துன்பமில்லை.

2. ஜெயத்தால் மகிழவும் வேண்டாம் தோல்வியால் கஷ்டமும் படவேண்டாம். இரண்டையும் சமமாக நினைத்து விட்டால் மன சாந்திண்டாகும்.

3. நம்பினோரை ஏமாற்றுதலும், வஞ்சித்தலும் கொடிய செய்கை.

4. பலகீனர்களுக்காகப் பரிதாபப் பட்டு அவர்களை முன்னுக்குக்கொண்டு வருவது பலவான்கள் கடமை.

5. அசத்தியம் தானே யழிந்து விடும்.

6. பிறர் உன்னிடம் எப்படி நடந்து கொள்ள எண்ணுகிறாயோ அப்படியே நீ அவர்களிடம் நடந்து காட்டவேண்டும்.

7. வாங்குகிறதைவிட கொடுக்கிறதில் பிரியமுள்ளவனாயிரு.



8. எப்போதும் உண்மையாயும், நீதியாயும் நடந்து கொள். அதுவே மேன்மை யளிக்கும்.

9. உள்ளொன்றும் வெளியொன்றும் வைக்காது நேர்வழி பேசுபவனுக்கு சில சமயங்களில் பகைவர்கள் ஏற்பட்டாலும், முடிவில் அவனுக்கே கீர்த்தியுண்டாகும்.

10. தரித்திர ஸ்திதியில் உடனிருப்பவர்களே உண்மை நண்பர்கள். அப்படிப்பட்ட நண்பர்களை இழத்தல் கண்களையிழத்தலையே ஒக்கும்.

11. வாழ் நாளின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒழுங்காயிருந்தால் துன்பமே யில்லை.

12. ஈகையையே தோழனாகவும், கருணையையே துணைவனாகவும் கொள்வாயாக.

எம். பி. எஸ். வேலாயுதம்,

சென்னை.

## மதுவிலக்கு

எத்தனையோ புழுக்கள் ஈ யெறும்பு கொசு வண்டுகள்
அத்தனையும் ஊறிச் செத்த அசுத்தமடா புழுத்ததடா. (1)

தலைமுறை தலைமுறையாய்ச் சம்பாதித்த பொருள்கள்
மலைபோலிருந்த தெல்லாம் மாயமாகப் போச்சுதடா. (2)

மிஞ்சு பலநாள் தொட்டு பஞ்சுபடாப் பாடுபட்டு
மிஞ்ச வைத்த தெல்லாம் தோற்று இஞ்சி தின்ற குரங்கானாய் (3)

மடையனாய் மிகக்குடித்து வருவார்க்கெல்லாங் கொடுத்து,
விடியவே செலவை யெண்ணி விசனமுற்றால் வருவதுண்டோ ? (4)

பஞ்ச பாதக மியற்ற அஞ்சார் குடியரப்பா
கொஞ்சி யவருடனே கூடுவோருந் தேடுவாரே !

சு. அர்த்த நாரீச வர்மா.

# தினத்தியானங்கள்.

## April 22 ஏப்ரல்-மீ 22-உ

சுத்தமான இருதயமும் குற்றமற்ற வாழ்க்கையும் பிரயோஜனம்.
அவைகள் சந்தோஷத்தாலும் சாந்தியாலும் நிரம்பப்பட்டிருக்கின்றன.

### மேலுலகமில்லெனினும் நற்கருமம்புரிசல் நன்று.

நமது நல்வினைகள் நம்முடனிருக்கின்றன. அவைகள் நம்மைக் காப்பாற்றிப் பரிபாலனம் பண்ணுகின்றன. தீவினை குற்றமாகின்றன. நமது தீவினைகள் நம்மைத் தொடர்கின்றன. அவைகள் நம்மை மயக்கத்தில் வீழ்த்துகின்றன, தீங்கு செய்கிறவன் துக்கத்திலிருந்து காப்பாற்றப்பட மாட்டான். ஆனால் நன்மை செய்கிறவன் எல்லாத் தீங்குகளிலிருந்தும் காக்கப்படுவான். அறிவிலி தன்னுடைய தீவினை மறைந்திருக்கிறதாகவும் வெளியாகவில்லை யென்றும் சொல்லுகிறான். ஆனால் அவனுடைய தீவினைகள் முன்னமே வெளியானதாயும் அவனுடைய துக்கம் நிச்சயமாகவு மிருக்கிறது. நாம் தீவினை செய்வதிலிருந்தால் நம்மைக் காப்பாற்றுவது எது? நம்மைத் துன்பத்திலிருந்தும் அழிவிலிருந்தும் காப்பது எது? ஆணாவது பெண்ணாவது செல்வமாவது சக்தியாவது விண்ணுலகாவது மண்ணுலகாவது நம்மை அழிவிலிருந்து காக்க இயலாது. தீவினையின் பயனை அனுபவித்தாலன்றித் தப்பயார்க்குமில்லை. வேறு புகலுமில்லை. காத்துக்கொள்ளு முபாயமுமில்லை. நாம் நல்வினையிலே கருத்தா யிருந்தால், நம்மைத் தொடர்ந்து பிடிப்பது எது ? நம்மைத் துன்பத்துக்கும் அழிவுக்கு விடுவது எது ? ஆணோ அல்லது பெண்ணோ வறுமையோ அல்லது நோயோ விண்ணுலகோ அல்லது மண்ணுலகோ எதுவும் எஞ்ஞான்றும் அழிவைத்தரா.

ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரான வழியும்
சாந்தமான அமைதியுமுண்டு.



## April 23 ஏப்ரல்-மீ 23-உ

உண்மையை நேசிக்கிற நீங்கள் எல்லாம் சந்தோஷமா யிருங்கள் துக்கப்படாதீர்கள்.
ஏனெனில் உங்கள் துக்கங்கள் காலைப் பனிபோல் நீங்குவன

சீடன்:—பரமகுருவே எனக்குபதேசம் செய்யும்.

குரு:—கேள். விடை சொல்லுகிறேன்.

சீடன்:—நான் விசேஷமாய் வாசித்திருக்கிறேன். ஆனால் இன்னும் அறியாமையில் தான் இருக்கிறேன். நான் எல்லா வேதாந்தக் கொள்கைகளையும் படித்திருக்கிறேன். ஆனால் இன்னும் ஞானத்தை யடையவில்லை' நான் மனப்பாடமாக வேதங்களைச் சொல்லுவேன். ஆனால் சாந்தம் எனக்கு வரவில்லை. குருவே, ஞானநெறியை எனக்குக் காட்டும். தெய்வீக ஞான மார்க்கத்தை எனக்குத் தெரிவியும். உம்முடைய குழந்தையாகிய என்னை சாந்த நெறியில் நடத்தும்.

குரு:—சீடனே ! அறிவு நெறி மனவிசாரணையாலும், ஞானமார்க்கம் நீதியைப்பழகுவதினாலும், பாவமற்ற வாழ்க்கை சாந்த நெறியாலும் அடையப்படும்.

நித்திய அன்பு மறைந்திருப்பதை உற்றுப்பார்.
(அழியா அன்பு) தூரத்திலிருக்கிறது போல் தோன்றியது அழியா அன்பு.
இழிவான இருதயத்திலுங் கூட தற்பொழுது பாவமற்ற
வாழ்க்கையி லிருக்கிறவனுக்கு வெளிப்படையா யிருக்கும்.

## April 24 ஏப்ரல்-மீ 24-உ

உன்னைப் பலமாய் வெல்வதற்கு நீ ஆரம்பிவித்த (தன்) வசமாக்கல் மேலானது
நம்பிக்கை வை; நீ வெல்லலாம்.

---

சீடன்:—குருவே! என்னை நடத்தும். ஏனென்றால் என் இருள் அதிகமாயிருக்கிறது. குருவே! இருள் போகுமா? அநுபவம் ஜெயத்தில் முடியுமா? என் துக்கங்களுக்கு ஒரு முடிவு உண்டா?

குரு:—உன் இருதயம் சுத்தமா யிருக்கும் போது இருள் நீங்கும். உன் மனது காமாதிகளற்றிருக்கும் போது அநுபவத்தின் முடிவை அடைவாய். தன்னைக் காக்க வேண்டு மென்னும் நினைவு வந்தபோது துன்பம் வரக்காரணமே யில்லை. நீ இப்பொழுது ஒழுக்க முறை சுத்தியாகிய மார்க்கத்திலிருக்கிறாய். என் சீடர்களெல்லாம் அந்த வழியிலே நடக்க வேண்டும். நீ அறிவுப் பிரகாசத்தில் பிரவேசிக்கு முன், உண்மையின் பூராப் புகழையும் நீ உற்றுப் பார்ப்பதற்கு முன், உன்னுடைய அசுத்தங்களை யெல்லாம் சுத்தி செய்ய வேண்டும். உன்னுடைய மயக்கங்கள் ஒழிய வேண்டும். உன்னுடைய மனது பொறுமையால் பலப்பட வேண்டும். உண்மையில் உன் நம்பிக்கையைத்தளர விடாதே. அந்த உண்மை நித்தியமாயும் அதிசிரேஷ்டமாயுமுள்ள தென்பதை மறவாதே; உண்மையின் தலைவனுன நான் உன்னைக் காத்துக் கொண்டிருக்கிறேனென்பதை ஞாபகம் வை.

---

நம்பிக்கையுடனும் பொறுமையுடனுமிரு.
எல்லா விஷயங்களையும் நான் உனக்குக் கற்பிக்கிறேன்.

M. E. வீரபாகு பிள்ளை.

# இரதிசுந்தரி.

[முன் தொடர்ச்சி]

சூரியனைச் சுற்றி பூமி சுழலுதலும், பூமியைச் சுற்றி சந்திரன் சுழலுதலும், இவை போன்ற பிறவும் எவ்வாறு தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றனவோ அவ்வாறே ஆலய வழிபாடும் தொன்று தொட்டு நிகழ்ந்து வருவதா மென்பது மக்களியல் பினை நோக்கினுல் நன்கு விளங்குவதாம்; ஆனுல், அவ்வாலயங்களும் வழிபாடுகளும் காலதேச நிமித்தங்கட்கேற்றவாறு பல திறத்தனவாக விருப்பதாம். இவை பல திறத்தனவாக விருப்பினும், இவற்றின் நோக்கம் கடவுளை யடைவதையே முக்கியமா யுணர்த்துவதாக விருத்தலின், எவ்வாலயத்தையும் எவ்வழிபாட்டையும் ஒருவகையானும் நிந்திப்பதுகூடாது. எம்மதத்தர் ஆலயமும் கடவுளை வணங்கி அவரை யடையும் வழியைக் குறிப்பு வழியாகவுணர்த்துவதாக அமைந்திருத்தலின், பிறர் வழிபடும் ஆலயத்தை மறந்து மிகழுதல் செய்யாது, நாம் நமக்கென்றேற்படுத்தியுள்ள ஆலயத்திற்குச் சென்று குடும்பக் கவலையொழியக் கடவுளை மனமொழி மெய்கள் மூன்றும் ஒருமுகப் பட்டு நிற்க வணங்கி வருதல் வேண்டும். நாம் கடவுள் அநந்தரா (முடிவற்றவரா) யிருத்தலின், அவரை வழிபடுதற்குரிய மார்க்கங்களும் அநந்தமாயிருக்கின்றன; நதிகளைனத்திற்கும் கடலே முடிவிடமாக விருப்பது போல மார்க்க மனைத்திற்கும் கடவுளே முடிவிடமாக விருக்கின்றாரென்று நிச்சயித்து, அவ்வாறு வணங்கி வருவோமாயின், மனம் ஒருமுகப் படுவது பெற்றுக் கடவுளருளுக்குப் பாத்திரராதற்குரியவராவோம்.

நாம் நம் வீட்டிலிருந்து கடவுளைக் குறித்த நேரத்தில் வழிபாடு செய்தல் கூடாதோ? ஆலயத்திற்கேன் போதல் வேண்டுமென்று வினவுதல் கூடும். இங்கு வீடு என்னும் பதம் விடுதலையென்னும் பொருளுடையதாக விருப்பினும், அது நமக்குப் பந்

த்தையே மேலும் மேலும் விளைவிப்பதாக விருத்தலின், அதன்கணிருந்து எவ்வாறு கடவுளைச் செவ்வையாக வழிபடுதல் கூடும்? வீட்டினை நன்றாகக் கட்டல் வேண்டும்; வயலுக்கெருவினை நன்றாகப்போடல் வேண்டும் என்றற்றொடக்கத்து வியவகாரத்தை நெய்விட்ட நெருப்புப் போல வளரச் செய்து பந்தத்தை மிகுவிக்கும் வீட்டின்கணிருந்து கடவுளை வழிபடுவது நம்மனோர்க்கு முடியாத காரியமாம்; ஆகவே, நாம் மனம் ஒருமுகப்பட்டுக் கடவுளை யடைதற் பொருட்டு ஆலயத்திற்குச் சென்று கடவுளைப் பெரியார் கூறியவாறு வணங்குதல் வேண்டும். இங்குப் பெரியாராவர் முக்கியமாக நமது தந்தையாரேயாவர். அன்னையார் வாயிலாகத் தந்தையாரிவரென்றறிந்தாற் போலத் தந்தையார் வாயிலாகக் கடவுளிவரென்றறிதற்குரியவராக விருக்கின்றோம். நம்மனோர்க்கு அன்னையார் தந்தையாரை யறிவிப்பதும் அவர் கடவுளை வழிபடு மார்க்கத்தை யுணர்த்துவதும் தொன்று தொட்டு நடைபெற்று வருதலின், நாம் கடவுளை வழிபடுமிடமாகிய ஆலயமும் தொன்று தொட்டிருத்தல் வேண்டுமென்பது சொல்லாமலே விளங்குவதாம். தொன்று தொட்டு நடைபெற்றுவரும் ஆலய வழிபாட்டால் விளையும் நன்மையை ஆஸ்திகர் யாவர்க்கும் ஞாபகப்படுத்துவதற்காகவே இன்ன ஆலயமெனக் குறிப்பிடாது பொதுவாக "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்றருளிச் செய்தார், நம்ஞானத் தாயாகிய ஔவைப் பிராட்டியார், ஆலயம் என்பதன் பொருள் தங்குமிடம் என்பதாம்; யார் தங்குமிடம் என்னும் வினாவிற்கு விடை கடவுள் தங்குமிடம் என்பதாம். கடவுள் தங்குமிடமென்னும் பொருளுடையதாம் கோயிலென்னும் சொற்றொடரும். (கோ-கடவுள், இல்-இடம்.) உயிர் உடம்பு முற்றும் வியாபித்திருப்பினும், இருதய கமலத்தின் (மனத்தின்) கண் விசேடமாக விளங்குவது போல, கடவுளும் உலகமுற்றும் வியாபித்திருப்பினும் ஆலயத்தின்கண் விசேடமாக விளங்குகின்றார். அவர் அங்கு விசேடமாக விளங்குவதாற்றான் பக்தியோடு வழிபடுபவரது மனம் அங்கு விரைவில் ஒருமுகப்படுகின்றது. சூரியனது கிரணம் சூரியகாந்திக் கண்ணாடி வாயிலாக விசேடமாக வெளிப்படுவதுபோல, கடவுளது கருணையும் ஆலயவாயிலாக விசேடமாக வெளிப்படுகின்றது. இப்பிறப்பின் பயனை ஆலயத்திற்குச் சென்று கடவுளை வழிபடாதவர் ஒருவகையானு மடைவதில்லையாம். புறத்தேயுள்ள ஆலயத்திற்குச் சென்று அங்கு உருவமாகவோ அருவமாகவோ இருப்பதாகப் பாவிக்கப்படுங் கடவுளை ஆசை, கோபம், அகந்தை முதலியவற்றை யொழித்து மனத்தாற் சிந்தித்து, வாயால் வாழ்த்திக் காயத்தால் வணங்குகின்றான், அகமாகிய (உடம்பாகிய) ஆலயத்தில் ஆநந்த சொரூபமா யெழுந்தருளி யிருக்குங் கடவுளை விரைவிற் காணுதல் வாய்ப்பதாம்.



"வாழ்த்த வாயு நினைக்க மட நெஞ்சுந், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனை (கடவுளை)" மனமொழி மெய்கள் ஒருமுகப்பட்டு வணங்குவதற்கிடம் சிறப்பு வகையாக ஆலயமன்றி மற்றொன்றாகாமையின், குறித்த காலத்தில் ஆலயத்திற்குச் சுத்தமாகச் சென்று சர்வ மதத்திற்குஞ் சாட்சியாக விருந்து அநுக்கிரகஞ் செய்யுங் கடவுளை மனமொழி மெய்களொத்துவர மிகவும் வணங்குவது நம்மனோர்க்கத்தியாவசியகமான கடமையாம். இஃதில்லாவிட்டால், நாம் நற்கதி பெறுவது ஒரு வாற்றானுமின்றாம். இது பற்றித்தான் உலக நீதி "கோயிலில்லா வூரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறுகின்றது.

எங்கும் எள்ளிலெண்ணெய்போல வியாபகமாயிருக்குங் கடவுளை யோரிடத்திருப்பதாகப் பாவித்து வணங்குவது தவறாகாதோ வெனின், இது தியான விலக்கண மறியாதவரது கூற்றாம். கடவுளை இருதயம், கண்டம், புருவ மத்திய மென்னுமிடங்களுள் யாதாவதோரிடத் திருப்பதாகப் பாவித்தாலன்றி வேறுவகையாகத் தியானிப்பது கூடாமையின், தியானத்தின் பொருட்டுக் கடவுளுக்கோரிடத்தைக் கற்பிப்பது ஒரு வாற்றானுங் குற்றமுடையதன்றாம். சுருக்கமுடையது பெருக்கமாயிருத்தற்குரிய தாகாது; பெருக்கமுடையது சுருக்கமாகத் தோன்றுதற்குரியதா மென்பது விளங்கினால், ஆலயத்தில் கடவுளிருப்பதாகப்பாவித்து வணங்குதல் தவறுடையதாகாதென்பது விளங்கும். பெருக்க (வியாபக) மாயுள்ள ஆகாயம் ஊசியின் காதில் சுருக்கமாகத் தோன்றுவதுபோல, பெருக்கமாயுள்ள கடவுளும் ஆலயத்தில் சுருக்கமாக விளங்குகின்

றார். மோகத்தின் வசப்பட்டுச் சுருங்கிய வடிவினராக விளங்கும் நாம் வியாபகமாயுள்ள கடவுளை வியாபகமாகத் தியானிப்பது கூடுமோ? கூடாமையின், அவரைச் சுருங்கிய வடிவினராகப் பாவித்தாற்றான் தியானித்தல் கூடும்.

நினைப்பது, என்றவிடத்து, யார், எதனால், எங்கே, எப்போது, எதனையென்னும் வினாக்கள் நிகழுமன்றோ? கடவுளை வணங்குமிடத்தும் இவ்வைந்தும் வேண்டப்படுவனவாம். இவ்வைந்திற்கும் விடை முறையே நாம், மனதால், ஆலயத்தில், குறித்த காலத்தில், கடவுளையென்று பெறப்படுவதாம். இவ்வாற்றால் கடவுள் கால தேசங்கட்குக் கட்டுப்பட்டிருக்கின்றாரென்று பாவித்தாலன்றி, அவரை வணங்குதல் முடியாதென்பது செவ்விதின் விளங்குவதாம்.

வீட்டிலிருக்கும்போது நமக்குக் கடவுளைப் பற்றிய ஞாபகம் பெரும்பான்மையு முண்டாவதில்லையாம்; ஆலயத்திற்குப் போயவிடத்தோ அவரைப்பற்றிய ஞாபகம் தொடர்ச்சியாக வுண்டாகின்றது; அது தொடர்ச்சியாக வுண்டாவதால், நாம் பழிபாவங்கட்கஞ்சி யொழுக வேண்டும், கடவுளது கருணைக்குப் பாத்திரராதல் வேண்டும் என்று கருதி அவரை யன்போடு வணங்க முயலுகின்றோம்.

புத்தகமானது தன்னிடத்துள்ள அர்த்தங்களைத் தன்னைப் படிப்பவர்க்கு அவரவருடைய அறிவின் தன்மைக்கேற்ப வுணர்த்துவதுபோல, ஆலயமும் தன்னிடத் தெழுந்தருளி யிருக்கும் கடவுளின் ஞாபகத்தைத் தன்னை வணங்குகின்றவர்க்கு அவரவருடைய அறிவின் தன்மைக்கேற்ப வுணர்த்துகின்றது. இதனாற்றான் ஆலயத்திற்குப் போவார் யாவரும் ஒரு திறத்தினராகா திருக்கின்றனர். ஆலயத்திற்குக் கடவுளை வணங்கச் சொல்லுவோர் பல திறத்தினராக விருப்பினும், அவரது நோக்கம் கடவுளை வணங்கி நற்கதி பெற வேண்டுமென்பதாக விருத்தலின், ஆலயத்திற்குச் செல்வது எவ்வகையாலும் பழுதுடைய தன்றாம். இஃது ஆலயத்தைக் கண்டவுடனே நமக்குத் தெய்வச் சிந்தனை யுண்டாவதைக் கவனிப்போமாயின், நன்கு விளங்கும்.



எவ்வாற்றானும், ஆலயத்திற்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் நன்மையைத் தருவதாக விருத்தலின், இதனை மறவாது மேற்கொண்டொழுகின்றவர் தவறாது நன்னிலையினை யடைவாரென்பது பிறழாத சித்தாந்தமாம்.

"முன்னவ னார்கோயில் பூசையின் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினிக்
கென்னரு ணிந்தி யெடுத்துரைத்தானே"

என்று திருமந்திரம் கூறுவது இங்கு நன்குணர் தற்பாலதாம்.

(தொடரும்)

---

# பத்திரிகா பிரயோசனம்.

("வாசுதேவனே வந்தாள் வேணுமே" என்ற மெட்டு)

படித்த பெண்மணி—கொம்பி அடித்த கண்மணி
பிடித்த கற்பு விரத நாளும் பேணு மம்மணி!

பெண்கள் கல்வியால்—வெகு பங்க முண்டென்று
சங்கங் கூடிப் பேசிப்—பேசி தடுத்தல் ஞாயமா?

அறிவு வேறு தான்—படிப்பதுவும் வேறு தான்
நெறி தெரிந்து பேச வேணும் நியாய வான்களே!

பாதி பாதியே—நாம் படைத்த நியாதியே
சேதி நீதி ஆண்கள் மட்டுந் தெய்வ பக்ஷமா?

இந்தியாவிலே—நம்ம பந்தி மாதர்கள்
சிந்தியார்களோ எழுத்துச் சேதிப் பத்திரிகை?

இங்கி யுலாவும்—மே லாங்கிலப் பெண்கள்
பாங்கில் யாமுந் தீங்கில்லாமல் படிப்போம் பத்திரிகை.

உத்தமக் குணம்—பெறும் பத்தினிப் பெண்கள்
ஒற்றுமைச் சிரத்தை காட்டிப் பத்திரிகைப் பெற்றால்;

தேச யோகமே—கன ராஜ ரீகமே
பேசுமிந்தி— யாசிலாக்கியம் பெறுமநேகமே.

சாபம் · உ. அ. முத்துசாமிக் கவிராயர்

# ஸ்ரீமத் பகவத்கீதா வாசகம்.

அர்ஜுனன் சொல்லுகிறான்:

1. கிருஷ்ண! கர்மங்களைத் துறந்திடுதலையும் மற்று கர்ம யோகத்தையும் புகழ்ந்து பேசுகிறீர்கள். இவ்விரண்டனுள் எது நலமானதோ அஃதொன்றையே தீர்ந்த முடிவாக எனக்கு உரைத்தருள வேண்டும்.

ஸ்ரீ பகவான் சொல்லுகிறார்:

2. துறவும் கர்மயோகமுமாகிய இரண்டும் உறுதியான நன்மையைச் செய்பவை. ஆனால் அவற்றுள் கர்மயோகமானது கர்ம ஸந்யாஸத்திலும் மேலாகின்றது.

3. எவன் பகைப்பதில்லையோ விரும்புவதில்லையோ அவனை என்றும் ஸந்யாஸியாக அறிய வேண்டும்; ஏனெனில் உயர்தோள! த்வந்தங்களைக் கடந்தவன் கர்மமாகிய கட்டினின்றும் எளிதே விடுபடுகிறான்.

4. சிறுவர்கள் ஸாங்யத்தையும் யோகத்தையும் வேறாகக் கூறுகிறார்கள். ஞானிகள் அவ்வாறு கூறுவது இல்லை. ஒன்றையாவது நன்றாக மேற்கொண்டவன் இரண்டினுடைய பயனைப்பெறுகிறான். ஸாங்க்யம்-கர்ம ஸந்யாஸம். யோகம்-கர்மயோகம்.

5. ஸாங்க்யர்களால் எந்த நிலையானது அடையப்படுகின்றதோ அது யோகிகளாலும் அடையப்படுகின்றது. எவன் ஸாங்க்யத்தையும் யோகத்தையும் ஒன்றாகக் காண்கிறானோ அவன் நேராகக் காண்கிறான்.

6. உயர்தோள! மற்று ஸந்யாஸத்தை யோகத்தாலல்லாமல் வேறு வகையால் பெறுவது அரிது கர்மயோகத்தைக் கூடி பகவானை இடைவிடாது நினைக்கும் தன்மையன் தாமதமின்றி ப்ரஹ்மத்தை அடைகிறான்.

7. கர்ம யோகத்தைக் கூடி மனந்தெளிந்து தேகத்தையும் இந்திரியங்களையும் வென்று தனது ஆத்மாவையே ஸகலப்பொருள்களுடைய ஆத்மாவாகக் கொண்டவன் ஒன்றனைச் செய்தவனாயினும்பற்றப்படுகிறானில்லை.

8. 9. ஒரு நிலைப்பட்டு உண்மைபுணர்ந்தவன் பார்ப்பவனாயினும் கேட்பவனாயினும் தொடுபவனாயினும் முகர்பவனாயினும் உண்பவனாயினும் நடப்பவனாயினும் உறங்குபவனாயினும் மூச்சு விடுபவனாயினும் பேசுபவனாயினும் மல ஜலங்களை விடுபவனாயினும் எடுப்பவனாயினும் கண்களை விழிப்பவனாயினும் மூடுபவனாயினும் "இந்திரியங்கள் இந்திரிய விஷயங்களுள் திரிகின்றன" எனத் தெளிந்து "நான் ஒன்றுஞ் செய்வதே இல்லை" எனச் சொல்லவேண்டும்.



10. எவன் ப்ரஹ்மத்தினிடத்துக் கர்மங்களை வைத்து பற்றை விட்டுச் செய்கிறானோ அவன் நீரினால் தாமரை யிலைபோல பாவத்தால் ஒட்டப்படுவதில்லை.

11. கர்ம யோகிகள் மனம் திருந்துவதற்காக பற்றைவிட்டு சரீரத்தாலும் மனத்தாலும் புத்தியினாலும் வெறும் இந்திரியங்களாலும் கர்மத்தைச் செய்கிறார்கள்.

12, கர்மயோகத்தைக் கூடியவன் கர்மத்தின் பயனைவிட்டு நிஷ்டையினாலாகும் ஒழிவைப் பெறுகிறான். கர்மயோகத்தைக் கூடாது கர்மத்தின் செய்கையினால் பயனிலே பற்று வைத்தவனை கட்டப் படுகிறான்.

13. தன் னடக்கங் கொண்டு உடம்பொடு நிற்பவன் ஸகல கர்மங்களையும் மனத்தால் துறந்து ஒன்றுஞ் செய்யவே செயயாதவனாய் செய்விக்காதவனாய் ஒன்பது வாசலுள்ள பட்டணத்திலே ஸுகமாகத் தங்கியிருகின்றான்.

14. கர்த்தாவாதலையும் பொருள்களையும் ஆத்மா உலகத்திற்குப் படைப்பதில்லை ஒருவன் தான் செய்யும் கர்மத்தின் பயனோடு கூடுதலையும் உண்டாக்குவது இல்லை. ஆனால் ஸ்வபாவமென்பது செல்லுகின்றது.

15. எங்கும் நிறைந்த பகவான் ஒருவனுடைய தீவினையை வாங்கிக்கொள்வதில்லை; நல்வினையையும் வாங்கிக் கொள்வது இல்லை. அறிவு அறியாமையினால் மூடுண்டு கிடக்கின்றது; அதனால் பிராணிகள் மயங்குகின்றன.

16. ஆனால் எவர்களுடைய அந்த அஜ்ஞானமானது ஆத்மாவைப் பற்றிய ஞானத்தால் நசிக்கப்பட்டதோ அவர்களுக்கு ஞானம் சூரியன் போல அப்பரம்பொருளை விளங்கும்படி செய்கின்றது.

17. அதிலே புத்தியையுடையவராய் அதுவே ஆத்மாவாகக் கொண்டவராய் அதிலே நிலைத்து நிற்பவராய் அதையே சிறந்த அடைக்கலமாக அடைந்து ஞானத்தால் பாவந்தேயப் பெற்றவர்கள் மீண்டும் ஸம்ஸாரத்தின் கண் வாராமையை அடைகிறார்கள்.

18. கல்வியும் ஒழுக்கமுமுள்ள பிராமணனிடத்திலும் ஆவினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும், நாயை புண்போனிடத்திலும் ஒன்றையே காண்பவர்கள் ஞானிகள்.

19. எவர்களுடைய மனம் ஸமநிலையிலே அமர்ந்து நிற்கின்றதோ அவர்களால் பிறப்பு இங்கேயே ஜயிக்கப்பட்டது. ஏனெனில் ப்ரமம் குற்றமில்லாதது ஸமமாயுள்ளது அதனால் அவர்கள் ப்ரஹ்மத்திலே நிலைத்தவர்கள்,

20. உறுதியான புத்தியை யுடையவனும் மயங்காதவனும் ப்ரஹ்மத்தை அறிந்தவனும் ப்ரஹ்மத்தில் நிலைத்தவன் பிரியமானதை அடைந்து மகிழவும் முடியாது. பிரியமல்லாததை அடைந்து வருந்தவும் முடியாது.

21. அவன் வெளி விஷயங்களிலே மனம் பற்றாதவனும் ஆத்மாவினிடத்துள்ள ஸுகத்தை அடைகிறான். ப்ரஹ்மத்திலே ஸமாதி கூடிய மனத்தினனும்க் குறைவிலா இன்பத்தை அனுபவிக்கிறான்.

22. ஏனெனில் முதலும் முடிவும் உள்ளவையாய் கூட்டுறவுகளாலுண்டாகும் போகங்கள் எவையோ அவை துன்பத்தை யுண்டாக்குவனவேயாம் கௌந்தேய! ஞானி அவற்றுள் மகிழமாட்டான்.

23. சரீரம் நீங்கிப் போவதற்கு முந்தி எவன் இங்கேயே காமம் கோபம் என்றவற்றால் உண்டாகும் விசையைப் பொறுக்கக் கூடுமோ அவன் யோகி அந்த மனிதனே ஸுகீ.

24. எவன் உள்ளே இன்பத்தையும் உள்ளே விளையாட்டையும் உடையவனோ அவ்வாறே எவன் உள்ளே ஒளியையும் உடையவனோ அந்த யோகி ப்ரஹ்மமாக ஆகி ப்ரஹ்மாநந்தத்தை அடைகிறான்.

25. பாவம் தேய்ந்து ஸம்சயமற்று இந்திரியங்களை அடக்கி ஸகலப் பிராணிகளுடைய நன்மையிலே கருத்தூன்றிய ரிஷிகள் ப்ரஹ்மானந்தத்தைப் பெறுகிறார்கள்.

26. காமமும் கோபமும் நீங்கி மனத்தை அடக்கி ஆத்மாவை அறிந்துள்ள, யதிகட்கு ப்ரஹ்மாநந்தம் எங்குமுள்ளது.

27, 28. வெளியிலுள்ள விஷயங்களை வெளியே நிறுத்தி இருபுருவத்திற்கு மிடையே கண்ணையும் நிறுத்தி மூக்கின் வழியாக உள்ளேயும் வெளியிலும் போகும் மூச்சுக்களை ஸமமாகச் செய்து இந்திரியங்கள் மனம் புத்தி என்றவற்றை அடக்கி ஆசையும் அச்சமும் கோபமும் நீங்கி மோக்ஷத்தையே சிறந்த புகலிடமாக வுடையவனும் எப்பொழுதும் பகவானை நினைத்துக் கொண்டிருக்கும் முனிவன் எவனோ அவன் விடுபட்டவனே.

29. யஜ்ஞம் தபஸ் என்றவற்றை அநுபவிப்பவனும் உலகங்களனைத்திற்கும் மேலான கடவுளும் பிராணிகட்கெல்லாம் தோழனுமான என்னை அவன் அறிந்து ஒழிவைப் பெறுகிறான்.



## மூன்றாவது பாகம்

மறுநாள் நான் அர்ஜுனனைப் பார்க்கவில்லை. ஆனால் ஆஞ்சனேய மூர்த்தியின் குருக்களுடைய உபாயங்களைக் கண்டு பிடித்து, அவர் தண்டிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பானென்று எனக்கு நம்பிக்கையுண்டு. மேலும் மரியாதைக்கு மாத்திரம் ஸ்நேஹத்திற்குக் கட்டுப்பட்டு எங்களுடைய ஒத்தாசையை வேண்டிக்கொள்ளுகிறவனென்று காட்டிக்கொள்வதேயல்லாது எங்களால் அவனுக்கு ஆகவேண்டியது யாதுமில்லை.

அமீர் ராஜப்பிரதிநிதியின் பேட்டி கண்டுவிட்டு, தன் ஜாகைக்குத் திரும்பிப்போகும் வேளை நெருங்கினவுடன் எனக்கு பரபரப்பையும் கவலையையும் அடக்க முடியவில்லை. வேடிக்கை பார்க்கும் பாவனையாய் கடைத்தெருவுக்குப் போய் வெடிகுண்டை எறிவதாய் ஏற்பாடு செய்திருந்த வீட்டிற்குச் சற்று தூரத்தில் நின்றேன். எள்ளுப்போட்டால் எள்ளுவிழ இடமில்லாமல் ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். அமீர் பரிவாரத்துடன் அவ்வழியாய் வரும்பொழுது ஜனங்களுக்குள் வெகு தூரத்திலிருந்து கூச்சலும் ஆரவாரமும் கைகொட்டுவதுமுண்டாயிற்று என்ன நடக்குமோ வென்று எனக்கு மனம் துடித்தது.

ஹேல் துரை பண்ணியிருந்த புதிய ஏற்பாடுகள் சரியாய் நடக்கவில்லையோ. இதை நினைக்க நினைக்க எனக்கு பயம் அதிகரித்தது. அதற்குள் ஹேல்ஸ் தானே ஓர் குதிரை பட்டாளப்போலீஸுக்குத் தலைவனாய் நானிருக்குமிடத்தை நோக்கி வரக்கண்டேன்; என் கவலை சற்றுத் தணிந்தது. நானிருக்கும் வீதியில் அந்தப் பரிவாரங்கள் வருவார்களென்று எல்லோரும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கையில், திடீரென்று ஒருவர்க்கும் தெரியாமல் ஹேல்ஸ் திரும்பி வேறு தெருவின் வழியாய் இந்தப் பரிவாரத்தை அழைத்துப்போனான். உடனே என்னைச் சுற்றியிருந்த ஜனங்களெல்லாம் அந்தத் தெருவில் இடம் பிடித்துக்கொள்வதற்காக ஒருவர்மேல் ஒருவர் விழுந்து தலைகால்த் தெரியாமல் ஓடினார்கள். சற்று நேரத்திற்குள் நானிருந்த விடத்தில் ஒருவருமில்லை,

ஆஞ்சனேய மூர்த்தியின் விக்ரஹத்தை வைத்திருக்கும் கட்டடத்திலுள்ள சதியாலோசனைக்காரர் தாங்கள் எதிர்பாராத வண்ணம் ஊர்வலம் மாறினதைக் கண்டு என்ன செய்யப்போகிறார்களென்று வெகு ஜாக்ரதையாய் அந்த வீட்டின் மேல் மாடியையே கவனித்துக்கொண்டிருந்தேன். உடனே அங்கே யாரோ ஒருவன் முகத்தை நன்றாய் மூடிக்கொண்டு, குனிந்து, ஏதோ ஒன்றைக் கொளுத்தி அந்த வீட்டிற்கடியில் வைத்து, மின்னலைப்போல் மறைந்தான். மேல் மாடியிலுள்ள ஜன்னல்களிலிருந்து பலர் காலோடு தலை மூடிக்கொண்டு வரவர மறைந்து கொண்டிருக்கும் ஊர்வலத்தைப்பார்த்து ஆத்திரமாய் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஓர் பயங்கரமான சத்தம் உண்டாயிற்று. ஆயினும் பீரங்கிகள் ஒரே காலத்தில் சுடப்பட்டது போல் இருந்தது. அந்தப் பெரிய கட்டடம் தலைமட்டமாயிற்று. கல்லும் மரமும் இரும்பும் சுண்ணாம்பும், நாலுபக்கங்களிலும் வெகு தூரம் பரவிவிழுந்தன. எல்லாம் தூள் தூளாயிற்று. மறு நாள் ஸமாசாரப் பத்திரிகைகளில் ஊர்வலத்தின் சிறப்பை வர்ணிக்கும்பொழுது, அமீர் கடைத்தெருவின் வழியாய்ப் போய்க் கொண்டிருப்பதை அவரைப் பார்ப்பதற்காக அங்கே ஒரு பழைய மாடி வீட்டில் எண்ணிறைந்த ஜனங்கள் கூடினபடியால், அந்த பாரம் தாங்காமல் இந்தக்கட்டிடம் இடிந்து விழுந்தது; அதனால் பலர் காயப்பட்டு இறந்தார்களென்று எழுதப்பட்டிருந்தது.

ஆப்கனிஸ்தான் அரசன் ராஜப்பிரதிநிதியினிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு தன் பரிவாரத்துடன் காபூருக்குப் போனார். நானும் ஹேல் துரையும் இந்த விஷயத்தில் வெகு திறமையாய் நடந்து கொண்டதற்காக மேலதிகாரிகள் எங்களை மிகவும் கொண்டாடி நற்சாக்ஷிப் பத்திரங்களைக் கொடுத்தார்கள். அர்ஜுனனுக்கோ 2000 ரூபாய் வெகுமதி யளித்தார்கள்; அவனுடைய ஊழியம் முடிந்து பென்ஷன் வாங்கிக் கொள்ளும் ஸமயம் வரும்பொழுது நியாயமாய்க் கிடைக்கவேண்டிய தொகைக்கு இருமடங்கு கொடுப்பதாய் வாக்களித்தார்கள்.



சில காலஞ்சென்ற பிறகு ஒருநாட் காலையில் அர்ஜுனன் என் விடுதிக்கு வந்து ஏதேதோ வம்பு பேசிக் கொண்டிருந்துவிட்டு, திடீரென்று ஐயா! தங்களுடைய இல்லாளான என் உடன்பிறந்தாளுக்கு தாங்கள் கனத்த நகை இதுவரை ஒன்றும் செய்து போடாமலிருப்பது அழகல்ல. இதோ இந்தச் சில்லரைச் சாமானை வைத்துக் கொண்டு ஏதாவது செய்ய ஆரம்பியுங்களென்று ஓர் வெள்ளிச் சிமிழை என் மேஜையின்மேல் வைத்துவிட்டு, 'காந்தார தேசத்திலிருந்து சில குதிரைகள் வந்திருக்கின்றனவாம். பார்த்து வருகிறேனென்று சடுதியில் வெளியில் போனான். நான் அந்தச் சிமிழைத் திறந்து பார்க்கையில் ஒரே காலத்தில் இரண்டு சூர்யன்கள் பிரகாசித்தது போல் ஓர் ஒளி உண்டாய் என் கண் கூசிற்று. சற்று நேரம் கழித்து அது இன்னதென்றறிந்தான். காசி க்ஷேத்திரத்திலிருந்து ஏதோ ஒரு ராஜ்ய காரியமாய் 1500 மைலுக்கப்பால் கொண்டுபோய் ஒரு துருக்கர்களுடைய நகரத்தில் வைக்கப்பட்ட ஆஞ்சனேய மூர்த்தியின் மஹா பரிசுத்தமான விக்ரஹத்திற்குக் கண்ணாயிருந்த இரண்டு ரத்னங்களென்றறிந்தேன்.

# கதை VI.

## சாஸ்திரி

அடுத்த சில மாஸங்கள் வரையில் பெரிய செட்டியாருக்கு வேலை தலைக்குமேலே யிருந்தது. சாமியாரைப் பற்றி நினைப்பதற்குக் கூட பொழுதில்லை. வியாபார முறையில் அவருடைய தலையில் ஒரு பேரிடி விழுந்தது. தென்னாப்பிரிக்காவில் அவருடைய தங்கக் களஞ்சியமும் வயிரக் குதிர்களும் ஒரே அடியாய் மண்ணைவாரிப் போட்டுக்கொண்டு போய்விடுமென்று தோன்றிற்று.

செட்டியார் கொஞ்சம் தங்க வியாபாரமும் கொஞ்சம் நிலம் வாங்கி விற்பது முண்டு. ஆனால் அவருடைய பெருத்த இனங்களும் லக்ஷக் கணக்கான புள்ளிகளும் வயிரச் சுரங்கங்களிலும் கம்பெனிகளிலும் அடங்கி யிருந்தன. அவைகளைத் தவிர அவருக்கு வேறொன்றும் தெரியாது. வேறொரு லோக மிருப்பதாயும் எண்ணமில்லை. வைரம் வியாபாரம் லாபம் வட்டி கூட்டு கம்பெனி, இதே பேச்சு. இதே ஸ்வப்னம். ஒரு தடவை ஒரு ஸம்ஸ்கிருத பண்டிதன் அவரிடத்தில் ஏதோ வெகுமானம் பெற விரும்பி, அவரைப் பற்றி ஓர் சுலோகத்தைச் செய்து படித்தான். அதில் அவரை ஸமுத்திரத்திற்கு ஒப்பிட்டான். செட்டியார் ஏதோ அகஸ்மாத்தாய் அதை கவனித்து, அதற்குக் காரணமென்னவென்று கேட்க அந்தப் பண்டிதன் "ஸமுத்திரத்தில் விலையற்ற ரத்தினங்கள் ஆழ்ந்து கிடப்பதுபோல் தங்களிடத்தில் உத்தம குணங்கள் ஒன்று சேர்ந்து, விளங்குகின்றன" வென்றான். உடனே செட்டியார் அவனுக்கு 100 ரூபாய் இனாம் கொடுத்தார். அது பெரிய ஆச்சர்யம். அவருக்கோ படிப்பில்லை. ஸம்ஸ்கிருதத்தில்



விசேஷ பயிற்சியுமில்லை. இந்தச் சுலோகத்தைக் கண்டு மகிழ்ந்து ஏன் இப்படிப் பெரிய குடை கொடுத்தாரென்று சின்னவர் கேட்க செட்டியார் கோபம் கொண்டு, அடே ராமா! நீ இவ்வளவு முழுமூடமென்று நான் நினைக்கவில்லை. அந்தப் பார்ப்பானுக்குத் தெரியாமலேயே அவனிடத்திலிருந்து ஒரு பெரிய லாபத்தை அடித்துக் கொண்டுவிட்டேன். இதை யெல்லாம் கவனிப்பதற்கு உனக்கு மூளை எங்கே? அவன் சொன்ன ச்லோகத்தில் என்னை ஸமுத்திரத்திற்கு ஒப்பிட்டான். அப்பொழுது ஸமுத்திரத்தில் ஆழ்ந்து கிடக்கும் ரத்னங்களுக்கு எல்லை யில்லையென்றும் விலை மதிக்க முடியாதென்றும் சொன்னான். இதுவரையிலும் எனக்கு அது தோன்றவில்லை. ஒரு நிமிஷங்கூட தாமதிக்காமல் நான்கு மஹா ஸமுத்திரங்களிலுமுள்ள ரத்தினங்களைக் கண்டுபிடித் தெடுத்து, வியாபாரஞ்செய்வதற்கு ஓர் மஹா ஸமுத்திரக் கம்பெனி லிமிட்டெட் ஏற்படுத்த வேண்டு"மென்றார். ரத்தினங்களென்றால் அவருக்கு அவ்வளவு பயித்தியம்.

ஒருநாள் சமாசாரப் பத்திரிகையில் அடியிற்கண்டபடி எழுதியிருந்தது;

மேற்கு தேசத்து பிருகிருதி சாஸ்திர நிபுணர்கள் பஞ்ச பூதங்களையும் கடைந்தெடுத்து, அவைகளின் இயல்பையும் குணங்களையும் தோஷங்களையும் சக்திகளையும் அவைகளை ஒன்றோடொன்று கலப்பதாலும் சேர்ப்பதாலு முண்டாகும் பிரயோஜனங்களையும் கைத்தொழில் வியாபாரம் வியவசாயம் ஸுகாதாரம் முதலிய முறைகளில் அவைகளைச்செலுத்தி, செலவைக் குறைத்து, லாபத்தைப் பெருக்கி, மனிதனுடைய கைவேலையை ஒழித்து, யந்திர சக்திகளையே நமக்கு அடிமைகளாக்கி, மனிதவர்க்கத்தின் வாழ்வையும் நோக்கங்களையும் ஸுக துக்க மதிப்பையும் முற்றிலும் மாற்றிவிட்டார்கள். கடவுளின் ஸிருஷ்டியில் காணப்படும் பொருள்களையும் தோற்றங்களையும் மனுஷ்யசக்தியால் உண்டுபண்ணி வருகிறார்கள். மனிதன் கடவுளுடைய உருவத்தைப் போல் படைக்கப்பட்டிருக்கிறானென்று கிருஸ்துவ வேத புஸ்தகங்களிலும் ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்றே. இரண்டிற்கும் பேதமில்லை யென்று ஹிந்து வேத புஸ்தகங்

களிலும் சொல்லியிருப்பது அனுபவத்தில் உண்மையாக நிரூபிக்கப்படுகிறது. இதற்கடையாளமாய் சில காலத்திற்கு முன் நேர்ந்த ஒரு ஸம்பவத்தைக் குறிப்பிடுவோம். ரத்தினங்கள் பூமியிலுள்ள சுரங்கங்களிலிருந்தும் ஆற்று மணல்களிலிருந்தும் எடுக்கப்படுகின்றன வென்று இதுவரையில் கேட்டிருக்கிறோம். ஆனால் பிருகிருதி தத்வ சாஸ்திரங்களில் ஒன்றான ரஸாயன சாஸ்திர நிபுணர்கள் எவ்விதமான ரத்னங்களையும் தாங்களே செய்யும் வழியைக் கண்டுபிடித் திருக்கிறார்களென்றும் தெரியவருகிறது. இதனால் வயிர வியாபாரத்திற்கு நேரும் அபாரமான லாபநஷ்டத்தைப் பற்றி நாம் விவரிக்க வேண்டுவதில்லை".

மேற்கண்ட வியாஸத்தைச் சின்னச் செட்டியார் கார்யதரிசியின் முறையில் படித்து அதைத் தன் முதலாளியிடத்தில் சொன்னால் தன் மேல் அந்தக் கோபம் பாயுமென்று அஞ்சி, அதை மறைத்துவிட்டார். அன்று சாயங்காலம் செட்டியார் வழக்கப்படி தன் கிளப்பிற்குப் போய்க்கொண்டிருக்கையில் எதிரில் அவருடைய நண்பரான கனம் கங்காதர சாஸ்திரியாரின் வண்டி வருவதைக் கண்டு நின்றார். இருவரும் வண்டியைவிட்டு இறங்கி, வந்தனஞ் செய்து க்ஷேமம் விசாரித்துக் கொண்டபிறகு சாஸ்திரீ பரபரப்புடன் "என்ன நவகோடி 'நாராயணன் செட்டியார்வாள்! இனிமேல் என்ன செய்யப் போகிறீர்கள். உங்களைப் பார்க்கவேண்டுமென்றே தேடிக்கொண்டிருந்தேன். ராமன் செட்டியார்வாள்! நமஸ்காரம் வயிரங்களுக்கு ஜாதகரீதியாய்ப் போதாதென்று நினைக்கிறேன். இனிமேல் நீங்கள் முன் போல் ஓங்கமாட்டீர்கள். வாயையும் கையையும் பொத்திக்கொண்டு வாலை சுருட்டி மடியில் வைத்துக்கொண்டு ஸாது பிள்ளையைப்போல் அடக்கம் ஒடுக்கமாயிருக்கவேண்டும். இதுவரையிலும் குபேரன்களாயும் லக்ஷ்மீ புத்திரன்களாயும் ஊரைக் கொள்ளையடித்து, எல்லோருக்கும் மரத்தாலி கட்டியடித்து, கண்ணும் கண்ணீருமாய் பறக்கவிட்ட உங்களுக்கு இனி கொட்டம் அடங்கிற்று? கடையைக் கட்டவேண்டியதுதான். ஸதீந்திர மோஹன்போஸ் என்ற லோகப் பிரஸித்தியுள்ள ரஸாயன சாஸ்திர நிபுணர் வயிரங்களைச் செய்வதற்குப் புதி



தாய்க் கண்டுபிடித்திருக்கும் வழியைப்பற்றிக் கேள்விப் பட்டீர்களா? உங்களைப் போன்ற வயிரச் சாமிகளெல்லாம் நடுவெயிலில் போட்ட புழுக்களைப்போல் துடிக்கவேண்டியதுதானென்றார்.

கங்காதர சாஸ்திரியார் ஸம்ஸ்கிருதப் படிப்பில் பெயர்போனவரல்ல. காவ்ய நாடகாலங்கார தர்க்கவியாகரண வேதாந்த மீமாம்ஸா சாஸ்திரங்களில் திறமைவாய்ந்து, அதனால் சாஸ்திரியென்று பெயர் பெற்றவரல்ல. மேற்றிசைப் படிப்பில் தேர்ந்தவர். ரஸாயன சாஸ்திரத்திலும் லோஹாதி சாஸ்திரத்திலும் எம். ஏ. பரீக்ஷை கொடுத்தவர். ஐரோப்பா அமெரிக்கா முதலிய விடங்களிலுள்ள சாஸ்திர கலாசாலைகளாலும் சங்கங்களாலும் கௌரவப்பட்டம் கொடுக்கப்பட்டவர். செட்டியாருக்கு பால்யம் முதல் நண்பர். இருவரும் ஒரே ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். தயை தாக்ஷிண்யமின்றி எப்பொழுதும் எவ்விடத்திலும் எதையும் பெருத்த குரலுடன் அழுத்தமாய்ப் பேசுகிறவர்.

செட்டியார் அவருடைய வாயைக் கட்டுவது பிரயோஜனமில்லையென்று தெரிந்தவராதலால் வாயை மூடிக்கொண்டு பிராண சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார். பெரிய பேர்வழியென்று எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கும் சாஸ்திரியார் இப்படி நடுத்தெருவில் எல்லோரும் கேட்கும்படி இடிவிழுந்தது போன்ற சமாசாரத்தை ஆதாரத்துடனோ ஆதாரமின்றியோ கேலியாய்ச் சொல்வது முற்றிலும் மதியீனம். வியாபாரத் தோரணையில் எக்கச்சக்கமாய் ஒரு வார்த்தை அசந்து மறந்து சொல்லிவிட்டாலும் வியாபார ஷேர்கள் (பங்குகள்) ஒரு நிமிஷத்தில் ஏறும் இறங்கும். ஆகையால் அவர் சாஸ்திரியின் காதில் ரஹஸ்யமாய், "ஒய் ஒய்! மெள்ள மெள்ள, இப்படிக் காட்டுக் கத்தலாய்க் கத்தி எங்களைக் கழுத்தறுக்கிறீரே! நீர் பேசுவது எட்டுமைலுக்குக் கேட்குமே. தனலக்ஷ்மியையும், நவநிதிகளையும் தூஷிக்கலாமா? உம்முடைய மேற்றிசைப் படிப்பையும் நாஸ்திக புத்தியையும் நெருப்பை வைத்துக் கொளுத்தும். பாபமில்லை. புண்யமுமில்லை. இகமில்லை. பரமில்லை, சாமியில்லை, பூதமில்லை. எப்போதும் உண்கிறதும் உறங்குகிறதுமே தொழில்.

உங்களைப் போன்றவர்கள் தலைப்பட்டுத் தானே ஊர் குட்டிச் சுவராய்ப் போகிறது. கலியின் கொடுமை யென்றார்.

சாஸ்திரியார் கைகொட்டிச் சிறித்து, "பலே! செட்டியார்! கோபித்துக் கொள்ளாதேயும். எது எப்படிக் கேட்டாலும் உமது வரையில் வராது. நமது கிளப்பிற்குப் போவோம் வாரும். இதைப்பற்றின சங்கதிகளை விஸ்தாரமாய்ச் சொல்லுகிறேன். வெகு ஆச்சர்யமான வேலை. அடே அப்பா! மூளை சிதறுகிறது. இனி மேல் ரத்தினங்கள் பைசாவிற்கு நாலாய் தெருவில் சந்தி சிரிக்கப் போகின்றன. தென்னாப்பிரிக்கா ஆஸ்திரேலியா முதலிய அளகாபுரிகள் கடைத் தட்டியை விடவேண்டியதுதா"னென்றார்.

அவர் தன் கையைப் பிடித்து கரகரவென்று இழுத்துக் கொண்டு போனதும் காது செவிடாகும்படி கூவினதும் செட்டியாருக்குப் பிடிக்கவேயில்லை. இருந்தாலும் வேறுவழியில்லை. அவருடைய முகத்தில் தோன்றின வருத்தத்தையும் அதைச் சொல்லமுடியாமல் தவிப்பதையும் பார்த்து, சாஸ்திரிகள் சற்று மெதுவாய் பேச ஆரம்பித்தார். சாந்தி நகர ஸர்வ கலாசாலையில் ரஸாயன உபாத்தியாயரான போஸ் சாஸ்திரி வெகு ஸமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார். நான் பார்த்ததில்லை. கண்டுபிடித்ததாகச் சொல்லுகிறான். வயிரங்களை செய்யும் முறையை பிரத்யக்ஷமாய்க் காட்டுகிறானாம். பலர் அதைப் பரீக்ஷித்துப் பார்த்து, பிரமித்து ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம். வயிரங்களைப்பற்றின ரஸாயன வித்தையில் இப்பொழுது அவருக்கு மிஞ்சினவரில்லை யென்பது நிஜமே" யென்றார்.

செட்டியார் அலக்ஷ்யமாய்ச் சிறித்துக் கையை உதறி "இந்தக் கதைகளை யெல்லாம் நான் வெகுவாய்க் கேட்டிருக்கிறேன். போதும் போதும். வயிரமாவது பண்ணவாவது. மட்டச் சரக்கு குந்துமணி யவ்வளவு பருமன். வேலைக்குக் கொஞ்சமேனும் உதவாது. சுண்டக்காய் கால்பணம் சுமை கூலி முக்கால் பணமென்பது போல் அதைச்செய்யும் முறையில் பிரமாதமான சிரமும் வீண் சிலவுந்தான் மிச்சம்; அப்படியும் கண்ணால் பார்க்கச் சகிக்காது



நானே பழைய பெருச்சாளி. இதற்கெல்லாம் அசைகிற பேர் வழியல்ல. வேறு ஏதாவது நம்பக்கூடிய சங்கதியைச் சொல்லு மென்றார்.

உடனே சாஸ்திரியார் தன் சட்டைப்பையி லிருந்து ஒரு பட்டை தீர்த்த சிறு வயிரத்தை எடுத்துக் காட்டி, "இதின் நீரோட்டம் எப்படி? முதல்தரமல்லவா? நான் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே இது செய்யப்பட்டது. மோசமில்லை. சிலவோ ஸ்வல்ப" மென்றார்.

செட்டியார் அதை வாங்கி தன் சிறு பூதக்கண்ணாடியின் வழியாய் அதை நன்றாய்ப்பரிசோதித்துப் பார்த்து, அது முதல்தரவயிர மென்பதை மறுக்க முடியவில்லை. எவ்விதத்திலும் குற்றஞ் சொல்ல இடமில்லை. அப்படியும் அவநம்பிக்கையுடன் நீர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே செய்யப்பட்டதோ, எங்கே சுவாமீ! சாந்திபுர கலா சாலையிலோ" வென்றார்.

சாஸ்திரிகள் "என்ன புரளியா? இங்கே இந்த ஊரில் நேற்று ராத்திரி நானும் டாக்டர் குஞ்சு நாயருமிருந்தோம். சென்னை தத்வ சாஸ்திர சங்கத்தின் அக்ராஸனாதிபதி நாளைக்கு ஓர் அவசரக் கூட்டத்தை ஏற்படுத்தி இதைக் காட்டப் போகிறாரா" மென்றார்.

செட்டியார் பெரு மூச்சு விட்டு, "சி, சி, இந்தப் பயித்தியத்தை இப்பொழுதே மண்டையில் அடிக்க வேண்டும். நகத்தால் கிள்ளி யெறியும் செடியைப் பின்பு கோடாலியால் வெட்டுவது போல் இந்திப்புரளி பரவுவதற்கு இடங் கொடுக்கக் கூடாது. இதிலெல்லாம் தாக்ஷிண்யம் பார்ப்பது பிசகு. பெரிய கார்யங்களையும் வியவஹாரங்களையும் இந்த மாதிரி கேலி செய்வதும் கெடுக்கப் பார்ப்பதும் பெரிய குற்றமாகும். அதை நாம் தகுந்தபடி சிக்ஷிக்க வேண்டு" மென்றார்.

சாஸ்திரிகள் "அதென்னய்யா? சிக்ஷிக்கிறதா? நாமென்ன சர்க்காரா? அவனென்ன நமது வேலைக்காரனா?"

செட்டியார் சற்று அச்சத்துடன் அவரை உற்றுப் பார்த்து, "அந்தப் பயல் எங்கே பதுங்கிக் கொண்டிருக்கிறான். அவன் யாரா

வது ஆஸாமியை அனுப்பி யிருக்கிருனே! நேரில் வரத் துணிய மாட்டானே!”

சாஸ்திரி “ஆஸாமியா! இங்கே நேரில் வந்திருக்கிருனென்று சொல்லவில்லையா? என் வீட்டில் ஜாகை வைத்துக் கொண்டிருக்கிருன். போதுமா? இன்னும் என்ன வேண்டும். வயிரங்களின் ரஸாயன சாஸ்திரத்தில் சிரத்தையுள்ளவர்களுக்கு மறுபடியும் இந்த முறையைச் செய்து காட்ட ஸம்மதித்திருக்கிருன். இன்று ராத்திரி ராமதாஸ் ஸௌகார் வீட்டில் நாங்கள் சிலபேர் கூடுவதாய் ஏற்பாடு செய்திருக்கிறோம். நீரும் வரலாமே!”

செட்டியார் “வருகிறதா? வராமல் எப்படி இருக்க முடியும். மற்றவேலையெல்லாம் இதற்கு அப்புறமே. நான் சொல்வது என்ன தெரியுமா சாஸ்திரிகளே இதோ பாரும் இது ஸாமான்ய விஷயமல்ல. பெரிய இனங்களுக்கு இடையூரா யிருக்கும். முன் பின் யோசிக்காமல் ஒன்றையும் செய்ய வேண்டாம். அசட்டுப் பட்டம் கட்டிக் கொள்ளாதேயும். இதை நாம் சரியாய் கவனித்துப் பங்கிடு செய்யாவிட்டால் நமது ஷேர்கள் (பங்குகள்) ஏறினாலும் ஏறும், இறங்கினாலும் இறங்கும்.” செட்டியார் பங்குகளென்று சொன்ன மாதிரியைப் பார்த்தால் ஸர்வலோக நாயகனான ஈச்வரனே நேரில் வந்தால் எவ்வளவு பயபக்திபுடன் அவருக்கு வந்தனஞ் செய்வாரோ, அப்படி இருந்தது. அவருடைய மதத்தில் அந்த வார்த்தைப் பிரணவத்தைப் போல் யாவற்றையும் அடக்கிக் கொண்டிருந்தது.

சாஸ்திரிகள் “ஏன் அப்படி யிருந்தாலுமிருக்கும். ஆனால் எனக்கு அந்த விஷயத்தில் சாஸ்திரரீதியாய் கவலையே தவிர உம்மைப் போல் காசு பணம் போகுமே என்ற தாபத்ரயம் இல்லவே யில்லை” என்ருர்.

செட்டியார் “நான் சொல்வது இன்னும் உமக்கு மனதில் படவில்லை. உமது தலையில் இறங்கி யிருக்கும் பாரம் இவ்வளவென்று நீர் கொஞ்சமேனும் அறியவில்லையே! லோகத்திலுள்ள பெருத்த வியாபாரம் முழுவதும் உமது புத்திசாலித்தனத்தைப் பொறுத்திருக்கிறது. இந்த ரஸாயனப் பரீக்ஷைகள் நடக்கும் பொழுது



கண்ட கண்ட பேர்களை உள்ளே விடக்கூடாது. பெருத்த தொழில் செய்யும் புள்ளிகளையும் முதலாளிகளையும் மாத்திரம் அழைக்க வேண்டும். சாஸ்திர நிபுணர்கள் வந்தால் வரட்டும். நான் இன்று ஓரிடத்திற்கு விருந்திற்குப் போக வேண்டும். ஆனால் ஏதோ தேஹ அசௌக்கியமென்று சொல்லியனுப்பி விட்டு கட்டாயம் வருகிறேன். காஜாமியா ராவுத்தரையும் காதர்மைதீன் மரக்காயரையும் ஜேதுமால் தயாராமையும் அவச்யம் வரும்படி சொல்லியனுப்ப வேண்டும். நீங்களெல்லாம் சாஸ்திரக் கக்ஷிக்கு பிரதிநிதிகளைப் போல் நாங்களும் பெருத்த வியாபார முறைக்கு பிரதிநிதிகளாவோம். ஒன்று மாத்திரம் சொல்லுகிறேன், மறக்காதேயும். இதைப்பற்றி இனிமேல் பேச்சு மூச்சு விடக்கூடாது. தெரியுமா? இன்னும் ஒரு சங்கதி. அந்த ரஸாயன நிபுணனை தான் கண்டு பிடித்ததாகச் சொல்லும் அபூர்வமான விஷயத்தை ஊரெங்கும் தம்பட்டம் போடச் சொல்ல வேண்டாம். ஜாக்கிரதை” யென்ருர்.

சாஸ்திரிகள் “நீர் சொல்வது சரிதான். அவரும் உம்மைப் போலவே எங்களைக் கேட்டுக் கொண்டார். ஆகையால் நாங்கள் அதை தேவரஹஸ்மாய் வைத்துக் கொண்டிருக்கிருே” மென்ருர்.

உடனே செட்டியாருக்கு தன்னைமறந்து கோபம் பொங்கி வழிந்து, “ஓகோ! ஆகையினாலே தான் நீர் நார்ச்சந்தியில் என்னைக் கண்டவுடன் இதை ஏலம் போடுவது போல் கூவினீரோ” வென்ருர்.

அப்படியே இரண்டு செட்டியார்களும் அன்று ராத்திரி குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேர்ந்தார்கள். அந்த ரஸாயன சாஸ்திரீ செய்வதெல்லாம் பலிக்காமலிருந்தால் மீனாக்ஷியம்மனுக்கு அபிஷேகமும் பூஜையும் செய்விப்பதாய்ப் பிரார்த்தித்துக்கொண்டே போனர்.

வடக்கிலிருந்து வந்த ரஸாயன பண்டிதன் பார்வைக்கு வெகு கம்பீரமானவன். வயது முதிர்ந்து, அங்கந்தளர்ந்து, ஓயாமல் ரஸாயன பரீக்ஷைகள் செய்ததால் முதுகுவளைந்து, கண் மங்கி, தோலும் இலும்புமாய்க்காணப்பட்டான். வயது அவ்வளவு அதிகமாகாவிடினும் தலைமயிர் பாவட்டம் பூவைப்போல் வெளுத்திருந்தது. உத்ஸாஹத்துடன் பேசும் பொழுதெல்லாம் அவனுடை

கூனல் நிமிர்ந்து, பஞ்சடைந்த கண்கள் நெருப்புப் பொறிகளைப் போல் ஜ்வலித்தன. அங்கிருந்த சாஸ்திர நிபுணர்களை முன்பழக்கத்தால் பிரியத்துடன் உபசரித்தான். வியாபாரிகளைக் கண்டு சற்று தலையசைத்தான். இந்துஸ்தானியும் தெலுங்கும் கலந்த ஓர் விசித்திரமான பாஷையில் பேசினான். வார்த்தைகள் கிடைக்காத பொழுது அங்கசேஷ்டைகளாலும் பார்வையாலும் முகஜாடையாலும்தன் எண்ணத்தைத்தெரிவித்தார். "கனவான்களே! வீண்காலம் போக்கவேண்டாம். ஏதோ எனக்குத்தெரிந்தவரையில் உங்களுக்குத் திருப்திகரமாய் சில ரத்தினப்பரீக்ஷைகளை செய்து காட்டலாமென்றெண்ணுகிறேன்" னென்றான்.

பிறகு அவன் தன் யந்திரங்களை எடுத்து, ஒழுங்குப்படுத்தி, "நம்பள் வளி என்னா தெரியுமா? வயிரம் இருக்கானே அவன் யார்? சும்மா கரி கிடக்கிறான். இல்லை. அவனே நம்பள் வளியைப்பிடிச்சுக்கொண்டு அந்தக்கரிக்குத்தயார் செய்து, பளிங்கு இருக்கிறானில்லை. அவன் போல் பண்ணி வுடறான். இதே கம்மத் வேறு கூச் பீரை ஸாமி மாலும் தெரியுமா" வென்றான்.

பிறகு அங்கிருந்த சாஸ்திரநிபுணர்கள் அவனுடைய யந்திரங்களை வெகு ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்துப் பார்த்தார்கள். யாதொரு கபடமுமில்லையென்று சொன்னவுடன் அவன் சில சாமான்களை அவைகளில் போட்டு எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே ஒளி களவில்லாமல் வேலைசெய்ய ஆரம்பித்தான். மூன்று தனித்தனி முறைகள் உண்டென்று ஒவ்வொன்றின் வழியாய் ஒரேகாலத்தில் இரண்டு வயிரங்களை செய்து காட்டினான். தன் முறையில் உள்ள விசேஷம் என்ன வென்றால் அதிவேகமாய்ச் செய்வதும் சிலவு மிக ஸ்வல்பமாய்ப் பிடிப்பதுமே. முக்கால் மணியில் நடைமுதல் விலக்கி, 500 ரூபாய் பெருமான வயிரத்தைச் செய்வது தனக்கு சிரமமே யில்லை. இவ்வளவும் இதோயிருக்கும் நாலைந்து குப்பிகளையும் கிண்ணங்களையும் வைத்துக் கொண்டே செய்கிறேன்; பாருங்கள்."

சரக்குகள் பொங்கிக் கொதித்துப் புகைந்தன. சாஸ்திரி



அவைகளைக் கிளரிக் கொண்டேயிருந்தான். காக்கையின் இறகுகளைப்பொசுக்கின நாற்றம் அவ்விட மெங்கும் பரவிற்று. அங்கிருந்த தத்வசாஸ்திரிகள் யாவரும் வாயில் ஈபூந்தது தெரியாமல் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து, கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பண்டிதன் சொன்னபடி முக்கால் மணிக்குள் அவன் கிண்ணங்களைக்கவிர்த்தான். அவைகளிலிருந்த புழுதியையும் தூளையும் தள்ளிவிட்டு, ஒவ்வொன்றிலிருந்து ஒரு சிறிய வெளுத்த கல்லையெடுத்தான். "ஸாமீ! என்ன ஈவன் அல்லாம் நல்ல வயிரம் இதில் தகா கூச்பீ இல்லை. இவனுக்கு சிலவு ஏக் ரூபாய் சார் அணா. அவ்வளவுதான். இந்த இரண்டு கல்லுங்கள் சார்ஜ் மாலும். ஏக் ரூபாய் தோ அணே. இந்த இரண்டு கல்லுங்கள் தேகோ அச்சிக்கல்லு, இவன் விலை கிபா பத்து அணே நிஜம் ஸத் பாத்!! அவைகளை எல்லோரும் பார்க்கும் படி கையில் கொடுத்தான். அவை இழைத்து, பட்டை தீர்க்கப்படாதிருந்ததால் இவ்வளவு விலை உள்ளவையென்று மதிக்கமுடியவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம். அங்கிருந்த நிபுணர்கள் யாவரும் அந்த முறையை வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பண்டிதன் தன் கையில் ஏதாவது வயிரங்களைக் கொண்டு வந்து அவைகளில் மறைத்து வைக்கவில்லை. மறுபடி பாத்திரங்களை எடுக்கும் பொழுதும் கொட்டும் பொழுதும் அவைகளிலிருந்து கல்லுகளை எடுக்கும் பொழுதும் கண்குத்திப்பாம்புபோல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கிருந்த சாஸ்திரிகளுக்கும் வியாபாரிகளும் பேருக் கொன்றாய் அவைகளைக்கொடுத்து "ஸாமீ! நீங்கள் அல்லாம் இவனைத்தேய்த்து வெட்டிப்பார்த்து, நமக்கி ரிபோர்ட் செய்யுங்கோ. நாளைக்கு மேலே வரானில்லை. அன்றைக்கி இங்கே நான் அல்லாம் ஸமாஜ் செய்வோ" மென்றான்.

செட்டியார் அவனைக் கொளுத்திவிடுவது போல பார்த்தார். அவருக்கு அப்பொழுதிருந்த ஆத்திரம் இவ்வளவென்று சொல்லி முடியாது. "பண்டிதரே! நீர் இந்த முறையில் வேலை செய்து பலித்ததானால் லக்ஷக்கணக்கான சரக்கு

களும் பெருத்த வியாபாரங்களும் அடியோடே தலைந்து போகு மென்று உமக்குத் தெரியுமா" வென்று நியாயஸ்தலத்தில் ஜட்ஜ் குற்றவாளியைப் பார்த்துக் கேட்பதுபோல் அதிகார தோரணை யுடன் கேட்டார்.

பண்டிதன் கையை விரித்து, "எனக்கென்ன ஸாமீ! நாம் சாவுகார் இல்லை. நம்பள்கி பைசா இல்லை. வேபாரம் இல்லை. நம் படிப்பு நம்கி ஆண்டவன் புத்தி கொடுத்திருக்கிறான். நாம் வேலை செய்கிறான். ஜமீன் பணம் நமக்கி வேண்டா" மென்றான்.

செட்டியார் திடுக்கிட்டு, "என்ன அநியாயம். இது அடுக்குமா? உனக்குக் கடவுள் தான் கூலி கொடுக்க வேண்டும். பிறருடைய கஷ்ட ஸுகங்களைக் கொஞ்சமேனும் உணராத இந்தக் கருங்கல்லைப் போல ஞானிதுவரையிலும் பார்த்ததில்லை" யென்றார்.

தத்வ சாஸ்திரிகள் ஸந்தோஷம் தாங்காமல் கேலியாய்ப் பேச ஆரம்பித்தார்கள். முதலாளிகளோ கருடனைக்கண்ட பாம்புபோல் பதுங்கி விட்டார்கள். இது நிஜமாயிருந்தால் வியாபாரம் திடீரென்று தரைமட்டமாகப் படுத்து விடுமே; அதை நினைக்கும் பொழுது கண் சுழன்றது. குடி கெட்டுப் போயிற்று.

செட்டியார் பண்டிதனுடன் சற்று தூரம் சென்றார். மெதுவாய் ஜாடையாய் அவன் கண்டு பிடித்த முறையை வெளிக்குக் கொண்டு வராமல் அடக்குவதற்கு என்ன துகை கேட்பானென்று ஆழம் பார்த்தார். அவனோ கல்லுப்பிள்ளையாராய் அசைத்துத் திருப்ப முடியவில்லை. "ஓய்! செட்டியார்! அந்தப் பேச் பேசாதேயும். உமக்கி மூளை இல்லை. நாம்பேரம் செய்கிறானில்லை. இதி படிப்பு சாஸ்திரம் தெரியுமா. மனிதன் நல்லா இருக்கவேணும். அல்லாம் ஸுகம் தின்கவேணும். அதற்கி இதை அல்லாருக்கும் நாம் சொல்லப் போகிறான். பணம் நமக்கி அக்கரையில்லை. பணம் ஸம்பாரிக்க நமக்கி வஹத் (பொழுது) இருக்கிறானில்லை" யென்றான்.

செட்டியார் "என்ன மடத்தனம். அநியாயமாய் மூளையையும் வாழ் நாளையும் மண்ணாயடித்துக் கொள்ளுகிறான். லக்ஷணமாய்



பெருத்த துகையை கையில் அமுக்கிக் கொண்டு, ஏதாவது தொழில் செய்து மானமாய்ப்பிழைக்கக் கூடாதா?" வென்றார்.

வெறும் கரியிலிருந்து எப்படியாவது வயிரமென்ற ஒரு சரக்கைப் பண்ண முடியுமா முடியாதா வென்று முயற்சி செய்வதிலேயே அவன் நோக்கமாயிருந்தானே யொழிய அவன் செய்யும் வயிரங்கள் விலையுள்ளவையா, முதல் தரமானவையா, அதெல்லாம் அவனுக்குக் கவலை யில்லை. இப்படியும் ஒரு மனிதனுண்டோ.

குறிப்பிட்ட வேளையில் செட்டியார்கள் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். பெரியவருக்கு சொல்லமுடியாத கவலையும் ஏக்கமும் ஞாபக மறதியுமாயிருந்தது. எல்லோரும் தங்களிடத்தில் கொடுத்த கல்லுகளை எடுத்துக் காட்டினார்கள். பட்டை தீர்க்கிறவர்கள் நீரோட்டத்தைப் பார்ப்பதற்காக ஓர் புறத்தில் செய்த கீற்றுகளைத் தவிர வேறொரு மாறுதலுமில்லை. அப்பொழுது ஓர் விசேஷம் வெளிப்பட்டது. தத்துவ சாஸ்திரிகளிடத்தில் கொடுக்கப்பட்ட கல்லுகள் அப்பழுக்கில்லாமல் முதல்தரமானவைகளா யிருக்க வியாபாரிகளிடத்தில் கொடுக்கப்பட்டது மாத்திரம் வெகு மட்டமா யிருந்தன.

இவர்கள் ஒருவரை யொருவர் கடைக்கண்ணால் பார்த்து விசாரித்துக் கொண்டார்கள். பிறகு மூவரும் தரையைப் பாத்தபடியே இருந்தார்கள். ஒவ்வொருவருடைய மனதிலும் ஒரே விதமான ஸந்தேஹ முண்டாயிற்று. நல்ல கல்லுகளுக்கு பதிலாய் மட்டமான கல்லுகளை மாற்றிவிட்டது போலிருக்கிறது. ஆனால் எது எப்படிப் போனாலும் பெரிய செட்டியார் மாத்திரம் இப்படி அல்பத்தனமாய் நடந்து கொள்ளமாட்டார். அப்படி மூவரும் செய்தாலும் தத்வ சாஸ்திரிகளுக்குக் கொடுத்திருந்த கல்லுகளின் மதிப்பைக் கொண்டே பண்டிதருடைய திறமையும் அவர் செய்த பரீக்ஷையின் உண்மையும் நன்றாய் ஸ்திரப்படும். ஆனால் செட்டியார் மரக்காயரைப் பார்த்தார். மரக்காயர் ராவுத்தரைப் பார்த்தார். ராவுத்தர் தயாராமைப் பார்த்தார். எல்லோருடைய முகத்திலும் அசடு தட்டிற்று.

பிறகு கங்காதர சாஸ்திரி எழுந்திருந்து ஓர் உபந்யாஸஞ் செய்தார். "நண்பர்களே! தத்வ சாஸ்திர பரீக்ஷையில் ஓர் அபூர்வமான அம்சம் கண்டு பிடிக்கப்பட்டு இன்றைக்கும் நேற்றும் பல விதமான முறைகளால் நன்கு நிரூபிக்கப்பட்டது. சாந்திபுர ஸர்வ கலாசாலையில் உபாத்தியாயரான ஸுதீந்திர மோஹனபோஸ் என்றவர்தான் பிறந்த வங்காள தேசத்திற்கு சூடாமணி போன்றவர். ஆனால் இவ்விதமான தத்வ சாஸ்திர விஷயங்கள் எப்பொழுதும் வங்காளத்திலுள்ளவர்களாலேயே கண்டு பிடிக்கப்பட்டு வருவதைப்பற்றி நமது தேசத்தாருக்கு பொறாமையிருப்பது நியாயமே. ஆனால் பண்டிதருடைய ஸ்வபாவம் வெகு உத்தமமானது. வயிரமென்பது அவருடைய கண்ணுக்கு ஓர்விதக் கரியே. தங்கமென்பது இரும்பு தகரம் முதலியவைகளைப் போல் ஓர் வித லோஹமே. அவருக்கு சாஸ்திர விசாரத்தைத் தவிர வேறு புருஷார்த்தமில்லை. அவர் நினைத்தால் லக்ஷக் கணக்காய் பணத்தைக் குவித்து, ஸகல சௌக்கியங்களையும் அனுபவிக்கமுடியும். ஆனால் சில வியாபாரிகளையும் முதலாளிகளையும்போல அவர் எப்பொழுது பார்த்தாலும் பணம் பணமென்று கழுவாய்ப் பிடுங்கித் தின்கும் ஸ்வபாவம் கொஞ்சமேனு மில்லாதவர். அவருக்கு வித்தியையே தெய்வம். இவர்களுக்கு பணமே பரப்ராஹ்மம். கேவலம் கரி தூளாயும் கட்டையாயுமிருப்பதை விட்டு, பளிங்கு ரூபமானால் இன்ன விதமாயிருக்குமென்று கண்டு பிடிக்கவேண்டுமென்ற ஆசையும் அதை நம்மைப் போன்ற சாஸ்திரப் பயிற்சியுள்ளவர்கள் ஒப்புக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையையுமே யுடையவர். பெருந்த முதலாளிகள் வைர வியாபாரிகள் கரியைப் பளிங்கு ரூபமாய்ப் பூஜிக்கிறார்கள். அதின் விலையைக் குறையாமல் வைத்துக்கொள்வதே அவர்களுடைய மூளைக்கு இராப் பகலாய் ஓயாமல் வேலையைக் கொடுக்கிறது. அவர்களுடைய வேண்டுகோளிற் கிணங்கி, இந்த இரஹஸ்யத்தை வெளிவிடாமல் வைத்துக்கொள்ள அவரும் நாங்களும் ஸம்மதித்திருக்கிறோம். இந்தப் பரிசோதனைகளைப் பார்க்கும்படியாய் அழைக்கப்பட்ட கனவான்களில் யாரும் இதை வெளியிட மாட்டார்களென்று நம்புகிறேன். இப்பொழுது பண்டிதர்தான் காட்டின பரீக்ஷையை தத்வசாஸ்திர விசார மஹா ஸங்கத்தின் ஓர் கட்மிடியார் நன்றாய்



பரிசோதித்துப் பார்த்து, ஒப்புக்கொள்ளும் வரையில் இதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று பண்டிதரே வற்புறுத்தியிருக்கிறார். அப்படிப் பரிசோதித்தும் இந்த முறைப் பின்னிடையாமல் உண்மையாயிருந்தால் அதற்கப்பால் அதை மறைப்பதில் பிரயோஜனமே இல்லை. சூது நகையைக் காட்டிலும் அஸல் வயிரங்களின் விலை அப்பொழுது திடீரென்று குறைந்துவிடும். வியாபாரிகள் புரண்டு புரண்டு அழுதாலும் அப்பா அய்யா வென்றாலும் கெஞ்சிக் கூத்தாடினாலும் எள்ளளவேனும் பலிக்காது. கோடீச்வரர்களைக் காட்டிலும் பெரிய தெய்வமொன்றிருக்கிறது. அதற்கு சாஸ்திரமென்று பெயர். ஆனால் நெடுநாள் வயிரங்களில் பழகி அவைகளைக் கையாடிவரும் கனம் வெள்ளையன் செட்டியாருடைய விருப்பத்திற்கிணங்கி, சமாசாரப் பத்திரிகைகளுக்கு இதைப் பற்றின நிருபங்கள் அனுப்புவதில்லையென்றும் பொதுவில் இந்த ஸுலபமான முறையைப் பற்றிப் பேசுவதில்லையென்றும் தீர்மானித்திருக்கிறோம். எவ்வளவு அழகான முறை. வயிரங்களைப்பற்றியும் பளிங்குகளைப் பற்றியும் வியவஹரிக்கும் சாஸ்திரத்தை வயிரம்போன்ற தன் அபூர்வமான கண்டு பிடித்தலால் கண் கூசும்படி ஜ்வலிக்கச் செய்த நமது விருந்தினரான டாக்டர் ஸுதீந்திர மோஹன போஸ் என்றவருக்கு சோழ மண்டலத்திலுள்ள தாதுவர்க்க சாஸ்திர நிபுணர்களுக்குப் பிரதிநிதியாய் நான் வந்தனமளிக்கிறே"னென்றார்.

எல்லோரும் கரகோஷஞ் செய்து களித்தார்கள். செட்டியார் உதட்டைக் கடித்து, மெதுவாய் "அவன் தலையில் இடிவிழ" வென்றார். ராவுத்தரோ "அவன் பெண்டாட்டி தாலியறுக்க" வென்றான். மரக்காயர் ஆத்திரம் தாங்காமல் சடாவைக் கழற்றினார். ஆனால் தயாராம் மாத்திரம் ஒன்றும் சொல்லாமல் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தான். ஒரு சங்கதியையும் வெளியில் சொல்லுகிறதில்லையென்று, கோரமான பிரதிக்ஞை செய்துவிட்டு எல்லோரும் பிரிந்தார்கள்.

செட்டியார் மரக்காயர் நிற்குமிடத்திலிருந்து ஒதுங்கினார். தயாராம் சற்றேனும் திரும்பிப் பார்க்காமல் தன் வண்டியில் பாய்ந்து, வீட்டுக்குப் போய்விட்டான். செட்டியாரும் மூடினவாய் திறக்

காமல் ஒரே மௌனம் ஸாதித்தார். போஜனஞ் செய்து அவர் படுக்கப் போகுமுன் சின்னவர் அவரிடத்திற்குப் போய் "நீ நாளைக்கு நமது கோல கொண்டா ஷேர்களை (பங்குகளை) தள்ளிவிடப் போகிறாயோ" வென்றார். அதாவது விலைபோகாமல் முடக்குச் சரக்குகளாய்க் கிடக்கும் சாமான்களை எந்த விலைக்காவது விற்பதென்பதற்கு இது வியாபாரிகளுக்குள் ஒரு ஸங்கேதமான வார்த்தை. பண்டிதருடைய புது முறை பலித்துவிட்டதே யானால் சில நாள்களுக்குள் செட்டியாருடைய வயிரக் கம்பெனிகள் தெருப்புழுதியைப் பார்க்கிலும் வெகு சவதமாய்விடு மென்பது சின்னவருக்கு நிச்சயம்.

செட்டியார் தன் மைத்துனனை கோபத்தால் எரித்துவிடுகிறவரைப் போல் பார்த்து, "ராமன் செட்டியார்! நீர் ஒரு பெரிய மடையன் (அடக்காக் கோபங் கொண்டாலொழிய ராமன் செட்டியாரென்று கூப்பிடும் வழக்கமில்லை) வெகு அழகு தான். நான் முதலில் ஷேர்களை விற்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு இந்தக் கம்பெனியில் ஷேர் வாங்கிக் கொண்டிருக்கும் அவ்வளவு பேரையும் பறக்கவிடுவது கடவுளுக்கு அடுக்குமா? இது யார் செய்யும் வேலை. இந்த வயிரக்கம்பெனியின் அத்யக்ஷர்களில் ஒருவராயும், அக்கிராசனாதிபதியாய் இருக்கும் நான் இந்த ஸமயத்தில் ஏன் மனமொப்பி இப்படிச் செய்கிறேனென்று நினைக்கிறாயா?" வென்று சீறினார்.

சின்னவர் "ஆம்! ஆம், நீ செய்வதே சரி, உன் நடத்தை வெகு மேன்மையானது. உன்னை நம்பித்தங்களுடைய கால் காசு அரைக்காசை இந்த வியவஹாரத்தில் கொண்டு வந்து போட்டிருக்கும் பலருடைய வாயில் மண்ணைப் போட்டுவிட்டு உன் பணத்தை மாத்திரம் வசம்பு போட்டு, கட்டிவைப்பாயென்று நினைப்பதே பாபம். வியாபாரத்தில் உன்னைப் போல் பாபபுண்யம் பார்க்கும் பிரமாணிகன் கோடியிலும் ஒருவருண்டா?" வென்றார். சின்னவருக்கு உள்ளுக்குள் வருத்தம். முன்பு ஓர் இனத்தில் இவருக்கு அதிகமாய்க்கையைக் கடித்தது. ஆகையால் "வெள்ளையனுக் கென்ன! இதில் 10 ஏறினாலும் குறைந்தாலும் லக்ஷ்யமில்லை. நானோ ஏழை.



பிள்ளை குட்டிக்காரன். மேலும் இந்தக் கம்பெனிக்கு இவன் டைரக்டர். எனக்கு அவ்விதமான பொறுப்பு யாதொன்றுமில்லை. என்னை ஒருவரும் நம்பிக்கெடவுமில்லை. நான் நம்பின ஒருவரையும் கெடுக்கவுமில்லை. என் பெண்டாட்டி பிள்ளைகளின் வயிற்றில் அடிக்கலாமா. ஆகையால் எனக்குள்ள ஸ்வல்ப ஷேர்களை விலை விழுவதற்கு முன் கரைத்துவிடுகிறே"னென்றார்.

செட்டியார் இதை எப்படியோ அறிந்து, "அடே ராமா! இந்தா நீயார் தெரியுமா? என்மைத்துனன், எனக்கு முக்கியமான காரியஸ்தன். நாளை வியாபாரப்பிரபஞ்சத்திலுள்ள யாவரும் முதலாளிகளும் பங்குக்காரர்களும் நான் என்ன செய்யப்போகிறேனென்று கண்ணில் எண்ணெயைக்குத்திக் கொண்டு கவனிப்பார்கள். அசட்டுச்சமத்தாய் நீ உன் பங்குகளை விற்க ஆரம்பித்தால் நீ எவ்வளவு ரஹஸ்யமாய் மறைத்து வைத்தாலும் வெளியில் வராமல் போகாது. உடனே இதில் ஏதோ சங்கதி இருக்கிறதென்று ஜனங்கள் அஞ்சி, என்னிடத்திலும் கம்பெனியிடத்திலும் ஸந்தேஹப்படுவார்கள். ஆனால் உன் சொத்தை நீ இஷ்டப்படி விற்பதை நான் தடுக்கமுடியுமா வென்ன? நீ என் அடிமையா? நான் உன்னைக் கட்டாயப்படுத்த முடியுமா? ஆனால் இந்தக்கம்பெனியின் அக்கிராஸனாதிபதியாய் நான் இருக்கிறபடியால் என்னை நம்பி தங்களுடைய யாவற்றையும் என்கம்பெனியில் போட்டிருக்கும் ஏழை பாழைகளைக் காட்டிக் கொடுக்கமாட்டேன். அந்தப்பாபம் என் பிள்ளை குட்டிகளைப்பிடிக்கும். ஏதோ நான் உன்னை பயமுறுத்துவதாய் எண்ணக்கூடாது. என் பேச்சை மீறி நீ உன் ஷேர்களை ரஹஸ்யமாயாவது வெளிப்படையாயாவது விற்றால் நாளை முதல் நீ எனக்குக்காரியஸ்தனல்ல. உனக்குச்சட்டப்படி நோடீஸ் கொடுக்கவேண்டியதற்கு பதிலாக ஆறு மாதச்சம்பளத்தை வாங்கிக்கொண்டு போகலாம் வேறு ஜாகையும் பார்த்துக் கொள்ளலா"மென்றார்.

சின்னவர் சற்றுப்படிந்தகுரலுடன் "சரி, உனக்கு இஷ்டமில்லாத காரியத்தை நான் செய்யவே மாட்டே"னென்றார். ஆனால் தன்பங்குகளை விற்று கையில் கிடைத்தபணத்தைச் சுருட்டிக் கொண்டு, காலியாகப்போகும் தன் மைத்துனனை விட்டு, அகலுவது நன்றோ? அல்லது செட்டியாருடைய அதிருஷ்டம் ஒரு நாளும்

பஞ்சையாகாது. 10,000 இடையூர் வந்தாலும் அவருடைய சக்கிரம் அடிக்கிறவரையில் அடித்துத்தான் தீரும். அவருடைய நல்லகாலத்திற்கு யார் பிறந்திருக்கிறார்கள். அவருடைய கையால் தொட்டதெல்லாம் தங்கமேயாகும். இந்தப்பண்டிதனைப் போல் எவ்வளவு சாஸ்திரிகள் வந்தாலும் குறுக்கே படுத்தாலும் அவனுடைய ஜயலக்ஷ்மியின் தேர் ஓடிக்கொண்டேயிருக்கும். ஒரு வேளை இந்த சாஸ்திரியாருடைய சரக்கெல்லாம் அண்டப் புளுகாய் விட்டால் பிறகு தான் அதுவரையில் காமதேனுவைப்போல் கறந்துகொண்டிருந்த வற்றாத நிதியும் போம். ஒருதடவை செட்டியாருடைய கோபத்திற்குப்பாத்திரமானால் பிறகு ஜன்ம முள்ளவரையில் அவருடைய கண்ணில் படமுடியாது. இப்படித் தனக்குள் வெகு நேரம் வாதஞ்செய்து முடிவில் ஸ்நேஹமும் நன்றியறிவும் சுற்றமும் மேல் நாடி பெரியவர் போன வழியிலே தானும் போகிறதென்று முடிவு செய்தார். வயிரவியாபாரம் இருந்தாலும் அழிந்தாலும் செட்டியார் ஏதாவது அகடவிகட ஸாமர்த்தியஞ் செய்து எல்லோருக்கும் மேலாய் விற்பாரென்பதில் ஸந்தேஹ மில்லை.

ஆனால் அன்றிரவில் இரண்டு செட்டியார்களும் கண்ணைக் கொட்டவில்லை. மறுநாள் காலையில் போஜனம் முதலியவைகளை சீக்கிரமாய் முடித்துக்கொண்டு, கடைத்தெருவுக்குப் போனார்கள். அதற்கு ஸமீபத்தில் கூட்டம் எள்ளுப்போட்டால் எள்ளு விழாது. அதைக் கண்டு செட்டியார் வண்டியை விட்டுக் குதித்து வேகமாய் நடந்துபோனார். அவருக்கு நெருங்கின பழக்கமுள்ள வேறொரு வியாபாரி அவரைத் தடுத்து, கேட்டீர்களா சமாசாரம். இது பரமரஹஸ்யம். ஈச்வரனுக்கும் தெரியாது. சாந்திபுரம் ஸர்வகலாசாலை பண்டிதர்"

"போதும் போதும். அந்தக் கந்தபுராணம் உமக்கு இப்பொழுதுதான், தெரியுமோ, பழையகதை ஒரு அக்ஷரம் நிஜமில்லை. யாரோ உம்மைக் கேலிசெய்து கயிறுகட்டி விட்டிருக்கிறான். வேலையிருந்தால் பாரு"மென்று அவரை ஒதுக்கிவிட்டு அப்புறம் சென்றார்.

பத்து கஜம் போவதற்குள் ஓர் பிரபலமானதரகர் அவரை வழி மறித்து, "ஓகோ! செட்டியார்வாள்! சங்கதி யென்ன? என்னமோ வயிரங்களைப்பற்றி பிரமாதப் படுகிறதே. நாமெல்லாம் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு, கோவிந்தா கோவிந்தா வென்று போகவேண்டியது தானே. உங்களுடைய கம்பெனிப் பங்குகள் எப்படி—?"



செட்டியார் அவரை ஏற இறங்கப் பார்த்து, "நீர் சொல்வது எனக்கு ஒன்றும் தகவல் புரியவில்லை" யென்றார்.

"தகவலா! என்ன வேண்டியிருக்கிறது. இனிமேலும் மூடு மந்திரமென்ன. கெட்டிக்காரன் புளுகெல்லாம் எட்டு நாள்த் தானே, நேற்று ராத்திரி நீர் அங்கே போயிருந்தது ஒருவருக்கும் தெரியாதென்று எண்ணமோ? ஊரெல்லாம் புடை புடைக்கிறது. சாந்திபுரம் ஸர்வகலாசாலை போஸ் சாஸ்திரி அபூர்வமான வயிரங்களைச் செய்து காட்டினானாம். நிஜமான கல்லுகள் தோற்றுப் போய் விடுமாம். செலவென்ன தெரியுமா? ஒவ்வொன்றிற்கு அணா எட்டு. இன்னும் இரண்டு மாஸத்தில் உங்களுடைய தென்னாப்பிரிக்கா ஆஸ்திரேலியா எல்லாம் வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடவேண்டியது தான். இப்பொழுது மஹாராணி வைத்துக் கொண்டிருக்கும் கோசிநூரைப் போல் லக்ஷக்கணக்காய் ஊரெங்கும் தெருவில் கிடந்து, பணத்திற்குப் பத்தாய்ச் சிரிப்பாய்ச் சிரிக்குமாம். குப்பை வண்டி ஓட்டுகிறவர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் வயிரப் பொத்தான்களன்றி வெளியில் கிளம்பமாட்டார்கள். ஓடக்காரத் தெருவிலுள்ள ஒவ்வொரு இராப்பட்டினியும் வயிர அட்டிகை யில்லாதவள் பாபம். அப்பொழுது நீங்களெல்லோரும் எந்தத் திக்கிலேயோ. சரி சரி. அடே அப்பா! நீர் பெரிய பேர்வழி. ஒன்றும் தெரியாதவரைப் போல் யாரிடத்தில் இந்த வேஷம் போடுகிறீர். முழுப் பூசினிக்காயை சோற்றில் மறைக்கமுடியுமா? எங்களுக்கு ஏதோ ஒரு பக்ஷி காதில் வந்து ஊதிவிட்டது. பலே" யென்று ஆகாயம் இடிந்து விழும்படி சிரித்தான்.

செட்டியார் அவனை ஒரு பதார்த்தமாய் எண்ணாமல் இந்தத் தடிக் கழுதைக்குப் பதில் என்ன வேண்டியிருக்கிறதென்று அப்புறம் சென்றார். பாங்கிக்கு ஸமீபத்தில் வேறொரு தரகர் எதிர்ப்பட்

டார். "செட்டியார் அவர்களா! நீங்கள் இங்கே வந்தது ஆச்சர்யமாயிருக்கிறது. இதென்ன கஜப்புளுகாயிருக்கிறதே. ஆனால் இதை நம்புவது மடைத்தனமென்று எனக்குத் தோன்றுகிறது. உம்முடைய கம்பெனியில் பங்குகள் இன்று அதிவேகமாய் இறங்குமென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் நான் சொன்னேனேயென்று பாரும். இது நிஜமா பொய்யா வென்று இரண்டிலொன்று நிச்சயமாய்த் தெரியும் வரையில் நிமிஷத்திற்கு நிமிஷம் தராசுபோல் ஏறி இறங்கிக் கொண்டேயிருக்கும். வியாபாரத் தோது தெரிந்தவர்களுக்கு இந்த ஸமயம் நல்ல அடி. இப்படியும் அப்படியும் பல தினுசாய்ச் சொல்லுகிறார்கள். ஆனால் எல்லாம் வெறும் வதந்தியே தவிர நிலைத்த பேச்சு ஒன்றுமில்லை. கங்காதர சாஸ்திரியார் இதைத் தீர விசாரித்துப் பரிசோதனை செய்து முடிவான அபிப்பிராயம் கொடுக்கிறவரையில் எதை நம்புவதென்று ஒருவரும் சொல்ல முடியாது."

அவரைத் தாண்டி பாங்கியை நோக்கிச் சென்றார்கள். செட்டியாருடைய முகத்தில் ஈ ஆடவில்லை. எங்கே பார்த்தாலும் இதே பேச்சு தெருவில் நின்று கூ கூ வென்று கத்தினாலும் இவ்வளவு பகிரங்கமாயிருக்காது. முதலாளிகள் தேவரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளவேண்டுமென்று பிரதிக்ஞை செய்த லக்ஷணம் இவ்வளவு. சிலர் செட்டியார்களிடத்தில் இதை ரஹஸ்யமாய் வந்து சொன்னார்கள். சிலர் அல்பத்தனமாய் அவரைப் புரளி செய்தார்கள். ஆனால் செட்டியாருடைய கம்பெனி ஷேர்கள் அடியோடே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு போய்விட்டன வென்று சொல்லாதவர்களில்லை. தங்கள் தங்களுடைய பங்குகளை நீ நானென்று முந்திக்கொண்டு ஏதோ கிடைத்த விலைக்கு பத்து முன்னும் பின்னுமாய்த் தள்ளி விட்டு, எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபமென்று அகப்பட்டுச் சுருட்டிக்கொண்டு போனவன் பிழைத்தான். செட்டியாரோ மேருமலைபோல் சற்றும் கலங்கவில்லை. அவருடைய் உறுதியும் மனோதைர்யமும் எல்லோருக்கும் ஆச்சர்யத்தை உண்டுபண்ணின. அந்த கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு ஒரு ஆபீஸில் நுழைந்தார். சின்னவர் அவருடன் செல்லப் பார்த்த பொழுது அவரை வெளியிலிருக்



கும்படி சொல்லி விட்டார். வெகு நேரம் உள்ளே பேசிக் கொண்டிருந்து விட்டு வெளியில் வந்தார்.

அன்று முழுவதும் கடைத் தெருவில் எங்கே பார்த்தாலும் செட்டியாருடைய கம்பெனி ஷேர்கள் விலை கூறப்பட்டதைத் தவிர வேறு பேச்சில்லை. சாகிறவனுக்கு தாது வரவர இறங்குவது போல் அவை நிமிஷத்திற்கு நிமிஷம் இறங்கின. தரகர்கள் தலையில் நெருப்புப் பிடித்தது தெரியாமல் ஓட்டமும் பிடியுமாயிருந்தார்கள். ஆனால் யாரைக் கண்டாலும் பங்குகளை விற்பதற்குப் பறந்தார்களேயொழிய வாங்கும் அஸாமி கண்ணில் படவில்லை. ஆனால் செட்டியாரும் அவருடைய தரகர்களும் அந்த வழிக்கே போகவில்லை. "விற்பனையென்ற பேச்சைப் பேசிக் கொண்டு இங்கே ஒருவரும் வரக்கூடாது. நான் சொல்வது இப்பொழுது உங்களுக்கு நிஜமாய்ப்படாது. பிறகல்லவா தெரியும். இது யாரோ கட்டி விட்ட கதை. இப்படியெல்லாம் மோசம் போகிற பேர்வழி இந்தச் செட்டிப் பிள்ளையல்ல. சாந்திப்புரத்து பண்டிதன் ஒரு வேளை தானே ஏமார்ந்து போய் இப்படிச் சொல்லுகிறானோ. அல்லது நம்மையே குழிப்பறிக்கிறானோ. யாருக்குத் தெரியும். ஒரு வாரத்திற்குள் இந்த அமர்க்களம் இருந்தவிடந் தெரியாமல் தானே அடங்கிப்போகும். அப்பொழுது வியாபாரம் நிலைக்கு வரும். இப்பொழுது தலை கீழாய் நிற்கிறவர்களைக் கண்டு தகுந்த படி பேசிக் கொள்ளுகிறே" னென்றார். அவருடைய தரகர்கள் கேழ்க்கிறவர்களுக்கெல்லாம் ஒரே ஸால் ஜாப் சொல்லிக் கொண்டு வந்தார்கள். "தன் கம்பெனியின் பங்குகளைப்பற்றி செட்டியாருக்குக் கொஞ்சமாவது ஸந்தேகமில்லை. விற்கிறவர்கள் குசாலாய் விற்கலாம். வாங்குகிறவர்கள் வாங்கலாம். செட்டியாரிடத்தில் மாத்திரம் அந்தத் தொழில் கிடையாது. வீணாய் ஜனங்களைக் கலவரப் படுத்தி அவர்களைப் படுகுழியில் தள்ளும் தகல் பாஜி அவரல்ல" வென்றார்கள்.

ஒரே வாக்காய் செட்டியாருடைய பெருந்தன்மையும் தாராளமும் திடமும் ஜீவகாருண்யமும் உள்ளவன் இது வரையில் பிறந்ததுமில்லை. இனிப்பிறக்கப் போகிறதுமில்லை. அந்தக் கடைத் தெருவில் அன்று அவரைப் பார்த்தால் பெரும் புயல் காற்றில் மலை போன்ற

அலைகள் கொந்தளித்துக் கொண்டு ஆகாயத்தை அளாவி, கரையிலிருக்கும் மலையின் அடிவாரத்தில் மோதி அதை இருந்த விடத்திலிருந்து பெயர்த்து, தூள்தூளாக்கிக் கரைத்து விடுவது போல் வந்து விழுவதும் பிறகு தங்களுடைய ஆட்டம் பலிக்காமல் தாங்களே தூள் தூளாய்ச் சிதறி இருந்த விடந் தெரியாமல் போவதும் எல்லோருக்கும் ஞாபகத்திற்கு வந்தது. பங்குகள் வரவர இறங்கிக் கொண்டிருப்பதை அவர் சற்றும் லக்ஷியஞ் செய்யாததற்கு அடையாளமாய் அங்கு மிங்கும் சில பங்குகளை வாங்குவதைப் பார்த்து, யாவரும் பிரமித்தார்கள். ஜனங்களுக்கு கலவரம் குறைந்து நம்பிக்கை வரும் பொருட்டு "இப்பொழுது நான் இஷ்டப்பட்டால் இந்தப் பங்குகளை ஒன்றுபாக்கியில்லாமல் தரைமட்டமாய் குறைந்த விலைக்கு வாங்கி கோடான கோடியாய் கொள்ளையடிக்கமுடியும். ஆனால் அது என்ன தொழில். அதைவிட இவ்வளவு ஏழை பாழைகளையும் கழுத்தறுக்கலாமே. நேற்று இராத்திரி நான் சாஸ்திரியாருடன் இருந்ததும் ரத்தினப் பரீக்ஷையைப் பார்த்ததும் இன்று விலை குறைவதும் எல்லாம் அழகாய்ச் சேர்ந்திருக்கின்றன. போக்கிரிகளும் மடையர்களும் என்ன சொல்லுவார்கள் தெரியுமா? செட்டியாரும் மற்றப் பெறுத்த முதலாளிகளும் யாரையோ பண்டிதனென்று ஒரு தலைப்பாகை மாற்றியை எங்கேயிருந்தோ தருவித்து இன்னும் நாலுபேரையும் ஜமாசேர்த்துக் கொண்டு ரத்தினங்களைப் புதிதாய்ச் செய்வது போல் வெளிச்சம் போட்டு இப்படிக் கம்பெனியின் பங்குகளை அதோ கதியாய் அடித்துக் குறைப்பதற்காக இந்த உபாயம் செய்திருக்கிறார்களென்று சொல்லுவார்களல்லவா? எல்லோருடைய பங்குகளையும் நான் ஒருவனே வாங்கி வாயில் போட்டுக் கொள்ள வேண்டுமென்று இப்படி ஏற்பாடு செய்ததாயல்லவா என் பெயர் அடிபடும். ராம ராம! அந்தப்பாபமும் வேண்டுமா? சில்லரை வியாபாரிகள் வயிற்றுக் கொடுமையால் அப்படி இப்படி இருப்பது ஸகஜம். ஆனால் என்னைப் போன்றவர்கள் விஷயத்தில் இந்த மாதிரி வார்த்தைகளுக்கு சற்றேனும் இடங் கொடுக்கலாமா? ஆகையால் ஜனங்களுக்கு நம்பிக்கை நிலைப்பதற்காகவும் என் கம்பெனி இவ்விதமான அக்கப் போர்களால் சற்றேனும் அசையாதென்று காட்டுவதற்காகவும் நான் சில பங்குகளை வாங்குகிறேனேயல்லாது வேறல்ல" வென்றார்.



அன்று ராத்திரி அவர் வீட்டுக்குப் போகும் பொழுது ஆறு மாதம் விஷஜ்வரம் அடித்து விட்டவனைப் போல் தள்ளாடிக்கொண்டு வீட்டிற்குப் போனார். மறு நாளும் கடைத் தெருவில் அதே கூக்குரலும் கலவரமும் எங்கும் பரவி யிருந்தது. பங்குகள் காற்றடிப்பது போல் பல விதமாய் மாறிக் கொண்டிருந்தன. திடீரென்று ஒருவன் ஓடி வந்து,கேட்டீர்களா சமாசாரம். கங்காதர சாஸ்திரியும் மற்றப் பண்டிதர்களும் ஒன்று சேர்ந்து இதைத் தீர விசாரித்து, பரிசோதித்தார்களாம். எல்லாம் சுத்தப் புரட்டென்பதில் ஸந்தேஹமேயில்லையா மென்று சொல்லுவான். உடனே பங்கு விலைகள் சற்று உயரும். மறுபடியும் வேறொரு மனிதன் தலை விரி கோலமாய் ஓடிவந்து பம்பாயில் பங்குகளை வண்டி வண்டியாய்க் கடைத் தெருவில் போட்டு விற்கிறார்களாமென்று அலறுவான். உடனே பங்குக்காரர்கள் டெலிபூன் வழியாய்த் தரகர்களை கூவியழைத்து எது எப்படியானாலும் பங்குகளை ஒரு நிமிஷங்கூட தாமதிக்காமல் கரைத்து விட்டு கிடைத்த பணத்தை வசூல் செய்யும்படி கண்டிப்பாய்க் கட்டளையிடுவார்கள். இப்படி அன்று முழுவதும் கொடிய நோயால் வருந்தி யமனுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் மனிதனுடைய தாது ஏறுவதும் இறங்குவதும்போல் வியாபாரம் தத்தளித்துக் கொண்டிருந்தது.

மறுநாள் காலையில் ஊமையன் கண்ட கனவு போலும் சூரியனைக் கண்ட பனி போலும் கருடனைக் கண்ட பாம்பு போலும் முன்னிருந்த வதந்திகளும் புரளிகளும் பிரஸ்தாபங்களும் இருந்த விடம் தெரியாமல் மறைந்தன. இதென்ன விந்தையென்று செட்டியார் பிரமித்துக் கொண்டிருக்கும் பொழுது கங்காதர சாஸ்திரியிடத்திலிருந்து அவருக்கு ஒரு தந்தி வந்தது. "நீர் சொன்னது நிஜமாயிற்று. அந்தப் பேர்வழி பெரும் மோசம். ஸுதீந்திர மோஹன போஸ் அல்ல. சாந்தி புரத்திலிருந்து இப்பொழுதே தந்தி கிடைத்திருக்கிறது. பண்டிதர் ஊரைவிட்டு ஓரிடத்திற்கும் போகவில்லை. ஒருவரையும் இங்கே அனுப்பவில்லை. வயிர விஷயமாய் யாதொரு பரீக்ஷையும் ஸமீபத்தில் செய்யப்படவில்லையாம். வீணாய் உங்களுக்குக் கவலையை உண்டுபண்ணினதைப் பற்றி வருந்துகிறேன். சாவகாசமிருந்தால் என்னை வந்து பார்க்க வேண்டும்".

வீணாய்க் கவலையை உண்டு பண்ணினதா! வருத்தப் படுகிறாரா, வெகு அழகு. அதைப் படித்தவுடன் செட்டியாருடைய மனக் கொதிப்பையும் கோபத்தையும் வர்ணிப்பது ஸாத்தியமல்ல. தக்ஷ யாகத்தை அழிக்கப்புறப்பட்ட வீரபத்திர ஸ்வாமியைப்போல் கண்களில் நெருப்புப் பொறி பறக்க காதுகளிலிருந்து புகை கிளம்ப உதரிகள் துடிதுடிக்க உடல் பதைபதைக்க கையோடு கையை அறைந்து காலால் பூமியை உதைத்து, சாஸ்திரியையும் மற்ற பண்டிதர்களையும் சிதல் சிதலாய் பெயர்த்தெரிந்து, சித்திரவதை செய்யாமல் விடுவதில்லையென்று அட்டஹாஸஞ் செய்து சொண்டு புறப்பட்டார். இரண்டு நாள் இராப்பகலாய் கடைத் தெருவை அல்லோல கல்லோலமாய்க்கலக்கி எவ்வளவோ பெரிய முதலாளிகளையும் வியாபாரிகளையும் கம்பெனி டைரக்டர்களையும் லக்ஷக்கணக்காய் நஷ்டப்படும்படி செய்து வியாபார முறைமையை கழுத்தை முறித்து பாங்கிகளைப் பறக்கவடித்து, ஜனங்களைக் கதற வடித்த மதிகெட்ட கெங்காதர சாஸ்திரி வருத்தப்படுகிறானே. நல்ல வருத்தம். ஏதோ விருந்திற்கழைத்து, பத்து நிமிஷம் தாமதித்து வந்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவதுபோல் என்ன அலக்ஷயம். எண்ணிறைந்த ஜனங்களுக்கு உயிர் போய் உயிர் வந்தது அவனுக்குத் தெரியுமா? செட்டியார் வண்டியிலேறி வாயு வேக மனோவேகத்துடன் சாஸ்திரியார் வீட்டுக்குப்போய் யமகிங்கரனைப்போல் அவரை மறித்துக் கொண்டு தன் ஆத்திரத்தை யெல்லாம் அவர்மேல் வைத்துத் தாக்கினார். யாரோ ஒரு காலிப் பயலை பண்டிதனென்று பெயரிட்டு தன்னைப் போன்ற தகுந்த முதலாளிகளிடத்தில் கொண்டு வந்து, இல்லாததையும் பொல்லாததையும் புளுகி, இப்படி அவமானப் படுத்தின உமக்குத் தலை ஒன்றா? பத்தா? இப்படி செய்து விட்டு, இன்னும் மனிதர்களுடைய கண்ணில் படுவதற்கு வெட்கமில்லையா? இப்படி மோசம் போவதைக் காட்டிலும் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனைவிடக்கூடாதா? சுருக்கிட்டுக் கொள்ள ஒரு சாண் கயிறு பஞ்சமா? உன் அங்கத்தைக் கொண்டுபோய் ஆற்றில் அலசவொண்ணாதா?" வென்று வாயில் வந்தபடி யெல்லாம் விட்டுக் காய்ச்சினான்.

சாஸ்திரியார் சற்றேனும் அசையவில்லை. ஏதோ மாமூலாய் தினம் வந்து திதிவார நக்ஷத்திரத்தைச்சொல்லும் புரோஹிதன் பஞ்



சாங்கத்தைப் படிக்கும்பொழுது அலக்ஷயமாய்ச் செவி கொடுப்பதைப்போல் செட்டியார் ஆவேசம் வந்தவரைப்போல் கட்டடம் இடிந்து விழும்படி கூவுவதைச் சற்றேனும் கவனிக்காமல் மூச்சுத் திணரி தானே பேசமுடியாமல் ஓய்ந்தவுடன் "இதற்குத் தானா இவ்வளவு தடபுடல்; யார் என்ன செய்யமுடியும். அந்தப் போக்கிரிப் பயல்தான் ஸதீந்திர மோஹன்போஸென்று சொன்னான். நாம் கேட்டிருந்தபடி வெளுத்த மயிரும் வளைந்த முதுகும் மங்கின கண்ணுமாயிருந்தான். அவன் சொல்லுவது பொய்யென்று எனக்கெப்படித் தெரியும். என்னைப்போல் நீரும் இன்னும் எவ்வளவோ பேர்களும் பார்த்துக் கொண்டிருந்தீர்களே. மஹா மேதாவிகள் கூட ஏன் மோசம் போனார்கள். (அப்பொழுது செட்டியாருக்கு தான் சாமியாரையும் வாத்தியாரையும் நவாப்பையும் காசி நாத ராயரையும் அந்தந்த அஸாமிகளென்றே கடைசிவரையில் நம்பி மோசம் போனது ஞாபகத்திற்கு வந்தது.)

"அதிருக்கட்டும். இப்படி நம்மை மோசஞ் செய்வதால் அவனுக்கென்ன லாபம்."

செட்டியார் "லாபமா? உம்மைப் போன்ற கற்றறிமூடர்களுக்கு என்ன தெரியும். வயிர வியாபாரத்தைத் தலை கீழாய்ப் பிடித்து தரை மட்டமாக்கி எல்லோரையும் பிராணனை கையில் பிடித்துக் கொண்டிருக்கும்படி செய்த பேர்வழி யாரென்று நீர் என்ன கண்டீர். திவான்பகதூர் இந்திரஜித் மஹாப்ரபு சாமியார் வாத்தியார் கனம் பொருந்தின நவாப் தென்னாப்பிரிக்காவில் பெரிய முதலாளி. காசி நாதராவ் இவ்வளவு அவதாரங்களும் எடுத்தது போதாதென்று ஸதீந்திர மோஹன போஸென்ற சாந்திபுர ஸர்வ கலாசாலை ரஸாயன சாஸ்திர நிபுணரென்று ஐந்தாவது அவதாரம் எடுத்து, லோகத்தின்க்ஷேமத்திற்காக வந்திருக்கிறான். பழம் புண்ணாளி பரியாரியென்றதுபோல் அவனிடத்தில் பட்டுப் பட்டு, எனக்கல்லவா தெரியும். பாம்பின் கால் பாம்பிற்கல்லாது மற்ற யாருக்குப் புலப்படும். உம்மைப் போன்ற பண்டிதக் கூட்டங்களையும் என்னைப்போன்ற செட்டிப்பிள்ளைகளையும் ஒரு நொடியில் பறக்கவிட்டானே. அவனல்லவா ஆண்பிள்ளை. போன தடவை எனக்கெழுதின கடிதத்தில்

அடுத்த தடவை சென்னையில் பேட்டி கொடுப்பதாய் எழுதியிருந்ததை நிறைவேற்றிவிட்டான். என்ன யுக்தி. என்ன புத்தி. என்ன தந்திரம். ஜாலவித்தையில் கைகாரன். எந்தவேஷம் போட்டாலும் பலிக்கும். ஒரு மயிரிழை பிசகாதா? கண்ணில் எண்ணெயைக்குத்திக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கும் எல்லோரையும் ஏமாற்றிவிட்டானே. நாமே பாத்திரங்களை பரிசோதித்துப் பார்க்கவில்லையா? பிறகு அவன் சரக்குகளைப் போடுவதைப் பார்க்கவில்லையா? எறியவிட்டதைப்பார்க்கவில்லையா? பிறகு அவைகளை எடுத்து எல்லோருக்கும் காட்டும்பொழுது அவைகளில் ஏதோ பிசினைப்போல் படிந்திருந்ததைப்பார்க்கவில்லையா? அதை ஆறவைத்து சுத்திசெய்து ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் நேர்த்தியான வயிரங்களைக்கொடுத்ததைப்பார்க்கவில்லையா? பாத்திரங்களில் இருந்ததை எல்லோருக்கும் காட்டினவுடன் நாம் ஸந்தேஹந் தீர்ந்து திருப்தியடைந்து விட்டோம். கவனம் சற்றுத்தளர்ந்தது. அந்தச் சமயம் பார்த்து, அவன் உண்மையான வயிரங்களை கைலாகவத்தால் எல்லோருடைய கண்களையும் கட்டிவிட்டு, அந்தக் கல்லுகள் பாத்திரங்களிலுள்ள சரக்கிலிருந்து உண்டாயிற்றென்று எண்ணும்படி செய்தான். அந்த க்ஷணத்தில் நாமெல்லோரும் புத்தியைப்பறி கொடுத்து மடையர்களானோம். இப்படிச் செய்வோமென்று அவன் முன்னடியே ஊகித்து, அம்மாதிரியான நிலைமையில் நம்மைக் கொண்டு போய் வைத்து நமது மூக்கில் கயிற்றைக் கட்டி மனது போனபடியெல்லாம் ஆட்டிவைத்தான். நமது கவனத்தை எப்படியோ மாற்றி விட்டானே. ஓய் அதிருக்கட்டும். நாங்கள் தான் படிப்பில்லாத வியாபாரிகள். வட்டிச் சிட்டைத் தவிர எங்களுக்கு வேறொன்றும் தெரியாது. ஆனால் உலகத்திலுள்ள படிப்பெல்லாவற்றையும் தலை கீழாகப்படித்து, கரைத்துக் குடித்து என்னென்னமோ யமலோகப் பரீக்ஷைகளெல்லாம் கொடுத்து, இராப்பகலாய் ஓய்வு ஒழிவின்றி நல்ல சோறு நல்ல துணி நல்ல தூக்கம் வீடு வாசல் பெண்டுபிள்ளை கல்யாணம் கார்த்தி ஒரு இழவுமில்லாமல் எறிப்பதும் பொசுக்குவதும் சுடுவதும் காய்ச்சுவதும் வடிக்கட்டுவதும் தொழிலாயிருந்த உம்மைப் போன்ற பிரஹஸ்பதிகளெல்லாம் ஒரு ஸாதாரண அஸாமி பட்டை நாமம் போடும்படியாய் பார்த்துக்



கொண்டிருந்தீர்களே. உங்களை எது செய்தாலும் பாபமில்லை. எங்களைப் போன்ற வியாபாரிகளும் எங்களை நம்பியிருக்கும் தனவான்களும் ஏழைபாழைகளும் நீங்கள் என்னமோ ஸர்வகலா வல்லவர்களென்றும் கேவலம் ஸரஸ்வதியின் அவதாரங்களென்றும் எண்ணி, படுமோசம் போனோமேயென்று தங்கு தடையில்லாமல் போடு போடென்று போட்டார். சாஸ்திரியார் திகைத்துப் பிரமித்து, உட்கார்ந்தவிடத்திலேயே சாய்ந்து விட்டார்.

செட்டியார் அந்த ஆத்திரம் சற்றேனும் தணியாமல் வண்டியிலேறிக் கொண்டு வீட்டிற்குப்போனார். சின்னவர் அதின் காரணம் இன்னதென்று கண்டு பிடிக்க முடியாமல் அவரை ஸமாதானப் படுத்த முயன்றார். நம்மைக் கேலிசெய்து, ஏமாற்றினனென்று ஒரு விஷயத்தைத் தவிர முன் தடவைகளில்போல் நம்மைக் கொள்ளையடிக்கவில்லையே; அது ஒருபெரிய லாபமல்லவா? கடைத்தெருவைக் கலக்கி, பலரை நஷ்டப்படுத்தினன். நீ மாத்திரம் ஹிமயமலையைப் போல் அசையாமல் நின்றாய். கிலிபிடித்து பங்குகளை விற்காமல் பிறருக்கு நம்பிக்கையுண்டாகும்படி வாங்கிக் காட்டினாய். உன் உத்திரவுப்படி நானும் விற்கவில்லை. ஆனால் ஏழை பரதேசிகள் பட்ட கஷ்டத்தைப் பார்க்கும் பொழுது மனமுருகுகிறது. அதற்கு நாமென்ன செய்வோம். அவர்களுடைய கர்மம். எது போனாலும் போகட்டும். உன்னைப்போல் வியாபார நோட்டம் தெரிந்தவனும் முன்யோசனையுள்ளவனும் நிதானஸ்தனும் உலகத்தில் ஒருவருமில்லையென்றும் உன்னைப் போன்ற வர்த்தகர்களும் முதலாளிகளும் கம்பெனிக்காரர்களும் ஆயிரக்கணக்காய் நஷ்டமடைந்திருக்கும்பொழுது நீ ஒருவனே ஒருபைசா கூடப்பறிகொடுக்காமல் தப்பினையென்று உன் புத்தியை எல்லோரும் கொண்டாடுகிறார்கள்.

அப்பொழுது செட்டியார் சின்னவரைப் பார்த்த பார்வை முன் காலத்தில் பரமசிவன் திரிபுராஸுரர்களை எரிப்பதற்காகத்தன் நெற்றிக்கண்ணைத் திறந்து, பிரளயகாலாக்னியைப் பொழிந்தது போலிருந்தது. "அடே! ராமா! உன்னைப்போல் வடிக்கட்டியெடுத்த மடையனை நான் பார்த்ததேயில்லை" யென்று,

முகத்தைத்திருப்பிக்கொண்டார். அந்த ஜாடையை அறிந்தாவது சின்னவர் ஒதுங்கிப் போக வேண்டாமா? அவ்வளவிற்குப்புத்தி எங்கே. "ஆனால் நீ ஒரு பங்கைக்கூட விற்கவில்லையே. அப்படி விற்றால் எனக்குத்தெரியாதா?" வென்றார்.

கடும் ஜ்வரத்தால் ஜன்னி பிறந்து தலை தெரியாமல் பிதற்றும் நோயாளியை இறக்கத்துடன் பார்க்கும் வைத்தியனைப்போல் ராமன் செட்டியாரைப் பார்த்து தடையென்ன? நான் விற்பதாயிருந்தால் உன்னை முதலில் யோசனை கேட்டு நமது புரோஹிதரை அழைத்து முஹூர்த்தம் வைத்து சகுனம் பார்த்து விற்றிருக்கமாட்டேனே. மேலும் எனக்கு எப்பொழுதும் வழக்கமாக வேலை செய்யும் தரகுக்கம்பெனியின் வழியாய் விற்கமாட்டேனே. போடா போடா. முழுமூடமே. அப்படிச் செய்திருந்தால் ஊரில் ஒருவர் பாக்கியில்லாமல் தெரிந்திருக்கும். பிறகு என் வியாபாரமும் கம்பெனியும் இடலாய்ப்போயிருக்கும். இவ்வளவு அழகானபுத்தியைப் படைத்த குழந்தையிடத்தில் இந்தக்கொள்ளையால் எனக்கு இவ்வளவு நஷ்டம் நேர்ந்ததென்று சொல்லிப்பிரயோஜனமென்ன? நான் பங்குகளை விற்காமலில்லை. யாரோ ஒருவன் அவைகளைச் சற்றும் தாமதிக்காமல் ரொக்கத்தைக்கொடுத்து ஒன்று பாக்கியில்லாமல் வாங்கிக்கொண்டிருந்தான். இன்று காலமே அவ்வளவு பங்குகளையும் விற்று விட்டான். கணக்கு வழக்குப்பார்ப்பதற்குச் சற்றும் தங்கவில்லை. எவ்வளவு ரஹஸ்யமாயும் சீக்கிரமாயும் கடன் உடன் பாக்கி சாக்கி யில்லாமலும் வாங்கினனோ அப்படியே விற்றான். ஒரு பைசா கூட பாக்கி விடவில்லை. எவ்வளவு சாமர்த்தியத்துடன் எவ்வளவு முன் யோசனையுடன் இந்த ஏற்பாடு செய்து ஒருவருக்கும் தெரியாமல் சிதம்பர ரஹஸ்யமாய் மறைத்து வைத்து, நல்ல ஸமயத்தில் தட்டி விட்டு, பகல் கொள்ளை அடித்தான். ஒரே வார்த்தை சொல்லுகிறேன், கேள். நமது எதிரி இது வரையில் என்னிடத்தில் வசூல் செய்த தண்டங்கள் யாவற்றையும். ஒன்று சேர்த்தாலும் இதற்கு ஈடாகாது. இதை வைத்துக்கொண்டே அவன் ஆயுலுள்ள வரையில் உதைத் துதைத்துக்கொண்டு மஹாராஜாவைப்போல் காலக்ஷேபம் செய்யலாம். எனக்கு எப்பொழுது நல்ல காலமிருந்தால் அவன்



இத்துடன் திருப்தியடைந்து, என்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் ரக்தத்தை உறுஞ்சுவதை நிறுத்தவேண்டும். ஆனால் அதெங்கே. பெருந்தாஹமெடுத்தவன் அதைத் தணிப்பதற்காக கடல் நீரைக் குடித்தால் அது கோடி மடங்கு அதிகமாகுமேயல்லாது சற்றேனும் தணியுமோ. பணத்தைக் கண்ணால் கண்டு, கையாடிவிட்டால் எவ்வளவு சேர்த்தாலும் போதுமென்று ஒழிவு உண்டாகுமோ. எனக்கு இவ்வளவு இருந்தும் இன்னும் பணத்தைச் சேர்ப்பதில் ஆசையும் கவலையும் ஆத்திரமும் விடவில்லையே" யென்றார்.

சின்னவர் "ஐயையோ! நீ விற்றாயா? என்னை வேண்டாமென்று பிரமாதமாய்ப் பயமுறுத்தினையே. கம்பெனியின் 'அத்யக்ஷன்' இருக்கவேண்டிய முறையைப்பற்றியும் ஜனங்கள் உன்னிடத்தில் வைத்திருக்கும் நம்பிக்கையைப்பற்றியும் ஏழை பாழைகளின் அதோ கதியைப்பற்றியும் பாதிரியைப்போல் பிரஸங்கம் செய்தாயே. படிப்பது திருவாசகம். இடிப்பது சிவன் கோவிலா? நம்பினவர்களை நட்டாற்றில் கைவிட்டாயே" யென்றார்.

செட்டியார் "நீ இவ்வளவு காலமாய் என்னுடனிருந்து நான் வியாபாரஞ் செய்யும் முறைகளைக் கவனித்து வருவதற்கு என்ன அடையாளம். உனக்கும் நீ உட்கார்ந்திருக்கும் நாற்காலிக்கும் சற்றேனும் பேதமில்லை. நீ நூறு ஜன்மமெடுத்தாலும் வியாபாரத்தின் தோது உனக்குத் தெரியப்போகிறதில்லை. ஊரார் சங்கதியைப்பற்றி உனக்கென்ன கவலை. என் பேச்சைக் கேட்காமல் நீ விற்றிருந்தால் இப்பொழுது தலையில் கையை வைத்துக் கொண்டு போகவேண்டியதுதா"னென்றார்.

162011

# மேனகா

## இது ஒரு சிறந்த

8 சித்திரப் படங்களுடன் கூடிய நாவல்.

ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடிய சம்பவங்கள் நிறை
தது. படித்து முடித்தாலன்றி புத்தகத்தைக் கீழே வைக்
மனம் வராது.

பல மெடல்கள் பெற்ற வடுவூர் ஸ்ரீமான்
K. துரைசாமி அய்யங்கார் பி. ஏ.
அவர்கள் இயற்றியது.

| | ரூ. | அ. |
|---|---|---|
| முதற்பாகம் | 1 | 8 |
| இரண்டாம்பாகம் | 1 | 8 |

# புதிய பதிப்புகள்.

## இரண்டு இரத்தினங்கள்.

### 1. கதாமாலிகா

இது ஒரு கதைக்களஞ்சியம். விநோதகதைகளும், விசித்திரங்களு
பொதிந்து கிடக்கின்றன. கதாவிநோதம். சுமார் 33 விஷயங்
அடங்கி யிருக்கின்றன. விலை ரூ. 1.

நமது சந்தா நேயர்களுக்கு விலை அணு 14.

### 2. கதாரத்னம்.

இந்நூலில் 6 சரித்திரங்கள், 4 கதைகள், 2 நாவல்கள், அட
யிருக்கின்றன. கதாரத்னகரம் முதலிரண்டு வருஷப் பத்திரிகை
ளின்றும் திரட்டப்பட்டவை. விலை அணு 12.

நமது சந்தா நேயர்களுக்கு விலை அணு 10.

மானேஜர், சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.